
பகவான்
ஸ்ரீ சத்யசாயிபாபாவின்

# கீதா வாஹினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75

617

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA


12135.S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின்

# கீதா வாஹினி




ஆங்கிலத் தொகுப்பு:
அமரர் *N*. கஸ்தூரி அவர்கள்

தமிழாக்கம்:
டாக்டர் *P. K*. சுந்தரம் M. A; Ph. D.
தத்துவத்துறை துணைப் பேராசிரியர்
சென்னை பல்கலைக்கழகம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
தொலைபேசி
569

தமிழ்நாடு நூல் வெளியீட்டுச் சபையின்
அனுமதியுடன் இலங்கையில் வெளியிடுவோர்:

**பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையம்**

பிள்ளையார் கோவிலடி,
தாவடி, (கொக்குவில் P. O.).
இலங்கை,
23-11-1990

78/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

# மறுபிரசுர முன்னுரை

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அவர்களால் பக்தர்களுக்கு அருளப்பட்ட ''கீதா வாஹினி'' எனும் நூல், தமிழ்நாட்டு பகவான் ஸ்ரீசத்யசாயி பாபா நிறுவனத்தின் நூல் வெளியீட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் (Tamil Nadu Puplication Trust) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. அச்சிட்ட பிரதிகள் அத்தனையும் விற்பனையாகி விட்டமையால், அச்சபையின் அங்கீகாரத்துடன் இலங்கைப் பக்தர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், பகவானின் 65வது ஜனன ஜெயந்தி விழா — அவதாரம் பிரகடனப் பொன் விழா என்பவற்றின் நினைவுக்கு ஒரு காணிக்கையாகவும் தாவடி, பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினர், இந்நூலை மறுபிரசுரமாக வெளியிடுகிறார்கள்.

இவ்வருமையான கைங்கரியம், நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக எதிர்பாராத சிரமத்தையும், செலவதிகரிப்பையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருந்தும் எடுத்த முயற்சியை, பகவானின் கருணையுடன் வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள். இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்நூலை வெளியிடுவதற்கு உதவிய பத்தர்கள் அனைவருக்கும் பகவானின் ஆசீர்வாதம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

செ. சிவஞானம்
அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி
சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழு
தலைவர்

14 (40) வைமன் வீதி,
யாழ்ப்பாணம்,
03-11-1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சாயிராம்

# வெளியீட்டுரை

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களால் அருளப் பட்ட கீதா வாஹினியின் தமிழ் மொழிபெயர்ப்பை எங்கள் நிலையத்தின் நான்காவது வெளியீடாக வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். இது சநாதன சாரதிக்காக பாபா அருளிய கீதை விளக்கங்களை அமரர் என். கஸ்தூரி அவர்கள் ஆங்கிலத்தில் தொகுத்து வெளியிட்டார். ஆங்கிலத்திலிருந்து தமிழில் டாக்டர் பி. கே, சுந்தரம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

பகவத் கீதைக்கு எத்தனையோ உரைகள் ஏற்கனவே வெளிவந்துள்ள போதிலும் இந்நூலுக்கு ஒரு தனிச்சிறப்பு என்னவெனில், அதனுள் அடக்கியுள்ள ஆழமான, எளிய, தற்காலத்திற்கு ஏற்றவண்ணம் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களே! கீதையை உபதேசித்தவரே திருவதாரம் செய்து லோகதச வர்த்தமான நிலைகளுக்கேற்ப விளக்கம் அளித்

துள்ளாரெனில் இந்த தனிச் சிறப்புவேறென்ன இருக்க முடியும்? இப்படி ஒரு காலகட்டத்தில் வாழவும், இந்நூலைக் கற்கவும் நாம் என்ன புண்ணியம் செய்தோம்.

இந்நூலை முதன்முதலிற் படித்ததும் இதை சாயி அடியார்களும் மற்றும் ஆத்மீக சாதன நோக்கத்தைக் கொண்டவர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற பேரவா எமக்கு எழுந்தது. புத்தகங்களை இந்தியாவிலிருந்து வருவித்து வினியோகிக்க முயன்றோம். ஆனால் அங்கும் இந்நூல் அரிதாகிவிட்டது. ஆகவேதான், இலங்கையிலுள்ள சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழுத் தலைவர் அவர்களுடாக, தமிழ்நாடு, பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா நிறுவனத்தின் நூல் வெளியீட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிடம் உரிய அநுமதி பெற்று இந்நூலை மறு பிரசுரமாக வெளியிட பகவானின் அருளாசிகள் எமக்குக் கிடைத்தது.

ஏற்கனவே சிறிய நூல்களாக 1) சாயி சரித்திராமிர்தக் கிரதம் 2) தர்மவாஹினிச் சுருக்கம் 3) அவதார உண்மைகள் ஆகிய நூல்களை வெளியிட்ட எமக்கு இந்தப் பெரும் நூலை அச்சிட்டு வெளியிடுவது பெரிய பணியாகவும், புனிதப் பணியாகவும் இருந்தது.

சாயி அன்பர்கள் மத்தியில் இக்கருத்தை வெளியிட்டதும் ஆக்கமும், ஊக்கமும் பெற்றோம். நிதி உதவியும் தேடி வந்தது இதுவன்றோ சாயீசனின் அற்புதமும், கருணையும், ஆசியுமாகுமென மகிழ்ந்து பணியில் இறங்கினோம். நாட்டில் ஓரளவு அமைதி நிலவிய காலம்.

பாரதப் போரில், தேர்ப்பாகனாகிய கிருஷ்ண பரமாத்மாவால் வழங்கப்பட்ட போதனைகள், நவயுக கிருஷ்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரமாகிய சாயி பகவானால் உரைநடையாகத் தந்துள்ள இந்நூலைத் தமிழில் அச்சிட முற்பட்ட போதும் எமக்கு இங்கும் போர்க்காலம், மின்னாமல் முழங்காமல் வந்து சேர்ந்ததென்றால், இது என்ன பொருத்தமோ? சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் இந்நூல் வெளியிடப்படுகிறதெனில் அதுவும் சாயீசனின் அற்புதங்களில் ஒன்றே!

இந்நூல் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிய ஒவ்வொருவரினதும் உள்ளத்திலும் சாயீசனே சாரதியாக அமர்ந்து அவரவரை இயக்குவித்திருக்கிறார் என்று கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

சாயீசனின் அளப்பெருங் கருணையால் இந்நூல் வெளிவருகின்றது என்பது வெளிப்படை. சாயி அடியார்கள், இறை அன்பர்கள் எல்லோரும் இந்நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும் என்பது சுவாமியின் விருப்பம். அன்பர்கள் அப்படியே செய்ய வேண்டும் என்று எமது சேவா நிலையத்தின் அன்பான வேண்டுகோளையும் இத்துடன் சேர்த்துக் கொள்ளுகிறோம்.

ஜெய் சாயிராம்

பகவான்
ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்
தாவடி

பிள்ளையார் கோவிலடி, தாவடி'
(கொக்குவில் P. O),
இலங்கை,
23-11-90.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஸநாதன ஸாரதியான பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி பாபா ஆதித்யனுக்கும், மனுவிற்கும் இக்ஷ்வாகு மன்னனுக்கும் கீதா சாஸ்திரத்தை உபதேசித்தார். குரு க்ஷேத்திரத்தில் நன்மைக்கும் தீமைக்கும் நடந்த போரில் அர்ஜுனனுக்குச் சாரதியாக இருந்தார். அர்ஜுனன் மனச் சோர்வினால் பீடிக்கப்பட்டபோது, எல்லாம் மெய்ப்பொருளின் வடிவமே என்ற ஒருமை உண்மையை உணர்த்தி, சோர்விலிருந்தும் துயரத்திலிருந்தும் அவனை மீட்டார்.

இன்றும் அவர்தான் நமக்குச் சாரதி. அவரை அந்த நிலையில் வைத்து உணர்வோமாக! விவேகம் என்னும் கடிவாளத்தினால் பற்றின்மை என்னும் சாட்டை கொண்டு புலன்கள் என்னும் குதிரைகளை அடக்கி ஓட்டி, ஸத்தியம் தருமம் என்னும் சாலை வழியே சாந்தி என்னும் வீட்டிற்கு அவர் நம்மை அழைத்துச் செல்லுவார். சத்தியச் சாலை முழுதும் பிரேமை என்னும் ஒளி விளக்குகள் ஏற்றப்பட்டிருக்கின்றன.

அர்ஜுனன் அவரை அந்தநிலையில் ஏற்றுக் கொண்டான். நாமும் அதேபோல் செய்வோம். அறவழியில் செல்ல முடியாமல் உலகத்துப் பற்றுக்கள் குறுக்கிடும் பொழுது, உள்ளத்தூறும் பரிவுணர்ச்சியை பேராசை தடுத்து மூடி விடும்பொழுது, அன்பின் அறைகூவலை பகைமை விரட்டும் பொழுது, கீதையை நாம் படிக்க வேண்டும். அவரே அப்பொழுது கீதையை நமக்கு உபதேசிக்கின்றார். அருளும், ஆற்றலும், அறிவும் அப்பொழுது வெள்ளமென நம் முன் பாய்கின்றன; போரிட்டு வெற்றி பெறுவதற்குரிய திறனை நன்கு அளித்து நம்மை வீரர்களாக்கி விடுகின்றன.

குரு க்ஷேத்திரத்தில் எடுத்துக் கூறப்பட்ட கீதையின் சாராம்சமோ விளக்கவுரையோ அன்று இந்தச் சிறிய புத்தகம். நாம் இப்பொழுது நடத்தும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக நமக்கு இறைவன் எடுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகின்ற போதனைகளை மனத்தில் வாங்குவதற்காக நாம் புதிதாக எந்த மொழியையும் கற்கவோ, எந்தப் பழைய நூலைப் படிக்கவோ வேண்டியதில்லை. இந்தக் கீதா வாஹினி எப்பொழுதும் மாறாத அதே நீரோட்டம் தான். அது நமக்குப் புத்துணர்வளித்து புத்துயிரூட்டுகிறது. அதே தெய்வ புருஷனால் அது நமக்குத் திருப்பி அளிக்கப்பட்டிருக்கிறது. புதுமையின் அறிவுச் சிலம்பங்களினாலும், விஞ்ஞானத்தின் பெருமையால் தூண்டப்பட்ட அகந்தையினாலும் அரைகுறையாகப் படித்து நுனிப்புல் மேய்ந்து எதையும் தூக்கியெறிந்து கிண்டல் செய்கிற இக்காலத்து மனப்பான்மையினாலும் தன்வயமிழந்து தனித்துத் தவிக்கிற மனிதனை ஆட்கொண்டு மீட்கத்தான் இந்தக் கீதா வாஹினி அருளப் பெறுகிறது. இதிலடங்கிய அறிவுரைகள் நமக்குப் பலத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து, ஆறுதலையும் மனநிறைவையும் அளிக்கின்றன.

போர் முனையில் அர்ஜுனன் செய்தது போல, நாமும் அதே கவனத்துடனும் முனைப்புடனும் இந்த அருளுரையைக் கேட்க வேணும். இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் நாமும் அர்ஜுனன் கூறியதைப் போலவே "என்னுடைய மயக்கம் தெளிந்தது. என்னுடைய சொரூபமான மெய்ப்பொருளை அறிந்து கொண்டேன்." என்று கூறுவோம் என்பதில் ஐயமில்லை,

உங்கள் இதயத்தில் குடிகொண்டிருக்கும் சநாதனசாரதி நமது "சநாதன சாரதி" இதழ்களில் இந்தக் கீதாவாஹினியைத் தொடர் கட்டுரைகளாக அருளினார்.

உங்களது ஆர்வம் மேலும் மேலும் பெருகுமாக எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ள ஒரு பெரும் பொருளின் மஹிமையை அறிவிக்கும் இந்தப் புத்தகத்தினால் உங்களது மனது விசாலமடைவதாக!

இப்படிக்கு
என். கஸ்தூரி
ஆசிரியர்,
ஸநாதன ஸாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா வாஹினீ

## தமிழ் நூலின் முன்னுரை

"ஸநாதன ஸாரதி"க்காக பகவான் பாபா அருளிய கீதா விளக்க நன் முத்துக்கள் கீதா வாஹினியில் சுடர்விடுகின்றன. திரு. கஸ்தூரி அவர்கள் தொகுத்த ஆங்கில நூலின் தமிழாக்கம் இந்நூல்.

உபநிடதங்கள் பசுக்கள்; அவற்றின் பால் பகவத் கீதை கறப்பவன் கண்ணன்; கன்று அர்ஜுனன்; இதை அருந்தி இன்புறுபவர் நல்ல மனம்படைத்த மனிதர்கள்.

பகவத்கீதை, வியாஸர் அருளிய ஸ்ரீமத் மஹாபாரதத்தில் பீஷ்ம பர்வம் என்னும் பகுதியில் அடங்கியிருக்கிறது. பதினெட்டு அத்தியாயங்களில் 700 சுலோகங்களாக இது தரப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு யோகத்தைப் பற்றிக் கூறும். கீதையைப் படித்துணர்ந்தால் பேதையும் மேதையாவான்.

பகவான் பாபா இந்தக் கீதையை 27 அத்தியாயங்களில் உருவாக்கியிருக்கிறார். இவற்றிலெல்லாம் அறிவு நுட்பமும் ஆன்மதரிசனமும் ஒளிவீசுகின்றன. தெளிவாகமலிருக்கிற பல இடங்கள் தெளிவாகின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் பகவானின் தெய்வக்குரல் ஒலிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கூறும் நல்லுலகம் இதனால் பயன்பெற வேண்டும் உயரிய நோக்கோடு திரு ஸத்ய ஸாயி பக்தர் குழாம் இந்தத் தமிழாக்கப் பணியை எனக்கு இட்டது. இதிலுள்ள குற்றங்களை மன்னித்து, குணங்களை ஏற்று அன்பர் உலகம் மகிழ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இப்புத்தககத்தில், பாபாவின் உரைகளுக்குப் பின் ''தேன் துளிகள்'' என்ற தலைப்பில்' கீதாவாஹினியி விருந்து தலையாய சில கருத்து மணிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறேன். இவை பாபாவின் வாயமுதத் தேன் துளிகள். இவற்றையும் சுவைத்து மாந்தி இன்புறுமாறு அன்பர்களை அழைக்கின்றேன்.

பாபாவின் கருணை பொங்கி
எங்கும் தங்கு வதாக.

பி. கே. சுந்தரம்

சென்னை,
11-14-1977.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கீதா

## தியான சுலோகங்கள்

ஓம் பார்த்தாய ப்ரதிபோதிதாம்
பகவதா நாராயணேன ஸ்வயம்
வ்யாஸேன க்ரதிதாம்
புராணமுநிநா மத்யே மஹாபாரதம்
அத்வைதாம்ருத – வர்ஷிணீம்
பகவதீம் அஷ்டாதச - அத்யாயினீம்
அம்ப த்வாம் அநுஸந்ததாமி
பகவத் கீதே பவ - த்வேஷிணீம்,

அர்ஜுனனுக்காக பகவான் நாராயணனால் நேர்வாய் மொழியாக அருளப் பெற்றதும், முனிவரான வேதவ்யாஸ ரால் மஹாபாரதத்தின் மையத்தில் அமைக்கப் பெற்றதும் அத்வைத அமுதத்தைப் பொழிவதும், பதினெட்டு அத்தியா யங்களால் ஆனதும் மறுபிறவி இல்லாமல் செய்வதுமான பகவத் கீதா! எம் அன்னையே! உன்னை எப்பொழுதும் நினைந்து வாழ்வேன்!

மூகம் கரோதி வாசாலம்
பங்கும் லங்கயதே கிரிம்
யத் க்ருபா தம் அஹம் வந்தே
பரமானந்த மாதவம்

ஊமையைப் பேச்சாளனுக்கி, முடவனை மலையைத் தாண்டச் செய்யும் கருணையை உடைய இன்ப வடிவமான மாதவனை வணங்குகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் | 1 | 1 |
| அத்தியாயம் | 2 | 12 |
| அத்தியாயம் | 3 | 20 |
| அத்தியாயம் | 4 | 32 |
| அத்தியாயம் | 5 | 43 |
| அத்தியாயம் | 6 | 52 |
| அத்தியாயம் | 7 | 63 |
| அத்தியாயம் | 8 | 73 |
| அத்தியாயம் | 9 | 84 |
| அத்தியாயம் | 10 | 95 |
| அத்தியாயம் | 11 | 104 |
| அத்தியாயம் | 12 | 116 |
| அத்தியாயம் | 13 | 128 |
| அத்தியாயம் | 14 | 140 |
| அத்தியாயம் | 15 | 152 |
| அத்தியாயம் | 16 | 163 |
| அத்தியாயம் | 17 | 174 |
| அத்தியாயம் | 18 | 185 |
| அத்தியாயம் | 19 | 195 |
| அத்தியாயம் | 20 | 206 |
| அத்தியாயம் | 21 | 217 |
| அத்தியாயம் | 22 | 226 |
| அத்தியாயம் | 23 | 236 |
| அத்தியாயம் | 24 | 248 |
| அத்தியாயம் | 25 | 254 |
| அத்தியாயம் | 26 | 252 |
| அத்தியாயம் | 27 | 272 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

ஓம்

# கீதாவாஹினி

## அத்தியாயம் 1

கீதையின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கு அதை மிகவும் பயபக்தியுடன் அணுகுவது அவசியம். அடக்கமும் ஆர்வமும் உள்ள மனப்பாங்கோடு அதைப் படிக்க முற்பட வேண்டும். ஏனெனில், உபநிஷதங்கள் என்னும் பசு கொடுத்த பால் இந்தக் கீதை; அர்ஜுனன் என்னும் கன்றிற்காகக் கண்ணன் என்னும் இடையன் கறந்தது; நல்லறிவுடையோர் எல்லோரும் பருகிப் பலம் பெறுவதற்காக இது தரப்பட்டது. ஒரு சிலர், மஹாபாரதத்தின் ஒரு பகுதியான இந்தப் புனிதமான கீதை, மஹாபாரதம் இயற்றப்பட்ட பின் தொகுக்கப் பெற்றது என்று வாதிடுகிறார்கள். கீதை இயற்றப்பட்டதைப் பற்றி எவர் எதைச் சொன்னாலும் சரி, கீதை சொல்லும் தத்துவங்களும் உபதேசங்களும் மிகவும் பழமையானவை, ஏன், காலவரம்பிற்குட்படாதவை என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

கீதையில் நான்காவது அத்தியாயத்தின் முதல் மூன்று சுலோகங்களில், இறைவன் முதலில் சூரியனுக்கும் பின்னர் மனுவிற்கும் கீதையை உபதேசித்ததாகக் குறிப்புத் தரப்பட்டிருக்கிறது. மனுவினிடமிருந்து இக்ஷ்வாகுவையும் அவனிடமிருந்து மற்றவர்களையும் முறையே அது அடைந்தது என்ற செய்தியும் அங்குத் தரப்படுகிறது. ஆகவே, கீதை காலத்திற்கு அப்பாற்பட்டது; கடந்த காலத்திலோ, தற்காலத்திலோ, ஒரு தேதியில் அது ஏற்பட்டதாகக் கூற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதை ஆன்மீகச் சாதகர்களுக்குரிய புத்தகமாகும். மற்றது எதையும்விட, ஸாதனத்தை, அதாவது, ஆன்மீக நோக்குகளை அது வலியுறுத்துகிறது. அதில் ஒவ்வொரு அத்தியாயமும் அமைதி, இயைவு என்ற இலட்சியத்தை அடைவதற்கு வேண்டிய வழிகளையும், முறைகளையும் வகுத்துத் தருகிறது, இனி, முன்னேற்றத்திற்கான முனைப் பும் நிதானமும் கூடிய வேட்கையின் விளைவுதான் ஸாத னம் எனப்படும். ஸாதகன் சாதிக்க ஆசைப்படவேண்டும். அதில் நிராசை அடையக் கூடாது, தொடர்ந்து விடாமல் முயலவேண்டும். சீக்கிரமேவெற்றியைக் கண்டு விடவேண் டும் என்று அவசரப்பட்டுத் துடிக்கக் கூடாது. கீதை ஒரு படகு போன்றது. தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட கட்டிலிருந்து மனிதனை அவனுடைய இயற்கை யான சுதந்திரத்திற்கு அது ஏந்திச் செல்லுகிறது. இருளி லிருந்து ஒளிக்கும், ஒளியிழந்த நிலையிலிருந்து ஒரு பேரொளிக்கும் மனிதனை அது அழைத்துச் செல்லுகிறது. இழுக்கமென்பது இல்லாத, பிறப்பு இறப்பு என்ற சக்கரத் தோடு மனிதனைப் பிணைக்கும் வாசனைகளின் கலப்புக்கள் நீங்கின், ஒழுக்கங்களையும் கடமைகளையும் அவனுக்காகக் கீதை ஏற்படுத்தியிருக்கிறது.

உண்மையாகச் சொல்லப் போனால், தனக்குரிய தருமங் களைச் செய்வதற்காகத்தான் இந்தக் கர்ம க்ஷேத்திரத் திற்குள், செயற்களத்திற்குள் மனிதன் வந்து சேர்ந்திருக் கிறான்; அந்தச் செயல்களின் பலனைப் பெறுவதற்காக அல்ல; இதுதான் கீதையின் உபதேசம்; அதன் அடிப் படைப் பாடம்.

கீதை வேதங்களினுடைய கருத்துக்களின் ஸாரம், புறத்தே உள்ள பொருள்களைக் குறித்துச் செய்யப் படுப வைகளான யாகங்களும் யஜ்ஞங்களும் வேதங்களுடைய தொடக்கப் பகுதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. உள் முகமாகச் செய்யும் உபாஸனைகள் போன்ற மனத்தின் காரியங்கள் பின்னர் சொல்லப்படுகின்றன. ஞானயோக மும்கூட தெளிவும் தூய்மையும் அடைந்த மனமுடையவர் களுக்குத்தான் விளக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராயினும் சரி, எவ்வளவு படித்தவனுனாலும் சரி, மயக்கத்தினின்றும் தப்பமுடியாது. அதனுல் அவன் துன்பத்தின் வசப்படுகிருன்; அது அவனுடைய செயற்றிறனைத் தடுத்து விடுகிறது. அர்ஜுனன் பெரிய வீரன். உயர்ந்த தியாகத்தைச் செய்வதற்கும், சிறந்த மெய்யறிவைப் பெறுவதற்கும் ஆற்றலுள்ளவன். அப்படிப்பட்டவன் போரின் பயங்கரமான தேவைகளினுல் மயக்கத்திற்கு ஆட்படுகிருன். இந்த மனத்துயரம் அவனது செயலுக்கும் தடையிடுகிறது. உடலையும் ஆத்மாவையும் ஒன்றுக்கொன்று குழப்புகிருன். இரண்டையும் ஒன்று என்று எண்ணிவிடுகிருன். ஓயாமல் மாறிக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கும் உலகத்தின் தன்மைகளால் ஒருபொழுதும் தொடப்படாமல் விளங்கும் ஆத்மாவின் மேல் பொய்யானதும் நிலையற்றதுமான உலகத்தின் இயல்பை ஏற்றிவைத்து, இந்த மயக்கத்தை உண்மையென்று வேறு நம்பிக் கொண்டிருக்கிருன். (பொய்யையும் மெய்யையும்) ஒன்ருக்கிய இந்தத் தவற்றினுல் ஏற்பட்ட சில காரியங்களைத் தன்னுடைய ஆத்ம தர்மங்கள் என்று எண்ணிக் கொள்கிருன்! இது அர்ஜுனனுக்கு மட்டும் ஏற்பட்ட அவலம் அல்ல. மனித சமுதாயத்துக்கே ஏற்பட்டதுதான். அதனுல், கீதையின் மதிப்பு பொதுவானது; என்றுமுள்ளது. கீதையைப் படிப்பது என்ருல் மயக்கம் என்ற கடலை நீந்திக் கடக்கும் கலையைக் கற்பதாகும். பகவான் கண்ணனின் குரலே கீதை. பல லட்சக்கணக்கான மனிதர்களுக்கு ஆறுதலையும் விடுதலையையும் அது அளித்திருக்கிறது என்பதே அது தெய்வத்தினிடமிருந்து தோன்றியது என்பதற்குச் சான்ருகும். அத்தகையதொரு மாட்சிமையைத் தெய்வத்திற்குக் குறைந்த யாரும் அதற்குத் தந்திருக்க முடியாது.

கீதை தொடங்கும் விதம், முடியும் விதம் இவைகளே அது விளக்கும் தத்துவம் என்னவாயிருக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன. அதன் முதல் சுலோகமே ''தர்ம க்ஷேத்ரே, குருக்ஷேத்ரே'' என்று தர்மம் என்ற சொல்லை முதலில் வைத்து ஆரம்பிக்கிறது. கடைசியான பதினெட்டவது அத்தியாயத்தின் கடைசி சுலோகம் 'யத்ர யோகேச்வர: கிருஷ்ண: என்று தொடங்குகின்றது. இந்த யோகேச்வர என்ற சொல் கீதையில் சொல்லப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தைச் சுருக்கிச் சொல்லுகிறது. இவ்வாறு, கீதோப தேசத்தின் நோக்கம் இதுதான் என்பது தெளிவாகிறது. தர்மத்தை நினை; தர்மத்தைச் செய்! தர்மம் என்ற இச்சொல் தான் எவ்வளவு பொருள் பொதிந்தது! எல்லா மெய்யுணர் நூல்களும், தருமத்தினது இயல்பையும் அதன் நுட்பமான அம்சங்களையும் அறுதியிடவும் விளக்கவும் முயன்று கொண் டிருக்கின்றன. கீதை இந்த ஆராய்ச்சியையும், படிப்பையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. தருமத்தை அதன் எல் லாச் சாயல்களோடும் சொல்லுகின்ற பாடப்புத்தகம் கீதை. தருமத்தில் அடங்கும் எல்லாத் தத்துவங்களையும் அது ஆராய்கிறது.

அர்ஜுனன் தனிப்பட்ட ஜீவன். உடம்பு ஒரு ரதம்; ரதத்தில் அமர்ந்து ஓட்டும் ஸாரதியாய் இருந்து உபதேசிக் கும் குருதேவன் கண்ணன். அறிவை இயக்கும் இறைவன் காயத்ரீ மந்திரத்தில் வருகின்ற ''எங்களுடைய அறிவைத் துலங்கவைப்பாயாக!'' என்ற சொற்களினால் செய்யப்படும் மனிதனுடைய பிரார்த்தனைக்குச் செவிமடுத்து அறிவை விளக்கச் செய்யும் பரம்பொருளே அந்தச் சாரதி கண்ணன். அசுரத் தன்மையைக் காட்டி நிற்பவர்கள் கௌரவர்கள்; தேவத் தன்மையை எடுத்துக் காட்டுபவர்கள் பாண்டவர் கள். ஒரு சாரார் தீயவர்; மற்ற சாரார் நல்லவர். இந்த இரண்டுக்குமிடையே என்றுமே போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எதிரெதிரான இவ்விரண்டு சக்தி களுக்கிடையே நிகழும் இந்தப் போராட்டத்தில் உயிர் களின் ஆத்மாவான கண்ணன், எல்லாவற்றையும் காக்கும் மெய்ப்பொருளான தருமத்தின் பக்கம் நிற்கிறான்; அடுத்துக் கெடுக்கும் மயக்கத்தின் பக்கம் சேருவதில்லை. உங்களுக்குத் துணையாக உங்களது பக்கத்தில் இறைவன் இருக்கவேண் டும் என்று நீங்கள் விரும்பினால், தருமத்தின் குணங்க ளான தெய்வீகத் தன்மைகளினால் உங்களை வலுப்படுத்திக் கொள்ளுங்கள் ஏனெனில், எங்குத் தருமம் இருக்கிறதோ, அங்கு ஆண்டவன் இருக்கிறான்.

இதனால், ஆண்டவன் எங்கும் இருக்கிறான் என்பது பொய்யல்ல! வெண்ணெய் பாலெங்கும் நிறைந்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாலைத் தயிராக்கிப் பின் தயிரைக் கடைந்துதான் பாலிலிருக்கும் வெண்ணெயை வெளிப்படுத்த முடியும். அது போலவே தருமசாதனத்தினால் எங்கும் நிறை இறைவன் ஓரிடத்தில் தோற்றம் கொள்கிறான். எங்கு தருமம் இருக்கிறதோ அங்கு வெற்றி ஏற்படுகிறது.

அர்ஜுனன் பௌதிகமான ஒரு நிலைமையை மட்டும் நினைத்து அதில் ஆழ்ந்திருந்தான். அதனால் ஆத்மாவைப் பற்றிய அறிவைக் கொடுத்து அருள் செய்ய வேண்டியிருந்தது. சாதனத்தின் எல்லா வகைகளும் ஆத்மாவைப் பற்றிய உணர்வு தெளிவு பெறும் பயனைக் குறித்தும், அதில் கவனம் பதிக்கப்படுவதற்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கண்ணனுடைய உபதேசம் இதுவே; உண்மையில் இதுதான் மெய்யறிவின் தேட்டத்திற்கு முழுப் பொருளாகும்.

அர்ஜுனன் வாய்திறந்து கேட்காவிட்டாலும் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்திய பல சந்தேகங்களுக்குக் கண்ணன் விடையளித்தான். ''ஓ அர்ஜுனா! இந்த அரசர்களும் இளவரசர்களும் உனக்கு உறவினர்கள், உன் கையால் மரணமடையப் போகிறார்கள் என்றுதான் நீ துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். ஆயினும் தருமத்தைப் பற்றிச் சக்கர வட்டமாகப் பேசுகிறாய். ஆனால், ஒன்று கவனத்தில் வைத்துக் கொள்! மெய்யறிவு படைத்தவர்கள் உயிருடனிருப்பவர்களுக்காகவோ இறந்து விட்டவர்களுக்காகவோ துயரப்படுவதில்லை. அதன் காரணத்தை உனக்குச் சொல்லட்டுமா? நல்லது: மரிப்பது இந்த உடம்புதான்; இந்த உடம்பைக் குறித்துத்தான் நீ இத்தனை துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாய். உன் வாழ்நாளில் இந்த உடம்பு பல மாறுதல்களை அடைந்ததே, அப்பொழுதெல்லாம் நீ துன்பப்பட்டதுண்டா? குழந்தை பாலகனாக மாறியது; பாலகன் வாலிபனாக மாறினான்; வாலிபன் நடுவயதினனானான்; நடுவயதினன் முதியவனானான்; முதியவன் மரிக்கிறான். இவ்வாறு இத்தனை நாள் இந்த உடலுக்கு ஏற்பட்ட மாறுதல்களுக்காக நீ ஒரு நாளும் அழுததில்லையே? மரணம் என்ற இந்த ஒரு மாறுதலுக்கு மட்டும் ஏன் அழுகிறாய்? நீ சிறுவனாக இருந்த போது உனக்கிருந்த உடலா இப்பொழுது உனக்கிருப்பது? திருஷ்டத்யும்னனைக் கட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டாயே, அப்பொழுது உனக்கிருந்த உடம்பு இப்போது எங்கே? அந்தச் சின்ன வயதின் குறும்பை இன்னும் நீ நன்ருக நினைவில் வைத்திருக்கிருய். ஆனல் அந்தக் குறும்பினைச் செய்த உடம்பு எப்போதோ போய் விட்டது! இப்படித்தான் உனது உடம்பு என்னதான் மாறுதல்களை அடைந்தாலும் மெய்றிவுமயமான ஆத்மா மட்டும் அழியாமல் மாருமல் அப்படியே இருக்கிறது. இந்த மெய்யறிவில் அசைக்க முடியாமல் ஊன்றி நிற்பதுதான் புத்திமானுக்கு அடையாளம்'' என்று கண்ணன் அர்ஜுன னுக்கு சொன்ஞன்.

''பல ஆண்டுகளாக வாழ்ந்து உறவாடி வந்த உடம்பு மறையும் பொழுது ஒருவன் வருந்தாமலிருக்க முடியுமா; என்று நீ கேட்கக் கூடும். அப்படி வருந்துவது சரி என்றே வைத்துக் கொண்டாலும், எத்தனை பேருக்காக நீ வருந்துவாய்? அதைப்பற்றி யோசித்துப் பார்த்தாயா? இன்பமும் துன்பமும் பகலையும் இரவையும் போன்றவை. அவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். இதற்கு நீ மறுத்தால் அதனுல் அவை வராமல் போய்விடா. அல்லது நீ விரும்பி வரவேற்ருலும் அதற்காக அவை அப்போதே வந்தும் விடா அவை இரண்டும் இந்தப் பூத உடலைச் சார்ந்தவை. அவை ஆத்மாவைத் தொடமாட்டா. இவை இரண்டிலிருந்தும் நீ விடுபட்ட அக்கணமே மோக்ஷம் பெற்றவனுகிருய்! என்று மேலும் கண்ணன் சொன்ஞன்.

கீதையில் இந்த உண்மைகளைப் போதிக்கும் முதல் அத்தியாயம் அர்ஜுன விஷாதயோகம் என்று அழைக்கப்படு கிறது. அர்ஜுனனுடைய துயரத்தைச் சொல்லும் பகுதி என்று பொருள். பகவத் கீதை என்னும் கட்டடத்திற்கு இந்த அத்தியாயமே அஸ்திவாரம். அஸ்திவாரம் பலமாக இருக்குமானுல் கட்டடமும் பலமாக இருக்கும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் அந்த அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்பட்ட கீதை அசைக்க முடியாததாகவும், உறுதி யாகவும் நிற்கிறது. இதிலிருந்து எவ்வளவு அழுத்தமாக அது நிற்கின்ற அஸ்திவாரம் அமைந்திருக்கின்றது என்பதை யும், அந்த அஸ்திவாரத்தைப் போட்டவன் எவ்வளவு அறிவாளி என்பதையும் நீங்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அதை 'விஷாதம்' துயரம் என்று அழைக்கிறீர்கள். ஆனல் அந்தத் துயரம் மிகவும் நன்மை பயப்பதாக இருக்கிறது. அது சாதாரணமான 'அதைரியம்' அல்ல. ஏனெனில் அது அர்ஜுனனுடைய உண்மையுள்ளத்தையும் உறுதியையும் சோதித்து விட்டது. கண்ணனிடத்தில் மறுபேச்சில்லாமல் அடைக்கலம்புக அது அர்ஜுனனைத் தூண்டியது. அதனலேதான் அது 'யோகம்' என்ற பெயரால் உயர்த்தப்பட்டது. விஷாதயோகத்துடன் தொடங்கும் கீதை ஸந்நியாஸ யோகத்துடன் முடிகிறது. விஷாதம் என்பது அஸ்திவாரம்; ஸந்நியாஸம் என்பது அதன் மேலெழுந்த கட்டடம், விஷாதம் வித்து; ஸந்நியாஸம் பழம்.

அர்ஜுனனுக்கு ஒரு தூய்மையான இயல்பு இருப்பதாக எப்படிச் சொல்ல முடியும்? கீதையில் சொல்லப்பட்ட மெய்யறிவினைத் தூய இயல்புடைய ஒன்றுதானே பெறத் தகுதியுடையது? என்று கேட்கக்கூடும். 'அர்ஜுனன்' என்ற சொல் 'தூயது', 'மாசு படாதது', 'வெண்மையானது' என்னும் பொருளுடையது. அர்ஜுனனுக்கு மிகப் பொருத்தமாகத்தான் இந்தப் பெயர் இடப்பட்டிருக்கிறது. அப்பெயருக்கேற்ப அர்ஜுனன் நடந்து கொண்டிருக்கிறன். அதனல்தான் அவன் கண்ணனுடைய நேருக்கு நேரான தரிசனத்தைப் பெறமுடிந்தது; அதனல்தான் உலகிற்குக் கீதை என்னும் பரிசுப் பொருள் கிடைப்பதற்கு ஒரு கருவியாக அமைந்தான்.

கீதையில் பல இடங்களில் 'யோகம்' என்ற சொல்லைக் கண்ணன் பயன்படுத்துகிறன். யோகத்தில் ஒரு மனிதனின் நிலையும் வருணிக்கப்படுகிறது. இருப்பினும், 'யோகம்' என்ற சொல் சாதாரணமாக உபயோகப் படுத்தப் படுவதற்கும் கண்ணன் அதை உபயோகப்படுத்துவதற்கும் நிறைய வேற்றுமை இருக்கிறது என்ற ஐயம் கீதையைப் படித்தவர்களிடையே ஏற்படலாம். கண்ணன் சில இடங்களில் பற்றின்மையைப் புகழ்ந்து பேசியிருக்கிறன். இன்னும் சில இடங்களில், பக்தியினலேயே, பூசனையினலேயே சிறந்த விடுதலையைப் பெற்று விடமுடியும் என்று கூறியிருக்கிறன். உயர்ந்த நிலையான ஆத்மானந்தத்தைப் பெறுவதற்குரிய பல்வேறு முறைகளும் விரிவாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டிருக்கின்றன. எட்டாவது அத்தியாயத்தில், ராஜ யோகத்தைப் பற்றிய விவரம் இருக்கிறது. ஆயினும், ராஜ யோகத்தைப் போதிக்க வந்த நூல் கீதை என்று சொல்வது சரியாகாது.

பகவான் கண்ணனிடத்தில் முழுவதும் சரணடைதல், இச்சைக்குரிய பொருள் நிரம்பிய புற உலகத்தோடு நம்மைப் பிணிக்கும் மூன்று விதமான விலங்குகளிலிருந்து விடுபடுதல், நல்வினைகள், ஒழுக்கப் பயிற்சிகள் இவைகளைக் கடைப்பிடித்தல், இந்த முக்கியமான உண்மைகள்தான் கீதையில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. பயிற்சியின் சிறந்த முறைகளாகவும், உள்ள உயர்வின் மிக ஆழமான ரகசியங் களாகவும் பகவான் இவற்றைக் கருதுகிறான்.

கீதையின் உண்மையான கருத்து எல்லோராலும் புரிந்து கொள்ளப்படவில்லை. புகழ் மிக்க படிப்பாளிகளும் எழுத்தாளர்களும், அரிய அறிவாற்றல் பெற்றவர்களா யிருந்த போதிலும், கீதையினுடைய உபதேசத்தின் ரகசியத்தை விண்டு சொல்ல முடியவில்லை. ஒன்று மாறுதல்களுக்கிடையே ஒரு சீரான சமநிலை இருக்கின்றது என்று உரையாளர்கள் கூறுகிறார்கள்; அல்லது, சுதந்திரம் பெறுவதையே மற்றெல்லாவற்றையும் விட முக்கியமான தாகக் கருதுகிறார்கள். இன்னொரு பக்கம், தங்களுக்குத் தெரிந்த மேனாட்டுத் தத்துவ நூல்களுடன் கீதையை ஒப்பிட்டுக்கொண்டு, இளம் மனங்களுக்கு அதே முறையில் புகட்டவும் தொடங்கிவிடுகிறார்கள்! முழுத் துறவு என்பது மிகவும் விரும்பத்தக்க ஒன்று என்பது உண்மைதான். ஆனால் வெகு சிலரே அதைப் பயில முடியும். ஓர் ஆத்மீக மான அறிவுரை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால், பயிலுவதற்கு எளிய ஒழுக்கங்கள் அதில் இருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையின் நடை முறையில் பயனுள்ளதாக ஒவ்வொருவராலும் அது உணரப்பட வேண்டும்.

அவரவர் தத்தம் சொந்தக் கடமைகளை நெஞ்சில் உறுதியுடன் செய்து முடிப்பதுதான் மிக உயர்ந்த அறமாகும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சமயங்களுக்கும் அறநெறிகளுக்கும் ஒரு பிணக்கு ஏற்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. வினைசெய்தல் என்பது புரிந்து கொள்ள முடியாத இயல்பினதாக இருக்கின்றது என்று பகவான் கீதையில், இந்த அறநெறியைப் பற்றிச் சொல்லுகின்றார். எந்தச் செயல் முறையானது? எது முறையற்றது? எந்தச் செயல் அறநெறிகளினால் ஏற்கப்படுகிறது? எது ஏற்கப்படுவதில்லை? இந்தச் சிக்கலை விடுவிப்பதற்குப் பலர் இதனுடன் போராடியிருக்கிறார்கள்; இன்றைக்கும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் போற்றுதற்குரிய செயல் வகையைப் பற்றிக் கண்ணன் குறிப்பிட்டிருக்கிறான்: — ''என்னையே நினைந்திரு! என்னுடைய பக்தனாக இரு! என்னைத் தொழு! என்னை வணங்கு! என்னை அடைவாய்! உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்! நீ எனக்கு உகந்தவனல்லவோ!'' என்றும், ''எல்லாச் செயல்களையும் துறந்து, என்னையே அடைக்கலம் அடைவாயாக! நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்! வருந்தற்க!'' என்றும் கண்ணன் அர்ஜுனனுக்குச் சொல்கிறான்.

ஆஹா! இந்த இரண்டு சுலோகங்களின் கருத்தையும் உட்கருத்தையும் நன்கு நோக்குங்கள்! இந்த உலகத்திற்குள் திரும்பத் திருப்ப வருவது, தங்குவது, பின்னர் விட்டு மறைவது என்ற இந்தச் சுழலிலிருந்து உங்களைக் காப்பாற்று வதற்கும் அதிலிருந்து விடுவிப்பதற்கும் இந்தச் சரணாகதி என்ற ஒரு செயல் போதாதா?

*தன்மனா:* 'அதாவது எல்லாவற்றிலும் கண்ணனைப் பார்ப்பது. வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் அவனை உணர்வது, இந்த உணர்வின் மகிழ்ச்சியில் திளைப்பது. *தத்பக்த:* அதாவது' அவன்பால் பூண்ட காதலினாலும் பக்தியினாலும் உண்டான உறவில் ஆழ்வது *தத்–யாஜீ*, பெரியதாயினும் சரி, சிறியதாயினும் சரி, எல்லாச் செயல்களையும் அவனுக்கே அர்ப்பணிப்பது, ஆசை, சங்கல்பம், நோக்கம், செயல் பலன் விளைவு எல்லாவற்றையும் அடிமுதல் இறுதிவரை அவனுக்கே அர்ப்பணிப்பது, தன்னிடத்திலே இருக்கும் பற்றுக்களைத் துறப்பது, செய்யவேண்டிய கடமைகளை யெல்லாம் பக்தி கலந்த பற்றின்மையோடு செய்து வருவது இதைத்தான் ஆண்டவன் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய முழுச் சரணாகதியைச் செய்வது மிகுந்த சிரமம் என்பதென்னவோ உண்மைதான். ஆயினும், இதைக் குறித்து மனிதன் மிகச் சிறிய முயற்சி செய்தாலும் அதை முடிவுரை தொடர்வதற்கு வேண்டிய தைரியத்தை இறைவனே தந்தருளுகின்றான். பக்தனோடு கூடவே நடந்து, நண்பனாக இருந்து உதவுகிறான். வழிகாட்டியாக நடத்திச் செல்கிறான். பாவத்திலிருந்தும் ஆசையிலிருந்தும் காப்பாற்றுகின்றான். ஊன்றுகோலாகவும் ஆதரவாகவும் இருக்கின்றான். ''மிகச் சிறிய அளவில் செய்யப்பட்டதாயினும் பெரும் அச்சத்தினின்றும் இந்தத் தர்மம் காப்பாற்றி விடுகிறது'' என்று கீதையில் அவனே சொல்லியிருக்கிறான். தருமத்தைப் பின்பற்றுவதே இன்பத்தின் ஊற்று. அந்த வழிதான் குறைவான தடங்கல்கள் உள்ளது. இதுதான் இறைவனின் உபதேசம்.

மாம் ஏவ ஏஷ்யஸி: ''என்னருகில் வருவாய்; என்னை அணுகுவாய்; அதாவது, என்னுடைய ரகசியத்தைப் புரிந்து கொள்வாய்; என்னுள் பிரவேசிப்பாய்; என்னுடைய தன்மையை அடைவாய். இம்முறையில், இறைத்தன்மையை அடைதலும், இறைவனிடத்தில் உறைதலும், அவனோடு ஒன்றுதலும், உணர்த்தப் பெறுகின்றன. எல்லாப் பொருள்களிலும் இறைவனைப் பார்க்கின்ற பக்குவத்தை ஒருவன் பெற்றுவிட்டால், எல்லா அறிவுக் கருவிகளும் அந்த இறை உணர்வைத் தரும் பொழுது, அந்த இறைத் தன்மை ஒன்றே பார்த்து, கேட்டு, சுவைத்து, முகர்ந்து, தொட்டு உணரப்படும் பொழுது, மனிதன் ஐயமின்றி இறைவனின் வடிவத்தில் ஒரு பகுதியாகி, அவனிடத்திலே அவனோடு கூடவே வாழ்கின்றான். உங்களுடைய சொந்த வளர்ச்சிக்காகவே இந்தக் கடமையை நீங்கள் ஆற்ற முற்படும்பொழுது, முதற்படியிலேயே நீங்கள் ஒரு புதுச் சக்தியைப் பெறுவீர்கள் ஒரு புதிய, மேன்மேலும் தூய்மையான மகிழ்ச்சியில் சிலிர்ப்பீர்கள். பேரின்பத்தின் முழுமையைச் சுவைப்பீர்கள். ஒரு புது மனிதத் தன்மையினால் புத்துணர்வு பெறுவீர்கள்.

இந்த நெறியானது மனிதர்களுக்குள்ளே அதிசய மேதைகளுக்காக உபதேசிகப்பட்டதோ, பரிந்துரைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதோ அல்ல. எல்லாருக்கும் கிட்டக்கூடியதாக இது இருக்கின்றது. ஏனெனில், எல்லாருக்கும் இறைவனைக் குறித்து வேட்கை இருக்கிறது. மாறிக் கொண்டிருக்கும் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஏதோ ஒன்று இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்குரிய பகுத்தறிவு எல்லோருக்கும் இருக்கிறது. கொடுமை நிறைந்த பாவிகூட தனது இதயத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, வருந்தித் திருந்தி இறைவனைச் சரணடைவதன் மூலம் புனிதனாகலாம்.

எனவே, ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று ஏற்பட்ட நெறிகளைப் பின்பற்ற வேண்டுமென்பது ஆண்டவன் கட்டளை. ஒவ்வொரு மனிதனும் தனது பண்பாட்டின் ஆன்மீக அடிப்படைக்கு ஏற்பத் தனது வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். புறநோக்கான பார்வைகளை விட்டுவிட்டு, இறைவனுடைய குரலைக் கேட்க வேண்டும்.

பாரத நாட்டிற் பிறந்தவர்கள் பாரதத்தின் தலைவனான கோபாலனுடைய குரலைக் கேட்டு நடந்து, இந்நாட்டிற் பிறந்த பெருமைக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும், எழுதும் ஒவ்வொரு எழுத்திலும், ஏற்கும் ஒவ்வொரு விருப்பத்திலும், கருதும் ஒவ்வொரு எண்ணத்திலும் தூலமான பலன்களாகிய உணவு, உடை, உடல் நலம் இவற்றைப் பெறுவதற்காக அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தங்களிடம் மறைந்திருக்கும் இறையுண்மையை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

அப்போதுதான், இந்த இந்திய நாடு மனித சமுதாயத்திற்கு, அது அளிக்கிற சிறப்புப் பரிசான ஸநாதன தர்மம் என்ற பழம் பெரும் சமய உணர்வினது பெருமையை உலகத்திற்குத் தெள்ளென எடுத்துக் காட்ட முடியும்; அதன் மூலம், மனித சமுதாயத்தில் அமைதி ஏற்படவும் வழி வகுக்க முடியும். இந்தச் சநாதன தர்மத்தின் வழி நின்று செய்யப்படுகின்ற செயல்கள்தான் எல்லா நெருக்கடிகளையும் எதிர்த்து நிற்கக் கூடிய ஆத்மீக பலத்தை அளித்து, வெற்றியைத் தரும்.

இதற்கான வழியைத் தெளிவாகக் காண்பித்து, இந்தப் பெறுதற்கரிய வரத்தைக் கீதை நமக்குக் கொடுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

முதல் அத்தியாயத்தைக் கிருஷ்ணகீதை என்பதைவிட அர்ஜுன கீதை என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும். துயரத்தினாலும் மயக்கத்தினாலும் கவரப்பட்டு, போரினின்றும் விலகி, தனது படைக்கலங்களையும் தூர எறிந்து விடுகிறான் அர்ஜுனன். வருத்தத்தினால் சோர்ந்துபோய், இரண்டு சேனைகளின் நடுவில் தன் தேரில் உட்கார்ந்து விடுகிறான். இங்கும் அங்கும் பார்க்கிறான்; திகைக்கிறான்; தவிக்கிறான்; தன்னுடைய சுற்றத்தாரின் முகங்களைப் பார்க்கின்றான்; இரக்கத்தினால் ஆட்கொள்ளப்படுகிறான். உலகறிந்த 'அவனுடைய வில் பிடியின்று நழுவுகின்றது. நிற்பதற்கும், உட்காருவதற்கும் கூடச் சக்தியற்றவனாகி விடுகிறான். பூர்வமீமாம்ஸா சாத்திரம் குறிப்பிடும் சில கூற்றுக்களின் நினைவில் அவன் மனம் அலைகிறது. போர் செய்வதில்லை என்று சபதம் பூணுகிறான். இதைச் சஞ்சயன். குருடனான திருதராஷ்டிரனுக்குச் சொன்னபோது அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஏனெனில் அர்ஜுனன் போர் செய்யவில்லை என்றால், வெற்றி அவனுடையதாகி விடுமல்லவா! திருதராஷ்டிரனுக்கு முன்புத்தியுமில்லை, தூர திருஷ்டியுமில்லை. திவ்ய திருஷ்டியைப் பற்றிக் கேட்பானேன்! அதனால். குறைவுபடாத பெருத்த பேரரசைப் பற்றிய அவன் கனவு ஒரு சிரமமுமில்லாமல் உண்மையாகி விட்டதென்று மகிழ்ந்து போனான்.

ஆனால் திவ்ய ஞானப்பார்வை பெற்ற சஞ்சயனோ 'இதென்ன பைத்தியக்கார சந்தோஷம் இவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறது? இறைவனே பாண்டவர்களின் பக்கத்தில் இருக்கும்போது, இந்த அரசனின் தீயதிட்டங்கள் எப்படி வெற்றி பெறும்?'' என்று எண்ணினான். பின், அர்ஜுனன் போரில் இறங்கி விட்டானானால், அதனால் ஏற்படக்கூடிய பயங்கரமான விளைவுகளை எண்ணிப் பார்த்தான்.

ஆனால், அர்ஜுனன் கண்களில் பெருகிய நீர் கன்னங்களில் வழிந்தோடிக் கொண்டிருந்தது. கண்களில் நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளமாகப் பெருகியது. கண்ணனால் கூட இந்தக் காட்சியைப் பொறுக்க முடியவில்லை. அவனால் பேசாமலிருக்கவும் முடியவில்லை. அர்ஜுனனது நாடியைப் பிடித்துப் பார்ப்பதுபோல, அவனது மனநிலையை உணர்ந்தான்; உண்டாகியிருக்கும் நோயையும் கண்டான். கணத்தில், அர்ஜுனனுடைய ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களை ஒரு மயக்கம் துளைத்துப் பரவியிருக்கிறது என்று புரிந்து போயிற்று. அவனிடத்திலே தோன்றியிருக்கின்ற இரக்க உணர்வு மெய்யானது அல்ல; போலி என்று விளங்கியது. மெய்யான இரக்கமாக இருந்தால் அது தெய்வீகமான உயர்ந்த ஊகங்கள், உள்நோக்கங்கள் இவற்றால் நிரம்பியிருக்கும். இறைவனது ஆணைகளை அது மதிக்காமல் ஒதுக்காது. இரக்கம் என்ற போர்வையில் எழுந்த ஆணவமே அது. அர்ஜுனனது இந்தப் பலவீனத்தை அகற்றிவிட வேண்டும் என்று கண்ணன் நிச்சயித்தான். கிருபயா ஆவிஷ்டம் என்பது கீதை வாக்கியம். அர்ஜுனன் வசமிழந்து, ''இரக்கம் மேலிட்டு'' நிற்கிறான். இதைத் தீர்க்க வேண்டும்.

பேய் பிடித்த ஒருவனிடமிருந்து அதை விரட்டிவிடுவது போல, அர்ஜுனனும் அச்சத்தினின்றும் கோழைத்தனத்தினின்றும் விடுவிக்கப்படவேண்டும். ஏனெனில், கடவுளையே தன் பக்கத்தில் கொண்டிருப்பவன் ஒருபோதும் அச்சப்பட வேண்டியதில்லை. ஐந்து பூதங்களின் தலைவனான இறைவனை எந்தப் பூதமோ, பேயோ என்ன செய்துவிட முடியும்? நாராயணனே தலைசிறந்த மருத்துவன்: வைத்யோ நாராயணோ ஹரி:, இந்த நாராயண மருத்துவர்தாம் அர்ஜுனனுக்குத் தேவைப்பட்டது; அதனால் அவரை அடைந்தான். அர்ஜுனன் எவ்வளவு அதிருஷ்டசாலி! துன்பத்தின் ஆழத்திலிருந்தும்கூட இன்பம் சுரக்க முடியும். இரண்டாவது அத்தியாயத்தின் பதினோராவது சுலோகம் வரை, அர்ஜுனனுடைய சோர்வின் கதைதான் அர்ஜுனனைப் பிடித்திருந்த பேய் இந்தச் சோர்வுதான்! அதனாலேயே, பேய்க்கு மாற்றாக மருத்துவத்தின் முதற்படி சாங்கியயோகம் என்ற மெய்யறிவு வழியின் விளக்கமாகும். கண்ணனின் அமுதத்திற்கு ஒப்பான உபதேசம் இந்தப் பதினொன்றாவது சுலோகத்திலிருந்து தொடங்குகின்றது.

12135.5 உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில், பகவத் கீதையே இந்த இடத்திலிருந்துதான் தொடங்குகிறது. இந்த இடம் வரை, அர்ஜுனனுடைய அறியாமையினாலும் அறிவுக் குறைவினாலும் விளைந்த புத்தி மயக்கம் சொல்லப்பட்டது. சாட்சியாக நின்ற கண்ணன் அர்ஜுனனுடைய இந்தச் சோர்வு இன்னும் சிறிது ஆழப் படட்டும், இருளட்டும் என்று காத்திருக்கிறான். கடைசியில் அர்ஜுனன் தமது வில்லைக் கீழே எறிந்து விட்டு, போர் செய்ய மறுக்கும் பொழுது, நல்லது தீயது என்ற பகுத்தறிவே அற்றுவிட்டது என்று அவன் ஒப்புக்கொண்ட பொழுது, தன்னுடைய குழப்பங்களை எல்லாம் நன்கு தீர்த்து வைக்கின்ற வழியைப் போதிக்கவேண்டும் என்று கண்ணனை அவன் வேண்டி நின்ற பொழுது கண்ணன் சரி யென்று முன்வந்து சொன்னான்:—

''அர்ஜுனா! தெளிவுடனும் ஒளியுடனும் இவ்வளவு நாள் இருந்த உன் மேல் எப்படி இந்த வேதனையளிக்கிற கோழைத்தனத்தின் நிழல் இப்பொழுது விழுந்தது? உன்னைப் போன்ற வீரனுக்கு இது தகவன்று. அர்ஜுனன் என்ற சொல்லே குற்றமில்லாத தூயபான்மையைக் குறிக்குமே! அப்படியிருக்க, ஏன் இந்தத் துயரம்? போர் இதோ தொடங்கப் போகிறது. யுத்த மேகங்கள் திரண்டு இடிக்கின்றன. போராட்டத்தில் இறங்க வேண்டிய இந்தத் தருணத்திற்காக உனக்கெதிரில் நிற்கும் எதிரிகள் காத்திருக்கிறார்கள். எண்ணற்ற அநியாயங்களையும் கொடுமைகளையும் அவர்கள் உனக்குச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது உனக்கு நியாயமாகச் சேர வேண்டிய ராஜ்யத்தையும் அவர்கள் பிடுங்கிக் கொள்ளத் தயாராகி நிற்கிறார்கள். அவர்கள் உனக்கு ஓயாமல் கொடுத்த வேதனையையெல்லாம், சத்தியத்தினின்றும் கொஞ்சமும் வழுவாமல் நீ இதுவரை பொறுத்து வந்திருக்கிறாய். அவர்கள் போட்ட நிபந்தனைகளையெல்லாம் நீ நிறைவேற்றினாய். மறைந்து வாழ வேண்டும் என்று அவர்கள் வகுத்த வருடங்களையெல்லாம் அப்படியே கழித்தாய். சமாதானத்திற்காக நீ செய்த முயற்சிகளெல்லாம் வீணாகின. சண்டையை உன்னால் தவிர்க்க முடியவில்லை. நம்மால் முடிந்தவரை நாம் விட்டுக் கொடுத்தாயிற்று. இப்பொழுது தீயமனம் படைத்த துரியோதனன் கண்கள் திறந்து அவன் செய்த

அநியாயத்தை அவன் பார்க்கும்படி செய்வதற்குரிய ஒரே வழி போர் ஒன்றுதான்.

''நீண்ட ஆலோசனைக்குப் பிறகு இந்தப் போர் நிச்சயமாயிற்று. ஏதோ ஆத்திரத்தின் மிகுதியில் அவசரமாக எடுக்கப்பட்ட முடிவல்ல இது. சாதக பாதகங்களைப் பொறுப்புள்ள பெரியவர்கள் சீர் தூக்கிப் பார்த்துப் பின் போரை மேற்கொள்வது தவிர்க்க முடியாதது என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். நீயும் உனது உடன் பிறந்தோரும் இதையெல்லாம் ஒப்புக்கொண்டீர்கள்; இந்த முடிவைப் பாராட்டினீர்கள். இந்தப் போருக்காக மிகவும் உற்சாகத்துடன் நீங்கள் தயாராகிக் கொண்டிருந்தீர்கள். சொல்லப்போனால், நீதான் மற்ற எல்லோரையும் காட்டிலும் இதில் அதிகமாக ஈடுபட்டிருந்தாய். இப்போது திரும்ப முயற்சித்தால், அது எவ்வளவு தவறானது?

''இந்தப் போர் உன்மேல் ஏதோ தற்செயலாகக் கண நேரத்தில் திணிக்கப்பட்டதல்ல. வெகுநாளாகவே இதற்கான கருவிகளை நீ சேகரித்து வருகிறாய். பாசுபதாஸ்திரத்தைச் சிவபெருமானிடமிருந்து பெறுவதற்காக நீ எப்படிக் காட்டில் கிடைக்கும் பழங்களையும் கிழங்குகளையும் தின்று, பட்டினியும் கிடந்து உழன்றாய் என்பதையெல்லாம் நினைத்துப் பார்! இந்தப் போருக்கு வேண்டிய தெய்வீக அம்புகளைப் பெறுவதற்காக எப்படி நீ தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுடைய உலகம் வரை சென்றாய் என்பதையும் எண்ணிப் பார்!

தீயொழுக்கவர்கள் அடைய வேண்டிய அழிவின் விதியான் தருணம் வந்து விட்டதென்று நான் எண்ணினேன். நீயோ இந்தச் சமயம் பார்த்து இந்தச் சோகப் புலம்பலைத் தொடங்குகிறாய்! ஏன் இந்த அபசகுனம் போன்ற ஓலம்? எந்தச் சாஸ்திரத்தில் இந்த மனப்பான்மை சொல்லப்பட்டிருக்கிறது? க்ஷத்திரிய வகுப்பினரில் ஒருவனாக உன்னுடைய கடமையை நினைவில் வைத்துக் கொள்! தருமத்தைக் காப்பது, நீதியை நிலை நாட்டுவது, இவையல்லவா க்ஷத்திரிய நெறி? தளராத உறுதியும், சாகஸச் செயல்களும், வீரமும் அல்லவா உன்னுடைய செல்வங்கள்? ஆனால் நீயோ இந்த விநோதமான பற்றின்மையால் ஆட்கொள்ளப்பட்டிருக்

கிருய். இது வருந்தத்தக்க வகையில் பொருத்தமில்லாம லிருக்கிறது.

"இந்தக் கோழைத்தனம் உனக்கு இகழைக் கொண்டு வந்து சேர்க்கும்; புகழ்பெற்ற உனது முன்னேர்களுடைய பெயருக்கும் களங்கமுண்டாக்கும். வெட்கம்! க்ஷத்திரிய குலத்தையே அவமானத்திற்கு உட்படுத்தி விட்டாய். உன் போன்றோருக்குப் போர் செய்வது சுவர்க்கத்திற்குப் போகும் ராஜபாட்டை. இந்தச் சமயத்தில் களத்திலிருந்து மீண்டு விட்டால் இகழ்ச்சியிலிருந்து எப்படி மீளுவாய்? "விஜயன்" என்ற பட்டத்தை நீ உன்னுடைய கைகளின் பலத்தினுற் பெற்ருய். வாழ்நாள் முழுவதும் முயன்றுஅடைந்த புகழை மாசுபடும்படி விட்டு விடாதே. சோர்வைத் தரும் இந்த மயக்கத்தை அகற்றி விடு!

"நான் சொல்வதைக் கேள்; அமராவதியில் நடந்ததை நினைத்துப் பார். தேவமங்கையான ஊர்வசியினுடைய மயக்குக்ளை நீ உதறித் தள்ளினுய். உன் மூலமாக அவள் ஒரு மகனை விரும்பியபொழுது, "என்னையே மகனுகக் கொள்!" என்று பதில் சொன்னுய். அந்த சொல் உன்னை இணையில்லாத மவீரனுகக் காண்பித்தது. ஊர்வசி தனக்கு ஏற்பட்ட தோல்வியினுல் வெகுண்டு உனக்கிட்ட சாபம், பின்னுல் விராட தேசத்தரசனுடைய சபையில் பேடியாக உருவம் கொண்டு அரசிளங்குமாரிக்ளுக்கு நடனம் சொல்லித் தரும் வாய்ப்பை உதவிற்று. அல்லவா?

"அந்த வீரம் எங்கே போயிற்று? சொல். இந்தப் பயங் கொள்ளித்தனம் எப்படி அத்தகைய தீரனை ஆட் கொண்டது? என்னிடம் வந்து என் தூக்கத்தைக் கெடுத்து இந்தப் போரில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டாய். இன்று அதே போரிலிருந்து திரும்பி ஓடப் பார்க்கின்ருய். இப்படியா நான் உனக்கு உதவ வேண்டும்? நீ ஓடும்பொழுது, நான் வேடிக்கை பார்க்க வேண்டுமா? இந்த மயக்கத்தை வேருடன் கல்லி எறி; இந்தப் பயத்தைச் சுட்டுச் சாம்பராக்கு. மறுபடி வீரனுக எழு!"

இப்படி இடித்துரைத்தான் கண்ணன்.

இந்த இடத்தில் கண்ணன் நான்கு சொற்களை உபயோகிக்கிருன்; அறியாமை (கச்மலம்). தன் சொந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத் தன்மை மாசு படும்படியான மனப்பாங்கு (அநார்ய ஜுஷ்டம்), அந்தத் தெய்வத்தன்மை அழிந்து போகும் படியான குணக்கோளாறு (அஸ்வர்க்யம்), புகழை அழிப்பது (அகீர்த்திகரம்).

ஒரு க்ஷத்திரியனுடைய ரத்தத்தையே கொதிக்கச் செய்யும், இந்த அறிவுறுத்தும் வார்த்தைகள் அர்ஜுனனிடத்தில் பெரிய மாறுதலை உண்டு பண்ணிவிட்டன. அர்ஜுனனை மறைத்திருந்த அழுத்தமான மேகக்கூட்டம் சிறிது விலகத் தொடங்கியது. உண்மையை மறக்கச் செய்த தாமஸகுணம் மறைந்தது; ரஜோகுணம் தலைதூக்கியது. அர்ஜுனன் பேசும் சக்தி பெற்று, ''எப்படி?'' என்று கேட்கச் செய்தது. இந்தச் சொல் நிறையத் தெரிவிக்கின்றது. செய்யவேண்டிய கடமைகளை மட்டுமின்றி, அக்கடமைகளை எப்படிச் செய்து முடிப்பது என்றும் கீதை விளக்குகிறது என்பதை இச் சொல் காட்டுகிறது.

அர்ஜுனன் கண்ணனைப் பார்த்து, ''ஓ மதுஸூதனா! நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டருள வேண்டும். போரின் அணிவகுப்பில் முன்னணியில் நிற்பவர்கள் எல்லாம் வணக்கத்துக் குரியவர்கள். நாங்கள் எங்கள் தந்தையை இழந்து தவித்தபொழுது பெரியவரான பீஷ்மர் எங்களைக் காத்தார்; குழந்தைப் பருவத்திலிருந்து எங்களை வளர்த்து ஆளாக்கினார். எங்களது இன்றைய வளர்ச்சிக்கு அவரே காரணம். குலத்துக்கே பெரியவரான அவர் எங்களுக்குத் தந்தை போன்றவர். அதே போல, துரோணரைப் பற்றி நான் சொல்ல வேண்டுமா? சொந்தப் பிள்ளையான அஸ்வத்தாமாவை விட எங்களிடம் அவர் அதிகம் அன்பு செலுத்தினார். அவர் அன்பு முழுதும் எனக்குக் கிட்டியது. இந்த அன்பின் காரணமாக, என்னைத் தனக்குகந்த சிடனாக ஏற்றுக் கொண்ட என் குரு அவர். இன்றைக்கு நான் வில்லாளியென்றால் அப்படி என்னை வளர்த்தவர் அவர். அவர் எனக்குக் கற்பித்த திறமையைக் கொண்டு நான் அவரைக் கொல்லவேண்டும் என்று நீ இப்பொழுது விரும்புகிறாயா? பாரத நாட்டில் பிறந்த ஒருவன் செய்யக் கூடிய காரியமா அது? போரிலே நாம் எதிரிகளைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லவேண்டும், இல்லையா? அல்லது, வணக்கத்திற்குரிய தந்தைமார், ஆசாரியர் இவர்களோடு போரிட வேண்டுமா?

''போர் செய்வதனால் சுவர்க்கம் கிடைக்குமென்று சொல்லுகிறாய். இந்தப் பூசனைக்குரிய ஆசாரிய புருஷர்களையெல்லாம் கொல்வதன் மூலம் சுவர்க்கம் எப்படிக் கிடைக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. இந்தக் கருத்துப் பரவினால், வெகு சில ஆசாரியர்களே மிஞ்சுவார்கள்! நீ என்ன சொன்னாலும் சரி, உனக்கு நான் இதைச் சொல்லிக் கொள்ளுகிறேன்: இந்த வழியில் சுகத்தையும் ஆட்சியையும் பெறுவதைவிட, வீட்டுக்கு வீடு பிச்சை யெடுத்துக் கிடைக்கும் சோற்றை உண்டு உயிர் வாழலாம் என்று எண்ணுகிறேன். இத்தகைய பெரியவர்களைக் கொன்று பெறப்படும் உணவிலே அவர்களது இரத்தம் கலந்திருக்கிறது. இதைவிட, பிச்சை யெடுத்துக் கிடைக்கும் சாப்பாடு உயர்ந்தது. இருக்கட்டும்; இந்த மனச்சாட்சியின் உறுத்தல்களையெல்லாம் உதறிவிட்டுப் போர் செய்கிறேன் என்று வைத்துக் கொள்வோம்; அப்படியும், வெற்றி கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? வெற்றி நமதே என்று எதிர்பார்த்து, இந்தப் பெரியவர்களைக் கொல்ல நிச்சயித்து, இவ்வுலகம் மறுவுலகம் இரண்டையும் நான் எப்படி இழக்க விரும்புவேன்? எக்காரணத்தினாலாவது, கௌரவர்கள் வென்று விட்டார்கள் என்றால், எங்களுக்குப் பிச்சைக்கார வாழ்வுதான் கதி. நாங்கள் வென்றால், அது தோல்வியைப் போல் தீயதே யாகும். கொண்டார் கொடுத்தாரை யெல்லாம் அழிப்பது என்பது வெற்றிக்கு நாம் கொடுக்கும் விலை என்றால், அந்த வெற்றியினால் ஆவது என்ன? மிச்சமுள்ள வாழ்நாள் முழுதும் ஆற்றமுடியாத பெருந்துக்கம்தான் நமக்கு வந்து சேரும். கண்ணா! இந்தச் சிக்கலுக்குத் தீர்வை என்னால் காண முடியவில்லை. என் அறிவு என்னை மோசம் செய்து விட்டது. என்னுடைய இயல்பே பெரிதும் மாறியிருக்கிறது; ஏனென்று எனக்கே தெரியவில்லை. நல்லது எது, கெட்டது எது என்று என்னால் பிரித்து உணர முடியவில்லை.''

''நீ தூண்டி விடும்பொழுது, என்னுடைய க்ஷத்திரிய ரத்தம் எதிர்ப்பில் எழுகிறது. சண்டைக்கு என்னை உந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. தகைமை பொருந்திய இந்த முதியவரையெல்லாம் கொல்லும் கொலையாளியாகி விடுவேனோ என்ற பயம் என்னைப் பின்னுக்கிழுக்கிறது. நான் எளியவனாய் விட்டேன். இந்தத் தேரை ஓட்டுவது போல, என்னையும் நீ நடத்திச் செல்லவேண்டும். எனக்கு வழியைக் காண்பி! மேலும், இவ்வுலகத்துச் செல்வத்தை நான் நாட வில்லை. ஆத்மீகமான வளர்ச்சியைத்தான் அடையத் துடிக்கிறேன் என்றான்.

அந்தக் கணத்திலிருந்தே, கண்ணன் ஆசாரியனாகவும் அர்ஜுனன் மாணவனாகவும் ஆகிவிட்டார்கள். அர்ஜுனன் அந்தத் தகுதியை வேண்டினான்; பெற்றான். இந்த மாணவ மனப்பான்மையை அர்ஜுனன் ஒப்புக்கொள்ளும்வரை, அவனது இதயம் ஆணவத்தாலும் பலவீனத்தாலும் நிரம்பியிருந்தது. மன்னனாக இருந்தவன் சுன்னமாகி விட்டான். கண்ணனுடைய நிலைக்கு முற்றிலும் எதிரான நிலையை எடுத்துக்கொண்டு விட்டான்.

நிலைமையைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தோமானால், இதற்கெல்லாம் காரணம் ஆணவத்தைத் தவிர வேறில்லை. கண்ணனது நிலை பிரேமை என்றால் அர்ஜுனனது நிலை பிரமை எனலாம். இதனால் அவன் வேதனை அநுபவித்தான். பின், ஆணவம் மேலும் மேலும் அறியாமைக்கும் குழப்பத்திற்கும் இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்தான். ஆய்வுத்திறனை ஆண்டவனுக்கே விட்டு விட்டுத் தன்னைக் காத்துக் கொண்டான். ஆண்டவன் கைகளில் தான் ஒரு கருவியே என்று சொன்னான். தன் தவறை உணர்ந்து கொள்வதே ஒரு நல்ல சீடனின் முதல் சிறப்பாகும். அறிவிற்கு அது முதற்படி. முழு முட்டாள்கள் தாம் தமக்கு எல்லாம் தெரியும் என்று நம்பிக்கொண்டு தலைக்கனம் என்ற கொடிய நோயால் வருந்துவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 3

தன் சொந்தப் பிரதாபங்களை எல்லாம் எண்ணிப் பார்த்து அவைகளைக் குறித்து மார்தட்டிக் கொள்வதை விட, தன்னிடமுள்ள குறைகளைத் தேடிக் கண்டுபிடித்து அவைகளை நீக்கிக் கொள்வது ஒரு மாணவனுக்கு மிகவும் பயனுள்ளதாயிருக்கும். இதைச் செய்யும் மாணவன் மிக விரைவாக முன்னேற்றம் காணுவான்; பயத்தினாலோ கவலையினாலோ அவன் பின்னுக்கு இழுக்கப்படுவதில்லை. இறைவன் மேல் எல்லாப் பாரங்களையும் வைத்து விட்டு, அவனிடத்தில் நம்பிக்கையுடன், அவன் மேலே மேலே செல்லக் கூடும். அப்பொழுது அவன் அமைதி பொருந்திய ஒரு மன நிலையை அடைகிறான்; அதுதானே உண்மையான ஒரு பக்தனுக்கு அடையாளம்! இந்த நிலையைத்தான் அர்ஜுனன் அடைந்திருந்தான். அப்பொழுது மரண மில்லாத பெருவாழ்வினைக் கொடுக்கும் உபதேசத்தை அர்ஜுனனுக்கும் அவன் மூலமாக உலகத்திற்குமே கண்ணன் அளித்தான்.

யாருக்காகக் கீதை சொல்லப்பட்டது? அதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். பசு மாட்டைக் கறந்து எடுக்கும் பால் பசு மாட்டுக்காகவா? பசு மாடுகள் தங்கள் பாலைத் தாமே சாப்பிடுவதில்லையே? இங்கே அர்ஜுனன் என்ற கன்றுக்குட்டி கீதை என்ற பாலை வயிறு முட்டக் குடித்தது. ஆனால் கண்ணனுக்கோ எதுவும் தேவையில்லை; அவன் எப்பொழுதும் நிறைவுள்ளவன்; பாலைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அப்படியானால் கீதை என்ற பால் யாருக்காக உபநிஷதங்கள் என்ற பசுக்களிடமிருந்து கண்ணனால் கறக்கப்பட்டது? அது நல்ல புத்தியுள்ளவர் களுக்காக என்று கண்ணன் சொல்லுகிறான். நல்ல புத்தி யென்றால், நற்குணத்தால் பண்பட்ட அறிவு; அருங்குண நலத்தால் ஆளப்பட்ட அறிவு என்று கொள்ளவேண்டும்.

மேலும், எந்த இடத்தில் இந்தக் கீதோபதேசம் செய்யப்பட்டது? எதிரெதிரான இரண்டு படை அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்களுக்கு நடுவே! இங்கேதான் கீதையின் முழு முக்கியத்துவமும் அமைந்து கிடக்கிறது. தருமத்தின் சக்திகள் ஒரு பக்கம்; அதருமத்தின் சக்திகள் மறுபுறம். நல்லன வெல்லாம் ஒருபுறம், தீயனவெல்லாம் அதற்கு எதிரே. இந்த இரண்டு சக்திகளுக்கிடையே, எதை எடுத்துக் கொள்வது என்று தெரியாமல் மனிதன் திகைத்து அழுகிறுன். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம்தான் இறைவன் கீதையைச் சொல்லியிருக்கிறுன். அதன்மூலம், ஒளியையும் வீரத்தையும் அவர்களுக்கு அளிக்கிறுன். அர்ஜுனனுக்கு ஏற்பட்ட துயரம் ஏதோ அவனுடைய சொந்த விஷயம், சொந்தப் பிரச்னை, அவ்வளவுதான் என்று நினைத்து விடாதீர்கள். மனிதர் எல்லாருக்கும் பொதுவானதொரு பிரச்னை அது.

அர்ஜுனன் கண்ணனிடம் பிரேயஸ்ஸை விரும்பவில்லை. அதாவது, வெறும் இன்பவாழ்க்கையை, பதவியும் அதிகாரமும் பணமும் தருகிற உலகத்துப் பெருமைகளை, அவன் கேட்கவில்லை. பின் எதைக் கேட்டான்? சிரேயஸ்ஸைக் கேட்டான். அதாவது, என்றும் அழியாத பூரண மெய்யின்பத்தைக் கேட்டான். "மனிதன் தன் முயற்சியினுல் பெறக் கிடைக்கிறது பிரேயஸ்; தன் செயலினுல் அவன் அதை அடையமுடியும். நானே முயற்சி செய்தால் அடையக்கூடிய ஒன்றை உன்னிடமிருந்து கேட்டுப் பெறுவானேன்? நான் அவ்வளவு முட்டாளல்ல. என்னுடைய சொந்த முயற்சியினுல் அடைய முடியாத சிரேயஸ்ஸை எனக்கு நீதான் கொடுக்க வேண்டும். அது செயலினுல் பெறமுடியாது. நல்வினைகளால் மட்டும் அடைய முடியாது; அருள் ஒன்றினுல் மட்டுமே கிட்டும்!" என்றுன், அர்ஜுனன். இவ்வாறு, சரணுகதி என்றும் ப்ரபத்தி என்றும் அழைக்கப்படும் பூரண அடைக்கலத்தின் உச்சிக்கே போய்விட்டான் அர்ஜுனன்.

சரணுகதி தத்துவத்தைப் பற்றி நிறையச் சொல்லலாம். வாழ்வில் பல்வேறு நோக்கங்களுக்காகத் தன்னுடைய கௌரவத்தையும் அந்தஸ்தையும் பிற மனிதருக்காக ஒருவன் தத்தம் செய்கிறுன்; பணம், புகழ், உடைகள், ஆடம்பரம், செல்வாக்கு எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறுன். ஆனுல் இறைவனின் பொருட்டே, வேறு உள்நோக்கம் எதுவுமில்லாமல் எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதற்கு அவனுக்கு வாய்ப்புக் கிடைப்பது வெகு அரிது! விளைவுகளையெல்லாம் விரும்பி ஓடிக்கொண்டு, அவ்விளைவுகளுக்கு ஆதாரமான இறைவனை விரும்பி நாடாவிட்டால், சரணாகதி செய்வதற்கு வேண்டிய ஊக்கம் அவனுக்கு எப்படி உண்டாகும்? அவனுக்குப் பொருள் வேண்டும்; ஆனால், அப்பொருளுக்கு எது ஆதாரமோ அதன்மேல் நாட்டமில்லை. ஆதாரமில்லாத பொருள் எத்தனை நாளைக்குத் தான் வரும்? வரம் வேண்டுமாம்; ஆனால் வரத்தைத் தரும் பரமன் வேண்டாமாம்! படைக்கப்பட்ட உலகம் வேண்டும். ஆனால் படைத்தவன் வேண்டாம். அந்தக் கைகள் அளிக்கும் செல்வம் வேண்டும். ஆனால் கைகள் வேண்டாம்! இல்லாத ஒன்றைக் குறித்து அவன் ஓடிக்கொண்டிருக்கிறான். முன்னாலேயே இருக்கும் காரணமில்லாமல் ஏதேனும் ஒரு பொருள் தோன்ற முடியுமா? முடியாது. அப்படி ஒரு பொருள் இருந்தால் அது கடவுள் ஒருவன் தான். அவனுக்குக் காரணம் கிடையாது. ஆகவே என்றுமுள்ள இறைவனுக்கன்றி, நம் செயலினால் பெறக்கூடிய நிலையற்ற ஒரு காரணத்தினால் உண்டான பலன்களுக்காக, நம்முடைய தனித்தன்மையைக் கொடுத்துவிட்டு நிற்பது வெறும் மூடத்தனமாகும். கொடுப்பதை எல்லாவற்றிற்கும் ஆதாரமான, காரணமான, முழுமுதலான இறைவனுக்குக் கொடுங்கள். அதுதான் உண்மையான சரணாகதி.

சரணாகதியும் மூன்று வகைப்படும்: — 1 ''நான் உன்னுடையவன்'' (தவ ஏவ அஹம்); 2 ''நீ என்னுடையவன்'' (மம ஏவ த்வம்); 3 ''நீயே நான்'' (த்வம் ஏவ அஹம்) இம் மூன்றில், ஒவ்வொன்றும் வரிசைப்படி மேலே மேலே இட்டுச் செல்லும் படியாகும். மூன்றாவது எல்லாவற்றிற்கும் உயர்ந்தது.

''நான் உன்னுடையவன்'' என்ற முதற்படியில் இறைவன் முழுச் சுதந்திரனாக இருக்கிறான்; பக்தன் முழுதும் அடிமையாக இருக்கிறான். பூனையையும் அதன் குட்டிகளையும் போன்றது இது. பூனை தனது குட்டிகளைத் தனது இச்சைப்படி தூக்கிச் செல்கிறது; குட்டியோ ''மியாவ்'' என்று கத்திக் கொண்டு எது நடந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே ஏற்றுக் கொள்கிறது. இத்தகைய மனநிலை மிகவும் மென்மையானது; எல்லோருக்கும் எளிதில் கிட்டுவ தாக இருக்கிறது.

''நீ என்னுடையவன்'' என்ற இரண்டாவது படியில் பக்தன் ஆண்டவனைக் கட்டி விடுகிறான்! அந்த அளவிற்கு ஆண்டவன் அடிமையாகி விடுகிறான்! இந்த மனநிலைக்கு ஸூர்தாஸ் என்ற அடியவர் சிறந்த எடுத்துக்காட்டு ஆகிறார். ''கண்ணா! என்னுடைய பிடியிலிருந்து நீ நழுவ லாம்; என்னுடைய கைகளின் பிணைப்பிலிருந்து தப்பி விட லாம். ஆனால் என்னுடைய இதயத்திலிருந்து நீ தப்பி ஓடி விட முடியாது; நான் அங்கேயல்லவா உன்னைச் சிறைப் படுத்தி இருக்கிறேன்! என்று இறைவனுக்கே சவால் விட்டார், ஸூர்தாஸ். கண்ணன் என்ன செய்தான்? ஒரு புன்னகையோடு அதை ஒப்புக் கொண்டான். ஏனெனில், அவன் அடியவர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டவன். அவனே அதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லுகிறான். அதனால் அவனுடைய பெருமைக்கு ஒரு பழுதுமில்லை. ஓர் அடியவன் ஆண்டவனைத் தனது பிரேமையினால் பிணித்து விடமுடியும். தன்னுடைய ஆணவத்தை மீறி அதை அடக்கி விட்ட பக்தியின் பலத்தால் ஒருவன் இறைவனைக் கட்டிவிட முடியும். இத்தகைய பக்தியினால் நிறைந்திருக்கும் மனிதனை அவனுக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்து இறைவன் ஆட்கொள்கிறான். அவனுடைய அருள் அவனுக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கும். இந்த இடத்தில், கீதையில் கண்ணன் செய்துள்ள சத்தியத்தை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்: ''பக்தனுடைய நன்மைக்கான சுமைகளை நான் தாங்குகிறேன்''

அடுத்தபடி, ''நீயே நான்!'' என்ற மூன்றாவது நிலையைப் பார்ப்போம். இதுதான் அவிபக்த பக்தி என்று சொல்லப் படும். அதாவது, பிரிக்க முடியாத பக்தி. இதில் அடியவன் ஆண்டவனுக்கு எல்லாவற்றையும், தான் உட்பட தந்து விடுகிறான். ஏனெனில், அவனால் அப்படித் தன்னையும் சேர்த்துக் கொடுக்காமல் இருக்க முடிவதில்லை. அது அவனுடைய சரணாகதியை முழுதாக்கி விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீயே நான்'' என்ற உணர்வு இருக்கிறதே, அது இரண்டற்ற, அத்துவித சரணாகதி. உலகம் எல்லாம் வாஸுதேவனே, வேறில்லை, வேறில்லை என்ற மெய்யுணர்வில் பிறந்தது அது. உடம்பின் நினைவு தொடரும் வரையில், பக்தன் அடியவன்; ஆண்டவன் தலைவன். பிறரிடமிருந்து தான் வேறானவன் என்ற எண்ணம் இருக்கும் வரையில் பக்தன் ஒரு பகுதி; ஆண்டவன் அதன் முழுமை. உடம்பின் எல்லைகளைத் தாண்டி, ''நான்'' ''எனது'' என்ற எண்ணங்களையும் வென்று, மேலே சென்று விட்டால், அப்பொழுது ஒரு வேற்றுமையுமில்லை. 'ஆண்டவனும் அடியவனும் ஒன்றே. இராமாயணத்தில், ஆஞ்சநேயர் தனது பக்தியினால் இந்த மூன்றாவது நிலையை அடைந்தார்.

கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் ஏழாவது சுலோகத்தில் இதே விஷயம் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ''பிரபன்ன'' என்ற சொல் அங்கு உபயோகிக்கப் பட்டிருக்கிறது. அர்ஜுனனிடம் பக்தியின் பயிற்சி என்ற தகுதி இருந்ததைத்தான் இது காண்பிக்கிறது. மேலும், அர்ஜுனன் தன்னுடைய குறைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அவை தன்னிடமிருப்பதைத் தெரிந்து கொண்டான். இன்னும், தாமஸ குணத்திலிருந்து அர்ஜுனன் விழித்துக் கொண்டு விட்டான். இது நடந்தவுடனேயே கண்ணன் அதைப் பாராட்டினான். ''அர்ஜுனா! நீ குடாகேசன் என்று அழைக்கப்படுகிறாய். ஏனெனில் நீ புலன்களை வென்று விட்டவன்; தூக்கம் என்பது தாமஸ குணம்.

அப்படியிருக்க, இப்பொழுது அதே தாமஸ குணம் உன்னை மேற்கொள்ள முடியுமா? இது ஏதோ தற்காலிகமானது; உன்னை அது முழுதும் கட்டிவிடாது'' என்று கண்ணன் சொன்னான்.

அர்ஜுனன் தனது சொந்த முயற்சியினால் தனது புலன்களை அடக்கி, குடாகேசன் என்ற பெயரையும் அடைந்திருந்தான் என்றால் கண்ணனுக்கு ஹ்ருஷீகேசன் என்று பெயர். அதாவது, புலன்களையெல்லாம் நடத்தும் தெய்வம் என்று பொருள்! குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே, இந்த இருவரும் ஒரே தேரில் அமர்ந்திருக்கிறார்கள்; ஒருவர் சீடன்; இன்னொருவர் ஆசிரியர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களபத்தின் காரணம்தான் என்ன? உடம்பின் மீது உள்ள பற்றுத்தான், துயரத்தையும் அதற்கு முன்னேடியான ஆசையையும் வெறுப்பையும் உண்டாக்குகிறது. ஒரு சில பொருள்களை, ஒரு சில நிலைமைகளைச் சாதகமானவை என்றும், மற்றும் சில பொருள்களை, சில நிலைமைகளைப் பாதகமானவை என்றும் நம் மனது எடைபோடுவதுதான் இந்த ஆசைக்கும் வெறுப்புக்கும் காரணம். சாதகம், பாதகம் என்றெல்லாம் கருதுவது ஒரு பெரும் மயக்கமாகும். இருந்தும் சாதகமானது என்று கருதப்படுவதில் உங்களுக்குப் பற்று ஏற்பட்டு மற்றவற்றை வெறுக்கவும் தொடங்குகிறீர்கள். ஆனல், உயர்ந்த நோக்கோடு ஆராய்ந்தால் இவ்விரண்டுமே இல்லை இந்த வேற்றுமையே பொருளற்றது. இரண்டு என்பதே இல்லை என்ருல் நல்லது தீயது மட்டும் என்பது எப்படி ஏற்படும்? ஒன்றுதான் உள்ளது என்ருல் இரண்டு இருப்பதாகக் காண்பது மாயை அல்லது அறியாமை. அர்ஜுனனைத் துயரத்தில் ஆழ்த்திய அறியாமையும் இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதாவது ஒன்றே உள்ள விடத்தில் பல வேற்றுமைகள் இருப்பனவாகப் பார்த்தது தான்.

'தத்துவம்' என்ற சொல் கொள்கை என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டாலும், ஒன்றே உண்மை, நீயும் ஆண்டவனும் ஒன்றுதான் என்ற இந்தப் பெரிய தத்துவக் கூற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. ''நீ மெய்ப்பொருள்'' என்ற இந்த ஒருமையறிவு இல்லாதது தான் எல்லா அறிவீனங்களுக்கும் காரணம். இந்த உண்மை தெரிந்து கொள்ளப்படாத பொழுது மனிதன் துயரக் கடலில் முழுகித் திண்டாட வேண்டியதுதான் ஆனல், இது தெரிந்து விட்டால், தெரிந்து இதில் மனிதன் அதே உணர்வில் வாழ்ந்தானுனல், அவன் அப்பொழுது துயரத்திலிருந்து மீள முடியும். துயரத்தை நீக்கப் பல வகையான மருந்துகள் பல திறப்பட்ட போலி மருத்துவர்களால் சிபாரிசு செய்யப்படுகின்றன; பயன்படுத்தப் படுகின்றன விளம்பரப்படுத்தப் படுகின்றன; கிளிப்பிள்ளை போலத் திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகின்றன. ஆனல் அவை; நோயின் ஆணிவேர்வரை சென்று பார்க்கவில்லை. வயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியைத் தீர்க்கச் சண்களில் தடவப்பட்ட அஞ்சனங்கள் அவை! நோய்க்கும் மருந்துக்கும் ஒரு சம்பந்தமுமில்லை! வலியிருக்குமிடம் தெரிந்து, அதற்குக் காரணத்தையும் கண்டுபிடித்து அதன் பின் அதைத் தீர்க்கக் கூடிய மருந்தைக் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் நோயைக் குணப் படுத்தமுடியும். நாராயணன் என்ற மருத்துவன் ஒருவனே இதைச் செய்ய முடியும். அவன் அர்ஜுனனுடைய நோய் இன்னதென்று சரியாகக் கண்டு பிடித்தான். அதற்கு மருத்துவம் இன்னதென்று முடிவும் செய்து விட்டான்.

வெளியில் தடவும் அஞ்சனங்களால் ஆறுத காயத்தை உள்ளுக்கு மருந்து கொடுத்துத்தான் ஆற்றமுடியும். கண்ணன் கேள்விகளாகக் கேட்டுத் துளைத்து விட்டான். ''ஏன் நீ கோழைபோல் அழுகிருய்? பீஷ்மரும் துரோணரும் மற்றவரும் கொல்லப்படப் போகிருர்களே என்ரு? இல்லை அவர்கள் உன்னைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணி அழுகிருய். சுயநலம் உன்னை அழவைக்கிறது. மனிதர் இறந்தவர்களுக்காக அழுவதில்லை. அவர்கள் தங்களுக்குச் சொந்தமானவர்கள் என்பதால் அழுகிருர்கள். உனக்குச் சொந்த மில்லாத எவ்வளவோ பேர்களை நீ இதுவரை கொன்று குவிக்கவில்லையா? அப்பொழுதெல்லாம் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட அவர்களுக்காக நீ சிந்தியதில்லையே? இன்றைக்கு நீ அழுகிருய். உனக்கு முன்னுல் போருக்குத் தயாராக இருப்பவர்களெல்லாம் ஏதோ ஒரு தனிப்பட்ட முறையில் உனககுச் சொந்தமானவர்கள் என்ற மயக்கத்தில் இருக்கிருய் அதுதான் நீ அழுவதற்குக் காரணம். நன்ருகத் தூங்கும்பொழுது, 'நான்' 'எனது' என்ற எண்ணங்களால் நீ பாதிக்கப்படுவதில்லை. அதனுல், உன் உடம்புக்கு நேர்வதோ, ஏதோ உறவினர்கள் என்று எண்ணுகிருயே அவர்களுடைய உடம்புகளுக்கு நேர்வதோ, உன்னுடைய சொத்து சுதந்திரங்களுக்கு நேர்வதோ அப்பொழுது உனக்குத் தெரிவதில்லை. ஆனுல் விழித்திருக்கும் பொழுது இவையெல்லாம் நீ கவனமாக நினைவில் வைத்திருக்கும் பொருள் வரிசைகளாகும்.''

''நான்'' என்பதன் ஆரும் வேற்றுமை உருபுதான் 'எனது என்பது; அதனுலே அதைத் தொடர்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் அன்புக்குரிய எளியவர்களே! நீங்கள் உண்மையில் எது அல்லவோ, (நீங்கள் வெறும் உடம்பா? இல்லையே?) அந்த உடம்போடு ஒன்றிப் போவதுதான் அடிப்படையான அறியாமையாகும். உடம்பு ஆத்மா அன்று; இருந்தும் அதை ஆத்மாவாக எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இது என்ன தலைகீழ்ப் பாடமாக இருக்கிறது! இந்த அறியாமையை நீக்குவதற்காக, ஞானம் என்ற மருந்தை நான் கொடுக்க வேண்டும்.''

இப்படி, எடுத்த எடுப்பில் ஞானம் என்ற மிகுந்த ஆற்றலுள்ள மருந்தைக் கண்ணன் அர்ஜுனனுக்குக் கொடுக்கத் தொடங்கினான். இரண்டாவது அத்தியாயத்தின் பதினோராவது சுலோகத்திலிருந்து இது விரித்து உரைக்கப்படுகிறது. கீதையைப் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இது ஒரு திறவுகோல் போல் அமைந்த சுலோகமாகும். அர்ஜுனனை நீண்ட நேரமாக வாட்டி வந்த இரண்டு ஆக்ஷேபங்களை உடனடியாகக் கண்ணன் கண்டிக்கிறான். உடலின் அழிவு உண்மைப் பொருளின் அழிவன்று என்பது முதற் பதில். யாருக்காக அவன் வருந்தத் தேவையில்லையோ அவர்களுக்காக அவன் வருந்துகிறான் என்பது இரண்டாவது. ''அர்ஜுனா! நீ என்னவோ அறிவாளியைப் போலப் பேசுகிறாய். இது தருமம், அது அதருமம் என்று ஏதோ இவ்விரண்டையும் பிரித்து அறிந்துகொண்டு விட்டவன் போல் பேசுகிறாய்!'' என்றான் கண்ணன்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தில் நம் கவனம் இருக்க வேண்டும். அர்ஜுனன் இரண்டு வகையான மயக்கத்தினால் வருந்திக்கொண்டிருக்கிறான்:-1. சாதாரணமானது 2. அசாதாரணமானது. உடம்பையும் நம்மையும் ஒன்றாக்கிக் குழப்பிக்கொண்டு, உடம்புக்கு நேர்ந்ததெல்லாம் நமக்கு நேர்ந்துவிட்டதாக எண்ணி மறுகுவது சாதாரண மயக்கம். தனது சொந்த தருமத்தையே, அதாவது க்ஷத்திரிய தருமத்தையே அர்ஜுனன் அதருமமாக மதித்துக் கைவிடுவது அசாதாரண மயக்கம். இவற்றில் முதல்வகை, இரண்டாவது அத்தியாயத்தின் பன்னிரண்டாவது சுலோகத்திலிருந்து முப்பதாவது சுலோகம் வரை விளக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது வகையைக் கண்ணன் ஒரு முக்கியமான பிரச்னையாகக் கருதித் தீர்க்கவேண்டி யிருக்கிறது. அர்ஜுனனுடைய சொந்தக் கடமை என்ன, ஸ்வதர்மம் என்ன என்பதை எட்டுச் சுலோகங்களால் விளக்கவேண்டியிருக்கிறது. இவை மொத்தமாகத் தருமாஷ்டகம் எனப்படுகின்றன. ஸ்வதர்மம் ஒருவனைப் பிணிக்காது; மேலும் பிறவிகளையும் கொடுக்காது; அது முக்திக்கு அழைத்துச் செல்லக் கூடியது; பலனில் பற்றில்லாமல் கரும யோகமாக அது செய்யப்படவேண்டும். இரண்டாவது அத்தியாயத்தின் முடிவில் பயிற்சியில் வெற்றிபெற்றுத் தூய்மையான அறிவில் ஊன்றி நிற்பவனாக ஸ்திதப்ரக்ஞனுடைய வருணனையும் இருக்கிறது.

கண்ணன் தன் அருளுரையைத் தொடர்ந்தான்:—

''ஓ அர்ஜுன! நீ யார் என்பதையும் என்ன செய்யக் கருதியிருக்கிறாய் என்பதையும் ஒருகணம் நினைத்துப்பார்! எல்லாம் உனக்குத் தெரியும் என்று வீறுப்புப் பேசுகிறாய்; இருந்தும் கதியில்லாத அபலைப் பெண்ணைப் போல் அழுது கண்ணீர் விடுகிறாய். உன்னுடைய சொற்களெல்லாம் படித்தவனாக உன்னைத் தோற்றுவிக்கின்றன; ஆனால் உன்னுடைய செயல்களே ஒரு கல்லாத எளியவனாக உன்னைக் காண்பித்துக் கொடுக்கின்றன. நீ பேசுவதைக் கேட்டு நீ ஒரு பெரிய ஞானி என்று முடிவு கட்டும்படி யிருக்கிறது; ஆனால் உன்னைப் பார்த்தால், நீ அறியாதவன் என்பதை யாரும் கண்டு கொள்வார்கள்! உன்னுடைய நிலை அருவருப்பை உண்டாக்குகிறது. அவ்வளவுதான் சொல்ல முடியும். நல்லது, உன்னை நான் பெரிய அறிவாளியாக எடுத்துக் கொண்டால், அத்தகைய எண்ணத்தை உன்னுடைய கண்ணீரோடு இணைத்துப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், வாழ்வையும் சாவையும் குறித்து அறிவாளிகள் வருந்துவதில்லை. அப்படி வருந்தினால், அவர்கள் அறிவாளிகள் அல்ல. எது ஆதாரமான உண்மை என்பதை அறிவாளிகள் கண்டுபிடிக்கும் திறமை படைத்தவர்கள், பௌதிகமானவற்றின் இரகசியமும், ஆத்மீகமானவற்றின் மர்மமும் யாருக்குத் தெரியுமோ, அத்தகையவர்களே அறிவாளிகள், பண்டிதர்கள் எனப்படுவர். அப்படியிருக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வாழ்பவர்களைப் பற்றியோ, உடல் இழந்து விட்டவர்களைப் பற்றியோ அவர்கள் எப்படி அழுது புலம்புவார்கள்! எவ்வளவு துக்கமானாலும் சிரமமானாலும், அவர்கள் தங்கள் உள் அமைதியை இழக்கமாட்டார்கள்.

''இறந்தவர்களாகட்டும், உயிரோடிருப்பவர்களாகட்டும், இவர்களைப் பற்றித் தீர்ந்த அறிவாளிகளும் கவலைப் படமாட்டார்கள்; தீர்ந்த முட்டாள்களும் கவலைப்படமாட்டார்கள். நீ எதற்காக அழுகிறாய்? பீஷ்மர், துரோணர் இவர்களுடைய உடல்கள் கொல்லப்பட்டுக் கீழே விழுமே என்பதற்கா? அல்லது, இவர்களுடைய ஆத்மாவே அழிந்து விடுமே என்றா? உடல்களுக்காக என்கிறாயா? நல்லது. இங்கே கண்ணீர் விட்டு அழுவதால் என்ன பயன்? அப்படிப் பயன் உண்டு என்றால், மனிதர்களெல்லாம் இறந்துபோன தங்கள் உறவினர்களின் உடல்களை வைத்திருந்து தங்கள் அழுகையினால் அவற்றிற்கு மீண்டும் உயிர் வரச் செய்திருப்பார்களே? இல்லை; அது ஒருபோதும் முடியாத காரியம். உடம்பை அமிருத கலசத்திற்குள் முக்கி எடுங்கள்; அப்பொழுதும் அது மீண்டும் உயிர்பெறாது. அப்படியாயின், தடுக்கமுடியாத ஒன்றை, தீராத ஒன்றைக் குறித்து ஏன் அழவேண்டும்?

''இல்லை; உயிரின் சாரமான ஆத்மாவைக் குறித்து அழுகிறேன் என்று ஒருவேளை நீ சொல்லக்கூடும். அது இன்னும் பெரிய முட்டாள்த்தனத்தைக் காட்டுகிறது. ஆத்மாவைச் சாவு அணுகக் கூடமுடியாது. அது நித்யமானது. இன்னொன்றை நம்பி இராதது; தூயது. ஒன்று நிச்சயமாகிறது; உனக்கு இந்த ஆத்மாவைப் பற்றிய அறிவு இல்லை.

''மேலும், க்ஷத்திரியனுக்குப் போர் என்பது சொந்தக் கடன். வேறு ஓர் எண்ணமுமில்லாமல் உன்னுடைய கடமையை நீ செய்! போரில் பீஷ்மருடைய மரணத்திற்கு நான் காரணமாக வேண்டுமா? என்று கேட்கிறாய். ஆனால் அவர்கள் எல்லோரும் கொல்வதற்கும் கொல்லப் படுவதற்கும் தயாராகத்தான் வந்திருக்கிறார்கள்.

''அவர்களுடைய வீட்டிற்குப் போய் அங்கே அவர்களைக் கொல்லப் போவதில்லை. அப்படி அவர்களுடைய வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கொன்றால், நிச்சயமாக அது முறையன்று. ஆனால், போர்க்களத்தில் அது எப்படி அதருமமாகும்? இந்தப் பகுத்தறிவு கூட உனக்கு இல்லையே என்று நினைக்க எனக்கு வருத்தமாக இருக்கிறது.

'போதும்; எழுந்திரு! போருக்கு ஆயத்தம் செய்! ஒரு பயனுமில்லாத இந்தத் 'தானெ'ன்னும் எண்ணத்தின் பளுவினால் தளர்ந்து ஏன் தரையில் சாய்கிறாய்? எல்லாவற்றிற்கும் காரணம் இறைவன்; நீ அல்ல. எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் மேலான சக்தி ஒன்று உள்ளது. இதைத் தெரிந்துகொண்டு, உன்னுடைய மனத்தை உறுதி செய்து கொள்!

''பீஷ்மரும் துரோணரும் மற்றவர்களும் உண்மையான வீரர்களாய் க்ஷத்திரியர்களாய்ப் போரில் ஈடுபட வந்திருக்கிறார்கள். அவர்கள் உன்னைப் போல் அழவில்லை. அதை எண்ணிப்பார். அவர்கள் ஒருபோதும் வருந்தப் போவதுமில்லை; பின்வாங்கப் போவதும் இல்லை. அர்ஜுன! இது உனக்குச் சோதனைக்காலம்! நினைவு வைத்துக் கொள்! உனக்கு இன்னொன்றும் சொல்லுகிறேன். நானில்லாத காலம் என்று ஒன்று கிடையாது. அவ்வளவு ஏன்? நீயும் இந்த அரசர்களும் இளவரசர்களும் இல்லாத காலம் என்ற ஒன்று கிடையாது. ''அது'' என்பது பரம்பொருள்; ''நீ'' என்பது உயிர். இரண்டும் ஒன்றாகவே இருந்தன; ஒன்றாகவே இருக்கின்றன; அப்படியே எப்போதும் இருக்கவும் போகின்றன. களிமண்ணால் செய்த பானை கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் எப்பொழுதும் களிமண்ணாகத்தான் இருக்கும்.''

கண்ணனுடைய இந்தச் சொற்களினால் அர்ஜுனன் அதிர்ச்சியடைந்து விழித்துக் கொண்டான்; உணர்வு பெற்றான். பிறகு, ''நீ இறைவனாக இருக்கிறாய்; நீ அழிவில்லாதவனாக இருக்கலாம். நான் உனக்காக அழவில்லை; நேற்று வந்து, இன்று இருந்து, நாளை மறைந்துவிடப் போகும் என்னைப் போன்றவர்களுக்காக அழுகிறேன். எங்களுக்கு என்ன கதி? தயை கூர்ந்து எங்களுக்கு அறிவூட்டுவாயாக!'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒன்று மிகக் கவனமாகத் தெரிந்து கொள்ளப் படவேண்டும். தத் (த்வம் அஸி என்று வேதம் சொல் கிறது.) தத் என்பது பரம்பொருள்; அது என்று முள்ளது; அழிவில்லாதது. இதை எல்லோரும் ஒப்புக் கொள்ளு கிறார்கள். ஆனால் த்வம் என்ற நீயும் மற்ற மனிதரும் கூட அந்தப் பரம்பொருளைத் தவிர வேறில்லை. அஸி என்பது இதைத்தான் குறிக்கிறது. உயிர்களெல்லாம் கூட நித்யமே. இதை உடனே புரிந்துகொள்வது வேண்டுமானால் கொஞ் சம் கடினமாக இருக்கலாம். அவ்வளவுதான். எனவே, கண்ணன் இதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுகிறான். ''ஓ அர்ஜுன! நீ பரம்பொருளாகவே இருப்பதால் நீ என்று முள தத்தும்தான். சிறுமைகளை நீக்கிவிட்டுப் பார்த் தால் தனியொரு சிற்றுயிரும் பரம்பொருளாகி விடுகிறது. நகையாகச் செய்வதற்கு முன்னால் வெறும் தங்கம்தான் இருந்தது; நகையாகச் செய்யப்பட்ட பின்னும் தங்கம் தான் இருக்கிறது; நகை அழிக்கப்பட்ட பின்னும் தங்கமே தான் மிஞ்சி நிற்கிறது. மெய்ப்பொருளான ஆத்மாவும் இப்படித்தான் நிற்கிறது, உடம்பு இருந்தாலும் சரி இல்லா விட்டாலும் சரி.

உடலோடு ஒட்டியிருந்தாலும், ஆத்மா அந்த உடலின் குணங்கள் இயல்புகளால் தாக்கப்படுவதில்லை. அதாவது, அதற்குக் குணங்களும் குறிகளும் இல்லை. நீ குழந்தை யாக இருந்து சிறு பையனாக வளர்ந்த போதும், அதிலிருந்து இளம் வாலிபனாகவும், பின் நடுவயதினனாகவும், பின் முதியவனாகவும் மாறும் போதெல்லாம் ஆத்மாவாகிய நீ ஒரு மாறுதலையும் அடைவதில்லை. இவையெல்லாம் மாறியும் நீ மாறாமல் நீயாகவே நிற்கிறாய். இது போலவே, உடம்பு இறந்த பிற்பாடும் ஆத்மா என்ற நீ அழிவதில்லை. ஆகையினால் அறிவாளிகள் மரணம் என்னும் மாற்றத்தினால் கலக்கத்தை அடைவதில்லை.

இதையெல்லாம் கண்ணன் அழுத்தமாக சொன்ன போது. தேரே அதிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 4

அர்ஜுனன் இன்னும் சந்தேகம் தெளியாமல் இருக்தான். ''ஐயனே! இந்த உடம்பிலே உண்டாகும் மாறுதல்களெல்லாம் விழிப்பு, கனவு, தூக்கம் என்ற நிலைகளைப் போன்றவை என்று சொன்னாய். ஆனால் நல்ல ஆழ்ந்த தூக்கத்திலிருந்து நாம் எழுந்திருக்கும்போது நமது பழைய அநுபவங்களையெல்லாம் நாம் மறப்பதில்லை. முற்பிறவியின் நினைவுகளெல்லாம் மரணம் என்ற நிகழ்ச்சியினால் அழிந்து போகின்றன'' என்றான். இதற்குக் கண்ணன், ''பழைய அநுபவங்கள் எல்லாவற்றையும் நினைவிற்குக் கொண்டு வருவது என்பது முடியாத காரியம். ஆனால் அவற்றில் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வரலாம். ஏனெனில், இந்த உடம்பு மாறினாலும் ஆத்மா மாறாமல் தொடர்ந்து இருக்கிறது'' என்று பதில் கூறினான்.

இப்பொழுது அர்ஜுனன் பேச்சை மாற்றினான். அர்ஜுனனை மட்டுமில்லாமல், மற்றும் பலரையும் வாட்டும் ஒரு விஷயத்தை அவன் பேச ஆரம்பித்தான். அதனால்தான் ''நல்ல அறிவுள்ளவன் இதனால் மயக்கத்தை அடைவதில்லை என்று பொதுவாகக் கண்ணன் சொல்லுகிறான். அர்ஜுனன் மட்டும் இந்த மயக்கத்தை அடையக்கூடாது என்று அவன் சொல்லவில்லை. தடுமாறும் எல்லா மனங்களுக்கும் அவன் உபதேசிக்க எண்ணுகிறான். ஒவ்வொரு ஐயப்பாட்டையும் அது எழும்பொழுதே கண்ணன் தீர்த்து வைக்கிறான். ''அர்ஜுனா! விழிப்பு, கனவு, தூக்கம் என்ற மூன்று நிலைகள் மாறி மாறிவரும் பொழுதும் அவற்றில் ஒரு சில அநுபவங்களைப் புத்தி எப்படியோ நிறுத்திக் கவனத்தில் வைத்துக் கொண்டு விடுகிறது. ஆனால் மரணம் உடம்பை அழிக்கும் பொழுது அதுவும் அழிக்கப்படுகிறது. ஒரேயடியாக எல்லாம் மறந்து போகிறது. நினைவு என்பது புத்தியின் வேலையாகும்; ஆத்மாவினுடையதன்று.

''இப்பொழுது இதை எண்ணிப்பார்! பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட நாளில் நீ எங்கிருந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை உன்னால் இப்பொழுது சொல்லமுடியாது இல்லையா? ஆயினும் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் அந்த நாளில் நீ உயிருடன் இருந்தாய். அதைப்பற்றி எந்தச் சந்தேகமுமில்லை. அப்பொழுது நீ வாழ்ந்திருந்ததை நீ, துணிந்து மறுத்துவிட முடியாது. எங்கு எப்படி என்பதெல்லாம் உனக்கு நினைவில்லையென்றாலும், இந்தப் பிறப்பிற்கு முன் நீ வாழ்ந்திருந்த முந்திய பிறப்பிலும் இப்படித்தான். மெய்யறிவுள்ள மனிதன் இத்தகைய சந்தேகங்களால் ஏமாற்றப்படுவதுமில்லை; அவற்றால் அலைக் கழிக்கப்படுவதுமில்லை.''

''ஆத்மா அழிவதில்லை; உடம்பு அழியாமல் நிற்பது மில்லை. எதிரிகள் ஒருவேளை கொல்லப்பட்டு இறக்கலாம் என்பதால் ஏற்பட்ட உன்னுடைய துயரம் அந்த எதிரி களினுடைய ஆத்மாவை மகிழ்விக்கும் என்று எண்ணு கிறாயா? அது பைத்தியக்கார எண்ணமாகும். எது நடந்தாலும் நடக்காவிட்டாலும், ஆத்மா மகிழ்ச்சி அடைவது மில்லை; துயரமடைவதுமில்லை· புலன்களெல்லாம் தத்தம் இடங்களில் இருக்கட்டும்; அச்சத்திற்குக் காரணமேதும் இல்லை. பொருள்களோடு அவை சேர்க்கை பெறத் தொடங்கும் பொழுதுதான் இன்பதுன்பங்கள் என்ற இரட்டை அலைச்சல்கள் தோற்றுவிக்கப் படுகின்றன. யாராவது உன்னை அவமதிப்பதைக் கேட்கும் பொழுது உனக்குக் கோபமும் துயரமும் உண்டாகின்றன. உன் காதில் அந்தப் பேச்சுக்கள் விழவேயில்லை என்றால் இந்த உள்ளக்கொதிப்பு ஏற்படாது. புறப்பொருள்களை நோக்கிப் புலன்கள் செல்லுவதுதான் துயரத்திற்கும் அதன் மறுதலை யான இன்பத்திற்கும் காரணம்.''

''இது சூட்டையும் குளிரையும் போன்றது; குளிர் காலமாக இருந்தால் வெப்பத்திற்காக ஏங்குகிறாய்; கோடை காலமாக இருந்தால் குளிர்ச்சிக்காக ஏங்குகிறாய்; புலன் களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் தொடர்பு முழுதும் இத்தகையதுதான். இந்த உலகம் இருக்கும்வரை, புறப் பொருள்களோடு தொடர்பு தவிர்க்க முடியாதது; முற்பிறவி களின் பளு இருக்கும் வரையில், இன்ப துன்ப அமைப்பு தவிர்க்க முடியாதது. இருந்தாலும், அவற்றைத் தவிர்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கலக்கமில்லாமல் அவற்றைப் பொறுப்பது என்பதன் ரகசியத்தை; பயிற்சியை, கலையை, ஒருவன் கற்றுத்தேற முடியும்''

''அலை ஓய்ந்துதான் கடலில் குளிப்பேன் என்று காத்திருப்பதில் என்ன பயன்? அலைகள் ஒருபொழுதும் ஓயா. பொங்கி வரும் அலைகளால் மோதப்படாமலும் திரும்பிச் செல்லும் அலைகளால் இழுக்கப்படாமலும் தவிர்ப்பது எப்படி என்னும் தந்திரத்தை அறிவுள்ள மனிதன் கற்றுக் கொள்கிறான். ஆனால், கடலில் குளிக்க வேண்டியதென்னவோ அவசியம்தான். குளிக்கும் கலையைத் தெரிந்து கொள்வதற்குச் சோம்பி, சிலர் கடலில் குளிப்பதையே தவிர்த்து விடுகிறார்கள். அர்ஜுனா! உறுதியென்னும் கவசம் பூண்டுகொள்! நன்மையும் தீமையும் உன்னைத் தாக்காது.''

இதுதான் திதிக்ஷை என்பது. திதிக்ஷை என்றால் எதிரெதிரான அநுபவங்களின் முன்னால் அமைதியோடு விளங்குவது; இரண்டிரண்டாக வரும் அநுபவங்களை உறுதியோடு பொறுத்துக் கொள்வது. இதுதான் ஆற்றலுள்ளவர்களின் உரிமை; வீரர்களின் சொத்து. பலங் குறைந்தவர்கள்தான் மயில் பீலிகள் போல் நடுங்குவார்கள். ஒரு கணங்கூட உறுதியில்லாமல் அவர்கள் எப்பொழுதும் அமைதியின்றி இருப்பார்கள், கடிகாரத்தில் ஆடும் நாக்கைப் போல அங்கும் இங்கும் ஊசலாடுவார்கள். இப்பொழுது இன்பத்தை நோக்கி- ஆனால் மறுகணம் துன்பத்தைநோக்கி- இப்படி அலைக்கழிக்கப்படுவார்கள்.''

''இங்கு ஒரு கருத்தில், கொஞ்சம் நின்று கவனிக்க வேண்டும். பொறுமை வேறு, உறுதி வேறு. திதிக்ஷை என்பது கேவலம் ஸஹனம் அல்லது பொறுமை மட்டும் அல்ல. வேறு வழியில்லாமல் ஒன்றை அநுபவித்தே தீர வேண்டியிருப்பது, பொறுத்துக்கொள்வது, ஏற்றுக்கொள்வது ஸஹனம் எனப்படும், ஆனால் ஒன்றை மீறும் ஆற்றலில் இருந்தும் அதைப் பொருட்படுத்தாமலிருப்பது என்பது தான் ஆன்மீகச் சாதனை. புற உலகத்தின் இரட்டையான அநுபவங்களையெல்லாம் உள்ளார்ந்த அமைதியோடும் நடுவுநிலையோடும் பொறுத்து ஏற்பதுதான் முக்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகும். பிரித்தாராய்ந்து பகுத்தறிவோடு எல்லாவற்றையும் தெரிந்தே ஏற்பது என்ற இந்தப் பொறுமைதான் நல்ல பலனைக் கொடுக்கும்.''

(இத்தகைய பகுத்தறிவுதான் விவேகம் எனப்படுகிறது. வருவதும் போவதுமாக நிலையில்லாமல் இருக்கும் இந்த உலகத்தின் இயல்பை நன்கு இனங்கண்டு கொள்வதுதான் விவேகம் என்பதன் பொருள். அதாவது, உலகமும் அதிலுள்ள பொருள்களும் வரும், போகும்; நிலையானவை அல்ல.)

''பொதுவாக, மனிதன் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தான் தேடுகிறான். எந்த நெருக்கடியிலும் துன்பத்தையும் துயரத்தையும் அவன் விரும்பவே மாட்டான்! இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தனக்கு மிகவும் நெருங்கித் தனது நன்மையை வேண்டுபவர்களாகவும், துன்பத்தையும் துயரத்தையும் தனக்கு நேர் எதிரிகளாகவும் கருதுகிறான். இது பெரிய தவறாகும். ஒருவன் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது துன்பம் ஏற்படும் அபாயம் அதிகம். பெற்ற இன்பத்தை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் எப்பொழுதும் இம் மனிதனை வட்டமிட்டுக்கொண்டிருக்கும். துன்பம் வந்துற்ற போது, சிந்தனையும் விவேகமும் தன்னிலையைப் பற்றி எண்ணவே, கேட்டைத்தரும் விளைவுகளைப் பற்றிய அச்சமும் உடன் தோன்றுகின்றன. சோம்பலிலிருந்து ஆகம்பாவத்திலிருந்தும் உங்களை அத்துன்பம் தட்டி எழுப்புகின்றது. மனிதனாக இருப்பதனாலேயே தனக்குத்தானே செய்து கொள்ள வேண்டிய கடமைகளை மகிழ்ச்சி மறக்கடித்து விடும். ஆணவத்தினுள் அது மனிதனை இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. துன்பமோவென்றால் மனிதனைக் கவனமுள்ளவனாகவும் விழிப்புள்ளவனாகவும் செய்கிறது''

''ஆகவே துன்பம் எமக்கு உண்மையான நண்பன்; இன்பமோ நமது புண்ணியக் கையிருப்பைக் கரைத்து மட்டமான வெறிகளைத் தூண்டிவிடுகிறது. ஆகவே அது உண்மையில் நமக்கு எதிரியாகும். துன்பம் நமது கண்ணைத் திறந்து விடுகிறது; சிந்தனையை வளர்க்கிறது; நமது சொந்த வளர்ச்சிக்கும் உதவுகிறது. புதியதும் பயனுள்ளதுமான அநுபவங்களை நமக்கு அது பெற்றுத் தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமோ வென்றால், மனிதனைக் கடின மனமுள்ளவனாக ஆக்கும் அநுபவங்களின் மேல் திரை எழுப்பி விடுகிறது. எனவே, துன்பங்களும் வேதனைகளும் நண்பர்களாகக் கருதப்படவேண்டும்; குறைந்த பட்சம் எதிரிகளாகக் கருதப் படக் கூடாது. இன்பத்தையும் துன்பத்தையும் கடவுளின் நன்கொடையாகக் கருதுவது மிகவும் நல்லது. ஒருவனது சொந்த விடுதலைக்கு அதுவே மிக எளிய வழியாகும்.''

''இதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் அடிப்படையான அறியாமை. அவ்வளவு தூரம் அறிந்து கொள்ளாமல் இருப்பவன் குருடன். உண்மையில், எப்பொழுதும் பார்வை பெற்றிருக்கும் ஒருவனைத் துணையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் கொண்ட ஒரு குருடனைப் போன்றவைதான் இன்பமும் துன்பமும். ஒரு குருடனை நாம் வரவேற்கும்போது, அவன் கூடவே வரும் பார்வையுள்ள ஒருவனையும் வரவேற்றுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் அவன் அந்தக் குருடனுக்கு எப்பொழுதும் கூட இருப்பவன். இதுபோலத்தான் இன்பமும் துன்பமும் இணை பிரியாதவை. இவற்றில் ஒன்றை மட்டும் நாம் தனியே பொறுக்கி வைத்துக்கொள்ள முடியாது. மேலும், துன்பமே இன்பத்தின் மதிப்பைக் கோடிட்டுக் காண்பிக்கிறது. துன்பத்தோடு ஒப்பிட்டுக்கொண்டு, நீங்கள் இன்பத்தை அதிகமாக உணர்கிறீர்கள்'' என்று கண்ணன் அர்ஜுனனுக்குச் சொன்னான். பன்மையாக இருக்கும் வேற்றுமைகளெல்லாம் பயனற்றவை என்று உபதேசிப்பதற்காக இதைச் சொன்னான்.

அப்பொழுது அர்ஜுனன் தொடர்ந்து கேட்டான்; ''மஹாதேவ! உன்னுடைய புத்திமதியைக் கேட்டு நடப்பதாலும், கட்டாயமாகப் பொறுமையை வளர்த்துக் கொள்வதாலும் என்ன லாபம்? சகிப்புத்தன்மை ஒன்றுதான் ஒருவேளை லாபமாக இருக்கலாம். வேறு ஒரு லாபமுமில்லை அல்லவா?''

இதற்குக் கண்ணன், ''குந்தியின் மைந்தனே! வாழ்க்கை யென்னும் கடலில் பேரிரைச்சல் செய்யும் அலைகளால் உண்டாக்கப்படும் உயர்வு தாழ்வுகளால் ஒரு சிறிதளவு கூடக் கலங்காமல் இருக்கும் உறுதி படைத்த மனிதனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன் எனப்படுகிருன்; அவனுடைய சொந்த இயல்பாகி விட்ட சமநிலையை அவன் இழப்பதில்லை; கவர்ச்சிகளும் கவனச் சிதறல்களும் ஏதுவாக இருந்தாலும் தன்னுடைய ஆத்மீகச் சாதனத்தின் ஒழுங்கில் அவன் தவறுவதில்லை. எப்பொழுதும் முன்வந்து நிற்கும் புற உலகத்தின் வேற்று மைகளால் அசைக்கப்படாமல் இருப்பவனே அறிவுள்ளவன். அவன்தான் ''தீரன்'' என்று குறிப்பிடப்படுகிருன்.

''தீரன் என்பதிலுள்ள தீ என்ற சொல் புத்தியைக் குறிக்கும். மனிதனைப் புருஷனுக, முழு மனிதனுக ஆக்கும் தன்மைதான் அந்த 'தீ' என்பது. அணியும் ஆடைகளோ அல்லது மீசையோ மனிதனை மனிதனுக்காது. வேற்றுமைகளை அகற்றும்போது 'மனிதத்வம்' வந்தடைகிறது. இந்த மனிதத்வ நிலைக்குள்ள தகுதிபெற வெளி எதிரிகளைவிட உள் எதிரிகளை வெற்றி காணவேண்டும். இன்பதுன்பங்கள் என்ற இரட்டை எதிரிகளை வெல்வதே அவனது வீரசாகஸ மாகும்.''

''நல்லது; உனக்கு இன்னொரு சந்தேகமும் இருக்க லாம். (உன்னுடைய இதயமே ஒரு சந்தேகக் கூடு!) நீ இன்னும் கேட்கக்கூடும்; வெற்றி பெறவேண்டும் வெற்றி பெறவேண்டும் என்கின்றீர்களே? அந்த வெற்றி யால் என்ன லாபம்? உனக்கு நான் சொல்லுகிறேன். உறுதி யாகச் சொல்கிறேன்: இறவாத பேரின்ப உண்மைதான் லாபம். உலகத்துப் பொருள்களெல்லாம் உனக்கு அந்தப் பேரின்பத்தைக் கொடுக்காது. அவை கொடுப்பதெல்லாம் தற்காலிகமான இன்பங்கள்தாம்; நிலைத்த பேரின்பமல்ல. இன்ப துன்பங்களை நீ தாண்டி உயர்ந்துவிடும்பொழுது இன்பம் பூர்த்தியாகிறது, நிலைத்ததாகிறது, முழுநாகிறது'

''ஓ அர்ஜுனு! நீ ஆயிரத்தில் ஒருவன்! ஆகவே, கேவலம் இந்த உலகத்திலுள்ள எதிரிகளை வென்று பெறும் சின்ன வெற்றி உனக்குத் தேவையில்லை. இறவாத பேரின் பத்திற்கு நீ தகுதியுள்ளவன்!''

இவ்வாறு சொல்லி, மெய், பொய் இவற்றின் அறிவைப் பற்றியும், இவ்விரண்டையும் பிரித்தறிவதற்குரிய பயிற்சி யையும் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கத் தொடங் கினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மெய்யறிவாளன் வினைப்பயன்களினால் கட்டுப்படுவதில்லை. ஆத்மாவைப் பற்றிய உணர்வு இல்லாமலே காரியங்களைச் செய்துகொண்டு போகிறவர்கள்தாம் கட்டுக்குள்ளாகிறார்கள். எது செய்தாலும், உணர்ந்தாலும், எண்ணினாலும் அதனால் துளியும் பாதிக்கப்படாதது ஆத்மா என்பதை அவர்கள் உணரவில்லை.''

''நீந்தத் தெரிந்துகொண்டு விட்ட ஒருமனிதனைப் போல உலகத்து வியவஹாரங்கள் என்னும் கடலில் ஒரு மெய்யறிவாளன் ஆபத்தில்லாமல் குதிக்க முடியும். நீந்தத் தெரியாமலே கடலில் நீங்கள் இறங்கிவிட்டால், கடல் ஜலம் உங்களை விழுங்கிவிடும்; மரணம் நிச்சயம்.''

கண்ணன் அர்ஜுனனுக்கு மிக முக்கியமான அறிவாகிய மெய்யறிவை ஏன் புகட்டினான் என்பதை இது விளக்குகிறது.. ஆத்மா கொல்லுவதில்லை; இறப்பதுமில்லை. அது கொல்லுகிறது என்றோ, இறக்கிறது என்றோ நம்புகின்றவர்கள் அதன் உண்மையான இயல்பை உணர்ந்து கொள்ளவில்லை. அர்ஜுனனுடைய ஆத்மா கொல்லுவதில்லை; பீஷ்மர், துரோணர் இவர்களின் ஆத்மா இறப்பதில்லை; கண்ணனுடைய ஆத்மா தூண்டுவதுமில்லை! இவையெல்லாம் காரண – காரியம் என்னும் வேற்றுமையின் போக்குகளாகும். ஆத்மாவோ எதற்கும் காரணமுமாவதில்லை; எந்த வினையின் பயனுமாவதில்லை. அது மாறுதல் இல்லாதது; நிர்விகாரமானது.

''மாறுதல் என்பது ஆறுவகைப்படும்: பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, மாற்றம், தேய்வு, அழிவு. இவைதாம் அறுவகை மாற்றங்கள் பிறப்பு என்பது முன்னால் இல்லாமலிருந்து பின் இருப்பது. இருந்து பின் இல்லாமற் போவது மரணம் எனப்படுகிறது. பிறப்பு ஜடங்களுக்கில்லை; உயிருள்ளவைகளுக்கே. ஆத்மாவே பகுதிகளில்லாதது; நிரவயவம் ஆத்மா பிறப்பதில்லை; அது எப்படி இறக்கும்? யாரை அது கொல்லும்? அது பிறப்பில்லாதது, காலத்தைக் கடந்தது.''

''ஒருவன் பழைய உடைகளை எறிந்துவிட்டுப் புத்தாடை அணிவது போல, உடலில் இருக்கும் ஜீவனும் ஓர் உடம்பை எறிந்துவிட்டு மற்றொரு உடம்பை அடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. உடம்புக்கு ஆடைகள் போல, மனிதனுக்கு உடம்பு. நீ ஆத்மாவின் உண்மையான இயல்பை உணர்ந்து கொண்டால், அப்பொழுது துயரத்திற்கு இடம்தர மாட்டாய்! நீ பிரயோகிக்கும் ஆயுதங்களெல்லாம் இந்த உடலைத் தான் தாக்கும். மாற்றமில்லாத ஆத்மாவை அவை ஒன்றும் செய்யாது. இதை உண்மையென்று தெரிந்துகொண்டு இந்தத் தளர்ச்சியை உதறி எறி!''

''ஒரு க்ஷத்திரியனுடைய கடமை தருமத்தின் பக்கம் நின்று அதருமத்தை அழிப்பது. உன்னுடைய அதிர்ஷ்டத்தை எண்ணிப்பார்! இந்தப் போர்க்களத்தில் பீஷ்மர் துரோணர் போன்ற தக்க எதிரிகள் உனக்குக் கிடைத்திருக்கிறார்கள். இதே பீஷ்மர், முன்பு அவருடைய குருவுடனேயே போர் தொடுத்திருக்கிறார். அவருக்கு எல்லாப் போர் முறையையும் சொல்லிக்கொடுத்த பரசுராமர் என்ற அந்தணர்தான் அவருக்குக் குரு. ஏன்? முதற்கண், க்ஷத்திரியன் என்ற முறையில் அவருடைய கடமையைச் செய்வதற்காகத்தான். ஆனால் இங்கேயோ, ஒரு கோழையைப் போல, இந்தப் பெரும் வீரர்களுடன் போர் செய்யப் பயப்படுகிறாய். எவ்வளவுதான் அபாயங்கள் எதிர்ப்பட்டாலும், தருமத்தைப் பாதுகாக்கும் பொழுது, ஒரு க்ஷத்திரியன் தனது கடமை முழுமை பெற்றதாகக் காண்கிறான். இதுவே முன்னேற்றத்துக்கு வழி.''

க்ஷதம் என்றால் 'துக்கம்' என்று பொருள். துக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுகிறவன் என்பதால் ஒருவன் க்ஷத்திரியன் எனப்படுகிறான். அதருமத்தின் சக்திகளுக்கு எதிராகத் தர்மத்தின் சார்பாகப் போரிடும் இத்தகைய வாய்ப்பானது மனிதனுக்கு மிகவும் அரிதாகத்தான் கிடைக்கிறது. இந்த அறப்போரில் பங்கு கொள்வதற்கு ஒரு க்ஷத்திரியன் என்ற முறையில் நீ பேறு பெற்றிருக்கிறாய். இப்பொழுது நீ செய்ய முற்பட்டிருக்கும் இந்தச் சமுதாயப் பணியினால் எவ்வளவு புண்ணியத்தை நீ அடைகிறாய் என்பதை எண்ணிப்பார்! அமைதியையும் இன்பத்தையும் நிலைநாட்டுவதற்காக நடத்தப்படும் போர் அறப்போர் எனப்படுகிறது. இதுவும் அத்தகைய அறப்போராட்டம்தான்; இதில் அறம் நிச்சயம் வெல்லும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கௌரவர்கள் செய்யாத பாவமில்லை; செய்யாத அநீதி இல்லை; பண்ணாத தீங்கில்லை. அவர்கள் பெரியவர்களை அவமதித்தார்கள்; நல்லவர்களைக் கைவிட்டார்கள்; தூயவர்களை இகழ்ந்தார்கள்; நல்லவர்களின் தன்மானத்தைப் புண்படுத்தினார்கள். அவர்களுடைய தீய செய்கைகள் கணக்கிலடங்கா. இப்பொழுது, அவர்களுக்கெல்லாம் தண்டனை பெறும் நேரம் வந்துவிட்டது. அவர்களுடைய குற்றங்களுக்கெல்லாம் பதில் சொல்லப்போகிறார்கள். இந்த நேரம் பார்த்து நீ முட்டாளாக நடந்துகொண்டால், உன்னுடைய பெற்றோருக்கும் உடன்பிறந்தார்க்கும், ஏன், இந்த க்ஷத்திரிய குலம் முழுவதற்குமே நீ அவமானம் உண்டாக்கப் போகிறாய்.'',

''போரிடுவது ஏதோ பாவச்செயல் என்று எண்ணுகிறாய். அது மிகத் தவறு. மாறாக, கெட்டவர்களை அழிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இத்த வாய்ப்பினைத் தவற விடுவதன் மூலம் நல்லவர்களின் துயரத்தை நீடிக்க வைப்பது தான் பெரும் பாவம். உன்னுடைய தருமத்தை நீ விட்டு விடுவாயானால் நரகத்தில் விழும் கதிக்கு ஆளாவாய்! தருமத்தை விடாமல் இருப்பாயானால் உன்னைப் பாவம் தீண்டாது. உறுதியான மனத்தோடிரு; உலகத்தின் இரட்டைகளில் ஒன்றுக்கும் இடங்கொடுத்துவிடாதே.''

இந்த அத்தியாயத்தின் முப்பத்திரண்டாவது சுலோகத்திலிருந்து எட்டுச் சுலோகங்களில் தன்னுடைய சொந்த தருமத்திலிருந்து நழுவாத ஸ்வதர்ம நிஷ்டையைப் பற்றிக் கண்ணன் சொல்லியிருக்கிறான்.

நல்லதோ கெட்டதோ அதிர்ஷ்டம் எப்படியிருந்தாலும் சரி, மனம் நிலை தடுமாறாமல் ஒருவன் காரியத்தைச் செய்து கொண்டிருக்கவேண்டும். இதைத்தான் 37-ஆவது சுலோகத்தில் கண்ணன் உபதேசித்தான். 39-ஆவது சுலோகம் இன்னொரு விஷயத்துக்கு மாறும் இடத்தில் அமைந்தது. ''உனக்கு ஸாங்க்யம் என்ற ஞானயோகமானது கூறப்பட்டது'' என்று சொல்லிவிட்டு, கண்ணன் ''உனக்கு யோக புத்தி அல்லது புத்தி யோகத்தை உபதேசிக்கிறேன். கவனமாகக் கேள்!'' என்கிறான்.

**''முழு அறிவுணர்வோடு ஒருவன் செயலின் பலனை அடைய வேண்டும் என்ற ஆசையை விட்டுவிடும் பொழுது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கண்ணன் சொல்லுகிற புத்தியோகம் ஆகிறது. அறிவானது பழக்கப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படவேண்டும். அப்படியில்லையென்றால், நம்முடைய காரியங்களின் பலன்களில் பற்றை நீக்கி, கடமையாகவோ காணிக்கையாகவோ தொடர்ந்து செய்வது என்பது முடியாமல் போய்விடும் தூய்மைபெற்ற அறிவே யோக புத்தி. அதை வளர்த்துக் கொள்! பின் அதன்மூலமாக வினைகளின் கட்டிலிருந்து விடுதலை பெறுவாய்! உண்மையில் சொல்லப்போனால் மெய்யான 'நீ' என்பது வினைகளுக்கு அப்பாற்பட்டது.

''காரியங்களுடைய பலனில் ஏற்படும் பற்றை விலக்குவது என்ற கடினமான முறையைப் பயிலுவதைக் காட்டிலும், காரியங்களையே செய்யாமல் இருந்துவிடுகிறேனே என்று ஒருவேளை நீ சொல்லக்கூடும், ஆனால் அது சாத்தியமில்லை. மேலும் அன்று. அது தவிர்க்கமுடியாதது. ஒருவன் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்துகொண்டு தான் இருக்க வேண்டும். ஒரு கணம் கூட ஒருவன் காரியம் செய்வதிலிருந்து விடுபடமுடியாது, என்று கண்ணன் கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் சொல்லுகிறான்.

''அர்ஜுனா! ஒவ்வொரு செயலும் ஓர் இடத்தில் தொடங்கி ஓர் இடத்தில் முடிகிறது. பலனில் கருத்தில்லாமல் செய்யும் நிஷ்காம கர்மத்திற்கு அப்படியொன்றும் கிடையாது. இதுதான் இரண்டிற்குமுள்ள வேற்றுமை. ஏதாவது லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு ஒரு காரியம் செய்யப்படும்பொழுது, அதனால் ஏற்படும் நஷ்டம், துயரம், தண்டனை இதை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் நிஷ்காம கர்மமானது இவற்றிலிருந்தெல்லாம் உன்னை விடுவிக்கிறது.''

''செயல்களின் பலனை விரும்புவாயானால் அதில் சிக்கிக் கொண்டு நீ திரும்பத் திரும்ப வந்து பிறக்கிறாய். ஆசையை விட்டுவிடு; இந்தக் காலப் பெருவெள்ளத்திலிருந்து மீண்டு விடுவாய்! இத்தகைய துறவின் பயிற்சி பிறவித்தளையை அழித்துவிடும். நமது நோக்கில் உறுதியாக இருப்பதுதான் முக்கியம். காரியம் செய்வதுதான் நோக்கம்; அதன் பலனல்ல. தன் காரியங்களின் விளைவான பலன்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை கொள்வது ரஜோ குணத்தின் அடையாளம் என்று உனக்கு நான் சொல்லிக்கொள்ளுவேன். ரஜோ குணம் உனக்கு ஏற்றதல்ல. ஒருவேளை நீ ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்துவிடுவது மேல் என்று நினைக்கக்கூடும் நல்லது; அது தமோ குணத்தைக் காண்பிக்கும், இது ரஜோ குணத்தைவிட மட்டமானது.''

பகவான் நான்கு கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார் ''செய்'' என்பது முதலாவது; ''செய்யாதே'' என்பன மற்ற மூன்றும். முதலாவது கட்டளை ஆற்றலை வளர்த்துக் கொள்வதை வற்புறுத்துகிறது; மற்றவை பலஹீனத்தை அகற்றுவதை வற்புறுத்துகின்றன.

அர்ஜுனன் மட்டும்தான் இத்தகைய உபதேசத்தைப் பெற்றான் என்பதில்லை. மனித சமுதாயம் முழுவதற்குமே இது தேவைப்படுகிறது. மனித சமுதாயத்தின் பிரதிநிதி யாக அர்ஜுனன் நிற்கிறான்; அவ்வளவுதான். உண்மை யைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் பொது வானது கீதை; கீதையைப் படிக்கும் மாணவர்கள் முதலில் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் என்ன வென்றால், கீதை மனிதனுக்காகச் சொல்லப்பட்டது; பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ, கடவுளருக்கோ, தேவதைகளுக்கோ அல்ல. தனக்கு லாபம் வரும் என்ற ஆசையினால் உந்தப்பட்டு மனிதன் முயற்சிகளைச் செய்கிறான். ஒரு லாபமும் விளையப் போவதில்லை என்றால் அவன் ஒரு காரியத்தையும் செய்யவே மாட்டான். லாபம், ஆதாயம் பலன், பரிசு இவற்றை மனிதன் தேடுகிறான். ஆனால், பகவானுடைய அமுத மொழிகளை உண்டு துய்ப்பதற்காகக் கீதையைத் தம் கைகளில் அள்ளிக் கொண்டிருக்கிறவர் களுக்கு இந்த நியதி இல்லை. எல்லாருமே அமுதத்துக்கு ஆசைப்பட்டு விடுவதில்லை. நீ அப்படி ஆசைப்பட்டால், நீ அழியாத ஆனந்தத்திற்கு, எல்லையில்லாத சுதந்திரத்துக்கு ஏங்குகிறாய் என்பது வெளிப்படை. அப்படியானால், அதற் குரிய விலையை நீ கொடுக்கவேண்டும். உன் முயற்சிகளி னால் விளையும் பலனில் ஆசையை விடவேண்டும்; எல் லாவற்றையும் இறைவனது மலரடிகளில் காணிக்கை யாக்கி விடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

நீ செய்யும் காரியங்களின் பலனைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தால், தொந்தரவும் கவலையும் உளைச்சலும் உன்னைத் தாக்க வந்துவிடும். பலன்களை விட்டுவிட்டால் எப்படி ஒருவன் வாழ முடியும் என்ற கேள்வி எழலாம் ஆனால், இந்த இதயப் பலவீனம் ஏன்? இந்தத் தளர்ச்சி ஏன்? ''உன்னுடைய யோக க்ஷேமத்தை நான் ஏற்கிறேன்'' என்று வாக்குக் கொடுத்தவன் அதைப் பார்த்துக்கொள்ள மாட்டானா? வேண்டிய வசதிகளையும் உபாயங்களையும் அவன் உதவுவான். நாம் நினைத்துப்பார்க்கவேண்டிய தெல்லாம் மகிழ்ச்சி பொருந்திய வாழ்க்கை முக்கியமா அல்லது பிறப்பிறப்பு என்னும் சுழலிலிருந்து விடுதலை பெறுவது முக்கியமா என்பதுதான். மகிழ்ச்சி பொருந்திய வாழ்க்கை என்பது குறைந்த காலத்திற்குத்தான். ஆனால் விடுதலை என்ற பேரின்பமோ என்றுமுள்ளது, அசைக்க முடியாதது.

இந்தக் கருத்தை விளக்கும் இடத்தில் பல விரிவுரையாளர்கள் தங்கள் அறிவாற்றலைப் பயன்படுத்திப் பலவகையாக எழுதியிருக்கிறார்கள். அவர்களில் பலரும், பலனில் பற்றை விட்டுவிட வேண்டும் என்று உபதேசித்திருப்பதற்குக் காரணம் - காரியம் செய்பவன் அதன் பலனை விரும்புவதற்கு உரிமையோ அதிகாரமோ பெற்றவனல்ல என்பதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இது பெருந்தவறாகும். கண்ணன் கீதையில் ''பலனை மறுதலித்துவிடு'' (மா பலேஷு) என்று சொல்லியிருக்கிறான். அதாவது; காரியம் என்னவோ பலனைக் கொடுக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்தக் காரியத்தைச் செய்பவன் பலனை விரும்பக்கூடாது. அல்லது அந்தப் பலனைக் கருத்திற் கொண்டு அந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது. செய்பவனுக்குப் பலனில் அதிகாரம் கிடையாது என்று கூறுவது பகவானின் நோக்கமாக இருந்தால் ''பலன்களில் அதிகாரம் இல்லை'' (ந பலேஷு) என்று சொல்லியிருப்பான். ஆகையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலிலிருந்து நீ ஒதுங்கிவிடுவாயானால், பகவானுடைய கட்டளையை மீறினவனாகி விடுவாய். அது மிகவும் தீங்கை விளைவிக்கும் தவறாகும்.

காரியம் செய்வதற்கு மனிதன் உரிமை பெற்றவனாக இருக்கும்போது, பலனிலும் அவனுக்கு உரிமை இருக்கிறது. இதை ஒருவரும் மறுக்கமுடியாது; அவனுடைய உரிமையை மறுக்கவும் முடியாது. ஆனால் அவனுடைய சொந்த விருப்பத்தின் பேரில் சொந்தமாக முடிவெடுத்து, அதன் பலனால் எந்த விதமாகவும் பாதிக்கப்படுவதற்கு அவன் மறுக்கலாம் அவை நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி. கீதை இங்கு வழி காட்டுகிறது:— ''செய்! விளைவுகளை ஏற்க மறுத்துவிடு!'' நீ செய்கின்ற செயல்களின் லாபங்களை விரும்புதல் ரஜோ குணத்தின் அடையாளமாகும். லாபம் ஒன்றுமில்லை யென்பதால் ஒன்றுமே செய்யாமல் இருந்துவிடுவது தமோ குணத்தின் அடையாளம். காரியங்களைச் செய்வதில் ஈடுபடுவது, அதனால் விளையும் பலன்கள் என்ன என்று தெரிந்தும் அவற்றில் பற்று வைக்காமல் அவற்றைப்பற்றி அக்கறை கொள்ளாமல் இருப்பது. இவை ஸத்வ குணத்தின் அடையாளமாகும்.

பலனில் பற்றில்லாமல் காரியம் செய்வது என்ற இதன் ரகசியத்தை அறிந்து கொண்டுவிட்ட கர்ம யோகிக்கு ஸங்க புத்தியை விட ஸமபுத்தி அதிகமாக இருக்கவேண்டும். ஸங்க புத்தி அவனைப் பற்றுக்குள்ளும் சிக்கலுக்குள்ளும் இழுத்துச் சென்றுவிடுகிறது. இது, என்னுடைய செய்கை; அதன் விளைவுகளுக்கு என்னுடைய முயற்சிகளே காரணம்; அந்த விளைவுகளுக்கு நானே உரிமை பெற்றவன்'' என்ற இதுபோன்ற எண்ணங்கள் தாம் செய்பவனைக் கட்டுகின்றன. இந்த ஸங்க புத்தியை ஒருவன் தாண்டி மேலே போக வேண்டும் என்று கண்ணன் உபதேசிக்கிறான். ஸம புத்தியே உண்மையான யோகம் என்று அறிவித்தான். (ஸமத்வம் யோகமுச்யதே)

இரண்டாவது அத்தியாயத்தில், கண்ணன் நான்கு உண்மைகளைப் பொதுவாகத் தெளிவாக்குகிறான். 1. சரணாகதி தத்துவம் 2. ஸாங்கிய உபதேசம் 3. யோக மனப்பான்மை 4. ஸ்திதப்பிரக்ஞனின் இயல்பு. இவற்றில் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றையும் நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம். இனி நான்காவதைப் பார்ப்போம்:—

அர்ஜுனன் கேட்டபொழுது, ஸ்திதப்பிரக்ஞனுடைய இயல்பையும் குணங்குறிகளையும் கண்ணன் எடுத்துரைத்தான். "ஓ கேசவ!" என்று அர்ச்சுனன் விளித்து வேண்டினான். அந்தப் பெயரை அவன் சொல்லி அழைத்ததும் கண்ணன் புன்னகை செய்தான். ஏனெனில், அத்தருணத்தில் அர்ஜுனன் தன்னுடைய பெருமையை அறிந்துகொண்டான் என்று கண்ணனுக்குத் தெரியும். எப்படி என்று கேட்கிறீர்களா? நல்லது; "கேசவன்" என்பதன் பொருள் என்ன? பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளானவன்" என்பது அதன் பொருள். கண்ணனுடைய பேரருளால் அர்ஜுனன் மெய்யுணர்வின் அந்த நிலையை எய்தியிருந்தான்.

ஒரு ஸ்திரப்பிரக்ஞனின் மெய்யான குணங்குறிகளைச் சொல்லவேண்டும் என்று கேசவனை அர்ஜுனன் வேண்டிக் கொண்டபொழுது, கேசவன், "பார்த்தனே! அவன் எல்லா ஆசைகளும் நீங்கியவனாக இருப்பான். மெய்ப்பொருளுணர்விலும் மெய்யறிவிலுமே உறுதியாக நிற்பான்" என்று பதிலிறுத்தான்.

இனி, இதில் இரண்டு செயற்பாடுகள் இருக்கின்றன. மனத்தின்கண் ஆசையின் எல்லாத் தூண்டுதல்களையும் விட்டுவிடுவது என்பது எதிர்மறை செயற்பாடு: அதில் இன்பத்தை, என்றுமுள்ள இன்பத்தை, ஊன்றும்படி செய்வது நேர்முறையானது. மனத்திலிருந்து தவறு தீமை இவற்றின் காரணங்களை யெல்லாம் களைந்து விடுவது எதிர்மறை வழி. அப்படிப் பண்படுத்தப்பட்ட மண்ணில் இறைவன்பால், அன்பு என்ற பயிரை வளர்த்தல் நேர்முறை. நீ விரும்பும் பயிரை வளர்த்தல் நேர் வழிகளைப் பிடுங்குவது எதிர்மறை வழி. வெளி உலகத்திலிருந்து புலன்கள் பெறும் சிற்றின்பங்கள்தாம் களைகள்; இறைவன்பால் அன்பே பயிராகும். மனம் என்பது ஆசைகளின் மூட்டை. இந்த ஆசைகளை வேரோடு கெல்லி எறியாவிட்டால், மனத்தை அழிக்கலாம் என்ற நம்பிக்கைக்கு இடமேயில்லை. ஆன்மீக வளர்ச்சிக்கு மனதல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந் தடை? துணியிலிருக்கும் நூல்களை ஒவ்வொன்ருகப் பிரித்து எடுத்துவிட்டால், துணியில் மிஞ்சுவது என்ன? ஒன்றுமில்லை. மனது என்ற துணிக்கு ஆசைகளே ஊடும் பாவும். மனது மறையும் பொழுது, ஸ்திதப்பிரக்ஞன் தோன்றுகிருன்.

ஆகவே, நாம் வெல்லவேண்டிய முதல் எதிரி காமம் தான்; ஆசை என்ற அரக்கன்தான், இதற்காக ஒரு பெரிய போராட்டத்தை நிகழ்த்தவேண்டிய தேவையில்லை. ஆசை களை மறைந்து போகும்படி இனிய சொற்களால் கெஞ்ச வேண்டியதுமில்லை, ஒன்றிற்குப் பயந்தோ, மற்ருென்றிற் குப் பரிந்தோ ஆசைகள் மறையமாட்டா. ஆசைகள் புறத்தே இருப்பன: உணர்விற்குப் பொருளாகும் வகை யைச் சேர்ந்தவை அவை. ''நான் பார்ப்பவனே ஒழிய, பார்க் கப்படும் பொருளல்ல'' என்ற உறுதியான அறிவினுல் ஒரு ஸ்திதப்பிரக்ஞன் பற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள் கிருன். இந்த முறையினுல், ஆசையை அவன் வெல்கிருன். மனத்தின் வேலைகளை அதற்கு வெளியிலிருந்துகொண்டு நீ கவனிக்கவேண்டும். அதோடு பின்னிப் பிணைந்துவிடக் கூடாது. இதுவே இந்தப் பயிற்சியின் கருத்து.

மனத்தின் சக்தி பலமான மின்சார ஓட்டத்தைப் போன்றது. எட்ட நின்று மின்சாரத்தைக் கவனிக்கலாமே தவிர, அதைத் தொடவோ தீண்டவோ கூடாது. தொட்டால் சாம்பராகிவிடுவீர்கள். இது போலவே, மனத்தை அணைத்து நிற்பதும் அதோடு உறவு கொள்வதும் உன்னை அழிப்பதற்கு அதற்கு ஒரு வாய்ப்பை அளித்துவிடும். எவ்வளவுக் கெவ்வளவு அதனிடமிருந்து தள்ளி நிற்கிருயோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. திட்பம் நிறைந்த முறைகளைக் கையாண்டு உன்னுடைய சொந்த நன்மைக்காகவே அந்த மனத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஸ்திதப்பிரக்ஞன் ஆழ்ந்துள்ள பேரின்பமானது வெளிப் பொருள்களிலிருந்து உண்டானதல்ல: அவனுக்கு அவை தேவைப்படவுமில்லை. இன்பம் ஒவ்வொருவனிடத்திலும் அவனுடைய இயற்கையாகவே அமைந்திருக்கிறது. தூய உணர்வுபெற்றவர்கள் தங்களுடைய உண்மைத் தத்துவ மான மெய்ப்பொருளை உணர்வதன் மூலம் பேரின்பத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகிறார்கள். இந்த இன்பம் தன்னொளியால், தானே விளங்குவது; மெய்யறிவாளனுக்கே அது தெரிகிறது; தானாகவே தெரிகிறது.

இது அர்ஜுனனுக்குத் தெரிந்திருக்கவில்லை யாதலால், 56, 57, 58—ஆவது சுலோகங்களில் கண்ணன் எளிய சொற்களில் அதை விளக்கவேண்டியிருந்தது. இன்பமோ துயரமோ 1. ஆத்யாத்மிகம் 2. ஆதி பௌதிகம் 3. ஆதிதைவிகம் என்ற மூன்று உருவங்களில் எதிர்ப்படுகின்றன. தீவினைகள் தங்கள் தண்டனையாகத் துயரத்தையும், நல்வினைகள் தங்கள் பரிசாக இன்பத்தையும் கொணர்ந்து சேர்க்கின்றன. இதனாலேதான், தீவினைகளை நீக்கவும் நல்வினைகளைச் செய்யவும் உபதேசம் செய்யப்படுகின்றது. ஆனால், ஒரு ஸ்திதப்பிரக்ஞன் துயரத்தின் துன்பத்தையோ இன்பத்தின் புல்லரிப்பையோ அறிவதில்லை. இவற்றுள் ஒன்றை வெறுத்து உதறுவதுமில்லை; மற்றொன்றினால் கவரப்படுவதுமில்லை. துன்பத்தைக் கண்டு மிரண்டு பின் வாங்குவதுமில்லை; இன்பத்தைக் குறித்து ஆவலோடு ஓடுவதுமில்லை. மெய்ப்பொருளைப் பற்றி அறியாதவர்கள்தாம் இன்பத்தினால் பூரிப்பார்கள்; துயரத்தினால் வாடுவார்கள்.

ஒரு ஸ்திதப்ரக்ஞன் எப்பொழுதும் மனனம் செய்து கொண்டிருப்பான். அதாவது, சிந்தித்துக் கொண்டிருப்பான். அவன் முனி எனப்படுகிறான். அவனது அறிவு உறுதியாக இருக்கிறது. ஏனெனில், புலன்கள் அதை அசைக்க முடிவதில்லை. இங்கு ஒரு விஷயம் அறியப்படவேண்டும். ஆன்மீகப் பயிற்சிக்குப் புலன்களை வெற்றி கொள்ளுதல் மிக அவசியம். ஆனால், அதுமட்டும் போதாது. வெளி உலகம் மனதை ஈர்த்துக் கொண்டிருக்கும்வரை ஒருவன் முழு வெற்றியையும் அடைய முடியாது. அதனால்தான் கண்ணன், ''அர்ஜுனா! புலன்களை வெற்றி கொள்! அப்பொழுது உனக்குப் பயமில்லை. ஏனெனில், அவை, பல் பிடுங்கிய பாம்பு போலாகி விடுகின்றன'' என்று சொல்கிறான். ஆயினும் வெளியே இழுக்கும் எண்ணங்களினாலும் உள் மனத் தூண்டுதல்களினாலும் ஏற்படும் அபாயம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஆசைக்கோர் அளவில்லை; அதைத் திருப்திப்படுத்தவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, புலன்களை வசப்படுத்துவதோடு கூட ஒருவன் மனத்தையும் வசப்படுத்த வேண்டும். இது ஒரு ஸ்திதப்ரக்ஞனுடைய இயல்பு; கதப்ரக்ஞனுடையதல்ல. (கதப்ரக்ஞன் என்றால் அறிவு மறைந்தவன் என்பது பொருள்) ஒரு கதப்ரக்ஞன் எங்கு போகிறான்? வேறு எங்கு போவான்? நரகத்துக்குத்தான்.

மேலே மேலே போகும் வழி உயர்ந்த வழி. அதுதான் ஸ்திதப்ரகஞனுக்கு ஏற்பட்டது. மேற்குறித்த இரண்டு வெற்றிகளிலும் மனம் அடங்கினால், அது மட்டுமே போதும். மறுபடி புலன்களையும் தனியே அடக்கவேண்டிய அவசிய மில்லை. பொருள்களோடு மனத்திற்குப் பிடிப்பு இல்லை யென்றால், புலன்களுக்குப் பற்றுக்கோடாக ஒன்றும் இல்லா மல் போய்விடும். உணவில்லாமல் அவை செத்துப்போகும். விருப்பு வெறுப்பும் பட்டினி கிடந்தே மாய்ந்து போகும். புலன்கள் வெளியுலகத்தால் தொடப்பட்டாலும் அந்த உலகத்தோடு ஏற்பட்ட பிணைப்பு துணிக்கப்பட்டுவிடுகின் றது.

மெய்யுணர்வு என்னும் பேற்றைப் பெற்றுவிட்ட ஒரு வனுக்கு, உலகத்தைச் சார்ந்த எதுவும் துயரத்தையோ மகிழ்ச்சியையோ எப்படிக் கொடுக்க முடியும்?

சூரியன் எழுந்ததும் நட்சத்திரங்கள் மங்கி மறைந்து விடுவதைப் போல, மெய்யறிவு எனும் சூரியன் எழும் பொழுது, துயரமும், சலிப்பும் அறியாமையும் மறை கின்றன.

மனிதனிடத்திலே மூன்று முக்கியமான கருவிகள் இருக்கின்றன; மனது, அறிவு, புலன்கள் என்பனதாம் அவை. இவை மூன்றும் ஒற்றுமையாக இணைந்து வேலை செய்யும்பொழுது, ''வாழ்வென்னும் ஓட்டத் தில் அமிழ்தலோ'' அல்லது ''மெய்ப்பொருளின் அறிவினால் விடுதலையோ'' பெறப்படுகின்றன. எதனோடு எது வேலை செய்கிறது என்பதனால் என்ன நடக்கும் என்பது தெரிந்தால். அர்ஜுனன் எப்படித் திகைப்பான் என்பதைக் கண்ணன் எதிர்பார்த்தான். அதனால் அவனே அதற்குப் பதிலையும் தந்தான். ''அர்ஜுனா! புலன்களோடு சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வேலை செய்யும்பொழுது பிறவி என்னும் ஓட்டத்தில் நீ அமிழ்கிறாய்! அந்த மனது அறிவுக்கு அடங்கி நடக்கும் பொழுது நீ மெய்ப்பொருளின் அறிவைப் பெறுகிறாய். முன்னது, பிறவியில் உன்னைத் தள்ளுகிறது. இன்னொன்று மெய்யறிவைக் கொடுக்கிறது. அறிவு முடிவெடுக்க, அப்படி யெடுத்த முடிவை மனது செயலாக்குகிறது. இதுதான் சரியான நடைமுறை.''

புலன்கள் முழுதும் அழிக்கப்படவேண்டும். அதுதான் ஸ்திதப்ரக்ஞனின் அடையாளம். எல்லா உயிர்களும் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது, ஸ்திதப்ரக்ஞன் விழித்துக்கொண் டிருக்கிறான். எல்லா உயிர்களும் விழித்துக்கொண்டிருக்கும் பொழுது, ஸ்தித்ப்ரக்ஞன் தூங்குகிறான். ஒன்றிற்கு இரவா இருப்பது மற்றொன்றிற்குப் பகலாக இருக்கிறது என்பது தான் இதன் நேரடியான பொருள். ஆனால் இது சுத்த அபத்தம் என்று தொனிக்கலாம். ஸ்திதப்ரக்ஞன் இரவில் கண் விழித்துப் பகலில் தூங்குகிறான் என்றாகிவிடும்.

இதன் உட்கருத்து மிகவும் ஆழமானது. சாதாரண மனி தர்கள் இவ்வுலகத்தில் புலன்களின் மூலம் பெறப்படும் நட வடிக்கைகளில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். உலகத்துக் காரியங்களில் அவர்களுக்கு இருக்கும் அக்கறை தான் அவர் களது விழிப்பு நிலை. ஆனால் ஒரு ஸ்திதப்ரக்ஞன் இந்தக் காரி யங்களில் தான் ஈடுபடாமல் இருக்கிறான். அதாவது அவன் இந்தக் காரியங்களைப் பொறுத்த மட்டில் தூங்குகிறான். தூக்கம் என்பது என்ன? புலன்கள் செயற்படாமல் இருக்கும் பொழுது விளையும் இன்ப நிலைதான் தூக்கம். விழிப்பு? புலன் களுக்கு இணங்குவது; அவைகளுக்குச் சேவை செய்வது சாதாரண மனிதர்கள் புலன்களையும் அவற்றின் தேவைகளை யும் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும்பொழுது ஸ்திதப் ரக்ஞன் தூங்குகிறான். இதையே வேறு முறையிலும் சொல்ல லாம்: **ஆத்ம ஸ்திதியை மறந்தால் தேஹஸ்திதியில் விழுந்து விடுவாய். மெய்ப்பொருள் உணர்விலிருந்து நழுவி உட லுணர்வில் ஆழ்ந்துவிடுகிறாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு பாமரனுக்கு ஏற்படுகின்ற நிலை. மெய்ப்பொருளைப் பற்றிய அறிவில்லாமல் தூங்கிக்கொண்டு, உடம்பைப் பற்றிய எண்ணத்தில் எப்பொழுதும் கவனமாக இருக்கிறான். ஸ்திதப்ரக்ஞனுடைய நிலை இதனினின்றும் மாறுபட்டது. உடல் உணர்வு இல்லாமல் மெய்ப்பொருளுணர்விலேயே கருத்தாக இருக்கிறான். சாதாரண மனிதன் மிகக் கவனமாக இருக்கும் இந்தப் புலனுலகில், தப்பித் தவறிக்கூட அவன் கருத்தைச் செலுத்தமாட்டான். இதுதான் கீதாவாக்கியத்தின் உட்கருத்து. இது மேற்போக்காகத் தோன்றும் கருத்திலிருந்து மிகவும் மாறுபட்டது. மேற்போக்காகத் தோன்றும் கருத்து உண்மையென்றால், திருடர்களும் காவற்காரர்களும் ஸ்திதப்ரக்ஞர்களாகி விடுவார்கள்! இவர்கள் தானே இரவில் கண் விழித்துப் பகலில் தூங்குகிறார்கள்! யார் ஆசைகளை மிச்சமில்லாமல் விட்டுவிடுகிறார்களோ, அப்படி விட்டுவிட்டு இறைவனுடைய கருவியாகி விடுகின்றார்களோ அவர்களே அமைதியைப் பெறுகிறார்கள். ஆசையைத் துறத்தல் என்ற காமனுத்யாகத்தை வற்புறுத்திவிட்டு, ஸ்திதப்ரக்ஞனுடைய இயல்பின் வருணனையை முடிக்கிறான் கண்ணன்.

வாழ்க்கை என்னும் போர்க்களத்தில், விருப்பு வெறுப்புக்களால் திகைத்து, எங்கு போவது என்ன செய்வது என்று தெரியாமல் இடர்ப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதனுக்காகக் கண்ணன் ஸாங்கியயோகம் என்ற இந்தக் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை உபதேசித்தான். மற்ற எல்லா அத்தியாயங்களும் இந்த இரண்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட உபதேசத்தின் விரிவுரைகளேயாகும். ''அர்ஜுனா! மனதைத் துறந்து உன் ஆத்மாவில் ஒன்றுவதற்குத் தயாராக இரு! சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் என்னும் ஐந்து பௌதிகக் கூறுகளிலிருந்து மனத்தைத் திருப்பிக்கொள். அப்பொழுது நீ ஒரு ஸ்திதப்ரக்ஞனாகி விடுகிறாய்'' என்று கண்ணன் சொன்னான். இந்த இரண்டாவது அத்தியாயத்தில் பதினொருவது சுலோகத்திலிருந்து முப்பதாவது சுலோகம் வரை ஆத்ம தத்துவத்தைப்

12135.5.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி மிகவும் எளிய, சுலபமாகப் புரிந்துகொள்ளக்கூடிய நடையில் எடுத்துரைத்தான்.

பின்னர், 39ஆவது சுலோகத்திலிருந்து 72-ஆவது சுலோகம் வரை இறைமையை அடைவதற்கு மிகவும் இன்றியமையாத தர்ம- கர்ம மனப்பாங்கை உபதேசித்தான். ஏற்கெனவே சொல்லப்பட்ட ஸமநிலை அறிவில் பொருந்திய கர்மயோகத்தைச் சார்ந்து நிற்பது இந்த மனப்பாங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 6

இரண்டாவது அத்தியாயத்தில் 56-ஆவது சுலோகம் முதல் 72-ஆவது சுலோகம் வரை மொத்தம் 17 சுலோகங்களில் ஸ்திதப்ரக்ஞனுடைய இயல்புகளையும், அத்தகைய நிலையின் சிறப்புக்களையும் கண்ணன் விவரித்தான். பிறகு ஸாங்கியர்களுக்காக ஞானயோகத்தையும், யோகிகளுக்காகக் கர்மயோகத்தையும் விடுதலைக்கு வழியாகத் தானே தான் ஏற்படுத்தியதாகக் கூறி, கடமைகளைச் செய்து வருவதன் முக்கியத்தைப் பற்றிப் பேசினன்.

யாராக இருந்தாலும் இயற்கையின் கட்டாயத்திற்குத் தலைபணிந்து செயல் புரியத்தான் வேண்டும். அது தவிர்க்க முடியாதது. ஆகையினல், கடமையாக உனக்கு ஏற்பட்டிருக்கிற காரியங்களை நீ செய்துவா! ஒன்றையும் செய்யாமல் சும்மா இருப்பதைவிட ஏதாவது செய்துகொண்டிருப்பது நல்லது. நீ அப்படிச் செய்யாமலிருந்துவிட்டால், உயிர் வாழ்வதேமிகவும் சிரமமாகிவிடும், ஏன் முடியாமலே போய்விடும்.

''தம் விளைவுகளினல் நம்மைக் கட்டுப்படுத்தாத வினைகளெல்லாம் யக்ஞங்கள் எனப்படுகின்றன. மற்றவையெல்லாம் தளையை ஏற்படுத்துகின்றன. ஆகையால், ஓ அர்ஜுனு! பற்றைத் துறந்து, ஒவ்வொரு செயலையும் வேள்வியாக மதித்து, இறைவனுக்குக் காணிக்கையாக்கி விட்டு, அவற்றைச் செய்துகொண்டிரு!'' கண்ணன் அர்ஜுனனுக்குச் செயல்களின் தோற்றுவாயையும், அவற்றைச் செய்யவேண்டும் என்ற உந்துதல் எந்த இடத்தில் இருந்து முளைத்து வளருகிறதோ அந்த மூலத்தையும் உபதேசித்தான். மிகவும் தெளிவாக அவன் உபதேசித்த முறையினல் அர்ஜுனனுடைய மனது உண்மையாகவே உருகி மாறியது. ''வேதங்கள் கடவுளினிடமிருந்து உண்டாயின; காரியங்களெல்லாம் வேதங்களிலிருந்து உண்டாயின; காரியங்களிலிருந்து வேள்வியும், வேள்வியிலிருந்து மழையும் உண்டாயின. மழையிலிருந்து உணவு உண்டாயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவிலிருந்து எல்லா உயிரினங்களும் உண்டாயின. இந்தச் சுழற்சியை நாம் ஒப்புக்கொண்டு மதிக்கவேண்டும்.

''ஓ அர்ஜுனா! இதை நினைத்துப் பார்! காரியம் செய்ய வேண்டியதேவை எனக்கில்லை. இந்த மூவுலகத்திலும் அப்படியொரு தேவை எனக்குக் கிடையவே கிடையாது. எனக்கு ஒரு கட்டாயமுமில்லை. இருந்தும், நான் காரியங்களைச்செய்து கொண்டிருக்கிறேன், இதை எண்ணிப்பார்! நான் அப்படி ஒன்றுமே செய்யாமல் ஓய்ந்துவிட்டால் உலகமே இருக்காது. உன்னுடைய உண்மை வடிவமான ஆத்மாவில் உறுதியான நம்பிக்கை வை! பின் நீ செய்யும் எல்லாக் காரியங்களையும் எனக்குக் காணிக்கையாக்கிவிடு. அவற்றின் விளைவுகளில் ஆசை வைக்காமல், ''நான்'' ''எனது'' என்னும் எண்ணம் இல்லாமல் கர்வமில்லாமல் போரில் ஈடுபடு'' என்றான் கண்ணன்.

படைப்புச் சக்கரம் மென்மைபோடு சுழலவேண்டுமானால், ஒவ்வொருவனும் செயல்களைச்செய்து கொண்டிருக்க வேண்டும். யாராக இருந்தாலும் இந்தக் கடமையிலிருந்து தப்ப முடியாது. மிக உயர்ந்த மெய்யறிவைப் பெற்றுவிட்டவன் கூட இந்தச் சட்டத்தை மீற முடியாது. உண்பதும் நீர் குடிப்பதும், மூச்சை வாங்கி விடுவதும் கூடச் செயல்கள் தான். இவையில்லாமல் யார் உயிர்வாழ முடியும்?

உலகத்திலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் நீ பயனடைகிறாய்; ஆகவே நீ அவற்றிற்காகப் பதிலுக்குச் செய்ய வேண்டிய கடன்கள் சில உண்டு. இந்தப் பிரமாண்டம் இந்த உலகம் என்பது உண்மையில் ஒரு பெரிய தொழிற் பட்டறை. இந்த அமைப்பில் ஒவ்வொரு மனிதனும் ஓர் உறுப்பு. அதனதன் கோப்பிற்குத் தக்கபடி ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு வேலை தரப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட வேலையைச் செய்வதில் தான் அது தன்னை நிறைவுபடுத்திக்கொள்ள முடியும் யார் யாருக்கு எந்தெந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதோ அது ஆண்டவனுக்குக் காணிக்கை என்ற முறையில் செய்யப்படவேண்டும். இந்தப் பெரிய தொழிலில் ஈடுபடாத பொருளே உலகத்தில் கிடையாது. செடியும், பூச்சியும், கல்லும், கட்டையும், காற்றும் மழையும், வெப்பமும் குளிர்ச்சியும், இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றும் திட்டப்படி இயங்கவில்லையென்றால் உலகம் நடைபெற முடியாது. சூரியனும் சந்திரனும் காற்றும் தீயும் தங்கள் வழக்கமான தொழிலைப் பிணக்கமில்லாமல் செய்து வர வேண்டும்; செய்து வருகின்றன; பூமியும் சூரியனும் தங்களுக்கு இடப்பட்ட கடமைகளைச் செய்ய மறுத்துவிட்டால் உலகம் என்ன ஆகும்? ஆகவே உடம்பிலிருந்து கொண்டு அதே சமயம் வேலையில்லாதவன் ஒருவனுமில்லை. ஒவ்வொருவனும் தவறாமல் கவனத்துடன் தனக்கேற்பட்ட வேலைகளைச் செய்து வரும்பொழுது தான், இந்த உலகச் சக்கரம் வேகமாகவும் தடங்கலில்லாமலும் சுழலும்.

முற்றும் உணர்ந்த ஞானி கூட ஏன் வேலை செய்யவேண்டும் என்று நீ வியக்கலாம். நீ மட்டுமல்ல, வேறு பலரும் கூட இதில் சிறிது திகைப்பு அடையக்கூடும். நல்லது, மேலிடத்துள்ளவர்கள் ஏற்படுத்தும் குறிக்கோளைத் தான் மக்கள் பெரும்பாலும் பின்பற்றுவார்கள். அந்த மேலோருடைய செயல்கள் தாம் எல்லோருக்கும் தரும அடிப்படை ஆகிறது. மெய்யறிவாளர்களாகிய ஞானிகள் வேலை செய்யவில்லை என்றால் சாதாரண மக்கள் எப்படித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும்? அவர்களுக்கு வழி காட்டுபவர்கள் இருக்கமாட்டார்கள். ஆகவே புலனின்பத்தின் சுலபமான நடைகளில் தங்களை இழந்துவிடுகிறார்கள். அறிவுடையோருடைய கடமை நல்லதை வளர்ப்பதும் அதை எல்லோருக்கும் தெரியும்படியாக நடத்திக் காட்டுவதும்தான். அப்பொழுதுதானே இவர்களைப்போலத் தாங்களும் மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழலாம் என்ற நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு இவர்களுடைய வழியைப் பின்பற்றுவதற்கு ஊக்கமடைவார்கள்,

"அர்ஜுனா! ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கவனி! உன்னுடைய உடம்பு இப்பொழுது எவ்வளவு சூடாக இருக்கிறது! இது எப்படிச் சாத்தியமாயிற்று? சூரியன் இதைப் போலப் பல கோடி மடங்கு சூட்டுடன் அவ்வளவு தூரத்தில் இருப்பதால் அல்லவா? இவ்வளவு சூட்டையும் தாங்க முடியவில்லையென்று சூரியன் நினைத்துக் குளிர்ந்து விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். மனித உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன ஆகும்? உலகங்களின் உள்ளும் ஊடேயும் இயங்கிக் கொண்டிருக்கும் விச்வகர்மாவான நான் வேலை செய்யாமல் நிறுத்திவிட்டால் என்ன கதியாகும் என்பதைக் கற்பனை செய்து பார்! அதனால்தான் நான் வேலை செய்துகொண்டிருக்கிறேன், நினைவில் வைத்துக்கொள்! இதனால் ஏதோ எனக்கு லாபமோ, நன்மையோ, வேறு பயனோ கிடைக்கிறது என்பதனால் அல்ல.''

''உலகத்தில் அநேகமாக ஒவ்வொருவனும் தொழில் என்னும் சட்டத்தால் கட்டுப்பட்டிருக்கிறான். ஆனால், மனிதர்களோ தங்களுடைய அறிவுநிலையையோ அறநிலையையோ தெரிந்துகொள்ளாமல், தொழிலின் ரகசியத்தையும் தெரிந்து கொள்ளாமல் அவ்வளவு பெரிய அறியாமையில் முழுகிப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், பெரியவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஊக்கமடைவதன் மூலமாகத் தான் காப்பாற்றப்படுகிறார்கள். அதனால் தான் முற்றுமுணர்ந்த ஞானி எப்பொழுதும்வேலையில் ஈடுபட்டிருக்கிறான், சாதாரண மக்களின் சோம்பலையும் மயக்கத்தையும் அவன் தான் நீக்க முடியும். ஆகவே, விதிவிலக்கில்லாமல், எல்லோரும் தொழில் என்னும் சட்டத்திற்கு உட்பட்டே ஆகவேண்டும் ''

உயரப் பறக்கும் விமானம் கீழே இருக்கும் தரையை உதறித் தள்ளிவிட்டு மேலேயே தங்கிவிட முடியுமா என்ன? அதில் பிரயாணம் செய்வதற்காகப் பணம் கொடுத்து உரிமை பெற்றிருப்பவர்கள் அந்த விமானத்தைக் குறித்துத் தரையிலிருந்து பறந்துபோய் அதில் நுழைகிறார்களா என்ன? ஆகவே அவர்களை ஏற்றிக்கொள்வதற்காக, முன்னாடியே செய்த ஏற்பாட்டின்படி அவர்கள் வந்து சேர்ந்திருக்கும் இடங்களில் அந்த விமானம் இறங்கி அதன்பின் மறுபடி மேலே ஆகாயத்தில் பறந்து செல்லுகின்றது. இதுபோலவே, முற்றுமுணர்ந்த ஞானிக்கு வேலைசெய்யவேண்டும் என்ற ஆசையோ வேகமோ இல்லையென்றாலும், வேலை செய்யும் உலகத்திற்கு இறங்கி வந்து மற்றவர்களுக்கு உதவுகிறார்;

ஜனகரைப் போன்ற பெரிய அறிவாளிகள் கூட அறச் செயல்களை இந்த நோக்கிலே தான் செய்து வந்தார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களைச் சோம்பலிலிருந்தும் கயமையிலிருந்தும் காப்பாற்றுவதற்காக, அச்வபதியும் இதுபோலவே செய்தார்.

பின், அர்ஜுனனுடைய மற்றொரு கேள்விக்குக் கண்ணன்: ''எல்லாத் தீமைகளுக்கும் ஆசையே காரணம்'' என்று சொல்லி அதன் இயல்பையும், காரணத்தையும் அதன் தடுப்பையும் விளக்கினான். ''எவன் உடலையே தானாக நினைக்கும் பொய்யறிவினால் கட்டுண்டிருக்கின்றானோ அவன் ஆசையை வெல்வான் என்ற நம்பிக்கைக்கே இடமில்லை; இங்கு வெற்றி உறுதியாகக் கிட்ட வேண்டுமானால், தான் பரம்பொருளே என்ற அறிவினை ஒருவன் பெறவேண்டும். எல்லாச் செயல்களையும் இறைவனுக்குக் காணிக்கையாக எண்ணிச் செய்ய வேண்டும். உலகம் முழுவதையும் எல்லாமாகிக் கடந்தும் நிற்கும் விஷ்ணுவின் வடிவத்தோடு ஒன்றச் செய்துவிட வேண்டும்,''

இந்த அத்தியாயத்தில் மூன்று முக்கியமான விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. (1) ஒவ்வொருவனும் தன்கடமையைச் செய்யவேண்டும். இல்லையென்றால் உலகம் தலைகீழாகி விடும். (2) பெரியவர்கள் செய்யும் செயலே மற்றவர் பின்பற்ற வேண்டிய எடுத்துக்காட்டாகும். (3) உலகத்தில் எல்லோருமே செயற்படவேண்டிய கட்டாயத்தினால் கட்டப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப் படிப்பினைகளையெல்லாம் மிகுந்த அருளோடு அர்ஜுனன் மனத்தில் வாங்கிக்கொள்ளும்படி செய்தார். இதனால் திருப்தியடையாமல், மெய்யறிவே செயல்களின் முடிவான பலனும் நோக்கமும் ஆகும் என்று கண்ணன் அர்ஜுனனுக்குச் சொன்னான். மனத்தைத் தூய்மைப் படுத்துவதற்கும் இறைவனுடைய அருளைப் பெறுவதற்கும் மனிதன் செய்யும் முயற்சிகளினால் அடையப்படும் செல்வம் இந்த மெய்யறிவு ஆகும். மெய்யறிவு ஆனந்தத்தைக் கொடுப்பது மட்டுமல்லாமல், ஆனந்தத்தின் நிலைக்களனாகவும் இருக்கிறது. இவ்வாறு கண்ணன் அர்ஜுனனை ஞானப்பாதையில் ஈடுபடுத்தினான்.

இந்தப் பொருள் ஐந்தாவது அத்தியாயம் வரையிலும் தொடரப்படுகிறது; பகவத்கீதா சாஸ்திரத்தின் உபதேசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே ஞானயோகம் விலைமதிப்பற்ற ரத்தினமாகத் திகழ்கிறது. ''இங்கு மெய்யறிவைப் போலத் தூய்மையானது வேறு எதுவும் காணப்படவில்லை'' என்று கண்ணனே முழங்கினுன். பின்னும் ஏழாவது அத்தியாயத்தில் ''ஞானியை நானுகவே மதிக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிருன். கீதையில் வேறு பல கட்டங்களிலும் இதேபோல் ஞானயோகத்தின் சிறப்பானது வெகுவாகக் கொண்டாடப் பெற்றிருக்கிறது.

இதனுல்தான், ஆத்மீக ஸாதனங்கள் எல்லாவற்றிலும் ஞானயோகமே மிகுந்த பயனுடையதுஎன்று நம்பப்படுகிறது. எல்லா மெய்நூல்களும் ஞானம் என்ற மெய்யறிவிலே தான் நிறைவை அடைகின்றன. நம்முடைய உண்மையியல்பான ஞானத்தின் தன்மையைத் தொடர்ந்து சிந்திப்பது தான் தியானம் எனப்படுகிறது; நீங்கள் எல்லாவற்றிலும் இருக்கிறீர்கள்; எல்லாம் உங்களிடத்தில் இருக்கிறது. இந்த உறுதியை நீங்கள் உங்கள் உணர்வில் பதித்துக்கொள்ள வேண்டும். அதற்கு வழி பகுத்தாய்வும், பகுத்தறிவும், அறிவார்ந்த தேட்டமும் ஆகும். அறிவு, மனது, புலன்கள் முதலியவற்றின் சுவடுகளையெல்லாம் உணர்விலிருந்து பிரித்தெடுத்துக்களைந்து விடவேண்டும். உங்களுடைய உண்மை இயல்பான மெய்ப்பொருளுக்கும் இவற்றிற்கும் ஒருசம்பந்தமுமில்லை. அறிபவன் அறியப்படுபொருள் என்ற இவற்ருல் மெய்ப்பொருள் பாதிக்கப்படுவதில்லை. புலன்கள் மனது அறிவு முதலியவை செயலற்றிருந்தாலும், அந்தச் செயலின்மை மெய்ப்பொருளை ஒன்றும் செய்துவிடாது. இவ்வாறு மாறுபடாததாகவும் ஒன்றுடனும் ஒட்டாததாகவும் இருக்கின்ற வஸ்து என்று ஆத்மாவைப் பற்றி அறிந்துகொள்வதுதான் மெய்யறிவின் ரகசியம்.

இந்த மெய்யறிவைப் பின்னணியாகக் கொண்டு உங்களுடைய ஒவ்வொரு செயலும் செய்யப்படவேண்டும், வெளி நோக்காகச் செல்லும் செயல் நெறியும் சரி, உள் நோக்காக அமையும் துறவு நெறியும் சரி, இந்த இரண்டு நெறிகளிலும் மெய்ப்பொருளுணர்வு உங்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும்; அது காரியங்களைத் தடைசெய்யாது; ஆனுல் அவற்றிற்கு ஒரு நோக்கத்தையும் பொருளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து நிரப்பும். நம்பிக்கையையும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையையும் அது எழுப்பித்தரும். செயல்களை விடாது, செயல்களுடைய பலனில் இச்சையைத் துறத்தல் என்னும் நிஷ்காம கர்மத்தின் மூலமாக அது மனிதனை விடுதலைக்கு இட்டுச் செல்லும்.

விடுதலை பெறுவதற்கு மெய்யறிவே நேர்வழி. அதனால் அது ஓர் ஒப்புயர்வில்லாதபடி புனிதமானது என்று கூறப்படுகிறது. சந்தேகமில்லாமல் அறியாமை ஒன்று தான் மிகவும் வெறுக்கத் தகுந்தது என்பது இதனால் இயற்கையாகப் பெறப்படுகிறது. "பேருண்மையைத் தனிப்பொருள்களிலும் தனிப்பொருளைப் பேருண்மையிலும் கண்டுகொள்க!" என்றான் கண்ணன். "எல்லா க்ஷேத்ரங்களும் ஒரு க்ஷேத்ரக்ஞனைத் தான் தம்முள் கொண்டிருக்கின்றன. எல்லா உடம்புகளும் தமக்குள் ஓர் அறிஞனைத் தான் ஏந்தியிருக்கின்றன. அது யார் அந்த அறிஞன்? அதுவே மெய்ப்பொருள்! அதாவது நீங்கள் தான்! நீங்களே தான்! இதைத் தெரிந்து கொண்டு மெய்யறிவாளனாக மலருங்கள்! இந்த ஆத்ம மெய்ப்பொருளே பரம் பொருள்; அதுவே விஞ்ஞானம்." அர்ஜுனனுடைய மனத்தில் இருந்த எல்லா ஐயங்களையும் நீக்குவதற்காக எல்லாமுணர்ந்த கண்ணன் இந்த யோகத்தை அவனுக்கு அருளினான்,

"அர்ஜுனா! இந்தப் புனிதமான ஞான யோகத்தைச் சூரியனுக்கு அளித்தேன். பின்னர், அதுவழிவழியாகக் கற்கப்பட்டு மனு, இக்ஷ்வாகு வரையில் வந்தது; அவர்களிடமிருந்து ராஜரிஷிகள் கற்றுக்கொண்டார்கள். அதன்பின், அது இவ்வுலகத்தில் மறைந்துபோயிற்று அந்தச் சாகாத யோகம் உலகத்தில் மறுபடி கொணரப்பட வேண்டும். அதனால் நான் வரவேண்டியதாயிற்று."

யோகம் மறைந்தது என்று சொல்லி விட்டு, உடனே அது சாகாத யோகம் என்று சொன்னால் அதிலுள்ள முரண்பாட்டினை நீங்கள் கவனிக்கத் தவறியிருக்க மாட்டீர்கள்; ஆயினும் முன் யோசனையில்லாமல் அந்த மாதிரி பேசப்படவில்லை. அழிக்க முடியாத ஒன்று அழிக்கப்பட்டுவிட்டதாக இங்கு கூறப்பட்டது. அழிக்க முடியாதது என்று அதைச் சொன்னது இரண்டு காரணங்களுக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

அதனுடைய மூலம் வேதம்; வேதமோ அழியாத ஒன்று. அதனுடைய பலனே முக்தி; முக்தியும் அழியாத ஒன்று. கால ஓட்டத்தினாலும், அசிரத்தையினாலும், பழகாததாலும் இந்த யோகம் மறந்துபோயிற்று. அதாவது' நமது நினைவிலிருந்து நழுவிவிட்டது, தேய்ந்து போய்விட்டது. எனவே மறைந்துபோயிற்று: இந்தக் கூற்றுக்கு அவ்வளவு தான் பொருள். இந்த யோகத்தை உயிர்ப்பிப்பது என்றால் மறுபடி பழக்கத்திற்குக் கொண்டு வருவது என்பது தான் கருத்து; புதிதாக உண்டுபண்ணப் போகிறோம் என்பதல்ல! ''பார்வையிலிருந்து மறைந்தது'' என்ற பொருளில் தான் பொதுவாக ''அழிக்கப்பட்டது'' என்ற சொல் வழங்குகிறது, இப்படித் தான் நீங்கள் அதை விளக்கிக்கொள்ளவேண்டும். ஏனெனில் முற்றிலும் அழிந்து போகும் பொருளை ஆண்டவன் செய்யமாட்டான்.

சூரியனைப் பற்றிக் கண்ணன் இங்கு குறிப்பிட்டதையும் சற்று கவனித்தாக வேண்டும். பாரத நாட்டு மக்கள் சூரிய தேவனோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். பாரத நாட்டின் வீரர்களான க்ஷத்திரியர்கள் முதலிலிருந்தே சூரியனோடு சேர்ந்தவர்கள்; சாதாரண ஆண் பெண்களுக்குக்கூட சூரியன் மிகப் புனிதமானவன்; அதனால் தான் ஒரு பெரிய குருவின் இடத்துக்கு அவன் உயர்த்தப்பட்டிருக்கிறான். பாரத நாட்டின் புனித மெய்நூல்களும் பழங்கதைகளும் சூரியனுக்குக் கொடுத்திருப்பது போன்ற ஒரு பெருமையை வேறு யாருக்கும் கொடுக்கவில்லை, சூரியன் பெற்றிருக்கும் ஒரு தனித்த புகழ் இது. ஏன், உலகம் முழுவதற்குமே, சூரியன் நாம் பார்க்கக் கூடிய ஆண்டவனின் தோற்றம். சூரியனே காலத்தின் பிறப்பிடம். மெய்நூல்கள் சொல்லுகின்றபடி, சூரியன் தான் காலத்தின் தந்தை. ஒருவன் வாழ்கின்ற காலத்தின் அளவை வரையறுத்து முறைப்படுத்துபவன் சூரியன். ஒவ்வொரு நாளும் நமக்கு ஏற்பட்ட வாழ்நாளின் அளவை ஒரு சிறிது அவன் குறைத்துவிடுகிறான். ஆகவே சூரியன் முதன்மையான ஆணையாளன்; மனிதனின் கதியை ஆக்குபவன். நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, நம்முடைய ஒவ்வொரு செயலும் அவனுடைய ஆதரவின் கீழ் நடைபெறுகிறது; அவனுக்குக் காணிக்கையாக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வுலகத்தின் பொருட்டும் சூரியன் செய்யும் சேவையை எண்ணிப் பாருங்கள்! அது நம் எல்லோருடைய அன்றாட அநுபவத்தில் காணப்படுவது. நம்மில் ஒவ்வொருவரும் அதற்குச் சாட்சி; இந்த உலகத்தில், செடியோ விலங்கோ, எல்லா உயிருக்கும் சூரியனே மூலம். அவனுடைய கதிர்களில்லாமற் போனால், உலகம் வரண்ட பாலைவனமாகிவிடும். கடல்கள், குளங்கள் இவற்றிலிருந்து நீரை அவன் விண்ணோக்கி உறிஞ்சுகிறான்; பின் மேகங்களிலிருந்து பயிர்களின் மேல் மழையாகக் கொட்டுகிறான். தன்னுடைய கதிர்களைச் சமமாக எல்லோருக்கும் பாய்ச்சும் அவன் எப்பொழுதுமே ஓர் அறக்கடவுள்.

தியாகத்தில் இணையற்றவன் சூரியன்; ஒருபெரிய தியாகி. தன்னுடைய பெருமையையோ ஓய்வையோ பற்றி ஒரு கணமும் சிந்திக்காத அவன் மாபெரும் யோகி. பலனில் கருத்தில்லாமல் தனது கடமையை அவன் செய்கிறான். தன்னுடைய வேலையில் அவன் அடக்கமாகவும் தளராமலும் இருக்கிறான். அவன் செய்யும் பணியை வேறு ஒருவரும் செய்துவிட முடியாது. அவன் அளிக்கும் மகிழ்ச்சி வேறு யாரும் தரமுடியாத ஒன்று. என்றும் ஆணவத்திற்கு அவன்இடங்கொடுத்ததில்லை. ஊக்கமூட்டும் அவனது பணியின் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் பாராட்டாமல் அவன் தொழிற்படுகிறான்.

உலகத்துக்காகவும் மனித இனத்துக்காகவும் கடுமையான வெப்பத்தையும் பொறுத்துக்கொள்கின்ற சூரியனுடைய அந்தப் பொறுமையைக் கற்பனை செய்து பாருங்கள் அவனன்றோ மனித உடம்பைச் சூடாகவும் வசதியாகவும் வைத்திருக்கிறான். அவனிடமிருந்து பெறும் சூரிய சக்தியினால் இந்தப் பௌதிக உடம்பு ஆற்றலும் அறிவும் நிரம்பப் பெற்றிருக்கிறது. சூரியன் ஒருகணம் சோம்பி இருந்துவிடுவானானால் உலகம் தீயினால் விழுங்கப்பட்டுவிடும். மாறாக, அவன் உலகை வளர்க்கிறான். அதை அவன் ஒரு பணியாகக் கூட அல்ல, ஒரு லக்ஷியமாக, நோக்கமாகக் கருதுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய இயல்பான கடமைகளிலே தான் நீங்கள் உறுதியைப் பெறமுடியும். அது ஏதோ வலியஏற்றுக்கொண்ட வேலையாக இருந்தால், தொல்லைகளையும் துன்பங்களையும் சமாளிப்பது உங்களுக்கு மிகவும் கடினமாகிவிடும். வலிய சுமத்தப்பட்ட வேலை அஸஹஜ-கர்மா எனப்படும். ஒருவனுடைய இயல்பான தன்மையின் வெளிப்பாடானவேலை ஸஹஜ கர்மா எனப்படும். ஸஹஜ கர்மா சுளுவாக இருக்கும்; அஸஹஜகர்மா எப்பொழுதும் பளுவாக இருக்கும். அஸஹஜகர்மா ''நான் செய்பவன்'' என்ற உணர்வோடு ஆணவத்தைத் தூண்டும். அதனால் அது ஓய்ச்சலையோ. அல்லது பெருமிதத்தையோ வெறுப்பையோ அல்லது செருக்கையோ ஏற்படுத்திவிடும்.

இந்த ஒரு கருத்தை எண்ணிப் பாருங்கள்; ஒருவன் நன்ருக இருக்கும்பொழுது. ஒருவரும் அவனுடைய உடல் நலத்தைக் குறித்து விசாரிக்கமாட்டார்கள். ஆனால் நோயினாலோ துன்பத்தினாலோ ஒருவன் தாக்கப்படும்பொழுது, ஏன் எப்படி என்றெல்லாம் எல்லோரும் கவலையோடு கேள்வி கேட்டுத் துளைத்துவிடுவார்கள். ஏன் இந்தக் கவலை? மனிதன் அடிப்படையில் மகிழ்ச்சியோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கிறான். இன்பம் அவனது சொந்த இயல்பு; அதனால், அவன் மகிழ்ச்சியோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கும்பொழுது ஒருவரும் வியப்படைவதுமில்லை; கவலைப்படுவதுமில்லை. ஆனால் துயரமும் துன்பமும் அவனது இயற்கைக்குப் புதியவை. அவனது இயற்கையை மூடி அமுக்கிவிட்ட மயக்கத்தின் விளைவுகள் அவை. இதனால் மனிதர்கள் கவலைப்படுகிருர்கள். எப்படி இவ்வாறு அறிவு மயங்கினான் என்று தெரிந்து கொள்வதற்கு முனைகிருர்கள்.

சூரியன் நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம் இதுதான் நாம் நமது சொந்த இயல்பை ஒட்டி வாழும் போது ஓய்ச்சலோ பெருமிதமோ, வெறுப்போ செருக்கோ ஏற்கபடாது. சூரியனுடைய தொழில் வெளியிலிருந்து சுமத்தப்பட்டு வலுக்கட்டாயமாகக் கைக்கொண்டதல்ல. அதனால் தான் அது முறையாகவும் சீராகவும் நடைபெறுகிறது. மேலும், அவன் கொடுத்துப் பிரித்தளிக்கும் காலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதும் நன்கு பயன்படுத்துமாறு அவன் மனித இனத்திற்கு எடுத்துரைக்கிறான். இது ஏதோ வசதியாகவும் பாதுகாப்பாக வும் வாழ்வதற்கு மட்டுமல்ல; அவனது குறிக்கோளுக்குத் தந்த ஒழுங்கானதொரு உயர்வாழ்வு அவன் வாழ்வதற்கே, இப்பொழுது தெரிகிறதல்லவா, ஏன் பகவானால் கீதை முதலில் சூரியனுக்குச் சொல்லப்பட்டது என்று? சூரியன் ஒரு மாபெரும்கர்மயோகி; நிஷ்காம கர்மயோகி.

மனித குலத்தின் பிரதிநிதியாக நாற்சந்தியில் நின்று வழி தெரியாது திகைக்கும் அர்ஜுனனுக்கு இந்த அழியாத கீதா சாஸ்திரத்தைக் கண்ணன் இப்பொழுது உபதேசிக் கிறான். இந்த உபதேசத்திற்குக் கண்ணன் அர்ஜுனனைத் தேர்ந்தெடுத்தான். ஏனெனில், அவனிடத்தில் சூரியனிடத் துக் காணப்படுகின்ற அதே சிறப்பு இருந்தது அல்லவா? அதைப்பற்றி ஒரு கணம் சிந்தியுங்கள். அர்ஜுனன் அத் தகைய ஒளியும் சிறப்பியல்புகளும் பெற்றிருக்காவிட்டால் கீதையைக் கற்கும் மாணவனாக அவனைக் கொள்வதற்குக் கண்ணன் முடிவு செய்திருக்கமாட்டான். தகுதியில்லாதவர் களுக்குப் பகவான் வெகுமதிகளைக் கொடுக்கமாட்டான். இந்த உபதேசத்திற்கு வேண்டிய தகுதிகளெல்லாம் அர்ஜுன னுக்கு இருந்தன; அதனால் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7

''என்னல் வகுக்கப்பட்ட தருமம் நலிவை அடையும் பொழுது, அதை உயிர்ப்பிக்கவும் காக்கவும், நல்லோரைப் பயத்திலிருந்து மீட்கவும் நான் உருவமில்லாத நிலையை நீங்கி மனித உருவம் எடுத்துத் தோன்றுகிறேன்'' என்றான் கண்ணன். இங்கே, இந்தப் பேச்சு சிறிது ஐயப்பாட்டைத் தரக் கூடும், ''தருமம் என்பது தேய்ந்து அழிந்துவிடக் கூடியது தான் போலும் என்று சாதாரண மனிதர்கள் முடிவு கட்டி விடக் கூடுமே? தருமம் சத்தியமுமில்லை, நித்தியமுமில்லை என்று நிந்திக்கமாட்டார்களா?'' என்று நீங்கள் கேட்கலாம்.

நல்லது; தருமத்தின் தோற்றத்தையும் நோக்கத்தையும் நீங்கள் யோசித்துப் பார்த்தால்தான், அதைக் காப்பாற்றுகின்ற முயற்சியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இறைவன் இவ்வுலகத்தைத் தானே விரும்பிப் படைத்தான். அதனுடைய சீரான போக்குக்கும் காப்புக்கும் பல விதிமுறைகளை ஏற்படுத்தினான். ஒவ்வொரு பொருளுக்கும் சரியான நடைமுறை விதிகள் தரப்பட்டன. இவை தான் தருமமாக அமைகின்றன.

''அணிவது'' என்ற பொருளைக் கொண்ட த்ரு என்ற தாதுவிலிருந்து தருமம் என்ற சொல் பிறந்தது. அணியப்படுவது தருமம். இறைவனுடைய உடலைப் போன்றது தேசம் அல்லது நாடு. அது, தான் அணியும் தருமத்தால் காக்கப்படுகிறது. அதுவே அந்நாட்டிற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்கிறது. பாரத நாட்டின் புனித பீதாம்பர ஆடையும் அதுதான். அதுதான் இந்நாட்டின் மதிப்பையும் கௌரவத்தையும் காப்பாற்றுகிறது. குளிரிலிருந்து காத்து வாழ்க்கைக்கு அழகு ஏற்றுகிறது. இந்த நாட்டின் நன்மதிப்பைத் தருமம் தான் பாதுகாக்கிறது. அணியும் ஆடைகள் எப்படி ஒருவனுக்கு ஏற்றத்தைக் காக்கின்றனவோ அதுபோல ஒரு மக்களின் மதிப்புக்குத் தருமமே அளவுகோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாடு மட்டுமல்ல; உலகத்திலிருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தனியான தருமம் இருக்கிறது; தனித் தன்மை இருக்கிறது. தருமமே தனிமனிதனையும் சமுதாயத் தையும் கட்டி ஆளுகிறது. பிரபஞ்சத்தின் கூறுகளான ஐந்து மூலப் பொருள்களை எடுத்துக்கொள்ளுங்கள். இவற்றுள் நீருக்கு ஓட்டமும் குளிர்ச்சியும் தருமமாக அமைந்திருக்கிறது. நெருப்புக்கு எரிப்பதும் வெளிச்சமும் தருமம். இது போல ஐந்து மூலப் பொருள்களில் ஒவ்வொன்றுக்கும் அதற்கே உரித்தான தனித்தருமம் இருக்கிறது. மனிதனிடத்தில் மனிதத்தன்மை, மிருகங்களினிடத்தில் மிருகத் தன்மை இவையே அவற்றை அழிவினின்றும் காக்கின்றன. எரிப்பதும் வெளிச்சமும் இல்லாத நெருப்பு எப்படி நெருப்பாகும்? அத னுடைய தருமத்தை அது வெளிப்படுத்தத்தான் வேண்டும். அதை இழந்துவிடும் பொழுது நெருப்பு உயிரற்ற கரித் துண்டாகிவிடும்.

இதுபோலவே, அவனுடைய உயிர் மூச்சாக இருக்கிற சில இயல்பான குணங்களை மனிதன் பெற்றிருக்கிறன். அவை சக்திகள் என்றும் சொல்லப்படுகின்றன. இந்தச் சக்திகள் காணப்படும் வரையில் தான் இவன் 'மனிதன்' என்று இனங் கண்டுகொள்ள முடிகிறது. அவற்றை இழந்துவிட்ட பின் ஒருவன் மனிதனுக இருக்க முடியாது. இத்தகைய சக்திகளை இயல்புகளைப் பேணிப் போற்றி வளர்ப்பதற்காக, ஒரு சில நடைமுறைகள், சிந்தனை வழிகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த ஆசார விசாரங்கள் பேணிப் போற்றப்படுமானுல் தரு மம் குறையாது. தருமம் என்பது ஏதோ வெளியிருந்து கொண்டு வரப்படுவதல்ல; அதை நீக்கவும் முடியாது. அது உங்களுடைய உண்மையான இயல்பு; தனித்தன்மை. அது தான் விலங்கினின்று மனிதனுக்குகிறது. தருமத்தை நடத்து வது எப்படி? நீங்கள் நீங்களாகவே இருப்பதன் மூலமாகத் தான். தருமத்திலிருந்து ஒரு பொருள் நழுவி நெறிகெட்டு இச்சைப்படி நடக்கத் தொடங்கினுல், அது அதருமத்தைச் செய்கிறது.

மனிதனின் இந்த உடன்பிறப்பு தருமம் (ஸஹஜ தருமம்) காலப்போக்கில் மீறப்பட்டது. அதை ஆதரித்தவர்கள், அதற்கு ஊக்கமூட்டியவர்கள், அதனுல் இன்பம் அடைந்தவர் கள் குறைந்து போனுர்கள். அதனுல் சாதாரண வழக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அழிந்துவிட்டது என்று சொல்லப்பட்டது. உண்மையில் பயிரைக் களைகள் மீறி மூடிவிடுவதைப் போலத்தான் இங்கும் நடக்கிறது. அதனால் தருமத்தை நிலை நிறுத்துவது என்பது, வயலில் களை பிடுங்குவது போலத்தான். இரும்புக் காலம் என்று சொல்லக்கூடிய இந்தக் கலியுகத்தில், தருமம் என்பது வெறும் சொற்களாக மட்டும் நின்றுவிட்டது. தருமம்என்பது சொற்களை வைத்துக்கொண்டு மாயாஜாலம் புரிவதல்ல. இதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். பேசப்பட வேண்டியது உண்மை ஒன்று தான். செய்யப்பட வேண்டியது தருமம் ஒன்றுதான்.

பாரதப் பண்பாட்டின் களஞ்சியமான உபநிஷதங்களின் அறைகூவலும் ''உண்மையைப் பேசு! தருமத்தைச் செய்!'' என்பது தான். இந்தப் புகழ் பெற்ற உபதேசங்கள் இன்றைக்கு மறந்துபோய்விட்டன. அது மட்டுமல்ல, அவை தலைகீழாகவும் போய்விட்டன. ''தருமத்தைப் பற்றிப் பேசு!'' என்பது அன்றாட வழக்கமாகிவிட்டது. செயலிலிருந்து வெறும் பேச்சுக்கு நழுவுவது, பேசுவதினாலேயே ஒரு காரியம செய்து முடித்தாகிவிட்டது என்று நம்பிக்கை கொள்வது — இது தருமத்தின் தேய்வுக்கு முதற்படி. உண்மையில் இது அதருமமேயாகும்.

ஆனால், எது நடைமுறையில் செயலாக்கப்படவில்லையோ அதற்குப் பலம் இருக்காது. முதலைக்குத் தண்ணீருக்குள் இருப்பது தான் பலம். தருமத்தின் பலம் அது நன்றாகச் செயற்படுவதைப் பொறுத்திருக்கிறது. செயலில் காட்டாமல் வெறும் பேச்சு என்ற மணலில் அது எறியப்படும் பொழுது தருமம் வலுவிழந்து விடுகிறது. உண்மை என்பது பேசப்படுவது. நன்றாகப் பேசப்படும் பொழுது அது பலம் பெறுகிறது. 'பலம்' என்பதற்கு இங்கு இரண்டு பொருள்கள் உண்டு, கேவலம் உடல் பலம் ஒன்று; மற்றொன்று தருமத்தின் பலம். பீமனிடம் உடல்பலம் இருந்தது. ஆனால் அவனுடைய தமையனாரான தருமராஜர் பக்கத்தில் அவன் இருந்ததனால், பீமனுடைய தேகபலம் தருமபலம் ஆயிற்று. இந்தத் தருமபலத்தை விடாமல் பிடித்துக் கொண்டதால்தான் பாண்டவர்கள் காப்பாற்றப் பட்டார்கள்- அதுமட்டும் இல்லாவிட்டால், முதலிலேயே

அவர்கள் தோல்வியைத் தழுவியிருப்பார்கள். எவ்வளவுதான் ஆற்றல் பெற்றிருந்த போதிலும் தருமராஜர் இல்லாது இருந்தால், அவர்களுடைய எதிரிகளுக்கு எளியவர்களாகி இருப்பார்கள். அதை நினைத்துப் பாருங்கள். பாண்டவர்களை விட மிகச் சிறந்த எவ்வளவோ படைப்பலங்களைப் பெற்றிருந்த போதிலும், எப்படிக் கௌரவர்கள் முறியடிக்கப்பட்டார்கள்? அவர்களிடத்தில் தார்மீக பலம் இல்லை. அவர்கள் நம்பியிருந்ததெல்லாம் வெறும் மிருக பலத்தைத்தான். தார்மிக பலத்தைப் பெற்றிருந்த தருமராஜரும் பீமனும் என்றைக்குக் காட்டுக்குப் போனார்களோ, அன்றே கௌரவர்களுடைய நாட்டில் அதருமம் புகுந்துவிட்டது.

எனவே, காட்டிற்கு விரட்டப்பட்டுவிட்ட தருமம் நமது கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் திரும்ப அழைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் உலகத்தில் வளமும் செழிப்பும் அமைதியும் ஏற்படும். அதருமத்தின் ஆட்சியிலிருந்து உலகம் தரும யுகத்திற்கு வரவேண்டும். பயிரை வளர்ப்பதற்கு உங்களுக்குத் தேவைப்படுவது பெரும் முயற்சி. களைகளும் காட்டுப் புற்களும் வளர்வதற்கு ஒரு முயற்சியும் தேவையில்லை. விலைமதிப்பில்லாத ஸஹஜதர்மம் மிகுந்த கவனத்துடனும் பரிவுடனும் வளர்க்கப்படவேண்டும். தருமம் செயலாக்கப்படும் பொழுது, நெல் செய்யப் புல் தேயுமாப் போலே அதருமம் தானுகவே நைந்துபோய்விடும். அதைச் செயலற்றுப் போகும்படி செய்யத் தனி முயற்சியொன்றும் தேவையில்லை. ஆகவே, இந்தப் பின்னணியில் தர்ம ஸ்தாபனம் என்றால் தருமத்தை நடத்துவதில் வளர்ச்சி என்றுதான் பொருள்.

''சூரியன் அஸ்தமித்துவிட்டது'' என்று நாம் சொல்லுகிறோம். இதற்கு என்ன பொருள்? அது நமது கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டது என்பதுதான். இது போலத்தான், தருமம் நமக்குத் தெரியவில்லை என்பதனால் அது இல்லாமற் போய்விடுமானால் அது தருமமாக இருக்காது. தருமம் உண்மையோடு கூடியிருப்பதால் அது அழிவில்லாதது. மறைந்திருக்கும் தருமத்தை மறுபடி தெரியும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

செய்வது தான் உண்மையில் தரும ஸ்தாபனம் ஆகும். கண்ணன் செய்து கொண்டிருப்பதும் அதுதான்.

அர்ஜுனனைக் கருவியாகக் கொண்டு, தொடக்கத்திலிருந்தே தருமமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நடைமுறைகளையும் சிந்தனை வழிகளையும் கண்ணன் வெளிப்படுத்திக்கொண்டு அவற்றைப் பயிலுவதை மேலும் அமுலாக்குகிறான். இதை தர்மோத்தாரணம் என்கிறோம். இழந்து விட்ட ஒன்றைக் கண்ணன் மீட்டுக் கொடுக்கிறான். இந்தப் பணியைச் சாதாரண மனிதர்களால் செய்து முடிக்க முடியாது, எனவே, உலகத்துக்கெல்லாம் ஆதாரமாக எல்லாவற்றையும் ஆளும் இறைவனே இந்த வேலையை ஏற்று நடத்தவேண்டியதாயிருக்கிறது. அவன் ஒருவன்தான் எல்லாம் வல்லவன். அவன் அர்ஜுனன் மூலமாக உலகத்துக்கு உபதேசம் செய்கிறான்.

எல்லோரையும் போல அர்ஜுனனும் ஒரு சாதாரண மனிதனாக இருந்தால், இந்தப் பேருரைகளை மனதில் வாங்கி அவற்றைப் பிறருக்குச் சொல்பவனாக விளங்கமுடியாது. அதனால் அர்ஜுனன் அசாதாரணமான ஒரு பெரிய மனிதன் என்று நீங்கள் ஊஹிக்கவேண்டும். வெளி எதிரிகளை மட்டும் வெற்றிகொண்ட வீரன் அல்ல அவன்; உட்பகைவரையும் வெற்றிகொண்டவன். மெலிந்த இதயம் படைத்தவர்கள் கீதையைப் புரிந்துகொள்ளவும் முடியாது; செயலாக்கவும் முடியாது. இதை நன்றாகத் தெரிந்துகொண்டு, இந்த உயர்ந்த நோக்கத்தோடு கண்ணன் அர்ஜுனனைத் தனது கருவியாகக் கொண்டான்; அவனுடைய அருளையும் அவன் மேல் பொழிந்தான்.

ஒரு சமயம் கண்ணன் அர்ஜுனனோடு நெருக்கமாக உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, ''அர்ஜுனா! நீ எனக்கு மிகவும் நெருங்கிய பக்தன்! அது மட்டுமல்ல; எனக்கு மிகவும் வேண்டிய நண்பனுமாவாய். உன்னைப் போல் வேண்டிய நண்பன் எனக்கு வேறு யாரும் இல்லை. அதனால் தான் இந்த உயர்ந்த ரகசியமான உபதேசத்தை உனக்கு நான் செய்தேன்'' என்றான். (உள்ளத்தை ஆட்கொள்ளும் கண்ணனுடைய அருளைப்பார்த்துக்கொள்ளுங்கள்!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை எண்ணிப் பாருங்கள். உலகத்தில் பெரும்பாலோரும் தங்களுக்குத் தாங்களே பக்தர்கள் என்று பட்டம் சூட்டிக்கொண்டவர்கள்தாம். ஆனால் ஆண்டவன் அவர்களை அப்படியே ஏற்றுக்கொண்டுவிடவில்லை. ஆண்டவனிடமிருந்தே அந்தப் பட்டத்தைப்பெறுவது மிகப்பெரிய நல்லஅதிர்ஷ்டம்; அதுவே தலைசிறந்த சான்றிதழுமாகும். ஒரு பக்தன் ஆண்டவனுடைய இதயத்தை உருகச் செய்து அவனிடமிருந்து தனக்குப் பக்தி இருப்பதாக ஒப்புதல் வாங்க வேண்டும். தானாகவே பக்தன் என்று ஒருவன் பட்டத்தைச் சூட்டிக் கொண்டுவிட்டால் அது அற்பமான திருப்தியைத் தருமே யல்லாது உண்மையான மகிழ்ச்சியைக் கொடுக்காது. அற்ப திருப்தியைக் கொடுக்கும், ஆத்ம திருப்தியைக் கொடுக்காது. அர்ஜுனன் ஒருவன் தான் ஆண்டவனிடமிருந்தே பக்தன் என்ற பட்டத்தைப் பெற்றவன். அதிலிருந்தே அர்ஜுனன் எவ்வளவு தூய இதயம் கொண்டவன், எவ்வளவு தகுதி யுடையவன் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். உங்களைப் பற்றி நீங்களே ஓராயிரம் சேதிகளைச் சொல்லிக் கொள்ளலாம்; 'இதற்கு உரிமை இருக்கிறது, அதற்குத் தகுதி இருக்கிறது' என்றெல்லாம் முன்வந்து வாதாடலாம்; ஆனால் நீங்கள் ஆண்டவனுடைய ஒப்புதலைக் காண்பிக்கவேண்டும். அது இல்லாமற்போனால் உங்களுடைய பேச்செல்லாம் ஸாரமில்லாத தற்பெருமையேயாகும். உடனடியான கீழ்ப்படிதலினாலே தான் பக்தி பெறப்படும். ஆனால் அது மாத்திரம் போதாது. அதனால் தான் கண்ணன் 'நண்பன்' (மித்திரன்) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறான். நண்பனாயிருப்பவனுக்குப் பயம் இல்லை. அது அவனை இன்னும் சிறந்த பாத்திரமாக்கிவிடுகிறது.

நாம் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து, கீதைக்குச் செல்வோம். கண்ணனுடைய பேச்சை அர்ஜுனன் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அவன் சிந்தனை முழுதும் சந்தேகங்களால் நிறைந்துவிட்டது. அவன் மனம் அலைப்புண்டது. அவன் மட்டும் அல்ல; அந்த நாளில் எல்லா மனிதருமே ஐயப்பாடுகளால் அலைப்புறுகிறார்கள் மேலும் மிகவும் சிக்கல் மிகுந்த ஆன்மீகத் துறையிலும் பரம் பொருளைப் பற்றிய மெய்யறிவுத் துறையிலும் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கங்கள் இருக்கலாம். ஒன்று மேற்போக்கானது; இன்னொன்று உள்ளார்ந்தது சாதாரண மனிதர்கள் மேற்போக்கான விளக்கத்தை ஏற்றுக்கொண்டு விடுவார்கள். இறைவனை உணர்ந்து அநுபவித்தவர்கள் உள்ளார்ந்த விளக்கத்தை அறிய முற்படுவார்கள்.

பழமொழி கூட உண்டல்லவா? ''கண்ணில் மச்சம் போல், செருப்பில் கல்லைப் போல், காலில் முள்ளைப் போல், வீட்டில் கலகம் போல். ஒருமனத்தில் சந்தேகங்களும் துன்பங் கொடுக்கின்றன'' இத்தகைய சந்தேகங்கள் மனித குலத்தின் பிரதிநிதியான அர்ஜுனனைத் தாக்கும்பொழுது அவையெல்லாம் மனித குலத்தின் சந்தேகங்களேயாகும். மனித குலத்திற்கு அப்பாற்பட்ட மாதவனுலே தான் அவற்றைத் தீர்க்க முடியும். அதனுலேயே கண்ணன் எப்பொழுதும் இந்தச் சந்தேகங்களைத் தீர்த்துவைக்கவும் மகிழ்ச்சியை உள்ளத்தில் உண்டாக்கவும் தயாராகப் பக்கத்திலேயே இருந்து கொண்டிருக்கிருன்.

சரி, அர்ஜுனனுக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம்தான் என்ன? துவாபரயுகத்தின் இறுதியில் கண்ணன் பிறந்தான். சூரியனும் மனுவும் மிகவும் பழங்காலத்தவர்கள். அப்படியாஞல் இந்த இருவரும் எவ்வாறு கண்ணனைச் சந்தித்திருக்க முடியும்? நேருக்கு நேராக உடல்களோடு இந்தச் சந்திப்பு நிகழ்ந்திருக்க முடியாது. ஏனெனில், இவர்களுக்குப் பல தலைமுறைகளுக்குப் பின்னுல் தான் கண்ணன் பிறந்தான். அர்ஜுனனும் கண்ணனும் தான் சமகாலத்தவர்கள். அப்படியிருக்க, கண்ணன் இந்த யோகத்தைச் சூரியனுக்கு உபதேசித்ததாகச் சொல்வது எப்படி முடியும்? நம்ப முடியாத கட்டுக் கதைகளை யெல்லாம் பேசாமல் கேட்டுக்கொண்டு உட்கார்திருப்பதே அறிவு. சுன்னம் என்பதற்கு அறிகுறி. ஒவ்வொரு கணமும் அர்ஜுனனுடைய தவிப்பு அதிகமாயிற்று. இதைக் கண்ணனும் கவனித்தான். அவன் எல்லாமுமாகி எல்லாவற்றிலும் இருப்பவன் ஆயிற்றே! ''உன்னுடம் ஒரு தவிப்பைக் காண்கிறேன்! காரணம் என்ன சொல்!'' என்று கேட்டுவிட்டு, ஒரு புன்னகையினுல் அவனைப் பதில் சொல்லத் தூண்டினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுனனுக்குச் சந்தோஷம், தனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்று. ''மாதவா! உன்னுடைய பேச்சை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னை அது குழப்பி விடுகிறது. அதனால் உன்னிடத்தில் எனக்கிருக்கும் கொஞ்ச நஞ்சம் நம்பிக்கையும் போய்விடும் போலிருக்கிறது. உன்னை வேண்டிக்கொள்கிறேன். இதைக் கேட்பதற்காக என்னை மன்னித்துவிடு. தயவு செய்து என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துவை. இதை என்னால் இனிமேலும் தாங்கமுடியாது'' என்று இருகைகளையும் குவித்து அர்ஜுனன் மன்றாடினான்.

கண்ணன் மகிழ்ந்தான். அப்படி என்ன சந்தேகம் என்று அர்ஜுனனைக் கேட்டான். அப்பொழுது அர்ஜுனன் சொல்வான்:—

''இந்த யோகம் சூர்யனுக்கும் மனுவிற்கும் உபதேசிக்கப் பட்டது என்று கூறினாய். அவர்கள் மிகவும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களல்லவா? ஆனால் நீ வாழ்கின்ற காலம் என்ன? இப்போதைய இந்த உடலில் இருந்து கொண்டா அவர்களுக்கு உபதேசித்தாய்? உன்னுடைய இந்த உடம்பு. என்னுடையதை விட நான்கு ஐந்து வருடங்களே மூத்தது. நீ இதைவிட வயதானவன் அல்ல. எனக்குத் தெரியாமல் அவர்களுக்கு எப்பொழுது உபதேசம் செய்தாய்? சூரியன்! அவன் வடிவத்தில் உன்னை விடப் பல மடங்கு பெரியவன். நமது கற்பனைக் கெட்டாத பழங் காலத்திலிருந்து, உலகத்தின் தொடக்கத்திலிருந்து அவன் இருந்து கொண்டிருக்கிறான். இதை என்னால் நம்பவே முடியாது. இல்லை இல்லை, மிகச் சிறந்த அறிவாளியுங்கூட நீ கூறுவதை உண்மையென்று நிரூபிக்க முடியாது. அதிருக்கட்டும். நீ ஒருவேளை ''இந்த உடம்போடு உபதேசிக்கவில்லை; இந்த யுகத்திலும் உபதேசிக்கவில்லை: வேறு உடம்பில் இருந்து கொண்டு வேறொரு யுகத்தில் உபதேசித்தேன்'' என்று சொல்லக் கூடும். அதுதான் இன்னும் அதிக புதுமையாயிருக்கிறது. முற்பிறவியில் நடந்த ஒன்றை யார் நினைவிற்குக் கொண்டுவர முடியும்? அப்படி ஞாபகம் வைத்துக்கொள்ள முடியுமானால், அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் பொருந்துமல்லவா? ஏதோ ஒரு சில தெய்வீகச் சக்திகள்தாம் அப்படி முற்பிறவியின் நினைவுகளை வைத்துக் கொள்கின்றன என்று மெய்ந்நூல்கள் கூறுகின்றன. சாதாரண மனிதர்கள் அப்படி அவைகளை நினைவுபடுத்திக் கொள்ளமுடியாது. நல்லது, நான் உன்னைத் தெய்வீகமானவன் என்றே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் சூரியனும் தெய்வீகம்தான் என்றும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் சமமான தெய்வீகநிலையில் உள்ள இரண்டு பேரில் ஒருவர் போதிப்பதும் மற்றவர் கற்பதும் எப்படி முடியும்? நீ சொல்லிக் கொடுத்துச் சூரியன் கற்றுக் கொள்வதனால், அவன் உன்னுடைய மாணுக்கன் ஆகிவிடுகிறான் இல்லையா? அப்பொழுது நீ சூரியனைவிட உயர்ந்தவன் ஆகிவிடுகிறாய். அப்படியே வைத்துக் கொள்ளுவோம். நீ இறைவன்; கடவுளேதான் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். இதனால் எனக்கு இன்னும் சில சிரமங்கள் உண்டாகின்றன. ஏனெனில், கடவுளாயிருப்பவர் ஏன் பிறவி, மரணம், தொழில் இவற்றால் கட்டுப்பட வேண்டும்? ஐந்தடி உயரமுள்ள உருவத்தை நீ எடுத்துக் கொள்ளும் பொழுது, அளவற்ற ஒன்றுக்கு அளவு உண்டாகி விடாதா? எல்லையில்லாத, அளவற்ற, அகண்ட வஸ்துவாக இருப்பதைவிட்டு, இறைவன் எதற்காக ஒரு சிறிய வடிவமாக வந்து பிறக்க வேண்டும்? எப்படி யோசித்துப் பார்த்தாலும் இந்தச் சந்தேகத்தை நான் தீர்க்க முடியவில்லை. உன்னுடைய சொற்கள் உனக்குத்தான் புரிகின்றன. எனச்கு அவற்றின் பொருள் விளங்கவில்லை. என் தலை சுழல்கிறது; எனக்குச் சிறிது வழியைக் காண்பித்துக்கொடு! ஏதாவது ஒப்புக் கொள்ளக்கூடிய விடை சொல்!'' என்று அர்ஜுனன் இறைஞ்சினான்.

சரியான தருணம் வந்துவிட்டது என்று தெரிந்து கண்ணன் தனக்குள் சிரித்துக் கொண்டான். ''அர்ஜுனா சூரியன் உதிக்கிறது என்றும் சூரியன் அஷ்தமிக்கிறது என்றும் மக்கள் சொல்லுகிறார்களே, அதை எந்தக் கருத்தில் சொல்லுகிறார்கள்? அவர்களுடைய பார்வையைய பொறுத்தமட்டில்தான் அல்லவா? சூரியன் உதிப்பதுமில்லை; அஸ்தமிப்பதுமில்லை. நானும் அப்படித்தான். நான் பிறப்பது மில்லை: இறப்பதுமில்லை. சாதாரண அறிவு படைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் நான் பல தடவை பிறப்பதாகவும். ஒவ்வொரு பிறவியிலும் நான் பல காரியங்களைச் செய்வதாகவும் நினைக்கிறார்கள். உலகத்தைச் சீர்படுத்த எப்பொழுதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ அப்பொழுது ஓர் உருவத்தையும் பெயரையும் ஏற்படுத்திக்கொண்டு தோன்றுகிறேன். அவ்வளவுதான். என்னுடைய தோற்றங்கள் எல்லாவற்றையும் நான் நன்கு அறிந்திருக்கிறேன். நான் முழு ஆற்றல் பெற்றவன்: எல்லாம் உணர்ந்தவன். நான் மட்டுமல்ல, நீயும் கூட எல்லாவற்றையும் அறிவாய். ஆனால் உன்னுடைய அறிவாற்றலானது அறியாமையினால் மறைக்கப்பட்டிருக்கிறது. நான் அறிவே வடிவானவன். ஆகையால் நான் எல்லாவற்றையும் அறிவேன். சூரியன் கண்ணாடியில் பிரதிபலிக்கும் பொழுது அவனுடைய நிலையையோ பெருமையையோ இழந்துவிடுவதில்லை: அவன் பாதிக்கப்படுவதில்லை. அவனுடைய மஹிமையும் குறைவதில்லை. இவ்வாறேதான் நான் பிரகிருதியில் பிரதிபலிக்கின்றேன். அது என்னுடைய மஹிமையையோ நிலையையோ குறைத்து விடுவதில்லை: எப்பொழுதும் போல முழு ஆற்றலுடையவனாகவும், முற்றும் உணர்ந்தவனாகவும் நிற்கிறேன். நான் பிறப்பில்லாதவன்: இறப்பில்லாதவன். முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளின் பயனாய் மனிதர்கள் பிறக்கிறார்கள். இது அவதாரங்களுக்கும் பொருந்தும் என்று நீ ஒருவேளை நினைக்கலாம். அது தவறு. உன்னுடையது வினைப்பிறவி: என்னுடையது விளையாட்டுப் பிறவி நல்லவர்களின் வேண்டுதலே என் பிறவிக்குக் காரணம். கெட்டவர்களின் தீச் செயல்களும் கூடக் காரணம்தான்!'' என்றான் கண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAM
UNIVERSITY OF JAFFNA

# அத்தியாயம் 8

சாதாரண மனிதர்களைப் போல இந்தப் பிறவியில் அநுபவித்துத் தீர வேண்டியதாய் முற்பிறவிகளில் சேர்க்கப்பட்ட புண்ணிய பாவங்கள் அவதார புருஷர்களுக்குக் கிடையாது. அவர்களுடையது ஒரு விளையாட்டு; தானுக விரும்பி எடுத்துக் கொண்ட பிறவி. நல்லவர்களது நன்மையும் தீயவரது தீமையும் இறைவன் அவதாரம் எடுப்பதற்குக் காரணங்கள். உதாரணமாக, நரசிம்ம அவதாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பிரஹலாதனுடைய புண்ணியமும் ஹிரண்ய கசிபுவினுடைய தீமையும் சேர்ந்து அதை விளைவித்தன. இறைவன் வருவதால் நல்லவர்கள் மகிழ்வர்; தீயவர்கள் படுவர். தான் எடுத்துக் கொண்ட உடலால் போர்க்கப்பட்டிருந்தாலும் அவதாரங்களுக்கு இன்பமோ துன்பமோ கிடையாது. ஐம்பெரும் மூலப் பொருள்களால் ஆனது அன்று அவதாரம். அது அறிவு வடிவமானது; சின்மயம், மண்மயம் அல்ல, ''தனது'' ''உனது'' என்ற உணர்வினுலோ அகந்தையினுலோ அது கலங்குவதில்லை. அறியாமையிற் பிறந்த மயக்கத்தால் அது தீண்டப் படுவதில்லை. மக்கள் அவதாரங்களைச் சாதாரண மனிதர் என்று தவறுக எண்ணிவிடக் கூடுமானுலும், அதனுல் உடல் வாழ்வின் இயல்பு பாதிக்கப் படுவதில்லை. அது ஒரு காரியத்துக்காக வந்திருக்கிறது; அதை அது முடித்தே தீரும்.

''அது என்ன காரியம் என்று நான் உனக்குச் சொல்லுகிறேன். சாதுக்களைக் காப்பதும் தீயவரைத் தண்டிப்பதும், தர்மத்தை நிலை நிறுத்துவதும் ஆகிய இதுதான். சாதுக்கள் என்ருல் துறவிகளையும் ஆண்டிகளையும் நான் குறிப்பிடவில்லை. பொதுவாக இவர்களைத்தான் அந்தச் சொல் குறிப்பிடுகிறது என்ருலும், இந்த இடத்தில் அது ''சாது-இயல்பு'' (சாது-குணம்) என்பதைக் குறிக்கும். அதாவது, குண நலம், நேர்மை, சான்ருண்மை இவை விலங்குகளிடத்தும் புழு பூச்சிகளிடத்தும் கூட இருக்கக் கூடும். உண்மையைக் கூறுமிடத்து, ஸத்வ குணத்தை வளர்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஸாதுக்களை வளர்ப்பதற்குச் சிறந்தவழி. இந்தப் புனிதமான குணத்தின் உருவமே அவதாரமாகும். ஆதலால் அவதாரம், இந்த ஸத்வ குணத்தை அது எங்கு காணப் பட்ட போதிலும் வளர்கிறது. துறவிகள் அதை அடைய முயலுவதால், அவர்கள் சாதுக்கள் எனப்படுகிறார்கள். இறைவனுடைய கவனத்தினால் சிறப்பாக அருளைப் பெற்றவர் களாகவும் கருதப்படுகிறார்கள்.''

''ஆனால் இவர்கள் மட்டும்தான் சாதுக்கள் என்பதில்லை. நல்லோர் நடையைப் பின்பற்றுவர்கள், நன்னடத்தை உள்ளவர்கள், சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள், எல்லாவற்றிற்கும் தலைவனான இறைவனுடைய திருச் சந்நிதியை வேண்டுபவர்கள், நல்லறத்தைச் செய்பவர்கள், எல்லா மக்களையும் ஸமமாக எண்ணுபவர்கள், இவர்கள் எல்லோருமே சாதுக்கள்தாம். இத்தகைய நல்லியல்புகள் விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் கூடக் காணப் படுகின்றன. ராமாயணத்தில், சடாயு இந்தக் குண நலத்தினால்தான் காக்கப்பட்டான். இந்தக் காரணம்பற்றியே தான் ஒரு யானையும் அருள் பெற்றது. குரங்குகளும் தொண்டுசெய்ய வாய்ப்புப் பெற்று அவன் அருள் வழங்கப் பெற்றன. இதே காரணம்தான் ஓர் அணிலுக்கும் அருள் செய்யும்படி ஆண்டவனைத் தூண்டியது. ஒரு சாது என்பவன் ஏதோ உருத்திராட்சமாலை, காவி அங்கி, கையில் ஒரு கோல் இவற்றால் ஆனவனல்ல. அணியும் ஆடைகளும் பேசும் மொழியும் ஒருவன் சாதுவா இல்லையா என்பதை நிர்ணயிக்கவில்லை. ஒருவனுடைய குண நலன்தான் அதை நிர்ணயிக்கும். எல்லா விலங்கினங்களும் நல்லதுக்கு வேண்டிய ஆற்றலை வித்தாகப் பெற்றிருக்கின்றன. ஆகையினால், நல்லியல்பை வளர்ப்பதுதான் உலகத்தின் நன்மையை உறுதியாக்குவதற்குச் சிறந்த வழி.

அடுத்தபடி, கெட்டவரை ஒறுத்தல். அந்தந்த வகையான உயிரினங்களுக்கு என்று வரையறுக்கப்பட்ட எல்லைகளை மீறுபவை, ஒன்றுமே செய்யாமல் சோம்பியிருப்பவர், அநியாயத்தையும் கெட்ட நடத்தையையும் பின்பற்றுவர். அகங்காரத்தின் பிடியில் அகப்பட்டுத் திரிபவர் இவர்க ளெல்லாம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ரஜோ குணத்

தையும் தமோகுணத்தையும் மேலோங்க விட்டு, ஸத்வ குணத்தைத் தம்மிடத்தில் அழிய விட்டவர்கள்: தயை, தருமம், தானம் இவற்றின் சுவடே தெரியாமல் இழந்து விட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும்'' என்றெல்லாம் கண்ணன் அர்ஜுனனுக்குச் சொன்னான்.

மூன்றாவதாக, தர்மத்தை வளர்ப்பதும் தன்னுடைய கடமையே என்று கண்ணன் அர்ஜுனனுக்குத் தெரிவித்தான். ''சாது'' என்ற சொல் இந்த இடத்தில் வேறு ஒரு முக்கியமான பொருளையும் தரும். எவ்வளவுதான் ஆசை ஏற்பட்டாலும், எத்தனை அபாயம் வந்தாலும் தன்னுடைய கடமையிலிருந்து தவறாதவனே சாது. தீயவர்கள் இத்தகைய சாதுக்களுக்குத் தொல்லை தருவதிலும், சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவதிலும் திளைக்கிறார்கள்.

அப்படியானால் தருமத்தை நிறுவுவது என்பது என்ன? சாத்திரங்களில் சொல்லப்பட்ட அறநெறியின்வழி கண்டிப்பாக நடப்பது; மக்களிடையே தரும வாழ்க்கையின் பெருமையையும் ஒளியையும் பரப்புவது; கடவுள் அவரது அவதாரங்கள், பெரியோர்கள், வேதங்கள், சாத்திரங்கள், பேரின்ப வீட்டை அடையும் வழி, இம்மைக்கு அப்பாற்பட்ட பேரின்ப அருள் நிலை, இவற்றின்பால் பெருமதிப்பை நிலை நிறுத்துவது, இதுதான் தருமத்தை நிறுவுவது என்பது. இதையே தரும – ஸம்ஸ்தாபனம்; தரும – ரக்ஷணம், தரும– உத்தாரணம் என்று அழைக்கிறார்கள். ''நான் எது செய்தாலும், அது இந்த உயரிய நோக்கத்தின் பொருட்டே யாகும்.; என்னுடைய சொந்த நலனுக்காக எதுவுமில்லை இந்த ரகசியத்தைத் தெரிந்து கொள்கிறவர்கள் பிறவி மரணம் இரண்டிலிருந்தும் தப்பலாம்' என்றான் கண்ணன்.

இறைவன் நம்மிடமிருந்து தள்ளி எங்கோ தொலைவில் இருக்கிறான் என்று எண்ணுவது பரோக்ஷ - ஞானம் எனப்படும். உலகெங்கும் உள்நிற்கும் இறைவன் உன்னுள்ளும் ஆத்மாவாக இருக்கிறான் என்று அறிவது அபரோக்ஷ ஞானம்' தன்னையே தந்துவிட்ட உள்ளத்தோடு காரியம் செய்யப்பட்டால், மனிதனுடைய மனது தூய்மைப்படும். தூய உணர்வு உடையவர்களாலேதான் இறைவனின் பிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் இவற்றினுடைய தெய்வீகத்தன்மையை இலங்காண முடியும், என்றான் கண்ணன். எல்லாரும் அப்படி இவற்றைத் தெய்வீகம் என்று தெரிந்து கொண்டுவிட முடியாது. இருப்பினும், மனித உருவிலே வந்திருக்கிற தெய்வத்தோடு உறவு ஏற்படுத்திக் கொள்வதை ஒருவரும் ஒதுக்கக் கூடாது உங்களால் முடிந்தவரை முயலுங்கள்; ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பங்குக்கு ஒரு தவறும் ஏற்படக்கூடாது.

இது இந்தக் கீதா அத்தியாயத்தின் பத்தாவது சுலோகத்தில் வலியுறுத்தப்படுகிறது. இந்த இடத்தில்தான் உபதேசம் பெறத் தகுதியுள்ள சீடனின் அடையாளங்கள் சொல்லப்படுகின்றன. ''அர்ஜுனா! என்னுடைய பிறப்பு, செயல் இவற்றின் தெய்வீகத்தன்மையை எல்லோரும் புரிந்து கொண்டுவிட முடியாது. விருப்பு – வெறுப்பு, அச்சம் – சினம் இவற்றிலிருந்து விடுபட்டவர்களும், பகவானுடைய பெயரிலும் வடிவத்திலும் ஆழ்ந்தவர்களாய் என்னைத்தவிர வேறொரு ஆதரவையும் அறியாதவர்களும் மெய்யறிவினால் புனிதமானவர்களும்தான் அதைப் புரிந்து கொள்ளமுடியும். தவறாமல் என்னைத் தேடுபவர்கள், ஸத்யம், தருமம், பிரேமை இவற்றோடு கூடியவர்கள் என்னை அடைவார்கள். இது முக்காலும் சத்தியம். நான் உனக்கு இன்று சொல்லுகிறேன். உனக்கேதாவது சந்தேகம் இருக்குமானால் அதை விட்டுவிடு!''

''அறியாமையினால் வெளி உலகத்தைப் பற்றியே எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருந்த மனிதர் தங்கள் உள்ளுணர்வை மாசுபடுத்திக் கொள்கிறார்கள் ஒலி சுவை ஒளி என்ற இவை போன்றவற்றில் பெரும் மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள். வெளியிலிருந்து இன்பத்தைத் தேடும்பொழுது அந்த இன்பத்தைத் தரக்கூடிய பொருள்களை அடைய ஆசை தூண்டுகிறது. அந்த முயற்சியில் தோல்வியுற்று, அமைதியை இழந்து வெறுத்துப் போய்ப் பயப்படுகிறார்கள். பயம் மனிதனின் மனச் சக்திகளையெல்லாம் கொள்ளை கொண்டு விடுகிறது. எளிதில் தணிக்க முடியாத கோபத்தை உண்டாக்குகிறது. இப்படி, ஆசையும் கோபமும் பயமும் ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மூன்றும் நீக்கப்பட வேண்டும். அர்ஜுனு இந்த உண்மைகளையெல்லாம் மனத்தில் எண்ணிப் பார்! பின்னர் செய்வதைச் செய்! பகுத்தறிவாளனாக இரு! என்னுடைய சொற்களில் நம்பிக்கை வை!

அர்ஜுனன் இவையெல்லாவற்றையும் கேட்டான். பிறகு ''நந்தகுமாரா! இந்தப் புனிதமான மிக உயர்ந்த நிலையை எல்லோருக்கும் கிடைக்கும்படி நீ ஏன் செய்யக்கூடாது. பிரேமையின் வடிவமென்றும், தயை நிரம்பியவனென்றும் நீ தம்பட்டமடித்துக் கொண்டிருக்கிறாயே! அப்படியிருக்க, ஏன் இந்த ஓரவஞ்சனை? இதைப் பாரபட்சம் என்றுதான் நான் சொல்வேன். இந்தப் புனிதமான நிலையை மெய்யறிவாளருக்கு மட்டும் அளிக்கிறாய்; அறிவில்லாதவர்களுக்குத் தருவதில்லை இன்னும் சொல்லப்போனால், பகுத்தறிவு இல்லாத பாமரர்கள் கடிகாரத்தின் ஆடிபோல இங்குமங்கும் அலைக்கழிக்கப்படுபவர்கள். இவர்கள்தான் உன்னுடைய அருளுக்கு அதிகத் தகுதியுள்ளவர்கள். மெய்யறிவுள்ள ஞானிக்கு எல்லாம் தெரியும் இவ்வுலகமெல்லாம் விஷ்ணுமயமாக அவன் அறிந்து கொண்டிருக்கிறான் அதை இன்னும் அவனுக்குப் புரியவைத்துக் கொண்டிருப்பானேன்? ஞானிகளுக்கு அருள் இனித் தேவையில்லையே?''

இதற்குத் கண்ணன்: ''ஆமாம்; மனிதர்கள் வழக்கமாக இப்படிப்பட்ட சந்தேகங்களால் ஆட்கொள்ளப்படுகிறார்கள். நீ மனித இனத்தின் சார்பில் நிற்கிறாய். அதனால், உன்னுடைய ஐயப்பாடுகளெல்லாம் மனித இனத்தின் ஐயப்பாடுகளே. உன்னுடைய சந்தேகத்தைத் தீர்ப்பதன் மூலம் மனித இனத்துக்கு நான் சொல்ல வேண்டிய செய்தியையும் சொல்லிவிட முடியும். கேள்! என்னை அடைய விரும்புபவர்கள் நான்கு வகைப்பட்டவர்கள். முதல் வகை, எப்பொழுதும் உடம்பை வருத்திக் கொண்டிருக்கும் நோய்களால் நலிந்தவன். இவன் ஆர்த்தன் எனப்படுகிறான். இரண்டாமவன், செல்வம், அதிகாரம் தான், தனதுசொத்து, வாரிசு என்ற போராட்டத்தினால் கவலைக்குள்ளானவன். இவன் அர்த்தார்த்தீ எனப்படுகிறான். மூன்றாமவன் மெய்ப்பொருளை உணர்வதற்கு வேட்கை கொண்டவன்; மெய்ந்

நூல்களையும் வேத உபநிடதங்களையும் படிக்கிறான்; ஆத்மீக சாதகர்களின் கூட்டத்திலே எப்பொழுதும் பழகு கிறான்; பெரியோர்களால் நன்னெறி என்று ஏற்படுத்தப் பட்டதன் வழிநின்று வாழ்கிறான்; எப்பொழுதும் இறைவன் திருமுன் சென்றடைய வேண்டும் என்ற ஆர்வத்தால் உந்தப்படுகிறான். இவன் ஜிக்ஞாஸு. நான்காமவன் ஞானி. இவன் பிரம்மம் என்ற மெய்ப்பொருளில் ஆழ்ந்திருப்பவன்.

''முதலில் சொன்ன ஆர்த்தன் தனக்குத் துன்பம் நேர்ந்த பொழுது வேதனையாலும் துயரத்தாலும் வருந்தும் பொழுது மட்டும் என்னைத் தொழுகிறவன். அவன் என்னை வேண்டிக்கொள்ளும் பொழுது அவ்வேண்டுகோளைக் கேட் கிறேன். அந்தக் குறிப்பிட்ட கஷ்டத்தை, துயரத்தை, வேதனையைப் பொறுத்தவரையில் அந்த வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன். இதே போலத்தான், பணத்துக்கோ பதவிக்கோ, செல்வாக்குக்கோ, உயர் அந்தஸ்துக்கோ அர்த்தார்த்தீ வேண்டும்பொழுது, அதைக் கேட்டு, அவன் ஆசைப்படுகிற அந்தக் குறிப்பிட்ட வரத்தை மட்டும் அளிக்கிறேன். ஜிக்ஞாஸு என்பவன், பயனில் கருத்தில்லா மல் கடமையைச் செய்யும் நிஷ்காம கர்மத்தைச் செய்வதற்கு வாய்ப்புக்களை என்னிடமிருந்து பெறுகிறான்; அதற்காக நல்லதொரு குருவை அடைவிக்கப்படுகிறான்; மெய் - பொய் இவற்றைப் பிரித்து அறியக்கூடிய கூரிய அறிவு அவனுக்குத் தரப்படுகிறது; இதனால் குறிக்கோளை அடைவதற்கு அவனுக்கு உதவுகிறேன். பலவாறாக அவனது கவனம் சிதறாமல் அவனைக் காப்பாற்றி, விடுதலை என்ற ஒரே இலட்சியத்தில் அவன் முனையும்படி செய்கிறேன்.''

''நான் கற்பதருவை ஒத்தவன்; யார் யாருக்கு என்ன வேண்டுமோ அதைக் கொடுப்பதே எனது வேலை. எனக்கு யாரிடத்திலும் முன் பகையோ பாரபட்சமோ கிடையாது. கொடுமையின் நிழல்கூட என்னிடம் படியாது. என்னை ஒருவரும் குற்றம் கூறவும் முடியாது. தனக்கு எதிர்ப்பட்ட எல்லாவற்றின்மேலும் சூரியகிரகணங்கள் சமமாக விழு கின்றன. ஆனால் ஒரு பொருள் ஏதேனும் மற்றொன்றின் பின்னால் மறைந்து நின்றால், உதாரணமாக, ஒரு மூடிய அறைக்குள் இருந்தால், அங்கு எப்படிச் சூரிய வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

விழும்? உயர்ந்த ஆசைகளை வளர்த்துக் கொள்ளுங்கள், உயர்ந்த நிலைகளைப் பெறுவீர்கள். வேண்டுபவனிடத்திலும், அவன் எவற்றை வேண்டுகிறான் என்பதிலும் அடங்கியிருக்கிறது குற்றமெல்லாம்; இறைவனுடைய நோக்கிலே அல்ல.''

''அர்ஜுனா! தன்னுடைய தன்மையாகி நிற்கின்ற என்னை வணங்குவதையும் தேடுவதையும் விட்டு விடுகிறான் மனிதன். எவ்வளவு மடமை? என்னை அடைவதற்கு அவன் கவலை கொள்ளவில்லை. மாறாக, அழிந்து மறையும் பொய்யான சிறிய சாதனைகளை நோக்கி ஓடுகிறான். இந்த வேடிக்கையான, முட்டாள் தனமான நடத்தைக்குக் காரணத்தை நான் உனக்குச் சொல்லுகிறேன். காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் கர்மோபாஸனை உடனுக்குடன் பலன்களைத் தரும். இங்கேயே இப்பொழுதே புலன்களால் அறியக் கூடிய தூலவடிவில் எது கிடைக்குமோ அதைத்தான் மனிதன் நாடுகிறான். பொதுவாக, மனிதன் மெய்ப்பொருளை அடைவது என்பது தன்னால் முடியாத ஒன்று என்று நினைக்கிறான். அதனால், புலன்களை வெல்லுவதால் வரும் முழு இன்பத்திலிருந்து விலகி' சின்னஞ் சிறு இன்பங்களில் ஏற்படும் கவர்ச்சியினால் ஈர்க்கப்படுகிறான்.''

''மெய்யறிவைப் பெறுவது ஓர் உள்மன வெற்றி; நீண்ட கடினமான போராட்டத்திற்குப் பிறகுதான் அதைப் பெறமுடியும். பொதுவாக, மனிதரிடத்தில் அதற்கு வேண்டிய பொறுமை இருப்பதில்லை. மேலும், அவர்கள் இந்தத் தூல உடம்புக்கு அதிகமானதொரு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார்கள். புலன்களை மகிழ்விக்கும் பொருள்களின் மூலந்தான் உடம்பு மகிழ்ச்சியோடு இருக்கமுடியும் என்று எண்ணி, அதனால், மனிதர் மெய்யறிவை நாடுவதில்லை. புலன்கள் தேவையல்லாத வழிகளுக்கு அந்த மெய்யறிவு அவர்களை அழைத்துச் சென்றுவிடுமே! அவர்கள் கர்மஸித்தியை விரும்புகிறார்கள் ஞானஸித்தியை விரும்புவதில்லை. அறிவின் தூண்டுதல்களால் மேற்கொள்ளப் பட்டவர்கள், புலன்களின் தூண்டுதல்களால் பீடிக்கப் பட்டவர்களை விடக் குறைவாக இருக்கிறார்கள். புலன்களிலேயே மனத்தைச் செலுத்தியவர்கள் மேற்போக்கான பார்வைக்கே எல்லோருக்கும் தெரிகிற பௌதிகப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினால் ஈர்க்கப்படுகிறார்கள். ஆத்மீகமான ஈடுபாடுடைய ஒரு சிலர் எங்கும் நிறை பரம்பொருளோடு ஒன்றிவிடும் போது ஏற்படுகிற, தூலப் பார்வைக்குத் தெரியாத, நுட்பமான பேரானந்தத்துக்கு ஆசைப்படுகிறார்கள். அவர்களது பாதையே சரியான பாதை. கர்மோபாஸனை அல்லது காரியங்களை மட்டும் வழிபாடாகச் செய்து கொண்டிருப்பது அவ்வளவு சரியல்ல. தருமகாரியங்களின் மதிப்பை எல்லோருக்கும் புரியவைப்பதுதான் என்னுடைய வேலை. இத்தகைய தரும காரியங்கள் அவற்றிற்குரிய பகுத்தறிவோடு மேற்கொள்ளப் படவேண்டும்.''

''ஆனால், அர்ஜுனா! தருமத்தைப் புதுப்பிப்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்தப் பணிக்காகத்தான் நான் வந்திருக்கிறேன். அதுதான் சாதுர்வர்ண்யம் என்ற நால் வகைத் தொழிற் பகுப்பு. அதாவது, மக்களின் இயல்பு, செயல் இவற்றின்பேரில் அமைக்கப்படும் நான்கு வகைச் சமூகப் பிரிவு இந்த வர்ணம் என்ற சமூக அமைப்பு உலகத்தின் நடைமுறைக்கு மிகவும் இன்றியமையாதது. அதனுடைய ஆழ்ந்த பொருளை அறிந்துகொள்வது கடினம். அது மனிதரை மனிதரிடத்திலிருந்து பிரித்து அமைதியைக் கெடுத்து விடுகிறது என்று எண்ணிச் சிலர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்தால், உண்மை புலப்படும். வர்ணமுறை நல்லதல்ல என்று முடிவு கட்டுவது அறியாமையைத்தான் காண்பிக்கிறது. அத்தகைய முடிவுதான் குழப்பத்தை விளைவிக்கிறது. இந்தச் சமூக அமைப்பை உலக நன்மைக்காக நான் ஏற்படுத்தியிருக்கிறேன். ஒருவன் தனக்கு ஒத்துவரக்கூடியதும் நிறைவைத் தருவதுமான தொழிலில் ஈடுபடுவதற்கு வர்ண அமைப்பு உதவுகிறது. அது இல்லாமற்போனால், ஒரு கணம் கூட மனிதன் மகிழ்ச்சி காண முடியாது.''

''தொழிலில் வெற்றிபெற வர்ண அமைப்பு உயிர் மூச்சுப் போன்றது. ஸத்வகுணம் பொருந்தி, பரம் பொருளின் உண்மையை உணர்ந்து, தெய்வீக நன்னெறியோடு கூடிவளரும் வாழ்க்கையைப் பெருக்கி, தத்தம் மெய்யான தன்மையைக் கண்டு பேரின்பத்தை அடையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்க்கு உதவுகின்றவர்கள் பிராம்மணர் எனப்படுவர். ''முறையான அரசியல் அமைப்பு, சட்டம், நீதி இவற்றைப் பக்கலில் நின்று காத்து, அதே போல் நாட்டின் நலனையும் வளத்தையும் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற அற ஒழுங்கையும் காப்பாற்றி, கயவர்களையும் தீ நெறியாளர்களையும் கட்டுக்குள் அடக்கி, எளியவர்கள்' அல்லலுற்றவர்கள் இவர்களுக்கு வந்து உதவுகிறவர்கள் க்ஷத்திரியர்கள்.''

'' ஒருவரையறைக்குள் நின்று மக்களுக்கு அவர்களுடைய இன்பமான உலக வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் வைசியர்கள்.''

''தொண்டினால் மனித நல்வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு வலிமையையும் வாழ்வின் நரம்புகளையுமே கொடுக்கிறவர்கள் சூத்ரர்.

இந்த நான்கு வர்ணங்களையும் இப்படி நான் ஏற்படுத்தியிருக்கிறேன். இந்த வர்ணங்கள் அவரவர்களுக்கு ஏற்பட்ட கடமைகளை நன்கு செயலாற்றினால், மனித சமுதாயமே எல்லா வழிகளிலும் முன்னேற்றம் அடையும். இந்த அமைப்பின் மூலம், தொழில்கள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. தனியொரு மனிதன் மகிழ்ச்சியோடு இயைந்த சமூக வாழ்க்கையை வாழ்கிறான். அவனுக்குப் பயமோ துயரமோ உண்டாவதில்லை. பாரத நாட்டிற்கு இறைவன் பாலித்த அருளுக்கு வர்ண முறையே ஒரு சான்று.''

''பாரத நாட்டு மக்கள் உண்மையிலேயே அருளப் பெற்றவர்கள் ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு செயலையும் இறைவனுடைய ஆணையை நிறைவேற்றுவதாகவும் அவனுடைய அருளுக்கு வழியாகவும் எண்ணுகிறார்கள். இந்தக் குறிப்பு சிந்திக்கத் தகுந்தது. இது ஒரு முக்கியமான பிரச்னை. இறைவனது கட்டளை இன்று புறக்கணிக்கப்படும் பெருத்த அபாயத்தில் இருக்கிறது. நாடாள்பவர் இந்த வர்ண அமைப்பின் முகப்பை மாற்றிவிட்டால், அவர்கள் எதற்காகப் பாடுபடுகிறார்களோ அந்தப் பொதுநலம் கிட்டாமற் போய்விடும்.

இந்த வர்ண முறையினால்தான் பாரதநாடு இந்த அவல நிலைக்கு வந்தது என்று பலர் வாதிக்கிறார்கள்;

கீ — 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்தப் பேர்வழிகள் சிறிது நேரம் சும்மா உட்கார்ந்து, "இந்த நாடு வர்ண அமைப்பினால் இதுவரை தப்பிப் பிழைத்திருக்கிறதா? இந்த அமைப்பு வலுவிழந்து விட்டதால் நாடு இந்த அவல நிலைக்கு வந்திருக்கிறதா?" என்ற கேள்விகளை 'ஆராய வேண்டும். பின்னர், அவர்களுடைய முடிவின் பேரில். வர்ணங்களை விட்டுவிட வேண்டும் என்று யோசனை சொல்லலாம். நடுநிலைமையில் நின்று ஆராயாமல் வர்ணஅமைப்பைப் பற்றி அவர்கள் குறை சொல்லும்பொழுது அந்தக் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்க முடியாது."

"இந்த அமைப்பு சரியான வழியிலிருந்து தப்பிப் போய், தவறான பாதைகளிற் சென்று கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். இதைப் பல பெரியவர்களும் கவனித்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் காரணத்தினால் மட்டும் அதை முழுவதும் அப்படியே தூக்கி எறிந்து விட முடியாது. கை செய்யவேண்டிய வேலையைக் கால் செய்கிறது என்பதாலோ கால் செய்யவேண்டிய வேலையைத் தலை செய்கிறது என்பதாலோ கைகளையும் கால்களையும் வெட்டி விடுவது அறிவுடைமை ஆகாது. அமைப்பையே ஒழித்து விடுவதைவிட, தவறுகளைத் திருத்த முயலுவதே சரி."

"இந்தக் குழப்பத்துக்கும் அமைதியின்மைக்கும் வர்ண அமைப்பு காரணமல்ல. அது ஒரு திட்டமில்லாமல் வளர்ந்து விட்டதுதான் தவறு. பலவகைப்பட்ட மனிதர்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு அது ஒரு விளையாட்டுப் பொருளாகிவிட்டது. முதன் முதலில் இருந்த அதனுடைய ஒழுங்கையும் இசைவையும் அது இழந்துவிட்டது. இந்த அமைப்பு பாரத நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே கூட இன்றியமையாதது. பாரத நாட்டைத் தவிர வெளி நாடுகளில் இந்த அமைப்பு இல்லையென்று சொல்லிவிட முடியாது பெயர் வேண்டுமானால் வேறாக இருக்கலாம்; செயல்படு முறை என்னவோ ஒன்றுதான். அந்த நாடுகளிலேயும் நான்கு வகுப்புக்கள் காணப்படுகின்றன: (1) சிக்ஷக வர்க்கம் (2) ரக்ஷக வர்க்கம் (3 வணிக வர்க்கம் (4) ச்ராமிக வர்க்கம் (அதாவது, ஆசிரியர்கள், நாட்டைக் காப்போர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகர், சேவகர்). ஆனல் பாரத நாட்டிலே வர்ணங்கள் பிறப்பினுல் நிச்சயிக்கப்படுகின்றன; பிறநாடுகளில் அவை அவரவர் செய்யும் தொழிலினுல் நிச்சயிக்கப்படுகின்றன. இதுதான் வேறுபாடு.''

''முதலாவது வர்ணமாக ஏற்படுத்தப்படும் பெருமையைப் பெற்ற அந்தணரிடையேயும் பலர் அவர்களுக்குரிய நடையை விட்டு விலகி, கீழான வழிகளில் தடுமாறிச் சென்றுவிட்டநிலை காணப்படுகிறது. இதேபோல, நான்காவது வர்ணமான சூத்ரர்களிடையேயும் பலர் புனிதமான இலட்சியங்களாலும் உயர்ந்த ஆத்மீகமான நோக்கங்களாலும் உந்தப்பட்டு, மெய்யுணர்வைப் பெறுவதற்கு வழியாக உள்ளத் தூய்மையை அடைய முயலுவதைப் பார்க்கிறோம். இதெல்லாம் நடக்கக் கூடியவைகளே என்ற காரணத்திற்காக, மனித சமுதாயத்தில் வர்ண அமைப்பே பயனற்றது என்று முடிவுகட்டுவது முறையாகாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 6

தெய்வீக விஷயங்களில், சமுதாயத்தையும். தனி மனிதனையும் காப்பதில் மனத்தூய்மைதான் முதன்மையானது என்றாலும், வர்ண அமைப்பும் முக்கியமானதே. நையாண்டி செய்வதாலோ, அலசிக் குற்றங் காணுவதாலோ, கண்டனம் செய்வதாலோ அதைத் தகர்த்து எறிந்துவிட முடியாது. ஏனெனில், வாழ்க்கை நலன் என்பது எல்லோருக்கும் வேண்டிய ஒன்று. அதனால் ஆட்சியினரும் அறிவாளிகளும் வெறுப்பையும் காழ்ப்பையும் விட்டுவிட்டு, அமைதியாகச் சாதக பாதகங்களை ஆழ்ந்து ஆராய்ந்து, இந்த வர்ண அமைப்பை ஒரு நல்ல ஒழுங்கிற்குக் கொண்டுவர வேண்டும். இதுதான் நாம் இப்பொழுது செய்யவேண்டியது. பொறாமை கொண்டவர்கள், அறியாதவர்கள் இவர்களுடைய பொருளில்லாத மறுப்புரைகளை, நாலும் தெரிந்தவர்களும் அறிவின் மிக்க படிப்பாளிகளும் ஆதரிப்பது முறையாகாது. சாதியை மறுப்பவர்கள் தாங்களே ஒரு சாதியை உண்டாக்கிக் கொள்கிறார்கள்; சமயத்தை மறுப்பவர்கள் தாங்களே ஒரு புது சமயத்தைத் தோற்றுவிக்கிறார்கள். மிகவும் அறிந்தவர்களேகூட வர்ண அமைப்புக்கு எதிரான மனப்போக்கை ஆராயாமலே வளர்த்துக்கொண்டு, உண்மையை அறியாத மற்றவர்களைப் போலவே பேசுகிறார்கள். இதுதான் அவல விந்தை!

ஒவ்வொரு பொருளும் ஓர் எல்லையை உடையது; அந்த எல்லையை அது மீறும் பொழுது அல்லது அதை உடைத்து வெளிவரும் பொழுது அது அழிந்து படுகிறது. ஒரு பொருளின் தனித்தன்மை என்பது என்ன? அதன் இயல்புக்கும் வடிவத்துக்கும் உள்ள இசைவுதான். வடிவம் இருந்து இயல்பு இல்லாது போனால், அது பொய்யாகி விடுகிறது; மாயத்தோற்றமாகி விடுகிறது. இதுபோலவே, ஒவ்வொரு சமூக வகுப்பும் அதற்கென்று தனி வரை முறைகள் இல்லையென்றால், அது இன்ன வகுப்பு என்று எப்படி இனங்கண்டு கொள்வது? இதுவோ அதுவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

என்று தெரியாதபடி இனந்தெரியாத பிண்டமாகி, குழம்பிப் போன கும்பலாகிவிடும். இந்த அமைப்பு தெய்வத்தினுல் தீர்மானிக்கப்பட்டது; அதனுல் அது பல பல தலைமுறை களாக மாமுனிவர்களாலும், மகரிஷிகளாலும், பெரியோர் களாலும் வளர்க்கப்பட்டுத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பட்டு வந்திருக்கிறது. ஆனுல் இரும்பு யுகமான இந்தக் கலியுகத்தில் மிக மூளையுள்ளவர்களுங்கூட இது வீண்குப்பை என்று இதன் சீர்மையுணராது தள்ளி விடுகிறுர்கள்.

ஆழ்ந்த ஆராய்ச்சி இல்லாமல், பகுத்துக் கூர்ந்து அறியாமல், தனிமனிதனின் நோக்கில், புறத்தே இருந்து இந்த வர்ண அமைப்பைப் பார்த்தால், சரியான தீர்ப்பு களுக்கு அவர்கள் எப்படி வரமுடியும்? உட்பார்வையும், முழு நோக்கும் ஆராயும் மனப்பான்மையும் இருந்தால், வர்ண அமைப்பின் புனிதத் தன்மையும் மதிப்பும் உங்களுக்குத் தெரியவரும். பாலில் மறைந்து இருக்கும் வெண்ணெய் கடையும் பொழுது வெளிப்படுவது போல, பகுத்தறிவோடு கூர்ந்து ஆராயும் பொழுதுதான் நான்கு வர்ணங்களின் குறிப்பான மதிப்பு வெளியாகும். அப்பொழுது, காரணமில்லாத வெறுப்புக்கள் நீங்கும்; உண்மை தெளிவாகும்.

நான்கு வர்ணங்களும் ஒரே உடம்பின் பல்வேறு உறுப்புக்கள் போன்றவை. ஒரே தெய்வீக உடலிலிருந்து அவை வெளிப் போந்திருக்கின்றன. — அந்தணர்கள் இறை வனின் முகத்திலிருந்தும், க்ஷத்திரியர்கள் தோள்களிலிருந் தும், வைசியர்கள் தொடைகளிலிருந்தும், சூத்ரர்கள் கால் களிலிருந்தும் உண்டாஞர்கள், இந்த விவரங்களெல்லாம் ஓர் ஆழ்ந்த உட்பொருளுடையன என்பது உண்மை தான்.

மெய்யறிவின் அடிப்படை உண்மைகளை யார் ஒரு குருவைப் போல எடுத்துச் சொல்லிக் கொடுக்கிறுர்களோ அவர்கள் தெள்வத்தின் குரல், அவர்களே அந்தணர்கள். தோள் வலிமை உள்ளவர்கள் உலகத்தின் பளுவைத் தாங்கு கிறுர்கள்; அவர்கள்தான் க்ஷத்திரியர்கள். தூண்களைப் போல சமுதாயக் கட்டடம் வைசியர்களால் நிறுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கிறது. அதனால், உள்ளுறையாக, தெய்வ புருஷனின் தொடையிலிருந்து பிறந்ததாகச் சொல்லப் படுகிறது. பல அலுவல்களின் பொருட்டு அங்குமிங்கும் ஓடியாடும் கால்களைப் போல, சமுதாயத்தின் ஆதாரமான வேலைகளைச் செய்வதில் சூத்ரர்கள் எப்பொழுதும் ஈடுபட் டிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு வர்ணத்தைச் சேர்ந்தவரும் தமது வேலையைச் செய்வதில் சுணக்கம் காண்பித்தால்கூட சமூகத்தின் அமைதியும் மகிழ்ச்சியும் கெட்டுவிடும். ஓர் உடம்பில் எல்லா உறுப்புக்களும் எப்படிச் சமமாக அவசியமோ அப்படியே எல்லா வர்ணத்தாரும் முக்கியமான வர்களே, மதிப்புடையவர்களே. உயர்ந்தவர்கள், தாழ்ந் தவர்கள் என்பது கிடையாது. கோபத்தில் உடலின் எல்லா உறுப்புக்களும் வயிற்றுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய் தால் எந்தத் தீங்கு நேருமோ அவ்வளவு தீங்கு சமுதாயத் தில் வெறுப்பினாலும் போட்டியினாலும் நேரும்.

சர்க்கரைப் பொம்மை எல்லா இடத்திலும் இனிக்கும். அதன் தலையைக் கிள்ளிச் சுவையுங்கள், அது இனிக்கிறது. ஒரு காலை எடுத்துச் சாப்பிடுங்கள், அதுவும் இனிக்கிறது. தலையைப் போலவே காலும் இனிக்கிறது. அப்படியிருக்க ஒரே தெய்வத்தின் பலவேறு உறுப்புக்களான வர்ணங்களில் உயர்வு, தாழ்வைப்பற்றி எப்படிப் பேச முடியும்? உறுப்புக்கள்தாம் வெவ்வேறு; ஒரே சிவப்பு இரத்தம்தான் அவற்றிலெல்லாம் ஓடி உயிர்ப்பிக்கிறது. தோளுக்கென்றும், காலுக்கென்றும் தலைக்கென்றும் தொடைக்கென்றும் தனித் தனி வகையான இரத்தம் கிடையாது. வர்ண அமைப்பு வேதங்களால் நிறுவப்பட்டிருக்கிறது. ஏதோ மனிதனால் கற்பிக்கப்பட்ட செயற்கை விதியல்ல. ஆகவே அதைப்பற்றி யோசியாமல், மனம் போனபடி பேசி வேற்றுமைகளை யும் காழ்ப்புணர்ச்சிகளையும் உண்டாக்குகிறவர்கள் அவர் களுடைய அறியாமையைத்தான் காண்பித்துக் கொள் கிறார்கள்.

வர்ண அமைப்பை ஒழித்துவிடுவதுதான் 'மனித சமுதாயத்துக்கு நன்மை தரும் என்று வாதிடுபவர்கள்தாம் மனிதனுடைய நன்மையை வளர்ப்பதில் அக்கறை கொண் டவர்கள் போலவும், மற்றவர்களுக்கு அந்த அக்கறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதது போலவும் ஒரு தோற்றத்தை உண்டாக்குகிறார்கள். வர்ண அமைப்பு நல்லது என்று நம்புகிறவர்கள் உண்மையில் மனிதனுடைய வீழ்ச்சிக்குத் தாம் மும்முரமாக வழி செய்கிறார்கள் என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இரண்டுமே தோற்றங்கள்தாம். இதுவரையில் வர்ணங்களை ஆதரிப்போர்கள் உண்மையில் மனித நலனை வளர்ப்பதில் மற்றவர்களைவிட அதிக அக்கறை கொண்டவர்கள். வர்ணங்கள் போய்விட்டால் நாடு காப்பாற்றப்பட்டுவிடும் என்று மற்றவர்கள் எண்ணுகிறார்கள். இது ஒரு தவறான கருத்தாகும். நிறை குறைகளை நடுநிலைமையில் நின்று கவனமாகச் சீர்தூக்கிப் பார்த்தால், இந்த வெறுப்பையும் பகையையும் கொண்ட தவறான பிரசாரம் முற்றுப் பெறும். அதன் பிறகு வர்ண முறையைப் பற்றிய மக்களின் மனநிலையில் பெரிய மாறுதல் உண்டாகும்.

வெறுப்பு வளர்வதால் யாருக்கும் இலாபம் இல்லை. எல்லோரும் சமம் என்ற குறிக்கோளைத் தொடர்ந்து போவது, தாகத்தைத் தணித்துக்கொள்ளக் கானல் நீரை நோக்கி ஓடுவதை ஒக்கும். அதிருப்தியைத்தான் இது வளர்க்கும். ஆட்சியாளர் இப்பொழுது கூடி மக்களின் பிரதிநிதிகளான அறிஞர்கள், அநுபவமிக்க பெரியோர்கள் இவர்களைக் கலந்து, இந்தப் பழைய சமூக அமைப்பின் மதிப்பை விவாதிக்க வேண்டும். இப்படியல்லாமல், மேலோட்டமாகத் தெரிகிற சில இசைகேடுகளைப் பார்த்துவிட்டு, மொத்த வர்ண அமைப்புமே நஞ்சு என்று முடிவு கட்டிப் பதறுவார்களேயானால், அது அவர்களுடைய அறியாமையையே காண்பிக்கும். ஆட்சியாளர்களாகட்டும், அறிஞர்களாகட்டும், இரு சாராருமே மக்களுடைய நலனைத்தான் மனத்தில் கொண்டிருக்கிறார்கள். ஏன், வர்ண முறையே இந்த ஒரே நோக்கத்தோடுதான் பிறந்தது. அது கடுமையாக நிந்திக்கப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் அறிவுடைப் பெரியோர்களின் அறிவுரைகளைத் தவறாமல் பின்பற்றவில்லை என்பதுதான்.

ஒரு சின்ன உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரே வெடியில் இலட்சக்கணக்கானவர்களைத் துடைத்து அழித்துவிடக்கூடிய குண்டுகளை சில நாடுகள் செய்திருக்

கின்றன. இது. தீமை என்று தெரிந்திருந்தும், அந்நாடுகளின் ஆட்சியாளர்களே இதை ஆதரிக்கிறார்கள். அவர்களது மனம் போனபடியெல்லாம் இந்தக் குண்டுகளை உபயோகித் தால் எல்லாரும் நாசமாகிவிடுவார்கள். சீர் குலைவு வந்துவிடும் என்று அச்சம் ஏற்பட்டால், அப்பொழுது தற்காப்புக்காக மட்டும் இவற்றை உபயோகிக்கலாம். உலகை அழித்து விடுவது ஆயுதபலத்தின் நோக்கமல்ல; அவரவர் நாட்டையும் அதன் பண்பாடுகளையும் காப்பதுதான் நோக்கம். இது போல, வர்ணமுறையும் நாட்டையும் அதன் பண்பாட்டை யும் காப்பதற்கேற்ற வலுவான போர்க் கருவியாகத்தான் கருதப்படவேண்டும்; வரைகளும் முறைகளும் கட்டுப்பாடு களும் பரிந்துரைகளும் எல்லாமே மக்களை அழிவிலிருந்து காப்பதற்குத்தான். இவையெல்லாம் எப்படி ஏற்படுத்தப்பட் டிருக்கின்றனவோ அதே முறையில் போற்றப்பட வேண்டிய பயிற்சிகள். நேராகவும் கண்டிப்பாகவும் இவை பின்பற்றப் படவேண்டும். அவற்றைக் கொண்டு செலுத்தும் கரை வரை முறைகளைச் சிறிதும் கவனியாமல் மனம் போனபடி அவற்றோடு விளையாடுவது, பெருஞ் சீர்குலைவை வரவேற்ப தாகும்.

ஆகவேதான், மூத்தோர்களும், ஆட்சியாளர்களும், பேரறிஞர்களும், சமுதாயத் தலைவர்களும் இந்த அமைப்பைக் கண்காணித்து வளர்த்துக் காத்துக் கொடுத்தார்கள். இதை ஒருகணம் எண்ணிப் பாருங்கள். அப்பொழுது உண்மை பளிச்சிடும்; இந்த வர்ண அமைப்பு நல்லதா இல்லையா என்று தெரிந்து போகும். சமுதாயத்துக்கும் அழிவைத்தான் தரும் என்றால், அதை அவர்கள் வளர்த்திருப்பார்களா? அவர்கள் எல்லோருமே முட்டாள்கள் என்று நினைக் கிறீர்களா? அல்லது தற்காலத்துக் கல்வியறிவு அவர்களுக்கு இல்லை என்று சொல்கிறீர்களா? அல்லது அவர்களுக்கு மூளையில்லையா?

அன்று, அன்று. அவர்களுடைய அறிவும், படிப்பும், ஆன்மீக உயர்வும், ஆராய்ச்சி மனப்பான்மையும், சமூகப் பிரச்சினைகளைக்குறித்து அவர்களுடைய பாரபட்சமில்லாத மாசில்லா மனப்பான்மையும், இன்றைக்கு ஆயிரத்தில் ஒருவரிடத்தில்தான் காணமுடியும். தங்கள் அறிவுச் சக்தியையும் அறவலிமையையும் முழுதும் உலக நன்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகக் கொடுத்துவிட்டு அத்தகைய பணியைத் தங்கள் உயிர் மூச்சாகக் கொண்டிருந்த துறவிகள், மனித சமுதாயத்துக்கு உண்மையான மனநிறைவைத் தர முயன்ற யோகிகள், ஆத்மீக வீரர்கள், மகரிஷிகள் இவர்களெல்லாம் தாம், இந்தப் ''புதுயுக மனிதர்'' தாக்கிப் பேசும் சமூக அமைப்பை வகுத்தவர்கள். வாய்சோராமல் பேசினாலே எல்லா நன்மையும் வந்துவிடும் என்று மனப்பால் குடித்துக்கொண்டே, அவர்கள் ஏங்குவதாகச் சொல்லிக் கொள்ளும் அந்த நன்மையைத் தாங்கள் செய்யும் காரியங்களால் குழிதோண்டிப் புதைக்கிறார்களே இன்றைய சமூகச் சீர்திருத்தவாதிகள்! இவர்களைப் போன்றவர்களல்ல நம் பெரியோர்கள். இதைப்போன்ற கயமையான தந்திரம் நமது பழங்கால ரிஷிகளுக்குத் தெரியாது தற்காலக் கருத்துக்களும் திட்டங்களும் உள்ளே ஓட்டையாக வெறும் வாயளவில் இருக்கின்றன. தற்போதைய திட்டங்கள் எல்லாம் ஆகாயக் கோட்டைகள்தான். திட்டம் போட்டவர் களின் தலைக்கனத்தை வளர்க்கின்றனவேயன்றிப் பிறருக்கு அவற்றில் பெரும் பொருள் ஒன்றும் இருப்பதாகத் தெரிய வில்லை. வேறோரிடத்தில் கட்டடவேலை நடந்து கொண் டிருக்கும் பொழுதே இந்தக் கோட்டைகள் மற்றொரு பக்கத்தில் சரிந்து விழுந்து கொண்டிருக்கின்றன!

உயிருக்கு எப்படி உடம்போ அப்படியே இறைவனுக்கு இந்த உலகம். உடம்பில் எந்தப் பகுதியில் எது நடந்தாலும் அது உயிரையும் பாதிக்கின்றது. இவ்விதமே, உலகத்தின் எந்தப் பகுதியில் எது நடந்தாலும் அது இறைவனை எட்டுகிறது. அதை அவன் உடன் உணர்ந்து அதற் கேற்றவை செய்கிறான். நீங்கள் எப்படி உடம்பின் எல்லாப் பகுதிகளும் செம்மையான வலுவோடு இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதுபோலவே இறைவனும் ஒவ்வொரு நாடும் உலகின் ஒவ்வொரு பகுதியும் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் இருப்பதைப் பார்க்க விரும்புகிறான். தன்னுடைய சொந்தப்பகுதியாக இருக்கின்ற எந்த நாட்டையும் அவன் துன்புறுத்துவானா? துன்புறுத்தத் தான் முடியுமா? இறைவனைப் பொறுத்த எல்லா நடப்பு களிலும் எல்லோரும் ஒரே வகையான உரிமையுள்ளவர்கள்; எல்லோரும் சரி நிகர் சமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும், உடலின் ஓர் உறுப்பு மற்றோர் உறுப்பின் வேலைகளைச் செய்ய முடியாது. இதுபோலவே, ஒவ்வொரு வர்ணமும் சமூகப் பணிகளில் தனக்கென்று ஏற்பட்ட பங்கைச் செய்து முடிக்க வேண்டும். நாட்டின் நன்மைக்குத் தன்னாலியன்றதைத் தர வேண்டும். உடம்புக்குப் பல நிலைகள் இருப்பது போல, சமூகத்தில் வர்ணங்கள் இருக்கின்றன. எல்லோருமே பண்டங்களை விற்க வந்துவிட்டால், வாங்குவது யார்? எல்லோருமே போருக்குப் புறப்பட்டுவிட்டால், அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு வசதி, உணவு, போர்க்கலம், உடை முதலிய வற்றைத் தயாரித்துக் கொடுப்பது யார்? அதனால், ஒவ்வொருவரும் சமூகப் பணியில் தமக்கென்று வாய்த்த பங்கினை முடித்துக் காட்டி, அமைதியையும், இசைபட வாழ்தலையும், மகிழ்ச்சியையும் உறுதி செய்துகொள்ள வேண்டும். அதுதான் அறிவுபொருந்திய வழி; சமுதாயத்தின் தலை சிறந்த அமைவு.

முக்கியமான வேலைகளைப் பார்ப்பதை விட்டு, ஏதோ வர்ணங்கள்தான் வளர்ச்சிக்குப் பெரிய தடைகள் என்று எண்ணிக்கொண்டு, உட்கலகத்தில் மக்கள் ஈடுபடுகிறார்கள் தங்களுடைய உடம்பையே கட்டுக்குள் அடக்கி வைக்க முடியாத மனிதர்கள் ஒருநாட்டை எப்படி அடக்கி வைத்தி ருப்பார்கள்? நீண்ட காலமாக முன்னோர்களால் வளர்க்கப் பட்ட வர்ண அமைப்பைப் பேணிப் போற்றுவதுதான் நாம் செய்யவேண்டிய மிக்க நல்ல பணி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வர்ணங்களை அமைக்கும்பொழுது இறைவன் ஒரு பாரபட்சமும் காட்டவில்லை இறைவனுக்கு அப்படியொரு குணம் அவனிடம் கிடையாது. சிலர் கேட்கிறார்கள், இந்த வேற்றுமைகளெல்லாம் எதற்கு என்று.

இல்லை, தாழ்ந்தோரென்றும் உயர்ந்தோரென்றும் அவன் எண்ணுவதில்லை. ஒரு சர்க்கரைக் கட்டியைப் போல், அவன் எங்கும் இனியவன். உண்மையை உணராத மனிதர் களுக்குத்தான் வேற்றுமைகளும் பிரிவுகளும். உண்மை யல்லாத பொய்யோடு தம்மை ஒன்றுபடுத்திக்கொண்டு விட்ட மக்களின் மயக்கங்கள் அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உதாரணத்தைப் பாருங்கள்:- ஒரு தாய்க்கு நான்கு குழந்தைகள். ஆனாலும் தொட்டிலில் இருக்கும் கடைசிக் குழந்தைக்கு அவள் காட்டும் பரிவும் பாராட்டும் மற்ற மூன்று குழந்தைகளுக்குக் காட்டுவதில்லை. அந்தக் குழந்தை கேட்காவிட்டாலும் கூட, அதற்கு உணவூட்ட அவள் எப்பொதும் கவனமாக இருக்கிறாள். மற்ற மூன்றும் உணவுக்கு அவளைத் தொந்தரவு செய்ய வேண்டியிருக்கும். பொம்மைகளுக்காக அடம் பிடிக்க வேண்டியிருக்கும். இதைப் பார்த்துவிட்டு, அவள் ஒரு பொல்லாத தாய் என்றோ, பாரபட்சமுள்ள தாய் என்றோ நீங்கள் முடிவு சொல்லி விட முடியாது. குழந்தையின் சக்தியையும் தகுதியையும் ஒட்டித் தாய் தன் வேலைகளை அமைத்துக் கொள்ளுகிறாள், இது போலத்தான் உலகம் முழுதும் அவனுடையது என்றாலும், அவனது குழந்தைகள் என்றாலும், அவரவர் சக்திக்கும் தகைமைக்கும் ஏற்பச் சமூகத்தின் பணி என்ற பொறுப்பில் பங்குகளை அவரவர்களுக்கு இறைவன் பிரித்துக் கொடுத்திருக்கிறான். இத்தகைய சுயநலமில்லாத, உளமார்ந்த, எளிய, எப்பொழுதுமே இன்ப மயமான இறைத்தத்துவத்திலே குற்றங் கூறுவது சூரியனிடத்திலே இருட்டு இருப்பதாகக் கூறுவது போலத்தான். இருளும் சூரியனது ஒளிக்கதிர்களும் சேர்ந்து இருக்கும்? சூரியன் எப்படி இருளுக்கும் இடமாகும்? சூரியனைப் பற்றி இப்படியெல்லாம் தூற்றுபவர்கள் சூரியனைப் பற்றி அறியாதவர்கள். அது முழுமடமை; கலப்பில்லாத அறியாமை.

உண்மையில், ஆத்மீக நோக்கோடு பார்த்தால், இந்த வர்ணங்களைப் பற்றி மற்றொரு வகையிலும் எடுத்துக் கூறலாம். மெய்ப்பொருளான ப்ரம்மத்தைச் சிந்தனை செய்வதில் ஊன்றியிருப்பவர்கள் பிராம்மணர்கள் என்றும், பொய்ம்மையை எதிர்ப்பவர்கள் க்ஷத்ரியர்கள் என்றும், பொய்யையும் மெய்யையும் முறையாகப் பகுத்தறிகின்றவர்கள் வைசியர்கள் என்றும், எப்பொழுதும் உழைத்துக் கொண்டு அன்றாட வாழ்க்கையில் உண்மையே பின்பற்றுகிறவர்கள் சூத்ரர்கள் என்றும் சொல்லலாம். வர்ணங்கள் இந்த முறையில் செயல்பட்டால்தான் மனித சமுதாயத்தின் மகிழ்ச்சியை நிறைந்த அளவில் பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி விட்ட இடத்தில் தொடரலாம். கண்ணன் அர்ஜுனனைப் பார்த்து:— அவரவர் குணத்தையும் தொழிலையும் அடிப்படையாக வைத்து நான்கு வர்ணங்கள் என்னால் ஏற்படுத்தப்பட்டன. அவைகளைப் பொறுத்த வரை நான் ஏதோ செய்து கொண்டிருக்கிறேன் என்றாலும், உண்மையில் நான் ஒன்றும் செய்யாமலே இருக்கிறேன். அடிப்படையான தத்துவத்தைக் கூர்ந்து பாருங்கள்! அப்பொழுது இயற்கையில் உணர்வற்ற ஜடப்பொருளான கர்மம் என்ற செயலானது, உணர்வு மயமான ஆத்மாவைத் தொட முடியாது என்பதை உணர்வீர்கள். ஆத்மா இயற்கை யாகவே எந்தப் பற்றும் இல்லாதது. அதற்கு ''தான் செய்பவன்' என்ற எண்ணமோ, தன்னுடைய தேவைகளை யும் உடமையைகளையும் பற்றிய உணர்வோ கிடையாது. ''நான்'' என்பதும் ''எனது'' என்பதும் அதற்கில்லை. ஏனெ னில் இவை அறியாமையின் அடையாளங்கள். அறியாமைக்கு ஆட்பட்டவர்கள்தான் ''தான்'' என்றும் ''தனது'' என்றும் எண்ணி அவதிப்படுவார்கள். சாதாரணப் பார்வைக்கு நான் ஏதோ காரியங்களைச் செய்து கொண்டிருப்பவன் போலத் தோன்றினாலும், உண்மையில் எனக்கு ஒரு காரிய மும் கிடையாது!''

''இது மாத்திரம் அல்ல. ஒரு காரியம் முடிந்தவுடன் அது, செய்தவனைப் பாதிக்காமல் நின்று விடுவதில்லை. உண்மையில், அது முடிவுறுவதும் இல்லை காரியங்கள் பலனைக் கொடுக்கின்றன. காரியங்களின் பலன்கள் அவற்றில் ஓர் ஆசையை வளர்க்கின்றன. இது இன்னும் செய்ய வேண்டும் என்ற துடிப்பை உண்டாக்குகின்றது. இத்தகைய துடிப்புக்கள் மேலும் பிறவிகளைத் தருகின்றன. இவ்வாறு, நம்முடைய வினைகள் பிறப்பு இறப்பு என்ற சுழலில் நம்மை இழுத்து விடுகின்றன. இது ஒரு கொடிய நீர்ச் சுழல் மாதிரி; சுழற்றிச் சுழற்றிக் கடைசியில் ஆழத் தில் கொண்டு அமுக்கி விடும்.''

''அர்ஜுனா! இன்னொரு விஷயத்தையும் நன்றாகக் கேட்டுக் கொள்! வினைகள் மட்டும் நம்மைக் கட்டிவிடும் வலிமையுடையனவல்ல; 'நான் வினை செய்பவன்' என்ற எண்ணமே பற்றையும் பாசத்தையும் உண்டு பண்ணுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. உதாரணமாக: ஏதோ ஓர் எண்ணோடு சேர்ந்தால்தான் சுன்னத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது. வினைகள் சுன்னம்; ''நான் செய்பவன்'' என்ற எண்ணம் செயலோடு சேர்கிறது; அப்பொழுது அது கட்டுக்களைத் தோற்றுவிக்கிறது. ஆகவே, அர்ஜுனா! ''நான்'' என்ற எண்ணத்தை விட்டுவிடு! அப்பொழுது நீ செய்யும் செயல்கள் உனக்கு ஒருபொழுதும் தீங்கு செய்யமாட்டா. பலன்களுக்கு ஆசைப்படாமல் செய்யப்படும் செயல்கள் துடிப்புக்களை ஏற்படுத்தா. அதாவது, மறுபடி பிறப்பு எடுப்பதற்கு வேண்டிய துடிப்பும் இருக்காது கடந்த காலத்தில் இந்தப் பெருநோக்கத்தை மனத்தில் கொண்டுதான் நல்லவர்கள் காரியங்களைச் செய்தார்கள். எந்தக்காரியத்தையும் ''தாங்கள் செய்கிறவர்கள்'' என்றும், ''செய்ததின் பலனை அநுபவிக்கிறவர்கள்'' என்றும் கருதியதில்லை. ஆண்டவன் செய்தான், அதன் பயனை அவன் கொடுத்தான், அதை அவனே அநுபவித்தான் என்பதுதான் அவர்களுடைய உறுதியான எண்ணம். உலகத்தின் மதிப்பு, ஒன்றைச் சார்ந்து நிற்பது; சுதந்திரமான இருப்பு அதற்குக் கிடையாது. இதுதான் அவர்களுடைய நம்பிக்கை. அர்ஜுனா! நீயும் அந்த நம்பிக்கையை வளர்த்துக்கொள்! அந்த உறுதியைப் பெறு! இப்படிச் செய்தால் உன்னுடைய மனது தூய்மை பெற்றுத் தெளிவுறும்.''

''இன்னும், செய்வது (கர்மம்), ஏறு மாறாகச் செய்வது (விகர்மம்), செய்யாமலே இருந்து விடுவது (அகர்மம்) என்பனவற்றின் வேற்றுமையை நீ தெரிந்து கொள். இந்த வேற்றுமையில் சிறப்பான சில குறிகளை நான் உனக்குச் சொல்லுகிறேன். கேள்! இதைக் குறித்துப் பல சாதகர்கள் குழப்பமடைகிறார்கள். எல்லோருமே இந்த வேற்றுமையைப் புரிந்துகொண்டு விடுவதில்லை, தன்னுடைய தொழில் எதுவோ அதைச் செய்வது கர்மம் என்றும், அப்படியல்லாமல், மெய்யறிவைப் பெறுவதற்காகச் செய்யும் காரியங்களெல்லாம் விகர்மம் என்றும், அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரியத்தைச் செய்தாலும், அப்படிச் செய்யும்பொழுது எவ்வளவுதான் நீ உன்னுடைய ஆற்றலையெல்லாம் பயன் படுத்தியிருந்தாலும், அறியாமையின் இருட்டிலும் குழப்பத்திலும் அது செய்யப்படுமானால் அதனுடைய பலன் கவலையும், துயரமும்,, திண்டாட்டமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகத்தான் இருக்கும். -சீர்மையையும் சமநிலையையும் அமைதியையும் அது ஒரு நாளும் கொடுக்காது. செய்யாமலே செய்வதையும், செய்து கொண்டே செய்யாமல் இருப்பதையும் மனிதன் அடைய வேண்டும். அதுதான் மெய்யறிஞர்களுக்கு அடையாளம்.

காரியம் செய்யாமல் சும்மா இருப்பதுதான் அகர்மம் எனப்படும் என்பது சிலர் கருத்து. ஆனால், இன்னும் எளிதான சொற்களில் அதை விளக்கினால், கைகால் போன்ற உறுப்புக்கள், புலன்கள், அறிவு, உணர்வுகள், உணர்ச்சிகள். மனது இவற்றின் வேலைகளெல்லாம் கர்மம் என்று அறிவாயாக! இங்கு அகர்மம் என்பதன் பல பொருள்களுள் செயலின்மை என்பதும் ஒன்றுதான். அதாவது, அது ஆத்மாவின் தன்மையாகும். ஆகவே, அகர்மம் என்பதற்கு மெய்ப்பொருளுக்குரிய தன்மையான தன்னிலைநிற்றல் என்று பொருள்.

ஒரு பஸ்ஸிலோ, ரயிலிலோ அல்லது படகிலோ பயணம் செய்யும்பொழுது, வெளியில் இரு மருங்கிலும் இருக்கும் மலைகளும் மரங்களும் எதிர்த் திக்கில் ஓடுவது போலவும் நாம் தான் நகராமல் இருப்பது போலவும் ஒரு தோற்றம் உண்டாகிறது! தேர் ஓடும்பொழுது மலையிலும் மரத்திலும் இந்த ஓட்டத் தோற்றத்தை உண்டாக்குகிறது. இதுபோலத் தான், மெய்ந்நூல்களில் சொல்லப்பட்டிருக்கிற உண்மைகளை அறியாமல், புலன்கள், உடம்பு இவற்றின் வேலைகளையெல்லாம் மெய்ப்பொருளே செய்கிறது என்று தன்னை ஏமாற்றிக் கொள்கிறான். அப்படியானால், உண்மையில் அகர்மம் என்பதுதான் என்ன? காரியமில்லாமல் அமைந்திருப்பதுதான். ஆத்ம மெய்ப்பொருளின் அனுபவமே இந்த அப்பழுக்கற்ற அமைதிதான். அதுதான் உங்களுடைய சொந்த இயல்பாகும். புறச்செயல்களை மட்டும் நிறுத்தி விட்டால் போதாது. மெய்ப்பொருளின் அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். வேலைகளையெல்லாம் விட்டுவிடுவது மட்டும் அமைதியாகாது. ஏனெனில், ஒரு புறச் செய்கையையும் செய்யாமல் முற்றும் துறந்து வாழ முடியாது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 10

''தனஞ்சய! காரியம் செய்வது, காரியம் ஒன்றும் செய்யாமல் இருப்பது என்ற இவற்றின் வேறுபாட்டைத் தெளிவாகக் கண்டுகொண்டவன்தான் பண்டிதன் என்று அழைக்கத் தகுந்தவன். ஏதோ ஏட்டிலுள்ளவற்றை அப்படியே தன்னுடைய மண்டையில் திணித்துக்கொண்டிருப்பவன் பண்டிதனல்ல. உண்மையின் தரிசனத்தைக் கொடுக்கக்கூடிய அறிவை ஒரு பண்டிதன் பெற்றிருக்க வேண்டும். அந்தத் தரிசனத்தை அடைந்துவிட்டால், எல்லாச் செயல்களும் பலன் நோக்காது தீமையில்லாததாகி விடும். செயல்களையெல்லாம் எரித்து அழித்து விடக்கூடிய ஆற்றல் ஞானம் என்ற நெருப்புக்கு உண்டு.

ஒரு சிலர், ''மெய்யுணர்ந்தவன்கூட அவனுடைய பிராரப்த கர்மத்தின் பலனைக் கட்டாயமாக ஏற்றுத் தீரத் தான் வேண்டும்; அதிலிருந்து தப்ப முடியாது'' என்று சொல்லுகிறார்கள். இந்த முடிவை மற்றவர்கள் கூறுகிறார்கள். அது மெய்யுணர்ந்த ஞானியின் அனுபவமன்று. அவனை வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, கடந்த வினைகளின் பயனை நுகர்வதாகத் தோன்றலாம். ஆனால், அவன் ஒருதுளியும் இதனால் பாதிக்கப்படுவதில்லை. யார் தன்னுடைய மகிழ்ச்சிக்காகப் புறப்பொருள்களை நம்பியிருக்கிறானோ, புலனின்பங்களைத் தொடர்ந்து செல்லுகிறானோ, ஆசைகளாலும் வேதங்களாலும் தூண்டப் படுகிறானோ, அவன் வினைகளால் கட்டப்படுகிறான். ஆனால், இவற்றிலிருந்து விடுபட்டு நிற்பவன், சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் முதலிய புலனீர்ப்புக்களால் அசைக்கப் படுவதில்லை. உண்மையான துறவியின் நிலை இது. அவன் கலங்குவதில்லை. பிறவற்றைச் சாரும் தேவையில்லாமலே மெய்யுணர்ந்தவன் தன்னிடத்திலேயே நிறைந்த மகிழ்வுடனிருக்கிறான். அவன் செயலில் செயலின்மையையும், செயலின்மையில் செயலையும் காண்கிறான். அவன் காரியங்களைச் செய்து கொண்டிருக்கலாம். அதனால் அவன் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் மாறுவதில்லை. செய்த காரியங்களின் பலனில் அவனுக்கு அக்கறையில்லை.

"இதை எப்படி அவன் சாதிக்கிறான் என்று நீ கேட்கலாம். கேள்; அவன் எப்பொழுதும் நிறைவு பொருந்தியவனாக இருக்கிறான். நிறைவுள்ள மனிதன் சுயேச்சையாக வாழ்கிறான்: பிறரை நம்பி வாழ்வதில்லை. "காரியங்களைச் செய்வது தான் என்ற எண்ணங்கூட அவனைப் பாதிப்பதில்லை. நல்லதோ கெட்டதோ தனக்கு எது நடந்தாலும் அவன் நிறைவோடு இருக்கிறான். ஏனெனில், இறைவனது விருப்பப்படிதான் எல்லாம் நடக்கும் என்று அவன் உறுதியாக நம்புகிறான். அவனது மனது அலையாமல் நிலையாக நிற்கிறது. அவன் எப்பொழுதும் இன்புற்றிருக்கின்றான். மன நிறைவில்லாமல் இருப்பது அறியாமைக்கு அடையாளம். உயர்ந்த இலட்சியங்களை விட்டுவிட்டு, சோம்பல் வழியிலே செல்பவர்கள், எது நடந்தாலும் இன்புற்று இருக்கிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? மன நிறைவு என்பது ஞானி கண்டெடுக்கும் புதையல். ஆசைக்கு மேல் ஆசையாக அடுக்கிக் கொண்டுபோய், திட்டத்திற்கு மேல் திட்டமாகத் தீட்டி, எப்பொழுதும் ஏக்கத்திற்காளாகி, கவலைப்பட்டு, பேராசையினால் இதயத்தை எப்பொழுதும் எரியச் செய்யும் அஞ்ஞானியினால் இப்புதையலை அடைய முடியாது.

"இன்ப துன்பங்கள், வெற்றி தோல்விகள், லாப நஷ்டங்கள் என்ற இரட்டைகளால் அறிவு பெற்றவன் வெல்லப்படுவதில்லை. அவன் த்வந்த்வ—அதீதன், எதிரெதிரான இரட்டைகளுக்கு அப்பாற்பட்டவன். வெறுப்பை வெறுத்து ஒதுக்கி, அதைத் தன்னிடம் அவன் நெருங்க விடுவதில்லை. தன்னிலையிலும் தன்னியல்பிலும் ஆத்மா ஒன்றிலும் பாதிக்கப்படாத பாதுகாப்பைப் பெற்றிருக்கிறது. யாது ஒன்றுடனும் அது ஒட்டுவதில்லை. அதல்லாத மற்றெதனாலும் அது ஈர்க்கப்படுவதுமில்லை. அதற்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை; பசியும் தாகமும் இல்லை; துன்பமும் மயக்கமும் இல்லை. பசியும் தாகமும் பிராணனைச் சேர்ந்த குணங்கள். பிறப்பும் இறப்பும் உடம்பைச் சேர்ந்த நிகழ்ச்சிகள், துன்பமும் மயக்கமும் மனத்தின் நிலைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அர்ஜுனா! இவற்றிற்கு எந்த இடத்தையும் கொடுத்துவிடாதே! உன்னை ஆத்மாவாகத் தெரிந்து கொள்! மயக்கத்தை விட்டுவிட்டுப் பற்றில்லாதவனாக இரு. வாழ்வென்னும் இந்தச் சேறு நிறைந்த குளத்தில் தாமரை இலை போல வாழ்வாயாக! உன்னைச் சுற்றிலும் இருக்கும் சேற்றைப் பூசிக் கொள்ளாதே! இதுவே பற்றின்மையின் அறிகுறி; உலகத்தில் இரு; ஆனால் அதே சமயம் அதோடு ஒட்டாமல் தனித்திரு தாமரை இலை போல் இரு! தொட்டதையெல்லாம் உறுஞ்சிக்கொண்டு தன்னைக் களங்கப்படுத்திக் கொள்ளும் ஒற்றுக்காகிதம் ஆகிவிடாதே.''

''ஆத்மலிங்கத்தை உன்னுடைய மனத்துடிப்புக்களென்னும் தூய நீர்களால் நீராட்டு! மனது ஒரு திக்கிலும், புலன்கள் மற்றொரு திக்கிலும் செல்லும்பொழுது மனிதன் இரட்டிப்பு மடங்கு குழம்பி விடுகிறான். ஆகவே, பற்றைத் தூரத் தள்ளிவிடு! அப்படிச் செய்தால், நீ எது செய்தாலும் அது வேள்வியாகி விடும்: எங்கு நீ அடியெடுத்து வைத்தாலும் அந்த இடம் புனிதமாகிவிடும்.''

''அர்ஜுனா! வேள்விகளைப் பற்றியும் உனக்குச் சில சொல்கிறேன், மனத்தின் சலனங்களை யெல்லாம் அடக்கி, அமைதியோடு கேள்! திரவிய யக்ஞம், தபோயக்ஞம் யோக யக்ஞம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எங்கேனும் பள்ளம் தோண்டும் பொழுது, அங்கு வெட்டி எடுக்கப் பட்ட மண் பக்கத்தில் மேடாகக் குவிகிறது. மேடில்லாமல் பள்ளமில்லை, ஓர் இடத்தில் செல்வம் சேரும்பொழுது, அதற்கேற்ப கொடையும் இருக்கவேண்டும். இப்படி நல்ல முறையில் பொருட் செல்வத்தைப் பயன்படுத்துவது திரவிய யக்ஞம் எனப்படும். நல்ல முறையில் பயன்படுத்துவது என்றால் என்ன? பசுக்கள், நிலம், திறமை இவற்றைப் பிறருக்குக் கொடுப்பது திரவிய யக்ஞத்தில் அடங்கும்.

இன்னும், மனம் உடம்பு இவற்றின் செயல்களெல்லாவற்றையும் பேச்சையும் உண்மையை அறிவதற்குச் சாதனமாகப் பயன்படுத்தப்படும்பொழுது அவை தபோ யக்ஞம் ஆகின்றன. ஒருவேளை சாப்பாடு தவறி விட்டால் சோர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்ப் படுத்துக்கொண்டு விட்டால் அது எப்படித் தவமாகும்?

காரியங்களைச் செய்து கொண்டே அவற்றால் கட்டுப் படாமல் இருப்பது யோக யக்ஞம் எனப்படும்.

ஸ்வாத்யாய யக்ஞம் என்பதோ, நம்மை முக்திக்கு இட்டுச் செல்லும் புனித வேதங்களைப் பக்தியோடும் பணிவோடும் படிப்பதுதான் அது. இந்த வேத நூல்களை யெல்லாம் தொகுத்து அளித்த முனிவர்களுக்கு நாம் பட்டிருக்கும் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்கு இந்த யக்ஞம் சிறந்த வழி.

அடுத்தது ஞானயக்ஞம்: இதனால், பார்க்கக் கூடியதும் புலனாகக் கூடியதுமானவற்றின் அறிவு கூறப்படவில்லை. புலனாகாததும் பார்க்க முடியாததுமான ஒன்றின் அறிவு கூறப்படுகிறது. அதாவது பரோக்ஷ ஞானம் கூறப்படு கிறது அபரோக்ஷ ஞானமன்று. இத்தகைய அறிவினைச் சார்ந்த மெய்ந்நூல்களைக் கேளுங்கள்: அவற்றைப் படியுங்கள்; அவற்றின் அறிவுரைகளை மனத்தில் எண்ணிப் பாருங்கள். அவற்றை ஒட்டியும் வெட்டியும் அமையக்கூடிய சான்றுகளை நிறுத்திப் பாருங்கள். இதுதான் ஞானயக்ஞம் எனப்படுகின்றது. முதியோரிடமிருந்தும் ஆராய்ந்து மெய்யறிவினைப் பெறுவதற்கான அவாவினை இந்த ஞானம் குறிக்கும்,

''அர்ஜுனா! இதைப் பெறுவதற்கான வழியினைப்பற்றி நீ என்னைக் கேட்கலாம். இதை அறிய விரும்புவோர் மெய்யுணர்ந்த பெரியோரை நாடி அவரது அருளைப் பெற்று, அவர்களது மனப்போக்குகளையும் நிலைகளையும் நன்கு ஊன்றிக் கவனித்து, அவர்களுடைய உதவியைக் கோரு வதற்கு நல்லதொரு வாய்ப்பிற்காகக் காத்திருக்கவேண்டும். ஐயப்பாடுகள் தோன்றும் பொழுது, அமைதியோடும் துணிவோடும் அவர்களை அணுகவேண்டும். மூட்டை மூட்டையாகப் புத்தகங்களைப் படிப்பதும், மணிக்கணக்காக உரைகள் நிகழ்த்துவதும், காவியுடை உடுத்துவதும் ஒருவனை உண்மையான ஞானி ஆக்கிவிடமாட்டா. உண்மையைத்தாம் உணர்ந்த பெரியோர்களிடமிருந்து அவர்கள் மூலமாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்ற மெய்யறிவை அடைய முடியும். அப்பெரியோர்களுக்குப் பணிசெய்து அவர்களது அன்பைப் பெற வேண்டும். புத்தகங்களைப் படிப்பதால் எப்படிச் சந்தேகங்கள் தீரும்? அவை மனத்தைக் குழப்புவதற்குத்தான் உதவும்.''

''ரொம்ப அதிகமாகப்போனால், புத்தகங்கள் செய்திகளை அறிவிக்கும்: நேரடியான ருசுவினால் நிறுவிக்காட்ட அவைகளால் முடியா. மெய்யுணர்ந்தவர்கள்தாம் கண் முன்னால் நிறுவிக்காட்ட முடியும். ஆகவே அவர்களைத் தேடி அடைய வேண்டும். அப்படி அடைந்து பணிவுடன் சேவை புரிய வேண்டும். அப்பொழுதுதான் இந்த மிகவரிய மெய்யறிவை அடைய முடியும். எவ்வளவுதான் கடல் நீரைக் குடிக்கப் பார்த்தாலும் தாகம் தணியாது. எவ்வளவுதான் நூல்களைக் கரைத்துக் குடித்தாலும் ஐயங்க்ள் நீங்கா.''

''மேலும், மெய்யறிவை அடைய விரும்புகிறவன் பக்தியும் சிரத்தையும் மட்டும் கொண்டிருந்தால் போதா; அவன் எளிமையும் தூய்மையும் வாய்ந்திருக்க வேண்டும். பொறுமையை இழந்து, ஆசிரியரிடத்தில் சலிப்பை உண்டாக்கக்கூடாது. அவசரப்பட்டால்வெற்றி கிடைக்கும் வாய்ப்பு போய்விடும். ஆசிரியர் சொல்வதையெல்லாம் பயின்று உணர வேண்டும். ஆசிரியர் சொல்லிக் கேட்ட அல்லது சொல்லித் தெரிந்த ஒவ்வொரு அறிவுரையையும் சோதித்துப் பார்க்கக் கூடாது. விரைவிலேயே ஞானியாகி விட வேண்டும். ஆசையினால் பயிற்சியை இச்சைப்படி யெல்லாம் மாற்றிக் கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் முழு அஞ்ஞானியாக முடிந்து போவோம். ஏன்? சில நேரங்களில் அஞ்ஞானியாகவே இருந்து விடுவது மேல். ஏனெனில், ஞானியாவதற்கு முயல்பவர்கள் அவசரப்பட்டுக் கடைசியில் பித்தராகி விடுவதும் உண்டு. ஆகையினால், இங்கு வெகு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.''

குருவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து பரிவுடன் பணி செய்வதன் மூலம் அவரை மகிழ்வித்து அவரது அருளைப் பெற நீங்கள் முயலவேண்டும். அவருடைய நன்மையும் மகிழ்ச்சியும் தவிர வேறொரு எண்ணமும் உங்களுக்கு இருக்கக்கூடாது. மற்றதெல்லாம் விட்டுவிட்டு அவரது பேரருளைப் பெறுங்கள்: அப்பொழுது, மெய்யறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சொத்தாகிவிடும். மாருக, ஆணவத்தாலும் நம்பிக்கையின்மையாலும் நீங்கள் பணிவின்றிக் குருவினிடத்துக் குற்றங்காண முயன்ருல், சத்தியத்தின் காட்சி உங்களுக்கு வழங்கப்படமாட்டாது. இருளில் ஆழ்வீர்கள்.''

'தன் கன்றைப் பார்க்கும்பொழுது அதைத் தன்னிடம் அழைத்துக் கொள்ளும் தாய்ப் பசுவைப்போல, குரு சீடனைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு அருள் என்னும் பால் புகட்டுவார். சீடன் மாசில்லாத நல்லியல்பு உள்ளவனுக இருக்கவேண்டும். அப்பொழுது, துருப்பிடிக்காத இரும்பு காந்தத்தால் கவரப்படுவதுபோல் குருவின் கவனத்தை உடனடியாகப் பெறுவான்.''

''குருவின் தகுதிகளைப் பற்றிச் சீடன் ஆராயலாம். உண்மையில் ஆராயத்தான் வேண்டும். ஏனெனில் அவனுக்குக் குரு ஒருவன் வேண்டும். அர்ஜுனு! குரு ஒருவனுக்கு இருக்க வேண்டிய சிறப்புக்களைப்பற்றி உனக்கு இப்பொழுது சொல்லுகிறேன். வெறும் நூலறிவு மட்டும் அவனுக்கு இருந்தால் போதாது. அநுபவத்தால் பெற்ற வாலறிவனுகவும் அவன் இருக்கவேண்டும். சத்தியப் பொருளான பிரம்மத்தில் அவன் நிலைபெற்றிருக்க வேண்டும். வெறும் சாத்திர அறிவு மட்டும் முக்தியைக் கொடுக்க வல்லதன்று: ரொம்ப அதிகமாகப் போனுல் அது போகங்களை வேண்டுமானுல் கொடுக்கலாம். ஏன்? சாத்திர அறிவு சிறிதளவும் இன்றி அநுபவ அறிவினுலே முத்தி பெற்றவர்களும் உண்டு. ஆனுல் அத்தகையவர்கள். ஐயங்களினுல் அலைப்புறும் சீடர்களைக் காப்பாற்ற முடியாது. அச்சீடர்களுடைய இடர்பாடுகளைப் புரிந்துகொண்டு அவர்களிடத்துப் பரிவும் இவர்களுக்குத் தோன்ருது.''

'குரு' என்ற வெறும் பெயரை மட்டும் தாங்கிக்கொண்டு லட்சக் கணக்கான ஆட்கள் இருக்கிருர்கள். கஞ்சா குடிக்கும் குருக்கள்! சொல்மாரி பொழியும் குருக்கள்! புத்தங்களாக எழுதித் தள்ளும் குருக்கள்! நாடெங்கும் அலைந்து திரிந்துகொண்டு, நன்ருக வாதிடும் முறையைக் கற்றுவிட்டால் 'குரு' என்ற பெயரைப் பெற்று விட முடியாது. சீடனை உயர்த்துவதற்கு வேண்டிய ஆற்றலை அவன் மெய்யநுபவத்தினுல் பெற்றிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரங்களினால் வகுக்கப்பட்டிருக்கும் பயிற்சியின் வழியில் அவனை ஈடுபடுத்த வேண்டும். வெறும் வாதத்திறனால் என்ன பயன்? அவன் சொல்வது, செய்வது எல்லாவற்றிற்கும் சாத்திரங்களின் சம்மதம் வேண்டும். ஏட்டிலிருந்து கற்றவற்றை நீண்ட பேச்சுக்களில் கொட்டியளந்து கொண்டு, உணர்ச்சிகளைக் கிளறிவிடுவது ஒருவனைக் குருவாக்கி விடாது. பேச்சுகளில் அவர்கள் வீரர்களாக இருக்கலாம்; ஆனால் சாதனைகளில் அவர்கள் சுன்னமாக இருப்பார்கள்; ஆன்மீகத் துறையில் உள்ள ரகசியங்களைப் பொறுத்தவரை அவர்கள் சூன்யமே. அவர்கள் பள்ளி ஆசிரியர்களாக வேண்டுமானால், இருக்கலாம். ஆனால், பக்தியை உண்டு பண்ணி, முக்திக்கு வழியைக் காண்பிக்க முடியாது. ''குரு'' என்று தம்மைக் கூறிக்கொள்ளும் இந்த மனிதர்கள் இந்த நிலையோடு நின்று விடுவார்கள். அவர்களிடம் சீடர்களாகச் சென்று அணுகுகின்றவர்களும் அவ்வளவுதான் பெறமுடியும். அவர்கள் மழையாகப் பொழிகின்ற அத்தனையையும் சொல்லுகின்ற புத்தகங்களும் அவர்களும் ஒன்றுதான். அப்பாவியான சீடர்களும் இத்தகைய ஆடம்பரச் சாமியார்களின் சொல் மாயத்தினாலும் சொற்சிலம்பத்தினாலும் கவரப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் பண்டிதர்கள் என்று பெயர் பெறலாம்; உரைகள் ஆற்றலாம். ஆனால் இதனால் மட்டுமே, மெய்யறிவு புகட்டும் தகுதி அவர்களுக்கு வந்துவிட்டது என்று கூறிவிட முடியாது. அதைச் செய்யக் கூடியவர்கள் மனிதனாகப் பிறந்த கடவுளும், இறைவனின் ஒரு தன்மையோடு பிறந்த மனிதர்களும், மெய்யறிவு பெற்றவர்களுமே. இவர்கள் பரம்பொருளை உணர்ந்தவர்கள். இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் அநுபவத்தைப் பெற்றுவிட்டேன், என்று சொல்லுவதில் பயனில்லை. அனுபவம் முழுவதாக இருக்க வேண்டும். அது முழுப்பொருளைப் பற்றிய அனுபவமாகவும் இருக்கவேண்டும். வானத்திற்கும் வையத்திற்கும் மையத்தில் ஊசலாடிய திரிசங்குவைப்போல், சிறிதளவு அறிவு பெற்றவர்கள் உங்களைச் சிறிது தூரம் அழைத்துச் சென்று அங்கேயே நட்ட நடுவில் விட்டு விடுவார்கள்.''

''குருவானவன் தன்னுடைய உதவி கேட்டு வரும் சீடனுடைய குணதியங்களை நன்கு ஆராய வேண்டும்.

அச்சீடனுடைய சொத்து சுதந்திரங்களையோ, பதவிப் பெருமையையோ பார்த்து விருப்பு வெறுப்புக்களை முன் கூட்டியே அடையக்கூடாது. சீடனுடைய இதயத்தை அவனது இயல்பைச் சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றல் உடையவராக இருக்கவேண்டும். அறியாமை என்னும் உறக்கத்தில் இறங்கியிருக்கும் சீடர்களுக்கு எச்சரிக்கை மணி போல் குரு நடந்து கொள்ள வேண்டும். குரு கருமியாக இருந்து, மாணவன் சோம்பேறியாக இருந்துவிட்டால், இருவருக்குமே ஆபத்து.''

இவ்வாறு. குரு, சீடன், இவர்களுடைய தகுதிகளை வெகு தெளிவாகக் கண்ணன் அர்ஜுனனுக்கு எடுத்துரைத்தான். அவர்களுடைய நடத்தை. கல்வி, நிறைகள். குறைகள், செய்கைகள், இயல்புகள் எல்லாவற்றையும் கூறினான். இந்தப் பொன்மொழிகளெல்லாம் ஏதோ அர்ஜுனனுக்கு மட்டும் சொல்லப்பட்டவை அல்ல; உலக முழுமைக்குமே சொல்லப்பட்டவை. குருவாகவோ சீடர்களாகவோ வர விரும்பும் ஒவ்வொருவரும் இந்த விலையில்லாச் சொற்களுக்குச் செவிசாய்க்க வேண்டும்.

இன்றைய குருக்கள் சீடர்கள் இவர்களின் நிலை இன்றைய தரக்குறையை ஒட்டியே அமைந்திருக்கின்றன. பழைய காலத்தில், ஒரு குருவை வெகு சிரமப்பட்டுத்தான் கண்டுபிடிக்க வேண்டும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்வத்தோடு அத்தகையவர்களைக் காடுகளில் தேடினார்கள், அவர்கள் அவ்வளவு அரியவர்கள்; அவ்வளவு உயர்ந்தவர்கள். ஆனால் இக்காலத்தில் குருக்கள் நூற்றுக் கணக்கில் தெரு முனைகள்தோறும் இருப்பார்கள் ஆனால் உண்மையான சீடர்களின் தொகை குறைந்து கொண்டே வருகிறது. இருவகையினருமே விரைவாகச் சீரழிந்து வருகிறார்கள். ஒருவருக்கொருவர் தரத்திற்கேற்ப மாறிக்கொண்டு வருகிறார்கள். சீடர்களுக்குச் சோறுபோட்டு வளர்க்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள் குருமார்கள். இது தவறென்று நான் சொல்லவில்லை. ஆனால் சீடர்கள் தகைமையுடையவர்களாக இருக்க வேண்டுமல்லவா? ஆனால் எங்கே சீடர்கள் தன்னை விட்டுப் போய்விடுவார்களோ என்று இந்தக் குருமார்கள் பயப்படுகிறார்கள், ஆகையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய இச்சைகளையும் இஷ்டங்களையும் நிறைவேற்றி வைக்கிறார்கள். சீடர்கள் தாங்கள் குரு புத்திரர்கள் என்றும், ஆச்ரம வாஸிகள், என்றும் சாதகர்கள் என்றும் கூறிக்கொள்ளுகிறார்கள் ஆனால் அவர்களுடைய வாழ்க்கை ஆச்சிரமத்துச் சூழ்நிலையோடு ஒட்டாமல், சான்றோர் இயல்பும் சாதனையும் அற்றுப்போய் இருக்கின்றது. குருவின்பால் இருக்கவேண்டிய அடிப்படையான நன்றியுணர்வுகூட அவர்களுக்குக்கிடையாது. 'எல்லாம் இந்த உடம்புக்கே'' என்பதைத்தான் காண்பிக்கின்றன.

இதைவிட இன்னும் கேவலம் என்ன என்றால், சீடர்கள் தம் குருக்களுக்கு நிபந்தனை விதிக்கிறார்கள், அவர்களுடைய பொழுதுபோக்கு, சொகுசான வாழ்வு, வசதி இவைகளுக்குக் குரு மதிப்பளிக்கவேண்டும். எந்தவகையான செலவோ கவலையோ இல்லாமல், எந்தப்பயிற்சியையும் ஒழுங்கையும் வற்புறுத்தாமல், சீடர்களுடைய மகிழ்ச்சியைக் குரு பாதுகாக்கவேண்டும் மோக்ஷம் என்பது ஒரு பழம் போல் வந்து அவர்கள் மடியில் விழவேண்டும். கடினமான பயிற்சி எதையும், வாழ்க்கை நெறி எதையும் குரு ஏற்படுத்தக் கூடாது. சீடர்களுடைய எல்லா விருப்பங்களையும் குரு மதித்து நடக்க வேண்டும். சீடனுக்கு எதிராகக் குரு ஏதேனும் செய்தால் குருவை இச்சீடன் உடனே ஒதுக்கித் தள்ளி விடுவான்; அவரைத் தூற்றவும் செய்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 11

வசதியை நாடிச் செல்லமாக வளர்ந்துவிட்ட மனிதர்கள் எப்படி முக்தி பெறமுடியும்? இது போன்ற சீடர்கள் கிடைக்கவில்லையென்று விதியை நொந்துகொள்ளும் குருமார் உண்டோ? இது போன்ற சீடர்களைத் தம்பால் கவர முடிய வில்லையே என்று வேதனைப்படும் குருமார்களும் இருக்கிறார் களே என்பது வேடிக்கையாக இருக்கிறது. கஞ்சா குடிப் பவர்களும் பங்கி அடிப்பவர்களும் குருக்களாக இருப்ப தற்குத் தகுதியற்றவர்கள். இவர்கள் ஏமாற்றுக்காரர்கள். வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைப் பெறுவதற்காகத் தம் ஆற்றலையெல்லாம் செலவழிக்கும் இவர்களெல்லாம் எப்படிக் குருமார்களாவார்கள்? புலனிச்சைகளையே தணித்துக் கொள்ள அலைபவர்கள் எப்படிச் சீடர்களாக முடியும்? அவர்கள் பணம் பறிக்கும் குருக்கள்; இவர்கள் மதம் பிடித்த மாணவர்கள். அவர்களைக் குருக்கள் என்றும் இவர்களைச் சீடர்கள் என்றும் எண்ணுவது, அப்புனித மான பெயர்களை இழிவுப் புழுதியில் இழுப்பதாகும்.

அப்படியானால், உண்மையான குரு என்பவர் யார்? மருளை நீக்கும் வழியை அருளுபவரே குரு. யார் உண்மை யான சீடன்? வெளியே பாயும் மனத்தை வளைத்து வெல்லு பவனே சீடன். நள்ளிரவு வரை கண் விழித்து முதல் நாள் தங்கள் மண்டையில் திணித்துக் கொண்ட சங்கதியை யெல்லாம் ஒவ்வொரு நாளும் மேடைகளில் ஏறிக் கத்துவது தான் இந்நாள் குருக்கள் செய்யும் வேலை. தின்ற சோற்றை மறுபடி கக்குவது போலத்தான் இவர்கள் செயல்; வேறொன் றுமில்லை. பொட்டை நெட்டுருவாகக் கற்றதை திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளை போல இவர்கள் பேசுகிறார்கள். ஆசையும் கோபமும் அடக்கப்பட வேண்டும் என்று சிறு குழந்தைகளுக்குக்கூடத் தெரியும். ஆனால், இந்தக் குருமார்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும், பேசும் ஒவ்வொரு சொல்லிலும், ஆசையும் கோபமும், பொறாமையும் வெறுப்பும், காமமும் கர்வமும் தங்கள் பேய்த்தலைகளை நீட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASA[...]
UNIVERSITY OF JAFFNA

குருக்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுபவர்கள் இந்த முனைப்புகளை அடக்கவில்லையென்றால், இவர்களை நம்பி வரும் அதிர்ஷ்டக் கட்டைகளான சீடர்கள் மட்டும் எப்படி இதைச் செய்து முடிப்பார்கள்?

தன்னலத் தியாகம் செய்து, மன்னுயிரெல்லாம் தன்னுயிரென்று சமமாக எண்ணும் இரக்கத்தில் தோய்ந்து, உண்மையைக் காண்பதில் முனைந்து, உரம்தரும் எண்ணங்கள் நிறைந்த உள்ளத்தோடு, துன்பமற்ற வாழ்வை எல்லோரும் பெறுமாறு உழைத்து, இனிய எளிய முறையில் வாழ்ந்து, மெய்வழியையும் நற்குணத்தையும் பிறருக்கு எடுத்துக் காட்டுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததே என்று மகிழ்ந்து குரு இருப்பானானால், ஒரு வேளை அவனுக்குச் சீடர்களே கிடைக்காமல் போய்விடும். அப்படிக் கிடைத்தாலும், அவர்கள் அவனிடத்தில் குற்றங்கண்டு தூற்றுவார்கள். அவனது மெய்ம்மையை, சான்றாண்மையைக் குறித்து ஐயங்களைக் கிளப்புவார்கள். ஆனால் குரு எப்பொழுதும் போல அமைதியோடு கலங்காமல் இருப்பார். அவருக்கு ஓர் இழப்புமில்லை. கிடைத்தற்கரிய வாய்ப்பை இழந்து விட்ட சீடனுக்குத்தான் எல்லா இழப்புக்களும்.

ஒன்றை மட்டில் உறுதியாக நம்புங்கள். இவ்வுடலே நான் என்ற மருள் நீங்காத வரையில், எவ்வளவுதான் ஒருவன் அலைந்து திரிந்தாலும், எவ்வளவு குருமார்களைத் தேடித் தொழுதாலும் இறைவனைக் காண முடியாது.

இந்த மருளை விடாது பிடித்துக் கொண்டிருப்பீரானால் நீங்கள் செய்யும் ஜபம், தியானம், நீங்கள் நீராடும் புண்ணியத் துறைகள் எதுவுமே உங்களுக்கு வெற்றியைத் தராது ஓட்டைப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு தண்ணீரை இறைப்பதுபோல அவ்வளவு முயற்சியும் வீணேயாகும்.

இத்தகைய சாதுக்களைவிட, தங்களுக்குரிய கடமைகளைச் செய்து கொண்டு வாழும் இல்லறத்தார் எவ்வளவோ மேல். அவர்களுடைய இல்லற நெறியை அவர்கள் நடத்துகிறார்கள். மறவாமல் இறைவனை நினைத்து நல்வழியை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அதனால் தமது குறிக்கோளையும் அடைகிறார்கள். இன்றைய குருமார்கள், அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய சீடர்கள் இவர்களுடைய தன்மையை ஆராயப் புகுந்தால், புத்தகம் புத்தகமாக எழுதலாம். ஆனால் பயனற்ற ஆராய்ச்சியில் பொன்னான நேரத்தை வீணாக்க முடியாது. அதனால் நாம் சொல்லிக் கொண்டிருந்த அந்தக் கருத்துக்கே செல்வோம். ஏனெனில், இன்றைய குருமார்களுக்கும் சீடர்களுக்கும் இடையே உள்ள உறவைச் சொல்லி விட்டு, அதே மூச்சில் கண்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே இருந்த குரு-சீட உறவைப் பற்றிப் பேச முனைவது அந்த உறவின் புனிதத்தை மாசுபடுத்துவதாகும். அவர்கள் தனித்த சிறப்புடையவர்கள்; ஒப்பில்லாதவர்கள்; மிக உயர்ந்த இனை; வேறு யாராலும் அடைய முடியாதவர்கள். எல்லாக் குருமார்களுக்கும் சீடர்களுக்கும் அவர்கள் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள். அடக்கத்தோடு வணங்கி நின்று கண்ணனின் அருளுரைகளையெல்லாம் மனமாரக் கடைப்பிடித்தான் அர்ஜுனன். அர்ஜுனனுக்கு எது உண்மையாகவே நன்மை பயக்குமோ அதைக் கண்ணன் வளர்த்தான். அர்ஜுனனுடைய தருமம், ஆத்மாநந்தம், புகழ் இவற்றை எது பெருக்குமோ அதற்குக் கண்ணன் முழு ஆதரவும் தந்தான். தன்னுடைய உயிர் மூச்சுப்போல அர்ஜுனனைக் கண்ணன் பேணினான்; காத்தான். அத்தகைய குருவாக இறைவன் விளங்கினான்.

கண்ணன் இறைவன்; அர்ஜுனன் உயிர், கண்ணன் எல்லாவற்றிலும் சிறந்தவன். அர்ஜுனன் மனிதரில் சிறந்தவன். அதனால்தான் இவர்களிருவரும் இலட்சிய குருவாகவும் சீடனாகவும் கருதப்படுகிறார்கள். மற்றவர்களெல்லாம் ஏதோ பெயருக்குத்தான் குருவும் சீடனுமாயிருக்கிறார்கள். தான்தோன்றிச் சீடர்களும் ஆதிக்கக் கிறக்கத்தில் இருக்கும் குருக்களும் வீணான நாட்டங்களில் தங்கள் வாழ்க்கையைப் பாழடிக்கிறார்கள். கண்ணன் பிரேமைக் கடல்; ஒருவன் தன் இதயத்தையும் கண்ணையும் கண்காணிப்பது போலக் கண்ணன் அர்ஜுனனைக் காத்தான். தான் புனிதமாக இருந்து புனிதத்தைப் புகட்டினான். ஒப்பில்லாத அன்பைச் செலுத்தி, ஒப்பில்லாமல் அன்புக்கு ஆளானான். இதுதான் ஒருவனை மெய்யான குருவாக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுனன் எப்படி? அவனும் சாதாரணமானவனல்ல. அவனுடைய தியாகம் அணுக முடியாதது. எவ்வளவு சிக்கலான நேரத்திலும் அவன் கண்ணனுடைய கட்டளையை மேற்கொண்டான். கண்ணனுடைய பேச்சைக் கேட்டு நடந்தான். ஆபத்திலிருந்து காக்கும் கவசம் போல, தான் வாழும் உடம்பைப் போல, தான் காவல் செய்து வலு வூட்டி வளர்க்க வேண்டிய ஒன்றாக, அர்ஜுனன் கண்ண னிடத்தில் தனக்குள்ள நட்பை அமைத்துக் கொண்டான். தான் ஒரு பெரிய ஆற்றல் படைத்தவன் என்றாலும் தேவைப்பட்டால் கண்ணன் முன்னால் அதைத் தூக்கி எறிந்து விட அவன் தயாராக இருந்தான். இப்படித்தான் ஒரு குருவும் சீடனும் இணையவேண்டும்.

பிரேமையின் வடிவமான இறைவன் சீடனுடைய உளமார்ந்த ஆர்வத்தை உணர்ந்து, அவனது திறன்களை மதிப்பிட்டு அதன்பின் மெய்யறிவின் பெருமையையும் நலன் களையும் எடுத்துரைத்தான். ' குந்தியின் மைந்த! மெய்யறி வின் மூலம் எல்லாவற்றையும் என்னுள்ளும் உன்னுள்ளும் காண்பாய்! செங்கதிரோன் உதிக்க அதன்முன் இருள் சிதறி ஓடுவது போல, பன்மைக் கண்ணோட்டமும் மருளும் மறையும்.''

''அர்ஜுனா! உன்னுடைய கடந்த காலம் முழுதும், உன்னுடைய பிறப்பின் கதை முழுதும் நான் அறிவேன். உன்னுடைய பிறப்பு சாதாரணமானதன்று. தெய்வீக ஆற்றல்களுடனும் பரம்பரையுடனும் நீ பிறந்திருக்கிறாய். அது என்னைத் தவிர வேறொருவருக்கும் தெரியாது. இதை நீ அறியாதபடியால், ஏதோ உற்றார் உறவினர், ஆசிரியர் மூத்தோர் இவர்களையெல்லாம் கொல்ல முற்பட்ட ஒரு பாவி யாக உன்னையே நீ நொந்து கொள்கிறாய்!''

''அப்படியே நீ பாவம் செய்வதாக வைத்துக் கொண்டாலும், பாவிகளும் காப்பாற்றப்படுவதில்லையா? பாவத்தையும் பாவனமாக்க மனமாரவருந்தினால் போதும். உணர்ந்து வருந்தினால், இறைவன் அதை அருளோடு ஏற்று ஆசிகளைப் பொழிகிறான். வெகுகாலம் பாவங்களில் ஈடுபட்டி ருந்த ரத்னாகரன், நல்லறிவு பெற்று, மனம் வருந்தியதால் புனிதனானான்; வால்மீகி என்ற பெரியோனானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையா? உள்ளத்தால் திருந்தினல் ஏற்படும் நன்மைக்கு அவரது சரிதமே சான்று.

பாவத்தின் விளைவுகளிலிருந்து ஒருவன் விடுபட்டால் போதுமா? புண்ணியத்தின் விளைவுகளையும் ஒருவன் விட்டுவிட வேண்டாமா என்று நீ கேட்கலாம். ஏன்? புண்ணியத்தின் நற்பயனை விடுவதற்கு ஒருவனுக்குச் சுதந்திரம் இருக்கவே செய்கிறது. பாவத்தின் பயனை விட்டு விடுவதற்குத்தான் அவனுக்கு அந்த அளவுக்குச் சுதந்திரம் கிடையாது. பேரொளியுடன் எரியும் காட்டுத் தீ தனக்கெதிர்ப்பட்டதையெல்லாம் பொசுக்கி விடுகிறது. இது போலத்தான், மெய்யறிவு என்னும் பேராற்றல் கொண்ட தீ எல்லாப் பாவங்களையும் எல்லாப் புண்ணியங்களையும் எரித்து அழித்து விடுகிறது.

இந்தப் புனிதமான மெய்யறிவைப் பெறுவதற்கு ஒன்று மிகத்தேவை. அது மெய்நூல்களிலும், ஆசிரியனிடத்திலும், மெய்யறிவைப் பெறுவதிலும் அசையாத நம்பிக்கை. இந்த நம்பிக்கையிலிருந்து பிறக்கும் ஊக்கம் இன்றி, எவ்வளவு சிறிய வேலையையும் செய்து முடிக்க முடியாது. ஆகையினால், மெய்யறிவைப் பெறுவதற்கு அது எவ்வளவு இன்றியமையாதது என்று நீ பார்த்துக் கொள்ளலாம். மனவடக்கம், புலனடக்கம், தியாகம், பொறுமை, அமைதி இவையெல்லாவற்றிற்கும் நம்பிக்கை ஒன்றுதான் ஒப்பிலாப் பெட்டகமாகும். இவைகளில் ஒவ்வொன்றும் பற்ற வேண்டிய உடைமையாகும்.

“நம்பிக்கை என்பது முதற்படி. நான் உனக்குச் சொல்லுகின்ற அருளுரைகளைக் கேட்டு வாங்கிக் கொள்வதற்கு நீ ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். இவற்றோடு கூட, நீ எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். சோம்பலுக்கு இடம் கொடாதே! இன்னும், உனக்கு ஒத்துவராத, உன்னை ஊக்குவிக்காத, நட்புக்கள் ஏற்படக்கூடும். தீமையை விளைவிக்கும் அத்தகைய நட்பிலிருந்து தப்புவதற்கும், அதை விலக்க வேண்டி மனத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் புலன்களை வெற்றி கொள்ளுதல் தேவையாகிறது.”

“மனதில் ஐயத்தை நுழைய விடாதே. நம்பிக்கையின்மையும் உறுதியின்மையும்கூட இந்த ஐயம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சினைப் போல் அவ்வளவு அழிவைச் செய்யா. அதன் செயலிலும் விளைவிலும் அது க்ஷயநோய்க் கிருமிகள் போன்றது. அது அறியாமையில் பிறந்து மனிதனின் இதய வெளியில் புகுந்து அங்கு வளர்கிறது. அதுதான் அழிவிற் குத் தாயும் தகப்பனும்.''

''ஆகவே, தன்னறிவு என்னும் வாளினால் இந்த அரக்கனை அழிப்பாய்! அர்ஜுனா! எழு! கடமை என்று உணர்ந்து காரியங்களைச் செய்! என்னுடைய சொற்களில் முழுநம்பிக்கை கொள்! அதனால் உனக்கு என்ன வரும் என்று எண்ணிக் கொண்டிராமல் நான் சொல்வதைச் செய்! பலனைக் கருதாமல் கடமையைச் செய்! பலனில் இச்சை யைத் துறப்பதால், மெய்யறிவில் நீ ஊன்றி நிற்பாய். ஓயாத மாறுதலினின்றும், பிறப்பு இறப்பிலிருந்தும் நீ விடுதலை பெறுவாய்.''

தான்தான் ஏதோ செய்பவனென்றும் அதன் பயனை யும் அடைபவனென்றும் எண்ணுவதை விடு. இதை எப்ப டிச் சாதிப்பது? செயலையும் அதன் பயனையும் இறைவனுக் குக் காணிக்கை யாக்கு! அப்பொழுது உன்னைப் பாவம் அணுகாது. ஏனெனில் நீ ஒன்றும் செய்யவில்லை. செயல் களும் புனிதமாகின்றன. நாக்கில் எண்ணெய் போல, கண்ணில் மைபோல, தண்ணீரில் தாமரை இலைபோல, செயல்கள் உன்னிடத்தில் இருக்கின்றன. ஆனால் அவை உன்னுடையவை அல்ல. நீ பார்த்துக் கேட்டுச் செய்வ தெல்லாம் உன்னை ஒன்றும் செய்யாது. நீ பார்க்கவும் இல்லை; கேட்கவும் இல்லை. செயலொன்றையும் நீ அறியவு மில்லை. புற உலகத்திலிருந்து பெறப்படும் இன்பம் துன்பத் திற்கு நுழை வாயில். அப்படிப்பட்ட இன்பம் அழியக் கூடியது. ஆனால் நீயோ என்று மிருப்பவன்; இன்பத்தின் ஊற்று. இதெல்லாம் கடந்தவன்; மெய்ப்பொருளின் வடி வம். இது உன்னுடைய உண்மையான இயல்பு. இந்தச் செயல்கள் ஒன்றுடனும், நீ உண்மை என்று எண்ணுகிற அவற்றின் பயன்களுடனும் உனக்கு எவ்வித ஒட்டுதலும் இல்லை. நீ செய்பவன் இல்லை. நீ ஒரு சாக்ஷி. பார்த்துக் கொண்டிருப்பவன். அவ்வளவுதான். ''நான் செய்பவன்'' என்ற மயக்கத்தினாலும், ''தான்'' ''தனது''என்ற எண்ணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஞலும் இந்தத் திகைப்புக்களெல்லாம் ஏற்பட்டிருக்கின் றன. பரம்பொருளை அறி! எல்லாக் காரியங்களையும் செய்; ஆஞல் அவற்றின் பலன்களை எண்ணிப்பாராதே! தொழிலை விடுவதைவிட அதன் பலனை விடுவது சாலச் சிறந்தது. கருமயோகம் கருமத்துறவை விட மேலானது.''

''நல்லது; இவை இரண்டையும்விட மேலானது தியான யோகம். ஏனென்று சொல்கிறேன். தியான யோகத்திற் குக் கருமயோகத்தின் உதவி தேவை. அதஞல் உனக்கு முதலில் கரும யோகத்தைச் சொன்னேன். ஆர்வமுடன் கடமைகளைச் செய்துகொண்டே அதஞல் வரும் பலன் களில் இச்சை வைக்காமல் இருப்பவர்கள் எனக்கு மிகவும் இனியவர்கள். அவர்கள்தாம் உண்மையான துறவிகள். தீ வளர்த்துச் சடங்குகளைச் செய்வதை விட்டுவிட்டு, உண்பதும் உறங்குவதும், புலனின்பங்களுக்காக ஏங்கு வதும் தவிர வேறெந்த முயற்சியையும் செய்யாதவர்கள், கும்பகர்ணனுக்கு உறவினர் போல் நடத்துகொண்டு காலத்தை வீணுக்கிச் சோம்பித்திரிபவர்கள் அவர்களிடத் தில் எனக்கு அன்பு கிடையாது. சோம்பேறிகளுக்கும் எனக் கும் காத தூரம். விடாமல் எவ்வளவு பயின்ருலும், தனது இச்சைகளைத் தேடிச் செல்வதை விடாதவன் ஒருநாளும் யோகி ஆகமுடியாது. புலன்களில் சிக்காமல் விழிப்புடனி ருப்பவன் எவனே, தன்னுடைய செயல்களின் பலன்களில் பற்று வைக்காதவன் எவனே, அவனே ஸர்வ ஸங்க பரித் யாகி எனப்படுவான்.''

இந்தப் பலன்கருதாச் செயலின் அடிப்படையில்தான் தியானயோகம் ஏற்படமுடியும். கட்டுக்கடங்கி ஆணைக்கு ஆட்படாத மனது, ஒருவனது பெரிய எதிரியாகிவிடும். ஆகவே புலன்களை வெல்லுவதற்காகத் தனிமையில் இரு! கடிவாளமில்லாத குதிரை, நுகத்தடியில் பூட்டப்படாத மாடு, புலனடக்கமில்லாத சாதகன், இவர்களெல்லாம் தண்ணீரில்லாத ஆறுபோன்றவர்கள். இத்தகைய சாதனம் பயனற்றது.

''எனவே அர்ஜுனு! எழு! தியானயோகம் பயில்! இந்த யோகத்திஞல் புலன்களை அடக்க உறுதி கொள்! மனம் போனபடி மாற்ருமல், குறிப்பிட்ட நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட இடத்தில் ஒழுங்காக உறுதியோடு முறைப்படி இந்த யோகத்தைப் பின்பற்று. ஒழுங்கான முறை இந்த யோகத்திற்கு மிக அவசியம். இதைக் கண்டிப்பாகப் பின்பற்று. இச்சைப்படியெல்லாம் இதை மாற்றாதே. அது வெகு தீய விளைவுகளை உண்டாக்கும்.''

''அளவுக்கு மீறிச் சாப்பிட்டு விட்டு அதை ஜீரணிக்கும் முயற்சியில் சோர்ந்து போகிறவர்களும், அளவுக்குக் குறைவாகச் சாப்பிட்டு அதனால் சோர்ந்து போகிறவர்களும், நீண்ட நேரம் தூங்குபவர்களும் குறைந்தநேரம் தூங்குபவர்களும், வசதிப்படி தியானம் செய்பவர்களும் அதாவது வேறு ஒரு வேலையும் இல்லை யென்பதற்காக வெகு நேரம் தியானம் செய்பவர்களும், அதிகமான வேலை இருக்கிறது என்பதற்காக மறுநாள் ஏதோ கடனேயென்று தியானத்தைச் சுருக்கமாக முடித்துக் கொள்பவர்களும், காமம், கோபம் முதலிய அறுவகை உட்பகைவர்களுக்கு இடம் கொடுப்பவர்களும். பெற்றோருக்கு, அதுவும் தாய்க்கு மகிழ்ச்சி உண்டாக்காதவர் களும், எல்லாவற்றிற்கும் மேலாக, தாங்களே விரும்பித் தங்கள் இதயங்களில் ஏற்றிவைத்த இறைவனிடமும் குருவினிடமும் சிறிதும் நம்பிக்கையில்லாமல் ஐயம் கொண்டவர்களும், தியானத்தினால் எந்தப் பலனும் அடைய மாட்டார்கள்.''

''யோகத்தில் வல்லமை பெற்றவனுடைய மனது, காற்றில்லாத மாடப் புரையில் வைக்கப்பட்ட விளக்குப்போல ஆடாமல் அசையாமல் நிமிர்ந்து நிற்கவேண்டும். துளி ஆட்டம் காண்கிறது என்பதற்கு அறிகுறி தென்பட்டால், உடனே மனத்தை அடக்குவதற்கு முயலவேண்டும். அதை அலைய அனுமதிக்கக்கூடாது. நீயே எல்லாப் பொருளிலும் இருக்கிறாய். எல்லாப் பொருள்களும் உன்னிடத்திலிருக்கின்றன என்ற ஒருமைப்பாட்டு உணர்வை வளர்த்துக் கொள். அப்பொழுது, எந்த யோகத்தை வேண்டுமானாலும் பயின்று உன்னால் வெற்றிபெற முடியும். அப்பொழுது, ''தான்'' ''பிறர்'' — ''ஆத்மா'' ''பரமாத்மா'' என்ற வேற்றுமைகளிலிருந்து விடுபடுவாய். பிறருடைய இன்பமும் துன்பமும் உன்னுடைய இன்பமும் துன்பமுமாகும். உன்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு எந்தவிதத் தீங்கும் நேரமுடியாது. எல்லாம் இறைவன் என்ற உணர்வில் எல்லாம் அன்புக்குரியதாகும்; போற்றுதற்குரியதாகும்.'' இந்தப் பெரு நோக்கை யார் பெற்றிருக்கிறார்களோ அவர்கள்தாம் உண்மையில் யோகிகளுக்குள் உயர்ந்த யோகிகள் என்று கண்ணபிரான் அறிவித்தான்.

இதனூடே, அர்ஜுனன் ஐயத்தின் வயப்படுகிறான். தான் உறுதி பெறுவதற்காக மேலும் விளக்கத்தையும் விரிவுரையையும் கேட்கிறான்: ''கிருஷ்ணா! நீ எனக்குச் சொல்லி வந்ததெல்லாம் செவிக்கு இனியதாக இருக்கிறது. வெற்றி பெறுபவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை இது கொடுக்கும் என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் இது மிகக் கடினமானது. எல்லோருக்கும் முடியக்கூடியது அன்று. எல்லாம் சமம் என்று உணர வேண்டிய யோகம், நிறைந்த ஆற்றல் படைத்த சாதகர்களுக்கும்கூட தடைகள் மிகுந்ததாக இருக்கிறது. அப்படியிருக்க, என்னைப் போன்ற சாதாரணமான சீடர்களைப் பற்றி என்ன சொல்ல? அது எங்களால் முடியக் கூடியதா என்பதே சந்தேகமாயிருக்கிறது. கிருஷ்ணா! மனது அவ்வளவு எளிதாக அடங்கிவிடக் கூடியதா? ஒரு யானைகூட மனத்தைப் போல மதம்பிடித்து அப்படி இழுத்துக் கொண்டு போய்த் தள்ளாது. ஒழுங்கின்மைக்கு அது ஒரு வளர்ப்புப் பண்ணை. அதனுடைய முரட்டுப் பிடிவாதமும் மிக வலுவுள்ளது பயங்கரமான அடங்காப்பிடாரி. அதை வளைத்துப் பிடிக்க முடியாது. நின்ற இடத்தில் நிற்காது. காற்றைப் பிடிப்பது, தண்ணீரை உருண்டை யாக்குவது என்பது போலத்தான் மனத்தைப் பிடித்துப் பழக்க முயலுவதும். இத்தகைய மனத்தை வைத்துக்கொண்டு யார்தான் யோகத்தைத் தொடங்க முடியும்? மனத்தை அடக்குவதும் யோகத்தைப் பயிலுவதும், ஒன்றைப் போல மற்றொன்று கடினமானவை. கிருஷ்ணா! மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, இயலாத ஒன்றை நீ செய்யச் சொல்லுகிறாய்''

இந்தச் சொற்களைக் கேட்டதும் கண்ணன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ''அர்ஜுனா! மனத்தையும் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பையும் நீ நன்ருக எடுத்துச் சொன்னுய்! ஆனுல் அது இயலாத செயலன்று. எவ்வளவுதான் அது கடினமாகத் தோற்றினுலும் மனத்தை அடக்கமுடியும். முறையான விடாத பயிற்சியினுலும், அயராத ஆராய்ச்சியினுலும் பற்றின்மையினுலும் இம் மனத்தை அடிமைப்படுத்தலாம். விடாத பயிற்சியினுல் ஆகாதது ஒன்றுமில்லே. இறைவனிடம் நம்பிக்கை வைத்து, ''எனக்கு ஆற்றலிருக்கிறது; இறைவனருள் உண்டு'' என்ற உறுதியுடன் பயில். அப்பொழுது எல்லா வேலேகளுமே எளிதாகிவிடும்.

''ஆகையினுல், உறுதியோடு இந்த பயிற்சியைத் தொடங்குபவன் பல பிறவிகளெடுத்துப் புடம்போட்ட உயிர்களுக்கே கிட்டக்கூடிய உயர்ந்த பலனேப் பெறுவான். நன்ருக நினேவுபடுத்திக் கொள்! யோகம் கைவரப் பெற்றவன், வெறும் சடங்குகளேச் செய்வதில் வல்லவனே விடச் சிறந்தவன். எனவே, அர்ஜுன! யோகி ஆவதற்கு, அந்த உயர்ந்த புனிதமான நிலேயை எய்துவதற்கு முயல்வாய்! ஆனுல் நீ செய்யவேண்டியது இது ஒன்று மட்டுமல்ல. இதைவிட மேலான நிலேயொன்றும் உண்டு. எவன் மற்றதெல்லாம் விலக்கித் தன்னுடைய உணர்வை முழுதும் என்னிடத்தில் பொருத்தியிருக்கிருனே, ஆர்வத்தோடு என்னே யார் சிந்தித்திருக்கிருனே, அவன் எல்லாரினும் மேலானவன்; அவன் மஹாயோகி.''

தியானயோகமும் ஞானயோகமும் உட்பயிற்சிகள். அவை சாதனத்தையும் பக்தியையும் அடித்தளமாகக் கொண்டவை. இவையிரண்டும் இல்லாது போனுல் அவற்றை அடையமுடியாது. அம்முயற்சியே வீண். சாதனமும் பக்தியும் இல்லேயென்ருல், ஒரு பயிற்சியாளன் உயிரில்லாத மரப்பொம்மையைப் போல, தனது நோக்கத்தையே அறியமுடியாதவனுக இருப்பான். அடிப்படையான தேவை என்னவென்ருல், ஆண்டவனிடத்தில் ஆழமான அன்பேயாகும். இதனே நீ எப்படிப் பெறுவாய்? ஆண்டவனுடைய இயல்பையும் தன்மையையும், குணச் சிறப்புக்களேயும், பெருமையையும், பெருஞ்சீரையும் அறிவதன் மூலம்தான். அதனுல் தான் இவற்றைப்பற்றி உனக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். சொந்த அநுபவத்தோடு கலந்த சாத்திர அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தந்து கொண்டிருக்கிறேன். இதற்கு மேலாக அறியவேண்டியது ஒன்றுமில்லை என்பதைத் தெரிந்து கொள். ஆயிரக்கணக்கான சாதகர்களில் ஒரு சிலர் மட்டுமே இந்த மெய்யறிவைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். இவர்களுக்குள்ளும், யாரேனும் ஒருவன் தான் வெற்றி பெறுகிறான். தொடங்குபவர்கள் எல்லாம் நோக்கத்தை எய்திவிடுவதில்லை.

'அர்ஜுனா! உலகத்தில் என்னைவிட உயர்ந்த பொருள் இல்லை. மலர்கள் எல்லாம் நாரினால் கோக்கப்பட்டிருப்பது போல, அனைத்தும் என்னிடம் கோக்கப்பட்டிருக்கின்றன. ஐம்பூதங்களும் மனதும் புத்தியும் அகங்காரமும் ஆகிய இந்த எட்டு வகைத்தான, பிரகிருதி இயற்கைதான், தூலவுலகத்தையும் சூக்கும உலகத்தையும் உண்டாக்கியிருக்கிறது. இது அபரா—பிருகிருதி (தாழ்ந்த இயற்கை) எனப்படும். இதற்கு வேறான பிரகிருதி ஒன்றும் உண்டு. அதற்குப் பரா-பிரகிருதி (உயர்ந்த இயற்கை) எனப்பெயர். அது தூலமுமன்று; சூக்குமமுமன்று. அது அறிவுருவம்; உயிர்களிடத்து உறைகிறது. உலகம் அனைத்தும் அதன் தோற்றமே.

''இறைவன் முதலில் தூல உலகத்தைப் படைத்து, பின்னர் உயிராக அதனுள் புகுந்து, தன்னுடைய அறிவினால் அதையும் அறிவுள்ளதாகச் செய்தான். இது வேதத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அபரா—பிரகிருதியை இறைவனுடைய ஒரு தோற்றம் என்றும், பரா-பிரகிருதியை அவனுடைய சொந்த இயல் என்றும் தெரிந்து கொள்ள வேண்டும். தோற்றம் இயல் என்ற இவ்விரண்டினுடைய பொருளை நன்றாக ஆராய்ந்து புரிந்துகொள். இந்தப் பேரறிவின் கட்டளைகளினால் கட்டப்பட்டிருக்கின்றது இந்தத் தூல உலகம் முழுவதும்; அந்தப் பேரறிவு முழுமுதற்றலைவன்; முழுத்தன்னிச்சை யுடையது.

''உயிர் என்றால் மூச்சு உடையது என்று பொருள். திறமையினாலும் கூரிய அறிவினாலும் உயிர் இந்த மூச்சைக் காத்துக் கொண்டிருக்கிறது. இந்த உயிர்தான் எல்லாவற்றிலும் உட்புகுந்து எல்லாவற்றையும் கட்டிக்காக்கும் உள்ளுறை ஆண்டவன். எனவே பரா-பிரகிருதி என்பது பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளேயாகும். ஒரே பேரறிவினால், தோற்றங்கொள்ளும் எல்லாமே ஒன்று என்று அறிய வேண்டும்.

அறிவும் அறிவற்றதும் ஆகிய இரண்டுமே படைப்பு முழுவதற்கும் இன்றியமையாதவை. இவை முறையே புருஷன், பிரகிருதி எனப்படுகின்றன. எதையேனும் நுகர வேண்டும் என்ற எண்ணம் உண்டாகின்றபொழுது, இந்தப் பேரறிவுச் சக்தி தன் சொந்தச் செயலாக இந்த உலகை வெளித் தோற்றுவிக்கிறது. அறிவற்ற ஜடதத்துவம் உடலாக வெளிக்காண்கிறது. இவ்விரண்டுமே என்னுடைய இயல்கள்தான். படைப்பு, காப்பு, அழிப்பு என்ற மூன்றை யும் இவற்றின் மூலம் செயல்படுத்தும் இறைவனும் நானே நன்றாக நினைவில் கொள்! என்னைத் தவிர வேறொரு பொருளில்லை. என்னைத்தவிர வேறொரு உண்மையில்லை நான் முழுமுதற் காரணம்; முழுமுதற் பொருள் "நான் ஒன்று" "நான் பல ஆவேன்" என்று பலவாக விரிந்து படைப்பதற்கு எண்ணங்கொண்டேன். அந்த எண்ணம் மாயா சக்தியைத் தொட்டு எழுப்பியது அப்பொழுது மஹத்தத்துவம் உண்டாயிற்று. இது பிரகிருதியினுடைய வளர்ச்சியில் முதல்படி.

"மண்ணில் விதை விதைத்து நீர் பாய்ச்சினால், ஓரிரு நாட்களில் அந்த விதை நீரை உறிஞ்சி அளவில் பெரிதாகும். இன்னும் முளைவிடவில்லை. என்றாலும், இதுதான் முதலில் ஏற்படும் மாற்றம். மஹத்தத்துவம் தோன்றுவதும் இது போன்றதொரு நிகழ்ச்சிதான். அடுத்து, இறைவனுடைய விருப்பப்படி, முளைதோன்றுகிறது. அது மஹத் – அஹங்காரம் எனப்படுகிறது. அதிலிருந்து, ஐந்து இலைகள் துளிர்க் கின்றன. இவை ஐந்து பூதங்களின் சூக்கும நிலைகள் எனப் படும். உலகமனைத்தும், பிரகிருதி, மஹத், அஹங்காரம் ஐம்பெரும் பூதங்கள் என்ற இந்த எட்டின் கூட்டுப் படைப்பேயாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 12

''நான் சொல்லிக் கொண்டிருக்கிற அபராபிரகிருதி என்பது என்னுடைய சக்தியின் என்னுடைய பெருமையின் ஒரு தோற்றமே. நினைவில் கொள். மேல் நோக்காகப் பார்த்தால், பாமர நோக்கினுல் பார்த்தால், உலகம் பன்மையாகத் தோன்றலாம். ஆனுல் இது உண்மையல்ல. பன்மை என்பதே இல்லை. உள்ளுணர்வு தேடுவது ஒன்றைத்தான். இதுதான் மெய்யான பார்வை. உட்பார்வையில் மெய்யறிவு நிறையும் பொழுது, உலகம் பரம்பொருளாகத்தான் காட்சி தரும். வேறொன்றுமே இருக்காது. ஆகவே இந்த உள்ளுணர்வை மெய்யறிவில் நாட்டம் கொள்ளும் முறையில் பழக்க வேண்டும்.'' உலகம் உலகநாதனுல் நிரம்பியிருக்கிறது. படைப்பு என்பதும் படைத்தவனின் அத்தகைய வடிவமே. ''இதெல்லாம் ஈசனே'' என்று உபநிஷத்தும் கூறுகிறது.

ஒன்றுதான் இருக்கிறது என்றுலும், அது பலவாகத் தோன்றுகிறது. கண்ணனுடைய இந்தக் கூற்றுக்கேற்ற ஓர் உதாரணத்தை நினைவுபடுத்திக் கொள்வோம். மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் நடந்து போய்க்கொண்டிருக் கிறோம். பொருள்களும் மங்கலாகத் தெரிகின்றன. ஒரு கயிறு வழியில் சுருண்டு கிடக்கிறது. அதைப் பார்க்கும் ஒவ்வொருவனும் அதைப் பற்றித் தனக்குத் தோன்றியவாறு எண்ணிக்கொண்டு போகிறுன். ஆனுல் கயிறு என்னவோ கயிருகத்தான் இருக்கிறது. ஒருவன் அதைப் பூமாலை என்று எண்ணிக் கொண்டு அதைத் தாண்டிப் போகிறுன், இன்னொருவன் அதை ஓடும் தண்ணீர் என்று கருதி மிதித்துக் கொண்டு போகிறுன். இன்னுமொருவன் அதை மரத்திலிருந்து அறுத்துப் போடப்பட்ட கொடி என்று நினைத்துக் கொள்கிறுன்; மற்றும் சிலரோ அது பாம்பு என்று நினைத்துப் பயப்படுகிறுர்கள் இல்லையா?

இதுபோல, மாயையென்னும் மாலையிருளினுல், ஒரே பரம்பொருள், தான் ஒரு மாறுதலும் அடையாமலே தான் தானுகவே எப்பொழுதும் இருந்து கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவங்களாலும் பெயர்களாலும் ஆன இந்தப் பன்மை உலகமாகத் தோன்றுகிறது. கயிறு பலவேருகத் தோற்ற மளிக்கலாம். பலருக்குப் பலவகையான உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் அது உண்டு பண்ணலாம். பலவேறு பொருள்களுக்கு அது இடமாகியிருக்கிறது. ஆனல் அது தானே இத்தனை பொருள்களாகவும் ஆகிவிடுவதில்லை. அது எப்பொழுதும் ஒன்ருகத்தான் இருக்கிறது. கயிறு என்றும் கயிறு தான். அது மாலையாகவோ, நீர்க்கோடாகவோ, கொடியாகவோ, பாம்பாகவோ மாறிவிடவில்லை. தவற் றினல் பரம்பொருள் பலபடியாகக் கருதப்படலாம். ஆனல் அது என்றும் ஒன்றே. எல்லா வகையான கருத்துக்களுக் கும் பரம்பொருள் ஒன்றுதான் ஆதாரம். பூமாலைக்கு நார்போல, கட்டடத்திற்குக் கடைக்கால் போல, பரம் பொருளே உயிர்களை ஊடுருவி இணைத்து நிற்கும் நார், இயற்கை உலகத்தின் கடைக்கால். இதைக் குறித்துக்கொள். நாரும் கடைக்காலும் கண்ணுக்குத் தெரிவதில்லை. மலர் களும் கட்டடமும்தான் தெரிகின்றன. இதனல் நாரும் கடைக்காலும் இல்லையென்று ஆகிவிடுமா? உண்மையில், இவைதான் மாலையையும் கட்டடத்தையும் தாங்கி நிற்கின் றன. கொஞ்சம் முயற்சி செய்து சிந்தித்துப் பார்த்தா யானல் அவற்றின் இருப்பையும் மதிப்பையும் அறிந்து கொள்ள முடியும். இந்த முயற்சியை நீ செய்யாமற் போனல், அவை உனது பார்வைக்குத் தப்பிவிடும். சிந்தித் துப்பார். ஆராய்ந்து பார்; மலர்களை இணைத்து நிற்கும் நார் உனக்குப் புலப்படும். மண்ணுக்கடியில் மறைந்திருக் கும் கடைக்கால் தெரியவரும். கண்ணுக்குப் புலனுகும் ஆதேயப் பொருளை மட்டும் பார்த்துவிட்டு அதைத்தாங் கும் ஆதாரப்பொருளை மறுத்து விடாதே. அப்படி மறுத் தால், உண்மையை விட்டுவிட்டு, பொய்யைப் பிடித்துக் கொள்வாய். ஆராய்ந்து பகுத்துப்பார்; பின் நம்பு; அப் பொழுது உணர்வாய்.

காட்சிக்குப் புலனுகும் எல்லாவற்றிற்கும் காணுத ஆதாரம் ஒன்று உண்டு. கண்ணுக்குத் தெரியாத இதை அறிவதற்கு ஆராய்ச்சி ஒன்றுதான் சிறந்த வழியாகும். அதை உணர்வதே சிறந்த குருவாகும். உணர்ந்து விட்ட வர்களுக்கு அதைப் பற்றிய பேச்சு ஒன்றும் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜபமாலையில் இருக்கும் மணிகள் ஒவ்வொன்றினுடைய தன்மை அளவு என்பதெல்லாம் முக்கியயமல்ல: அவை நமது கவனத்தைச் சிதறடிக்காமல் இருக்கவேண்டும். அந்த மணிகளின் ஆதாரமான மெய்ப்பொருள் எதுவோ அதில் மனம் நிலை பெறவேண்டும். அதுதான் இந்தத் தேட்டத்தின் உயிர் நாடி. ஒரு பூமாலையில் பல மலர்கள் இருக்கலாம். அவைகளில் சில சாதாரண பூக்களாக இருக்கலாம். இவைகள் தாமஸ குணமுள்ள உயிர்கள். சில கண்ணைப் பறிக்கும் வண்ண முடையவையாக இருக்கலாம். இவை ராஜஸ குணமுள்ள உயிர்கள் மற்றுஞ் சில மலர்கள் அழகான தூய்மை யுள்ளவையாக இருக்கலாம். இவை ஸத்துவகுணம் பொருந்திய உயிர்கள். ஆனல் இந்த மலர் களையெல்லாம் தொகுத்து நிற்கும் நார். அது பரம் பொருள். அது மலர்களினின்றும் வேறுபட்டு அவற்றின் சார்பில்லாமல் இருக்கக் கூடியது. அது எதனலும் மாற் றப்படாமல், சத்தியமாய், நித்தியமாய், நிர்மலமாய் விளங்கு கிறது

தனித்தனி மலர்கள் மாலையாகி விடாது. அதற்கு நார்வேண்டும் இதுபோலத்தான் பரம்பொருள் உயிர்களை ஒன்றுபடுத்தி நிற்கிறது. எப்பொருளாயினும் சரி, இவ் விரண்டையும் பிரிக்கமுடியாது, பரம்பொருள் எல்லாவற் றையும் நிரப்பி நிற்கிறது ஐம் பூலப் பொருட்களும் அதன் தோற்றங்களே யன்றி வேறல்ல. மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குத் தென்படாமல் உள்ளுயிரோட்டமாக இருப்பது இதுவே. அது *அந்தர்யாமி* எனப்படுகிறது. இதனல் தான் ''நீரில் சுவையாகவும், சூரிய சந்திரர்களில் நான ஒளியாகவும், வேதங்களில் பிரணவப் பொருளாகவும் ஆகாச வெளியில் ஒலியாகவும், மனிதனிடத்தில் வீரிய மாகவும் நான் இருக்கிறேன்'' என்று கண்ணன் சொன்னன்.

பிரணவம் என்று சொன்னேமல்லவா? அதைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம். வேதங்களின் சாறு பிரணவம் என்று கண்ணன் சொன்னனல்லவா? வேதங்கள், காலத் தால் தொடக்கமில்லாதவை என்று புகழ்பெற்றவை இப்படித் தொடக்கமில்லாத பழமையுள்ள வேதங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் மூச்சு பிரணவம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு அணுவிற்கும் இந்தப் பிரணவம்தான் நுட்ப உயிர் நாடியாக, அடிப்படை அமைப்பாக இருக்கிறது என்று தெரிந்து கொள்.

உலகத்தின் ஒவ்வொரு பொருளிலும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன, அவை பெயரும் உருவமும். இவற்றை எடுத்து விட்டால், உலகம் என்பது இல்லை. உருவமும் பெயரினுல் கருதப்பட்டுக் காக்கப்படுகிறது. உருவம் பெயரைச் சார்ந்து நிற்கிறது. இவற்றில் எது நிலையானது என்று ஆராய்ந்து பார்ப்பாயாஞல் பெயர் நிலையானது என்று உணர்வாய். நல்ல பல செயல்களைச் செய்தவர்கள், புகழ்ச்சிக்குரிய பணி புரிந்தவர்கள். மருத்துவ மனைகளோ பள்ளிகளோ கோயில்களோ தொழுகையிடங்களோ எழுப்பியவர்கள் இவர்களுடைய வாழ்க்கையை எல்லாம் எடுத்துப்பார். அவர்களுடைய உருவம் உலகின் பார்வையிலிருந்து மறைந்து விட்டது: ஆனுல், அவர்களுடைய பெயரும் புகழும் மனிதர்களின் நினைவில் இன்றும் நிலைத்திருக்கின்றன அல்லவா? உருவம் சிறிது காலம்தான் இருக்கும்; ஆனுல் பெயர் நீடிக்கும்.

பெயர்கள் எண்ணிறந்தன: அதே போலத்தான் உருவங்களும். ஆனுல் நீ கருதவேண்டியது இங்கே ஒன்று உண்டு இது படித்தவர் முதல் பாமரன் வரை எல்லாருடைய அநுபவத்திலும் காண்பதுதான்: அவை எழுத்துக்கள் அல்லது அக்ஷரங்கள். தெலுங்கு மொழியிலே ஐம்பத்திரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன. ஆங்கிலத்திலே இருபத்தாறு தான். ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் எழுதப்பட்டிருக்கிற அத்தனை இலங்கியங்களையும் ஒன்று சேர்த்து அடுக்கினுல், அவை மலையாக உயர்ந்தாலும், அந்த மொழிகளில் உள்ள எழுத்துக்கள் என்னவோ 26 ஆகவும் 52 ஆகவும்தான் இருக்கும். ஓர் எழுத்துக்கூட கூடி விடாது.

இவ்வாறே, மனித உடம்பில் ஆறு நரம்பு மையங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் தாமரைப்பூ வடிவில் அமைந்திருக்கின்றன. இந்த ஆறு தாமரை வடிவங்களும் ஒவ்வோர் இதழுக்கும் ஓர் எழுத்தையோ அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது எனது; இதுவும் எனது; இது என்னைச் சேர்ந்தவர்களைச் சேர்ந்தது'' என்று தன்னலத்திற்காகத் தன்னைப் பயன்படுத்துகின்றவர்களை இயற்கை கூடத் தண்டித்து விடுகின்றது. அதன் விதிகளை மீறுபவர்களை அது சிறிது கடுமையாகவே தண்டிக்கிறது. இந்தக் காரணத்துக்காகத் தான், கண்ணன் அர்ஜுனனுக்கு. உபாஸனை 'வழியை விரிவாக உபதேசிக்கிறான். உபாஸனை என்பது இயற்கையைக் கடந்து இறைவனை அடையும் பொருட்டு அந்த இயற்கையையே பயன்படுத்தும் முறையாகும்.

''அர்ஜுனா! என்னை இடையறாமல் தொழவேண்டும். என்று அக்கரையுள்ள பலர் அடர்ந்த காட்டிற்குச் செல்லுகிறார்கள். அது பைத்தியக்காரச் செயலாகும். ஏதோ நான் காட்டில் மட்டும் இருப்பதுபோல, காட்டை நாடிப் போகவேண்டியது இல்லை. நான் இல்லாத இடமேயில்லை. என்னுடையதல்லாத உருவம் ஒன்றுமே கிடையாது. நானே மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து மூலப் பொருட்கள் இந்த ஐந்தில் ஏதேனும் ஒன்று இல்லாத இடத்தை உன்னால் காணமுடியுமா? என்னுடைய சந்நிதியையும் என்னுடைய மாட்சியையும் உணர்வதற்குத் தனியான ஓரிடம் கிடையாது. ஏனெனில், நானே எல்லாம்; எங்கும் இருக்கிறேன். எப்பொழுதும் இருக்கிறேன். தீயில் சுடுவதும் நானே. உயிர்களில் நான் உயிர்க்கனலாக இருக்கிறேன். நான் ஆற்றலுடையவர்களில் ஆற்றலாக இருக்கிறேன். பேராசையும் வெறியும் இல்லாத ஆற்றல் நான். மக்களை அறத்தையும் அதற்குரிய வழியையும் விரும்பத் தூண்டும் இயற்கை நான்.

''ஆற்றல் என்று சொல்லும் பொழுது, அறிவின் ஆற்றலைத்தான் குறிப்பிடுகிறேன். உலகத்தில் பலவகை ஆற்றல்கள் இருக்கின்றன. பணபலம், கல்விபலம் மனிதபலம், மனோபலம், உடற்பலம் எல்லாமே என்னுடையது என்று அறியவேண்டும். ஏனெனில், நான் எல்லாவற்றிற்கும் தலைவன். ஆனால் இந்தப் பல வடிவமான ஆற்றல்களெல்லாம் ஆசை, பாசம், இவற்றிலிருந்து நீங்கியனவாக இருக்க வேண்டும். ஆசையும் பாசமும் விடாமல் இருக்குமானால், அது விலங்கின் ஆற்றலாகிவிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக ஆற்றலாகாது. அது பசுபலமே தவிர பசுபதி—பலமாக ஆகாது.

"ஆசை என்பது ஒரு பொருளைத் தமதுடைமையாக்கி கொள்ளவேண்டும் என்ற அவா. அந்தப் பொருளை அடைவதற்கு வாய்ப்பே இல்லையென்று தெரிந்தாலும் மனம் என்னவோ அதையே விடாப்பிடியாக விரும்புகிறது. பற்று என்பது ஒரு பொருள் கிடைத்தபின் அது தன்னிடத்திலேயே எப்பொழுதும் இருக்க வேண்டும். பிரியக்கூடாது என்ற பிடிப்பு. எதுவுமே நீடித்து அப்படி இருக்க முடியாது; காலத்தால் மறையக்கூடியது, இழக்கக்கூடியது என்று நன்றாகத் தெரிந்தபோதிலும் இந்தப் பிடிப்பு போவதில்லை. ராகம என்ற சொல்லுக்கு ரஞ்சனம் என்பது தாது. ரஞ்சனம் என்றால் இன்பத்தைத் தரத்தக்கது என்ற பொருள். ஆசை, பற்று இவ்விரண்டினாலும் கறைபட்ட எந்தவிதமான ஆற்றலும் இறைமையின் உயர்வைப் பெறமுடியாது.

"அவரவர் கொடுக்கின்ற இடத்திற்கேற்ப சில ஆற்றல்கள் உயர்வையோ ஆழத்தையோ பெறுகின்றன. உதாரணமாக, செல்வத்தை எடுத்துக் கொள்வோம். தீயவரின் கையில் செல்வம் போய்ச் சேர்ந்தால், ஆடம்பரத்தையும், ஆணவத்தையும் கொடுமையையும் வெறுப்பையும் தான் உண்டாக்கும் நல்லவரிடத்தில் போய்ச் சேர்ந்தால், ஈகை முதலிய நல்ல பணிகளைக் குறித்து அது பயன்படுத்தப் படும் தீயவர்தம் உடல் வலிமையைப் பிறருக்குத் தீங்கிழைக்கப் பயன்படுத்துவர்; நல்லவர்கள் பிறரைத் தீமையிலிருந்து காப்பதற்காகப் பயன்படுத்துவர்."

இங்கு இன்னொன்று கவனிக்கப்பட வேண்டும். கோபமும் பேராசையும்கூட அறத்திற்கு முரணாக இல்லா விட்டால் தெய்வீகமானவையே என்று கண்ணன் கூறுகின்றான். ஆயிரம் தடவை சொல்லி என்ன? உணர்வுகள் அனைத்தும், உருவங்கள் அனைத்தும், இருக்கும் பொருள்களனைத்தும் ஒரே தெய்வீக சத்துப் பொருளின் மேலான இயற்கை' கூழான இயற்கை இவற்றிலிருந்து உண்டாகியிருக்கின்றன. உயர்ந்த உணர்வுகளும் உணர்ச்சிகளும் பெறவேண்டுமானால் உயர்ந்த உருவங் களிலும் உயர்ந்த பொருள்களிலும் என் வடிவத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க ஒருவன் பழகிக் கொள்ளவேண்டும் ஆனால் உயர்ந்ததுதான் தெய்வீகம், தாழ்ந்ததில் தெய்வீகம் இல்லை என்று எண்ணிவிடக் கூடாது. அது சரியன்று ஸத்துவ, ராஜஸ, தாமஸ இயல்பு கொண்ட இந்தப் புற உலகமும், அது தூண்டும் செயல்களும் துடிப்புக்களும் எல்லாமே இறைவனிடமிருந்து தோன்றுபவை. இதை நன்கு ஆராய்ந்து இதன் உண்மையை உறுதி செய்வதன் மூலம் தான் முடிந்த முடிவாக வளர்ந்து இது நிலைபெற முடியும். இறைவனே இதை அறிவிக்கிறான்: ''அர்ஜுன! இவையனைத்தும் என்னிடமிருந்து உண்டாயின; இவை யனைத்தும் என்னிடத்தில் இருக்கின்றன. ஆனால் நான் இவற்றைச் சார்ந்து இல்லை; நினைவில் கொள். இவற்றில் எனக்குச் சார்பு இல்லை''

இந்த இடத்தில் இரண்டு நோக்குகள் இருக்கின்றன. ஒன்று, உயிரினுடையது; மற்றது இறைவனுடையது. உயிருக்கு நல்லது. கெட்டது என்ற இரட்டை உணர்வுகள் உண்டு. இறைவனுக்கு இந்த இரட்டை கிடையாது. எல்லாமே இறைவனாக நிற்கும் பொழுது, எல்லாப் பொருள் களிடத்தும் இறைவன் தானாக நிற்கும்பொழுது, நல்லது என்றும் கெட்டது என்றும் எப்படி இரட்டைகள் இருக்க முடியும்?

பாமரமக்கள் இது குறித்துச் சில ஐயப்பாடுகளை அடையக்கூடும். நல்லது கெட்டது இரண்டுமே தன்னிட மிருந்து உண்டாயிற்று என்றும், தானே முழு முதற் காரணம் என்றும் இறைவன் கூறுகிறான். ஆனால் அதே நேரத்தில், அவன் உண்டு பண்ணிய பயன்களினாலோ அவற்றின் தீமைகளினாலோ தான் பாதிக்கப்படவில்லை என்றும், அவை தன்னைப் பிணிக்காது என்றும் அவன் சொல்லுகிறான்! அவற்றோடு தனக்கு எந்த விதத் தொடர் பும் இல்லை என்றும், தன் காரணமாக வந்த அவற்றி லிருந்து தான் தனிப்பட மேம்பட்டவன், அவற்றைக் கடந்து நிற்பவன் என்றும் அவன் அறிவிக்கிறான்.

இதிலிருந்து, இறைவனால் தன் மூலமாகச் செய்யப்படும் நல்வினை தீவினைகளுக்கு மனிதன் காரணமல்ல என்று நீ ஊகிக்கக் கூடும். மனிதனின் மெய்ந்நிலை, நல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியதுக்கு அப்பாற்பட்டது என்றும், எவ்வளவுதான் கொடிய செயலாக இருந்தாலும் அது கடைசியில் பார்த்தால் இறைவனாலேயே தூண்டப்பட்டது, என்றும், தனது செயல் என்று மனிதன் எனையுமே உரிமை கொண்டாட முடியாது என்றும் நீ அனுமானிக்கலாம். உண்மைதான்; ஆனால், ''என்னால் எதுவுமே செய்யப்படவில்லை.'' ''என் மூலமாக இறைவனுடைய திட்டம்தான் நிறைவேற்றப்படுகிறது.'' என்ற நோக்கிலுள்ள உனது நம்பிக்கை சீராகவும், உளமார்ந்ததாகவும், ஆழமானதாகவும் அசையாததாகவும் இருக்க வேண்டும். ஆணவத்தின் சாயலே இருக்கக்கூடாது. அப்பொழுது அத்தகைய மனிதன் வாழ்வின் தலையாய நோக்கத்தை எய்துவிட்டான் என்பது நிச்சயம். அவன் மிகுந்த அருளையும் பெற்றுவிட்டான். அந்த மெய்ப்பொருள் உணரப்பட வேண்டும்; அந்த உணர்வு உறுதி செய்யப்பட வேண்டும். இவை எல்லாம் இறைவனே என்றும், புற உலகிற்கும் தனக்கும் எவ்வகையான உறவும் இல்லை யென்றும், தான் அதற்கு மேம்பட்டுக் கடந்து நிற்பவன் என்றும் உறுதிபெற்றவன் மெய்வாழ்வு வாழ்பவன், அவனுடைய இவ்வுலக வாழ்க்கை பயனுடையது

சொற்கள் பயனில 'அனைத்தும் இறைவனுடையது. நான் அவன் கைப்பாவை; அவன் கயிறுகளை இழுக்கிறான். நான் அவன் விருப்பப்படி ஆடுகிறேன்.' ''ஒன்றும் என்னுடையதல்ல; அவன் விருப்பத்தை நான் செய்து முடிக்கிறேன்'' என்று வெகு நாட்களாகக் கற்றுக்கொண்ட சொற்களைக் கிளிப்பிள்ளை போல திருப்பித் திருப்பி நீ சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் நீ வழக்கமாகச் செய்வதென்ன? ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்து விட்டால், அதை செய்ததாக மார்தட்டக் கொள்கிறாய் கெட்டது ஒன்று நிகழ்ந்துவிட்டால், அது எல்லாம்வல்ல இறைவன் செயல் என்று உருகுகிறாய்! புகழையும் மதிப்பையும், தகுதியையும் அந்தஸ்தையும், அதிகாரத்தையும், பதவியையும் சொத்தையும் சுதந்திரத்தையும் வெற்றிகளையும், சாதனைகளையும் உன்னுடைய சொந்த உழைப்பினால் பெற்றதாகத் தொண்டை கிழிய மேடைகளிலிருந்து அலறுகிறாய். இகழ்ச்சியும் தோல்வியும், தீங்கும், தவறும். உன் பங்காக வந்து சேரும்பொழுது, வெகு வசதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக பொறுப்பை உறைவனிடத்திலே தள்ளிவிடுகிறுய். ''அவன் கைப்பாவை நான்! அவன் தலைவன்; நான் ஒரு கருவிதானே?'' என்று கூறித் தப்பிக்கிறுய். இது இந்த நாள் மனிதனின் பழக்கமாகிவிட்டது. இல்லை, நாகரிக மாகவே பரவிவிட்டது. ''நான்'' 'அவன்' இவற்றை வசதிக் கேற்பச் சுளுவாக மாற்றிக் கொள்ளுகிறுர்கள். கடிகாரத்தின் ஆடியைப் போல, இது வெறும் மோசடி; உட்புறம் காலியான ஆன்மீகப் போலி.

மனமும், வாக்கும், செயலும், இம்மூன்றும். எல்லாம் இறைவன் விளையாட்டு என்ற நம்பிக்கையால் நிரம்பியிருக்க வேண்டும். அதுதான் மெய்வழி. பொருள்களை நல்லவை என்றும் தீயவை என்றும் பிரித்துப் பார்ப்பது மனிதனின் பலவீனம். இவற்றை ஆண்டவன் மீது சுமத்துவது பாவம் ஆண்டவனுக்கே கூட இந்தப் பலவீனம் இருக்கிறதோ என்று சில சமயம் நமக்குத் தோன்றலாம். ஆனல் இத் தோற்றம் தற்காலிகமானது; அவனது பெருமையை மறைக்கும் மேகம்; அவனிடத்து இருப்பதல்ல; நம்மிடத்து இருப்பது.

எல்லாக் குணங்களும் இறைவனிடமிருந்து தோன்றின லும், அவன் பாதிக்கப்படுவதில்லை. நெருப்பிலிருந்து புகை வருகிறது: ஆனல் அதனல் நெருப்பு பாதிக்கப்படுவதில்லை. வானத்தில் மேகங்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லு கின்றன. ஆனல் வானத்திற்கு அதனல் ஒரு மாறுதலு மில்லை. எல்லாப் பொருளும் இறைவனிடத்திலே பொருந்தி யிருக்கின்றன. ஜபமாலையின் மணிகளைப் போல; ஆனல் அவனே தனித்து, மாறுதலில்லாமல் விளங்குகிறுன் இவ் வுலகம் அவனைச் சார்ந்து நிற்கிறது; அவனுக்கு இந்த உலகம் தேவையில்லை.

துணி உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். துணி நூல்களைச் சார்ந்து ஏற்படுகிறது; நூலோ துணியைச் சார்ந்து நிற்கவில்லை. அது தனித்து துணியோடு ஒட்டாமல் இருக்கிறது. பானை செய்யக் களிமண் வேண்டும். களிமண் பானையாகாமல் தனித்து நிற்க முடியும். மீண்டும், துணி என்பது நூல்; பானை என்பது களிமண், களிமண் நிலையில் இருப்பது பரம்பொருள்; பானை நிலையில் இருப்பது இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம். பரம்பொருள்தான் நூல்; இயற்கை உலகம் அதனின்று உண்டாகும் துணி. பானை என்ற பெயரையும் அதன் வடிவத்தையும் நீக்கி விட்டுப் பார்த்தால், பானை வெறுங்களிமண்தான். துணி என்ற பெயரையும் அதன் வடிவத்தையும் மறந்து விட்டுப் பார்த்தால், அது வெறும் நூல்தான். அதுதான் மிஞ்சி நிற்கிறது என்று அறிவாய். களிமண் இல்லாமல் பானை செய்ய முடியாது; நூலில் லாமல் துணி நெய்ய முடியாது. இது போலவே, பரம் பொருள் இல்லாமல் இயற்கை உலகம் வர முடியாது. ,'பரம்பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறது'' என்று சொல்வதை விட, ''பரம்பொருளே எல்லாம்'' என்று சொல்வது உண்மை. எல்லாமாகவும் பரம்பொருளைப் பார்ப்பது, எல்லாவற்றிலும் உள்ளதாக அதைப் பார்ப் பதை விட உயர்ந்தது. இதுதான் சத்தியம்.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 13

இந்த உலகம் என்பது மேற் கட்டடம். இதற்கு அஸ்திவாரம் இறைவன். உலகம் வெறும் தோற்றமே. இறைவன்தான் சத்தியம். அஸ்திவாரத்தை மறந்து விட்டு மேற்கட்டடத்திற்கு மக்கள் ஆசைப்படுகிறார்கள். ஓர் ஆதாரமில்லாமல் மேற்கட்டடம் எப்படி இருக்க முடியும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. இது கூட தவறான பார்வைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்தப் பார்வைக் கோணல் நீங்கப் பெற்றால் படைக்கும் இறைவனைப் பார்க்கலாம். பார்வையில் குற்றம் நீங்கினால், உலகத்தை இயற்றியவனைக் காணலாம்.

கண்ணனின் முன் இந்த விஷயம் அர்ஜுனனால் எழுப்பப்பட்டது. "தவறான பார்வை என்பது என்ன? அதை விவரமாக எனக்குச் சொல், கண்ணா!" என்று அர்ஜுனன் கேட்டான். எப்படி இந்தத் தவறு உண்டாகிறது, எப்படி வளர்கிறது என்றும் அவன் அறிய விரும்பினான். மேலும் அர்ஜுனன் ஒரு சாதாரண மனிதன் அல்ல. சொன்னதற்கெல்லாம் தலையாட்டுபவன் அல்ல. மனத்தில் ஏதேனும் ஐயம் எழுவதாக உணர்ந்தால், கண்ணனைப் பாதி வாக்கியத்திலேயே நிறுத்தும் துணிவு அவனுக்கு உண்டு. அதற்கு வேண்டிய துணிச்சலும் உறுதியும் அவனுக்கிருந்தன. தனது அனுபவத்தில் கண்கூடாக ருசுவாகக் கூடியதும், சாத்திரங்களில் அமைக்கப்பட்டிருக்கிற பேரறிவிற்கேற்றதுமான பதிலைக் கண்ணனிடமிருந்து பெறும்வரை அவன் விடுவதில்லை. அதனால் கண்ணனும் உடனுக்குடன் பதில்களைத் தந்து கொண்டிருந்தான்; அதுவும் ஒரு புன்னகையுடன்!

தவறான பார்வையைக் குறித்த இந்தக் கேள்விக்குக் கண்ணன் பதில் வைத்திருந்தான். "அர்ஜுனா! கேள். எனக்கும் உலகத்திற்கும் இடையே மாயை நடமாடுகிறது. அதுவே மருள் எனப்படுவது. இந்த மாயைக்கு அப்பால் ஊடுருவிப் பார்ப்பது மனிதனுக்கு வெகு கடினமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம். ஏனெனில் அந்த மாயையும் என்னுடையதுதான். என்னுடைய அதே தன்மைதான் அதற்கும். என்னிடமிருந்து வேறு அதை நீ கருத முடியாது. அது என்னுடைய படைப்பு; என்னுடைய ஆணையில் நிற்கிறது. மனிதர்களுக்குள் மிகுந்த வலிமை படைத்தவரையும் ஒரு நொடியில் அது தலைகுப்புற விழச் செய்து விடும்! அதை வெல்வது ஏன் இவ்வளவு கடினமாயிருக்கிறது என்று நீ வியக்கக்கூடும். உண்மை; அது எவ்வாற்றாலும் எளியதன்று. முழுமனதுடன் என்னைப் பற்றியிருப்பவர்கள்தாம் இந்த என்னுடைய மாயையை வெல்ல முடியும். அர்ஜுனா! எங்கிருந்தோ வந்து இறங்கிய அருவருக்கத்தக்க பண்டமாக மாயையை மதித்து விடாதே. அது மனத்தின் ஒரு குணமாகும். என்றுமுள்ள மெய்ப்பொருளை மறந்து விட்டு, பெயரும் உருவமுமான இந்தப் பல வகைப்பட்ட குணங்கள் நிறைந்த பன்மை உலகத்தைப் பெரிதாக மதிக்குமாறு அது செய்கிறது. உடலுக்குள் உறுபொருளே மெய் என்பதறியாமல் உடலையே மெய் என்று நினைக்கும் பொய்யறிவை அது உண்டாக்குகிறது. ஏதோ முன் இருந்து, பின் இல்லாமல் போய் விடுவதல்ல மாயை; முன் இல்லாமலிருந்து பின்னர் வந்து இருப்பதுமல்ல அது. அது இருந்ததே இல்லை; இருக்கவுமில்லை; இருக்கப் போவதுமில்லை.

''இல்லாத ஒன்றிற்குத்தான் மாயை என்று பெயர். ஆனால் இந்த இல்பொருள் காட்சி தருகிறது! அது பாலைவனத்தின் கானல் நீர்; அது என்றுமே இல்லாத, இப்பொழுதும் இருக்காத தண்ணீர்த் தோற்றம்: உண்மை தெரிந்த ஒருவன் இந்தக் கானல் நீரைப் பார்க்கவில்லை. பாலை நிலத்தின் இயல்பு தெரியாதவர்கள்தாம் அதைக் குறித்துக் கவரப்படுகிறார்கள். அதைக் குறித்து ஓடி, துன்பத்தையும் ஓய்ச்சலையும் திகைப்பையும் அனுபவிக்கிறார்கள். ஓர் அறையில் எழும் இருள் அந்த அறையையே மறைப்பது போல, தண்ணீரில் வளரும் பாசி அந்தத் தண்ணீரையே மூடிவிடுவது போல, கண்ணுக்குள் வளர்ந்து பார்வையையே மறைக்கும் சாளேச்வரத்தைப் போல, தன்னை வளர்ப்பவனிடத்திலேயே மாயை ஒட்டிக்கொண்டு விடும். முக்குணங்களையும் மூன்று கடவுளரையுமே அது ஆட்டுவிக்கும். குறைவு பட்டதையும், பெயருள்ளதையும், உருவ

முள்ளதையும். தனித்துப் பிரிந்து நின்றதையும் தம்மோடு ஒன்றுபடுத்திக் கொள்கின்றவர்கள் அதனால் பாதிக்கப்படு கிறார்கள். உயிரைப் பற்றிய பிரமை இதைத் தோற்றுவிக் கிறது. உண்மையைப் பற்றிய அறிவு இதை அழிக்கிறது. பொய்ம்மாய மயக்கம் உண்மையை மறைத்தாலும், உண் மையைக் கண்டுணர்ந்தவர்களிடத்தில் அதன் ஆதிக்கம் செல்லாது.

''அர்ஜுனா!'' உன்னிடம் தானே இந்த மாயை பிறக் கிறது; பிறந்த இடத்தையே சூழ்ந்து இடர்விளைக்கும் இந்த மாயை உன்னையும் மாசுபடுத்தி விடாதா'' என்று ஒரு வேளை நீ கேட்கலாம். இதுபோன்ற ஐயம் எழுவதும் இயற்கையே. ஆனால் என்னிடம் அதற்கு இடம் இல்லை இவ்வுலகத்திற்கு வேண்டுமானால் மாயை காரணமாக இருக்கலாமே தவிர, கடவுளுக்கே அது காரணமாகி விடாது. நான்தான் மாயையை ஆட்டுவிக்கும் ஆணை யாளன். நான் நினைத்தபடி மாயையின் விளைவான இந்த உலகம் நடக்கிறது; இயங்குகிறது. அதனால், என்னிடம் பற்று வைத்து என் இச்சைப்படி நடக்கிறவனுக்கு மாயை ஒரு தீங்கும் விளைவிக்க முடியாது. அவனுடைய ஆணையை யும் மாயை மதிக்கிறது. மாயையை வெல்வதற்கு, எங் கும் நிறைந்த பரம்பொருளை அறிந்து அந்தப் பரம்பொருள் தான் தன்னுடைய சொந்த இயற்கையாக இருக்கிறது என்பதைத் திரும்பவும் கண்டு கொள்வது ஒன்றுதான் வழி. என்றுமே அழியாத ஒன்றில் காலத்தின் எல்லையைச் சுமத்தும் பொழுது மாயை செயல்படத் தொடங்குகிறது. பசியும் தாகமும் உயிர்ச் சக்தியின் அடையாளங்கள். சாவும் பிறப்பும் உடலின் தன்மைகள். இன்பமும் துன்ப மும், துடிப்பும் கற்பனையும், மனம்அறிவு இவற்றினுடைய தன்மைகள். இவையெல்லாம் மெய்ப்பொருளின் தன்மை களல்ல. பொய்ப்பொருளின் தன்மைகள்.

''நீ உண்மையில் மெய்ப்பொருளாக இருக்க, இந்தப் பொய்ப் பொருளாகக் குறைவுபட்டு அதனுடைய தன்மை களுக்கெல்லாம் உட்பட்டுவிட்டதாக நம்புவதுதான் மாயை ஆனால், மறந்து விடாதே! என்னிடம் சரண் புகுந்தவரை இந்த மாயை ஒன்றும் செய்வதில்லை. மாயையிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழலுபவர்களுக்கு அது கடலளவு தடையைத் தோற்றுவிக்கும்: ஆனால், கடவுளிடத்து மனத்தைக் குவிப்பவர்களுக்கு. மாயை மாதவனாக வந்து நிற்கும்; எல்லையற்ற இறைவனோடு ஒன்றும் பான்மையை வளர்த்துக் கொள்வதன் மூலமோ, அல்லது அவனிடம் முழுவதும் சரணடைவதன் மூலமோ; மாயை என்னும் தடையைத் தாண்டலாம். முதலாவது ஞானயோகம் என்றும், இரண்டாவது பக்தி யோகம் என்றும் சொல்லப்படுகிறது.''

''எல்லாவற்றையும் இறைவனிடத்து அளித்து விடுவதன் மூலம் மாயையை வெல்வதற்கு வேண்டிய உள் உந்துதல் எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. பல பிறவிகளில் சேர்த்த நல்வினை தீவினைப் பயன்களைப் பொறுத்திருக்கிறது அது. தீவினைப் பயன்களையே சேமித்து வைத்திருக்கும் பவர்கள் அழியக்கூடிய புலனின்பங்களையே தேடுவார்கள். பறவைகளையும் விலங்குகளையும் போல இவர்கள் சோற்றையும் சுகத்தையும் விரும்புவார்கள், இவற்றையே வாழ்வின் பெரும் பேறாக அவர்கள் கருதுகிறார்கள். இறைவனைப் பற்றிய எண்ணமே இவர்களுக்கு இருப்பதில்லை. நல்லவர்கள், நற்குணம் படைத்தவர்கள் அவர்களுடைய சேர்க்கையையே இவர்கள் வெறுக்கிறார்கள். நற்செய்கைகளை விட்டு நழுவி ஓடுகிறார்கள். இறைவனுடைய திருநாட்டிலிருந்து இவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள்,

''இதற்கு மாறாக, நல்வினைப் பயனைச் சேமித்து வைத்தவர்கள் நல்லியல்புகளை வளர்த்துக் கொள்ளவும், தம்மை உயர்த்தும் எண்ணங்களைப் பெருக்கிக் கொள்ளவும், இறைவனைச் சிந்திக்கவும் முயலுகிறார்கள். இறைவனுக்காக அவர்கள் ஏங்குகிறார்கள். இப்படி இறைவனைத் தேடுபவர்கள் துன்பத்தினாலோ, அல்லது ஏழைமையினாலோ, அல்லது அறிவு வேட்கையினாலோ. அல்லது மெய்யுணர்வு பெறும் முனைப்பினாலோ இறைவனிடம் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால், அமைதிக்காக அவர்கள் இறைவனை நாடுகிறார்கள் என்பது, அவர்கள் பல பிறவிகளை எடுத்துப் பின் உயர் வழியை எய்தியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த இலாபங்களை எதிர்பார்த்தோ இலாபம் ஒன்றே குறியாகக் கொண்டோ செய்யப்படும். ஸகாம கர்மங்களை (சுயநலக் காரியங்களை) கீதை ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. தன்னலங் கருதாது செய்யப்படும் நிஷ்காம — கர்மம் தான் (தன்னலமற்ற தியாகச் செயல்கள் தாம்) உன்னை மருளிலிருந்து விடுதலை செய்யும்.

ஏதோ இடுக்கண் ஏற்பட்டு அதைப் போக்கிக் கொள்வதற்காக இறைவனை நாடும் பக்தனைப் பற்றி ஓர் ஐயம் எழக்கூடும். அத்தகைய பக்தன் உண்மையில் ஒரு பக்தன்தானு என்ற கேள்வியும் பிறக்கக்கூடும். ஏதோ ஒருவகையில் குறைகள் இல்லாத மனிதன் ஒருவனும் உலகில் கிடையாது. தன்னுடைய குறைகளைத் தீர்க்க ஒவ்வொருவனும் யாரையாவது நம்பித்தான் இருக்கிறன், இல்லையா? ஆனல் இம்மாதிரி அதில்லையே, இதில்லையே என்று குறைபட்டுக் கொள்வதே தவறு. இந்தக் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தன்னைப் போன்ற மற்றொரு மனிதனை நம்புவது இன்னும் மிகத் தவறு. துன்பத்தில் இடர்ப்படும் பக்தன் அதை நீக்க மனிதனை நாடுவதில்லை. தான் நம்பி வழிபடும் ஆண்டவனை நாடுகிறன். தன் துயர் தீர்க்குமாறு அவனைத்தான் அவன் வேண்டுகிறன். குறைகளை வளர்த்துக் கொள்வது தவறென்றாலும், தாழ்ந்த மட்டமான கருவிகளை நம்பிப்போவது இதைவிட இன்னும் பிசகாகும். ஆகையால் ஆண்டவனை நம்புகின்ற பக்தன் உயர்ந்தவன் அல்லவா? நீ எதை வேண்டுகிறய் என்பதைவிட யாரை நீ வேண்டுகிறய் என்பது முக்கியம் என்பதை உணர்ந்து கொண்டால் இந்தப் பக்தனுடைய மனப் பான்மை ஏன் உயர்ந்தது என்பது புலப்படும். ஆண்டவனே நமது குறிக்கோள்; அவன்தான் எல்லாம் கொடுப்பவன். அவனது அருள்தான் வரங்களை அளிக்கவல்லது. இந்த நம்பிக்கை உறுதியாக நிலைந்திருந்தால், ஆர்த்த — பக்தன் (துன்பத்தால் வருந்துகின்ற போது இறைவனது அருளை வேண்டுகின்ற இந்தப் பக்தன்) உண்மையில் பெறுமானம் உடையவனே,

கீதையில் சொல்லப்பட்ட ஆர்த்தனுகட்டும், அர்த் தார்த்தியாகட்டும், ஜிஜ்ஞாஸுஆகட்டும், அதாவது இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே இடுக்கண் வந்துற்றபோது அதை நீக்கஇறை வனை வேண்டி நிற்கும் பக்தன்' செல்வத்தை வேண்டி நிற்கும் பக்தன், மெய்யறிறை வேண்டி நிற்கும் பக்தன் எனப்படுவர். இம் மூவகைப் பக்தர்களும் இறைவனை ஏதோ ஒரு நோக்கத்தைப் பெறுவதற்காக வழிபடுகிறார்கள். இறைவனை ஒரு கருவியாகக் கருதுகிறார்கள். அவ்வளவு தான். ஆனாலும், இவர்கள் எப்பொழுதும் இறைவனைத் துதித்து வழிபடும் மனப்பான்மையோடுதான் இருப் பார்கள்; எப்பொழுதும் அவனை மறக்கமாட்டார்கள்.

நான்காவது வகை மெய்யன்பனான ஞானி (மெய்யறி வுடையவன்) ஏகபக்தி யுடையவன்; மற்றவர்களெல்லாம் அநேக பக்தி யுடையவர்கள். மற்றவர்களெல்லாம் தங்க ளுக்கு வேண்டிய பொருள்களுக்காகவோ வாழ்க்கை நிலைகளுக்காகவோ அவற்றின் மீதுள்ள பற்றினால் அவற்றை ஆண்டவன் மூலமாகப் பெறமுடியுமென்று கருதி அவனிடமும் பற்றுக்கொண்டிருக்கிறார்கள்' இறைவனிடத்து மட்டுமன்றி, புற உலகத்தின்பாலும் அவர்களுக்கு ஈடுபாடு இருக்கிறது மெய்யறிவாளனான ஞானியோ இறைவனைத் தவிர மற்றவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். அப்படிப்பார்த்தாலும், பார்க்குமிடந்தோறும் இறைவனையே காண்பான். இதனால்தான், ஞானியே எல்லோரிலும் எனக்கு இனியவன் என்று கண்ணன் அறிவித்தான். எல்லோரும் அவனுக்குச் சமம் என்பது உண்மைதான், ஆயினும், அவனை அடைந்து அவனது திருமுன் நிற்பவர் களுக்கு இறையன்பு வெளிப்படையானது. நேராக ஏற்படும், அனுபவ பூர்வமாக உணரப்படுவது. ஆகையி னால், ஞானியே இறைவனுக்கு மிக நெருங்கியவன் என்றும் மிக இனியவன் என்றும் ஊகிக்கலாம்.

குளிரால் நடுங்கும்போது நமக்குச் சூடுதருவது நெருப் பின் தம்மைதான். ஆனால், நெருப்பின் அருகில் போகாம லேயே எட்ட நின்று கொண்டிருந்தால் அது எப்படி நமக்குச் சூடு தரும்? அதுபோலவே, உலகத்துத் தீமைகள் என்னும் குளிரிலிருந்து விடுபடவேண்டுமென்று உண்மை யாக விரும்புகின்றவர்கள் இறைவனருளால் மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கக்கூடிய மெய்யறிவு என்னும் நெருப்பை நாடி இறைவனது திருமுன் நேருக்கு நேர் நிற்கவேண்டும்.

தங்களது முயற்சிகளுக்கிடையே சாதகர்கள், இறைவனவன் உண்மையில் இருப்பதைவிடக் குறைந்த பெருமையுடையவனாகவே நினைத்துக் கொள்கிறார்கள். ஏதோ அவ்விறைவன் சாதுக்களையும் தீயவர்களையும், நல்லவர்களையும் கெட்டவர்களையும், அறிந்தவர்களையும் அறியாதவர்களையும் வேற்றுமைப்படுத்துவது போல இவர்கள் எண்ணுகிறார்கள். இவையெல்லாம் தவறான முடிவுகளாகும். மனிதர்களை இப்படியெல்லாம் இறைவன் வகைப்படுத்துவதில்லை. அப்படியே அவன் செய்தால், அவனுடையசீற்றத்தை ஒரு தீயவனும் இவ்வுலகத்தில் ஒரு விநாடி கூடத் தாங்க மாட்டான். உலகில் நாம் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இறைவன் வேற்றுமை பாராட்டுவதில்லை என்பதனால்தான். இந்த உண்மை ஞானி ஒருவனுக்குத்தான் தெரியும். மற்றவர்களுக்கு இது தெரியாது. கடவுள் ஏதோ தங்களை விட்டு எங்கோ வெகு தூரத்தில் இருப்பது போன்ற பொய்யான எண்ணத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

ஞானி மாயையினின்றும் விடுபட்டவன்; ஸத்வம் ராஜஸ் தமஸ் என்ற முக்குணங்களினால் அவன் கவரப்படவில்லை. அறிவை விரும்பி நிற்கிற ஜிஜ்ஞாஸுவோ வென்றால் இதற்குமாறாக இருக்கிறான். புனித எண்ணங்கள், இறை பணிகள் இவற்றை மேற்கொண்டு, இடையறாமல் இறைவனைச் சிந்திப்பதில் தன் நேரத்தைச் செலவிடுகிறான். ஆர்த்தர்களும் அர்த்தார்த்திகளும், தங்களை உயர்த்தும் அநுபவங்களை வளர்த்துக் கொண்டு, மெய்யையும் பொய்யையும் ஆராய்ந்து மெய்யறிவினை விரும்பும் ஜிஜ்ஞாஸுக்களாக மலர்கிறார்கள்.

காலப் போக்கில், அவர்களே ஞானிகளாக ஆகி, கரையேற்றப்படுகிறார்கள். இவ்வாறு, வாழ்வின் பயனானது படிப்படியாக அடையப்படுகிறது. ஒரே அடியில் அந்தப் பயனை அடைந்துவிட முடியாது.

இதை ஓர் உதாரணத்தால் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும். ஞானம் என்பது நெடுந்தூரம் நேரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் ரயில். அதாவது, தன் ஊருக்குப் போவதற்கு ஒருவன் எங்கும் நடுவில் இறங்கி வண்டி மாற வேண்டிய தில்லை. அறிவை விரும்பும் ஜிஜ்ஞாஸுவும் நேர தன் ஊருக்குச் செல்லும் பெட்டியில் ஏறிக் கொள்கிறான். ஆனால் இந்தப் பெட்டி நடுவில் வழியில் பல நிலையங்களில் நிறுத்தி வேறு வேறு ரயிலோடு இணைத்து விடப்படும். கடைசியில் அவன் போக வேண்டிய இடத்தை அடைகிறான். துயரத்திலிருந்து தன்னைக் காப்பாற்ற இறைவனை நாடும் ஆர்த்தன் சாதாரண ரயிலில் ஏறிக் கொள்கிறான். இது எங்கும் வண்டி மாற வேண்டிய தேவையில்லாமல் நேரே போகும் ரயிலுமல்ல; வழியில் பிரிந்து வெவ்வேறு ரயில்களோடு பொருத்தி விடப்படும் பெட்டியுமல்ல; வழியில் பல இடங்களில் இறங்கி வேறு வண்டி வரும்வரையில் காத்துக் கிடக்க வேண்டியவன் இவன். தன்னுடைய இடத்திற்குப் படிப்படியாகப் போய்ச் சேருகிறான். இது தொல்லை நிறைந்த தொலைவுப் பிரயாணம். ஆனால், இவ்வளவு தொல்லைகளுக் கிடையேயும், இந்த ஆர்த்தன் விடாமல் முயன்றானுல் பிரயாணத்தை முடிக்கமுடியும். எல்லோரும் தம் இடத்திற்குப் போய்ச் சேருவதென்னவோ உண்மை; போகும் வழியும் விரைவும் வெவ்வேறு. இந்த நால்வகைப் பக்தர்களும் தர்மர்களேஎன்று கண்ணன் பல தடவை சொல்லிருப்பதில் வியப்பில்லை. ஏன் அப்படிச் சொன்னான்? எனில் அவர்களெல்லோரும் ஒரே உயர் இலட்சியத்தைதேயேதான் தேடுகிறார்கள்.

"ஆகையினாலே விரிந்து ஆழங்காண முடியாத அந்த ஒன்றைத் தேடுங்கள். சின்னவற்றுக்குள் உங்கள் ஆசைகளைக் குறுக்கிவிடாதீர்கள் சிறியதற்கு ஆசைப்படும் மனிதர்கள் கருமிகள். பெரியவனும் இறைவனை விரும்பும் மனிதர்கள்கள் பெரும் இதயம் படைத்தவர்கள், பெருந் தன்மை படைத்தவர்கள்" என்றான் கண்ணன்.

ஞானியின் பக்திதான் ஸஹஜ பக்தி எனப்படுகிறது. அதுதான் இறைவனிடத்தில் நேருக்கு நேராகச் செலுத்தப் படும் அன்பு: மற்றவருடைய பக்தி எல்லாம் கௌண பக்தி, சுற்றி வளைத்துச் செல்லும் அன்பு, மெய்யறிவு படைத்த ஞானி இறைவனைத் தன்னுடைய சொந்த ஆத்மாவாகப்

பார்க்கிறான். பக்தி என்பது அனுரக்தி; இறைவனைக் குறித்த பற்று; - பரிவு. பூஜ்யேஷு அனுராக: பக்தி. வணக்கத்திற்குரிய இடத்தில் வைக்கப்படும் அன்பு அது என்றான் கண்ணன். பல பிறவிகளில் சேமித்த நற்பயனால் ஒருவன் ஞானியாகிறான். நினைத்த உடனே ஏதோ ஒரு வேகத்தில் அடையப்படும் நிலை அல்ல அது விலை கொடுத்துக் கடையில் வாங்கக் கூடிய தாயார்ப் பண்டமல்ல. கடைச்சரக்கு அல்ல. அது பல பிறவிகளில் பயின்ற ஆன்மீகப் பயிற்சியின் நிறைவு. மக்களுக்குச் சேவை செய்ய நல்ல மருத்துவர்கள் வர வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் பல ஆண்டுகள் படிப்பும் அனுபவமும் தான் அவர்களை உருவாக்க முடியும். தகுதியில்லாதவர்கள் மருத்துவமனைகளில் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டால், அவர்கள் மருந்து கொடுப்பது, ரணசிகிச்சை செய்வது என்று தொடங்கி விட்டால் குணப்படுத்த வேண்டியவர்களைக் கொன்று குவித்து விடுவார்கள். இது போலவே. இன்று ஒருவன் ஞானியாக விளங்குகிறான் என்றால், எவ்வளவு ஆண்டுகாலம் செய்த தவம் அவனுக்கு இத்தகைய உயர்வைத் தந்திருக்கும் என்று நீங்கள் எண்ணிப் பாருங்கள், முற்பிறவிகளிலிருந்து தொடரும் ஆன்மீகச் சக்திகளும் அவனது முயற்சிகளுக்கு உதவுகின்றன.

யாரெல்லாமோ இன்று தங்களை ஞானி என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஞானி தனக்கே உரித்தான சில இயல்புகளை உடையவன் என்பது ஒருவேளை இவர்களுக்குத் தெரியாது போலும். ''இவை எல்லாம் வாஸுதேவனே'' என்று தனது சொந்த உணர்வில் தோன்றிய முழக்கமே அவன் உண்மையான ஞானி என்பதற்கு அடையாளம். அந்த உணர்வை உறுதியாகத் தனதாக்கிக் கொள்வதுதான் ஞானியின் மெய்யான அறிகுறி இங்கு வாஸுதேவன் என்றால், வஸுதேவருடைய மகன் என்பது பொருளல்ல; எல்லாவற்றையும் தனக்கு வசிக்குமிடமாகக் கொண்டவன் என்பதுதான் பொருள். எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பவன்தான் ஞானி என்று சொல்லத் தகுந்தவன். இங்ஙனமன்றி தம்மைத் தாமே ஞானி என்று மற்றவர்கள் சொல்லிக் கொள்வார்களானால் அத்தகையவர்கள் பெரயள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்தான் அப்படி. ஞானத்தை உண்மையாக உணர்ந்தவர்களாகமாட்டார்கள். இந்த ஞானம் என்பதுதான் என்ன? எல்லாவற்றையும் அறியச் செய்யும் நுண்ணறிவை அடைவதுதான் அது. ஆகவே மற்றெதையும் அறிவதைத் தேவையற்றதாக்குகிறது அந்த நுண்ணறிவு.

இது ஞானி போய்ச் சேரும் உச்சம். இதற்கு மாருக, சில பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்கள், சில புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தவர்கள், பத்துப் பேரோடு மேடைகளேறி கல்வியின் பெருமிதத்தில், மந்திரவாதி வாயிலிருந்து நூலிழையை முடிவில்லாமல் வெளிக் கொணருவதுபோல, ஏற்கனவே நெட்டுருப் போட்டதை யெல்லாம் மூச்சுவிடாமல் நீளநீளப் பேச்சுக்களாக உருட்டி மணிக் கணக்காக அளப்பவர்கள், இவர்களெல்லாம் ஞானி என்று சொல்லிக்கொள்ள முடியாது தங்களைத் தாங்களே ஞானி என்று பட்டம் சூட்டிக்கொண்டு திரிகின்ற போலிகள் நிறைய இன்று இருக்கிறார்கள். அவர்கள் உடுத்தியிருப்பது என்னவோ காவி; ஆனால் அவர்களது உள்ளங்கள் பாவி. வெறுங்கற்கள் ஒளி வீசும் மணிகளாகுமா? கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? செங்கற் கல்லைச் செம்பொன் என்று எவன் எடைபோடுவான்? அறியாதவர்கள்தாம் இதிலெல்லாம் ஏமாந்து போவார்கள். அவர்கள் பொன்னையும் கண்டவர்களில்லை; மண்ணையும் கண்டவர்களில்லை.

கீதையில் மந்திரங்களின் அரசான இந்த ''எல்லாம் வாசுதேவனே'' என்பதைக் கண்ணன் அறிவித்ததே, இத்தகைய போலிப் பொய்யர்களை முறியடிப்பதற்காகத்தான். இத்தகைய புல்லர்கள் அவ்வப்பொழுது முளைப்பார்கள் என்று எதிர்பார்த்துத்தான் அவன் அவ்வாறு செய்தான். மனித இனத்தைக் காப்பதற்கு அந்த ஒரு மந்திரரத்நம் போதும். அது அவனுடைய மறைமுகமான நன்கொடை. அதை அவ்வாறு அறிந்து, அதன் பொருளில் கருத்தைச் செலுத்துங்கள். அதுவே தலையாய நன்மை; அதுவே தலையாய பயன். ''வாஸுதேவஸ் ஸர்வம்'' என்பதிலுள்ள ஆறு எழுத்துக்கள்தாம் மனித வாழ்வைப் பயனுள்ளதாகச் செய்ய முடியும். இந்த மந்திரச் சொற்களின் உணர்வு எக்காலமும் உள்ளத்தில் இல்லாமலேயே, பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை மகாத்மா, ஜகத்குரு, பகவான், பரமஹம்ஸன் ஞானி, தியாகி, ஆனந்தன் என்றெல்லாம் அழைத்துக் கொண்டு, போலியாயும் தம்மை எப்படியோ மக்களிடத்தில் மெய்யடியார் போல் நடித்துச் செல்வாக்குப் பெற்று விடுகிறார்கள். இந்தப் பட்டங்களை யாரும் அவர்களுக்கு அளிக்கவில்லை. தாங்களாகவே பொறுக்கி எடுத்து தலைமேல் கொண்டைபோல அணிகிறார்கள். ஊர்க் கவனத்தைத் தம்பால் இழுபதற்காக. இவை போலியானதால் வெகு விரைவிலேயே அவற்றின் கவர்ச்சி மறைந்துவிடும். அவர்கள் புறதோற்றத்தில் சந்நியாசிகள். ஆனால் உள்ளத்தில் பல ஆசைகள். வெளிப்பார்வைக்கு யோகம் ஆனால், உள்ளுக்குள்ளே ரோகம். அவர்கள் பெயரெல்லாம் ஆனந்தம் என்று அலறும்; ஆனல், அவர்கள் வழியெல்லாம் தப்பி அலைவர். அவர்களது சொற்கள் தேன்; ஆனல், அவர்களது செயல்கள் வீண். இந்தத் தியாக யோக வேடதாரிகளைவிடத் தனது அன்றாடக் கடமைகளை ஒழுங்காகக் செய்து கொண்டு வாழும் ஓர் இல்லறத்தான் ஆன்மீக வழயில் எவ்வளவோ மேல்.

இந்தப் போலிகள் செய்யும் தீமைகள்தாம் பாரத நாட்டின் அறநெறியின் சீர்குலைவுக்கும் அதன் பழமையான வாழ்க்கை முறையின் நலிவிற்கும், பண்பாட்டின் தேய்விற்கும் காரணம். இதே காரணத்தினல்தான் கடவுளிடத்து நம்பிக்கை குறைந்துவிட்டது. தியாகத்தை உபதேசித்துக் கொண்டு போகத்துக்காக இவர்கள் அலைகிறார்கள். வாயளவில் அறவழியை உயர்த்திப் பேசிக்கொண்டு வெறுப்போடு செயல்படுகிறார்கள் இவ்வித நடத்தை துறவின் ஆணிவேரையே வெட்டி எறிந்து விடுகிறது. அழிவிற்கு அவர்கள் தப்பாமல் செல்லுகிறார்கள். எங்கு சொல்லும் செயலும் ஒன்றுபடவில்லையோ அங்கு உண்மையின் சுவடே இருக்காது.

நல்லது; இல்லறத்தார் ஏதோ கூடவோ குறையவோ உண்மையைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுள்ளும் ஒன்றையும் வெறுக்காமல் மாசற்ற இதயங் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். நன்னெறி, நற்குணம் இவற்றினைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். ஆனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகிகள், யோகிகள் என்று உலா வருகிறவர்கள்தாம் எல்லாவகையான வெறுப்புணர்சிகளுக்கும் ஆளாகி எல்லாவகை ஆசைகளுக்கும் அடிமையாகியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இவர்களை வீழ்த்துவதற்காக தோண்டிவைக்கப்பட்ட படுகுழிகள் இவை. இவைகளில் விழுகிறார்கள். ஆணவம், பொறாமை, படாடோபம் இவை சாதகனுடைய அத்தனை முயற்சிகளையும் வீணடித்து விடுகின்றன. ஆகையால், உண்மையை நாடுபவர்களும், பக்தர்களும் எப்பொழுதும் விழிப்புடனிருக்க வேண்டும். விரும்பத்தகாத இந்த ஆபாச குணங்களிலிருந்து அவர்கள் விலகியிருக்க வேண்டும். இறைவனுடைய பெருமையை நினைத்திருப்பதிலேயே அவர்கள் வளர வேண்டும்; வாழ்வின் நோக்கத்தை அடைவதிலே பெறப்படும் பேரின்பத்தை உணர்வதற்கு ஆர்வத்துடன் முயன்று கொண்டு. அறநெறியைப் பயிலுவதில் அவர்கள் உயரவேண்டும். பின்னர், தாம் எய்தும் இந்தப் பேரின்பத்தை உலகத்தாரோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். அது உலக அமைதியையும் உலக வளத்தையும் தோற்றுவிக்கும், ஞானிகளின் மூலமாக உலகம் ஒளி பெற்றுத் திகழும் என்று கண்ணன் சொன்னபொழுது இத்தகைய உண்மையான ஞானிகளைத்தான் குறிப்பிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 14

மெய்யுணர்விற்கு நிகரானது ஒன்றில்லை. மெய்யுணர்வு (ஞானம்) என்பது என்ன? இந்த மாறாத ஓட்டமென்னும் கடலை, ஸம்ஸாரத்தைக் கடக்கச் செய்வதுதான் மெய்யுணர்வு. உண்மைதான். அது இரண்டு வகைப்பட்டது பொருள்களைப் பற்றிய அறிவு முதலாவது; வேற்றுமையற்ற ஒருமை அறிவு இரண்டாவது.

முதலாவது; உலகத்தைப் பற்றிய அறிவு. இரண்டாவது, உயிரையும் மெய்ப் பொருளையும் ஒன்றாக அறியும் அறிவு. இதுதான் வேற்றுமையற்ற முழு அறிவு இது ஏதோ புத்தியினுடைய செயலன்று. அதற்கும் மேம்பட்ட, புத்தியினுடைய செயல்களையும் பார்த்துக் கொண்டிருக்கும் ஒன்றின் அமைப்பு அது. மெய்யென்று நாம் தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் இந்த மாறாத ஓட்டத்தைப் பற்றிய மயக்கத்தை அது அழிக்கிறது. மனிதனுடைய இதயத்திலிருந்து அது அச்சத்தை அகற்றுகிறது. அவனாகவும், இவை எல்லாமாகவும் இருக்கும் பரம்பொருளை அது அவனுக்குத் தெரிவிக்கிறது அதனால் அது மெய்யறிவு என்றும், மிக நுண்ணமையான அறிவு என்றும் அழைக்கப் படுகிறது.

இந்த வேற்றுமை நீங்கிய மெய்யறிவை இரண்டு வழிகளில் மனிதன் அணுகலாம். ஒன்று அகத்தது. மற்றது புறத்தது. இவற்றில் புறத்தது நிஷ்காம கர்மம்: எல்லாச் செயல்களையும் பயன் கருதாது இறைபணியாய்ச் செய்தல். தியானமும் சமாதியும் அகவழிகள். வேதாந்த பரிபாஷையில் இது நிதித்யாஸனம் எனப்படும். முதலில் கற்றுப் பின் கற்றவற்றைச் சிந்தனை செய். இவைதான் தியானத்தின் இரண்டு தளங்கள். இவையின்றி, தியானத்தைப் பெறுவது முடியாத காரியம்.

இதுதான் ஆத்ம-ஸம்யமம் என்பதன் பொருள், அதாவது, புலனடக்கம், புற உலகத்தினின்றும் ஒதுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்றல், புற உலகத்தினின்றும் மனத்தை மீட்டு உள்ளிழுத்துக் கொள்ளல். இதுதான் வாழ்க்கையின் குறிக்கோள்; பரம் பொருளை அறிவது; வீடுபேற்றை அடைவது இதைத் தவிர வேறு பயன் மனிதனுக்கு இருக்க முடியாது. மாளிகைகள் கட்டிக் கொள்வதற்கோ, பணங்களை வாங்கிச் சேர்ப்பதற்கோ, செல்வத்தைக் குவிப்பதற்கோ, மக்களைப் பெறுவதற்கோ, பட்டங்கள் சம்பாதிப்பதற்கோ, சமூக வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்கோ ஒரு வழியாக மனிதனுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவனுடைய பெருமை இவற்றைச் சார்ந்து இல்லை. வாழ்க்கையின் வெற்றி முழுவதும் நிரந்தரமான இன்பத்தைப் பெறுவதிலும், துயரத்திலிருந்தும் கொந்தளிப்பிலிருந்தும்நிரந்தரமான விடுதலை பெறுவதிலும்தான் அடங்கியிருக்கிறது.

''உலகெங்குமுள்ள நித்திய வாழ்வின் செல்வக் குழந்தைகாள்! கேண்மின்!' (ச்ருண்வந்து விச்வே அம் ருதஷ்ய புத்ரா:) என்பதுதான் அறைகூவல்: அழைப்பு இறவாத நித்திய வாழ்வு நம் பரம்பரைச் சொத்து; இதைத் தெரிந்து உணர வேண்டும். இது திரும்ப அடையப்பட வேண்டும். பெயர் உருவங்கள் என்ற தளைகள் நீங்க வேண்டும் கனவுப் பொருள்களால் ஆகிய தளைகள் அவை. அவைமாறக் கூடியவை: தற்காலிகமானவை உயிர்களின் உண்மையான இயல்புகள் அல்ல அவை. மனிதன் தூய இன்ப வடிவமானவன் என்று உணர்வதே மெய்யறிவு. இந்த இன்பம் முக்காலங்களிலும் மாறுமல் இருப்பது. சிறிது காலத்துக்குத் துன்பத்திலிருந்து தப்புவதும் சிறிது 'காலத்துக்கு இன்பத்தைப் பெற்றிருப்பதும் உண்மையான விடுதலைக்கு அடையாளங்களல்ல. ''இந்த மெய்யான' தூய, மாருத இன்ப நிலையை நீ தேடுவாயாகுல், என்னை நீ பற்ற வேண்டும்'' என்முன் கண்ணன்.

''அர்ஜுனு! முதுமையிலிருந்தும் தளர்ச்சிலிருந்தும் விடுபடுவதற்காக என்னைப் பற்றிக் கொண்டு எவன் ஆன்மீக சாதனங்களைப் பழகுகின்முனே அவன் பிரம்மம், கர்மம், ஆத்மா இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதையெல்லாம் தெரிந்து கொள்வான். அதிபூதத்திற்கும், அதிதைவத்திற்கும் அதியக்ஞத்திற்கும் நானே தலைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பக்தன் என்னை வழிபட்டால், மனத்தின்கட்டற்ற போக்குகளை முழுவதும் அடக்கிச் சீர்மையை வளர்த்துக் கொள்வான். மேலும், அத்தகைய பக்தன் தனது இறுதி நேரத்திலும் என்னை மறவாமல் என்னையே நினைத்திருப்பான். அதனால் என்னையே அடைவான். அதாவது, என்னிடம் கலந்து விடுவான்.

''அர்ஜுனா! ஒவ்வொருவரும் முதுமையையும் சாவையும் தவிர்க்க வேண்டுமென்று கவலைப்படுகிறார்கள். கவலைப் படுவது என்பது மனிதனின் பலவீனம்தான். ஆனால் வெறுங் கவலையினால் மட்டும் ஆவது என்ன? தான் அடைய விரும்பும் குறிக்கோளுக்கு ஏற்ப ஒருவனதும் நடத்தையும் செயல்களும் அமைய வேண்டும். மனமறிந்து விரும்பினால், இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து அந்த நம்பிக்கை யோடு அவனைச் சரணடைந்தால், அவனது அருட்கதிர் களால் துயரப் பனிப்படலம் சிதறுண்டு போகும். இதற்கு மாறாக, உலகத்துப் பொருள்களிடம் ஒருவன் நம்பிக்கை வைப்பானானால், அதனால் வரும் துன்பத்திற்கு முடிவே இராது. இறைவனைத் தவிர வேறொரு சக்தியினாலும் அதை அழிக்கவும் முடியாது. இந்த மாயையின் நாயகனை, இந்தக் கனவுலகத்தின் சிற்பியைச் சேவியுங்கள்; கனவைச் சேவிப் பதைவிட இதுதான் மேல்.

''மயக்கத்தில் பற்று வைத்தால் ஏமாற்றத்தைத் தவிர வேறு என்ன கிடைக்கும்? இத்தகைய தேட்டங்களால் எப்படிப் பேரின்பம் பெற முடியும்? பேரின்பத்தைப் பெறாமல், துன்பம் அகலாமல் எப்படி விடுதலை கிடைக்கும்?'' என்று கண்ணன் கேட்டான்.

இப்பொழுது அர்ஜுனன் இடைமறித்தான். ''கண்ணா! இத்தகையவர்கள் உன்னை அடைய முடியாதா? உன்னை அடைவதற்கு முன்னால் துயரத்தை வென்றாக வேண்டும் என்று சொல்கிறாய். நல்லது; அந்தத் துயரத்தின் தோற்று வாய் என்ன? அதை எப்படிச் சமாளிப்பது? அது எப்படி உண்டாகிறது? அது உண்டாகும் வகையும் வளரும் வகை யும் தெரியாமல் அதை அடக்குவதற்கு ஒருவன் எப்படி முயல முடியும்? இந்தத் துயரம் எவ்வாறு மனித மனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகின்றது என்பதைத் தயை செய்து எனக்குச் சொல்லவேணும்!'' என்ருன்.

''அர்ஜுனு! கேள்! எல்லா வகையான துயரங்களுக்கும் அறியாமையே காரணம். இந்த அறியாமைக்குக் காரணம் என்ன என்று என்னை நீ கேட்கலாம். நான் சொல்லுகிறேன் உடலோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்வது; உடலே நான் என்று பயங்குவது; இதுதான் அறியாமை. உண்மையை உணர்ந்தால்தான் இது நீங்கும். இருளை அகற்ற வேண்டுமானுல் ஒளி வேண்டும். அதை அச்சுறுத்தி விரட்டி விட முடியாது; கெஞ்சிக் கூத்தாடி இறைஞ்சி அதைப் பணிய வைக்க முடியாது. விளக்கை ஏற்றிஞலொழிய இருள் மறையாது நீ என்ன செய்தாலும் சரி, இது போலவே, அறியாமை ஒழிக என்று ஆசைப்பட்டால் மட்டும் அது மறையாது. அந்த அறியாமையின் தன்மையையும் அதனுடைய விளைவுகளையும் உணர்ந்து கொண்டால், உண்மை வெளிப்படும், துயரம் மறையும்.

''அறியாமை நீங்கும் போது துயரமும் நீங்கும். ஆகவே என்னைப் பற்றிக் கொண்டு மெய்யறிவின் ஒளியைப் பெற்று, துயரமில்லாத வாழ்க்கையை அடைவாயாக'' என்று கண்ணன் சொன்ஞன்.

உடனே அர்ஜுனன், ''கண்ணு! இதுவரை உன்னை அடைவதற்குரிய சில வழிகளை நீ சொல்லிக் கொண்டு வந்தாய். இப்பொழுது, இதன் முடிவில் இந்த வெடி குண்டைத் தூக்கிப் போட்டால் அதன் பொருளை நான் எவ்வாறு புரிந்து கொள்ளமுடியும்? அதற்கு முன்னேற்பாடாக, நீ எனக்குச் சிறிதளவு ஆற்றலையும் கொடுத்தாயில்லை. தயவு செய்! இந்த விஷயத்தை இன்னும் சிறிது விளக்கமாக எனக்கு எடுத்துச் சொல்லி எனக்கு மகிழ்ச்சியைத் தரவேணும். அப்பொழுது உன்னை இன்னும் நன்ருக அறிந்து கொள்வதற்கும் உன்னையே அடைவதற்கும் அது உதவியாயிருக்கும்'' என்று அர்ஜுனன் பதட்டப்பட்டான்

இதற்குக் கண்ணன் ''என் அருமை மைத்துனு! கேள் *பிரம்மம், அத்யாத்மம், கர்மம். அதிபூதம், அதிதைவம், அதியக்ஞம்* இவற்றின் பொருளைத் தெளிவாக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டால் என்னுடைய இரகசியம் புலப்படும். உனக்கு இன்னொன்றும் சொல்லுகிறேன். என்னுடைய இரகசியத்தை அறிந்தவன் என்னை அறிந்தவனாகிறான்.''

''அப்படியானால், மதுசூதனா! எனக்கு முதலில் பிரம்மம் என்பதை எடுத்துச் சொல்வாயாக!'' என்று வியந்து கேட்டான் அர்ஜுனன்.

''அர்ஜுனா! இந்த பிரம்மம் என்பது மேலானது அழியாதது என்று குறிப்படப்படுகிறது. பிரம்மம் என்ற சொல் பெரியது 'அகண்டது' என்ற தாதுவிலிருந்து பிறந்தது. எவ்வளவு 'பெரியது' என்று நீ கேட்கலாம். நீ பெரியது என்று எதைக் கருதுகிறாயோ அதைவிடப் பெரியது, இதுதான் விடை. அக்ஷரம் என்றசொல் அழியாதது என்று பொருள்படும் அதற்கு இன்னொரு பொருளும் உண்டு. எங்கும் நிறைந்தவன். எங்கும் கரந்தவன் என்பது பிரம்மம் என்பது வெறும் அக்ஷரம் மட்டுமல்ல என்பதை நீ கவனித்திருப்பாய் அது பரம் அக்ஷரம் இதன் பொருள் என்ன? அது காலத்திற்கும் இடத்திற்கும் அறிவிற்கும் அப்பாற்பட்ட ஓர் அக்ஷரம் அல்லது அழியாப் பொருள் நம்முடைய சிந்தனையின் எந்த அமைப்பினாலும் அதை அறியமுடியாது. அது தேய்வதுமில்லை; முடிவதுமில்லை. அது மேலான அழியாப் பொருள்; வாக்கிற்கும் கற்பனைக்கும் எட்டாதது.

''இத்தகைய பரம்பொருளை அடைவதுதான் மனித இனத்தின் குறிக்கோள். 'அழியாதது' என்பதும் ''பரம் பொருள்'' என்பதும் ஒரே இலட்சியத்தைத்தான் குறிக்கின்றன. ஒரே உண்மையின் இரண்டு பக்கங்களான ஸகுணத்தையும் நிர்க்குணத்தையும் அவை காண்பிக்கின்றன. 'அக்ஷரம்' என்ற சொல் ''ஓம்'' என்ற பிரணவ எழுத்தையும் குறிக்கும். இந்த ஓம் என்பது பரம்பொருளின் குறியீடாகும். இதனால்தான் கீதையின் இந்த அத்தியாயம் அக்ஷர—பரப் பிரம—யோகம் எனப்படுகிறது பிரம்மத்திற்கு இரண்டு அடைமொழிகள் உண்டு. ஒன்று பரமம்; இன்னொன்று அக்ஷரம். அக்ஷரம் என்பது ஓம் என்ற பிரணவத்தையும் குறிக்கும்; மாயையையும் குறிக்கும். மாயையும் கூடப் பிரணவத்தில் அடங்கும் இவையிரண்டும் பரம்பொருளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 Prof. V. SIVASAMY

குணங்களோடு கூடியதாக ஸகுணமாகச் செய்கின்றன. ஆனால் பரம்பொருள் உண்மையில் குணங் குறிகளில்லாத தூய தன்னிறைவை உடையது. இதை அறிபவன் என்னை அடைகிறான்.

''இனி அடுத்த கருத்துக்கு வருவோம்; இந்தப் பரம் பொருள்தான் ஒவ்வொரு உடலிலும் ''நான்'' என்னும் வடிவத்தில் வசிக்கிறது. உண்மையில், இந்த ''நான்'' என்னும் பொருளைச் சுற்றித்தான் ஒவ்வொரு உடலும் இயங்குகிறது. ஒவ்வோர் உடலிலும் அதன் ஒவ்வொரு பகுதியும் உறுப்பும் ஒரு முக்கியமான வேலையைச் செய்கிறது ஒவ்வொரு புலனும் வெளியுலகத்திலிருக்கும் ஒரு குறிப்பிட்ட பொருளோடு தொடர்பு கொண்டு, குறிப்பிட்ட உணர்வுகளை நமக்கு அறிவிக்கின்றது. ஆனால் புலன்களோடு சேர்ந்திருந் தாலும், அவற்றுக்கு மேலாக அவற்றிற்குப் பின்னால் ''நான்'' என்று ஒன்று உடலில் விளங்குகிறது இதனுடன் தொடர்பு நீங்கினால் எல்லாமே சடப் பொருளாகிவிடும்.

''இந்த ''நான்'' என்ற ஆற்றல் புலன்களினூடே பாயும் பொழுது, அவை தமக்குரிய தொழிலைச் செய்ய வல்லவை களாகின்றன. அந்த ஆற்றல்தான் அத்யாத்மம் எனப்படும் மிகுந்த பிரயாசையின்றி இதைத் தெரிந்து கொள்ள முடியாது. மிகவும் கூரிய பகுத்தறிவைப் பயன்படுத்தினால் ஏதோ சிறிதளவு அதைத் தெரிந்து கொள்ளலாம். பிரம்மம் என்பது ''தத்'' (அது) என்று கூறப்படும். அத்யாத்மம் என்பது ''த்வம்'' (நீ) என்று கூறப்படும். இதை இன்னும் விளக்கமாகத் தெரிவிப்பதென்றால், இவை யிரண்டையும் முறையே தோற்றம் என்றும் தன்மை என்றும், அல்லது உருவம் என்றும் அந்த உருவத்தையுடைய செம்பொருள் என்றும் கொள்ளலாம். பிரம்மம் என்பது உருவம்; அத்யாத்மம் என்பது அதையுடைய செம்பொருள்'' என்றான் கண்ணன்.

இந்தக் கருத்தை இன்னும் சற்று ஊன்றிப் பார்க்கலாம் வேதங்கள் பரம்பொருளைச் (பிரமத்தை) சத்-சித்-ஆனந்தம் உண்மை, அறிவு, இன்பம்) என்று வர்ணிக்கின்றன அல்லவா? வேதாந்த மொழியில் இப்படிச் சுட்டிக்காட்டுவது ஒரு முறை இன்னொரு முறை. அஸ்தி, பாதி பிரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இருக்கிறது, விளங்குகிறது' அன்புக்குரியது) என்பது. இவ்விரண்டு வர்ணனைகளும் ஒன்றா' வெவ்வேறா? ஸத என்றால் கடந்தகாலம் 'நிகழ்காலம்' வருங்காலம் மூன்றிலும் மாறாமல் தொடர்ந்து நிற்பது என்று பொருள். இதே பொருள்தான் அஸ்தி என்ற சொல்லிற்கும். சித் என்றால் எல்லாவற்றையும் அறிகின்ற ஒன்று என்ற பொருள். இதே பொருள்தான் பாதி என்ற சொல்லினாலும் பெறப்படுகிறது. ஆனந்தம் என்றால் முடிவில்லாத பேரின்பம் என்று பொருள். பிரியம் என்ற சொல்லும் இதையேதான் காட்டுகிறது. இவை மூன்றும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் காணக்கிடக்கின்றன. மனிதன் மட்டுமல்ல, விலங்குகள், பறவைகள் இவற்றிலும் கூட இவை அமைந்திருக்கின்றன.

இம்மூன்றில், ஸத் என்பதை எடுத்துக் கொண்டு பாருங்கள்; இது இன்னும் தெளிவாகும். ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் இந்த உடல் அழியக்கூடியது· இது எல்லோருக்கும் தெரியும். இந்த அடிப்படையான உண்மையை அறியாதவர்கள் யாருமில்லை. இருந்தும். சாவைக் கண்டு எல்லோரும் நடுங்குகிறார்கள். மரணத்தை வரவேற்பவன் யாருமில்லை; அதை ஆர்வத்தோடு சந்திக்க விரும்புபவனும் இல்லை. சாவு தவிர்க்க முடியாதது. அதை வரவேற்காவிட்டாலும் அதை விலக்க முயன்றாலும் அதை என்றைக்காவது ஒரு நாள் சந்தித்தாக வேண்டும். பிறந்ததெல்லாம் ஒருநாள் மறையத்தான் வேண்டும், இருந்தும், யாரும் சாவதை விரும்புவதில்லை.

இந்த முரண்பாட்டுக்கு என்ன தீர்வு? நன்றாக இதைக் கவனியுங்கள் :- சாவை வரவேற்காதது யார்? எது சாவைத் தழுவுகிறது? எது நீங்கிப் போகிறது? எது மிஞ்சி நிற்கிறது? இதற்கு விடை: உடல்தான் சாகிறது; உடல்தான் விழுகிறது. இறவாதது ஆத்மா என்ற செம்பொருள். அது நாமே. 'நாம்' என்ற ஆத்மா இறப்பதாகத் தவறாக நீங்கள் எண்ணி மயங்குகிறீர்கள். மெய்ப்பொருளாகிய நமக்குச் சாவுமில்லை; பிறவியுமில்லை. உடல் சாகிறது. ஆத்மா மெய்ப்பொருளோ, நித்தியமாகவும், சத்தியமாகவும், நிர்மலமாகவும் இருப்பதால் அழிவதில்லை. இந்த அழியாத மெய்ப்பொருளே நீங்கள் எல்லோரும். நீங்களே ஸத்; உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பே ஸத். நீங்கள் தான் இறவாமையின் புதல்வர்கள். உடலல்ல ஆத்ம மெய்ப் பொருளே இருப்பது, உடலல்ல.

நீங்களே ஸத்; அழிவில்லாத ஆத்மா. ஒவ்வொரு உடற் பேழையிலும் இருப்பது இந்த ஆத்மாதான். அதனுல்தான், என்றும் மாருத உள்ள பொருளாக இந்த ஸத்தின் ஆற்றலை ஒவ்வொரு உயிரும் உணர்கிறது. இதில் ஐயத்திற்கிடமே யில்லை. அவ்வளவு தெளிவாக இருக்கிறது.

இனி இரண்டாவது தன்மையான சித் என்பதை எடுத்துக் கொள்வோம். சித் என்பது எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும்படி தூண்டும் ஆற்றல். தனக்குத் தெரிவதை யெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் எல்லோருக்கும் ஆர்வம் இருக்கிறது ,இது என்ன? இது எப்படி ஏற்படுகிறது?'' என்றெல்லாம் அவன் கேட்கிருன். இப்படி அறிந்து கொள்வதில் வெற்றி பெற்றவர்கள் எண்ணிக்கைகளில் மிகச் சிலராக இருக்கலாம். மற்றும் சிலருக்கு ஆர்வம் மட்டும் இருக்கலாம். ஆனுல் விடாமல் முயன்று வெற்றி பெறுவதற்கு வேண்டிய உறுதியான அறிவாற்றல் இல்லாமலிருக்கலாம். ஆனுல் இதனுலே ஒன்றும் வித்தியாசமில்லை. தேவையானது என்னவென்ருல் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கைதான், துடிப்புத்தான்.

நீங்கள் சந்தைக்கோ கடைத்தெருவிற்கோ கண் காட்சிக்கோ செல்லும்பொழுது உங்களோடு ஒரு சின்னப் பையனையும அழைத்துக் கொண்டு போங்கள். இரண்டு பக்கங்களிலுமுள்ள பல்வேறு பொருள்களைப் பார்த்துக் கொண்டு மட்டும் அவன் வருவதில்லை என்பதை நீங்கள் பார்க்கலாம். ''இது என்ன? அது என்ன?'' என்று தன்னை அழைத்துச் செல்பவரை விடாமல் கேள்விகள் கேட்பான். அது அவனுக்குத் தேவையில்லாத பொருளாக இருக்கலாம்; அல்லது அவனது அறிவிற்கு எட்டாததாகவும் இருக்கலாம்; இருப்பினும் அவனது கேள்விப் பெருக்கு நிற்காது.

இந்த அறிவுப் பசியின் உட்பொருளைச் சிந்தித்துப் பாருங்கள். தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் சித் சக்தியே இது. எது எப்படி இருந்தாலும் இருக்கட்டும் என்று விட்டு விடும் இயற்கை அதனிடம் இல்லை. அறிவு ஏற்படும்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அமைவதில்லை. ஆகவே இந்தப் பசி கேள்விப் பெருக்காக வெளியாகிறது. இந்த சித் சக்தி தன்னொளி கொண்டது. அதனால் ஜடப்பொருள்களையும் விளங்கச் செய்யும் ஆற்றல் அதற்கு உண்டு. அதனால்தான் இந்தக் குணங்களெல்லாம் மனிதனிடத்தில் ஒளிர்கின்றன. மற்றப் பொருள்களையும் அவனுக்குத் தெளிவாக்குகின்றன. மனிதன் தன்னிடத்தில் இந்தச் சித் சக்தியை அல்லது அறிவாற்றலைப் பெற்றிருக்கிறான் என்று விளக்க இதுவே போதும்.

இனி: மூன்றாவது தன்மையான ஆனந்தம். விலங்கு களும் பறவைகளும் கூட யாரும் தூண்டாமலே சொல்லித் தராமலே இன்பத்துக்கு ஏங்குகின்றன. அதை அடை வதற்கு எல்லா முயற்சிகளையும் செய்கின்றன. அவைகளில் ஒன்றுகூடத் துயரத்திற்கும் துன்பத்திற்கும் ஆசைப் படுவதில்லை. அவற்றிலிருந்து தப்புவதற்கும், அவை எல்லா முயற்சிகளையும் செய்கின்றன; அவை தவிர்க்கமுடியாதன வாக ஆகும் பொழுது. அவற்றைத் தீர்த்துக் கொள்ளவும் முயலுகின்றன.

மனிதனைப் பற்றியோ, வேறு அதிகமான விளக்கம் ஒன்றும் தேவையில்லை அவன் எப்பொழுதும் எல்லாச் செயல்களிலும் முயற்சிகளிலும் இடையறாத இன்பத்தையே தேடுகிறான். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், வாழ்க்கையின் எந்த நிலையிலும் அவன் துன்பத்தை விரும்புவதில்லை. செய்யும் எந்தத் தொழுகையிலும், பங்கு கொள்ளும் எந்தப் பஜனையிலும், ஏற்றுக் கொள்ளும் எந்த நோன்பிலும், நடத்தும் எந்தச் சடங்கிலும், செல்லும் எந்த யாத்திரையிலும், தன் ஆன்மீக நலனுக்காகத்தரும் எந்த நன்கொடையிலும், தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் இன்பத்தையும் மனநிறைவையும் அவன் வேண்டுகிறான்,

அவ்வளவு தூரம் போவானேன், நோயினால் உடல் வருந்தும் பொழுது அதைப் போக்கி அவனை மறுபடி முழு மனிதனாக்க மருத்துவர் மருந்து கொடுக்கும்பொழுது, அந்த மருந்து கூட இனிப்பாகவும், இதமாகவும், உவப்பாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான்!

இந்த ஆசையின் வேர் எது? மனிதன் அடிப்படையில் இன்ப இயல்பினனாக இருக்கிறான். இன்பமே அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தத் தன்மை. அவன் தங்கியிருக்கும் உடலின் தன்மையல்ல அவனது இந்தச் சொந்தத் தன்மை அவன் ஆத்மா. இன்பம் என்பது ஆத்மாவின் இயல். அதனால்தான், நீங்கள் இன்பமாக இருக்கும் பொழுது ஒருவரும் வியப்படைவதில்லை உங்கள் இன்பத்திற்குக் காரணம் என்ன என்று அவர்கள் குடைந்து பார்ப்பதில்லை. ஏனெனில், உங்களுக்கு அது இயற்கையான ஒன்று. ஏற்கனவே இல்லாத இடத்தில் ஒன்று திடீரென்று காணப்படும் பொழுதுதான் உங்களுக்கு வியப்பு ஏற்படுகிறது. தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்கும் ஒன்று நம்முடைய ஆவலைத் தூண்டிவிடுவதில்லை இயற்கைக்கு மாருக ஒன்று உண்டாகும் பொழுதோ. காணப்படும் பொழுதோதான் இந்த ஆவல் ஏற்படுகிறது,

இந்த உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிறது கிண்கிணி ஓசை கேட்கும் பொழுதும் அல்லது வேறு ஏதேனும் பொம்மையைப் பார்க்கும் பொழுதும், அல்லது அதன் உள்ளத்தை மலரச் செய்யும் இனிமையான ஏதேனும் ஓர் உணர்வு உண்டாகும் பொழுதும் அது சிரிக்கிறது; விளையாடுகிறது இதையெல்லாம் பார்த்து ஒருவரும் வியப்படைவதுமில்லை; கவலைப் படுவதுமில்லை. இதன் விளைவாக ஒருவரும் தங்கள் மன அமைதியை இழப்பதில்லை இப்பொழுது, விளையாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்த குழந்தை அழுது அலற ஆரம்பித்தது என்று வைத்துக் கொள்வோம். சுற்றி இருப்பவர்களெல்லாம் உடனே தொட்டிலை நோக்கி ஓடுவார்கள்; குழந்தையின் மெத்தையையும் மெத்தை விரிப்பையும் உதறிப் பார்த்துக் குழந்தையின் அழுகைக்குக் காரணத்தைத் தேடுவார்கள். குழந்தையை வளர்ப்பதில் அனுபவம் உள்ளவர்களுக்கு இதெல்லாம் தெரியும். குழந்தை ஏன் மகிழ்ச்சியாக இருந்தது என்பதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள ஒருவரும் கவலை கொள்ளவில்லை. ஆனல் அது அழும். பொழுது அதற்கான காரணத்தை எல்லோரும் தேடினுர்கள். இது ஏன் ஏனென்ருல், மகிழ்ச்சியும் இன்பமும் அதன் இயற்கை துன்பம் செயற்கை; அதன் இயல்புக்கு விரோதமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டும் இல்லை; இன்னும் இருக்கிறது. நம்முடைய அநுபவத்திலிருந்தே வேறொரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். உங்களுடைய உறவினரோ நண்பரோ வசதியாக மகிழ்ச்சியாக இருக்கிறார் என்றால், அவர் எப்படி அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார் என்று அறிந்துகொள்ள ஒருவரும் சிரமப்படுவதில்லை. அவரைப் பற்றி அக்கறைப் படுவதில்லை. அது ஏன், இது எப்படி என்று கேள்விகளால் அவரைத் துளைத்தெடுப்பதில்லை. ஆனால் அவரைத் துயரம் தாக்கும் பொழுது, அவர் துன்பப்படும் பொழுது, அவரையும் தொந்தரவுபடுத்தி, நீங்களும் கவலைக்குள்ளாகிறீர்கள். இது ஏன் என்றால், மகிழ்ச்சி இயற்கையானது; எதிர்பார்க்கக் கூடியது; வியப்புக்குரிய' ஒன்றன்று. அது ஆத்மாவின் சொந்தத் தன்மையாகும். அந்த ஆத்மா என்ற மெய்ப்பொருளே நாம் ஒவ்வொருவரும். இதனால்தான் இடையறாத இன்பத்திற்காக ஒரு மனிதன் ஏங்குகிறான்.

மேல்கூறிய ஸத் சித் ஆனந்தம் என்ற மூன்றும் ஒவ்வொரு உயிரிலும் அதன் இருப்பினுடைய ஆதாரமாகவும். அதன் உண்மையாகவும் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். எனவே, இறைவனே உயிரினது வேடத்தை எடுத்துக் கொண்டிருக்கிறான்; அதற்கேற்பத் தனி மனிதனாக நடக்கிறான் இந்த உட்கருத்தைத்தான் கண்ணன் விளக்கிச் சொன்னான். பிரம்மமும் அத்யாமமும் ஒன்றே என்பதையும், இவ்விரண்டும் தானே என்பதையும் அர்ஜுனன் புரிந்து கொள்வதற்காக இவ்வாறு விளக்கினான்.

பின்னர், மூன்றாவது கருத்துப் பொருளான கர்மம் என்பது என்ன என்பதை முழுவதும் விளக்கிக் கூற வேண்டும் என்று அர்ஜுனன் வேண்டினான். இதற்கு உடன்படக் கண்ணன் தயாராக இருந்தான் ' அர்ஜுனா! எல்லாவற்றையும் உண்டாக்கி, காத்து, அழிப்பதற்கு வேண்டிய வரைமுறைதான் கர்மம் எனப்படுகின்றது. நிற்பதும் சொல்வதுமாகிய எல்லாம் உலகத்துப் பொருள்களே ஏன் படைக்க வேண்டும் என்ற தீர்மானம் செய்வதே கர்மம் தான். அது தான் முதலாவது, இதுவே எங்கும் எல்லாவற்றையும் ஊக்குவிக்கிறது. இவ்வுலகமனைத்தும், அதன் கணுள்ள அத்தனை இயக்கங்களும், கொந்தளிப்புகளும் நிகழ்ச்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய விருப்பம் என்ற அந்த முதல் கர்மத்தின் விளைவுதான். என்னுடைய விருப்பம், தீர்மானம் இருக்கும் வரை. கர்மத்தின் ஓட்டமும் இருக்கும். நான் முடிவெடுக் காதவரை அந்த ஓட்டம் நிற்காது நீங்கள் செய்வதெல் லாம் இந்த வெள்ளப் பெருக்கில் வந்து சிக்கிக் கொள்வது தான். ஏன்? இந்தப் பெருக்கில் நீங்கள் வேகமாக இருக்கி றீர்கள்; அல்லது சுழிகளாக அல்லது அலைகளாக இருக்கி றீர்கள். என்னுடைய ஆணையே கர்மத்தையெல்லாம் தூண்டுவது அதனுல், எனது விருப்பப்படி செய்யப்படும் கருமங்களெல்லாம், செயல்களெல்லாம் என்னைச் சேர்ந்தவை யாகி விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 15

''செயலே எனது இயல்பு; நானே செயலாகத் தோன்றுகிறேன்'' என்றான் கண்ணன். இது அர்ஜுனனைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கண்ணனோ ''எல்லாச் செயலும் தெய்வீகமானது. தன்னுடைய தத்துவம் அது'' என்று தெளிவாகச் சொல்லுகிறான். ''எங்கும் நிறைந்த பரம் பொருளும், தனிஉயிரும், செயலும் என்ற இந்த மூன்றும் என்னிடத்தில் பொருந்தியிருக்கின்றன என்று நீ தெரிந்து கொண்டால் போதும். இவற்றைப் பற்றிய அறிவு வீடு பேற்றைத் தரும். மற்றதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்'' என்று, மேற் கொண்டு இதைப் பற்றிய சர்ச்சையைத் தவிர்க்க விரும்புபவன் போல், கண்ணன் பேசினான். எதிரிகளின் படைகளுக்குள் தேரைச் செலுத்திப் போரைத் தொடங்குவதற்குக் கண்ணன் விரும்பினான் என்பது வெளிப்படை. ஏனெனில் காலம் பறந்து கொண்டிருந்தது.

ஆனால் அர்ஜுனன் பிடிவாதமாக இருந்தான். அவன் மனப்போக்கு வேறு வகையாக இருந்தது. சாதாரண மனிதர்கள் கண்ணனுடன் இவ்வளவு நேரங்கூட வாதாடி யிருக்க முடியாது ''மற்றதைப் பற்றிக் கவலைப்படாதே'' என்று கண்ணன் சொன்ன பொழுது யாரும் கவலையை விட்டிருப்பார்கள். ஆனால் அர்ஜுனன் தான் கண்ணனுக்கு வாய்த்த சரியான கேள்வியாளன்; அது போலவே கண்ணன் தான் அர்ஜுனனுக்கு வாய்த்த பொருத்தமான ஆசிரியன். உண்மையில் அவர்கள் நரதனும் நாராயணனும் அல்லவா? இந்த உரையாடலின் பொருத்தமும் பயனும் மதிப்பும் இதனால் உண்டானதுதான்.

அர்ஜுனன் இதனுடன் விட்டுவிடுவதில் திருப்தியடைய வில்லை. அவன் கண்ணனின் உறுதி மொழியை ஒப்புக் கொள்ளவில்லை. 'கண்ணா! மிச்சமிருக்கும் மூன்றைப் பற்றியும் சொல்வாயாக!'' என்று கெஞ்சினான். ''என்னைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகமென்னும் சிக்கலிலிருந்து காப்பாற்று'' என்று இறைஞ்சினான். ''இருளை நீக்கி எனக்கு உனது உண்மையைக் காட்டு!'' என்று வற்புறுத்தினான் இதைக் கண்டு கண்ணன் சிறிது மனமிளகினான், அர்ஜுனனது முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்து ''வருத்தப்படாதே; உனக்கு எல்லாம் சொல்லுகிறேன். நான் குறிப்பிட்ட அதிபூதம் என்பது அப்படி ஒன்றும் சிக்கலான விஷயமன்று. எல்லாருக்கும் எளிதில் புரியக் கூடிய ஒன்றுதான். தேய்ந்து மறையும் எல்லாம், உருவமும் பெயரும் உள்ள எல்லாம் அதிபூதத்தில் அடங்கும்.

''இதை வேறு வகையாகச் சொன்னால், அதிபூதம் என்பது எனது தாழ்ந்த இயற்கை. உடலோடு கூடிய எல்லாம், இங்கும் அங்கும் எங்கும், அதிபூதமே. இருப்பினும், அவை என்னைவிட வேறன்று, என்று கூறிக் கண்ணன் நிறுத்தியதில் ஏதோ பொருள் பொதிந்திருந்தது. மேற்கொண்டு அந்த உரையைத் தொடரவில்லை!

இறைவனின் வழிகள் அவனுக்குத் தான தெரியும. அவற்றின் பொருளையும் நோக்கத்தையும் மற்ற யாரும் புரிந்து கொள்ள முடியாது. அவற்றை விளக்க முற்படுவது வீண்முயற்சியாகும்.

''அவை என்னைவிட வேறன்று!'' இந்தச் சொற்களைக் கேட்டதும் அர்ஜுனன் வியப்பால் கல்லாய்ச் சமைந்து போனான். அவனது மனம் பல ஐயங்களால் கனத்தது. அவனது அறிவு மயங்கியது. அவனது உறுதிப்பாடுகள் ஆடிப் போயின. அவனது மனத்தில ஐயங்கள் பயங்கரமாகப் பெருகின. அவன் ஏன் இப்படி இடர்ப்பட்டான்? இந்தத் தடுமாற்றத்திற்கெல்லாம் காரணம் என்ன?

''நான் ஸத் – சித் – ஆனந்தம், நான் ஸத்தியப் பொருள் என்றுமுள்ளவன். ''சாவினாலோ, தேய்வினாலோ, அழிவினாலோ நான் பாதிக்கப்படுவதில்லை'' என்றெல்லாம் அறிவித்த பிறகு, ''காலத்திற்கு உட்பட்டதும், மாறுவதும் அழிவதுமான உடலும் நானே'' என்ற பேரிடி போன்ற ஒப்புதலையும் அறிவித்தான்! இதுதான் அர்ஜுனனுடைய மனத்தில் எழுந்த எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம். முன்னுக்குப் பின் முரணான இந்தச் சொற்களால் யாராயிருந்

தாலும் ஐயப்பாடுகளால் குழம்பிப்போவான். அர்ஜுனனது இந்த நிலையைப் பார்த்துக் கண்ணன் நகைத்தான்.

எனினும் தாமதப்படுத்துவது அவனுக்கு நோக்க மில்லையாதலால், அர்ஜுனனுடைய திண்டாட்டத்திற்குக் காரணத்தை அறிந்தவனாதலால், அர்ஜுனனுடைய ஐயத்தை உடனே தீர்த்து வைக்க முற்பட்டான்.

''அர்ஜுனா! ஏன் பறிகொடுத்தவன் போல் துன்பப்படு கிறாய்? அழியக்கூடிய இந்த உடலும் நானே என்று நான் சொன்னதால் இப்படிக் குழம்பிப் போயிருக்கிறாய் இல்லையா? சாதாரண மக்கள் நான் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைவார்கள். அந்தக் கருத்தையே மறுப்பதுதான் அவர்களது முதற் செயலாக இருக்கும். ஏனெனில் இவ்விரண்டையும் இசைவிப்பது கடினம். காலத்திற்கு உட்பட்டதும், மாறுவதும், அழிவதுமான இந்த உடல் என்னோடு சேர்க்கை பெற்றிருக்கிறது. ஏனெனில், அது தோன்றிய இடமே நான்தான். நானில்லாவிட்டால், இந்த உடல் ஒருபோதும் இருக்க முடியாது, அதன் தோற்றத் தைப் பற்றிச் சொன்னால், இது உனக்கு இன்னும் தெளிவாகும். இந்த மர்மத்தை விளக்கும் இந்த உடற் றோற்றத்தின் கதையைக் கேள். தன் பெற்றோர் உண்ணும் உணவிலிருந்து தோன்றுவதால் அதைச் சார்ந்ததாக இருக்கிறது இந்த உடம்பு இல்லையா? அந்த உணவு எங்கிருந்து வந்தது? மண்ணிலிருந்து; மண்ணில் வளரும் தானியங்கள், மற்ற உணவுப் பொருள்கள் இவைகளிலிருந்து. மண் எதிலிருந்து வந்தது? நீரிலிருந்து இப்படிக் காரணத்தை ஆராய்ந்து கொண்டு போனால் இந்த நீரும் நெருப்பிலிருந்து தோனறியது. நெருப்பு காற்றிலிருந்தும், காற்று ஆகாயத்தி லிருந்தும், ஆகாயம் ஆண்டவனின் மாயையிலிருந்தும் தோன்றியது. இந்த மாயையும் என்னுடைய போர்வையே.

''நானே உண்டாக்கிப் போர்த்துக் கொண்ட இந்தப் போர்வை ஆகாயமாயிற்று; ஆகாயம் வாயுவாயிற்று; வாயு தீயாகியது; தீ நீராகவும், நீர் மண்ணாகவும் ஆயின. மண்ணி லிருந்து உணவுத் தானியங்ககள் விளைந்தன. உணவுத் தானியங்கள் உடலாயின. இதனால், இவ்வுடலும் நான்தான் என்பது தெளிவாக வில்லையா? இதில் ஏன் சந்தேகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனவே, நான் முதலில் சொன்னபடி, நான் பிரமமாகவும், அத்யாத்மமாகவும், கர்மமாகவும் இருக்கிறேன் என்றால் அதே போல் அதிபூதமாகவும் இருக்கிறேன். காரணமும் காரியமும் ஒன்றே, நானே முழு முதற் காரணம்; அதனால் இதன் காரியங்களும் நானே. நானே பரமாத்மா: மற்றதெல்லாம் அதிதைவம். ஒவ்வொரு பௌதீகப் பொருளிலும் அல்லது உடலிலும் ஹிரண்ய கர்ப்பர் என்ற தெய்வத் தத்துவம் குடிகொண்டிருக்கிறது. மனிதன் தனது புலன்களால் உதவப்படுவது போல, ஹிரண்ய கர்ப்பர் தேவதைகளால் உதவப்படுவார்.

''இந்த அதிதேவதைகளின் தொழில்தான் என்ன என்று நீ கேட்கக்கூடும். இறைவனுடைய நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும் தேவதைகள் இவை. அதாவது, கண் சூரியனால் ஒளி பெறுகிறது; ஆகவே கண்ணுக்கு சூரியன் அதிதேவதை. திசைத் தேவதைகளால் செவி ஒலி பெறுகிறது; கை இந்திரனால் ஊக்கப் பெறுகின்றது. இவையும் இவை போன்று புலன்களை மேல் நின்று காக்கும் மற்ற அதிதேவதைகளும் ஹிரண்ய கர்ப்பருக்குப் புலன்கள். பயிற்சி பெறும் மாணவன் எவ்வளவு பெரியவனாக இருந்தாலும், எவ்வளவுதான் உயர்வை அவன் எய்தியிருந்தாலும், அவன் ஹிரண்ய கர்ப்பரின் மூலம்தான் பரம்பொருளை அடையமுடியும். ஹிரண்ய கர்ப்பரும் பரம்பொருளின் ஒரு வடிவம்தான். இருவருக்கும் உண்மையில் வேற்றுமையில்லை. விளங்கிற்றா, அர்ஜுனா? நான் எவ்வாறு அதிபூதமே அது போலவே அதிதைவமாகவும் இருக்கிறேன். இவையிரண்டையும் போலவே, பிரம்மமாகவும், அத்யாத்மமாகவும், கர்மமாகவும் விளங்குகிறேன். இவையெல்லாமே முழுதும் தெய்வீகங்கள்தான்.

அடுத்து. அதியக்ஞம் என்னும் கருத்தை எடுத்துக் கொள்வோம், அதுவும் நானே! மனிதர்கள் செய்யும் பல்வகை வினைகளின் பயனாக இன்ப துன்பங்களை விழுங்கி விடுவது இந்த அதியக்ஞம் என்ற தத்துவம்தான். சுவை, ஒளி, ஊறு' ஓசை, நாற்றம் இவற்றை எல்லா உயிர்களிலுமுள்ள புலன்களின் மூலம் ஏற்பவன் நானே. இதுவே அதியக்ஞம் என்ற தத்துவம். நான் வினைகளைச் செய்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்று; அவற்றின் பயனை நுகருபவனும் நான்தான் நானே கொடுக்கிறேன்; நானே பெற்றுக் கொள்கிறேன்.''

தானே அதியக்ஞம் என்னும் இந்த உண்மையை விளக்கி அர்ஜுனனுடைய கண்களைத் திறக்க கண்ணனால் முடிந்தது என்பது சரி. ஆனால் சாதாரண அறிவு படைத்தவர்கள் இதனுடைய விளைவுகளைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாது. நமது அன்றாட வாழ்க்கையிலிருந்து சில உதாரணங்களை எடுத்துக் கொண்டால் இது எளிதாக இருக்கும். உங்களுக்குக் காற்று வேண்டும் என்றால், மின் விசிறியைச் சுழல விடுகிறீர்கள். வெளிச்சம் வேண்டுமென்றால் விளக்கைப் போடுகிறீர்கள். சமைக்க வேண்டுமானால், அடுப்பை மூட்டுகிறீர்கள். பெரிய கூட்டத்தில் பேச வேண்டுமானால், ஒலிபெருக்கியைப் பொருத்தி அவற்றை இயங்க வைக்கிறீர்கள். அல்லது எதையாவது அச்சிட வேண்டுமென்றால், அச்சுயந்திரத்தை இயங்க வைக்கிறீர்கள். இவற்றையெல்லாம் தனித்தனி வேலைகளாக நீங்கள் நினைத்தால், அவற்றுக்குள் தொடர்பே இல்லை என்பதைக் காண்பீர்கள். ஒளியும் ஒலியும், காற்றும் சூடும் ஒன்றுக்கொன்றும் தொடர்புடையன அல்ல; அவை ஒவ்வொன்றும் தனித்தன்மையுடையன என்று தோன்றும். ஆயினும், இவையெல்லாவற்றிற்கும் ஆக்க சக்தியாக இருப்பது ஒன்றுதான். அது மின்சார ஓட்டம். இதுவே பல பெயர்களால் அழைக்கப்படலாம்; பல வடிவங்களாகவும் வேறுபடலாம். எனினும், அடிப்படையில் இதன் ஆக்க சக்தியும் இயக்கமும் ஒன்றுதான்.

மின்னோட்டத்தைப் போலவே, இறைவனும் தனது கருவிகளின் மூலம் தொழிற்படுகிறான். இந்தக் கருவிகளின் இயக்கத்திற்கேற்பப் பலன்களையும் தருகிறான். அவன்தான் செயல்கள் அனைத்திற்குமுள்ள பலனைக் கொடுப்பவன். மின்னோட்டத்தைப் போல, எல்லாவற்றினுள்ளும் இருந்து இயங்குபவன். அவன் எல்லாச் செயல்களையும் இயக்குவதனால், அதன் அதியக்ஞம் எனப்படுகிறான்.

''ஏழாவது தத்துவம் பிரணவம் எனப்படும். இறக்கும் தருணத்தில் இது உச்சரிக்கப்பட்டால், அழியாப் பரம் பொருளிடத்துச் சென்று கலக்க வைக்கும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் கண்ணன் சொன்ன உடனேதான் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு, இன்னும் சிறிது விளக்கமாகச் சொல்ல வேணுமென்று அர்ஜுனன் வேண்டிக் கொண்டான். இதற்குக் கண்ணன் மகிழ்ச்சியோடு உடன் பட்டான். ''''இறக்கும் தருணம்'' என்பதற்கு ''வருங்காலத்தில் ஏதோ ஒரு நேரம்'' என்பது பொருளல்ல. ''இப்பொழுதே!'' என்பதுதான் அதன் பொருள். எந்தத் தருணமும் 'இறக்கும் தருண''மாகலாம் ஆகவே ஒவ்வொரு கணமும் கடைசித் தருணமாகலாம். ஒவ்வொரு கணமும் பிரணவத்தினல் நிரப்பப்படவேண்டும். இறக்கும் தருணத்தில் மேலோங்கி நிற்கும் எண்ணம் எதுவோ அதனுல்தான் மரணத்திற்குப்பிறகு மனிதனின் விதி நிர்ணயிக்கப்படுகிறது. அடுத்த பிறவியும் அந்தக் கடைசி எண்ணத்தின் அடிப்படையில்தான் எழுகிறது. அந்தத் தருணத்தில் என்னை நினைப்பவன் என்னுடைய வைபவத்தைப் பெறுகிறன்; உண்மையிலே என்னையே அடைகிருன். எனவே மனிதனின் ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு பயிற்சியும், விதியை நிர்ணயிக்கும் இந்தக் கடைசிக் கணத்தைப் புனிதமாக்குவதாக இருக்க வேண்டும். வாழ்நாள் பூராவும், கடைசிக் கணத்தில் பிரணவத்தின் நினைவை உண்டு பண்ணக் கூடிய பயிற்சிக்காகச் செலவிடப்பட வேண்டும்.

''இந்தப்பூத உடலென்னும் கூடு விலக்கப்பட வேண்டும். எங்குமுள்ள எதையும் சாராத பரம்பொருள் பெறப்பட வேண்டும். உடலுக்குள் இருப்பதுவும் உங்களுடைய சொந்த வடிவமான, விலக்க முடியாத, அழியாத, உண்மையான, என்றும் உள்ள, மெய்ப்பொருளேயாகும். இதைத் தான் ஆத்மா என்கிறேம்; பரமாத்மா என்கிறேம். நீங்கள் அதுவாகவே இருப்பதால், நீங்கள் அதைத் தூக்கி எறிந்து விடமுடியாது. பல ஆண்டுகளாக நீங்கள் குடியிருந்த வீட்டை விடுவது போன்றது உடலை விடுவது. இன்னெரு புதிய வீட்டில் குடிபுகுவது போன்றது பிறப்பு. இவ்விரண்டுமே பௌதிக மாற்றங்கள். ஆத்மாவை இவை தொடாது அர்ஜுன! மெய்ப்பொருளான ஆத்மா எதற்குள்ளும் வருவதுமில்லை; எதிலிருந்தும் போவதுமில்லை. உடலென்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ப் பொருளில் உழன்று கொண்டிருப்பவர்கள் மெய்ப்பொருளின் தரிசனம் கிடைக்கப் பெறமாட்டார்கள். உடலென்னும் பொருள் தான் அழிவிற்கும் சாவிற்கும் ஆட்பட்டது. ஆகையினுல், நான் ஏற்கனவே சொன்ன ஆறு விஷயங்களைவிட, விடுதலை பெறுவதற்கு உதவ மிகவும் ஆற்றலுடைய பிரணவம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்று. வாழ்வின் நீண்ட ஆண்டுகளையெல்லாம் இந்த முடிவிற்காகத்தான் பயன்படுத்த வேண்டும். அதாவது, இறக்கும் தறுவாயில் பிரணவத்தில் மனம் நிலை பெற்றிருக்க வேண்டும். நீங்கள் ஏப்பம் விடும்பொழுது நீங்கள் உண்ட உணவின் வாசனைதான் வெளியாகும். இறக்கும் தறுவாயில் எழும் உங்கள் கடைசி எண்ணம் நீங்கள் சாப்பிட்ட வினை உணவைக் காண்பித்துக் கொடுக்கும்.

''உங்களது பயிற்சிக்கேற்ப உங்கள் ஸத்கதி அமைகிறது. முயற்சிக்கேற்ப முன்னேற்றம். உடலை விடும் பொழுது. புனிதமான எண்ணங்களில் மனம் நிற்கும் படியான தேவையை எப்பொழுதும் கவனத்தில் வையுங்கள்!''

அர்ஜுனன் கேட்டான்: ''இறைவனே! வாழ்வின் கடைசிக் கணத்தில் புனிதமான எண்ணங்கள் வரவேண்டு மென்று விரும்பினுல், அதற்கு இப்பொழுதிலிருந்தே ஒருவன் முயல வேண்டுமா? அந்தக் கடைசிக் கணத்திலேயே முன் முயற்சியில்லாமல் அவை எழாதா?''

இந்த ஐயப்பாட்டைப் புரிந்து கொண்டு கண்ணன் சொன்னுன்: உன்னுடைய அறிவு பெருமளவுக்கு மழுங்கி விட்டதாகத் தோன்றுகிறது. இப்பொழுதிலிருந்தே புனித மான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டிய தேவையை ஒப்புக் கொள்ளுவதற்கு நீ தயங்குகிருய். அர்ஜுனு! விடாமுயற்சி என்னும் யோகத்தினுல் மனம் பழக்கப்பட வேண்டும். பல்வேறு எண்ணங்களை அகற்றி விட்டு இறைவன் பேரிலேயே ஊன்றி நிற்பதற்கு அதைப் பழக்க வேண்டும். அப்பொழுதுதான் நீ பரம்பொருளை அடையமுடியும். முறையாக அதற்குச் சொல்லிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துப் பழக்காவிட்டால், இறக்கும் தறுவாயில் அது பரம்பொருளை நினையாது; நினைக்கமுடியாது.

"இது ஏன் என்று நீ கேட்கலாம். நல்லது; உன்னையே எடுத்துக்கொள். இப்பொழுது தொடங்கவிருக்கிற இந்தப் போரில் தொடுப்பதற்கும் தடுப்பதற்கும் உதவும் போர்க் கருவிகளை ஏவுவதில் நீ திறமை பெற்றிருக்கிறாய். பல காலமாக அவற்றைக் கையாளும் கலையை நீ பயின்றாய் அல்லவா? நினைத்த மாத்திரத்தில் முன் பயிற்சியில்லாமல் அவற்றை நீ அவ்வளவு தன்னம்பிக்கையுடன் எய்ய முடியுமா? அது நடக்கிற காரியமா? என்றைக்காவது ஒரு நாள் ஒரு போர் வீரன் படைக்கலன்களை உபயோகிக்க வேண்டிவரும். அதனால், எந்த அவசர நிலைக்கும் தயாராக இருப்பதற்காகக் குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் போர்க்கலையைக் கற்கிறான்.

இதுபோலவே, எதைச் சந்தித்தாலும் சந்திக்கா விட்டாலும், ஒரு மனிதன் சாவைச் சந்திப்பதென்னமோ நிச்சயம் எனவே. அவனுக்கு எது நன்மையுண்டாக்குமோ அத்தகைய எண்ணத்தையும் மனப் பாங்கையும் அந் நேரத்தில் பெறுவதற்கு ஒருவன் பழக்கப்பட வேண்டும். இல்லாவிடில், வாழ்வு பெரும் தோல்வியாகும்; வீணாகும், இந்த நிறைவுக்குத் தயாராக இல்லாதவன் அவனுக்கு நேரக் கூடிய விபத்தை அநுபவிக்க வேண்டிவரும். தோல்வியை விரும்பி ஒருவனும் போர்க்களத்தில் இறங்கமாட்டான். இது போலவே, ஒருவனும் வீழ்ச்சியை வேணுமென்றே வரவேற்க மாட்டான். வளர்ச்சியைத்தான் தேடுவான். எனவே, உனக்கு எது மிக நன்மை பயக்குமோ அந்த நோக்கத்திற்காகப் பாடுபடுவதல்லவா அறிவுடைமை? ஆகவே. வாழ்க்கையின் கடைசிக் கணத்தில் ஏழாவதான இந்தப் பிரணவத்தைப் பற்றிய நினைவைப் பெறுவதற்கு ஒவ்வொருவனும் ஊக்கத்துடனும் முயற்சி எடுக்கவேண்டும்" என்று கண்ணன் சொன்னான்.

இதுதான் கீதையின் முழுச்சாரம். வளர்ச்சியின் உச்சியை அடைவதுதானே மனிதனுடைய எல்லாச் செயல் களினுடைய குறிக்கோளும் இல்லையா? இந்த ஊக்கம்தான் பிரார்த்தனைகளிலும், ஜபத்திலும், தியானத்திலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனையிலும், தவத்திலும் அவனை ஈடுபட வைக்கிறது. இவற்றில் நம்பிக்கை கொண்ட யாவரும் தமது இலட்சியத்தை நன்கு நினைவில் கொள்ள வேண்டும்.

ஓம் என்ற பிரணவத்தை மரணத் தறுவாயில் நினைக்க வேண்டுமென்று கண்ணன் சொன்னான். இதன் தொடர்பாக விளக்கப் படவேண்டிய சில இடங்கள் உண்டு. ஏனெனில், பிரணவம் என்பது ஒரு சிலராலேயே ஓதப்பட வேண்டியது. மற்றவர் அதற்கு உரிமையுள்ளவரல்லர் என்று வாதிடுகின்றவர் பலர் உலர். இது தவறாகும். உண்மையை அறியாத காரணத்தால், இந்தத் தவறான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். தவறான கருத்தினால் இது தோன்றியிருக்கிறது.

இந்த வகுப்பினர், அந்த வகுப்பினர் என்று கீதை எங்கும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்த வகுப்பைச் சேர்ந்தவர், இந்தப் பாலார் என்று குறிக்கும் அடைமொழிகளில்லாமலே, ''யாவரும்'' என்று கண்ணன் அறிவிக்கிறான். ''இவன் தகுதியுள்ளவன்: அவன் தகுதியில்லாதவன்'' ''இவன் உரிமை பெற்றவன்; அவன் உரிமை பெறாதவன்'' என்று கூட அவன் சொல்லவில்லை. பிரணவத்தைத் தியானம் செய்வதற்கு (அதை நினைத்தால் மட்டும் போதாது) புலனடக்கம், மன ஒருமைப்பாடு முதலிய முதல் நிலைப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுதான் அவன் சொன்னான்.

ஏனெனில், மனம் ஒரு கற்பனையிலிருந்து இன்னொரு கற்பனைக்குத் தாவும் பொழுது, வாயினால் ''ஓம்'' ''ஓம்'' என்று ஒலி எழுப்புவதனால் மட்டும் என்ன பயன்? வெறும் ஒலி முக்தியைக் கொடுக்காது. புலன்களை அடக்க வேண்டும்; எண்ணங்கள் ஒருமுனைப்பட வேண்டும்; அதன் பெருமை உணரப்பட வேண்டும். இதனால்தான், பிறந்ததிலிருந்து இறக்கும்வரை உண்மையைத் தேட வேண்டுமென்று கண்ணன் அறிவுரை தந்தான். இதற்கு மாறாகக் கடைசி நேரம் வரைப் பயிற்சியை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தால், பரீட்சை நடக்கும் இடத்திற்குப் போக வேண்டிய நேரத்தில் முதன் முறையாகத் தன் பாடப் புத்தகங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டும் மாணவனைப் போல ஆகிவிடுவீர்கள்! இன்னும் ஓராண்டு இருக்கிறது என்று நினைத்து, ஆசிரியர் சொல்லுவதைக் கேளாமல் தனது பாடக்குறிப்புகளையோ புத்தகங்களையோ பாராமல், பரீட்சையன்று காலை புத்தகத்தைத் திறந்தால் அவன் மூளையில் என்ன ஏறும்? அது அவனது திகைப்பைத்தான் மிகுதியாக்கும். சோம்பலில் முதல்வன் என்று வேண்டுமானால் அவனுக்குப் பட்டமளிக்கலாம்.

புழைக்கடையில் விதை நட்டவுடனேயே அது மரமாகிப் பழுக்குமா என்ன? அந்த நிலைக்கு வரவேண்டுமானால், அதைப் பலகாலம் கவனத்துடன் வளர்க்க வேண்டும்: இல்லையா? இது போலவே, எந்தப் பலனை நீங்கள் விரும்பினாலும் சரி, முதல் நிலைப் பயிற்சிகளை இடைவிடாமல் எச்சரிக்கையுடன் கடைப்பிடிக்க வேண்டும். எச்சரிக்கையும் பிறழா உறுதியும் இல்லாமல் யாரும் எதையும் பெறமுடியாது.

பயிற்சி பெறும் சாதகர்கள் இதை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். "எப்படிப் பிறப்பது?" என்பதிலிருந்து ஆசையைத் திருப்பி "எப்படி இறப்பது?" என்பதில் செலுத்த வேண்டும். ஏனெனில் எப்படி இறக்கிறோம் என்பதைப் பொறுத்துப் பிறவி ஏற்படுகிறது. சாவு முதலில்; அப்பால் பிறவி. சாவதற்குப் பிறப்பதாகவும், மறுபடி பிறப்பதற்காகச் சாவதாகவும் பாமரமக்கள் நினைக்கிறார்கள். இது தவறு. மறுபடி பிறக்காமலிருப்பதற்காக நாம் பிறக்கிறோம். மறுபடி இறக்காமலிருப்பதற்காக இறக்கிறோம். அதாவது, இறப்பவன் மறுபடி பிறக்காமலிருக்கும் முறையில் இறக்கவேண்டும். ஒரு தடவை இறந்தால், இன்னொரு தடவை இறக்கும் வாய்ப்பை உண்டு பண்ணும் பிறவியை எடுக்கக் கூடாது. பிறந்தால் இறப்பை நீக்கலரிது. ஆகவே பிறப்பையும் விலக்குங்கள்; இறப்பையும் நீக்குங்கள்.

எனவே, சாதகன் நல்ல பிறவிக்குக் கூட ஆசைப்படக் கூடாது. நல்ல சாவைத்தான் அவன் தேட வேண்டும். நல்ல பிறவியை நீங்கள் எடுத்திருக்கலாம்; நல்ல குடும்பத்தில், மனத்துக்குகந்த சூழ்நிலையில் பிறந்திருக்கலாம்; ஆனால் பின்னர் செய்யப்படும் கருமவினைகள் நல்ல

கி—11

சாவு வராமல் கெடுத்துவிடக்கூடும். எனவே, நல்ல சாவு நமக்குக் கிட்டுமானால், மீண்டும் பிறந்து மறுபடி சாவுக்கு உள்ளாகும் துன்பத்தை விலக்கிக் கொள்ளலாம்.

பிறந்திருக்கும் ஒவ்வொருவனும் முடிவை எப்பொழுதும் கருத்திலிருத்த வேண்டும். அந்த முடிவை உண்மையிலேயே நலனுள்ளதாகச் செய்ய நல்ல எண்ணங்களையும் நல்ல செய்கைகளையும் பழக வேண்டும். இத்தகைய முடிவை எய்துவது இறைவனின் திருவருளை அடைந்து விட்டதற்குரிய தவறாத அடையாளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 16

இறக்கும் தறுவாயில் சாதாரண மக்கள் மாதவனிடத்தில் மனத்தைப் பதிப்பதில்லை. ஏற்கனவே நீண்ட காலப் பயிற்சி இருந்தால்தான் இது முடியும். சில சாதனைகளை முன்னரே பயின்று வெற்றி கண்டிருக்க வேண்டும். இதுதான் பூர்வஸம்ஸ்காரம் என்பது. மனம் இதற்குப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அது யோக யுக்தமாக்கப்பட்டிருக்க வேண்டும். இது கூடப் போதாது. இதைத் தவிர மற்ற எல்லா நினைவுகளையும் தாழ்ந்தவை, குறையுள்ளவை, மாசுபடுத்துபவை என்று தள்ளிவிட வேண்டும். மற்றப் பொருள்களிடத்து இந்த வெறுப்பானது நாளுக்கு நாள் வலுப்பெறவேண்டும். இவையிரண்டும் இருக்கும் பொழுது. மாதவனைப் பற்றிய எண்ணம் தோன்றிக் கடைசிக் காலத்திலும் கலைந்து விடாமல் நிற்கும்.

ஆகவே, உங்கள் மனம்தான் மிகவும் முக்கியமானது. மனம் சிதைந்துபோனால் எல்லாம் உருக்குலைந்து போகும். மனம்போன போக்கில் மனிதன் போகிறான். மனம் எவ்வளவு விரைவாகப் போகிறதோ அந்த விரைவிலேயே இவனும் போகிறான். மனத்தை அடக்கிப் பண்படுத்த வேண்டுமானால்' நல்ல வழக்கங்களையும் பழக்கங்களையும் வளர்க்க வேண்டும். ஆகையினால், பயிற்சிக் காலத்தில் இறைவனை எப்படி மனத்தின் கண் படம் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், அவனை மனத்தில் நிறுத்திக் கொள்ளும் பொழுது என்னென்ன உணர்ச்சிகளும் உணர்வுகளும் இருக்கவேண்டும் என்பதையும் கண்ணன் சொல்லத் தொடங்கினான்.

''அர்ஜுனா! மனிதர் என்னை மூன்று வகையாக எடுத்துச் சொல்லுகிறார்கள்:–1. நிர்க்குணன், நிராகாரன் (குணங் குறிகளில்லாதவன், உருவமில்லாதவன்). 2. ஸகுணன், நிராகாரன் (குணங் குறிகளோடு கூடியவன், உருவமில்லாதவன்) 3. ஸகுணன், ஸாகாரன், (குணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகளோடு கூடியவன், உருவமுள்ளவன்). இவற்றில் இரண்டாவதைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்த நிலையில் இறைவனைப் பற்றி எப்படி நினைத்துப் பார்ப்பது என்பதைச் சொல்லுகிறேன். கேள். இறைவன் கவி, (எதையும் ஊடுருவும் அறிவுள்ளவன்). புராணன் (முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்). அநுசாஸிதா (எல்லாவற்றையும் ஏற்படுத்துபவன்). அணோரணீயான் (அணுவிற்கும் அணுவானவன்) ஸர்வாதாரன் (எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவும் காப்பாகவும் இருப்பவன்). அசிந்த்ய ரூபன் (கற்பனை செய்ய முடியாத வடிவமுள்ளவன்). ஆதித்ய வர்ணன் (சூரியனைப் போன்ற ஒளி வண்ண முடையவன்). தமஸஹ்பரஸ்தாத் (அறியாமைக்கும் இருளுக்கும் அப்பாற்பட்டவன்).''

இந்த இடத்தில் அர்ஜுனன் கண்ணனை இடைமறித்தான். ''கண்ணா! நீ இறைவனைக் கவி என்றாய் மனிதர்களிடையேயும் கவிகள் இருக்கிறார்கள். இறைவனையும் கவி என்று அழைத்து அவனை இழித்துப் பேசலாமா? அல்லது, ஒருவேளை கவி என்ற சொல்லுக்கு இறைவனைப்பற்றிப் பேசும்போழுது வேறு ஏதேனும் பொருளிருக்கிறதா? இதை இன்னும் விளக்கமாகக் கூறவேணும்'' என்று அர்ஜுனன் வேண்டினான்.

கண்ணன் சொல்லுவான்:— ''கவி என்றால் வெறும் புலவன் என்பது மட்டும் பொருளன்று. நடந்தது, நடப்பது, நடக்கப் போவது எல்லாவற்றையும் அறிந்தவன் என்பது அதன் பொருள். ஆகவேதான் அது இறைவனை அப்படிக் குறிக்கிறது. அவன் எல்லாவற்றையும் அறிகிறான்; எல்லாவற்றையும் பார்க்கிறான். அதனால்தான் கவி என்ற சொல்லுக்கு ஸர்வக்ஞன் (எல்லாமறிந்தவன்). க்ராந்ததர்சி (ஊடுருவிப்பார்ப்பவன்) என்றெல்லாம் விளக்கம் தருகிறார்கள். அடுத்து வரப்போவதையும்பார்ப்பவன் கவி. இதயங்கள் எல்லாவற்றிலும் இயங்கிக்கொண்டு படிப்படியாக மாறுதல்களை நிகழ்த்துபவன் இறைவன்தான். படைப்பு அனைத்திற்கும் இந்த இறைவன் என்ற கவிதான் ஊக்கச் சக்தி; முதல் ஆதாரம் அவன் கவிஞன்; உலகம் எல்லாம் அவனது கவிதை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடி அர்ஜுனன் கேட்டான்; ''கண்ணு! இரண்டாவதாக இறைவன் புராணன் என்ருய். அதன் கருத்து என்ன? மிகப் பழமையானவன் என்பதன் பொருள் யாது?''

கண்ணன் இதற்குப் பதிலிறுக்கையில் ''ஆமாம்; இறைவன் மிகப் பழமையானவன்; ஆனுல் எவ்வளவு பழமையானவனே அவ்வளவு புதுமையானவனும் கூட அவன் சநாதனன், முழுமுதல்; காலத்திற்கும் மூத்தவன். அவன் நூதனன்; ஒவ்வொரு கணமும் புதியவன். புராணம் என்பது புரா நவம் என்று பொருள்படும். பழையது; ஆனுலும் காலத்தில் ஒவ்வொரு கணமும் புதியது என்பது கருத்து'' என்று சொன்னுன்.

''அநுசாஸிதா என்ற சொல்லுக்கு என்ன பொருள்?''

''சுயேச்சையானவன். தடையில்லாதவன், தலைவன் என்பது பொருள். அவன்தான் எல்லாவற்றினுடைய நடை முறைகளையும் ஏற்படுத்துபவன். ஐம்பெரும் பூதங்களும் அவனது ஆணைகளை நிறைவேற்றுகின்றன அவன் ஏற்படுத்திய வரையறைகளை அவை மீறமுடியாது. எல்லாப் பொருள்களினுடைய உள்ளுலகத்தையும் கூட அவனது ஆணைகள் ஆளுகின்றன. மனிதனுடைய சட்டங்களுக்கு இது முடியாத காரியம். மனத்துள்ளும் அவன் ஆட்சி செய்கின்ருன்.''

''அவன் அணுவிற்கும் அணுவானவன் (அணோரணீயான்) என்ருயே? அதன் பொருள் என்ன?'' என்று கேட்டான் அர்ஜுனன்.

''அதுவா? அணு என்றதும் ஏதோ நுட்ப தர்சியால் மட்டும் பார்க்கக் கூடிய பௌதிகத்துகள் என்று எண்ணிவிட்டாயோ? இல்லை இல்லை; ''அணுவிற்கும் அணுவானவன் என்ருல் ''குணங் குறிகளற்ற, வேறுபட்ட பல இயல்புகள் இல்லாத'' என்று பொருள். கண்ணுலோ, காதாலோ அல்லது மற்றப் புலன்களினுலோ அறிய முடியாத ஒன்று என்று பொருள். குறிப்பிட்ட இயல்புகள் குறையக் குறைய ஒரு பொருள் இன்னும் நுண்ணியதாகிறது. அவை மிகமிக, அது பருப்பொருளாகிறது.

''ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் இவ்வைந்தும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்ற ஐந்து மூலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களின் இயல்புகளாகும். மண்ணில் இந்த ஐந்தும் இருக்கின்றன. நீரில் நான்கும், நெருப்பில் மூன்றும், காற்றில் இரண்டும், ஆகாயத்தில் ஒலி ஒன்று மட்டும் முறையே இருக்கின்றன. அதாவது, மண்ணிலிருந்து தொடங்கினால் முறையே அடுத்தடுத்து வரும் ஒவ்வொன்றும் முந்தியதை விட நுட்பம் மிகுந்து காணப்படும். ஆகாயம் எல்லாவற்றையும் விட நுட்பமானது.

"இது தெள்ளத் தெளிவாயிருக்கிறது. மண் அசையாமல் இருப்பது; நீர் இன்னும் நுண்ணியது. அதனால் ஓடுகிறது. நெருப்பு இன்னும் நுண்ணியது. அதனால் மேல் நோக்கி எழுகிறது. இதையெல்லாம் விட நுண்ணியதுதான் காற்று எத்திக்கிலும் வீசுகிறது. ஆகாயத்தில ஒலி மட்டுமே இருக்கிறது அதிலே ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற நான்கும் இல்லை.

"இந்த ஐந்தையும் கடந்து நிற்கும் இறைவனிடத்தில் இவை பொன்றுமே யில்லை. அதனால அவன் அணுவிற்கும் அணுவானவன் அவன் எங்கும் நிறைந்து கரந்து நிற்பவன். பல இயல்புகளையுடைய பொருள் பலுவாக இருக்கும். இறைவனுக்கு இதுபோன்ற பளு இல்லை. அதனால் அவன் எல்லாவற்றிலும் நுண்ணியவன் எனப்படுகிறான்.

"அடுத்து ஐந்தாவதாகச் சொன்னது ஸர்வாதாரம் என்பது இரண்டு பொருட் பிரிவுகள் உண்டு; 1. ஆதாரம் 2. ஆதேயம். கண்ணால் பார்த்து காதால் கேட்பதெல்லாம், சுருங்கச் சொன்னால் படைப்பனைத்தும் ஆதேயம், அதாவது. இன்னொன்றைச் சார்ந்து நிற்கிறது. இவையெல்லாம் ஐம்பூதங்களால் ஆனவை. ஐம்பூதங்களும் ஆதேயங்கள் ஏனெனில் அவை பரம்பொருளைச் சார்ந்து இருக்கின்றன. பரம்பொருள் ஒன்றுதான் ஆதாரம், எல்லாவற்றையும் தாங்குவது. அது இன்னொன்றைச் சார்ந்து நிற்கவில்லை. ஏனெனில் அதைத் தவிர மற்றொன்று கிடையாது. அதனால் அது ஸர்வாதாரம், எல்லாவற்றிக்கும் இருப்பிடம்.

"இப்பொழுது ஆறாவதான அசிந்த்யரூபம் என்பதையும் உனக்குத் தெளிவாக்குகிறேன். அசிந்த்ய ரூபம் என்றால் மனத்தினால் எண்ணிப் பார்க்க முடியாத வடிவம். ஏனெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில், அவன் மனத்திற்கு எட்டாதவன். மனம்தான், உரு வகப்படுத்துகிறது. வரைகிறது. கற்பனை செய்கிறது. அதனால் அவனது உருவம் மனத்தால் எண்ணமுடியாதது. இதை ஒப்புக் கொள்வதற்கு நீ தயங்கலாம். ஆனால் மனமும் ஜடப்பொருளே யாகும். அது மறையக்கூடியது. ஆனால் பரம்பொருளோ தூய பேரறிவாகும். அது என்று முள்ளது, அழியாதது. அதுவும் மனமும் எதிரெதிரான இரு துருவங்களில் இருக்கின்றன. ஒன்று நிலைத்தது; மற்றொன்று நிலையாதது. இரண்டிற்கும் ஒரு ஒட்டுமில்லை. ஒன்று அழி கிறது. மற்றது எஞ்சி நிற்கிறது. ஜடமும் சேதனமும் ஒட்டாது.

''உன் மனத்தில் இந்தக் கேள்வி எழக்கூடும். அப்படி யானால் சாதகன் என்ன செய்ய வேண்டும்? அதிகம் ஒன்றும் இல்லை. அவன் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. பரம் பொருளை மனத்தினால் கற்பனை செய்யவும் முடியாது என்று அவன் தெளிந்தாலே போதும். இது போன்ற எண்ணங் களிலே திளைத்திருங்கள். வேண்டுகின்ற பலன் தானே வரும். தன்னுடைய எண்ணங்கள் எந்தத் திசையில் போக வேண்டும் என்பதை ஒரு சாதகன் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.''

இதைக் கேட்ட அர்ஜுனன் கண்ணனைப் பார்த்து ''ஐயனே! நாம் மேலே செல்லுவோம்; நேரம் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஒரு முடிவுக்கும் வராமல், பொறுப்பும் ஏற்காமல் இந்தப் போர்க்களத்தில் சும்மா நிற்க முடியாது. போர் நம்மை எதிர்நோக்கித் திறந்த வாயுடன் நம்மை மீறி விழுங்குவதற்குக் காத்திருக்கிறது. நீ கருணை யோடு எனக்கு அளிக்கும் கட்டளைகளை ஏற்று நடக்கச் சித்தமாக இருக்கிறேன். இதில் ஏதும் தாமதம் வேண்டாம் என்று மட்டும் கேட்டுக் கொள்கிறேன். ஆகையால் ஸகுண நிராகாரத்தின் ஏழாவது நிலையைப் பற்றி எனக்கு விரைவில் உரைப்பாயாக!'' என்று இறைஞ்சினான்.

''ஆம்! சூரியனைப் போன்ற ஒளி பொருந்தியவன் என்பது தான் அந்த ஏழாவது, சூரியனைப் போன்ற தன்னொளி பொருந்தியவன் என்பது இதன் பொருள். அவன் ஒன்றையும் சாராத தன்னாற்றல் உடையவன். அவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி அவனிடமிருந்தே பிறக்கிறது. சூரியனுடைய ஒளியும் இவனுடையதே. இவன்தான் சூரியனை ஒளிரச் செய்கிறுன். அதனுல் இவனுக்கு ஆதித்யன் என்று பெயர் எட்டாவதான "இருளுக்கு அப்பாற்பட்டவன்" (தமஸஹ் பரஸ்தாத்) என்பதனையும் இப்பொழுதே விளக்கி விடுகிறேன்/ இவன் அறியாமை என்ற இருளையும் பார்க்கிறவன். பரா என்றுல் பார்க்கிறவன் என்று பொருள், எதிலும் சேராமல் நடுநிலை நின்று பார்த்துக் கொண்டிருப்பவன். அறியாமைக்கு நிகரான இருட்டுக் கிடையாது. அது அவ்வளவு அழுத்தமானது. அதனுல் அறியாமைக்கு அப்பாற்பட்டவன் என்று பொருள்.

"அர்ஜுனு! ஒரு கணம் கண்களை மூடிக்கொள். நீ என்ன பார்க்கிறுய்? ஒரே இருள்தான். அல்லவா? அது இருள் என்று உனக்கு எப்படித் தெரிந்தது? இருளை நீ பார்க்க முடியாது. அப்படியிருக்க அங்கு இருட்டு இருப்பதாக எப்படிக் கூறுகிறுய்? அங்கு இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஒன்று, இருள்; மற்றது அந்த இருளைப் பார்க்கும் அறிவு. அல்லவா? நீயே இருளாக இருந்து விட்டால் இருளை நீ எப்படிப் பார்க்க முடியும்? அன்று; நீ பார்ப்பவன்; அதனுல் நீ இருளன்று. இருள் பார்க்கப்படுவது. பார்ப்பவன் நீ; நீயே சாக்ஷி.

"இன்னென்றையும் நீ எண்ணிப் பார்! மனிதன் தன்னைத் தானே அறிவிலி என்று சொல்லிக் கொள்வதைப் பார்க்கின்றேம். அப்படி அவன் உண்மையில் அறிவிலியாகவோ முட்டாளாகவோ இருப்பானுனுல், தான் அறிவிலி முட்டாள் என்பதெல்லாம் எப்படி அவனுக்குத் தெரிந்தது? எங்கிருந்து இந்த அறிவு அவனுக்கு கிடைத்தது? எப்பொழுது அந்த அறிவு அவனுள் வந்தது? எப்படி வந்தது?

"அறியாமை பார்க்கப்படுவது; அறிவு பார்க்கிறது. நீ தான் அந்த அறியாமையைப் பார்க்கும் அறிவு. நீ திருக் (பார்ப்பவன்): அது திருச்யம் பார்க்கப்படுவது). இதே முறையில் மேற் சொன்ன எட்டு வர்ணனைகளும் சிந்திக்கப் படவேண்டும். அதுதான் இறைவனது வடிவத்தைத் தியானிக்கும் சரியான முறை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுனன் கேட்டான்; "கண்ணு! இத்தகைய தியானமே போதுமா? அல்லது இதற்கு உதவியாக வேறு ஏதேனும் கூடச் சேர்த்துச் செய்ய வேண்டுமா?"

"நிச்சயமாக; இந்தத் தியானத்தைப் பழகும்பொழுது, அந்த ஒரே பொருளில் மட்டும் மனம் ஒன்றும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பலவேறுபட்ட குறிக்கோள்களில் மனம் செல்லக் கூடாது. ஒரே பரம்பொருளிடத்தில், அன்பும் பக்தியும் கலந்து அதையே பற்றி நிற்க வேண்டும். வழக்கமாக மனிதனது அன்பு அழியக்கூடிய சில்லறை விஷயங்களில் பிணைக்கப்பட்டு, துன்பத்திலும் தோல்வியிலும் சிக்கிக் கொள்கிறது. அத்தகைய பொருள்களிலிருந்து மனத்தை இழுத்து, இறைவனைச் சுற்றி வளர விட வேண்டும்.

"பக்தி என்பது என்ன என்று உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேள்! நம்முடைய மனத்தின் செய்கைகளெல்லாம். எதிலே நம்முடைய பற்று நிலைத்திருக்கிறதோ அந்த இளட்சியத்தினுடைய செய்கைகளோடு முற்றும் ஒன்றிவிடுவதுதான் பக்தி எனப்படும்."

இவ்விடத்தில் அர்ஜுனன் குறுக்கிட்டுக் கேட்டான்; "ஐயனே! இது எப்படி முடியும்?"

"இது முடியும். அர்ஜுனு! புலன்களை அடக்கு மனத்தை முடிந்தவரையில் அழித்து விடு. இதயத்தைத் தூய்மையாக்கு. உயிர் மூச்சுகளெல்லாம் சிரஸின் மிக உயர்ந்த பிரதேசத்திற்கு உயரட்டும். மெய்ப்பொருளில் மனிதன் நிலைபெறட்டும். உயிர் போகும் பொழுது பிரணவம் ஒன்றிலேயே கவனம் இருக்கட்டும். இத்தகையவன் என்னை அடைகிறுன், என்னுடன் கலக்கிறுன். அவனது மனச் செய்கைகளெல்லாம் என்னுடையவைகளாகவே ஆகிவிடுகின்றன" என்றுன் கண்ணன்.

இந்த இடத்தில், கண்ணன் அர்ஜுனனுக்குச் சொன்னதைப் பற்றி இதைப் படிப்பவர்கள் தங்களது கவனத்தை யூன்றிப் பார்க்க வேண்டும். புலன்களை அடக்குவதைப் பற்றி இறைவன் பேசினுனேயன்றி, அவற்றை அழித்து விடச் சொல்லவில்லை. அடங்குதல் என்றுல், ஒருவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைப்படி, இச்சைப்படி பணிந்து நடத்தல் என்று பொருள் அழிதல் என்றால் எல்லாச் செயல்களும் அற்றுச் செத்து விடுதல் என்று பொருள். இன்னும், கண்ணன் எல்லாப் புலன்களையும் பற்றிப் பேசினானேயொழிய ஏதோ ஒன்றிரண்டைப் பற்றி மட்டும் பேசவில்லை. மனிதன் எல்லாப் புலன்களையும் அடக்கி, அவை எந்த நோக்கத்திற்காக ஏற்பட்டிருக்கின்றனவோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அவை நமக்கு வாய்த்திருக்கின்றன என்ற காரணத்துக்காக அவற்றை நினைத்தபடி அவிழ்த்துவிடக்கூடாது. எந்தப் பணிகளுக்காக அவை ஆக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பணிகளை அவற்றிற்கு இடுங்கள். உங்களை மீறி அவிழ்த்து விட அவற்றை அனுமதியாதீர்கள். வரையறுக்கப்பட்ட வழிகளில் அவை எள்ளளவும் பிசகாமல் செயற்படட்டும். இதுதான் இறைவனின் திருவுள்ளம்.

இன்னொன்றும் உண்டு, எது உங்களுடைய இதயத்தை விசாலமாகச் செய்யும். எது கலக்கத்தை விளைவிக்கும் என்று நீங்களே சிந்தித்துக் கண்டு கொள்ள வேண்டும். பின்னர், முதலாவதைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு, மற்றதை விட்டுவிடவேண்டும். இல்லாது போனால், பித்துப் பிடித்த குரங்கைப் போல் தவறான வழிகளில் தப்பிப்போய், குழப்பத்தில் சுற்றிச் சுழன்று வரவேண்டியதுதான் ஏராளமான பேர் இந்நாளில் துன்பங்களுக்கும் அதிருப்திக்கும் ஆட்பட்டிருக்கிறார்களே, இதற்கு என்ன காரணம்? புலன்களைத் தவறான வழியில் பயன்படுத்துவதுதான் காரணம்.

உங்களுடைய வீட்டில் எந்த ஓர் வாயிலின் வழியாகவும் உள்ளே வரத் தகுந்தவர்கள் யார் என்பதை நீங்கள் தீர்மானித்துக் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். ஒரு வாயிலின் வழியாக வரவேண்டியவர்கள் மற்றொரு வாயிலை உபயோகப்படுத்தக்கூடாது; அப்படிச் செய்தால், அந்த வீடு அதிருப்தியும், குழப்பமும் ஒழுங்கீனமும் உள்ளதாகி விடும். தவறான வாயில் வழியாக அத்துமீறி உள்ளே நுழைந்து விட்ட பின்னர் அவர்களோடு போராடுவதைக் காட்டிலும் அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்னமே இத்தகைய குழப்பம் நேராமல் முன்னேற்பாடுகளைச் செய்வது மிகவும் அறிவுடைமையாகும். முதல் தடவையாக அத்து மீறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவதை மன்னித்து விடலாம். ஆனால் நிச்சயமாக, இது திரும்ப நடக்காத வண்ணம் கவனமாக இருக்க வேண்டும். இது இன்னும் கொஞ்சம் சிறந்த வழி. ஆனால் தலைசிறந்த வழியல்ல.

மறுபடியும் ஓர் ஐயம் மனத்தில் எழக் கண்டான் அர்ஜுனன்: புலன்களெல்லாம் கட்டுண்டால், 'ஓம்' என்பதை எப்படி உச்சரிக்க முடியும்? கண்ணன் இதைத் தெரிந்து கொண்டான். தானே அந்த விஷயத்தைக் குறிப்பிட்டான். ''அர்ஜுனா! ஓம் என்ற ஒலியானது மனத்தினால் உச்சரிக்கப்பட வேண்டியது, வாயினால் சொல்ல வேண்டியதன்று!''

அடுத்து, மற்றுமோர் ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்காக அர்ஜுனன் இன்னொரு கேள்வியை எழுப்பினான். ''கண்ணா! ஜபம் செய்பவனுக்குப் பாவங்கள் இல்லை என்று நீ சொல்லியிருக்கிறாய். ஜபம் ஒருவனைப் பாவங்களிலிருந்து காப்பாற்றுமானால் மோக்ஷம்' விடுதலை என்பது எல்லாம் என்னவாகும்? நிச்சயமாக அதைக் கொடுப்பதற்கு ஜபத்திற்கு ஆற்றலில்லை. இறைவனைக் கண்முன் காட்டுவதற்கு ஜபத்தினால் முடியாது.''

இந்த ஐயப்பாட்டை அர்ஜுனன் குறிப்பிட்ட பொழுது இறைவன் மகிழ்ச்சியடைந்தான். ''பார்த்தா! உன்னுடைய கேள்வி முக்கியமானது. ஆனால், நான் உனக்குச் சான்று சொல்லுகிறேன்; மற்ற நோக்கங்களிலிருந்து தனியாக மோக்ஷம் தேடப்பட வேண்டியதில்லை. 'ஓம்' என்ற பிரணவத்தை உச்சரித்து, அந்தப் பிரணவத்தின் உட்கருத்தான இறைவனைக் குறித்துச் சிந்தித்தால், அப்பொழுது அந்த இறைவன் உன்னால் பெறப்படுவான். அதாவது, நீ விடுதலை பெறுகிறாய்.''

அர்ஜுனன் இந்தக் கருத்தை மீண்டும் வற்புறுத்திக் கேட்டான். ''இறைவா! இந்த இரண்டு பலன்களையுமே கொடுப்பதற்கு ஜபத்தினால் முடியுமோ? உனக்கென்னமோ அதைச் சொல்லிவிடுவது எளிதாயிருக்கிறது. ஆனால் ஜபத்தையும் தியானத்தையும் செய்யத் தொடங்கும் பொழுது தான் எல்லா இன்னல்களும் தொடங்குகின்றன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் கண்ணன் சொல்லுவான்; "இதனால்தான் முதலிலேயே இடைவிடாத பயிற்சியின் அவசியத்தை உனக்குக் குறிப்பிட்டேன். உறுதியான பயிற்சியினால் பாவத்திலிருந்து மீட்சியும் விடுதலையும் இந்த இரண்டு பலன் களுமே விளைய முடியும். ஒருவேளை பயிற்சியின் முக்கியத்தை நீ உணரவில்லை போலும். அசடே! அர்ஜுனா! எவ்விதம் பயிற்சியின் மூலம் பிராணிகள் மிக அரிய செயல்களைக் கூடச் செய்கின்றன என்பதை நீ பார்க்கவில்லையா? உன்னுடைய தேரில் பூட்டியிருக்கும் இந்தக் குதிரைகளைப் பார். அணி வகுத்து நிற்கும் இந்த யானைகளைப் பார். உயர்ந்த பகுத்தறிவு படைத்த மனிதனால் கூடச் செய்ய முடியாத அத்தனை அரிய பணிகளை அவை செய்து உதவு கின்றன! இது எப்படி முடிந்தது என்பதை எண்ணிப்பார்! காட்டில் வாழும் யானைகள் போர் முறைகளைப் பற்றி எங்கே பார்த்திருக்கின்றன? போர் முனையில் பொருவது அவற்றின் இயற்கை என்று ஒரு வேளை எண்ணுகிறாயோ? அன்று; அவற்றின் இந்தப் போர்த்திறன் பயிற்சியின் சிறப் பிற்குச் சான்று

"இது போலவே, புலன்களிலிருந்து மனத்தை நிதான மாக விடுவிப்பதில் முயற்சி செய். அப்பொழுது, உன்னைக் கட்டுக்களிலிருந்து விடுவிக்கும் திறன்களை அது வளர்க்கும். நான் உனக்குச் சொல்லுகிறேன். புனிதமான பிரணவத் தைத் தமது கடைசி மூச்சோடு யார் சொல்லுகிறார்களோ அவர்கள் நிச்சயமாக இறைவனது பதத்தை அடைகிறார் கள்." கண்ணன் இவ்வாறு அழுத்தமாகச் சொன்னான்.

அர்ஜுனன் இன்னுமொரு கேள்வியைக் கேட்கத் துணிந்தான். "இறைவனே! தம்முடைய கடைசி மூச்சில் ஒருவன் பிரணவத்தை உச்சரித்தால் அவன் இறைவனை அடைகிறான் என்பதென்னவோ நல்லதுதான். ஆனால் அப்படிச் செய்யாதவர்களைப் பற்றி என்ன? அப்படிப்பட்ட வர்கள் தொகைதான் பெரிது அவர்கள் விடுதலையடைய இடமேயில்லையா? எல்லாம் வல்ல இறைவனின் பேரவை யிலே ஒரு சிலருக்கு மட்டுமேதான் ஆசனங்களா? துயரப் படுபவர்களுக்கும் ஏழைகளுக்கும் புகலிடமில்லையா? சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எங்கே போவார்கள்? எங்கு அவர்களுக்கு இடம் கிடைக்கும்?''

அர்ஜுனு! நீ பெரிய தவறு செய்கிருய். ஜாக்கிரதை! எளியவர்களென்றும், வலியவர்களென்றும், உயர்ந்தவர்கள் என்றும், தாழ்ந்தவர்கள் என்றும் இறைவன் பிரித்துப் பார்ப்பதில்லை. அப்படிப்பட்ட மனப்பான்மை ஒருக்காலும் இறைவனது நோக்கை மாசுபடுத்தாது. எல்லோரும் அவனது அருளுக்குரியவர்களே; எல்லோரும் அவனது அரசவையில் வருவதற்கு உரிமையுள்ளவர்களே. அதன் கதவுகள் எப்போதும் திறந்தேதான் இருக்கும். எவர் வருவதையும் தடுக்க அங்கே காவலர்கள் இல்லை, யாரும் தடுக்கப்படுவதுமில்லை. யாரும் வருந்தி அழைக்கப் படுவதுமில்லை எல்லோரும் வரவேற்கப்படுகிருர்கள். ஒருவன் அந்த வாயிலுக்கே வருவதில்லை என்ருல் யார் என்ன செய்ய முடியும்? கதகதப்பு வேண்டுமென்ருல் கணப்பின் அருகில் சென்று அமர வேண்டும். தள்ளி நிற்பவர்கள் கணப்பின் ஒளியைத்தான் பார்க்க முடியும். அப்படி எட்ட நின்று கொண்டு கணப்பில் சூடே இல்லை என்று சொல்பவனைப் பற்றி நீ என்ன நினைப்பாய்? அவன் சுய அறிவோடு இல்லை.

''இறைவன் சந்நிதியை விரும்புபவர்கள், அவனது பேரவையில் இருக்க வேண்டும் என்று வேண்டுபவர்கள், இந்த அவா நிறைவேற வேண்டும் என்று மனத்தில் முயல்பவர்கள், எல்லோருக்குமே அங்கு அனுமதியுண்டு; இடமு முண்டு.

''கடைசி மூச்சின்போது பிரணவத்தை உச்சரிப்பது என்பது எல்லோருக்கும் வராது, இதனுல்தான், எப்பொழுதும் இறைவனுடைய நினைவு, இம்மையிலும் மறுமையிலும் உங்களுடைய நன்மையை ஏற்றுக்கொள்ளுமாறு இறைவனைத் தூண்டுகிற ஆற்றலுடையது என்று கூறப்படுகிறது, இதுவும் நீண்ட காலம் பயிலப்பட வேண்டியது என்பது உண்மைதான், பயிற்சி எல்லாவற்றையும் அளிக்கும். பயிற்சி என்ருல் உறுதியான கடினமயான பயிற்சி;''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 17

''என்னைப் பற்றிய நினைவுகளைத் தவிர வேறு நினைவில்லாமல் யார் இருக்கிறானோ, யார் என்னையே நினைத்திருக்கிறானோ, அவனது கடைசி மூச்சு தலையின் நடுப் பகுதி வழியாக மேல் செல்லும்; அவன் என்னை அடைவான். அவன் என் அருகில் இருப்பதுபோல நானும் அவன் அருகில் இருக்கிறேன். என் அன்பிற்குரிய அர்ஜுனா! என்னை மறவாதவனை நான் எப்படி மறக்க முடியும்? மறப்பது மனிதனின் பலவீனம்; கடவுளின் இயல்பன்று. உனக்கு இன்று சொல்லுகிறேன். யோகத்திற்கும் தவத்திற்கும், ஏன், ஞானத்திற்கும் கூட ஒரு தேவையுமில்லை. உன்னால் முடியாத நிலையில் இவற்றை விட்டுவிடுகிறாய் என்றாலும் சரி, அல்லது, முடியுமானாலும் இவற்றைப் பெறுவதற்கு நீ முயற்சி செய்ய விரும்பவில்லை என்றாலும் சரி, பரவாயில்லை. யோகமோ தவமோ வேண்டுமென்று நானும் சொல்லவில்லை உன் மனம் என்னிடத்தில் ஈடுபட வேண்டுமென்பதுதான் நான் கேட்பதெல்லாம். உன் மனத்தை என்னிடத்தில் வை; அதை எனக்குக் காணிக்கையாக்கு. இதுதான் நான் கேட்பது.

''ஒரு சாதகன் இந்தக் காணிக்கையைச் செய்யக் கூட முடியாதென்றால், அவனுடைய பயிற்சிகளெல்லாம் வேறு எதைச் செய்துவிட முடியும்? உன்னிடத்தில் இதற்கு வேண்டிய மன வலிமை இல்லையென்று நீ வாதாடு வாயானால், நீ இப்பொழுது செய்து கொண்டிருப்பது போல, குடும்பம், சொத்து' புகழ் என்ற ஆடம்பரக் கற்பனைகள் நிறைவேறாதே போகும் ஒட்டை இலட்சியங்கள் இவற்றைக் குறித்து முழு மனதோடு ஈடுபடுகிறாயே. இதற்கு மட்டும் எப்படி உனக்குச் சக்தி கிடைக்கிறது என்று கேட்கிறேன். இந்தச் சக்தியை அந்த உயர்ந்த காணிக்கைக்காகப் பயன் படுத்தக் கூடாதா? நஞ்சு போன்ற புற இன்பக் கிளர்ச்சி களுக்கு மனிதன் எளிதாக எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறான். ஆனால் இறைவனைக் குறித்து உங்கள் செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் எண்ணங்களையும் காணிக்கையாக்குங்கள் என்று அழைக்கும் பொழுது, என்னவோ ஒரு பெரிய மலையே பெயர்ந்து தலையில் விழுந்தது போலத் தவிக்கின்றான்; எதிர்க்கிறான். ஏதோ கடையில் கறிகாய் வாங்குவதைப் போல முக்தி நிலையும் அவனுக்கு மலிந்த சரக்காக எளிதில் அடைந்து விடக்கூடியதாகத் தோன்றுகிறது. தன்னுடைய கட்டிலிருந்து அவ்வளவு எளிதாகத் தப்பிவிட நினைக்கிறான். அவன் முயற்சி செய்ய வேண்டும் என்று அதிகம் ஆசைப் படவில்லை; ஆனால் இந்த ஆன்மீகத் துறையில் அதிகம் சேர்ந்து விடவேண்டும் என்று மட்டும் ஆசைப்படுகிறான். தபஸ்ஸில் ஈடுபடுவதைவிட தமஸ்ஸில் அதிகம் அழுந்திருக்கிறான். ஆனால், தபஸ் மட்டுமே தரக்கூடிய பலன்களுக்கு மட்டும் ஆசைப்படுகிறான்.

''நல்ல பலன்கள் வேண்டும் என்ற உண்மையான விருப்பத்தால் தூண்டப் படுகின்றவர்கள் எல்லாத் தடைகளையும், கவர்ச்சிகளையும், ஐயங்களையும், ஏமாற்றங்களையும் தாண்டவேண்டும். அப்படித் தாண்டி ஆண்டவனுடைய நினைவாகவே இருக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவன் விலகி நிற்கமாட்டான். அந்தச் சாதகனுக்கு ''நானே பரம்பொருள்'' என்று சொல்லப்படுகிற தன்மயமான நிலையை அருளுவான். இந்த தன்மயமான ஒருமை நிலையைச் சாதகன் இடையறாது சிந்தித்திருப்பான், இதுதான் அநந்யபாவம் எனப்படுவது அதாவது வேற்றுமையற்று இருத்தல்.''

இங்கே அர்ஜுனன் கேட்டான்: ''இந்த வேற்றுமையற்ற நிலையை எய்துவதற்கான நினைவு மிகவும் எளிது என்றும், இதற்காக ஒன்றும் அதிகமான சிரமம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்றும் சொல்லுகிறாய். அதைப் பெற்று விட்டவர்களுக்கு, நீ உடனே கிடைத்து விடுகிறாய் என்றும் கூறுகிறாய்! நல்லது, உன்னை அடைவதனால் கிட்டும் பயன்தான் என்ன?''

கண்ணன் இதைக் கேட்டு மெல்ல நகைத்தான். பிறகு சொல்வான்: ''அர்ஜுனா! அதைவிடப் பெரிய பேறு வேறு என்ன இருக்கக் கூடும்? இந்தப் புனிதமான வெற்றி சாதரண மனிதனை மகாத்மாவாக்குகிறது. மகாத்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவதில் அப்படிப் பெரும் நலம் என்ன இருக்கிறது என்று நீ ஒருவேளை மேலும் கேட்கலாம். கேள் ஒரு மகாத்மா சாதாரண மனிதனைவிட எவ்வளவோ உயர்ந்தவன். ஒரு சாதாரண மனிதன் தன்னுடைய உடலிலும் உயிரிலுமே ஊன்றியிருக்கிறான். உடலோடும் உயிர் மூச்சோடும் தன்னை ஒன்று படுத்திக் கொண்டு தனித்த பொருளோடு தனித்த ஓர் அலையோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டு வளைய வருகிறான். அதனால், இன்ப துன்பங்களினால் அலைக்கழிக்கப் படுகிறான். ஒவ்வொரு உணர்வின் போதும் மேலே போகிறான். கீழே விழுகிறான். ஒரு கணம் அமைதி, மறுகணம் புயல் என்று அடிமேல் அடி வாங்கிக் கொண்டு சுருண்டு விழுகிறான்.

''ஆனால் ஒரு மகாத்மா எல்லா வகையான இரட்டை உணர்வுகளிலிருந்தும் விடுபட்டு வாழ்கிறான். அவற்றின்றும் உயர்ந்து கடந்து நிற்கிறான். தனித்துக் குறுகிவிட்டவற்றி லிருந்து தன்னை ஒன்றிவிடாமல் பிரித்துக் கொண்டு விடுகிறான். எங்கும் நிறைந்து, என்றுமுளதாய், மாறுததாய் பரம்பொருளின் தன்மையாக விளங்குகிறான்; உயிரின் தன்மையாக மட்டும் நிற்பதில்லை மெய்ப்பொருள் குறுகிய சிறியதன்று என்று அவனுக்குத் தெரியும். அது எல்லைகளைக் கடந்தது என்று அவன் உணர்கின்றான். தாமஸ ராஜஸ குணங்களின் கறை படியாமல் விலகி நிற்கிறான், அவன் சோம்பியிருப்பதுமில்லை; ஆசைகளினால் விரட்டப்படுவது மில்லை. விருப்பும் வெறுப்புமில்லாமல் தூய உணர்வுடன் கூடி இருக்கிறான். மகாத்மாக்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலர் இந்நாளில் இதயத்தில் தூய்மை யில்லாதவர்கள். அவர்கள் உணர்வு கறை படித்திருக்கிறது. இதயத் தூய்மையுள்ளவர்கள் மீண்டும் பிறவி மரணம் இரண்டையும் எய்துவதில்லை. மீண்டும் இவ்வுலகத்தில் வந்து பிறப்பதற்கு அவர்களுக்கு ஒரு கட்டாயமுமில்லை எவ்வளவுதான் நிறையப் புகழுக்குரிய செயல்களை நீங்கள் செய்திருந்தாலும், ஆன்மீக நிலையில் நீங்கள் எவ்வளவுதான் உயர்ந்திருந்தாலும், நீங்கள் அடைந்த விண்ணுலகம் எவ்வளவுதான் பெருமை வாய்ந்ததாக இருந்தாலும், இதயத் தூய்மையில்லாமல், பிறப்பிறப்பு என்னும் சுழலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தப்பவே முடியாது. எப்பொழுதும் பரம்பொருளின் இயல்போடு தன்மயமாக அமைந்து இருப்பவர்கள் தான் காலத்தைக் கடந்த என்னை அடையமுடியும்; என்னோடு கலந்து அமைந்து இந்தத் தளையிலிருந்து விடுபட முடியும்.''

இவ்விடத்தில், தன்னை அரித்தெடுத்துக் கொண்டிருந்த ஒரு சந்தேகத்தை அர்ஜுனன் வெளியிட்டான். அவன் கேட்டான்: ''அப்படியானால், பிரம்ம லோகம் என்ற விண்ணுலகத்தை அடைந்தவர்கள் மறுபடி பிறக்க வேண்டாம் என்று உபநிடதங்கள் ஏன் சொல்லுகின்றன? இந்தப் பிறப்பிறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை பெற்ற வர்கள் என்பவர்கள் தாம் யார் என்பதை விளக்கமாகத் தயை செய்து சொல்!''

அர்ஜுனா! உபநிடதங்களில் முக்தி என்பது இரண்டு வகைகளாகச் சொல்லப்படுகிறது. ஒன்று கிரம முக்தி (படிப்படியாக விடுதலை பெறுவது); இன்னொன்று ஸத்யோ முக்தி (உடனே விடுதலை பெற்றுவிடுவது). இது கைவல்ய முக்தி என்றும் சொல்லப்படும். இதைப் பெறுவதற்கு, விண்ணுலகம் போக வேண்டும் என்று எவரும் ஆசைப்பட வேண்டாம் வேண்டுமென்பதை அவர்கள் இங்கேயே உடனே பெற்று விடுகிறார்கள். படிப் படியாக கொஞ்சம் கொஞ்சமாகப் பெற வேண்டியதில்லை இவ்வாறு பெறப்பட்ட விடுதலை என்றும் நிலைத்திருக்கும் சொத்து. மற்றதெல்லாம் மாறி அழியக்கூடியது, சேர்த்து வைத்த நல்வினையின் பலன் குறைந்து தீர்ந்து விடும் பொழுது அதனால் பெறப்பட்ட விண்ணுலகத்தையும் விட்டு விடவேண்டி நேரிடும். மண்ணுலக வாழ்க்கை மறுபடி தொடங்கும். இத்தகைய உயிர்கள் இறைவனோடு கலப்பதை அறியாதவர்கள். கைவல்ய முக்தியை அடைபவர்கள்தாம் எங்குமுள்ள என்றுமுள்ள இறைவனோடு ஒன்றிக் கலந்து அவனாகவே ஆகிவிடுகிறார்கள்.''

''அப்படியானால், கைவல்ய முக்தி அடையும் உயிர்கள் அழிந்துவிடுகின்றன. அப்படித்தானே? அல்லது, ஒன்றிக் கலப்பதும் அழிவதும் வேறு வேறு நிலைகளா? லயமும் நாசமும் ஒன்றில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை, பார்த்தா! லயம் என்பதற்கு நாசம் என்று பொருளன்று. தனித்துத் தெரியசமல் மறைவது லயம் எனப்படும்.''

''ஒரு பொருள் அழியும் பொழுதும் தனித்துத் தெரியாமல் மறைந்துதானே போகிறது? அதை அப்புறம் நாம் பார்க்க முடிவதில்லையே?''

''ஆனால், கண்ணுக்குத் தெரியவில்லை என்பதனால் அது அழிந்துபோய் விட்டது என்று நீ எப்படித் தீர்மானிக்க முடியும்? ஒரு சர்க்கரைக் கட்டியையோ உப்புக் கட்டியையோ தண்ணீரில் போட்டால் கரைந்து மறைந்து போய் விடுகிறது. அதைக் கண்ணால் பார்க்க முடியாது. அதனால், அது அழிந்துபோய் விட்டது என்று சொல்ல முடியுமா? அல்லது நீரில் கலந்து மறைந்து விட்டது என்று சொல்வாயா? அது அங்கேதான் இருக்கிறது. நீரின் சுவையே அதைச் சொல்லும். அதன் வடிவம் போய்விட்டதென்றாலும். அதனுடைய தன்மையோடு அங்கு இருக்கிறது. இதேபோல, பரம்பொருளில் உயிர் கலக்கிறது. அது அழிந்துவிடுவதில்லை. இவ்வாறு கலக்காத பொழுது, உயர்ந்த பக்ஷம் மண்ணுக்கும் விண்ணுக்குமிடையே அலைந்து, விண்ணுலக வாழ்க்கைக்குச் சில நாட்கள் தகுதி பெற்று, பின் விடுதலைக்கேற்ற பயிற்சிகளை மேலும் கைகொள்வதற்காக மண்ணுலகிற்கு மீண்டும் இறங்கிவர வேண்டும்.''

அர்ஜுனன் இன்னும் ஐயுறவால் கலங்கிக் கொண்டிருந்தான். ''கண்ணா! பிறப்பிறப்பு என்ற சுழலிலிருந்து விண்ணுலகம். அதனின் மிக உயர்ந்த சத்தியலோகமும் மனிதனைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லுகிறாய் அப்படியானால், முக்திக்கு ராஜபாட்டைதான் என்ன? இந்த உலகங்களை அடையப் பாடுபடுவர்கள் அவைகளோடு திருப்தி அடைய வேண்டியதுதான் என்று கருதிச் சொல்லுகிறாய்? அவர்களுக்கு வேறொன்றும் கிடைக்காதா? என்று கேட்டான்.

''பார்த்தா! இவ்வுலகங்களுக் கெல்லாம் அப்பால், குறைவேயில்லாத ஒரு தேசம் இருக்கிறது. அந்தத் தேசத்தை அடைவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. இந்த வழிகளை அறியாமல், அந்த இடத்தின் இன்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணராமல், மனிதன் வேறு குறுக்குக் கோணல்வழிகளையோ வசதியான வழிகளையோ பின்பற்றுகின்றான். சரியான வழியையும் தவறான வழியையும் பிரித்தறிய அவனால் முடிய வில்லை.

''மனித இனத்தால் இப்பொழுது பயன்படுத்தப்படும் நான்கு வழிகளை நான் உனக்குச் சொல்கிறேன். 1. கர்மா தீதம் (செயல்களுக்கு அப்பாற்பட்டது.) 2, நிஷ்காம கர்மம் (பயனில் கருத்தில்லாமல் உழைப்பது) 3. ஸகாம கர்மம் (பலன் கருதிச் செய்யப்படும் செயல்கள்) 4. கர்ம பிரஷ்டம் (வரையறையில்லாத செயல்கள்).

''கர்மாதீதர்கள் ஜீவன் முக்தர்கள்; அவர்களின் கரும வினைகளெல்லாம் ஞானம் என்னும் தீயினால் கொளுத்தப் பட்டுவிடுகின்றன. அவர்கள் பெற்ற மெய்யறிவினால், செயல் செய்ய முனையும் துடிப்புக்கள் சாம்பராகி விடு கின்றன. அவர்களுக்கு விதிவிலக்கு முதலியவற்றின் தேவை யில்லை. தானம், தருமம், தவம் முதலிய பயிற்சிகளுக்கும் தேவையில்லை. அவர்கள் செய்வது. உரைப்பது, நினைப்பது எல்லாமே தெய்வீகமாகவும், புனிதமாகவும், அறநெறி பொருந்தியதாகவும், மனிதனுக்கு நலம் விளைப்பதாகவும் இருக்கும். அவர்கள் மிதித்து நடக்கும் மண்கூடப் புனித மானது. அவர்கள் பேசும் ஒவ்வொரு சொல்லும் கடவுளின் சொல்லாகும். அவர்கள் இறக்கும்பொழுது விண்ணுலகங் களைச் சார்ந்த இடங்களுக்கு அவர்களுடைய மூச்சு அவர்களை இட்டுச் செல்ல வேண்டுவதில்லை. அவர்களது உடல் என்னும் சட்டை விழும்போது, தாமதமில்லாமல் பரம்பொருளில் அவர்கள் கலக்கிறார்கள். இத்தகையவர்கள் தாம் கைவல்ய முக்தி அடைந்தவர்கள் என்றும் பிரம்ஹ ப்ராப்தி பெற்றவர்களென்றும் ஸத்யோ முக்தி அடைந்த வர்கள் என்றும் என்னால் சற்றுமுன் வருணிக்கப் பட்டார்கள்.

''அடுத்து இரண்டாவது இனத்தைச் சேர்ந்தவர்கள் நிஷ்காமகருமிகள். இவர்கள் விடுதலையை விரும்புகின்றவர்கள் (முமுக்ஷுக்கள்). அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் இறைவனை உணரும் வழியில் ஒரு படியாக எண்ணிச் செய்கிறார்கள். அதனால் அவர்களால் ஒரு தீச் செயலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியாது; அவர்கள் பலனை எதிர்நோக்குவதில்லை. கொடுப்பதையும் கொடுக்காததையும் இறைவனது திருவுள்ளத்திற்கு விட்டு விடுகிறார்கள். மண்ணுலகத்து ஆசைகளினாலும் விண்ணுலகத்து இன்பங்களைப் பெறும் ஆசைகளினாலும்கூட அவர்கள் தூண்டப்படுவதில்லை. அவர்கள் நோக்கமெல்லாம் இந்தப்புற உலகம் என்னும் கட்டிலிருந்து விடுபடுவதுதான். அவர்களது நம்பிக்கைக்கும் பயிற்சிக்கும் ஏற்ப இறைவனது அருளைப் பெறுகிறார்கள்.

ஸகாம - கர்மிகள் என்ற மூன்றாவது வகையினர் பலனில் இச்சை வைத்து எல்லாச் செயல்களையும் செய்கிறார்கள். பலனை வெற்றிகரமாகப் பெறுவதிலேயே கண்ணாயிருப்பதால், மெய்ந்நூல்கள் ஒப்புகின்ற செயல்களில்தான் ஈடுபடுகிறார்கள். பாவமான செயலையோ, கூடாத செயலையோ அவர்கள் செய்யமாட்டார்கள், ஒவ்வொரு செயலையும் அது தரக்கூடிய நற்பயன், மகிழ்ச்சி. மறுமைப்பேறு இவற்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். இவ்வுலகத்திலிருந்து பிரியும் பொழுது, அவர்கள் முயன்று தேடிய மேல் உலகங்களுக்குச் செல்வார்கள். அவர்கள் நல்வினைப் பயன்கள் தீரும்வரை இருந்து, பின் மண்ணுலகத்திற்குத் திரும்புவார்கள்.

நான்காவது வகையினர் ஒரு விதமான நடைமுறையையும் பின்பற்றுவதில்லை. குற்றம் -- குணம், சரி — தவறு முறை—முறையின்மை என்பவைகளைப் பகுத்தறியும் திறன் இல்லாதவர்கள்; இப்படிப் பகுத்தறிவதற்கு வேண்டிய உரைகள் ஒன்றும் இல்லாதவர்கள். நரகத்தைக் கண்டு அஞ்சுவது இல்லை; மறுமையைப் பற்றிய கருத்து ஒன்றும் கிடையாது; தீயதைப் பற்றிய துணுக்கம் இல்லை, இறைவனைக் குறித்துப் பணிவு இல்லை; மெய்ந் நூல்களின் பால் மதிப்புக்கிடையாது. அறத்தைப் பற்றிய சிந்தனையில்லாதவர்கள் மனித வடிவத்தில் காணப்படும் விலங்குகள் என்று அவர்களை வரைந்து காட்டுவதுதான் சரி. மனிதர்களில் பெரும்பாலோர் இந்தத் துரதிருஷ்டம் பிடித்த வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். கணநேர இன்பத்துக்கும், நிலையற்ற மகிழ்வுக்கும், அழியக்கூடிய கிளர்ச்சிக்கும், மறைந்துவிடக்கூடிய வசதிக்காகவும் இவர்கள் உழைக்கிறார்கள். மனித உடல் கொண்ட குரங்கினம் என்று அவர்களை அழைப்பதுகூடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய தவறாகும். ஏனெனில், குரங்குகள் மரத்திற்கு மரம், கிளைக்குக் கிளை மட்டுமே தாவும். ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குத் தாவும் பொழுதோ, ஒரு கிளை யிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாவும் பொழுதோ முன் மரத்தை அல்லது முன் கிளையை விட்டு விட்டு அடுத்த மரத்தை அல்லது கிளையைத் தாவிப் பிடித்துக் கொள் கின்றன. மனிதர்களோ புழுவைப் போன்றவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். தாங்கள் இதுவரை பற்றிக் கொண்டிருந்த இலையை விடுவதற்கு முன்னால், அடுத்த இலையை முன்கால்களினால் பற்றிக் கொண்டுதான் இலைக்கு இலை இப்புழுக்கள் தாவும்.

இவ்வுலகத்தை விட்டுப் போகு முன்னரே மறுபிறவி ஏதாக இருக்கும், எப்படி எங்கு அது ஏற்படும் என்பதை தான் செய்யும் வினைகளினால் மனிதன் நிச்சயிக்கிறான். புது இடம் அவனுக்குத் தயாராக இருக்கிறது. அவனது முன் கால்கள் ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டு விட்டன. இந்தப் புது இடத்தை ஒரு வகையாக நிச்சயப்படுத்திக் கொண்ட பிற்பாடுதான், இவ்வுலகத்தில் இந்தப் பிறவி யின் பிடிப்பை அவன் விடுகிறான். இந்த இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் பிறப்பிறப்பு என்ற சக்கரத்தில் வளைய வளைய வருகிறார்கள். நல்ல அறிவுள்ள மறுபிறப்பும், பெரு மையான இறப்பும் உத்தரவாதமாகக் கிடைக்க வேண்டு மானால் பிறப்பதற்கும் இறப்பதற்கும் நல்ல புனிதமான நேரம் கிடைக்க வேண்டும். உதாரணமாக, அர்ஜுனா! நல்ல புனிதமான நேரங்கள் கிடைக்கும் பொழுதுதான் யோகிகள் உடலை விடுகிறார்கள்; எல்லா நேரங்களிலுமல்ல. அதனால் தான் ''நல்லவர்கள் என்பதற்கு அவர்களது மரணமே சாக்ஷி'' என்று மக்கள் சொல்லுகிறார்கள். இறக்கும் செயலுக்குக் கூட நல்லதொரு நேரம் பொறுக்கப்பட வேண்டும்.

''கண்ணா! இந்தப் பிறவிச் சூழலைத் தவிர்க்க வேண்டு மானால் எப்பொழுது உடம்பை விட வேண்டும்? எந்த நேரத்தை தவிர்க்க வேண்டும்?'' என்று அர்ஜுனன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பார்த்தா! உன்னுடைய கேள்வி சரியான நேரத்தில் கேட்கப்பட்டது; மிக்க அவசரமானதும் கூட. சில சமயம் உன்னுடைய அறிவுக் கூர்மையினால் என்னை வியப்படையச் செய்கிறாய். எனக்கு மகிழ்ச்சியையும் தருகிறாய். சில சமயம் உன்னுடைய அறியாமையினால் என்னை நகைக்க வைக்கிறாய். ''தான்'' என்ற நினைவும் பற்றுள்ள உள்ளமும் இந்தக் குழப்பத்தை உண்டு பண்ணுகின்றன. அது போகட்டும். உன்னுடைய கேள்விக்கு வருவோம்.

''பலனில் கருத்தில்லாமல் (நிஷ்காம கர்மிகளாக) இருக்கும் யோகிகள், ஆண்டின் உத்தராயணப் பாதியான ஆறுமாதங்களில், மாதத்தின் வளர்பிறை நாட்களில், பகல் நேரத்தில் வெளிச்சம் இருக்கும் பொழுதே, ஒளியுடன் கூடித் தங்கள் உடலை விடுகிறார்கள். அவர்களது முதல் நிலையே தீயாக (அக்னியாக) இருப்பதால், அவர்கள் உடலை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் வழி தேவஞானம் எனப்படுகிறது. ஒளிர் நிறைந்த வழி என்பது பொருள். வேதங்களில் ஒளிக்கு அர்ச்சிஸ் என்றும் பெயருண்டு. ஆதலால், இது அர்ச்சி'ராதி மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது. அத்தகைய யோகிகள் ஒளியிலிருந்து புறப்பட்டு. ஒளியினூடே பயணம் சென்று, ஒளியிலேயே கலக்கிறார்கள். பின், பரம் பொருளை அடைந்து, மறுபடி பிறப்பதில்லை.

''பலனில் இச்சையோடு செயல் செய்பவர்கள் (ஸகாம கர்மிகள்) ஆண்டின் மற்றொரு பாதியான தக்ஷிணாயனத்தில் மாதத்தின் தேய்பிறை நாட்களில் இரவில் புகையில் தம் உடலை விடுகிறார்கள். அவர்கள் புகை நிறைந்த தூமமார்க்கத்தில் பயணம் செய்து விண்ணுலகத்தை அடைகிறார்கள். தாங்கள் விரும்பி அதற்காக உழைத்த இன்பங்களை நுகருகிறார்கள் அவர்களது நல்வினைப் பயனின் சேமிப்புத் தீர்ந்து விட்டபொழுது மறுபடி வந்து இவ்வுலகில் பிறக்கிறார்கள்.

''இந்த இரண்டு வகையான மனிதர்களுமே யோகிகள் எனப்படுவர். நற்பயன்களை விரும்புகின்றவர்களும், அதற்காகச் செயல் செய்து முன்னேறும் மனிதர்களும் உலகத்தில் உள்ளவரை இந்த யோகிகளும் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த இடத்தில் நியாயமாக ஒரு சந்தேகம் எழக் கூடும். மாதத்தின் வளர்பிறைப் பகுதியான சுக்லபக்ஷம் ஏன் புனிதமானது? தேய்பிறைப் பகுதியான கிருஷ்ண பக்ஷம் ஏன் அவ்விதமில்லை? இரவும் இல்லாமல் பகலும் இல்லாமல், ஒளியுமில்லாமல் இருட்டுமில்லாமல் இருக்கும் பொழுது இறந்து போகின்றவர்களுக்கு என்ன நடக்கும்? இந்தச் சந்தேகம் நியாயமானது; அதற்குரிய விடையைத் தெரிந்து கொள்வதில் எல்லாருக்கும் உரிமையுண்டு.

''சுக்லபக்ஷம் என்றால் என்ன என்பதை நீ முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். சந்திரனின் ஒளி நாளுக்கு நாள் வளரும் நாட்கள் அவை. ஆனால், சந்திரனின் ஒளிக்கும், மனிதன் இறப்பதற்கும் என்ன சம்பந்தம்? மனிதனுடைய மனத்துக்குச் சின்னமானது மதி என்ற சந்திரன் ''சந்திரனிடமிருந்து மனம் பிறந்தது'' என்று வேதம் பேசும். ஆகையினால், இந்த வளர்பிறை, மனிதனின் ஆன்மீக வளர்ச்சியை, தெய்வீக முயற்சியைக் குறிப்பிடு கிறது. முழுமதி முழுப்பேற்றை குறிக்கிறது. இவ்வாறு, சுக்லபக்ஷம் என்ற இந்தப் பகுதியில்தான் ஆன்மீக வளர்ச்சி ஏற்படுகிறது. கண்ணால் பார்க்கப்படும் சந்திரன் இந்த உடலுக்கும், சந்திரனை ஆட்கொண்டு நடத்தும் தெய்வமான சந்திர—தேவதை மனதுக்கும் அடையாளங்கள். தன்னுடைய தெய்வீகத் தன்மையை ஒவ்வொரு வனும் மேலும் மேலும் உணர்ந்து கொள்ளுவதனால் ஏற்படும் ஒளி உண்டே, அதுதான் சுக்லபக்ஷம் என்ற சொல்லின் பொருள்.

''உத்தராயணம் என்பது என்ன? அந்த விஷயத்திலும் ஐயமறத் தெரிந்து கொள். நீ செய்யும் ஒவ்வொரு மதச் சடங்கின் பொருளையும் தெரிந்து கொண்டு செய்யும் வழிபாடு, பயிற்சியின் ஒவ்வொரு அடியின் உட்கருத்தையும் தெரிந்து கொண்டு செய்யும் சடங்கு இவையெல்லாம் இதயத்தை நன்றாகத் தூய்மைப் படுத்தி ஐயப்பாடுகளின் தளைகளைத் தளர்த்தும்.

''உத்தராயணம் என்ற இந்தக் காலத்தில் மேகச் சிதள்களோ பனியின் மூட்டமோ ஆகாயத்தை மறைக் காமல், சூரியன் தன்னுடைய முழு ஒளியுடனும் பிரகாசிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறன், இது மேற்போக்கான பொருள். நுட்பமான கருத்தும் உண்டு. இதயம் என்பது உள் ஆகாயம். அறிவு தான் அங்கு ஒளிரும் ஆதவன். அந்த உள் ஆகாயத்தில் அறியாமை மேகங்களும், ஆணவப் பனியும், பற்றென்னும் புகையும் படரும் பொழுது அறிவென்னும் ஆதவன் மறைக்கப்படுகிறுன். அப்பொழுது பொருள்கள் மங்கலாகத் தெரிகின்றன. ஒன்று இன்னென்ருகத் தோன்றுகிறது. இவையெல்லாம் இல்லாமல் உள் ஆகாயம் துல்லியமாக இருக்கும் பொழுது, அறிவு முழு ஒளியுடன் பிரகாசிக்கும் பொழுது, அது இதயத்தின் உத்தராயணமாகும். ''ஞான பாஸ்கரன்'' என்று சொல்லுவதை நீ கேட்டிருக்கலாம். ''அறிவுச் சூரியன்'' என்பது அதன் பொருள். அறிவுக்கும் மெய்யுணர்வுக்கும் சூரியனுக்கும் எப்பொழுதும் தொடர்பு உண்டு. தன்னுடைய மாசற்ற இதயத்தில் ஒளிரும் இந்த மெய்யுணர்வுச் சூரியன் என்னும் பெருந்துணையுடன் ஒருவன் இறக்கும் பொழுது அவன் மறுபிறவியினின்றும் தப்பலாம். முன்பே சொன்னபடி ஒளிப்பாதை வழியாக அவன் சென்று பரம்பொருளில் கலக்கிறுன்!''

''தக்ஷிணுயனத்தில் மரணமடைபவர்கள் இதற்கு நேர் மாருன கதியையடைகிருர்கள். அந்தச் சமயத்தில் இதயத்தில் புகையும், பனியும் மேகமும் கப்பியிருக்கும். அறிவென்னும் ஆதவன் அங்கு மறைக்கப்பட்டிருக்கிறுன். அவன் ஒளி மழுங்கியிருக்கிறது. கிருஷ்ணபக்ஷத்தில் சந்திரன் தேய்ந்து கொண்டே வருகிறது. இறைவனைக் குறித்த எண்ணங்களும் தேய்ந்து கொண்டே வருவதை இது குறிக்கிறது. அமாவாசையன்று இரவு முழு இருட்டால் கவரப்படுகிறது. புனிதமான எண்ணங்களெல்லாம் தோல்வி யுறுகின்றன. அறியாமையென்னும் புகை மூட்டம் மனத்தில் அடர்த்தியாகத் தங்குகிறது. இதுதான் கிருஷ்ணபக்ஷம் என்பதன் பொருள். இந்த அமங்கலமான காலத்தில் இறப்பவர்கள் அமங்கலமான பலனை அடைகிருர்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 18

அறிவின் புனிதமான பேரொளியினுல் உத்தராயண மார்க்கம் விளங்குவதனுல் அது வெண்மைப்பாதை அல்லது சுக்ல மார்க்கம் எனப்படுகிறது. தக்ஷிணுயன மார்க்கம் இருளடர்ந்ததாகவும், அறியாமை நிரம்பியதாகவும் இருக்கிறது. அதனுல் அது இருண்டபாதை அல்லது கிருஷ்ண மார்க்கம் எனப்படுகிறது. உத்தராயண காலத்தில் உடலே விட்டு நீங்குகிறவர்கள் இந்த சுக்ல மார்க்க வழிச் சென்று முக்தி நிலையை எய்துகிருர்கள். இந்த நிலேயில் மயக்கங்கள் கிடையா. பேரின்பத்தின் பெட்டகமாகவும் கருவூலமாகவும் இது இருக்கும் மேலும், உருவம் பெயர் இவற்ருலான இந்தச் சிற்றுயிர்களின் உறைவிடமாய் இருக்கின்ற உலகத்திற்கு மறுபடி வர வேண்டிய தேவையில்லாத வீடாகவும் இருக்கிறது. தக்ஷிணுயனத்தில் உடலே விட்டு நீங்கி இருண்ட பாதை வழியாகச் செல்லுபவர்கள், பிறப்பிறப்பிற்குரிய இந்த உடலென்னும் பௌதீகக் கூட்டை மறுபடியும் சுமக்க நேரிடும்.

''உத்தராயணம் என்பது ஏதோ காலப்பிரிவன்று. அது ஒரு மனநிலே தன்னையறிந்து தன் பெருமையோடு உடலே விடுகின்றவர்கள் உத்தராயண மார்க்கத்தில் செல்லுகிருர்கள். தன்னே அறியாத அறியாமையில் இறந்து போகின்றவர்கள் இருண்ட பாதையான தக்ஷிணுயனத்தில் அல்லது இறந்துபட்ட முன்னேர்கள் வழியான பித்ருயானத்தில் செல்லுகிருர்கள்.

''முக்குணங்களில், ஸத்வகுணம் தூயது, ஒளிபொருந்தியது. தமோகுணம் இருண்டது அதனுல் அவை வெண்மை கருமை என்ற எதிரெதிர் வண்ணங்களால் வேறுபடுகின்றன. இன்னும், இடை பிங்களே என்னும் இரு நுட்பமான நாடிகள் இருக்கின்றன. இடை என்பது ஸுஷும்னே நாடியின் இடது பக்கமும், பிங்களே என்பது வலது பக்கமும் இருக்கின்றன. இடைநாடி வழி என்பது சந்திரமார்க்கம். பிங்களே நாடி வழி என்பது சூரிய மார்க்கம். யோகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய மார்க்கத்திலும், மற்றவர்கள் சந்திர மார்க்கத்திலும் செல்லுகிறார்கள். நாம் காணமுடியாத ரகசியங்களில் இதுவும் ஒன்று,

''பிறந்தவற்றின் முடிவு இறப்பு. சேர்க்கை பிரிவுக்கு இட்டுச் செல்லுகிறது. ஒன்றைக் கட்டுவது என்றால் முன்னால் கட்டியதை இடித்துக் கட்டத்தான் வேண்டும். பிறப்பு இறப்பில் முடிவதும், இறப்பு பிறப்பில் முடிவதும் இயற்கையின் நியதியாகும். எங்கும் நிறைந்த பரம்பொருளை உணர்ந்த நிலைதான் போக்கும் வரவுமில்லா நிலை. பரம் பொருள் இல்லாத இடமே இல்லாததால், போகக்கூடிய இடமும் வரக்கூடிய இடமும் ஏது?

''இந்த நிலை எல்லோருக்கும் எட்டக் கூடிய ஒன்று, இந்த வெற்றியை எல்லாரும் பெறமுடியுமா என்றெல்லாம் சந்தேகப்பட வேண்டியதில்லை. இதற்கென்று தனி முயற்சியோ, சிறப்பான அதிருஷ்டமோ, வகுத்து அமைக்கப் பட்ட சடங்குகளோ தேவையுமில்லை. இறைவன் பேரில் எப்பொழுதும் மனத்தைப் பொருத்தி, இடையறாமல் அவ்விறைவன் சிந்திக்கப்பட்டாலே போதும். அது மனத் தைத் துப்புரவாக்கும்; அதைத் தடுத்து நிற்கும் அருள் நீங்கும். இது ஒன்றே மோட்ச நிலையாகும். மோஹக்ஷயம் என்பது தானே மோக்ஷம்! ஒருவன் எப்படி இறந்தாலும் சரி, அவன் இந்த மோஹக்ஷயத்தை (மருள் தேய்தலை)ப் பெறு வானானால், பரம்பொருள் நிலையைக் கட்டாயம் அடைவான். அத்தகையவன் மெய்யறிவாளன் எனப்படுவான்.''

இதைக் கேட்ட அர்ஜுனன் ஒரு கேள்வியைப் போட்டான். ''கண்ணா! நீ அறிவு என்று அழைக்கும் இதன் பொருளை நான் உணர்ந்து கொள்ளவில்லை. ஆசிரியரிட மிருந்து காதினால் கேட்டுப் பெறுகின்ற அறிவா இது? அல்லது மெய்யுணர் நூல்களிலிருந்து பெற்ற அறிவா? அல்லது நன்கு மெய்யுணர்ந்த பெரியோர்களினால் அருளப் பெற்ற அறிவா? இவற்றுள் எது அவனைக் கட்டிலிருந்து விக்கும்.

இதற்குக் கண்ணன் சொன்னான்; நீ இப்பொழுது குறிப்பிட்ட அறிவினங்களெல்லாம் ஒருவனுடைய ஆன்மீக வளர்ச்சியில் ஏதாவது ஒரு நிலையில் உதவுபடியாக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் அவற்றுள் ஒன்றினுலேயும் ஒருவன் பிறவிச் சூழலி லிருந்து தப்ப முடியாது! நீயே உள்ளத்தால் உணர்ந்து பெறும் அறிவுதான் உன்னை விடுவிக்கும். அதுதான் உனது வீடு தலைக்கு உதவும். ஆசிரியன் இந்த முயற்சியில் ஓரளவுற்குத்தான் உதவியாக இருக்க முடியும்; உன்னுடைய உண்மையான தன்மையை அவரால் காண்பிக்க முடியாது. அதை நீயேதான் உணரவேண்டும்; மேலும் நீ பொருமை போன்ற தீய குணங்களில் இருந்து விடுபட வேண்டும். அப்பொழுதுதான் நீ முழு அறிவு பெற்றவனுவாய். இந்த அறிவில் நம்பிக்கை உள்ளவன் இதை அடைவதில் ஈடுபடு பவன், இதைப் பெறுவதில் பேரவா உள்ளவன், அத்தகை யவன்தான் என்னை அடைய முடியும்.

''அவன் பொருமையில்லாதவனுக இருக்க வேண்டும். ஆர்வத்துடன் மிகுந்த நம்பிக்கை உடையவனுக இருக்க வேண்டும். எந்தச் சிறியதொரு காரியம் செய்தாலும் கூட அதில் ஆர்வம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். மனிதன் மட்டுமல்ல, பறவையும் விலங்கும், புழுவும், பூச்சி யும் கூட, வெற்றி பெற வேண்டுமானுல் ஆர்வத்தோடு செயல்பட வேண்டும். செயலில் ஆர்வமோ நம்பிக்கையோ உங்களுக்கு இல்லையென்ருல், நீங்கள் நினைத்த பலனைப் பெற முடியாது,

''அர்ஜுனு! நானே சாக்ஷி; என்னுல் தான், இந்த இயற்கையெனப்படும் ஐந்து மூலப்பொருள்களின் சேர்க்கை யான பிரபஞ்சம், அசைவன அசையாதனவாகிய எல்லாம் அமைக்கப்படுகின்றன. என்னைக் காரணமாகக் கொண்டு, இவ்வுலகம் பலவாருக இயங்குகிறது. தலையாய தத்துவ மாகவும், எல்லாப் பொருள்களும் பணிந்து நடக்கவேண்டிய தலைவனுகவும் என்னைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், என்னை வெறும் மனிதனுக எண்ணுகிருர்கள். சில உயர்ந்த பெருமக்கள் என்னைப் பரம்பொருளாகத் தியானம் செய்கிருர்கள். மற்றவர்கள் என்னைப் பல பெயர்களோடும் உருவங்களோடும் துதிக்கிருர்கள். இன்னும் சிலர் ஞான வேள்வியினுலும், ஆத்ம வேள்வியினுலும் என்னை வழிபடு கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எந்தப் பெயராயினும், எந்த வகைத்தான வழிபாடாயினும், எல்லாவற்றையும் நானே பெற்றுக் கொள்கிறேன். ஏனெனில், நான் தான் எல்லாவற்றுக்கும் குறிக்கோள். நான் ஒருவனே; எனக்கு வேறான ஒன்றும் இல்லை. என்னுடைய பல பெயர்களாலும் உருவங்களாலும் நானே வழிபாட்டுக்குரியவனாகிறேன். இது மட்டுமல்ல; நான் செயல்களுக்கெல்லாம் பயனாக இருக்கிறேன். நான் பலனைக் கொடுக்கிறேன், நானே எல்லாவற்றிற்கும் ஆதாரம். நானே எல்லாவற்றையும் ஊக்குவிப்பவன், வளர்ப்பவன். திருப்பித் திருப்பி வளர்த்துச் சொல்லிக் கொண்டே போவானேன்? ஒவ்வொரு பொருளிற்கும் ஒவ்வொரு உயிருக்கும் அதனுடைய தோற்றம், இருப்பு, இறப்பு, என்ற மூன்றிற்கும் மூல சக்தியாக இருப்பது நானே. பிறப்பிறப்பில்லா ஆதி காரணமாக நான் இருக்கிறேன்.

''மூலகாரணமாகிய என்னை உணர்ந்து கொள்! அது தான் வீடு பேறு. இதனை அடைபவன். ஜீவன் முக்தன் (இவ்வுலகில் வாழும் பொழுதே முக்தி பெற்றவன்). ஆகையினால், அர்ஜுனா! ஒருவன் விடுதலை பெற்று ஜீவன் முக்தனாக விரும்பினால்' சில எளிய ஒழுக்கங்களைப் பழக வேண்டும். அதாவது, உடலின் மேல் இருக்கும் பற்றினை முற்றிலும் அழிக்க வேண்டும்.''

இதைக் கேட்ட அர்ஜுனன் இடைமறித்துக் கேட்டான். ''கண்ணா! முற்றிலும் பற்றறுத்தல் என்ற இதை எளிய ஒழுக்கம் என்றா சொல்லுகிறாய்? அது அவ்வளவு எளிதாகப் பயிலக் கூடியதா என்ன? தேர்ந்த துறவிகள் கூட அதைக் கடினமென உணர்கிறார்கள். ஆனால் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று என்னைப் போன்றவர்களுக்கு இதைச் சிபார்சு செய்கிறாய் ஏதோ வெகு சுளுவான செயலைப் போல அதைப் பற்றிப் பேசுகிறாய். ஆனால் இது வெகு கடினமான முயற்சி. இது போன்ற யோசனைகளைச் சொல்லுவதனால், என்னைச் சோதனைக் குள்ளாக்குகிறாய் என்று நினைக்கிறேன் இதை நான் எப்போதேனும் அடைய முடியுமா? நான் விடுதலை பெற முடியுமா? எனக்கு என்னவோ, நம்பிக்கை இல்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைச் சொல்லிவிட்டு அர்ஜுனன் சோர்ந்து போய் உட்கார்ந்தான். அவன் தொடர்ந்து தைரியத்தை இழந்து கொண்டிருப்பதைக் கண்ணன் கவனித்தான். அவன் அருகில் சென்று, ஊக்கமளிப்பவன் போல் முதுகில் தட்டிக் கொடுத்தான் ''அர்ஜுனு! இதற்காக அதிர்ச்சியடைந்து நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. இதற்கு மாருக, இதைக் கேட்டு ஒருவன் உடனே நம்பிக்கை பெறுவான். அறிவிஞல் ஆராய்ந்து இதை ஒருவன் ஆழ்ந்து அணுகிப் பார்க்க வேண்டும். அப்பொழுது, நீ நினைப்பது போல இந்தப் பயிற்சி ஒன்றும் அப்படிக் கடினமானது அல்ல என்பது தெரியும். முற்றிலும் பற்றறுப்பதற்கு, சடை வளர்த்து, காவி பூண்டு உடம்பை எலும்பும் தோலுமாக ஆக்கி வருத்த வேண்டும் என்ற தேவையில்லை. ஓர் ஆசையில்லாமல், இறைவனுக்குக் காணிக்கையாகச் செயல் செய்தால் போது மானது. இதுதான் முக்தியின் ரகசியம்.

''இம்முறையில் செயல்களையெல்லாம் செய்வது கடின மல்ல. மாருத நம்பிக்கையும் ஆர்வமும் மட்டும் இருக்க வேண்டும். எல்லாச் செயல்களுக்குமே இவை வேண்டியது தான். என்ருலும் ஆன்மீகச் செயல்களுக்கு அவை இன்றி யமையாதவை என்பதை நீ உணரலாம்.

''வேறு எண்ணம் இல்லாமல், எந்தப் பக்தர்கள் என் னிடம் எல்லாச் செயல்களையும் ஒப்புவித்து விட்டு என்னையே சிந்திக்கிருர்களோ, எனக்கு ஆட்செய்கிருர் களோ, வழிபடுகிருர்களோ, நினைக்கிருர்களோ அவர்க ளுடன் நான் எப்பொழுதும் இருக்கிறேன்; இம்மை யிலும், மறுமையிலும் அவர்களுக்கு வேண்டியதை யெல் லாம் செய்து கொடுக்கிறேன் என்பதையும் அறிவார்கள். அவர்களுடைய யோக க்ஷேமத்தின் பளுவை நான் தாங்கு கிறேன். (யோகம் என்ருல் சேர்த்தல்; க்ஷேமம் என்ருல் சேர்த்ததைக் காத்தல்). காதில் வாங்கிக் கொண்டாயா?'' என்று கண்ணன் அர்ஜுனனுடைய முதுகில் செல்லமாகத் தட்டி அவனது தளர்ந்த இதயத்துக்கு ஊக்கமூட்டிக் கேட்டான்.

பக்தனுடைய யோக க்ஷேமத்தைத் தான் தாங்குவதாக இறைவன் வாக்களித்தது பல தவருன கருத்துக்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்திருக்கிறது. இதன் உண்மையான கருத்தைப் படித்தவர்களே புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. கீதைக்கு உரை விளக்கம் பிரவசனம் செய்பவர்கள் இந்த அறிவிப்பைப் பல வழிகளில் உண்மை தேராது பரப்புகிறார்கள்.

இந்த வாக்கு கீதைக்கே நாபி போன்றது. திருமாலின் நாபியில் நான்முகக் கடவுளான பிரம்மா தோன்றினான். மெய்யறிவான பிரம்மஞானத்தைப் பெறவேண்டுமென்று வேட்கை கொண்டவர்களுக்குக் கீதையின் இந்தச் சுலோகம் பிறப்பிடமாக, நாபிக்கலமாக இருக்கிறது. இந்தச் சுலோகத்தை நன்கு கடைப்பிடித்தோமானால் கீதை முழுவதும் புரிந்து கொண்டதாக ஆகும்.

இந்தச் சுலோகத்தைப் பற்றிப் பல சுவையான கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. (சுலோகம் இதுதான்:

*அனன்யாஸ் சிந்தயந்தோ மாம்*
*யே ஜனா: பர்யுபாஸதே*
*தேஷாம் நித்யாபியுக்தானாம்*
*யோகக்ஷேமம் வஹாம்யஹம்*

"என்னை யார் வேறு எந்த நினைவுமில்லாமல் சிந்திக்கிறார்களோ, அவ்வாறு என்னோடு எப்பொழுதும் இணைந்திருக்கின்றவர்களுடைய யோக க்ஷேமத்தை நான் ஏற்கிறேன்."

ஒரு சமயம் படித்த பண்டிதர் ஒருவர் ஓர் அரசனின் மதிப்பிற்குரிய முன்னிலையில் கீதையைப் பற்றி உரைகள் நிகழ்த்தினார். ஒருநாள் இந்த மேற்சொன்ன சுலோகத்தைச் சொல்லி விளக்கவேண்டிய இடம் வந்தது. அதன் பல உட்கருத்துக்களை வெகு உற்சாகமாகப் பண்டிதர் விளக்கிக் கொண்டிருந்தார். ஆனால் அரசன் அதைத் தலையசைத்து மறுத்து "இந்த விளக்கம் சரியில்லை" என்றான். இதே போல பண்டிதர் சொன்ன ஒவ்வொரு விளக்கத்தையும் தவறு என்று மறுத்து வந்தான். பாவம்! அந்தப் பண்டிதரோ பல அரசரவைகளில் புகழுக்குரிய பாராட்டுக்களைப் பெற்றவர். ஆடம்பரமான விருதுகளினால் அந்த அரசர்களால் சிறப்பிக்கப் பட்டவர். இந்தச் சுலோகத்திற்குத்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

தான் சொன்ன விளக்கத்தை அங்கு இருந்த அத்தனை அரச வையினர் முன்னாலும் அரசன் 'தவறு' என்று கண்டித் ததும், பண்டிதர் தன்மேல் வேல் பாய்ந்ததுபோல் வருந் தினார். இந்த இகழ்ச்சியால் உள்ளம் கொதித்தார். ஆயினும் உறுதியை வருவித்துக் கொண்டு மறுபடியும் தனது உரையைத் தொடங்கினார். தன்னுடைய கல்வி யறிவை யெல்லாம் திரட்டி யோகம் க்ஷேமம் என்ற சொற் களின் பல்வேறு பொருட்களைப் பற்றி அருவிபோல் சொற் பெருங்காற்றத் தொடங்கினார். அரசன் இதையும் ஒப்புக் கொள்ளவில்லை "இந்தச் சுலோகத்தின் பொருளைக் கண்டு பிடித்து, அதை நன்றாகப் புரிந்து கொண்டு நாளைக்கு மறு படியும் வாரும்!" என்று கட்டளையிட்டு விட்டு, எழுந் திருந்து தன் மாளிகைக்குப் போய் விட்டான்.

பண்டிதருக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் போய்விட்டது. சுலக்கம் அழுத்த இந்த இகழ்ச்சியினால் துன்புற்றார். வீட்டுக்கு வந்து சேர்ந்தார். கீதைப் புத்த கத்தை ஒருபுறம் வைத்து விட்டுக் கட்டிலில் போய் விழுந்தார்.

இதைப்பார்த்து வியப்புற்ற அவர் மனைவி "ஏன் இன்று அரண்மனையிலிருந்து அவ்வளவு துயரத்துடன் திரும்பி வந்தீர்கள்? என்ன நடந்தது?" என்று கேட்டாள். பண்டிதர் பதில் ஒன்றும் சொல்லாமல் இருந்தார். மனைவி மேலும் மேலும் கவலையுடன் தூண்டித் தூண்டிக் கேட் டாள். வேறு வழியின்றி, அரசன் இழித்துப் பேசியது, தன்னை வீட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டது எல்லா வற்றையும் பண்டிதர் சொல்லும்படியாயிற்று. இதைப் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள் அவர் மனைவி. நடந்த நிகழ்ச்சியைப் பற்றி நன்றாக யோசித்துப் பார்த்து விட்டு "ஆமாம்; உண்மைதானே? அரசன் சொன்னது சரியே. நீங்கள் அந்தச் சுலோகத்திற்குச் சொன்ன விளக்கம் தவறு தான். அரசர் அதை எப்படி ஒப்புக் கொள்ளுவார்? தப்பு உங்களுடையதுதான்" என்றாள். இதைக் கேட்டவுடன் பண்டிதர், வாலை மிதித்துவிட்டால் ஒரு பாம்பு எப்படித் துள்ளி எழுமோ அப்படிக் கட்டிலிலிருந்து கோபத்துடன் துள்ளி எழுந்தார். "அறிவு கெட்டவளே! உனக்கு என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும்? என்னைவிட நீ புத்திசாலியோ? அடுப்பங்கரையில் அனவரதமும் சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் உனக்கு என்னைவிடத் தெரியுமோ? வாயை மூடிக்கொண்டு பேசாமல் போ!'' என்று கத்தினார்.

ஆனால் அந்தப் பெண்மணி நகரவில்லை. ''வெறும் உண்மையைச் சொன்னவுடனே ஏன் அவ்வளவு கோபப்படுகிறீர்கள்? அந்தச் சுலோகத்தை மறுபடி மறுபடி சொல்லிப் பாருங்கள். அதன் பொருளையும் சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது அதன் சரியான விளக்கம் உங்களுக்கே புலனாகும்'' என்று இதமாகச் சொன்னாள். இந்த மென் சொற்களினால் கணவனுடைய உள்ளத்தில் அமைதியை உண்டாக்கினான்.

பண்டிதரும் சுலோகத்தினுள்ள ஒவ்வொரு சொல்லின் பொருளையும் ஆராயத் தொடங்கினார். ''அனன்யாஸ் சிந்தயந்தோ மாம்'' என்று, மெதுவாக ஆழ்ந்த சிந்தனையோடு இச் சொற்களின் பல்வேறு பொருள்களை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே ஆரம்பித்தார் அப்பொழுது அவர் மனைவி தடுத்து ''வெறும் சொற்களைக் கற்று அவற்றை விளக்குவதனால் என்ன பயன்? நீங்கள் அரசனிடத்துக்குப் போனபொழுது உங்களுடைய நோக்கம் என்ன? எதற்காக அங்கே போனீர்கள்?'' என்று கேட்டாள். இதைக் கேட்டுப் பண்டிதர் வெகுண்டார். ''நான் இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டாமா? வீட்டை நடத்த வேண்டாமா? உங்கள் துணிமணிகள், வயிற்றுக்குச் சோறு இதற்கெல்லாம் ஆகும் செலவை நான் எப்படிச் சமாளிப்பது? இதற்காகத்தான் நான் அரசனிடம் போனேன். இல்லாவிட்டால் அங்கே எனக்கு என்ன வேலை? என்று இரைந்தார்.

அப்பொழுது அவர் மனைவி சொல்லுவாள்: இந்தச் சுலோகத்தில் பகவான் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருந்தால் அரசனிடத்துப் போக வேண்டிய தேவையே வந்திருக்காது. வேறொரு நினைவுமில்லாமல், அவனையே சரணடைந்து, எப்பொழுதும் மனது அவனிடத்தில் பொருந்தியிருந்தால், அத்தகைய பக்தனுக்கு வேண்டியதையெல்லாம் நானே செய்து கொடுக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பகவான் இந்தச் சுலோகத்தில் சொல்லியிருக்கிறான். இந்த மூன்றையும் நீங்கள் செய்யவில்லை, அரசன் தான் உங்களுக்கு எல்லாவற்றையும் தருவான் என்று அரசனை நம்பிப் போனீர்கள்! இங்கேதான் நீங்கள் இந்தச் சுலோகத்தின் கருத்துக்கு முரணுக நடந்து கொண்டு விட்டீர்கள். இதனால்தான் நீங்கள் சொன்ன விளக்கத்தை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை.''

இதைக் கேட்டு, அவளுடைய சொற்களில் இருந்த உண்மையைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துக் கொண்டு, அந்தப் புகழ் பெற்ற அறிவாளி சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார். அவரது தவற்றை உணர்ந்தார். மறுநாள் அவர் அரண்மனைக்குப் போகவில்லை. மாருக, வீட்டிலேயே கண்ணனைத் தொழுவதில் ஈடுபட்டார். ஏன் பண்டிதர் வரவில்லை என்று அரசன் விசாரித்த பொழுது, அவர் வீட்டிலேயே இருக்கிறார், எங்கும் போகவில்லை என்று பணியாளர்கள் சொன்னுர்கள். அரசன் உடனே அவரை அழைத்து வரும்படி சொல்லி ஓர் ஆளை அனுப்பினுன். ஆனுல் பண்டிதர் வர மறுத்துவிட்டார். ''நான் யாரிடமும் போகவேண்டிய தேவையில்லை. என்னுடைய கண்ணன் எனக்கு வேண்டியவற்றைத் தருவான். என்னுடைய யோக க்ஷேமங்களை அவன் பார்த்துக் கொள்ளுவான். இந்நாள்வரை நான் இதை உணரவில்லை. அதனுல் இகழ்ச்சியடைந்தேன். வெறும் சொற்களின் பல்வேறு பொருள்களைத் தெரிந்து கொள்ளும் ஆவல் என் கண்களை மறைத்து விட்டது. அவனைச் சரணடைந்து, அவனைத் தொழுவதிலேயே ஈடுபடவேணுல், எனக்கு வேண்டியவற்றையெல்லாம் அவனே தருவான்'' என்று அந்த ஆளைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

அரசனுக்கு இந்தச் செய்தியைச் சொன்னுர்கள். உடனே அரசன் கால் நடையாகப் புறப்பட்டு பண்டிதர் வீட்டுக்கு வந்தான். பண்டிதர் கால்களில் விழுந்து சொல்வான்: ''நீங்கள் நேற்று விளக்க முற்பட்ட, சுலோகத்தின் பொருளை இன்றைக்கு உங்கள் அனுபவத்தில் உணர்ந்து எனக்கு விளக்கியதற்காக மனமார உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒருவனது சொந்த உணர்வில் தோன்றாத எந்த ஆன்மீக விளக்கமும் வெறும் ஆரவாரமாகவும் போலியாகவும் தான் இருக்கும் என்று அரசன் பண்டிதருக்கு உணர்த்தினான். இதை நீங்கள் புரிந்து கொண்டீர்களா?

இன்றைக்குக் கூட, கீதையைப் பற்றி உரைகளாற்றி அதைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட படிப்பாளிகள் பலர் அதன் கொள்கைகளை நடைமுறையில் பின்பற்றுவதில்லை. வெறும் சொற்கள், அதன் உரைகள் இவற்றை மட்டுமே விளக்கிச் சொல்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். வேறொன்றுமில்லை. கீதை சொல்லுவதை நடத்திக் காண்பிக்காமல் அதைப் பரப்ப முயல்வது, அந்தப் புனிதமான நூலை அவமதிப்பதாகும். அதுமட்டுமல்ல, பரப்பும் முயற்சிக்கே முரணுமாகும். தங்களது உயிர் மூச்சென்றும் மெய்ந்நூல்களின் திருமுடி என்றும், இறைவனது வாயிலிருந்து நேராகத் தோன்றின சொற்கள் அவை என்றும் அவர்கள் கீதையை உயர்த்திப் போற்றுகிறார்கள். கீதையின் பெயரைச் சொன்ன உடனேயே அவர்கள் கண்களில் நீர் பெருகுமளவுக்கு அந்த நூலினிடத்தில் அவ்வளவு பக்தி காண்பிக்கிறார்கள். அதைத் தலையில் வைத்துத் தாங்குகிறார்கள். கண்களில் ஒற்றிக்கொள்ளுகிறார்கள். ஆலயங்களில் வைத்து, ஆடம்பரமான பக்தியோடு ஆரவாரமாகத் தொழுகிறார்கள். எல்லா மரியாதையும் எல்லாப் பூசையும் வெறும் காகிதத்துக்குத்தான்! வெறும் புத்தகத்துக்குத்தான்!

உண்மையிலேயே, இறைவன் சொன்ன சொற்களினுடைய கருத்துக்களுக்கு அவர்கள் மதிப்புக் கொடுத்தார்களானால், அவற்றை நடைமுறையில் பயிலுவதற்கு முயன்றிருப்பார்கள், இல்லையா? அவர்கள் அவ்வாறு முயலுவதில்லை. சொந்தத்தில் உணர்ந்தது என்பது அணுவளவும் அவர்களிடத்து இல்லை. அப்படி உணர்ந்திருந்தால், அந்த உணர்வைக் காசுக்கு விற்பதில் அக்கறை காட்ட மாட்டார்கள். அருள் ஒன்றுக்கே ஆசைப்படுவார்கள்.

இன்று கீதையைப் பிரசாரம் செய்பவர்களில், அப்படிப் பிரசாரம் செய்வதே தம் வாழ்நாளின் வேலை என்று பறையடித்துக் கொள்பவர்களில், லட்சத்தில் ஒருவர் கூட இறைவனின் அருளைப் பெற ஆசைப்படுவதில்லை. அப்படி ஓர் ஆசை அவர்களுக்கு இருந்தால், பணத்தையும் லாபத்தையும் அவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 19

இப்பொழுதெல்லாம் கீதையைப் பிரசாரம் செய்கிறேன் என்று வரும் பேச்சாளர்கள் பெருகி வருகிறார்கள். இதன் விளைவாக கீதைக்குப் பல்வேறு விளக்கங்கள் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் கீதையின் உண்மையான கருத்தை மறைத்து அதன் தத்துவத்திலிருந்து வெகு தொலைவிலிருக்கின்றன. உரை செய்பவரின் இயல்பையும் மனப்பாங்கையும் ஒட்டி இந்த விளக்கங்கள் அமைகின்றன. ஒரு கருத்தை மனத்தில் வைத்துக் கொண்டு. அதை அதற்கு ஏற்ற வாதங்களால் சப்பைக்கட்டு கட்டுகிறார். மற்ற எல்லோரும் தப்பாகச் சொல்கிறார்கள் என்று நிறுவ முயல்கிறார். பின்னர், ஒவ்வொரு தடவையும் இதையே திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிறார்; கீதை சொல்லுவதை நடை முறையில் பயின்று, தனது வாழ்க்கை நெறியாக ஆக்கிக் கொள்வதில்லை. இத்தகையவர்கள் தாம் பெரிய கீதா பிரசாரர்கள் என்று பாசாங்கு செய்கிறார்கள். நிறைய சான்றிதழ்களையும் பட்டங்களையும் சுமந்து கொண்டு திரிகிறார்கள் இந்த ஏமாற்று வித்தையில் தங்களையும் கெடுத்துக் கொண்டு. கீதையில் பிறருக்கு இருக்கும் நம்பிக்கையையும் குலைக்கிறார்கள்.

இறைவன் கீதையில் சொன்ன ஒவ்வொரு சொல்லும் வாழ்க்கையில் ஏற்று நடத்த வேண்டியதாகும். புகழ் பெறுவதற்காக, பிறர் காதில் ஓதுவதற்காக ஏற்பட்டதன்று. ஆனால் காலத்தின் விபரீதப் போக்கினால், இந்தச் சொற்களெல்லாம் புகழ் பெறுவதற்கும் விளம்பரத்திற்கும் வேண்டித் தவறுகப் பயன்படுத்தப்படுகின்றன! இத்தகைய பிரசாரர்களின் உரைகளைக் கேட்பவர்களும் இவர்களுடைய தகுதியைப் பற்றித் தட்டிக் கேட்பதில்லை. கீதையைப் பற்றி வானளாவப் புகழ்கிறவர்கள் அதன் சுலோகங்களினுடைய இனிமையைச் சுவைத்ததுண்டா என்று பார்க்கவும் அக்கறை கொள்ளுவதில்லை பேச்சும் செயலும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு உபதேசம் செய்கிறார்கள். ஆனால் இந்த உபதேசங்களைக் கேட்பவர்கள், உபதேசம் செய்தவரே இவற்றைப் பின்பற்றுவதில்லை என்பதைக் காண்பிக்கிறார்கள்! லட்சத்தில் ஒருவர்கூட நல்லபடி இல்லை.

கீதை முழுதும் தம் நாக்கு நுனியில் இருப்பதாகப் பீற்றிக் கொள்பவர்கள் சிலர் உண்டு. அத்தியாயத்தையும் சுலோக எண்ணையும் மட்டும் சொன்னால் போதும், கீதையிலிருந்து நீங்கள் விரும்பும் எந்தச் சுலோகத்தையும் அந்த இடத்திலேயே அப்படியே கொட்டுவோம் என்று மார்தட்டுவார்கள். அல்லது, கீதையிலிருந்து ஏதேனும் ஒரு சொல்லையோ சொற்றொடரையோ தாருங்கள், அது எந்த அத்தியாயத்தில் எந்தச் சுலோகத்தில் வருகிறது என்று சொல்லி விடுவோம் என்பார்கள். இத்தகைய படிப்பாற்றல் பகட்டாகக் காண்பிக்கப்படும் பொழுது எனக்குச் சிரிக்கத் தோன்றும். பாவம், அந்த நாக்கு! அவ்வளவையும் தனது நுனியில் தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதில் ஒன்று கூட நடைமுறை வாழ்க்கையாக மலரவில்லை. ஒரு கிராமபோன் தட்டுகூட இவர்களைப் போலத் திருப்பி அப்படியே ஒப்பிக்கும். அதனால் அது அடையும் பயனும் அவ்வளவேதான். ஒரு சுலோகத்தை வாழ்க்கையில் பின்பற்றினாலே போதும், எல்லாச் சுலோகங்களையும் மனப்பாடம் செய்து நினைவில் நிறுத்திக் கொள்வதைவிட அது நிச்சயமாக அதிகமான பலனைக் கொடுக்கும். கண்ணன் சொன்ன ஒவ்வொரு சொல்லையும் ஏற்று நடத்துவதன் மூலம் அர்ஜுனன் அவற்றின் உண்மையை நிரூபித்தான். அவனது மனமார்ந்த ஈடுபாடுதான் கண்ணனது அருளை அவனுக்குக் கூட்டி வைத்தது

மெத்தப் படித்த அறிவாளிகள் கூட இக்காலத்தில் கீதையின் ஒரே ஒரு சொல்லை ஏற்று நடத்திக் காண்பிப்பதில் உள்ள இன்பச் சிலிர்ப்பை உணர்ந்ததாகத் தெரியவில்லை. படிக்காதவர்களையும் பாமரர்களையும் பற்றி என்ன சொல்ல இருக்கிறது? சுருக்கமாகச் சொன்னால், மிகவும் புகழ் வாய்ந்த சில கீதாவிரிவுரையாளர்கள் கூட கீதையின் அறிவுரைகளுக்கு மாறாக நடந்து அவற்றை ஏமாற்றுகிறார்கள். தனக்குப் பிடித்தமான கருத்தையோ அல்லது கல்வியறிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குரிய சிறப்பான தனித் தன்மையையோ காண்பிப் பதற்காக, கீதைக்கு ஒவ்வொருவரும் தன் சொந்தக் கற்பனை ஒன்றைச் சேர்க்கிறார்கள். இந்த வகையினரைப் பற்றி ஒரே ஒரு உவமையைப் பார்ப்போம்.

கீதையின் ஆறாவது அத்தியாயத்தில் பத்தாவது சுலோகம், பரிக்ரஹம் (பொருளாசை) என்பது பெரிய பாவம் என்று சொல்லுகிறது. இங்கு, 'கீதையைத் தமக்கு ஆணையாக ஏற்றுக் கொள்கின்றவர்கள். பரிக்ரஹத்தைத் தவிர்த்து நடந்து கொள்ள வேண்டும் அல்லவா? பரிக்ரஹம் என்றால் உடம்பைப் பாதுகாக்கவோ அறத்தைக்காக்கவோ வேண்டிப் பொருளை ஏற்றுக் கொள்ளுதல்! இந்தக் கீதாப் பிரசாரகர் களோ அவற்றில் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் பெற்றுக்கொள்ளத்தான் செய்கிறார்கள். பரிக்ரஹம் என்பது எவ்வகையாலும் கண்டிக்கப்படுகிறது. இதற்கு விதிவிலக்கு களும் சலுகைகளும் கிடையா. இருந்தாலும், கீதாயக்ஞங் களுக்கென்று நன்கொடைகளும் வசூலும் பெறப்படுகின்றன; ஆரத்தியின்போது தட்டில் காசு போடச் சொல்வது, இதெல் லாம் கீதாபிரசாரகர்களுடைய சங்கச் செலவுகளுக்கென்றும் குருவிற்குக் காணிக்கைக்காகவென்றும் சொல்வது – இப்படி யெல்லாம் நடந்து கொண்டுதான் இருக்கிறது கேளிக்கை களுக்குக் கட்டணம் வசூலிப்பது போல, கீதை உரைகளுக் கும் சீட்டுக்கள் விற்கப்படுகின்றன. இப்படியெல்லாம் செய்கின்றவர்கள் கண்ணனுடைய சொற்களில் நம்பிக்கை யில்லாதவர்கள். அப்படி நம்பிக்கை உள்ளவர்களாக இருந் தால், இப்படிக் கீதைக்கு முரணான வழிகளில் நடக்க மாட்டார்கள் தாங்கள் செய்வது தவறு என்பதை நன்கு அறிந்தால், அப்படி நடக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஈர்ப்பு ஏற்பட்டிருக்காது. சுலோகத்தைச் சொல்லி அதன் கருத்தை விளக்கிவிட்டால் தங்களது கடமை முடிந்துவிட்ட தாக எண்ணுகிறார்கள். அதில் சொல்லியிருக்கிற அறிவுரைகளை ஏற்று நடத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் உணரவில்லை. இது இந்நாள் போக்கு. போலிகள் காலம் இது. இந்த வகையான கீதாப் பிரசாரத்தைக் கவனிப்பவர்கள் முதலில் பிரசாரகனிடத்திலே நம்பிக்கை இழக்கிறார்கள். பின்னர் கீதையிலேயே நம்பிக்கை இழந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறார்கள். பிரசாரமாகத் தொடங்கியது பின் இவையும் விகடமாகவும் படாடோபமாகவும் முடிந்து போய் விடுகிறது.

கீதை என்னும் புத்தகத்துக்குக் கிடைக்கும் மதிப்பு அதன் கருத்துக்களுக்குக் கிடைப்பதில்லை. கீதை, ராமாயணம், பாகவதம், பாரதம் முதலிய புனித நூல்களைப் பார்க்கும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் அவற்றிற்குத் தலை வணங்குகிறார்கள். கண்களில் ஒற்றிக் கொள்ளுகிறார்கள்; தலைமேல் வைத்துக் கொள்ளுகிறார்கள்; பூஜை அறையில் உயர்ந்த பீடத்தில் வைக்கிறார்கள்; பக்தியுடன் தூமலர் தூவி, கண்மூடி அமர்ந்து, கண்களில் நீர் வழிய இந்த நூல்களின் முன் விழுந்து வணங்குகிறார்கள். பின் ஏதோ செய்ய வேண்டியதை எல்லாம் செய்து முடித்து விட்ட மனநிறைவோடு எழுந்திருக்கிறார்கள்! இந்தப் பக்தியெல்லாம் இந்தக் காகிதக் குவியலுக்குத்தான். அந்நூல்களின் கருத்துக்களுக்கோ, அவை சொல்லும் நற்பாடங்களுக்கோ அல்ல.

நாம் அக்கறை கொள்ள வேண்டியது புத்தகத்தின் எடை அல்ல; அதில் விளக்கியிருக்கும் அறிவுரைதான். புத்தகத்துக்கு மதிப்புக் கொடுக்காதீர்கள்; அதன் கருத்துக்குக் கொடுங்கள். அதன் எடைக்குப் பணியாதீர்கள். அதனுள் கூறப்பட்டிருக்கும் செய்திகளுக்குப் பணி செய்யுங்கள். பூஜை அறையில் வைக்காதீர்கள். உங்கள் இதயத்தில் வையுங்கள். அப்பொழுதுதான் எக்காலத்துக்கும் கீதையின் ஆட்சியானது சீராக மதிக்கப்படும். வெறும் வெளிப் பூசனையால் ஆணவம் போன்ற தீமைகளினின்றும் மனம் தூய்மைப்படாது. மனப்பாடம் செய்வது, பூஜையில் வைத்து வணங்குவது, தலைமேற் கொள்வது, கண்களில் ஒற்றிக் கொள்வது போன்ற செய்கைகளால் பயனொன்றுமில்லை. அதன் அருள்வாக்கு இதயத்தில் இடம் பெற வேண்டும். அதை ஏற்று நடத்திக் காண்பியுங்கள். அதனால் வரும் இன்பத்தைச் சுவையுங்கள். அதுதான் கீதையைப் போற்றும் வழி.

நல்ல சுவையான தின்பண்டம் உங்கள் பசியைத் தீர்க்கவேண்டுமானால் அதைத் தலைமேல் தூக்கி வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலோ, கண்களில் ஒற்றிக் கொண்டாலோ, அதன் முன் விழுந்து வணங்கினாலோ போதாது. கீதையும் இப்படித்தான். பக்தியும் ஞானமும், கருமமும், வைராக்கியமும் இனிப்பாகக் கலந்த சுவையான தின்பண்டம் அது. அதைச் சாப்பிடுங்கள்; அருந்துங்கள் அதில் ஒரு கவளம் போதும். அறுவடை செய்த தானியத்தை யெல்லாமா பசித்தவன் சாப்பிட்டு விடுகிறான்? கையளவு அரிசி போதுமானது. தாகமெடுத்தவன் கோதாவாரி வறண்டு போகும்படி அத்தனை நீரையும் சாப்பிடுவதில்லை; ஒரு குவளை நீர் போதுமானது.

கடவுட் பசி கொண்டவன் கீதை முழுவதும் படிக்க வேண்டுவதில்லை. அதன் ஒரு சுலோகத்தைக் கற்று அதை நடத்திக் காண்பித்தாலே போதும். ஒரு தீப்பெட்டியில் பல குச்சிகள் இருக்கின்றன நெருப்பை மூட்டுவதற்கு ஒரு தீக்குச்சியைக் கிழித்தாலே போதும். அக்கறையும் முயற்சியும் இருந்தால், சிறு தீப்பொறியைப் பெரும் தீயாக மாற்றி விடலாம். இதற்கு எல்லாத் தீக்குச்சிகளையும் பற்ற வைக்க வேண்டாம். கீதையில் மொத்தம் எழுநூறு தீக்குச்சிகள் இருக்கின்றன. மெய்யறிவு என்ற தீயை இதில் எந்தக் குச்சியிலிருந்து வேண்டுமானாலும் பற்ற வைக்கலாம். அநுபவம் என்ற கல்லில் அதைத் தேயுங்கள். அதுபோதும்

தன்னுணர்வுக்காகக் கீதை இவ்வாறு பயன்படுத்தப் படவேண்டும். அந்தப் புனிதமான காரியத்துக்காகத்தான் அது ஏற்பட்டிருக்கிறது. அதை தவறாகப் பயன்படுத்துவது முறையன்று; புகழுக்கும் பொருளுக்கும், பட்டங்களுக்கும் பகட்டுகளுக்கும் அதைப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற முயற்சிகளெல்லாம் ஆணவத்திற்கு அடையாளமாகும். அவை கீதையின் புனிதத்தைக் கெடுக்கும் செயல்களாகும். இந்தக் ''கிறந்த''த்திலிருந்து (நூலிலிருந்து) ''கந்த''த்தை (மணத்தை)ப் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் படிப்பின் உரைகல். கிரந்தத்தின் சாரமே கந்தம் தான். இதற்கு மாறாக மஸ்தகத்தை புஸ்தகமாக்கி விடாதீர்கள். மூளையைப் புத்தகமாக்கி விடாதீர்கள்.

கல்லிலும் கடவுளைப் பாருங்கள்; கடவுளைக் கல்லாக்கி விடாதீர்கள். இதுதான் மிக விரும்பத் தகுந்த மனநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும், கல்லும் கடவுளாகப் பாவிக்கப்பட வேண்டும்; உண்மையும் அதுதான். இந்நாட்டு மக்களுக்குக் கடவுள் அளித்த விலையிலா அன்பளிப்பு இந்த மனநிலை. முத்துக்கள் கடலலைகளின்மேல் மிதப்பதில்லை. உங்களுக்கு அவை வேண்டுமென்றால், கடலின் அமைதியான ஆழத்திற்குச் சென்று முழுகி எடுக்க வேண்டும். இப்படித்தான் இந் நாட்டு மக்கள் நெடுங்காலமாகக் கடவுளைத் தேடியிருக் கிறார்கள்.

அறத்தை நடத்துவது என்பது உடல்; இறைவனை உணர்வது அதன் இதயம். இந்த உண்மைதான் இங்கே மக்களை முன்னேற்றிச் சென்று தங்களைக் காத்துக் கொள்ளத் தூண்டியிருக்கிறது. வெளிப்பூச்சிற்கும், புற ஜோடனைகளுக்கும், உயிர்வாழ் வசதிகளுக்கும் அவர்கள் அடிமைகளல்ல. உட்பார்வையால் அவர்கள் ஆதாரமான மெய்ப்பொருளைத் தேடி, பற்றின்மையைப் பயிலுகிறார்கள். இந்த உயர்ந்த பண்பைப் பெற்றிருக்கிற பாரத நாட்டு மக்கள்தான் இன்று உலகவாழ்வின் வசதிகளாலும் வெளிப் பகட்டுக்களாலும் கவரப்பட்டிருக்கிறார்கள்! இது மிகவும் வருந்தத்தக்க பெரு நொடிப்பாகும்.

பணம் சேர்க்கும் நோக்கத்தோடு கீதையைப் பற்றிப் பிரசங்கம் செய்பவர்கள் அதன் மூலம் கடவுளையும் தூரத் தள்ளி வைத்து விடுகிறார்கள். அவர்களுடைய நடத்தை யைப்பற்றிக் கேட்டால் அதற்குப் பல நொண்டிச்சாக்கு களைச் சொல்லுவார்கள், வாஸ்தவந்தான். ஆனால், கீதையில் உண்மையாகவே நம்பிக்கை வைத்திருப்பவன் எவனும், அதன் அருளுரைகளைப் பின்பற்றுபவன் எவனும் இந்த நொண்டிச் சாக்குகளை ஒப்புக் கொள்ள முடியாது.

அறத்தை வளர்ப்பதற்காகக் கீதை பேசப்படுகிறதே தவிர பணத்தைச் சேர்ப்பதற்காக அன்று. குணநலத்தைப் *(Goodness)* பெருக்குவதற்கு அது உதவுகிறது. பண வளத்தைப் *(Goodsness)* பெருக்குவதற்கு அன்று. கிருஷ்ணனுக்கு கோயில் கட்டுகிறேன், ராமனுக்குக் கோயில் கட்டுகிறேன், கீதைக்கு மந்திர் எழுப்புகிறேன் என்று பணம் திரட்டுவது கடவுளிடத்தில் நம்பிக்கையைக் குறைப்பதற்கு மற்றொரு வழியாகும். எங்கும் மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்து நிற்கும் இறைவனுக்கு வீடு கட்டித் தருவது அபத்தம். கிருஷ்ணனுக்கும் கீதைக்கும் உரிய கோயில் இதயமேயாகும். என்றும் உள்ள அழியாப் பரம் பொருளுக்குக் காலத்தால் அழியக்கூடிய செயற்கையான கட்டிடத்தை எழுப்புவது முறையன்று. ஏதோ ஓர் அளவுக்கு இது தேவைதான். ஆனால் இதற்கு ஏற்கனவே உள்ள பழமையான கோயில்களை நன்கு பயன்படுத்திக் கொள்வது இன்னும் அறிவுடைமையாகும். இருப்பதை இடித்துவிட்டுப் புதியதைக் கட்டுவது, பசுவைக் கொன்று அதன் தோலால் செய்யப்பட்ட செருப்புக்களைத் தானம் செய்வதைப்போல் அவ்வளவு கேலிக்குரியது! உலகத்தின் நலன்களை, பழைய கோயில்களைப் பழுதுபார்த்துச் சீர்திருத்தம் செய்வதாலேயே நாம் வளர்க்க முடியும்; புதுக் கோயில்கள் கட்டவேண்டுமென்பதில்லை பழைய நாட்களில் பல கண்டிப்பான ஆகம அற நூல் வழியில் கோயில்கட்டி அங்குக் கடவுளை எழுந்தருளச் செய்தார்கள். அதனால் அக்கோயில்கள் மிகப் புனிதமானவை. அவற்றிலிருந்து பரவும் ஓர் ஆற்றல் தான் இந்த நாடு இன்று பெற்றிருக்கும் கொஞ்ச நஞ்ச வளமைக்கு காரணமாகும்.

தாம் உய்வதற்கும், சமுதாயம் உயர்வதற்கும் காரண மான நுட்ப ரகசியங்களைத் தேடும் முயற்சியில் முற்காலத்து முனிவர்கள் பல துன்பங்களைப் பொறுத்தார்கள்; உலகத்தி லிருந்து தங்களை ஒதுக்கிக் கொண்டார்கள்; தங்கள் உடலைக் கூட வாட்டி வதைத்தார்கள். அவர்கள் வாழ்க்கை முறைகளையும் ஒழுக்க நெறிகளையும் நம்மிடம் கொடுத்திருக் கிறார்கள். இவை எளியவை; நடத்திக் காண்பிக்க முடிந்தவை. இவையும்கூட இன்று கவனிக்கப்படாமல் இருக்கின்றன; தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிது புதிதாக என்னென்னவோ ஒழுக்கங்களெல்லாம் வந்துவிட்டன. பழைய உயர்ந்த நெறி முறைகளெல்லாம் புதைந்து போய்விட்டன.

முதியவர்களும், குருமார்களும், பண்டிதர்களும் இந்தப் புதுப்பாணி ஒழுக்கங்களை ஏற்றுப் பாராட்டினால், இந்தப் பாரத நாடு எப்படித் தரும க்ஷேத்திரமாகவும், யோக க்ஷேத்திரமாகவும், தியாக க்ஷேத்திரமாகவும் இருக்கமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உயர்ந்த இலட்சியங்களின் வீழ்ச்சியின் காரணமாகத் தான். தன்மக்களையெல்லாம் ஊட்டி வளர்த்த அன்னபூரணி யாக இருந்த இந்த நாடு இன்று சோற்றுக்காக அழுகிறது. 'சிவோஹம்' ''நான் சிவம்'' ''சிவம் நான்'' என்ற புனித மான இறையுணர்வு ஒவ்வொரு மலைப் பள்ளத்தாக்கிலும் குகையிலும், ஒவ்வொரு கோயிலிலும், ஒவ்வொரு ஆற்றங் கரையிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஆனால் இன்று நாம் கேட்பது ''சஹோகம்'' 'நான் பிணம்' 'நான் பிணம்' என்ற அவல ஒலம்தான்!

இந்த நாடு தன் பழைய இன்ப நாட்களை இழந்து விட்டது; எங்கும் கவலை தொற்றிக் கொண்டிருக்கிறது. தன்னலத்தின் இருப்பிடமாகி விட்டது. வெறும் பகட்டை அது தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்துவதற்கு, இவ்வளவு தொல்லை களுக்கு நடுவேயும் ஆன்மீக ஒழுக்கத்தைப் பயின்று, அதில் வெற்றியும் பெற்ற பேரின்பத்தைத் துய்த்த பெரியோர்களின் மெய்யறிவு பரவ வேண்டியது மிகவும் தேவையாகிறது. இந்தத் தேவையை, படிப்பறியாப் பாமரன் முதல் மெய்யுணர்ந்த பெரு முனிவர்கள்வரை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோரும் கீதையில் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, அந்த இறைவனுடைய ஆணை பொருந்திய மெய்ம்மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

''நான் இம்மையிலும் மறுமையிலும் உன்னுடைய, நலனை என் பொறுப்பாக ஏற்றுக் கொள்கிறேன்'' என்று கண்ணன் வாக்குத் தந்தான். இதைத் தானாகவே அவன் முன் வந்து செய்தான் ஆனால், மனிதர்கள்' சாதகர்கள் இதனால் பயனடைய வேண்டுமென்றால், அவனது ஆணையின்படி அவர்கள் நடக்க வேண்டும்.

அவன் போட்ட கோட்டை மீறக்கூடாது. அவனால் தாம் காக்கப்படவில்லை என்று அவர்களுக்குத் தோன்றினால் தம் வாழ்க்கையைக் குறித்துஅவர்கள் ஆராய்ந்து, நன்னெறி பொருந்திய வாழ்க்கையை நடத்துவதில் கடவுளுடைய ஆணைகளை எவ்வளவு தூரம் பின்பற்றியிருக்கிறோம் என்று தாங்களே கண்டு பிடிக்கவேண்டும். இப்படி ஆராயத் தவறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். கடந்தவற்றையும் வரப்போவதைப் பற்றியும் அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. அந்தக் கணத்தில் ஏற்பட்ட துயரத்தைப் பற்றித்தான் அவர்கள் புகார் கூறுகிறார்கள். கடந்த காலத்தில் கவனியாமல் இருந்து விட்டதாலும் எதிர்காலத்தைக் குறித்து அறியாமையாலும் தான் இந்தத் துயரம் உண்டாகியிருக்கிறது என்பதை அவர்கள் அறியவில்லை. இதுதான் அவர்கள் துயரத்தின் ஆணிவேர்.

கண்ணனது இந்த வாக்கினை எண்ணிப் பார்க்கும் பொழுது, அந்தச் சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு நிபந்தனையையும் நினைவில் கொள்ளவேண்டும். "வேறு ஒன்றையும் நினைக்காமல் யார் என்னை நினைந்திருக் கிறார்களோ" என்று சொல்லியிருப்பதைப் பார்க்கவேண்டும் "யோகக்ஷேமத்தின் பொறுப்பை நான் ஏற்கிறேன்" என்றது இந்த நிபந்தனையின் முடி; அதன் பழம். வாக்குறுதி என்பது தலை போன்றது. ஆனால் வேறு உறுப்புக்களின்றித் தலை மட்டும் தனித்து இயங்க முடியாது. கழுத்து, தோள்கள், மற்றும் உடலின் உறுப்புக்கள் இவற்றைத் தவிர்த்து தலையை மட்டும் நம்பியிருப்பது, பணப்பெட்டி திருட்டுப் போனபின் "சாவி என் கையில்தானே இருக்கிறது" என்று சொல்வதைப் போன்றது! பெட்டி போனபின் சாவியை வைத்துக்கொண்டு என்ன செய்ய?

வாக்குறுதியைக் காப்பதற்கு நிபந்தனைகளாவன; வேறொன்றையும் நினையாது, இறைவனையே நினைந்திருத்த லும், தவறாத வழிபாடும் இடையறாத நினைப்பும், யாதொன் றையும் எதிர்பாராத சரணத்தோடு செய்யும் வழிபாடும் இல்லாத பொழுது, அவன் நம்முடைய பொறுப்புக்களை ஏற்கவில்லை என்று குறை கூறுவதற்கு ஏது இடம்?

நீங்கள் அவனைத் தவிர மற்றவர்களிடம் சரணடை கிறீர்கள்; அவர்களைத் துதித்துப் புகழ் பாடுகிறீர்கள்; அவனைத் தவிர வேறு பல எண்ணங்களில் மூழ்கியிருக் கிறீர்கள். அப்படியிருக்க, அவன் எவ்வாறு உங்கள் பொறுப்புக்களை ஏற்பான்? யார் யாருக்கெல்லாமோ உழைத்துவிட்டு அதனுடைய கூலிக்காக இறைவனை நச்சரிக்கிறீர்கள்; இது எப்படி கலப்பில்லாத பக்தியாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் அரசனுடைய பணியாள் என்ருல், அவன் அரசனுக்கு முழு மனதுடன் பணிசெய்ய வேண்டும். அரசனுக்கும் ஏதோ பணி செய்து கொண்டு, தன்னுடைய சொந்தக் குடும்பத்திலும் அக்கறை செலுத்திக் கொண்டிருந்தால், அது உண்மையான பணி என்று சொல்ல முடியாது. யாரை நேசிக்கிறீர்களோ அவர்களுக்குப் பணி செய்யுங்கள்; யாருக்குப் பணி செய்கிறீர்களோ அவர்களை நேசியுங்கள், இதுதான் சரணுகதியின் ரகசியம். வியாஸர் அழகான மாலையொன்றைப் புனைந்தார். இந்தச் சுலோகம் அதன் மகுடம். அந்த மணிமாலையில் இது நடுநாயகமான ரத்தினம்.

இறைவன் பயன்படுத்திய ''யோகம்'' ''க்ஷேமம்'' என்ற சொற்களுக்கு முறையே விரும்பத்தக்க ஒன்றை அடைதல் அப்படி அடைந்ததைப் பேணிக்காத்தல் என்று பொருள், அதைக் காப்பதற்கு உரிய பயிற்சி வேருென்றையும் நினையாது இறைவனையே நினைந்திருத்தல், அது உங்கள் மனத்தைத் தூய்மையாக்கும். உங்களைப் பக்தர்களாக்கும், பக்தனை அடையாளம் கண்டு கொள்வது எப்படியென்ருல் எப்பொழுதும் இறைவனைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பான்; அவனையே பாடுவான்; அவனையே எங்கும் காணுவான்; தனது நேரத்தை அவனுடனேயே செலவிடுவான்; அவனுக்காகவே பணி செய்வான்.

அத்தகையவர்கள் யாகமோ யக்ஞமோ செய்யத் தேவையில்லை. புண்ணியமான தான தருமங்களைச் செய்வதில் முனைய வேண்டியதில்லை. புனிதத் தலயாத்திரையும் செய்ய வேண்டியதில்லை. இவைகள் அவர்களுக்குக் கிடைக்காவிட்டால் அவர்கள் ஏன் வருந்த வேண்டும்? தங்களுக்கு இறைவன் வாய்ப்புத் தரவில்லை என்றே அதற்கு வசதிகள் அளிக்கவில்லை என்றே ஏன் குற்றங்கூற வேண்டும்? இவற்றையெல்லாம் செய்துதாகை வேண்டும் என்று அவன் கட்டாயப்படுத்தவில்லையே! இவைகள் வேண்டுமென்று கேட்கவும் இல்லையே! பயிற்சியினுல் தூய்மை பெற்றதனுல் மனதில் எழும் எதையும் அவனுக்குக் கொடுக்கலாம். அவன் மகிழ்ச்சியோடு எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வான். நற்செயல்கள் என்று சொல்லப்படுகின்ற பணிகளில் நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருக்கலாம். ஆனால் உள்ளம் தூயதாக இல்லா விட்டால், அது இறைவனது நினைப்பால் நிரப்பப்படா விட்டால், அதில் நஞ்சு கலந்து விடும். பாண்டங்கள் சுத்த மாக இருக்க வேண்டும் என்பதை அவன் குறிப்பாகக் கவனிப்பான்.

தூய உள்ளத்தோடு குசேலன் கொடுத்த கையளவு அவல் அவனை எவ்வாறு மகிழ்வித்து என்பதைப் பாருங்கள். புராணங்களிலும் இதிகாசங்களிலும் விதுரருக் கும் திரௌபதிக்கும் ஏற்பட்ட அனுபவங்களைப் படித்துப் பாருங்கள். அவர்கள் இறைவனுக்கு எதைக் கொடுத் தார்கள்? விதுரர் ஒரு கோப்பைக் கஞ்சி அளித்தார். திரௌபதியோ கொஞ்சம் கீரை மிச்சமாக ஒட்டிக் கொண் டிருந்தது. அதைக் கொடுத்தாள். மேற்போக்காகப் பார்த் தால் இவைகளுக்கு மதிப்பே கிடையாது. ஒரு பைசா கூட இவற்றிற்கு விலையாகக் கிடைக்காது. ஆனால், இவற்றிற்கு விலையாக இறைவன் எவ்வளவு தந்தான் என்பதை எண்ணிப் பாருங்கள்! கொடுத்த பொருளின் கடைவிலை என்ன என்று அவன் பார்ப்பதில்லை. அதைக் கொடுக்கத் தூண்டிய மனப் பாங்கைத்தான் அவன் கணக்கில் வைக்கிறான். ஆகவே அவனது அருளைப் பெறவேண்மானால், நினைவுகளைத் துப்புர வாக்கி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 20

தூய மனம் எனும் பெருஞ்சுனையில் பூக்கும் இதயமலர் ஒன்றுதான் இறைவனுக்குரியதாகும் என்று கீதை தெளிவாகக் கூறியிருக்கிறது. அதனுல்தான் கண்ணன் அர்ஜுனனைப் பார்த்து ''என் அன்பிற்குரிய மைத்துனு! நீ எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும், நீ எதைக் கொடையாகக் கொடுத்தாலும், எதை உண்டாலும், அதை எனக்குக் காணிக்கையாகிச் செய். எதையுமே இறைவனுக்குச் செய்யும் துதியாக, அவனுக்குப் படையலாக வைக்கும் மனப் பாங்கோடு செய். அத்தகைய பணிகள்தாம் என்னை வந்தடைகின்றன. எனக்கு எந்தக் குறிப்பிட்ட பெயரிலும் தனித்த விருப்பம் கிடையாது. எல்லாப் பெயர்களும் என் பெயர்களே. எனக்கு நண்பனுமில்லை; பகையுமில்லை. நான் ஒரு சாட்சியாக மட்டும் இருககிறேன். எனக்குப் பணி செய்து அதனுல் இன்பம் பெறும் எல்லோரிடத்திலும் நான் வசிக்கிறேன்'' என்று சொன்னுன்.

இது அர்ஜுனனுடைய மனத்திலே ஐயங்களை எழுப்பி விட்டது. ''கண்ணு! நீ யாதொரு வேற்றுமையும் பார்ப்ப தில்லை என்றும், உனக்கு நட்பும் இல்லை, பகையுமில்லை என்றும் கூறினுய். அப்படியானுல், சிலர் மகிழ்ச்சியோடும் சிலர் துயருற்றும் இருப்பதேன்? சிலர் உடலாலும் உள்ளத் தாலும் வலியவர்களாக இருக்கிறுர்கள்; சிலர் நலிந்து நோயுற்று எளியவர்களாயிருக்கிறுர்கள். இது ஏன்? சிலர் செல்வச் சீமான்களாகவும் சிலர் ஏழைகளாகவும் இருப்பது எவ்வாறு? இதற்கெல்லாம் காரணம் என்ன? நீயே எல்லா வேற்றுமைகளுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் பொழுது எல்லோரையும் அதே நிலையில் ஏன் நீ வைக்கக்கூடாது? இருக்கின்ற நிலவரத்தைப் பார்க்கிற போது, எல்லாரையும் நீ வேற்றுமையின்றிப் பார்க்கிருய் என்பதை நம்புவது கடினமாக இருக்கிறது'' என்று அர்ஜுனன் கூறினுன்.

அர்ஜுனனை வாட்டிய இந்த ''ஐயத்தை''க் கேட்டு கண்ணன் நகைத்தான். ''நான் உண்மையைத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவேன். நீ ஒப்புக் கொள்வாயோ மாட்டாயோ என்று பார்த்து அதற்குத் தகுந்தாற் போல் என் பேச்சை மாற்றிக் கொள்வதில்லை, நீ ஒப்புக் கொள்வதால் எனக்கு மகிழ்ச்சியும் ஏற்படுவதில்லை. நீ ஒப்புக் கொள்ளாததனுல் நான் தொய்ந்து போவதுமில்லை நான் எல்லாவற்றிலும் ஒரே சீராக இருக்கிறேன். ஆனுல் எல்லாம் என்னிடம் ஒரே சீராக இருப்பதில்லை. குளிர் காலங்களில், கிராம மக்கள் நெருப்பை மூட்டி அதைச் சுற்றி அமர்ந்திருப்பதை நீ பார்த்திருப்பாய். ஆனுல் அந்த நெருப்பின் அருகே அமர்ந்திருப்பவர்கள்தான் அதன் சூட்டினுல் குளிர் காய்வார்கள். வெகு தொலைவில் உட்கார்ந்திருப்பவர்கள் இருட்டையும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படித் தொலைவில் உட்கார்ந்து கொண்டு, எனக்குக் குளிர்காய முடியவில்லை. இருட்டிலும் உட்கார்ந்து கொணடிருக்கிறேன் என்று யாராவது சொன்னுல், அதனுல் நெருப்பு ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்கிறது என்று சொல்ல முடியுமா? மக்களை வேறுபடுத்தி நெருப்பு அவர்களிடையே வேற்றுமை காண்பிக்கிறது என்று வாதிடுவது பொருளற்றது.

''மெய்ப் பொருட்காட்சியும் ஒளியும் இதைப் போன்றதுதான். அது உங்களுக்குக் கிடைக்க வேண்டுமானுல் அதை அணுகி அதனிடத்திலேயே தங்க வேண்டும். நெருப்பை எரியவிட்டு அதனிடம் குளிர்காய்வதற்கு ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு நெருப்பும் ஒளி தந்து சூடும் மிகத் தரும். நெருப்புக்கு ஓரவஞ்சனை கிடையாது. வேற்றுமையெல்லாம் அதை நன்முக மூட்டிவிடுவதிலும் அதன் மூலம் நன்மை பெறுவதிலும்தான் இருக்கிறது. நான் ஒளியாக இருக்கிறேன்! எனக்கு எதனிடத்தும் ஓர வஞ்சனை கிடையாது. என்னை உணர்ந்து என்னிடமிருந்து பேரின்பத்தைப் பெறுவதற்கு எல்லோருக்கும் சமமான வாய்ப்பும் உரிமையும் உண்டு. வேற்றுமைகளும் பிரிவுகளும் சாதகர்களினுடைய பிழைகளால் உண்டாகின்றன. அவை என்னிடத்திலுள்ள குறைகள் அல்ல'' என்ருன் கண்ணன்.

கண்ணனுடைய கனிவுமிக்க மொழியைக் கேட்டாயல்லவா? கருணை மழையைக் கண்டாயல்லவா? அவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள்தான் எவ்வளவு உண்மை! பார்க்கப் போனால் மனிதர் தம்மிடமிருக்கும் குறைகளை உணர்வதில்லை. பிறரிடமுள்ள குற்றங்களைத்தான் பார்க்கிறார்கள். இறைவனிடத்திலேயே குற்றமிருக்குமானால், உலகம் எப்படி இருக்கும்? எப்படிப் பிழைக்கும்? இறைவன் எல்லோரையும் சமமாகப் பார்க்கிறான். அவனது இதயம் எல்லோரையும் தனது அன்பினால் அணைக்கிறது. இதன் காரணமாகத்தான் உலகத்தில் இந்த அளவாவது அமைதியும் வளமையும் இருக்கின்றன. நோயாளிக்கு ஆறுதல் சொல்லுவதற்காகவே அவனுக்குக் காய்ச்சல் இல்லை என்று மருத்துவன் அறிவிக்கக் கூடும். ஆனால் உஷ்ணமானி பொய் சொல்லாது. உள்ளார்ந்த உணர்வினைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப இறைவன் செயல்படுகிறான்; வெளித் தோற்றத்தை அல்ல. அவனிடத்துத் தவறு ஒரு போதும் நேராது. அவனை ஏமாற்றவும் முடியாது. உலகமோ இதற்கு மாறாக வெளித் தோற்றத்தையே மதிக்கிறது. அதையே நம்பி அதன் வழிச் செல்லுகிறது. ஆற்றில் இறங்கினால்தான் அது எத்தனை ஆழம் என்று தெரியும். சாப்பிட்டால்தான் சுவை தெரியும். ஆற்றில் இறங்காமலே ஆழத்தைப் பற்றியும் சாப்பிடாமலே சுவையைப் பற்றியும் மனிதர் பேசினால் அவர்களுடைய பேச்சை உண்மையென்று எவ்வாறு ஏற்க முடியும்? இறைவனே ஓரவஞ்சனையினால் தீண்டப்பட்டால், ஆயர்பாடி இடைச்சிகளுக்கு சாயுஜ்யம் என்னும் இன்பத்தை எப்படி அவன் அளித்திருக்க முடியும்? சபரியினால் சுவைக்கப்பட்டு எச்சிலான மீதிப் பழத்தை அவன் சாப்பிட்டிருப்பனோ? ஜனகன் மெய்யறிவு பெற்றிருக்க முடியுமா? நந்தனார் இறைவனது மாட்சி பொருந்திய காட்சியைக் கண்டிருக்க முடியுமா? பிரஹ்லாதனும் விபீஷணனும் இறைவனை அடைந்திருக்க முடியுமா? ஸ்ரீராமதூதனாக அநுமான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பானா? வால்மீகி தன் ராமாயணத்தை இயற்றியிருக்க முடியுமா? இவையெல்லாம் இறைவனிடத்து ஓரவஞ்சனையைக் காண்பிக்கின்றனவா? அல்லது அப்படிப்பட்ட ஓரவஞ்சனை அவனிடம் கிடையாது என்பதைக் காண்பிக்கின்றனவா? இவையெல்லாம் அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமைக்குச் சான்றுகள், அவனது சீரான கருணைக்கு எடுத்துக் காட்டுங்கள்.[1]

மன் மனா பவ மத் பக்த
மத் யாஜீ மாம் நமஸ்குரு!

இறைவனின் இந்தக் கட்டளைக்குப் பொருள் இதுதான்: ''உங்கள் மனத்தை என்மேல் நிலைக்கச் செய்யுங்கள்; என்னிடம் பக்தியோடு இருங்கள்; உங்கள் எண்ணங்களை, சொற்களை, செயல்களை எல்லாம் என்னிடத்தில் ஒப்புவித்து விட்டு என்னை வணங்குங்கள்; உறுதியாக என்னை நேசியுங்கள்!'' இவ்விதம் அவன் ஆணையிட்டிருக்கிறன். அவன் நம்மிடத்தில் மிக விரும்புவது தூய உள்ளமும் கலப்பில்லாத அன்பும்தான் என்று அவன் இதன் மூலம் காண்பித்துவிட்டான்.

மனிதத்தன்மையில் ஆழ்ந்து போனுல் மாதவ தத்துவத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியாது. மாதவனின் தத்துவத்தை உணர்ந்தால் மாதவனாக ஆகலாம். இருட்டைப் பார்க்க வேண்டுமானுல் அதற்கு வேண்டுவது இருட்டே. ஒளியைப் பார்க்கவேண்டுமானுல் ஒளி வேண்டும். அறிவை அறிய அறிவு வேண்டும். வெறும் மானுட ஆசாபாசங்களுக்காகவே எப்போதும் ஓடியாடிக் கொண்டிருந்தால், தெய்வீகத்தின் மாட்சியை நீங்கள் எப்படி உணர்ந்துகொள்ளமுடியும்? தெய்வீகமாக வேண்டுமானுல், நீங்கள் தெய்வத்தின் நினைவாகவே இருக்கவேண்டும்; தெய்வீகமாக நடக்கவேண்டும்; தெய்வீகமான பணிகளைச் செய்து வர வேண்டும். மன நிலை, சூழ் நிலை, உணர்வு எல்லாவற்றையும் அந்த ஒரே நோக்கத்திற்காக இணைக்கவேண்டும். அப்பொழுதுதான் இந்தக் கொள்கையைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த உண்மையின் அடிப்படையில்தான் கண்ணன் மேலும் கூறுவான்; ''அர்ஜுனு! மனிதரை விடத் தெய்வங்கள் உயர்ந்தவை; தெய்வங்களை விட மெய்யுணர்ந்தவர்கள் உயர்ந்தவர்கள்.

---

1. *ஆய்ப்பாடி மங்கையர் இடைச்சிகள்: சபரி தவம் செய்த மூதாட்டி; ஜனகன் அரசன்; நந்தன் பறையன்; பிரகலாதன் சிறுவன்; விபீஷணன் அரக்கன், அநுமான் குரங்கினம்; வால்மீகி வேடுவன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த மெய்யுணர்ந்த ஞானிகள் கூடக் கடவுளின் இயல்பை முழுவதும் புரிந்து கொள்ள முடியாதென்றால், உன்னைப்போன்ற சாதாரண மனிதர்களால் முடியுமா?'' இத்தக் குத்தலான சொல்லைக் கேட்டதும், அர்ஜுனன் வெட்கத்தால் தலை குனிந்தான். ''ஆம் கண்ணா! ஒப்புக் கொள்கிறேன். எவ்வளவு தான் அறிவாளியாக இருந் தாலும், நீ அந்த அறிவிற்கெல்லாம் மேம்பட்டவன். நீ முடிவில்லா வடிவங்களுள்ளவன். இதில் எனக்கு ஐயம் சிறிதுமில்லை. நீயே முடிவில்லா முழு முதல். எனக்குத் தெரியும்.

''நீதான் இந்த அனைத்துலகங்களையும் படைத்திருக் கிறாய் என்று நான் நம்புகிறேன். நீ தான் அவற்றைக் காக்கிறாய். அவற்றின் வளர்ச்சியையும் தேய்வையும் நீ நடத்துகிறாய். படைப்பு, காப்பு, அழிப்பு இவற்றிற்கெல் லாம் நீ தலைவன் என்பதை எல்லாம் நான் நிச்சயமாக நம்புகிறேன் நீயே இதை எனக்குச் சொல்லியிருக்கிறாய். இதனால் உனக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னை நீ ஒரு பொருட்டாக நினைத்து இதையெல்லாம் சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

''ஆனால், நீயே தோற்றுவித்த இந்த உலகத்தில் எந் தெந்த வடிவங்களில் நீ வந்து கலந்திருக்கிறாய்? அதை உன்னிடமிருந்து கேட்டு என் வாழ்வை இன்னும் தகைமை பெற்றதாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறேன்'' என்றான் அர்ஜுனன். ''உன்னுடைய இந்தப் பலவகையான வடி வங்களில் எதை நான் சிந்திக்கவேண்டும்? சொல். அது போலவே நான் தியானித்து என்னைக் காத்துக் கொள்கி றேன்'' என்று அர்ஜுனன் இறைஞ்சினான்.

''ஒரு ''சின்னக்'' கேள்விதான் கேட்டாய்!'' என்றான் கண்ணன் புன்னகையுடன். ''இதற்கு விடை சொன்னால் உனக்குப் புரிந்து விடும் என்று நினைத்தாய் போலிருக் கிறது. நல்லது, நீ கேள்வியைக் கேட்டு விட்டபடியால், நானும் கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டியதுதான், பதிலும் சொல்ல வேண்டியதுதான். கவனமாகக் கேள்! ஒவ்வொரு உயிரின் இதயத் தாமரையிலும் நான் உள்ள மர்ந்திருக்கிறேன். எனவே, இப்படி ஒவ்வொரு உயிரிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உள்ளுறை பொருளாக இருக்கிறேன் என்று நம்பி அந்த நம்பிக்கையின் அடிப்படையில் உன் வாழ்க்கையை நடத்துவாயானால் அதுவே உனக்குப் போதுமான தியான மாகும். இந்த நம்பிக்கை தளராமலும் தகர்ந்து விடா மலும் பார்த்துக் கொள். அதை உறுதியாகப் பற்றிக் கொள் அந்த நம்பிக்கையைப் பின்பற்றி நட. உன்னு டைய செயல்களில் பேச்சுகளில் எண்ணங்களில் அதைப் பயன்படுத்திக் காட்டு. அப்போது, நீ நானாக இருப்பதும், நான் நீயாக இருப்பதுமாகிய ஒருமைப் பேருணர்வு தோன்றும்.

''மண், நீர், தீ, காற்று, வான் என்ற இவ்வைந்து மூலப் பொருள்களும் என்னுடைய வடிவங்களே. சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவற்றில் இயங்குவதும் நானே. ஊழிக்காலத்தில், நான் அழிவுச் சக்தியாக இருக்கிறேன்; மறுபடி படைக்கும் சக்தியும் நானே. அணுவிலிருந்து ஆகா யம் வரை நானே எல்லாம். நான் கடந்தகாலம், நிகழ் காலம், வருங்காலம், நான் மூவுலகங்களாகவும், மனிதர் களையும் இயற்கையையும் ஆக்கும் முக்குணங்களாகவும் இருக்கிறேன். நானாக இல்லாத பொருளே கிடையாது. என்னுடையதல்லாத பெயரே கிடையாது. உடலின் எந்தப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தமானாலும் ஒன்றாகவே இருப்பது போல, தெய்வம் எவ்விடத்தும் ஒன்றாகவே இருககிறது.''

அர்ஜுனன் இரு கைகளையும் கூப்பி அவற்றை உயர்த்திக்கொண்டு கேட்டான். ''கண்ணா! உலகமெல் லாம் உன்னுடைய வடிவம்தான் அல்லவா? அறிவு, செல் வம், சக்தி, பலம், வீரியம், பெருமை இவைபெல்லாம் உன்னுடைய வைபவங்களல்லவா? நல்லது; உன்னை இந்த உலகத்தின் வடிவமாக, விச்வரூபமாக நான் பார்க்கவேண்டு மென்ற என்னுடைய புனிதமான வாழ்நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பு அளிக்கமாட்டாயா? உன்னை வேண்டிக் கொள்கிறேன், உன் காலடியில் விழுந்து இறைஞ்சுகிறேன்.''

அர்ஜுனனுடைய இதய தாபத்தை அறிந்து கண்ணன் சொல்வான்: அர்ஜுனா! உன் விருப்பத்தை நிச்சயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றி வைக்கிறேன். ஆனால் உன்னுடைய ஊனக் கண்களினால் அந்த மகிமையைக் காண முடியாது. இந்த உலகத்தைப் பார்க்கும் குறையுள்ள கண்களால் எனது விசுவரூபத்தைக் காண முடியாது. ஆகையினாலே, உனக்கு ஞானக் கண்ணைத் தருகிறேன். இப்பொழுது, பார்''! இப்படிச் சொல்லி, இந்த உலகமெல்லாம் தன் வடிவமாகவும் அதற்கும் மிஞ்சி, நின்ற வடிவமாகவும் அர்ஜுனனுக்கு முன் காட்சியளித்தான். அவனுக்குத்தான் எத்தனை தயவு! அர்ஜுனனுக்கும் என்ன அற்புதமான அநுபவம்!

இந்த இடத்தில், ஒரு நுட்பமான குறிப்பைச் சாதகர்கள் கவனிக்க வேண்டும். வேதங்களும், சாத்திரங்களும், புராணங்களும், படிப்பாளிகளும், இது போன்ற பொருளைப் பற்றிப் பேச உரிமையுள்ள பெரியோர்களும் இறைவனை எங்கும் நிறைந்தவனென்றும் எல்லா உயிரிலும் உள்ளுறைகின்றவனென்றும் வருணிக்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு சிலர் ''அப்படி ஆண்டவன் எங்கும் நிறைந்தவனென்றால், எல்லாவற்றிலும் இருக்கின்றானென்றால், எல்லோருக்கும் அவன் ஏன் தெரியவில்லை?'' என்று கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதிலென்னவென்றால், ''ஐந்து ஜடப்பொருள்களால் ஆன ஊனக்கண் எப்படி அவ்வைந்தைத் தவிர வேறொன்றைப் பார்க்க முடியும்?''

ஒளியைப் பிரதிபலிக்காத ஒன்றை எந்த ஒளியும் பிரகாசப்படுத்த முடியாது. ஆனால் தீக்கதிர் தன்னைத்தானே காண்பித்துக் கொண்டு, சுற்றிலும் ஒளி பரப்புகின்றது. கடவுள் தன்னொளி பொருந்தியவன்; அவன் எல்லாவற்றையும் ஒளிர்விக்கின்றான்; இயற்கைக்கு அப்பாற்பட்டவன். அது அவனுடைய பெருமையின் ஒரு வெளிப்பாடுதானே! அதனால், மெய்யறிவு என்னும் கண்கொண்டுதான் அவனைப் பார்க்க முடியும். அதுவும் அவனுடைய அருளால் தான் கிடைக்கும். ஆகையினால், கடவுளைத் தொழுவது ஆன்மீகப் பயிற்சியின் மிகவும் முக்கியமான பகுதியாகும். தன்னைத் தானே பார்க்க முடியாத ஒருவன் பிறரை, தனக்கு வெளியிலிருக்கும் ஒன்றை, எப்படிப் பார்க்கப் போகிறான்? ஆண்டவன் அருளைத் தரும் பயிற்சியில் ஈடுபடுங்கள். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினுல் ஞானக்கண் உங்களுக்குக் கொடுக்கப்படும். அவன் பக்தி வழியினுல் அடையப்படுகிருன். அவனை இவ்வுலகமாகவும் இவ்வுலகத்திலும் கண்ட அர்ஜுனன் மகிழ்ச்சியினுல் கண்ணீர் பெருகினுன். ''எல்லாம் வல்ல இறைவா! படைப்புக் கடவுள் பிரம்ம தேவனுள்ளிட்ட கடவுளரெல்லாரும், எல்லா முனிவரும் சாதுக்களும், பல வகையான பொருள்களும் உயிரினங்களும், நடப்பனவும், நிற்பனவும், எல்லாவற்றையும் நான் பார்க்கிறேன். ஆகா! அச்சமூட்டும் உன் வாயிலிருந்து தீப்பிழம்புகள் கிளம்பித் தொலைதூரம் பரவுகின்றன. இந்தப் பயங்கரமான தோற்றத்தின் பொருளையும் ரகசியத்தையும் நான் புரிந்து கொள்ள முடியுமானுல் எவ்வளவு நன்ருயிருக்கும்!'' என்று அர்ஜுனன் அதிசயித்தான்.

''பார்த்தாயா, அர்ஜுனு! எல்லா நிகழ்ச்சிகளையும் எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் நான் படைக்கிறேன், காக்கிறேன், அழிக்கிறேன் என்பதை நீ தெரிந்து கொண்டாயா? இந்தப் போர்க்களத்தில் யாரையும் காப்பாற்றுவதோ அல்லது அழிப்பதோ உன்னுல் முடியாத காரியம் என்பதை உணர்ந்து கொண்டாயா? யாரையும் அழிப்பதற்கு உனக்கு ஆற்றல் கிடையாது; தாமே முயன்று தம்மை அழித்துக் கொள்வதற்கு அவர்களுக்கும் ஆற்றல் கிடையாது. வாழ்வதையும் சாவதையும் என்னுடைய விருப்பத்தினுலே இயக்குகின்றேன். நான் உலகத்தின் பளுவைத் தாங்குகிறேன். நானே பளுவை உண்டாக்குகிறேன். நானே அதை எடுக்கவும் செய்கிறேன்'' என்று சொல்லி அர்ஜுனன் முதுகைத் தட்டிக் கொடுத்து, இனிமையாகப் பேசி அவனது பொங்கும் உணர்ச்சி வெள்ளத்தை அமைதியுறச் செய்தான் கண்ணன்.

இறைவன் எப்படி மெய்யான பக்தியினுல் கட்டப்படுகிருன். எப்படி அவன் தனது அடியவர்களை ஆறுதல் சொல்லி ஊக்குவிக்கிருன் என்பதற்கும் இந்த நிகழ்ச்சி அருமையான சான்ருகும். நினைத்துப் பாருங்கள்! சாதாரண மனிதரைப் போல, தானே கண்ணுல் காணும்வரை தயங்கிக் கொண்டும் பயந்து கொண்டும் இருந்த இந்த அர்ஜுனன் எல்லாக் கலைகளிலும் வல்லவர்களும் வலிமை மிக்க வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுமான பீஷ்மர், துரோணர், கர்ணன் இவர்களை எதிர் கொண்டு வெற்றி பெற்றிருக்க முடியுமா? அவர்களெல்லாம் ஆண்டவனுடைய திட்டத்தினால் வெல்லப்பட்டார்கள்.

அர்ஜுனன் தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கைகளைக் கூப்பித் தொழுது:— ''இறைவா! என்றுமே இதற்கு முன் நான் கண்டும் கேட்டுமிராத, ஏன், கற்பனை கூடச் செய்யாத, உன்னுடைய விசுவரூபத்தைக் கண்டேன். இது மறுக்க முடியாத உண்மை என்பதையும் உணர்கிறேன். பயங்கரமான தீக்கொழுந்தை யொத்த உன் மாட்சி என்னை எரிக்கிறது; அந்தப் பேரொளியின் தாக்குதலினால் என் உடம்பு நடுங்குகிறது. உன்னுடைய இனிமையான புன்னகையுடன் பொலியும் பழைய வடிவத்துடன் மறுபடி எனக்குக் காட்சி தருவாயாக! இந்தக் காட்சியை என்னால் இனித்தாங்க முடியாது எந்தாய்! உன் பழைய உருவத்தை எடுத்துக்கொள். என்னால் பொறுக்க முடியவில்லை'' என்று கெஞ்சினான்.

தன் அருளினால் இந்த வேண்டுகோளை ஏற்றான் கண்ணன். ''அர்ஜுனா! என்னுடைய விசுவரூபத்தை இப்பொழுது நீ பார்த்தாய். எவ்வளவுதான் வேதத்தைக் கற்றவனாயிருந்தாலும், துறவு பூண்டிருந்தாலும், நோன்புகள் நோற்றாலும் இது கிடைக்காது. வேறென்றையும் நினைக்காமல் என்னிடம் ஈடுபட்டிருக்கும் அடியவர்தாம் என்னை அடைய முடியும். இத்தகைய பக்தியில் துளியும் கவனக் குறைவு இருக்கக் கூடாது. அத்தகையவர்கள் இறைவன் ஒருவனைத்தான் பார்க்கிறார்கள். அவர்கள் எதைச் செய்தாலும், இறைவனுக்குப் பணியாக அதைச்செய்கிறார்கள். அவர்கள் பார்வையில் வேறொன்றும் தோன்றுவதில்லை மனத்தில் வேறொரு எண்ணமும் எழுவதில்லை; அவர்களுடைய கைகள் வேறொரு தொழிலையும் செய்வதில்லை. எல்லா நேரங்களிலும் இடங்களிலும் அவர்கள் என் வடிவத்தையே பார்க்கிறார்கள்; என் பெயரையே உச்சரிக்கிறார்கள் என்னையே நினைக்கிறார்கள்; எனக்காக உருகி என்மேல் தங்கள் அன்பைச் சொரிகிறார்கள். என் பொருட்டுத்தான் செயல் புரிகிறார்கள். அர்ஜுனா! இந்த விசுவரூப தர்சனத்தை இத்தகையவர்தான் காண்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் இந்த ஒருமுகமான பக்தியைத்தான் எதிர் பார்க்கிறேன்'' என்றான்.

இப்பொழுது அர்ஜுனன் ஒரு புன்னகையுடன் உதடுகள் துடித்துச் சொல்வான்: ''இறைவா! அசையாத ஒருமுகமான பக்தியினால் நீ மகிழ்கிறாய் என்பதை நான் உணர்கிறேன். ஆனால் உன் உருவத்தோடு கூடிய தொழுகையை நீ விரும்புகிறாயா? உருவமில்லாமல் தொழுவதை விரும்புகிறாயா? ஸாகார உபாஸனையா, நிராகார உபாஸனையா? இதில் எதை நீ விரும்புகிறாய்? உன் மனத்தை இளக்கி உன் அருளைப் பெறுவதில் வெற்றிபெறக் காரணமாவது இவற்றில் எது? சாதகனுக்கு எளியது எது? எது உனக்கு உகந்தது? தயை செய்து சொல்!''

இந்தக் கேள்வி எழுந்ததில் கண்ணனுக்கு மகிழ்ச்சி, ''அர்ஜுனா! இரண்டிற்குமிடையே நான் ஒரு வேற்றுமையும், கற்பிப்பதில்லை எப்படி என்னைத் தொழுதாலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால் ஒன்று, உன் மனத்தில் நானே நிறைந்திருக்க வேண்டும்; ஒவ்வொரு செய்கையிலும், சொல்லிலும், எண்ணத்திலும் உறுதியான நம்பிக்கை வேண்டும்'' என்றான்.

அர்ஜுனன் இடைமறித்து ''கண்ணா! இதயத் தூய்மையும், உறுதியான நம்பிக்கையும் போதுமா? வர்ணாசிரமத்தில் நிர்ணயிக்கப்பட்ட சமூக நிலையோ, ஆண் பெண்வேற்றுமைகளோ வெற்றிக்குத் தடைகளாகுமா?'' என்று கேட்டான். கண்ணன் அர்ஜுனனை அதட்டி அடக்கிவிட்டுச் சொல்வான்: ''இதெல்லாவற்றையும் இவ்வளவு தூரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு இப்படி மறுபடியும் கேட்கிறாயே என்பது வியப்பாயிருக்கிறது மனத்தையெல்லாம் என்மேல் வைத்து தூயவனாய் நித்தியனாய் உண்மையின் வடிவமான என்னிடம் அடைக்கலமாகி விட்டவர்கள், உடம்போடு தன்னை எள்ளளவும் இணைத்துப் பார்க்க மாட்டார்கள் என்பதை நீ உணரவில்லையா? தான் ஆண் என்றும் பெண் என்றும், இன்ன சாதி என்றும் இல்லறத்தான் என்றும் துறவி என்றும் நினைவு இன்னும் அவர்களுக்கு இருக்குமானால், அதனால் உண்டாகும் ஆணவமானது, அடக்கம் முதலிய உணர்வு மிக்கவராய் அவர்கள் இறைவனிடம் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை முழுதும் அளித்து விடவில்லை என்பதைத்தான் காண்பிக்கிறது. உடம்போடு தங்களுக்குள்ள தொடர்பை விட்டு விட்டவர்களுக்குச் சாதி, ஆசிரமம் என்ற வேற்றுமை களெல்லாம் இருக்காது.

''ஆசிரம தர்மங்களும் வர்ண தருமங்களும் இறைவன் மேல் மனத்தைப் பொருத்தும் பயிற்சியை எவ்வகையிலும் தடை செய்யாது; அதே போல் மனத்தைத் தூய்மைப் படுத்தும் முயற்சியையோ, மனத்தாலும், வாக்காலும் செயலாலும் இறைவனைத் தொழும் முயற்சியையோ அவை தடை செய்யாது. ஆண் பெண் வேற்றுமைகளும், சாதி வேற்றுமைகளும், சமூக நிலை வேற்றுமைகளும், ஆசிரம வேற்றுமைகளும், இந்த உடம்பை உண்மை என்ற உணர் வோடு வாழ்கின்றவர்களையும், உலகம் உண்மை, அது என்றுமுளது என்று நம்பி நடக்கின்றவர்களையும் தான் பாதிக்கும்.

இதைக்கேட்ட அர்ஜுனன்: ''கண்ணா! உடலே தான் என்று ஒன்றி நிற்பவர்களுக்கு, உருவமில்லாத குணங்குறி களற்ற நிர்க்குண நிராகார உபாஸனை மிகவும் கடினமல்லவா சாதாரண மனிதனுக்கும் கிட்டக்கூடிய உருவ வழிபாடு மனத் தூய்மையைக் கொடுக்கமுடியுமா? உணர்வின் உட் கருவிகளுடைய தூய்மையைக் கொடுக்கமுடியுமா? தயை செய்து விளக்குவாயாக!'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 21

''அர்ஜுனா! உருவத்தோடும் குணங்களோடும் கடவுளை வழிபடுவதே போதுமானது என்று பலர் நினைக்கிறார்கள். இது ஓரளவுதான் உதவி செய்யும் கொஞ்ச தூரம் வரை தான் கைகொடுக்கும். ஏனென்றால், இதனால் மட்டும் முக்தியை இறைவன் கொடுத்துவிட மாட்டான். முக்தியை விரும்புகின்றவன் உடலின் மேல் பற்றை விட்டுவிட வேண்டும். இதன்றி, மெய்ப் பொருள்நிலை அடையப்பட மாட்டாது. உடலோடு ஒற்றுமைப் படுத்திக் கொள்வது அறியாமையே ஆகும். இயற்கைக்கு வேறாக ஆத்மா என்ற மெய்ப்பொருள் இருப்பதைநாம் கண்டு கொள்ள வேண்டும். ஜட இயற்கையை ஒட்டிய பொய்யான மதிப்பினால் ஏற்படும் புற இன்பத்திற்காக ஏங்குவதைத் தியானத் தினாலும் தவத்தினாலும் நீக்கவேண்டும். இந்த வேட்கை நீங்கி விட்டால், தேங்காய்க்குள் இருக்கும் கொப்பரை மாதிரி ஆகிவிடுவான் மனிதன். ஓட்டிலும் மட்டையிலும் ஒட்டாமல் தனியாக உள்ளே விடுபட்டு இருக்கும் இந்தக் கொப்பரை. அது மறுபடி முளைக்காது. என்றுமே கெடாமல் அப்படியே இருக்கும். இந்நிலையை அடைந்த மனிதன் பிறவி மரணம் இரண்டும் இல்லாதவனாகிறான். அதாவது, அவன், முக்தியை அடைவான். இப்படித் தேங்காய்க்குள் கொப்பரை போன்ற நிலைதான் ஜீவன்முக்தி எனப்படும். இந்த உடலின் உயிர் வாழும்பொழுதே விடுதலை பெறுதல் என்பது இதுதான்.

குணங்குறிகளுக்கு அப்பாற்பட்டதாய் உயர்ந்த மெய்ப் பொருளைத் தியானம் செய்வது இந்த ஜீவன் முக்திக்கு மிகவும் இன்றியமையாதது. இது உனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதென்றால், நீ இன்னொன்று செய்யலாம். எல்லாத் தொழுகைகளையும் துதிகளையும், வேதச் சடங்கு களையும், மற்ற நோன்புகளையும், தவங்களையும் அவற்றினா லுண்டாகும் பலன்களோடு கூட எனக்குக் காணிக்கை யாக்கிவிடு! என்னை உனது உயர்நோக்கமாகக் கொள்; நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர வேண்டிய இடமாக அறி! அப்பொழுது உனது எல்லாச் செய்கைகளும் வழிபாடாகிவிடும்; உன் மனத்தை என்னிடத்தில் நிறுத்து: என்னைச் சிந்தித்திரு! நான் எனது அருளைச் சொரிந்து உன்னை இந்தப் பிறவிக் கடலினின்றும் அக்கரை சேர்க்கிறேன். நீ தேடும் இடத்தை உனக்குத் தருகிறேன். அர்ஜுனா! என் மேல் உன் மனத்தை உறுதியாக நிறுத்துவது என்பது அவ்வளவு எளிதான வேலையல்ல. எல்லோரும் இதில் வெற்றி பெற்றுவிட முடியாது. எவ்வளவு நீண்ட காலம் பயின்றாலும், வேறொன்றிலும் எண்ணம் சிதறிப் போகாமல், என்னிடத்திலேயே மனத்தை வைப்பது சிரமம்.

''வேறு வழி ஒன்றும் இல்லையா? என்று நீ கேட்கலாம் ஆமாம், இருக்கிறது. எனக்குப் பிடித்தமான காரியங்களைச் செய்வதில் ஈடுபட ஆசை கொண்டவர்கள் கூட மெய் யுணர்வில் ஊன்றி நின்று விடுதலை பெறமுடியும். பிரார்த்தனையினாலும், நாம ஸங்கீர்த்தனத்தாலும், என் புகழ் பாடித் துதிப்பதனாலும் பழவினைகளை அழிக்கலாம். உள்ளுணர்விலிருந்து துடிப்புகளையும் வேகங்களையும் நீக்கித் தூய்மைப்படுத்தலாம். அப்பொழுது மெய்யறிவின் ஒளி உண்டாக்கும்; அது இருளிலிருந்து நம்மைவிடுவிக்கும்.''

இந்த இடத்தைச் சற்று நின்று நீங்கள் கவனிக்க வேண்டும். சாதக பாதகங்களை நிறுத்துப் பார்ப்பதன் மூலம்தான் சில உருப்படியான முடிவுகளை நாம் பெற முடியும். உதாரணமாக, சாதாரண வழக்கில் ''பக்தி'' என்று சொல்லப்படுவதற்கும் கண்ணன் வகுத்த பக்திக்கும் உள்ள வேற்றுமையைப் பாருங்கள். சாதாரணமாக, இறைவனிடத்து உண்மையான ஈடுபாடே பக்தி என்று சொல்லப்படுகிறது. ஆனால் பக்தி என்பதன் பொருள் இதைவிட அதிகமானது.

இறைவனிடத்து ஈடுபாடு என்பது முக்தியை அடைவதற்குரிய ஒரு குறிப்பிட்ட வழியேயாகும். இந்த ஈடுபாட்டைப் பெறுவதோடு நின்று விடக்கூடாது. தான் இறைவனிடத்து எவ்வளவு ஈடுபாடு, அன்பு, கொண்டிருக்கிறோம் என்று பார்ப்பதைவிட, இறைவன் தன்னிடத்து எவ்வளவு அருளோடும் அன்போடும் இருக்கிறான் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பது நல்லது. எப்படி நடந்தால், எப்படிச் செய்தால், இறைவனுக்கு மிகவும் பிடித்தமாக இருக்கும், அவனுக்கு இன்பத்தைக் கொடுக்கும் என்று கண்டுபிடிப்பதில் ஆர்வமுடையவனாக இருக்கவேண்டும். அதை ஆராயுங்கள். அதற்காக ஏங்குங்கள். அதை நமக்குப் பெற்றுத்தரும் எல்லாவற்றையும் செய்யுங்கள். அந்தப் பலனுக்காக உதவும் காரியங்களிலேயே ஈடுபடுங்கள். அதுதான் உண்மையான பக்தி.

ஆனால், பக்தியின் இந்த இலட்சியத்தைப் பொதுவாகப் பலர் பின்பற்றுவதில்லை அந்த லட்சியத்தின் விளைவுகளையும் அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. இறைவனிடத்துத் தாங்கள் வைத்திருக்கும் அன்பை மட்டும் கவனிக்கிறார்கள்; இப்படிச் செய்யும் பொழுது, இறைவன் ஒப்பும் அறத்தைப் பற்றியோ, அவன் வெறுக்கும் அறத்தைப் பற்றியோ கவனம் செலுத்துவதில்லை. இதனால்தான் கண்ணன் ''பக்தனுடைய விருப்பங்களை நிறைவேற்றும் காரியங்களை விட இறைவனுக்கு இன்பமளிக்கும் காரியங்களே மேலானவை'' என்று சொல்லுகிறான். எதைச் செய்தாலும், எண்ணினாலும், திட்டமிட்டாலும். பார்த்தாலும், அது இறைவனது அருளைப் பெற்றுத் தருவதாக இருக்க வேண்டும் அவை மனிதரது விருப்பமாக மட்டும் இருந்தால் போதாது. இறைவனது விருப்பத்தையும் ஒட்டி இருக்க வேண்டும். தனக்கு பிடித்தமானவை என்று இறைவனே சொல்லியிருக்கிற விருப்ங்களுக்கு ஒத்திருக்கிறதா என்ற உரைகல்லில் தனது ஒவ்வொரு எண்ணத்தையும் உணர்வை யும் பக்தன் தேய்த்துப் பார்க்க வேண்டும்.

இறைவன்பால் ஒருவனுக்கு ஆழமான பக்தி இருந்தாலும், இறைவனது கட்டளைகளைக் கவனியாது ஒருவன் வாழ முற்படுவானானால் அவனைப் பக்தன் என்று சொல்ல முடியாது என்று கீதை கூறிவிட்டது. சாதுக்களுக்கும் முனிவர்களுக்கும் காண்பிக்கப்பட்டவையும் ஆண்டவனது கட்டளைகளை உடையவையுமான சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கிற அறங்களே இறைவனது கட்டளைகளுமாகும். ''பக்தியுடையவனான அவன் எனக்கு இனியவன் என்று கீதையில் கண்ணன் சொன்னபொழுது இந்தப் பொருளில் தான் 'பக்தன்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், பக்தன் எதைச் செய்தாலும் ''நான் செய்தது'' என்று அவன் எண்ணக்கூடாது. இறைவனால் கருதப்பட்டு அதனாலேயே செய்யப்பட்டது என்று எண்ண வேண்டும் என்று கீதை சொல்லுகிறது. பொதுவாக, சில காரியங்கள் தாங்கள் செய்தது என்றும் மற்றச் சில காரியங்கள் இறைவனுடையது என்றும் நினைக்கிறார்கள். இப்படி நினைப்பது ஓர் உண்மையான பக்தனுக்குத் தகுந்த அடையாளமல்ல. எல்லாமே இறைவன் செயல் என்று கருதும் பாங்கு வந்து விட்டால் ''நான்'' ''எனது'' என்ற ஆணவங்களால் மாசுறமாட்டார்கள்.

ஆணவத்தை, ''நான்'' ''எனது'' என்ற குறைகளை நீக்கும் பயிற்சியே பக்தி. இக்காரணத்தால் தான்' அறிவுடைய பெரியோர்கள் பக்தனை ''அவிபக்தன்'' (இறைவனிடமிருந்து என்றும் பிரியாதவன்) என்று அழைக்கிறார்கள். எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும், ஒருவனது செயல்களும் உணர்வுகளும் இறைவனைச் சுற்றியே அமைய வேண்டும். இதற்கு மாறாக, துன்பமும் கவலையும் இழப்பும் நம்மை மீறும் பொழுது ''ஆண்டவனே! என்னைக் காப்பாற்று!'' என்று கதறிவிட்டு, இவை நீங்கினவுடன் மறுபடி உலகத்து ஆசைகளுக்கு அடிமையாகி, அக்கப்போர்களில் இறங்கினால், அத்தகைய நடத்தை மிகவும் வெறுப்புக்குரியது.

இதுதான் கீதையின் உபதேசம். நெருக்கடி நிலைமையிலிருந்து தப்புவதற்காக ஆண்டவனைத் தொழக்கூடாது. நாக்கு செத்துப்போய் உணவு 'சப்'பென்று ஆகும்பொழுது நல்ல உறைப்பான 'ஊறு' காய்களைத் தேடுகிறார்கள் துயரம் தாக்கும்பொழுது இறைவனைத் தேடுகிறார்கள்! இது போன்ற வெளிப்பூச்சான பக்திதான் இந்நாளில் எங்கும் பரவலாகக் காணப்படுகிறது. இந்தக் கலி நாளில் அடிப்படையானதொரு போலித்தனமே இதற்கு காரணமாக இருக்கலாம். கடவுளிடத்துத் தனக்கு இருக்கும் பற்றின் ஆழத்தை உலகத்திற்குத் தம்பட்டம் அடித்துக் காண்பிக்கும் போலிப் பக்தி துரதிருஷ்டவசமாக இன்று காணப்படுகிறது. இறைவனே எமக்கு எல்லாம் என்று ''எல்லாவற்றையும்'' அவனுக்காகத் துறந்து விட்டதாகச் சொல்லிக்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பெரிய மனிதரிடத்தும் சாதகரிடத்தும்கூட இது காணப்படுகிறது. யாத்திரை போகும் போதோ, பெரியவர்கள் முன்னிலையிலோ, கோயில்களுக்குப் போகும்பொழுதோ முகத்திரை போட்டுக் கொள்வார்களே பெண்கள். இது போன்றுதான் பலருக்குப் பக்தியும் இருக்கிறது. திரும்பி வீட்டுக்கு வந்துவிட்டால் முகத்திரையை எடுத்துவிட்டு, அதுவரை காண்பித்த பக்தி உணர்வையும் நினைவையும் எடுத்தெறிந்து விடுகிறார்கள்.

இவைகளெல்லாம் கூட விளம்பரத் தந்திரங்கள்தாம். பக்தியென்றால் அது உறுதியாகவும் முழுதாகவும் இருக்க வேண்டும். எல்லா நேரங்களிலும். எல்லாச் சூழ்நிலைகளிலும், இறைவனிடத்தில் மனத்தை நிறுத்துவது பக்தி. தங்கள் செயலெல்லாம் தேவனுக்கே அர்ப்பணம் என்று பலர் அடித்துப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் போக்குகளைப் பார்த்தால், அவர்களுடைய தேகபோஷணத்துக்குத்தான் அவற்றைச் சமர்ப்பிப்பதாகத் தெரிகிறது. தெய்வத்துக்குக் காணிக்கையாக்குவதற்குப் பதிலாக, தங்களுக்கே காணிக்கையாக்கிக் கொள்ளுகிறார்கள். அறியாமையினால் தங்கள் உடலுடன் தங்களை ஒன்றுபடுத்திக் கொண்டு விடுவார்கள். அந்த உடலுக்கே எல்லாம் செய்கிறார்கள். ''இது கிருஷ்ணார்ப்பணம்'' என்று வாயால் சொல்லுகிறார்கள். யார் இந்தக் ''கிருஷ்ணன்'' என்று பார்த்தால், அவர்களுடைய பிள்ளைக்குப் பெயர் கிருஷ்ணன் என்று இருக்கும். 'ராமார்ப்பணம்' என்பார்கள். அது ராகார்ப்பணமாக இருக்கும். அதாவது அவர்களது ஆசைக்கு உணவாக இருக்கும். இம்மாதிரி செய்கைகளையெல்லாம் எப்படி இறைவனுக்குக் காணிக்கை, சமர்ப்பணம் என்ற பெரிய பெயர்களால் அழைக்கமுடியும்?

இறைவன் பொருட்டுச் செய்யப்படுவதென்றால், அது மனம், வாக்கு, காயம் இம்மூன்றையும் ஊக்கவேண்டும். நீங்கள் பேசுவதை மனது ஒப்பவில்லையென்றால், மனத்தால் நினைத்ததை முழு மனத்துடன் செயல்படுத்தவில்லையென்றால், அது வெறும் போலியாகி விடுகிறது. செய்பவனும், செயலும், செய்விப்பதும் எல்லாம் அவனே என்று உறுதியாக நம்புங்கள்; பணத்திலும் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமும் ஈடுபடுவதைவிட இறைவனிடத்து ஈடுபடுங்கள்.

எந்த இடத்தில் உங்களுடைய மனது பற்றுகிறதோ அங்கு உங்கள் பக்தியும் நிலைக்கும். பக்தி என்பது கங்கையின் நீரைப் போல் தூயது. செயல் என்பது யமுனையின் நீரைப் போன்றது. ஆனால் ஞானமோ, ஸரஸ்வதி நதியைப் போல், மண்ணுக்கடியில் மறைந்து ஒருவருக்கும் புலப்படாமல் ஓடி மற்ற இரண்டுடனும் கலந்து, தன்னைப் புனிதமாக்கிக் கொள்கிறது. இம் மூன்றும் கலப்பதைத் தான் திரிவேணி என்கிறோம். மனம் மறைவதைத்தான் இது குறிக்கிறது. முக்குணங்களும் ஒன்றுவதைத்தான் இது காட்டுகிறது. ''நான்'' என்ற அகந்தையின் அழிவை இது உண்டாக்குகிறது.

இருப்பினும், இந்த அடிப்படை உண்மைகளை அறியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். இரண்டு வேளை குளித்து காலை, நண்பகல், மாலைக் கடன்களை ஒழுங்காகச் செய்து முடித்து, வீட்டுத் தெய்வங்களைத் தொழுது, வெண்ணீறும் சந்தனமும் நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் பூசி, முகத்தில் குங்குமப் பொட்டிட்டு, கழுத்தில் மணிமாலையும் ஜபமாலையும் அணிந்து கோயிலுக்குக் கோயில் போய், ஒரு குருவிடமிருந்து மற்றொரு குருவினிடத்தில் சென்று அலைந்து, இப்படி எல்லாம் செய்கிறார்கள். புனிதத் தலங்களை வலம் வருகிறார்கள். பல உபன்யாஸங்களையும், புராணச் சொற்பொழிவுகளையும் கேட்கிறார்கள். மெய்ந் நூல்களைப் படிக்கிறார்கள். ரொம்பச் சொன்னால், அவர்கள் நல்ல காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர அவர்களைப் பக்தர்கள் என்று சொல்லிவிட முடியாது.

நமது உடை, பேச்சு இவற்றுக்கும் பக்திக்கும் ஒருவிதத் தொடர்பும் இல்லை. உடையையும் புறச்சின்னங்களையும் மட்டும் வைத்து ஒரு மனிதரை நாம் பக்தர் என்று சொல்லிவிடமுடியாது. பக்தி என்பது உள்ளுணர்வாக இருக்க வேண்டும்; வெறும் புறத்தோற்றத்தால் மட்டும் அது அமையாது. எங்கு புகை இருக்கிறதோ அங்கு நெருப்பு இருக்கும் என்று நாம் ஊகிக்கிறோம். ஆனால் சில வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புக்குள் புகைவதில்லை. ஆனால் நெருப்பில்லாமல் புகை இருக்காது என்பதென்னவோ உண்மை. இதுபோல, உணர்ச்சியின்றிக் காரியங்கள் செய்ய முடியும். ஆனால் எல்லா உணர்ச்சிகளும் வெளிப்படையான செய்கைகளில் காணப்படவேண்டும் என்ற கட்டாயமில்லை. வெளிப் பகட்டும் ஆடம்பரமுமின்றியே, உண்மையான உணர்ச்சிகள் இருக்கமுடியும். தூய்மையான உணர்ச்சிகள் இருக்க வேண்டுவதுதான் முக்கியம். ஒருவன் வளர்ச்சியை விரும்பினால், வெறும் பகட்டான வெளித்தோற்றம் இவ்வளர்ச்சிக்கு நேரடியாகவே தீங்கு தரும்.

அர்ஜுனன் கேட்ட கேள்வி இந்தக் கூடுதலான பதிலையும் தந்திருக்கிறது. பக்தர்களிலும் இருவகை உண்டு என்பது உண்மைதான். ஸகுண பக்தர்கள் என்றும் நிர்க்குண பக்தர்கள் என்றும் இருவகை. இவர்கள் முறையே மெய்ப் பொருளை உருவத்தோடும் உருவமில்லாமலும் வழிபடுகின்றவர்கள். பக்தர்களுக்குள், துன்பத்திலிருப்பவனும் பொருள் விரும்புபவனும், மெய் அறிவைப் பெற விரும்புபவனும் உருவமும் பெயரும் கொண்டதாக மெய்ப்பொருளை வழி படுகிறார்கள். எல்லாப் புனிதமான காரியங்களிலும் வலக் காலை முதலில் வைப்பது போல, நிர்க்குணபக்தி என்னும் வலக்காலை முதலில் வைத்து முக்தி பெறவேண்டும். அது தான் எவ்வகையிலும் புனிதமானது. நிர்க்குணப்பொருளின் வழிபாடுதான் மெய்யொளியைத் தரும். உருவ வழிபாடும் அருவ வழிபாடும் இரண்டுமே பயனுள்ளவைதான்; ஆகையால் இரண்டும் இன்றியமையாதவை எவ்வளவு நேரத் துக்குத்தான் ஒருவன் ஒரு காலை உள்ளேயும் வெளியேயும் வைத்துக் கொண்டிருக்க முடியும்? அப்படியே முடிந்தாலும், அதனால் என்ன பலன்? ஆகவே ஸகுணபக்தி ஒரு வாயிலாகவும் நிர்க்குண பக்தி அதன் அடைவிடமாகவும் வைத்துக் கொள்ளவேண்டும்.

உலகத்தையே கடவுள் வடிவமாகவும் பார்க்கலாம்; அல்லது உலகத்தையும் கடவுளையும் வேறாகவும் பார்க்கலாம். ஆனால் இரண்டும் ஒன்றேதான். துணியை நூலின் வடிவமாகவும் பார்க்கலாம்; துணியையும் நூலையும் வேறு வேறாகவும் பார்க்கலாம். நீங்கள் எப்படிப் பார்த்தாலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்தான் துணி; துணியும் நூல்தான். துணியையும் நூலையும் வேருகப் பார்ப்பது கடவுளைக் குணங்களோடு கூடியவனுக உபாஸிக்கும் ஸகுண உபாஸனை. துணியையும் நூலையும் ஒன்ருகப் பார்ப்பதைப் போன்றது கடவுளைக் குணம் குறிகளற்றவனுக உபாஸிக்கும் நிர்க்குண உபாஸனை.

இந்தப் பக்தி எங்கிருந்தோ இறக்குமதி செய்யப்படுவதல்ல; யாரோ கொடுத்து நாம் வாங்கிக்கொள்ளும் சரக்கல்ல. மண்ணிலிருந்து அது திடீரென்று முளைப்பதில்லை; வானிலிருந்து விழுவதுமில்லை. அது தன்னிடமிருந்தே ஊற்றுப் பெருக்காக வருவது. தன்னலங் கருதாமல் இறைவனிடம் பற்று வைக்கும் நிலை அது. மனிதனிடத்தே அடங்கிக் கிடக்கும் பற்றும் அன்பும் கண்டபடி சிதறிக் கரை உடைத்துக்கொண்டு பல வழிகளிலும் பாயக் கூடாது. தங்கு தடையில்லாமல் அது இறைவனைக் குறித்தே கட்டுப்பாடாகச் செல்லவேண்டும். அப்பொழுது அது பக்தியாகிறது. இத்தகைய அன்பு எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறது. பறவைகளிடத்தும் விலங்குகளிடத்தும் புழு பூச்சிகளிடத்தும் கூட இருக்கிறது. இந்த அன்பு அவைகளையும் அவற்றிற்கு ஏற்ற வகையில் ஊக்கி நிறைத்து நிற்கிறது. சுருங்கச் சொன்னுல், வாழ்வென்பது அன்பு; அன்பு என்பது வாழ்வு.

உயிரினம் ஒவ்வொன்றும் தன் குழந்தை குட்டிகளைப் பற்றி, பெற்றவரைப் பற்றி, வசதி பாதுகாப்பைப் பற்றி, உணவைப் பற்றி, இன்பங்களையும் விளையாட்டுக்களையும் பற்றி, பலதிறப்பட்ட அன்பினை உடையதாக இருக்கிறது. அது பற்றும் பொருளின் தன்மைக்கேற்ப இந்த அன்பு வகைகள் தனித் தனியாகப் பெயர் பெறுகின்றன. குழந்தை குட்டிகளின்பால் செலுத்தப்படும் பொழுது இந்த அன்பு பாசம் எனப்படுகிறது. சிற்றின்பப் பொருள்களின் மீது ஏற்படும் பொழுது இது காமம் எனப்படுகிறது. ஒத்த நிலையிலுள்ளவர்களிடம் ஏற்படும் பொழுது இது நட்பு எனப்படுகிறது. பொருள்கள் சொத்துக்கள் இவற்றின் மீது வைக்கும் பொழுது இது ஆசை எனப்படுகிறது. ஓரிடத்தில் கவர்ச்சியாகவும் இன்னேரிடத்தில் நட்பாகவும் அமைகிறது. மூத்தோரிடத்தும், ஆசிரியரிடத்தும் பெற்ருே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிடத்தும் இது பணிவு, அடக்கம் என்றெல்லாம் பெயர் பெறுகிறது ஆனால் இறைவனிடத்து வைக்கப்படும் அன்பு தான் பக்தி என்று சொல்லப்படுகிறது.

இந்த அன்பானது இறைவனை நீக்கிப் பல திக்குகளிலும் பல பொருள்களிடத்தும் பாய்ந்து சிதறும் பொழுது அது துன்பத்தைத்தான் கொடுக்கும். ஏனெனில், தோன்றி மறைந்து அழியக் கூடிய பொருள்களிடம் அது போய்ப் பொருந்தி விட்டதல்லவா?

மாறாக, இறைவனது இருள் என்னும் கடலை நோக்கி ஒரு முனைப்புடன் இந்த அன்பை ஓட விடுங்கள். அதுதான் பக்தி என்னும் சாதனம். பிறவி, மரணம் என்னும் உப்புச் சேற்றில் ஏன் வாழ்நாளை வீணுக்கவேண்டும்? அருட்கடலை அடைய முயல்வதுதான் இதனினும் அறிவுடைமை. அங்கு நீங்கள் உங்களையே அறிந்து கொள்வீர்கள்; உங்களுடைய சத்-சித்-ஆனந்த நிலையை எய்துவீர்கள்!

ஆயர் சிறுமியர் இந்தச் சாதனத்தை முயன்று வெற்றியும் பெற்றுர்கள். ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நிலைமையும், ஒவ்வொரு எண்ணமும் சொல்லும் செயலும் இறைவனது திருவடித் தாமரைகளிலே இந்தக் கோபியர்களால் காணிக்கையாக்கப்பட்டன. அதனுல்தான் கோபிகள் யோகிகள் எனப்படுகிருர்கள். கண்ணபிரானே இக் கோபியர்களை யோகியர் என்று அழைத்தானென்றுல், அவர்களின் ஆன்மீக சாதனையின் உயர்வை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 22

கண்ணன் சொன்ன பதில்களின் பேரில் அர்ஜுனன் மேலும் கேட்டான்: ''இறைவனைக் குணங் குறிகளோடு தொழுபவனுடைய இயல்புகளைப் பற்றி நீ எடுத்துச் சொன்னாய். இவ்வித இயல்புகளை உடையவர்கள் யோகிகள் என்று கூறினாய். இதையெல்லாம் குறித்துத் தெரிந்து கொள்ள நேர்ந்ததைப்பற்றி எனக்கு மகிழ்ச்சியே. இறைவனை ஸகுணமாக வழிபடுகின்றவர்களைப் போலவே அவனை நிர்க்குணமாக வழிபடும் அன்பர்களும் சில இயல்புகளை உடையவர்களாயிருப்பார்கள். அவற்றை வைத்து அவர்களை இனங்கண்டு கொள்ளலாம் அல்லவா? அவர்களைப் பற்றித் தயவு செய்து சொல்ல வேண்டும். அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.''

இதைக் கேட்டு, அழகிய வடிவமுள்ள நந்தகுமாரன் பதிலிறுத்தான். ''அர்ஜுனா! இறைவனைக் குணங்குறி களற்று வழிபடுபவர்கள் தங்களது புலன்களை முற்றும் அடக்க வேண்டும். பின்னர், சூழ்நிலைகளால் இவர்கள் பாதிக்கப்படக்கூடாது. மூன்றாவது, துன்பத்திலிருப்பவர் களுக்கு உதவுதல் வேண்டும். நிர்க்குணமான அழிவற்ற பரம்பொருளைத் தொழுபவர்களினுடைய இயல்பு இப்படித் தான் இருக்கும்.''

ஸகுண உபாஸனை செய்பவர்களின் இயல்பும் நிர்க்குண உபாஸனை செய்பவர்களின் இயல்பும் ஒன்றுதான் என்று இதைப் படிப்பவர்கள் ஊகித்திருக்கக் கூடும்.

கண்ணனுடைய பதிலைக் கேட்டு அர்ஜுனன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். ''நான் நன்கு தெளிவாக உணர்ந்து கொண்டு விட்டேன். ஆனால், நான் இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும். இறைவனது அருளை நான் பெற வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும்'' என்று உணர்ச்சியுடன் கூறிக் கண்ண னுடைய திருவடிகளில் வீழ்ந்தான். நாராயணனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் நரனுன அர்ஜுனனைத் தூக்கி "அர்ஜுனு! இந்த இரண்டுவகை மெய்யன்பர்களினுடைய இயல்புகளையும் நீ இப்பொழுது பெற வேண்டியதில்லை. அவை எளிதாகக் கிட்டாது. இவையிரண்டையும் விட எளிதானதொரு வழியைப் சொல்லுகிறேன். அந்த வழி நிச்சயமாக என்னுடைய அருளை உனக்குப் பெற்றுக்கொடுக்கும்.

"இதுதான் அந்த வழி; உன்னுடைய மனதையும் புத்தியையும் என்னிடத்தில் வை; இதை உன்னுல் செயயாமுடியா விட்டால், இது கடினமானதாக இருந்தால், உன்னுடைய அகந்தையை விட்டு விட்டுப் புனிதமான, நெறியான பணிகளைச் செய். இதுவும் கடினமென்றுல், உன்னுடைய செயல்களினுடைய பலன்களில் பற்றை விட்டுவிடு. அவற்றை எனக்கே அர்ப்பணமாக்கு. அப்படி அர்ப்பணமாக்கும் பொழுது அது வெறும் பேச்சாக மட்டும் இருக்கக்கூடாது. மனோ வாக் காயம் என்று சொல்வார்களே, அதுபோல மனம மெய், மொழிகளால் அந்த அர்ப்பணம் அமையவேண்டும்.

"இது கூட உன் சக்திக்கு அப்பாற்பட்டது என்று நினைக்கிருயா? அப்படியானுல், இதன் விளைவுகள் போகப் போக உனக்கு விளங்கும்" இவ்வளவும் சொல்லிவிட்டுக் கண்ணன் சிறிது நேரம் சும்மா உட்கார்ந்திருந்தான்.

இதைக் கவனியுங்கோ. அருளை நாடுகிறவன் கடமையைத்தான் நினைக்க வேண்டுமே தவிர, நல்லதோ கெட்டதோ அதன் பலனை எண்ணிப் பார்க்கக் கூடாது. இதனுல்தான் கோபாலன் அப்பியாசத்தைவிட ஞானம் உயர்ந்தது என்றும், ஞானத்தைவிட தியானம் உயர்ந்தது என்றும், தியானத்தைவிட பலனில் இச்சையில்லாமல் பணிகளைச் செய்கிற தியாகம் உயர்ந்தது என்றும் சொல்லி, பலனில் பற்றின்மை என்ற தியாகம்தான் அமைதியைக் கொடுக்கும் என்றும் சொன்னுன்.

"இறையன்பும் வெறுப்பும், நீரையும் நெருப்பையும் போல் மாறுபட்டவை; ஒரே இடத்தில் ஒன்ருக இருக்காது. நன்மை தீமை, விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம் இவற்றினிடையே யாதொரு வேற்றுமையையும் காணுத ஒருவனைத்தான் நான் விரும்புகிறேன். எந்த வடிவத்திலாயினும், வேற்றுமை என்ளளவேனும் உள்ளத்தில் இருக்குமானுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பக்தனாக இருக்க முடியாது. "இவ்வுலகமெல்லாம் வாசுதேவனே" என்று உறுதியான நம்பிக்கை பக்தனுக்கு இருக்க வேண்டும். அதாவது, உங்களுடைய ஆத்மாவான மெய்ப்பொருளே எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் இருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து அதன்படி நடந்து அதை மெய்ப்பிக்க வேண்டும். மற்றவனை வெறுப்பது தன்னையே வெறுத்துக் கொள்வதாகும். மற்றவனைக் காய்வது தன்னையே காய்வதாகும். பிறனிடத்துக் குற்றம் காண்பது தன்னிடத்திலேயே குற்றம் காண்பதாகும். என்று கண்ணன் தொடர்ந்து சொன்னான்.

இந்த இடத்தில் இதைப் படிப்பவர்கள் ஓர் ஐயப் பாட்டினால் குழம்பக் கூடும். பிறரிடத்து வெறுப்பின்மை அல்லது பிறரிடத்துக் குற்றங் காணுமை இவை மட்டுமே "வாசுதேவனே எல்லாம்!" என்ற உணர்வைக் கொடுத்து விடுமா? அன்று; வெறும் வெறுப்பின்மை முதலியவை மட்டும் இதயத்துள்ளிருக்கும் ஆண்டவனையும் அவனை அறியும் இன்பத்தையும் தந்து விடாது; இறைவனது அருளைப் பெற்றுத் தராது.

வேளாண்மை செய்யும் விவசாயியினுடைய தொழில் இங்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இதைக் கூர்ந்து நோக்கினால், உண்மை தெரியவரும்; ஐயம் தீரும் வயலில் விதை விதைக்கும் முன்னும் பின்னும் விவசாயி ஆங்காங்கு முளைத்திருக்கும் புல் புதர்களைக் களை பிடுங்க வேண்டும். ஆனால் அறுவடை செய்து நெல்லை வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு இது மட்டும் போதாது. வயலை நன்றாக வரம்பிட்டு நீர்பாய்ச்சி, விதைப்பதற்கேற்றதாகப்பண்படுத்தி வைக்க வேண்டும். விதைத்துப் பயிர் முளைவிட்டபின் அம்முளைகளைக் காத்து வளர்க்க வேண்டும். இப்படி பயிர்க் கதிர்கள் முற்றும் வரை காவல் செய்து பின் அறுவடை செய்து கொண்டு போய்க் களஞ்சியத்தில் சேமித்து வைக்க வேண்டும்.

இதுபோல, இதயவயலிலிருந்து பற்று, வெறுப்பு, பொறுமை, அகந்தை என்னும் இந்த முட்புதர்களை யெல்லாம் வேரோடு பிடுங்கி அகற்றி விடவேண்டும் நற்பணிகளால் இந்த வயலை உழவேண்டும். பின் இன்பம் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்று நடவேண்டும். ஒழுக்கத்தினாலும் கண்காணிப்பினாலும், வளரும் இந்த நாற்றைக் கட்டிக் காக்கவேண்டும். கடைசியில், இந்த முயற்சிகளின் பலனாகப் பேரின்பம் என்ற பெருவிளைச்சல் நமது களஞ்சியத்தில் நிரம்பி வழியும்.

மனத்திலிருந்து வெறுப்பை அகற்றுவதனால் மட்டும் இன்பம் கிடைத்து விடாது. அன்பையும் அதோடு பயில வேண்டும். அதாவது, வெறுப்பை அகற்றி அன்பை விதையுங்கள். வெறுப்பு இல்லாததால் மட்டும் பக்தி வந்து விடுமானால், குன்றும் புற்றும், மரமும் குச்சியும் மண்ணும் மலையும் பக்தி உள்ளவையாகிவிடும். இவை ஒன்றையும் வெறுப்பதில்லையே? அவற்றிற்கு விரும்பத்தகாதது என்று ஒன்றும் இல்லை. இந்தக் காரணத்தினால், இவற்றிற்கெல்லாம் பக்தி இருப்பதாகச் சொல்கிறோமா? இல்லை. அப்படிச் சொல்வது அபத்தமாகும். பக்தன் முதலில் வெறுப்பை விட்டு அன்பினால் நிறையவேண்டும். மேலும், வருத்தமுற்றோர்க்கும் அல்லலுற்றோர்க்கும் தொண்டாக இந்த அன்பு மலரவேண்டும் என்றான் கோபாலன்.

அர்ஜுனன் இதையெல்லாம் வெகு கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான். பின்னர், ''கண்ணா! இம் மூன்றுமட்டும் போதுமா? அல்லது பின் பற்றிப் பயில வேண்டியது இன்னும் வேறெதாவது இருக்கிறதா? தயை செய்து எனக்குச் சொல்லவேணும்'' என்று கேட்டுக் கொண்டான். கண்ணன், ''செடியை நட்டால் மட்டும் போதாது. நிலத்திற்கு நீர் பாய்ச்சி எருப்போடவேண்டும். வெறுப்பினை அகற்றுவதும் அன்பினை நடுவதும் முதல் கட்டத்தைத்தான் குறிக்கும். முளைகள் விட்டவுடன், ''நான்'' ''எனது'' என்ற எண்ணத்தை நீக்கமுற்பட வேண்டும். இவைதான் நீர்பாய்ச்சி எருப்போடுதலுக்கு ஒப்பாகும். இன்பத்தை வெற்றிகரமாக அறுவடை செய்ய வேண்டுமானால் இந்த இரண்டும் தேவை.

''அதாவது, ''எனது'' ''நான்'' என்ற எண்ணங்களை விலக்கிவிட வேண்டும். இவை இரண்டும் வெவ்வேறல்ல முந்தையது பிந்தையதிலிருந்து பிறக்கிறது இரண்டுமே அடிப்படையான உண்மை தெரியாத அறியாமையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றன. ஏனெனில், அறியாமையை அகற்றி விட்டேனமானால், "நான்" "எனது" என்ற எண்ணங்கள் தொல்லை கொடுக்கமாட்டா. அவைகளுக்கு அங்கே இடமில்லை. ஏனெனில், பக்தியை விரும்புபவன் எப்பொழுதும் மனநிறைவைப் பெற்றிருக்க வேண்டும் இதற்குப் பொருள் என்ன? உடல்நலமோ உடல் நோயோ, லாபமோ நஷ்டமோ, இன்பமோ துன்பமோ, எந்த நிலையிலும் மனநிறைவுடனிருப்பது என்பதுதான் ஒருவனுடைய விருப்பங்கள் நிறைவேறுகின்றனவோ இல்லையோ, தன்னிலையையும் சீர்மையையும் இழக்கக் கூடாது

"தானே வகுத்துக் கொண்ட பாதையில் சிறிதளவு தடங்கலும் ஏற்படும் பொழுது மனது தன்னிலை தவறி விடுகிறது. அப்படி நிலையில்லாமல் இருக்கிறது. ஏன், குறிப்பிட்ட நேரத்தில் காப்பி வராவிட்டால், வாரத்திற்கு இரண்டு படங்கள் பார்க்கத் தவறிவிட்டால் காலையிலும் மாலையிலும் மணிக்கணக்காக ரேடியோ முன் உட்கார்ந்து கொண்டிருக்க முடியாவிட்டால், இது போன்ற பல சிறு பழக்க வழக்கங்கள் மறுக்கப்பட்டாலோ அல்லது தடுக்கப் பட்டாலோ, பெருங்குறை நம்மை ஆட்கொள்ளுகிறது. நினைத்தது நடந்தாலும் நடக்காவிட்டாலும், நினைத்ததை அடைந்தாலும் அடையாவிட்டாலும் அதனால் கவலைப்படாமல் இருககிற மனநிலைதான் சந்துஷ்டி, மனநிறைவு எனப் படும். மகிழ்ச்சியினால் குதிபோடாமலும், தோல்வியினால் ஏமாற்றமடையாமலும், மனம் கலங்காமலிருக்கவேண்டும்."

இப்பொழுது அர்ஜுனன்: "இறைவா! நீ அடிக்கடி பிரகிருதியையும் புருஷனையும் பற்றிப் பேசுகிறாய். இவற்றில் பிரகிருதி என்பது என்ன, அதன் இயல்புகள் என்ன, அது எத்தன்மையது என்றெல்லாம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றான். இதற்குக் கண்ணன் எளிதாகப் புரிந்து கொள்ளும்படியாக விடையளித்தான். "அர்ஜுனா! பிரகிருதிக்கு இன்னொரு பெயரும் உண்டு. அது க்ஷேத்ரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஐந்து மூல ஜடப்பொருள்களாலான இந்த உலகம் பிரகிருதி எனப்படுகிறது. இந்தப் பிரகிருதி என்ற உலகத்தில் அசைவற்ற ஒரு ஜடப் பகுதியும், இயங்கும் அறிவு பொருந்திய மற்

றெரு பகுதியுமாக இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அதாவது, ஒன்று பார்க்கப்படுவது; மற்றொன்று பார்ப்பது. பார்ப்பது "நான்"; பார்க்கப்படுவது "இது."

"பல இயல்புகளின் கூட்டே பிரகிருதி எனப்படும். தமஸ் (சோகம்), ரஜஸ் (மோகம்), ஸ்த்வம் (ஆனந்தம்) என்ற இந்த மூன்றும்தான் பிரகிருதியின் இயல்புகள். இந்த முக்குணங்களின் சேர்க்கையும் தொகுப்புமே இயற்கை எனப்படுகிறது. இதே போல், செய்பவன், அதன் பலனை நுகர்பவன் என்ற குணங்களும் இவ்வியற்கையைச் சேர்ந்தவையே."

அர்ஜுனன் தனது கேள்விகளைத் தொடர்ந்து கேட்க விரும்பினான். அதனால் கண்ணன் "என் அருமை மைத்துனா! இன்னும் கேள்வி கேட்க ஆசைப்படுகிறாயா?" என்று கேட்டான். வாய்ப்பை விடாமல், அர்ஜுனன்; "கண்ணா! இயற்கை (பிரகிருதி) என்னும் தத்துவத்தைப் பற்றி விளக்கிச் சொன்னாய். புருஷன் என்னும் தத்துவத்தைப் பற்றி இப்பொழுது நான் அறிய விரும்புகிறேன். அதன் இயல்புகள் என்னென்ன? அதன் தன்மை யாது?" என்று வினவினான்.

"அர்ஜுனா! அதைப் புருஷன் என்றாலும், க்ஷேத்ரக்ஞன் என்றாலும், ஞேயன் என்றாலும் எல்லாம் ஒன்றே. க்ஷேத்ரத்தை அறிபவன் க்ஷேத்ரக்ஞன், நேயம் என்றால் தெரிந்து கொள்ளப்படும் பொருள், புருஷன்தான் ஜீவன்; பிரகிருதிதான் உடம்பு. இந்த உடலுக்குள் வாழ்பவன் புருஷன்; அவன் அந்த உடலை அறிகிறான். உடம்புக்கும் பல பெயர்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒரு பொருள் பொதிந்த கருத்து உண்டு. தேய்ந்து போவதால் அது சரீரம் எனப்படும். எரிந்து போவதால் அது தேகம் எனப்படும். இவ்வுடம்பை உயிர்ப்பித்து, அதனுடைய குறைகளைத் தெரிந்து வைத்திருப்பவன்தான் இந்த உடல் வாழ் உயிர் அல்லது ஜீவன்" என்றான் கண்ணன்.

இந்தப் பதிலைக் கேட்டு அர்ஜுனனை ஐயம் வாட்டிற்று. அதனால் இன்னும் தொடர்ந்து பல கேள்விகளை அவன் எழுப்பினான். "கண்ணா! தேய்ந்து அழிந்து போகிற உடம்பு, எவ்வாறு க்ஷேத்ரம் என்று அழைக்கப் படலாயிற்று'?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுனன் செய்திகளை வாங்கிக் கொள்வதில் வெகு சமர்த்தன். கண்ணன் அவனுக்கு மிகுந்த பொறுமையோடு பதிலளித்தான். "பல நல்ல பணிகளைச் செய்து முடிப்பதன் மூலம் புண்ணியம் சேர்ப்பது இந்த உடலினுல்தான். மெய் யறிவைப் பெறுவதற்கும் உடலே கருவியாகும். இந்த உடம்புதான் உன்னை விடுதலைப் பேற்றுக்கு இட்டுச் செல் கிறது இத்தகைய பெரிய சாதனைகளுக்கு அது இடமாக இருப்பதால் அது க்ஷேத்ரம் எனப்படுகிறது. க்ஷேத்ரம் என்ருல் கவசம். மனிதனை அது இடுக்கண்ணை விருந்து காத்து நிற்கிறது. 'நிலம்' என்பது இச்சொல்லிற்கு மற்ருெரு பொருள். இது கருத்து நிறைந்த பொருளாகும். நிலத் தின்கண் எந்த விதை விதைத்தாலும், செடிகள் நட்டா லும், அந்நிலத்தின் தன்மையையும் இயல்பையும் ஒட்டித் தான் விளைச்சல் உண்டாகும் உடம்புதான் நிலம்; உயிர் தான் அந்நிலத்தையும் பயிரையும் காக்கும் காவலன். நல் வினை விதைத்தால் இன்பமும் மகிழ்ச்சியும் விளையும். தீவினையை விதைத்தால், துயரமும் கவலையும்தான் விளைச் சலாகக் கிடைக்கும். மெய்யறிவாம் விதை விதைத்தால், பிறவிச் சுழலிலிருந்து விடுதலை பெறும் பேற்றினை அறுவடை செய்யலாம்.

"தான் உழும் மண்ணின் தரத்தையும் தன்மையையும் ஒரு விவசாயி நன்கு தெரிந்து வைத்திருப்பான் அதுபோல, உடலின் தரத்தையும் தன்மையையும் க்ஷேத்ரக்ஞனை உயிர் வாழ்பவன் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். க்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்திரக்ஞனுக்கும் உள்ள ஒரே வேற்றுமை இந்த "க்ஞ" என்ற பகுதிதான் அதுதான் "அறிபவன்" என்ற பொருளைத் தருகிறது. எனவே உடலின் சிறப்புக்களையும் குறைகளையும் தெரிந்து வைத் திருப்பவன் க்ஷேத்ரக்ஞன் எனப்படுகிருன். அப்படிப்பட்ட அறிவு இல்லாமல் ஜடமாய் இருப்பது க்ஷேத்ரம் எனப் படும்."

இங்கு அர்ஜுனன் "கண்ணு! இந்த க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரக்ஞனையும் (உடலையும் அதில் உயிர் வாழ்பவனையும்) தெரிந்து கொள்வதால் என்ன பயன்?" என்று கேட்டான். கண்ணன் நகைத்தான். "அர்ஜுனு! என்ன அசட்டுத்தன

மான கேள்வி இது? உடலின் தன்மையை ஆராய்ந்து தெரிந்து கொள்வதால், ஒருவனது துயரங்கள் அழிக்கப் படுகின்றன. உயிரின் தன்மையை ஆராய்ந்து அறிந்து கொள்வதால் பேரின்பம் கிடைக்கிறது. இந்தப் பேரின் பமே மோக்ஷம் எனப்படுகிறது.''

இப்படிச் சொல்லி விட்டுக் கண்ணன் சும்மா இருந் தான். ஆனால், உயர்ந்த பண்புகளுக்கும் தாழ்ந்த வேகங் களுக்கும் இடையே ஏற்பட்ட போர்க்களத்தில் மனித இனத்தின் சார்பில் ஓர் ஆளாக இருந்த அர்ஜுனன் கண்ணனை மேலும் தூண்டினான். ''கண்ணா! துன்பம் அழிவதையும் பேரின்பம் கிட்டுவதையும் உணர்ந்த இவர் கள் யார்? அது உயிரா? அல்லது உடலா? தயைசெய்து விளக்குவாயாக!''

கண்ணன்: ''அர்ஜுனா! இந்த உடலானது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களோடு கூடியிருக்கிறது. இதனால், இந்த உடலோடு ஒட்டி வாழ்கிற உயிரும் அதோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டு, இக்குணங்களின் விளை வான இன்ப துன்பங்களைத் தனக்கே ஏற்பட்டதாக எண்ணு கிறான். உண்மையில் உயிருக்கும் இக்குணங்களுக்கும யாதொரு சேர்க்கையும் கிடையாது. அவன் ஒரு சாட்சியாக மட்டும் இருக்கிறான். இரும்பை நெருப்பில் வைத்தால் அது சுடும் ஆற்றலைப் பெறுகிறது ஆனால் சுடுவது இரும்பல்ல; நெருப்புத்தான். இதுபோல, பிரகிருதியோடு சேர்வதால், தானே செய்பவனாகவும் அதன் பலனை நுகர்பவனாகவும் புருஷன் தோற்றமளிக்கிறான்.

''ஆகையால், குணங்களின் இருப்பிடமான உடலில் வாழ்ந்திருப்பதாலேயே இந்த ஆன்மாவும் இன்ப துன்பங்களை உணர்கிறது என்று நினைப்பது அவ்வளவு சரியன்று. விதை முளைத்து மரமாக வளருவதற்கு உதவிக்காப்பது மண்தான். விதை சரியாக வளராமல் வாடிப்போவதற்கும் இதே மண்தான் காரணம். மண்ணின் குணம்தான் இவ்விரண்டிற் கும் காரணம். இதேபோல் மண் தத்துவமான இவ்வுடலில் ஜீவதத்துவம் பிரம்மதத்துவமாக வளர்ந்து மலருகிறது. நீரும் எருவும் ஒரு மரம் பூத்துப் பழம் தருவதற்கு எவ்வளவு அவசியமோ, அதுபோல, ஓர் உயிர் ஆன்மீகப் பேரறிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலருவதற்கு சத்தியம், சாந்தம், மனவடக்கம், புலனடக்கம் என்பவை மிக அவசியம். பிரகிருதியின் குணங்கள் தான் அதைப் பல்வேறு வடிவங்களை எடுத்துக்கொள்ளும்படி செய்கின்றன.

"இந்த ஒரு விஷயத்தை நினைத்துப்பார்! அப்பொழுது இந்த முழுப்பிரச்னையும் தெளிவாகும். மனிதன் ஒரு நேரத்தில் மகிழ்ச்சியோடு இருக்கிறான்; மற்றொரு நேரத்தில் துன்பத்தில் இருக்கிறான். ஒரு நேரம் மனவுறுதியோடு காணப்படுகிறான்; மற்றொரு நேரம் அச்சத்துக்கு ஆட்படுகிறான். இது ஏன் என்றால் அவன் குணங்களால் அவ்வாறு ஆக்கப்படுகிறான். நீ இல்லை என்கிறாயா? அப்படியானால் இந்த மாற்றங்களை நீ எப்படி விளக்குவாய்? பிரகிருதியின் குணங்கள்தான் அவனை இது போன்று ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றும்.

"ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் சமமான நிலையில் இருந்தால், அப்பொழுது ஒரு மாறுதலும் நிகழாது. இப்படி நடப்பதில்லை. குணங்கள் சமநிலையில் இருப்பதில்லை. இம் மூன்றில் ஒன்று மேலோங்கி மற்ற இரண்டும் அடங்கி இருக்குமானால், அப்பொழுது இந்த *பிரகிருதி* என்ற இயற்கை மனிதனைப் பல உருவங்களை எடுக்கச் செய்கிறது. மனித இயற்கையின் மூன்று அமைவுகளை மூன்று குணங்கள் காட்டி நிற்கின்றன. காட்சிக்குப் பொருளாகும் இந்தப் புறஉலகினைத் துய்க்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தோற்றுவிப்பதும், ஆசைகளை உண்டாக்குவதும் *ரஜோகுணம்* என்ற பற்றுத்தான். புலனின்பங்களையும் மறு உலக இன்பங்களையும் துய்க்கும் ஆசையை இது வளர்க்கிறது.

"தமோகுணம் உண்மையை உணர முடியாது; அதனால் சுலுவாகத் தவறிழைத்து, பொய்யை மெய்யாக எடுத்துக் கொண்டு விடுகிறது. பொய்மையிலும் அசிரத்தையிலும் மனிதனை இது கொண்டுபோய் விடுகிறது. விடுவிப்பதற்குப் பதிலாக இது கட்டிப்போட்டு விடுகிறது.

"ஸத்வகுணம், துன்பத்திற்கும் துயரத்திற்குமுரிய காரணத்தை அடக்கி வைக்கிறது. உண்மையான மகிழ்ச்சியையும் இன்பத்தையும் கொடுக்கும் வழியைப் பின் பற்றுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு மனிதரை இது ஊக்குவிக்கிறது. எனவே இந்த முக்குணங்களால் கவரப்படாது ஒருமுகப்பட்டு இருந்தால் தூய்மைக்கும் உறுதிக்கும் அடிப்படையாகும்.

விளக்கின் கண்ணாடியைச் சுத்தமாய் வைத்திருங்கள். அதன் வெளிச்சம் அப்பொழுது ஒளியுடன் விளங்கும். பல நிறக்கண்ணாடியாக அது இருந்தால், ஒளி மங்கித் தெரியும்: இதெல்லாமல், ஒரு மண் பானைக்குள் விளக்கை வைததால் இருட்டு முன் போலவே தொடர்ந்து இருக்கும். விளக்கு அதேதான்; ஆனால் அதை வைத்திருக்கும் இடம் அதன் ஒளியை மாற்றி விடுகிறது. நல்ல வெண்மையான கண்ணாடி யினூடே தெளிவாக ஒளிரும் விளக்குத்தான் ஸத்வ குணம் ஒளியை மங்கிக் குறைவாக ஆக்குவது ராஜோகுணம் என்ற பல வண்ணக் கண்ணாடி. வெளிச்சம் தர முடியாமல் தன்னுள்ளிருக்கும் விளக்கைத் தடுத்து விடும் மண் பானை தான் தமோ குணம்.

''ஸத்வகுணம்தான் மெய்யான தன்னறிவு. கண்ணாடி யைப் புகைபடியச் செய்து ஒளியை மங்கச் செய்யும் ரஜோகுணம தூசு படிந்ததாகும். இதுதான் விளக்கின் சுடரைக் கலைக்கிறது. அதனால், அச்சுடர் அசையாமல் நின்று எரியாமல் செய்து விடுகிறது. தமோ குணமோ மனிதனின் இயல்பான மெய்யறிவு என்ற ஒளியை அப் படியே அமுக்கி மறைத்து விடுகிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 23

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் பல வேறு வகைகளில் கலந்து கூடி மாறி இவ்வுலகமாகத் தோன்றுகின்றன. ஆகையால் இந்த இயற்கை உலகமானது எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கிறது. நிலையானதன்று. ஆனல், மெய்ப்பொருள் அறிவாகி நிற்பது; ஒளி வடிவமானது. அதனுல் அது குற்றங் குறைகளுக்கோ மாற்றங்களுக்கோ இடமாவதில்லை. இந்த உடல் என்பது பிரகிருதி; அதே போல மனமும் புத்தியும் பிரகிருதியே. எனவே, மேற்சொன்ன முக்குணங்களிடையே ஏற்றத் தாழ்வுகளுக்கேற்ப அவை மாற்றமடையத்தான் செய்யும்

ஸத்வகுணம் என்பது ஒரே சீராக, தூய்மையாக, தன்னலமில்லாமல் ஒளியுடையதாய் இருக்கிறது, இந்த ஸத்வ குணமுடையவர்களுக்குக் குறையோ தேவையோ இருக்காது. அவர்கள் மெய்யறிவுக்குத் தகுதியுடையவர்கள் ரஜோகுணம் படைத்தவர்கள். 'தான்' என்னும் அகந்தையின் வண்ணம் சேர்ந்த செயல்களில் பொருந்தி நிற்பார்கள். பிறருக்கு உதவ வேண்டும் என்னும் துடிப்பு அவர்களுக்கு இருக்கலாம், ஆனல், அந்தத் துடிப்பு அவர்களைப் புகழ் பெற வேண்டும் என்ற முயற்சிக்குத் தூண்டி விட்டு; தங்களது வெற்றிகளைக் குறித்துத் தற்பெருமை கொள்ளச் செய்து விடும். பிறருடைய நலத்தைக் கருதுவதோடு நில்லாமல், தங்கள் சொந்த நலத்தையும் அவர்கள் தேடுவார்கள்.

தமோகுணத்தோடு கூடியவர்கள் அறியாமை என்னும் இருளால் மூடப்பட்டு, நல்லது கெட்டது தெரியாமல் திண்டாடுவார்கள்.

இந்த முக்குணங்களில் ஒன்று கூட உயர் மெய்ப் பொருளை உணர்வதற்குரிய தகுதியைத் தருவதில்லை. மெய்ப் பொருளை உணர்வதனுலல்லவா தனியொரு மனிதன் பரம் பொருளில் கலந்து வீடுபேறு பெறுகின்ருன்! மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகிருதியில் ஊன்றியிருப்பதால் பிரகிருதியை ஆக்குகின்ற குணங்களைத் தானே உணர்வதாகக் கருதிக் கொண்டிருக்கிறான்' ஆனால் இது ஒரு பொய்த் தோற்றமாகும். இந்தப் பொய்த்தோற்றத்தை அழிப்பதற்காக, இயற்கை என்றும் க்ஷேத்திரம் என்றும் அழைக்கப்படுகிற இந்தப் பிரகிருதியினுடைய இயல்பையும் தன்மையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இந்த ஆராய்ச்சியில் முதல் நிலை மாணவர்களுக்கு, அறியப்படுவது என்பது எது, அறிவு என்பது என்ன என்று ஆராய்வது அவசியம். ஆனால் மெய்யறிவு பெற்று விட்டவர்கள் இந்த முக்குணங்களையும் கொஞ்சம் கூடுதலான கவனத்துடன் பார்க்க வேண்டும். அறியப்படுவது என்பது எல்லாவற்றுக்கும் இருப்பிடமாக இருக்கும் பரம்பொருள்தான்:

இதெல்லாவற்றையும் அர்ஜுனன் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். முடிவில் கேட்டான்: இறைவா? மெய்யறிவு பெற்றவன் என்னென்ன சிறப்பியல்புகள் பெற்றிருக்க வேண்டும்?'' கண்ணன்: ' பார்த்தா! அவனுக்கு இருபது குண நலன்கள் நிறைந்து இருக்கவேண்டும். அவை என்னென்ன என்று நீ கேட்கலாம். அவற்றைப் பற்றி நான் உனக்குச் சொல்லுகிறேன் கேள். ஆனால் ஒன்று; இந்த இருபது குணங்களும் இருந்து விட்டால் மட்டுமே உனது இலக்கை நீ அடைந்து விடலாம் என்று எண்ணி விடாதே. உனது குறிக்கோள் மரணமிலாப் பெருவாழ்வு. ''இவை யாவும் பரம்பொருளே'' என்று பரம்பொருளை நேருக்கு நேர் உணர்வதனால் அந்த குறிக்கோளை அடையலாம். அறிவு நிறைவு எய்தும் பொழுது, அறிபவன் அறியப்படும் பொருளாகவே ஆகிவிடுகிறான்.

''இந்த நிறைவிற்காக, குணச்சிறப்புக்களால் ஒருவன் தூய்மை பெற வேண்டும். அப்பொழுது, அறிய வேண்டிய பொருளை அறிந்து மெய்யுணர்வும் தோன்றும் ஆகவே, முதலில் அதைப் பற்றி உனக்குச் சொல்லுகிறேன். நற்குணம் முதலில்; வெற்றி பிறகு. எவ்வளவு உயரிய வழி நெறியும் நலமும் நிறைந்த வாழ்க்கையை முதலில் பெறாமல் மெய்ப்பொருளை உணர முற்படுவது, விளக்கும், திரியும் எண்ணெயும் இல்லாமல் வெளிச்சத்துக்கு ஆசைப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றதுதான். இவை மூன்றையும் முதலில் கொண்டு வாருங்கள், அப்பொழுது இவற்றின் மூலம் நீங்கள் ஒளி பெறலாம். இது போலவேதான், மெய்ப்பொருளுணர் விலும்.''

இங்கு ஒரு விஷயம் மாணவர்களால் கவனத்துடன் குறித்துக் கொள்ளப்படவேண்டும். விளக்கும் திரியும் எண்ணெயும் ஒன்றுக்கொன்று ஓர் அளவுடன் பொருந்தி யிருக்க வேண்டும். விளக்கிற்குத் திரி மிகப்பெரியதாகவோ வெகுசிறியதாகவோ இருந்தாலும், திரிக்கு எண்ணெய் மிகக்கூடுதலாகவோ வெகு குறைவாகவோ இருந்தாலும், எண்ணெய்க்கும் திரிக்கும் விளக்கு மிகப்பெரியதாகவோ மிகச்சிறியதாகவோ இருந்தாலும், விளக்கு பிரகாசமாக எரிந்து நல்ல ஒளியைத் தராது. இம்மூன்றும் ஒரே சீரான அளவில் இருந்தால்தான் சீரான ஒளியுள்ள வெளிச்சம் கிடைக்கும். இதேபோல ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் ஒரே சமநிலையில் இருந்தால்தான் நிறைந்த பலனான முக்தி பெறமுடியும். இந்த முக்குணங்களும் நம்மைப் பிணிக்கும் தளைகள் ஒரு மாட்டின் முன்கால்களும் பின்கால்களும், கழுத்தும் கொம்புகளும் கூட கட்டப்பட்ட டிருப்பதைப்போல, மனிதன் இக்குணங்களால் கட்டப்பட் டிருக்கிறான் (குணம் என்ற வடமொழிச் சொல்லுக்கு இயல்பு என்ற பொருளும் உண்டு. கயிறு என்ற மற்றொரு பொருளும் உண்டு என்பது இங்குக் கவனிக்கத்தக்கது). இம்மூவகையான குணங்களும் இத்தகைய மூவகைத் தளைகளேயாகும். இப்படிக் கட்டப்பட்ட ஒரு பிராணி, பாவம்! எப்படி இச்சைப்படி நகரமுடியும்? ஸத்வ குணம் தங்கத்தலான கயிறு; ரஜோகுணம் செம்பாலான கயிறு; தமோகுணம் இரும்பினாலான கயிறு. ஆனாலும் இவை எந்த உலோகத்தால் செய்யப்பட்டிருந்தாலும் எல்லாம் மொத் தத்தில் கயிறுகள்தான். அதனால் அவை நன்றாகக் கட்டிப் போட்டு விடுகின்றன. கட்டுக்கள் என்ற வகையில், இச்சைப்படி போய் வருவதற்கு இவை தடையாக இருக் கின்றன.

அர்ஜுனன் ''இறைவா! மெய்யறிவைப் பெறுவதற்கு இருபது சிறப்பியல்புகள் வேண்டும் என்று சொன்னாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை என்னென்ன? கொஞ்சம் விரிவாக அவற்றை எனக்கு விளக்கவேண்டும்'' என்று கேட்டான்.

அதற்குக் கண்ணன்: ''அர்ஜுனு உன்னுடைய ஆர்வத்தைப் பார்த்து நான் மகிழ்கிறேன். கேள், முதலாவது குணநலம் அடக்கம். கர்வம் உள்ளவரையில் ஒருவர் உண்மை யான அறிவைப் பெறமுடியாது. மனிதனுடைய நடத்தை தண்ணீரின் நடத்தையைப் போல் இருக்கவேண்டும். எந்த ஒரு நிறத்தைத் தண்ணீரில் ஏற்றினுலும் அந்த நிறத்தை அது ஏற்றுக் கொள்கிறது தன்னுடைய நிறத்தைக் காண்பித்துக் கொள்வதில்லை. ஆணவமில்லாமல் அடக்கமாக இருக்கிறது தண்ணீர். ஆனுல் மனிதனின் நடத்தை இதற்கு நேர் மாருக இருக்கிறது. ஒரு சிறு உதவி செய்தாலும், சிறு தொகையை அளித்தாலும், அது எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்று அவன் கவலைப்படுகிருன். இதற்காக தானே தன்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டு திரிகிருன்; அல்லது செய்திகளாக அவை அச்சாகும்படி ஏற்பாடுகள் செய்கிருன். இத்தகைய பேராசையும் தற்பெருமையும் இல்லாமலிருப்பதுதான் அடக்கம் (அமானித்வம்) என்று கூறப்படுகின்றது.

''இனி; இரண்டாவது குணநலனைப் பார்ப்போம். பகட்டில்லாமை (அதம்பித்வம்) இது மனிதனுக்கு இருக்க வேண்டிய பெருங் குணநலனுகும், பாசாங்கு செய்யாமல், ஆடம்பரமில்லாமல் இருக்க வேண்டும். சிறியவனுக இருந்து கொண்டே பெரியவனுகத் தன்னைப் பீற்றிக் கொள்ளுதல், தன்னுல் ஒன்டும் கையாலாகாதபோதும் எல்லாம் செய்து முடிப்பவன் என்று போற்றிக் கொள்ளுதல், அதிகாரம் ஒன்றுமே இல்லாமலேயே அது இருப்பதாக நடித்தல் என்ப தெல்லாம் இல்லாமல் இருப்பதுதான் அதம்பித்வம் என்ற பகட்டில்லாமை.

இந்த இடத்தில் இதைப் படிப்பவர்கள் ஒன்று கவனிக்க வேண்டும். இன்று உலகம்பொய்யான நடிப்பும், போலித்தன மும் நிறைந்ததாக இருக்கிறது. எந்த நடவடிக்கையை நீங்கள் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும், இந்தப் பெருங் குறையை நீங்கள் கண்டு கொள்ளலாம். செல்வாக்குக்கும் ஆணைக்கும் தகுதியிருப்பதாக நாடகமாடும் மனிதரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலே உலகத்து அரசுகள் சிக்கியிருக்கின்றன. அறிவு இல்லாதவர்கள் அறிஞர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்கிறார்கள். தம் வீட்டிலேயே உதவ ஒருவருமில்லாத இவர்கள், தங்களைப் பெருந்திரளான மக்கள் பின்பற்றுகிறார்கள் என்று சத்தியம் செய்கிறார்கள்.

எந்தச் செயலிலும், இந்தப் போலித்தனம்தான் முதற் படியாக இருக்கிறது. பயிரை அழிக்கும் பூச்சியைப்போல, இது மனிதனைப் பல துறையிலும் அழித்து விடுகிறது. இந்தப் போலித்தனத்தை ஒழித்துவிட்டால், உலகத்தைப் பெரும் விபத்திலிருந்து காக்கலாம். வெறும் வெளிவேஷம் இந்த உலகத்தையும் இழந்து மறுமையும் இழக்கச் செய்து விடும். இது எல்லாநேரத்திலும் எல்லா இடத்திலும் தீமை பயப்பதாகும். இது சாதாரண மக்களுக்கே சரிப்பட்டு வராது என்றால், ஆன்மீகத் துறையில் பயிற்சி பெறும் மாணவனுக்கு இது எப்படி நன்மையாக இருக்கும்?

''மூன்றாவது குணநலன் அஹிம்சை இதுவும் ஒரு முக்கியமான சிறப்பியல்பு. பிறரை வருத்துவது ஏதோ உடலை மட்டும் பொறுத்தது அல்ல. அது இன்னும் ஆழமான பொருளுடையது. சொல்லாலும் செயலாலும் நாம் பிறருக்கு ஏற்படுத்தும் மனத்துன்பம், கவலை, பயம் இவை கூடப் பிறரை வருத்துவதைச் சேர்ந்தவைதான். பிறருக்கு உடற்றுன்பத்தை உண்டாக்காமல் இருப்பது மட்டும் அஹிம்சை ஆகாது. நீங்கள் செய்யும் செய்கைகள் பிறருக்குத் துன்பம் தரக்கூடாது. தன்னலமில்லாதவையாக இருக்க வேண்டும். பிறருக்குத் துன்பத்தைத் தரும் எந்த நோக்கமும் இல்லாமல் உங்கள் எண்ணமும் சொல்லும் செயலும் தூயவையாக இருக்கவேண்டும்.

''க்ஷமை அல்லது பொறுமை நான்காவது குண நலனாகும். பிறர் உங்களுக்குச் செய்யும் தீங்கினை, அவர்களினால் உங்களுக்கு ஏற்படும் நஷ்டங்களை, அவர்கள் உங்களிடத்தில் காட்டும் வெறுப்பை பொய் என்று நினையுங்கள் என்பது இதன் பொருள். கானல் நீரைப் பொய் என்று தள்ளுவதுபோல, இவற்றையும் கருதுங்கள். அந்த அளவுக்குப் பொறுமையையும் உறுதியையும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறர் உங்களுக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தீங்குகளை வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொள்வதில்லை இது. உங்களால் திருப்பி அடிக்க முடிய வில்லை என்பதனால் உண்டான பொறுமை அன்று இது. இதயத்துள் ஆட்சி செய்யும் அமைதியின் வடிவம் இந்தப் பொறுமை. பெரும்பாலான மக்கள் பிறர் தமக்குச் செய்யும் தீங்கினை, உடல் வலிமையில்லாததாலோ, பணத்தின் பலமில்லாததாலோ, பொது மக்கள் ஆதரவு இல்லாததலோ பொறுத்துக் கொள்ளுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களது பொறுமை உண்மையானது என்று பாராட்ட முடியாது.

"அடுத்து ஐந்தாவது குணநலனைப் பார்ப்போம். இது நேர்மை எனப்படும். சொல்லும் செயலும் சிந்தனையும் ஒன்றாக இருப்பதுதான் நேர்மை. இது உலகத்து வாழ்க்கைக் கும், ஆன்மீக வாழ்க்கைக்கும் பொருந்தும்; இரண்டாவ தாகச் சொன்ன பகட்டின்மையின் ஒரு பட்டையாகும் இது

"ஆசாரியனை வணங்குதல் ஆறாவது. இது ஆசாரியனுக்கு அடிமை செய்தலாகும். இது சீடனிடத்தில் அன்பை வளர்க்கும். அதனால் அவனுக்குப் பெருத்த நன்மை உண்டாகும். ஆனால் தனக்கு என்று ஓர் உயர்ந்த குறிக்கோளில்லாத ஆசாரியன் தனது சீடனை எளிதாக அழிவுக்கு இட்டுச் சென்றுவிடுவான். தாய்ப்பசு தன் இளங் கன்றுக்குப் பால் கொடுப்பது போல, ஆசிரியனும் தனது சீடனுக்குத் தானாகவே நிறைய தனதருளைப் பொழிய வேண்டும் இறைவனை அடைந்து முத்தி பெறுவதற்கு ஆசிரியனுடைய அருள்மொழிதான் மூலமாகவும் காப்பாக வும் இருக்கின்றது

"தூய்மை என்பது ஏழாவது குணநலன். புறத்தூய்மை மட்டுமன்று; அகத்தூய்மையும் கூட. அகத்தூய்மை என்பது என்ன? விருப்பு வெறுப்பின்மை, ஆசையும் அதிருப்தியும் இன்மை. காமமும் கோபமும் இன்மை: தெய்வீகமான தன்மைகளும் இவைகாம் நீர் உடலைத் தூய்மையாக்கு கிறது; உண்மை மனத்தைத் தூய்மையாக்குகிறது. அறிவு சிந்தனையைத் தெளிவாக்குகிறது. தவத்தினாலும் ஒழுக்கத் தினாலும் மனிதன் தூய்மை பெறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உறுதி என்பது எட்டாவது குணநலனாகும். இது ஊன்றிய நம்பிக்கை; இங்கும் அங்கும் அலையும் சபல புத்தியில்லாமலிருத்தல். தனது நம்பிக்கையை வைத்துவிட்ட ஒன்றில், அது தனது ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்று அதை உறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். ஒரு குறிக்கோளிலிருந்து இன்னொரு குறிக்கோளிற்குத் தாவிக்கொண்டே இருக்கக்கூடாது. இலட்சியத்தை நாளுக்கு நாள் மாற்றிக் கொண்டே இருக்கக்கூடாது. இந்த உறுதிதான் தீக்ஷை எனப்படுவது சபலபுத்தி நாவில் பிறப்பது இந்த நலிவு வெகு எச்சரிக்கையுடன் தவிர்க்கப் படவேண்டும்.

''புலனடக்கம் என்பது ஒன்பதாவது குணநலன் உங்களுடைய தலையாய நலன்களை உங்களது புலன்கள் வளர்க்க வேண்டுமே யல்லாது. அந்தப் புலன்களின் நலன்களுக்காக நீங்கள் உழைக்கக் கூடாது என்று உறுதியாக நம்புங்கள் புலன்களுக்கு அடிமையாகாதீர்கள் மாறாக அவற்றை உங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ளுங்கள்.

''அடுத்து பற்றின்மை என்பது பத்தாவது குணநலனாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனபவற்றில் பற்றை விடுவது. பொறிகள் இவற்றை நோக்கி ஓடுகின்றன. ஏனெனில், அவை புலன்களுக்கு இன்பமூட்டித் தற்காலிகமாக ஒரு மகிழ்வை உண்டு பண்ணுகின்றன. ஆனால் இப் புலன்கள் அறம், பொருள், இன்பம, வீடு என்ற உயர்ந்த பேறுகளில் ஈடுபாடு கொள்வதில்லை மிக உயர்ந்த பேற்றை விரும்பி நாடுவதன் மூலந்தான் மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்ள முடியும்

''ஆணவமில்லாத நிலை பதினொன்றாவது தண நலனாகும் எல்லாக் குற்றங்களுக்கும் தீய ஒழுக்கங்களுக்கும் ஆணவமே விளை நிலமாகிறது தன்னையே பெரிதாக எண்ணும் ஒரு மனிதன் நல்லது தீயது முறையானது தவறானது தெய்வீகமானது கொடியது என்பவற்றையெல்லாம் பார்க்கமாட்டான் அவற்றைப் பொருட்படுத்தமாட்டான்; அவற்றைப் பற்றி அவன் ஒன்றும் அறியவும் மாட்டான்- அறத்தையும் ஒழுக்கங்களையும் பற்றிய மட்டில் அவன் முற்றும் அறிவிலியாக இருக்கிறான். நீதிக்கு அவன் உடன்படமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொடிய நச்சுக் குணம் இல்லாதிருக்க வேண்டுமானால் ஆணவமில்லாமல் இருக்க வேண்டும். ஆணவம் என்பது நண்பனுடைய வடிவில் இருக்கும் பகைவன்.

''அடுத்து பிறத்தல். இறத்தல், முதுமை, பிணி இவற்றில் ஏற்படும் துன்பத்தைத் தெரிந்து கொள்ளுதல். (1) தவிர்க்கமுடியாத பிறப்பிறப்பு, (2) முதுமையும் பிணியும், துன்பமும் தீங்கும் படைக்கப்பட்டிருக்கும் இந்த உலகத்தின் நிலையாமை. (3) இதில் நமது வாழ்க்கை — இவற்றை நன்ருக உணர்ந்திருப்பதுதான் இது. தங்களுக்கும் பிறருக்கும் இவை நேருவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாலும், இவற்றின் காரணத்தை மனிதர் ஆராய்வதில்லை; இவற்றிலிருந்து மீள்வதற்குரிய வழியையும் அறிய முற்படுவதில்லை. இதுதான் பெருவியப்பு; பெரிய மர்மம்.

''நீங்கள் மட்டும் இந்தப் பிரச்சனையின் வேரை நன்ருக ஆராய்ந்தால், எதிலிருந்து தப்பினுலும் மரணத்திலிருந்து தப்பமுடியாது என்பதை உணர்வீர்கள். இன்பம் என்று இப்பொழுது மனிதன் நினைத்துக் கொண்டிருப்பது உண்மையில் இன்ப வேடத்தில் இருக்கும் துன்பம்தான் எனவே, இவற்றின் உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்; உங்களை மயக்கச் செய்யும் சிந்தனையிலுள்ள பிழைகளை எண்ணிப்பாருங்கள். அப்பொழுது இதன் பயனுக, பற்றின்மை வலுப்பட்டு மெய்யறிவு உண்டாகும். ஆகையினுல் அர்ஜுனு! பிறப்பிலிருந்தும் இறப்பிலிருந்தும், முதுமையிலிருந்தும் பிணியிலிருந்தும், துயரத்திலிருந்தும் உன்னை விடுவித்துக் கொள்'' இவ்வாறு கண்ணன் அர்ஜுனனிடத்தில் மிகுந்த வாஞ்சையுடன் அவனைத் தூண்டும் முறையில் பேசினுன்.

பின்னர், பொருள்களுக்கு ஆசைப்படுவதை விட வேண்டும் என்று அஞஸக்தியைப் பற்றிச் சொன்னுன் கண்ணுக்குத் தென்பட்டதையெல்லாம் அடைய வேண்டும் என்ற பேராசை ஆணவத்திலிருந்து பிறக்கிறது. ''நான் இதை அடைவேன்'', 'இந்தஉயர்ந்த பொருளைச் சொத்தாக உடைய பெருமை எனக்கு வேண்டும்' என்று இதுபோல ஆணவம் உங்களைத் தூண்டும். ஆசைப் பொருள்களோடு உங்களைப் பிணிக்கும் உறுதியான கயிறு அது. அதிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தை விடுவித்துக் கொண்டு எல்லாவற்றையும் கடவுளுடைய பெருமையின் வடிவங்களாகப் பாருங்கள். எல்லாவற்றையும் இறைவனுடைய பெருமையின் வடிவங்களாக எண்ணி அன்பு செலுத்துங்கள். ஆனால், அவற்றைச் சொந்தமாக்கிக் கொளவதனால் உங்களுக்கு மகிழ்ச்சி கிட்டுமென்று நினைத்து ஏமாறுதீர்கள் அது ஒரு மாற்று வேலை. உங்களது வாழ்க்கையை அவற்றிற்குப் பணயமாக்காதீர்கள். தேவைப்படும் பொழுது, உங்களது தேவைக்கேற்ப அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், அவ்வளவுதான் எல்லாவற்றையும் தனதாக்கிக் கொண்டுவிட வேண்டும் என்ற இது போன்ற துடிப்பு, விடுதலைக்குரிய வளர்ச்சிக்குப் பெரும் தடையாகும். உங்கள் சொத்தாக நீங்கள் சேர்க்கும் எதையும் ஒரு நாளைக்கு வீட்டுவிட வேண்டியதுதான் உங்களுடைய இறுதிப் பயணத்தில் ஓரு பிடி மண்ணும் ஒரு புல்லின் இலையும் கூட உங்களால் எடுத்துச் செல்ல முடியாது இந்த உண்மையை எப்பொழுதும் நினைவில் வைத்திருங்கள் அப்பொழுது நீங்கள் மெய்ப்பொருளை உணரலாம்.

பிறப்பதற்கு முன்னும், இந்த உலகத்தோடு அதிலிருக்கும் பொருள்களோடும் ஒருவனுக்குத் தொடர்பு கிடையாது. இறந்தபின், அந்தப் பொருள்களும், உற்றார் உறவினரும் மறைந்து விடுகிறார்கள். இவ்வுலக வாழ்வு என்பது இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலே நடிக்கப்படும் நாடகம். இந்த மூன்று நாள் நாடகத்தில் மயங்கி நிற்பது அறியாமையாகும். ஆசைகள் மனிதனின் மனத்தைக் கலக்கி உயர்ந்த பணிகளுக்குத் தகுதியற்றவனாக அவனை ஆக்கி விடுகிறது. விடுதலையையும் மெய்யுணர்வையும் நாடுபவர்கள் ஆசைகளை துறந்து விடவேண்டும். ஏனெனில் பிசுக்கைப் போல் அது ஒட்டிக் கொள்ளும். ஒரு தடவை ஒட்டிக்கொண்டால் அதை நீங்குவது மிகவும் கடினம்.

இதன் பிறகு சமநிலை என்ற இன்னொரு குணநலனையும் நாம் கவனிக்க வேண்டும். இன்ப துன்பங்களிலும், வளமையிலும் வறுமையிலும் தளராத அமைதியாகும் இது. இது ஒரு மெய்யறிவாளனின் பதினைந்தாவது குணச்சிறப்பாகும். வெற்றி தோல்வி, லாப நஷ்டம், புகழ்ச்சி இகழ்ச்சி இவற்றினால் மகிழ்வதோ மாய்ந்து போவதோ வீண் செயல்

எல்லாவற்றையும் அவனது அருள் என்று சமமாக ஏற்க வேண்டும். முள் நிறைந்த வழியில் நடப்பதற்குக் காலணிகள் அணிவது போல, மழையில் நனையாமலிருப்ப தற்காகக் குடைபிடித்துக் கொள்வது போல, கொசுக்கடி யிலிருந்து தப்பக் கொசுவலை கட்டிக் கொண்டு தூங்குவது போல, இறைவனது அருளை உறுதியாக நம்பிக் கலங்காத மனத்தைக் காப்பாக அணிந்து, புகழ்ச்சி இகழ்ச்சி, வெற்றி தோல்வி, இன்ப துன்பம் இவற்றைச் சமநிலையோடு பொறுத்துக் கொள்ளுங்கள் வாழ்க்கையில் வீரத்துடன் போராடுவதற்கு, இந்தச் சமநிலை மிகவும்தேவையானதாகக் கூறப்படுகிறது.

அடுத்து இறைவனையன்றி வேறொன்றையும் நினையாத வேறொன்றையும் உணராத பக்தி (அனன்ய பக்தி) துயர் வந்துற்ற போது, கடவுளைத் தேடி ஓடுகிறீர்கள். சங்கடம் உங்களை மீறும் பொழுது, வெங்கடேசப் பெருமானிடம் தஞ்சமடைகிறீர்கள். அந்தச் சங்கடம் நீக்கி விட்டால், அவனைத் தூக்கி எறிந்து விடுகிறீர்கள். காய்ச்சலினால் படுக்கையாகி, சுவைகள் மறந்து, நாக்குக் கசக்கும் பொழுது ஏதாவது உறைப்பான ஊறுகாய் சாப்பிடமாட்டோமா என்று ஏங்குகிறீர்கள். காய்ச்சல் நீக்கிப் பழைய நிலையை அடைந்து விட்டால் அதே ஊறுகாயை நீங்கள் விரும்புவ தில்லை. பக்தி என்பது ஏதோ ஒரு அவசரத்திற்குச் சாப்பிடும் மருந்தல்ல. வேறொரு எண்ணமும் உணர்வும் குறுக்கிடாமல் இறைவனை இடையறாது நினைத்திருத்தல்தான் பக்தியாகும்.

எந்தச் செயலாயினும், பொழுது போக்காயினும் பேச்சாயினும், அது இறைவன்பால் அன்பினால் ஊற வேண்டும். அதுவே அனன் பக்தி

இதையடுத்து வருவது தனிமையில் இருத்தல், தனித் திருக்க ஒருவன் விரும்ப வேண்டும். மனிதர் வாழுமிடங்களி லிருந்து வெகு தொலைவில் போய் இருக்க வேண்டும். என் பது பொருளல்ல தனிமையும் அமைதியும் மனத்தில் இருக்க வேண்டும். மனதில் குடியிருக்கும் எல்லாவற்றையும் தாமே வெளியேறும்படி வழிசெய்ய வேண்டும். அல்லது வலுக்கட்டாயமாக வெளியேற்ற வேண்டும். புற உலகத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து மீண்டு, ஒரு நினைப்புமின்றி மனது அமைய வேண்டும்.

இதை அடுத்த, குணநலனுக் கூட்டங்களை விலக்குகல் சொல்லப்படுகிறது. இது மெய்யறிவைப் பெறுவதற்கு உதவி செய்கிறது இது மனிதர் கூட்டமாக இருக்கும் இடங்களைத் தவிர்த்தல் அதாவது. உலகத்து வியஹாரங்களில் ஆழ்ந்து போயிருக்கும் மனிதரோடு கலப்பதற்குரிய ஆசையற்றிருத்தல். காட்டு விலங்குகளுக்கு நடுவிலும் ஒருவன் அமைதியுறலாம். ஆனால் உலகத்து வழக்குகளில அமிழ்ந்து போயிருக்கும் மனிதருக்கு நடுவில் அந்த அமைதியைப் பெறுவதரிது. ஒருவனுடைய சேர்க்கைகளினால் பயிற்சி பாதிக்கப்படும். நல்லவர்கள் உங்களை நல்வர்களாக இருக்கச் செய்கிறார்கள்: கெட்டவர்கள் உங்களைக் கெடுதலுககு இழுத்துச் சென்று விடுகிறார்கள்.

ஆனால் யார் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் என்று இனங் கண்டு, நல்லவரிடத்துப் போய்ச் சேருவது என்பது கடினம்தான். அதனால், மக்கட் கூட்டத்தையே தவிர்த்து தவத்திலேயே மனத்தைச் செலுத்துதல் நலலது.

கடைசியாக, இருபதாவது குணநலன் எல்லாவற்றுக்கும் பொதுவாக, எங்கும் இருக்கிற தலையாய தத்துவத்தை உணர்தல், இதைப் பெற முயல வேண்டும். ஆன்மீகத் துறையில் பயிலுபவர்கள் நீக்கமற நிறைநத உண்மைப் பொருளை அறிய விரும்பும் தீவிரமான அவா உடையவர்களாக இருக்க வேண்டும்.

மேற்சொன்ன இருபது குண நலன்களில் ஏதேனும் இரண்டு அல்லது மூன்றை மட்டும் பெறுவதற்கு மனமார்ந்த முயற்சிகள் செய்யப்பட்டால், மற்றவையெல்லாம் தானே வந்து சேரும். அவற்றைப் பெறுவதற்குத் தனியாக ஒரு முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. இந்தப் பாதையில் முன்னேறும் பொழுது. இந்த இருபது குண நலன்கள் மட்டு மன்று. இன்னும் பல நலன்களையும் பெறலாம். இருபது மட்டுமே சொன்னது எதற்காக வென்றால், அவை மிக முக்கியமானவை என்பது தான் காரணம்; வேறொன்று மில்லை இந்தக் குண நலன்களின் அடிப்படையில் எழுந்த பயிற்சி ஒருவரை அவரது இலட்சியத்துக்க்கு எளிதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டுச் செல்லும். அதனுல் தான் கண்ணன் இவற்றை வற்புறுத்திச் சொன்னுன்.

இவற்றின் உதவியோடு ஒருவன் மெய்ப் பொருளை உணரலாம். இதில் ஐயமே வேண்டியதில்லை. ஏனெனில் இவை, உடலும் புலன்களும் அறிவும் உள்ளுணர்வும் பிரகிருதியோடு சேர்ந்தவை என்னும் அறிவைக் கொடுக்கின்றன. இவற்றினின்றும் வேருனது மெய்ப்பொருள் இவற்றையெல்லாம் அறிவது அது. மெய்ப் பொருளையும் ஜடப்பிரகிருதியையும், க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரக்ஞனையும் பிரித்து அறியும் ஆற்றல் பெற்றவன்தான் ஒரு சாக்ஷியாக மட்டும் நின்று, ஆசையும் பாசமும் நீங்கியவனுகிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 24

எல்லாவற்றிற்கும் சாட்சியாக விளங்கும் ஒரு மெய்ப் பொருளை உணர்வதுதான் தன்னையறிவதன் ரகசியமாகும். ''என்னுடைய உண்மையியல் நானே'' என்றோ, ''என்னை யறிந்தேன்'' என்றோ, ''எல்லாம் ஒரே பொருளே'' என்றோ ''தனி உயிரும் பரம்பொருள் வெவ்வேறல்ல என்று உணர்ந் தேன்'' என்றோ பெறும் பேரறிவுதான் தன்னறிவு ஆகும். இது ஒவ்வொருவரும் தனக்குத்தானே தெரிந்து கொள்ள வேண்டியது இதைத் தெரிந்து கொள்ளாமல் வெறுந் துறவு பூணுவது நேரத்தையும் வலிவையும் வீணாக்குவ தாகும். மனிதன் வெறும் விலங்கல்ல. அவனிடத்திலே இறைமையின் ஒளி தங்கியிருக்கிறது அதை அணைந்து போக விடக் கூடாது.

ஏன், புலன்கள் தொழிற்படும் பொழுது கூட உள்ளிருக்கும் மெய்ப்பொருளினால் அவை தூண்டப்பட்டுத் தான் அவை இயங்குகின்றன சூரியன் உதிக்கும் பொழுது பறவைகள் கூண்டை விட்டுச் சிறகடித்துப் புறப்பட்டுப் பறந்து செல்கின்றன. மலர்கள் பூக்கின்றன. மனித சமுதாயம் பல்வேறு தொழில்களைச் செய்யத் தொடங்கு கிறது. ஆனால் சூரியனோ இதெல்லாவற்றிலும் நேராகப் பங்கு கொள்ளுவதில்லை இவற்றைத் தூண்டுகிறது; அவ்வளவுதான். சூரியன் நேரான காரணமல்ல. அது ஒரு தூண்டுகோள், சாக்ஷி, பார்வையாளர். அது இதெல்லா வற்றிற்கும் மேலேயும் கடந்தும் இருக்கிறது. மனிதனையோ, விலங்கையோ, பறவையையோ மலரையோ நம்பி அது இல்லை. இவைகளெல்லாம் இல்லாவிட்டாலும் அது இருக்கும்.

பறவைகள் வானத்தில் பறக்கின்றன. ஆனால் அவைகள் பறந்து செல்லும் பாதையில் சுவடுகளைப் பதித்துச் செல்லு வதில்லை. இதே போல, இதய வெளியில் எத்தனை எத்தனையோ புலனுணர்வுகள் பறந்து சென்றாலும், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடும் அங்கு படிவதில்லை. அவைகள் வந்து போவதால் அதிலே ஒரு மாறுதலும் உண்டாவதில்லை.

ஆனால் மனிதன் மேற்கட்டடத்தை மட்டும்தான் பார்க்கிறான்; அடித்தளத்தைப் பார்ப்பதில்லை. ஒரு பூமாலையில் பூக்களை ஊடுருவித் தொகுத்து நிற்கும் நாரை யாரும் கவனிப்பதில்லை. கூர்ந்து நோக்கிப் பார்த்தால்தான் நார் இருப்பது தெரியும். நார்தான் ஆதாரம். அதனால்தான் பூக்கள் கோக்கப்பட்டுச் சிதறி விழாமல் முழு மாலையாகின்றன.

இதை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு இன்னொரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். பானையும் சட்டியும், குடமும், கூஷாவும், எல்லாம் களிமண்ணால் செய்யப்படுவை இவையெல்லாவற்றிலும் களிமண் இருந்தாலும், அது எப்பொழுதும் களிமண்ணாக இருக்கிறதே தவிர பானையாகவோ சட்டியாகவோ மாறிவிடுவதில்லை. இது போலவே மெய்ப்பொருளும். அது எந்த உருவிலே வரினும், அந்த உருவாக அது மாறிவிடுவதில்லை. குணம்குறிகளோடு மெய்ப்பொருளை ஒன்றாக எண்ணி மயங்கி விடக் கூடாது களிமண்ணினால் செய்யப்பட்ட சட்டி, பானை எல்லாவற்றிலும் களிமண் ஒன்றுதான் மெய் என்பதைப் போல, எல்லா உருவங்களிலும் பெயர்களிலும் ஆத்மா என்ற மெய்ப்பொருள் ஒன்றேதான் உண்மை இத்தகைய ஆராய்ச்சியினால் எல்லாவற்றிலும் உட்பொருளாகவும் அடிப்படையாகவும் உள்ளது மெய்ப்பொருள்தான் என்ற எண்ணம் உறுதிப்படுத்துகிறது.

அப்பொழுது, அர்ஜுனன் கண்ணனைப் பார்த்துக் கேட்டான் 'எல்லாவற்றிற்கும் அடிப்படையான, எல்லாவற்றிற்குள்ளும் மெய்ப்பொருளாக இருக்கின்ற அந்த ஆத்மாவை அறிவது மிகவும் கடினம். அது எங்கும் நிறைந்திருக்கிறது; ஆனாலும் எவ்விடத்தும் கண்ணுக்குத் தெரிவதில்லை. அது எல்லாவற்றிலும் உட்தத்துவமாக இருக்கிறது. ஆனால் அதை எந்த விதத்திலும் தொட்டுப் பார்க்க முடியாது. இதன் ரகசியம் என்ன;''

கண்ணன் சொன்னான்: ''அர்ஜுனா! நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மெய்ப்பொருள் என்பது மிக நுண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கும் நுண்ணியது. அதனால் அதை அறிவது மிகக்கடினம் மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்து மூலப் பொருள்கள் என்பது தெரியுமல்லவா? இவற்றுள் அடுத் தடுத்து வரும் மூலப்பொருள் அதற்கு மூன் வரும் பொருளை விட நுட்பமானது. மண்ணுக்கு ஐந்து இயல்பு களுண்டு; ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்று' நீருக்கு நாற்றத்தைத் தவிர மற்றவை உண்டு. தீக்கு ஒலி, ஊறு, ஒளி மூன்று இயல்புகள் உண்டு. காற்றுக்கு ஊறும் ஒலியும், இரண்டு இயல்புகள் உண்டு. கடைசியான ஆகாயத்திற்கு ஒலி என்ற ஒரே இயல்புதான் உண்டு. இதனால் இவற்றுள் அடுத்தடுத்துவரும் ஒவ்வொன்றும் அதற்கு முன் இருப்பதை விட நுட்பமானது; பரப்புடையது. ஆகாயம் எல்லாவற்றை யும் ஊடுருவி நின்று எங்கும் நிறைந்திருக்கிறது. ஏனெனில் அதற்கு ஒரே ஒரு இயல்பு தான் இருக்கிறது. அப்படி யானால் ஓர் இயல்புமில்லாத, குணமொன்று மில்லாத மெய்ப்பொருள் எவ்வளவு நுட்பமாக இருக்க வேண்டும்! எவ்வளவு மிக நுண்ணியதாக எல்லாவற்றிலும் கரந்து, எங்கும் பரந்து. அது இருக்க வேண்டும்! புறநோக்குள்ள வர்கள் இந்த நிகழ்வைப் புரிந்து கொள்ள முடியாது. அகநோக்குள்ளவர்கள் தாம் இந்தப் புதிருக்கு விடைகாண முடியும்.

''பொருள்களை நன்கு ஆராய்ந்து பார்க்கின்றவர்களுக் குத்தான் நம்பிக்கை ஏற்படும். கடவுள் எங்கும் இருப்பது உண்மையானால் அவரை நாம் ஏன் பார்க்க முடியவில்லை என்று சமய சந்தர்ப்பமில்லாமல் சதா குறைத்துக் கொண்டி ருப்பவர்களுக்கு இது ஒரு மரண அடி. சின்னஞ் சிறிய கணக்குகளை வைத்து அவரை இந்த மனிதர்கள் அளக்கப் பார்க்கிறார்கள் இவற்றைத் தவிரக் கடவுள் என்று ஒருவர் இருப்பதாக இவர்கள் நம்பவில்லை. இது பரிதாபத்துக் குரியது. இவர்களது எண்ணங்கள் எவ்வளவு கீழான வையோ அவ்வளவு கீழானவர்கள்தாம் இவர்கள். இது தான் தவிர்க்க முடியாத நியதி நீங்கள் எவ்வளவு தூரம் இறைவனுக்கு அருகில் இருக்கிறீர்களோ அவ்வளவு அருகில் தான் அவன் உங்களிடமிருந்து நிற்கிறான். நீங்கள் விலகிப் போனால் அவனும் விலகிப் போகிறான் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களில் இந்த உண்மைக்குரிய நல்ல உதாரணங்கள் சில உண்டு. இரணிய கசியு எல்லாப் பொருள்களிலும் கடவுளைத் தேடி, அவன் எங்கும் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான். இதற்கு நேர் எதிராக தேடுமிடமெல்லாம் இறைவனைக் காணலாம் என்று பிரஹலாதன் சொன்னான். இதனால், பிளக்க முடியாத படி கடினமான இரும்புத் தூணிலிருந்து இறைவன் தோன்றினான். பிரஹலாதன் இறைவனுக்கு அண்மையில் இருந்த படியால் இறைவன் அவனுக்கு அண்மையிலிருந்தான்

பசு தனது மடியில் புனிதமானதும் ஊட்டம் தருவதுமான பாலைத் தாங்கியிருக்கிறது. ஆனால் இது தெரியாமல் கஞ்சியைத் தேடி அது ஓடுகிறது! இதுபோலத்தான் தனனுடைய சொந்தத் தன்மையாக இருக்கும் மாதவனை மனிதன் அறியாதது மட்டுமல்ல; மனிதனது உண்மைத் தத்துவமாக இருக்கும் அவனை கண்டு கொள்வதற்கு முயற்சி கூடச் செய்வதில்லை. இதற்கு மாறாக, குற்றமுள்ளதும் மயங்குவதுமான புலன்களைக் கொண்டு, அழியக்கூடிய பொருள்களிலிருந்து பெறும் கீழ்த்தரமான இன்பங்களை நோக்கி ஓடுகிறான் எவ்வளவு பெரிய தவறு இது!

பன்மையான தோற்றங்களில் கிறங்கி மகிழ்வது அறியாமையாகும். ஒருமையைக் காணுவது அறிவு. உண்மையைப் பொறுத்த வரையில் 'இறந்துவிட்டவர்கள்'' தான் பலபடியான தோற்றங்களைப் பார்க்கிறார்கள். இவர்கள் சவம். இதற்கு மாறாக, தோற்ற மயக்கங்களிலும் ஒருமையைப் பார்க்கிறவர்கள் தெய்வீகப் பார்வையுள்ள சிவம். அறியப்படவேண்டியது என்றும், ஆன்மா என்றும் க்ஷேத்ரக்ஞன் என்றும், பரப் பிரம்மம் என்றும். அழைக்கப் படுவது இந்த ஒரு பொருள்தான். இதை உணர்ந்து பேரின்பம் பெறும் பொருட்டு அர்ஜுனனுக்கு இது உபதேசிக்கப்பட்டது.

அன்பர்களே! ஆறுகளெல்லாம் கடலைக் குறிவைத்து ஓடுவதுபோல உயிர்களெல்லாம் பரம்பொருளைக் குறியாகக் கொண்டுள்ளன அறிவு படைத்த உயிரினால் உலகத்துப் பொருள்களின்றும் நிலைத்த இன்பத்தைப் பெற முடியாது. விடுதலை என்பது இந்த நிலைத்த இன்பத்தைப் பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். இதுதான் பரம் பொருளேயடைதல் (பிரம்ப -ப்ராப்தி) என்றும் சொல்லப்படுகிறது. பெயரும் உருவமுகமாகத் தலேவிரித்தாடும் இந்த உலகமென்னும் பேய்க் காட்சியில் மனதைப் பறிகொடுக்காமல் இருப்பவர்களுக்கும் பரம் பொருளிடத்தில் மாருத பற்று உண்டாகும். இதுவே மெய்யறிவைத் தரும். துறவை அடைவதற்கு உலகமே ஒரு ஏணியாகும். அதனுல், அது அத்துணே கவர்ச்சியுள்ளதாகவும் வஞ்சனேயுடையதாகவும் இருக்கிறது உலகத்தின் பிடியிலிருந்து தப்புவதற்கு அதையே ஒரு கருவியாகக் காணபவனே உண்மையான வேதாந்தியாவான்.

வழக்கமாக, ஊர்த்துவம் என்ற சொல் ''மேலே' ''உயர' என்றெல்லாம் மொழி பெயர்க்கப்படுகிறது. ஆனுல் உலகத்தை ஒரு மரமாக எண்ணிப் பார்த்தால், அப்பொழுது அதனுடைய வேர்கள் பரம் பொருளினிடத்து ஊன்றியிருக்கின்றன. அதாவது, வேர்கள் மேலேயும் கிளேகள் கீழேயும் இருக்கின்றன. இந்த இந்த விநோதமான மரம் தலேகீழாகத் தொங்குகிறது. இது கீழ்க் கண்ட முறையில் அர்ஜுனனுக்குக் கண்ணனுல் எடுத்துரைக்கப்பப்பட்டது:– இந்த வாழ்க்கை மரம் (ஸம்ஸார விருஷம்) மிகவும் விநோதமானது. உலகத்தில் உள்ள மற்ற மரங்களேப் போன்றதன்று இது. இந்த உலகத்தில் நாம் பார்க்கும் மரங்களெல்லாம் கிளேகள் மேலேயும் வேர்கள் கீழேயும் இருக்கும். ஆனுல் இந்த வாழ்க்கை என்னும் அச்வத்த மரத்திற்குக் கிளேகள் கீழ்நோக்கிப் படர்ந்திருக்கின்றன; வேர் மேற்பக்கமாக ஊன்றியிருக்கிறது. தலேகீழான மரம் இது!''

இந்த இடத்தில் அர்ஜுனன் குறுக்கிட்டான். ''இந்த மரத்திற்கு அச்வத்தம் என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?'' இந்த ஸம்ஸார மரத்திற்கு ஏன் இந்தப் பெயர் ஏற்பட்டது? ஏன் அதற்கு வேறு பெயர் ஏற்படவில்லே?''

ஆம்; விநோதமான மரத்திற்கு விநோதமான பெயர்! கண்ணன் சொன்னுன்: ''கேள், அர்ஜுனு! அத்வத்தம் என்ருல் அநித்யமானது, நிலேயாதது என்று பொருள்: ஆலமரம் என்றும் அதற்குப் பொருளுண்டு. அதன் பூக்களும் கனிகளும் முகர்வதற்கும் தின்பதற்கும் ஏற்றவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல்ல. அதன் இலைகள் எப்பொழுதும் காற்றில் அசைந்து கொண்டே யிருக்கும். அதனால் இவற்றுக்கு ",சலதளம்" என்று பெயர் உண்டு. அசையும் இலைகள் என்று பொருள்.

"உலகத்துப் பொருள்களும் எப்பொழுதும் அசைந்து கொண்டே யிருக்கின்றன; மாறிக்கொண்டேயிருக்கின்றன, இந்த உண்மையை மனிதர் உணர்ந்து அவற்றின் மேல் உள்ள பற்றை விட்டுவிட வேண்டுமென உணர்த்துவதற்காக இந்த மரத்துக்கு அத்வத்தம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"மனிதர் உயர்நோக்கைப் பெற்றுப் பரம்பொருளிடம் தளராத நம்பிக்கையைப் பெற ஆசைப்பட வேண்டுமென்று இத்தகைய உபதேசம் செய்யப்படுகின்றது இரண்டு வகையான சோதனைகளால் தான் இந்தப் புற உலகத்தை உண்மையில் புரிந்துகொள்ள முடியும். ஒன்று அகமுகமானது; இன்னொன்று புறமுகமானது. நம்மைப் பிணிக்கும் அறிவும் உண்டு; நம்மை விடுவிக்கும் அறிவும் உண்டு. உலகத்தை உலகமாகப் பார்க்கும் மனிதன் தவறு செய்கிறான். உலகத்தைப் பரம்பொருளாகப் பார்க்கும் அறிவன் உண்மை யறிந்தவன் உலகம் உண்டாயிருக்கும் ஒருவிளைவு: அதற்குக் காரணம் உண்டு. அது அதன் காரணத்தைவிட வேறன்று. அது பரம்பொருளின் ஒரு தோற்றமே, பரம்பொருள்தான் அதை ஆக்கியிருக்கிறது கோடிக்கணக்காக இருப்பவைகளெல்லாம் இந்த ஸம்ஸார விருக்ஷத்தின் கிளைகள், சுள்ளிகள், இலைகள், இதன் விதை பரம்பொருள். அதனுள் இந்த விநோதமான மரம் முழுவதும் அடங்கியிருக்கிறது; சுருக்கமாக இருக்கிறது. இதைத் தெரிந்துகொண்டவன் வேதங்களை அறிகிறான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 25

"கண்ணா! உலகத்தை உலகமாகவே பார்ப்பவர்கள் வேதத்தின் பொருளை அறிய முடியாது என்று சொல்லுகிறாய் உலகத்தைப் பரம்பொருளாகப் பார்க்க வேண்டுமென்றும் சொல்லுகிறாய். உலகம் ஒரு காரணத்தால் உண்டானது; அந்தக் காரணத்தைவிட வேறானதாக அது இருக்கமுடியாது. ஆனால் இது எப்படி சாத்தியம்? நாம் பார்க்கும் உலகம் வளர்ச்சிக்கும் தேய்வுக்கும் ஆட்பட்டது. ஆனால் பரம்பொருளோ என்றும் மாறாமல் நித்தியமாக இருப்பது நீருக்கும் நெருப்பும் எந்த விதமான தொடர்பும் இருக்க முடியாதன்றோ? இந்த இரண்டும் எப்படி ஒன்றாக முடியும்? தயை செய்து சொல்லுவாயாக நான் மிகவும் மகிழ்ச்சியுடன் கேட்பேன்" என்றான் அர்ஜுனன்

"நல்லது அர்ஜுனா! அறிவுக்குப் பொருளாகும் இந்த உலகத்தில் ஒவ்வொரு பொருளும் அதனதன் இயல்பைக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஓர் இயல்பு அதை உடைய பொருளைச் சார்ந்திருக்கிறது. உலகத்தில் ஒவ்வொரு பொருளுக்குமுள்ள இயல்புகளுக்கு ஏதேனும் ஓர் ஆதாரம் இருக்கிறது. அந்த ஆதாரமே ஆத்மா. மாறாத அந்த ஆதாரமே ஆத்மா. மாறாத அந்த ஆதாரத்தில் உனது நினைவை நிறுத்துவாயாக! மாறிக்கொண்டே யிருக்கும் தோற்றங்களில் மனத்தைச் செலுத்தாதே! இன்றேல், இந்த நிலையில்லாத ஓட்டத்தில் சிக்கிக் கொள்வாய் ஒரு மரத்தின் பூக்கள், இலைகள், குச்சிகள், கிளைகள், நடுமரம் எல்லாவற்றிற்கும் ஒரு விதை ஆதாரமாக இருப்பதுபோல பரம்பொருள் என்ற விதையிலிருந்து உலகம் என்ற மரம் உண்டாகியிருக்கிறது. பரம்பொருளில் ஒடுங்கியிருக்கும் ஐம்பூதங்களின் பலவகையான கலவையே இவ்வுலகம் என்பது. ஆதாரமான பரம்பொருளை எல்லாவற்றிற்கும் உயிராகக் கருதுவாயாக. அதனுடைய வடிவமாகவல்லவா இவ்வுலகம் தோன்றியிருக்கிறது! உறுதியான ஒழுக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினுல் இந்த உண்மையைப் புரிந்து கொண்டவனே வேதவித்து (வேதத்தை யறிந்தவன்) எனப்படுகிருன்.

''உள்ளத்தையும் அல்லத்தையும்பிரித்தறியாது. ஆழ்ந்து ஆராயாது, தான் பார்ப்பதை யெல்லாம் உண்மையென்று எப்படித் தன்னுடைய இலக்கை அடைய முடியும்? உண்மையை எப்படி அறிய முடியும்? உண்மையை அறிய வேண்டும் என்ற அவாகூட தெய்வீகமான சில இயல்புகள், இருந்தால்தான் முடியும். அசுர இயல்புகள், இதற்கு நேர் மாருனவை. ஒன்றை அறியாத பொழுது அதை அறிந்து கொண்டு விட்டதாகச் சொல்லுவதும், அறிவதற்கும் வேண்டிய முயற்சிகளிலிருந்து அவனைத் தள்ளிவைப்பதும் பொய்யை மெய்யாக நிறுவச் செய்வதும் இந்த அசுர இயல் பின் வேலைதான்.''

இதைக் கண்ணன் சொல்லி முடித்ததும், அர்ஜுனன் வியப்புடன் தலையை நிமிர்த்திச் சொல்வான்: ''கோபாலா? எல்லாக் குணங்களுக்கும் எல்லாவற்றுக்கும் மெய்ப் பொருளே ஆதாரம் என்று இதுவரையில் கூறிவந்தாய். அதாவது, நீதான் எல்லாவற்றிற்கும் ஆதாரம் என்று கூறினுய். இதனிடையில், அசுர குணத்தைப் பற்றியும் தெய்வீக குணத்தைப் பற்றியும் பேசத் தொடங்கிவிட்டாய். எனக்குக் குழப்பமாயிருக்கிறது. எதைக் கொள்வது, எதைத் தள்ளுவது என்று தெரியாமல் தவிக்கிறேன்.''

கண்ணன் ''அர்ஜுனு! உன்னுடைய கேள்வி அதைவிட விநோதமாயிருக்கிறது பொருளில்லாமல் ஒரு சொல்லும் நான் பேசுவதில்லை என்று நீயே சொல்லுகிருய். ஆனல் என்னுடைய பேச்சுக்களில் 'எதை தள்ளுவது எதைக் கொள்ளுவது என்று திகைப்பாக இருக்கிறது' என்றும் சொல்லுகிருய். இது பொருளற்ற கவலை. பொருளற்ற தயக்கம். அருமை மைத்துன! தேவர்களும் அசுரர்களும் வெவ்வேறு தனி இனத்தவரல்ல; அவரவர் இயல்புக் கேற்ப ஏற்பட்ட பிரிவுதான் இது. குணங்கள் என்பவை இயற்கையன்று. இயற்கையான அறிவிலே அவை கிடை யாது. அதைப்பற்றி ஏற்கனவே உனக்கு நான் சொல்லி யிருக்கிறேன் குயவன் சட்டி பானைகளைச் செய்கிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளெல்லாம் களிமண்ணுல் செய்யப்படுபவை. இருப்பினும், இவை களிமண்ணின் பகுதிகளல்ல. களிமண்ணின் பலவகை வடிவங்களே இவை. அவற்றின் பெயர்களும் செயற்கையானவை. இந்த வடிவங்களும் பெயர்களும்தான் குணங்கள் எனப்படுகின்றன. இவற்றுக்கு ஆதாரமாக இருப்பது களிமண். அதன் தோற்றங்கள்தாம் இந்த வடிவங்கள், பெயர்கள் அமைப்புக்கள். களிமண் இயற்கையானது. அதன் வடிவங்களும் பெயர்களும் அமைப்புகளும் செயற்கையானவை, இப்படி இயற்கையாக இருக்கிற களிமண் ஆதாரப் பொருளாக இருப்பது போல எல்லாவற்றிற்கும் இயற்கையான ஆதாரப் பொருளாக நான் இருக்கிறேன். வடிவங்களும் தோற்றங்களும் என்னிடத்தில் இல்லை. நான் அவற்றினிடத்தில் இருக்கிறேன் எனக்குக் குணங்களில்லை; ஆனால் நான் குணங்களில் இருக்கிறேன். நன்ருக இதைக் குறித்துக்கொள். ஆகவே களிமண்ணையும் அதன் வடிவங்களையும் தனித்தனியே வேறுபடுத்தி விடாதே அது சரியன்று. அது முடியவும் முடியாது.''

''கண்ணு! உன்னுடைய சொந்த இயல்புக்கும் சொந்த உருவமான பிரகிருதி என்ற உலகத்திற்கும் இருக்கின்ற சம்பந்தம் என்ன?

''நான் உனக்கு முன்னமேயே சொல்லியிருக்கிறேன் மண், நீர், தீ, காற்று. வெளி என்ற ஐந்து மூலப்பொருள்களும் என்னுடைய வடிவங்கள். இந்த ஐந்து மூலப்பொருள்களின் சேர்க்கைதானே இந்த உலகம்! வேறு அதை எப்படி அழைக்க முடியும்!''

''கண்ணு! இந்த ஐந்து மூலப்பொருள்களுமின்றி இவ்வுலகத்தில் ஒன்றுமே இருக்க முடியாது அல்லவா? அப்படியாயின், நான் அதை எப்படி மறக்க முடியும் இருப்பதெல்லாம் அவற்ருேடு இணைத்திருக்கின்றன ''

''ஐந்து மூலப்பொருள்களை ஒப்பும்பொழுது, இவற்றின் ஐவகையான பகுப்பையும் ஒப்பவேண்டும். இவ்வாறு மொத்தம் இருபந்தைத்து தத்துவங்கள் ஏற்படுகின்றன. இவற்றுள் மண், நீர், தீ, காற்று இந்நான்கும்தான் புலனுகக் கூடியவையாக இருக்கின்றன. ஆனுல் ஆகாயம் எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கிறது. இது போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனது, புத்தி, சித்தம் அகங்காரம் என்ற நான்கு அறிவுக் கருவிகள் அறியக் கூடியவையாக இருக்கின்றன. ஆனால் இந்த நான்கிற்கும் ஆதாரமாக இருக்கக்கூடிய அந்தக் கரணத்தை அனுமானிக்கத்தான் முடியும். நாம் பார்க்கக் கூடியதாக இருப்பதெல்லாம் நாம் பார்க்கமுடியாதவற்றின் தோற்றங்களாக இருக்கின்றன. தோன்றாத ஒன்றிலிருந்து அவை ஆதரவும் பலமும் பெறுகின்றன. உனக்குத் தோன்றாத ஆதாரமாக இருப்பது நான்தான், அதாவது மெய்ப்பொருள். எல்லாமே என்னிடத்தே பொருந்தியிருக்கின்றன.

"என்னைச் சார்ந்து இருக்கின்ற இவை மாறும்தன்மையுள்ளன. வளர்ந்து, தேய்ந்து மாறுகின்றன. ஆனால் ஆதாரமாக இருப்பது மாற்றமுடையதன்று. உதாரணமாக, சந்திரனையும் தண்ணீரில் தெரியும் அதன் பிரதிபிம்பத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். நீரில் பிரதிபலித்திருக்கும் சந்திரன் நிலையாக இல்லை; அது அசைகிறது, சலிக்கிறது ஆனால் அசைவதென்னமோ நீர்தான்; ஆகாயத்தில் இருக்கும் சந்திரனன்று. குழந்தைகளைப் போன்று அறியா மனிதர்கள் சந்திரனே அசைகிறது என்று எண்ணிவிடுகிறார்கள். ஆதாரப்பொருளின் தன்மைகளையும் அதன் மேல் தங்கியிருக்கும் பொருளின் தன்மைகளையும் ஒன்றுக்கொன்று மாற்றிவிடுவது அசுர குணத்தின் இயல்பாகும் ஆதாரப் பொருளின் என்றுமுள தன்மையையும், உண்மையையும், அதில் தங்கியிருக்கும் பொருள்களிலே பார்க்கும்பொழுது அதுதான் தெய்வீக சம்பத்து, தெய்வீக குணம்."

அர்ஜுனன் இதெல்லாவற்றையும் உன்னிப்பாகவும் கலையாத கவனத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு கேட்டான். "மாதவா! இவையிரண்டையும் (ஆதாரத்தையும் அதில் தங்கியிருக்கும் பொருள்களையும்) பிரித்துக் காட்டுவது அவற்றின் உள்ளியல்புதான் என்று சொன்னாய். எந்த இயல்பினால் அசுரத் தன்மையும், எந்த இயல்பினால் தெய்வீகத்தன்மையும், உண்டாகின்றன? தயை செய்து விளக்கவேண்டும்."

கீ—17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் இதற்குக் கூறுவான்:— "அர்ஜுனு! நான் எப்பொழுதுமே விளக்கங்களைத் தரத் தயாராயிருக்கிறேன். கவனத்துடனும் தவருமலும் கேட்பவர்கள்தாம் எனக்கு வேண்டும். ஒருமுகப்பட்ட கவனத்துடன் கேள். 1. அச்சமின்மை, 2. தூயஉணர்ச்சிகள், 3. இறைவனது படைப்பில் எல்லாம் ஒன்று என்ற உணர்வு, 4. கருணை, 5. புலனடக்கம், 6. தியாகம், 7. படிப்பு, 8. துறவு, 9. நேர்மை, 10. இன்னு செய்யாமை, 11. பொய்யாமை, 12. சமநிலை, 13. பற்றின்மை, 14. உள்ளமைதி. 15. புறங் கூருமை, இன்னு சொல்லாமை, 16. இரக்கம், 17 பேராசையின்மை 18. இனிய சொல் 19. அறமில்லா தவற்றில் அச்சம் 20. மன அடக்கம் 21. இடுக்கண் வந்துற்ற போதும் கலங்காத வீரம், பொறுமை 22. உறுதி 23. தூய்மை 24. அகிம்சை 25. பணிவு இந்த இருபத் தைந்து குணங்களும் தைவீ சம்பத் (தெய்வீகச் செல்வம்) எனப்படுகின்றன.

"ஆணவமும் ஆடம்பரமும்' பகட்டும் கோபமும், கடுமையும் பகுத்தறிவில்லாமையும் அசுர குணங்கள் எனப் படுகின்றன. இந்தக் குணங்களையுடையவர்கள் அசுரத் தன்மை உடையவர்கள் மேற்பார்வைக்கு மனிதர்கள் போல் தோற்றமளித்தாலும், அந்தப் பெயருக்கு அவர்கள் தகுதி யுடையவர்களல்லர் அதனுல் அவர்கள் தானவ—மானவர்கள் என்றே சொல்லப்படுகிருர்கள் ஆனுல் முன் சொன்ன தெய்வீக குண நலன்களைப் பெற்றவர்கள் தெய்வாம்சம் உடையவர்களாகக் கருதப்படுகிருர்கள்.

"சிலர் தங்களைத் தெய்வாம்சம் என்று மதித்துக் கொள்ளுகிருர்கள்; ஆனுல் அவர்களிடத்தில் அதற்கு வேண்டிய குண நலன்களெல்லாம் இருக்கின்றனவா? வேறென்றுமில்லை யென்றுலும், தயையும். பரோபகார சிந்தையும், அமைதியுமாவது இருக்கின்றனவா? இவற்றை யாவது ஒரு சிறிதளவேனும் அவர்கள் பெற்றிருந்தால், அவர்களைத் தெய்வீக மனிதர்களாக மதிக்கலாம் அசுர குணம் முற்றிலும் அவர்களிடத்துக் காணப்படுமானுல், அவர்கள் சொல்லுவதையெல்லாம் அப்படியே எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இல்லாத ஒன்றைத் தங்களிடத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக நடிப்பதும் தம்பட்டமடித்துக் கொள்ளுவதும் வெறும் டம்பந்தான். டம்பமும் பகட்டும் தெய்வீகமாகுமா? ஐயத்துக்கிடமின்றி அவை அசுரகுணங்களாகும்.

"ஒவ்வொருவரும் எளிதாகத் தன்னையே ஆராய்ந்து பார்த்து. இதில் எந்தவகுப்பில் தாம் சேர்ந்தவர் என்பதைத் தீர்மானிக்கலாம். உடற்றோற்றமோ சொத்து சுதந்திரங்களோ பதவியோ ஆணை அதிகாரங்களோ ஒருவனுடைய வகுப்பை நிர்ணயிப்பதில்லை உதாரணமாக. இராவணனை எடுத்துக் கொள்ளுங்கள். மனித வடிவத்தில் இருந்தான் பேரரசனாக விளங்கினான். குபேரசனைவிடச் செல்வம் படைத்தவன். ஆனால் இந்தக் காரணங்களுக்காக அவனைத் தெய்வாம்சம் பொருந்தியவன் என்று கருதிவிட முடியுமா? இல்லை அவனுடைய குணங்களை வைத்து அவன் ஓர் அரக்கன் என்று தீர்மானிக்கப்படுகிறான்

எல்லா அரக்க குணங்களுக்கும் மூன்று இயல்புகள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. இவை காமம், குரோதம் லோபம் எனப்படும். இவை ஆன்மாவை அழித்து அரக்க தன்மையை வளர்க்கின்றன இவற்றை தெய்வீக குணங்களான வைராக்யம், சாந்தம், தியாகம் இவற்றால் முறியடித்து வெற்றி கொள்ளவேண்டும். இவைதாம் இந்தப்போராட்டத்தில் நம் நம்பிக்கைக்குரிய படை வீரராகும் இந்த வீரத்தை வளப்படுத்துங்கள்; ஒரு நொடியில் அசுரகுணங்களை அவர்கள் மாய்ந்து விடுவர்கள். காமத்தையும், குரோதத்தையும் லோபத்தையும் முளையிலேயே கிள்ளியெறியாமல் எங்கேயாவது விட்டு வைத்தால், அவை பேராபத்தை விளைவிக்கக் கூடிய ஆற்றலுள்ளவை. ஆகவே அவற்றைச் சுட்டுச் சாம்பராக்கிவிடவேண்டும் அங்ஙனம் செய்தால அச்செயல் நமது இலக்கை அடைவதில் ஏற்படும் போராட்டத்தில், நம்மை உண்மையான வெற்றிக்கு அழைத்துச் செல்லுகிறது.

"ஆசைகளும் பாசங்களும் உயிர் மரத்துக்கு வேர்கள். வேர்களை அறுத்துவிட்டால், மரம் மடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவுக் கெவ்வளவு விரைவாகவும் உறுதியாகவும் வேர்களை அறுக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மரம் விரைவில் அழியும். எதேனும் ஒரு வேர் பிடித்துக் கொண்டிருந்தாலும், மரம் திரும்பத் திரும்ப முளைத்துக் கொண்டிருக்கும்; சாகாது. எல்லா வேரையும் கல்லி எறிந்து விடுங்கள்; அப்பொழுது மரம் அழிந்து, பட்ட கட்டையாகிவிடும். மரம் பசுமையாக வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது வேர்களை யெல்லாம் வெட்டி எறிந்து விட்டோம் என்று மனிதர்கள் பெருமை யடித்துக் கொள்வது வீண், இதுபோலத்தான், நம்மைக் கட்டியிருக்கும் ஆசைகளை எவ்வளவு வெட்டி யெறிகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு உயிரைப் பிடித்திருக்கும் மாயையும் அழியும்.

கொஞ்சநஞ்ச ஆசைகளின் வேகங்களை ஒரளவிற்குக் குறைத்துக்கொண்டு சிலர் தியாகத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் முழு மன ஒருமைப்பாட்டைப் பெறுவதில்லை! கட்டுக் கடங்காத மன அலைச்சல்களும் அவர்களுக்கு இல்லை. இந்த இரண்டுக்கும் மையமான ஒரு நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? ஆசையை முழுவதும் அடக்குவதன் மூலமாகத்தான் முழு மன ஒருமைப்பாடும் ஏற்படும். எனவேதான், காமமும், குரோதமும், உலோபமும் பயங்கரமானதும் அருவருக்கத் தக்கதான உருவங்களை எடுத்துக்கொண்டு மனிதரைத் துன்புறுத்துகின்றன.

''ஆனல், அருவருக்கத்தக்க முகமும் பயங்கரமான உருவமும் படைத்திருப்பது பெரும் விபத்தன்று. ரொம்பப் போனல், அவை நமக்குப் ''பிடிக்கவில்லை'' என்று சொல்லலாம், அவ்வளவுதான், ஆனல் வெறுக்கத்தக்க குணக்கேடுகளும், அருவருக்கத்தக்க இயல்புகளும்தான் பெரிய துரதிருஷ்டமாகும். ஒருவர் உருவத்தில் மிகவும் அழகாக இருக்கலாம்; கிளிபோல் காதுக்கு இனிமையான சொற்களைப் பேசுபவராக இருக்கலாம். ஆனல் இந்தக் காரணத்தினு

லேயே, அவரைத் தெய்வாம்சம் பொருந்தியவர் என்றோ, தெய்வீக குணங்கள் உடையவர் என்றோ கூறிவிடமுடியாது. உள்ளுக்குள்ளே அரக்க குணங்களும் மறைந்திருந்தால், உடலழகும் இனிய குரலும் அவர்களை தெய்விகமாக்கி விடாது. அவர்களிடமிருந்து வெளிவரும் சொற்கள் சம்மட்டியாகவும் கத்தி வீச்சாகவும் தரம்கெட்டுவிடுகிறது. எனவே, ஒருவனது இயல்பும் நடத்தையும் அவற்றை ஆக்குகிற அரக்க குணங்களையும் தெய்வீக குணங்களையும் சார்ந்து இருக்கின்றன; உடலமைப்பையோ தோற்றத்தையோ அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 26

''கண்ணா! மனிதனுடைய தெய்வீக குணங்களும் அரக்க குணங்களும் அவன் முற்பிறவிகளில் செய்த செயல்கள், அடைந்த உணர்ச்சிகள் இவற்றின் வேகத்தினால் விளைந்த பலன்களாகும் என்று சொல்லுகிறாய். அத்தகைய வேகங்களிலிருந்து தப்புவது இயலாத காரியமாதலால். இந்த வினைப்பளுவைச் சுமந்தாக வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானவர்களின் கதி என்ன? இதைத் தவிர்ப்பதற்கு ஏதேனும் வழி உண்டா? அல்லது, அவற்றின் விளைவுகளைக் குறைக்க முடியுமா? அப்படி முடியுமானால், அதற்கு வழிகள் இருக்குமானால், தயவு செய்து எனக்கு அவற்றைத் தெரிவிக்க வேணும்; அதைக்கொண்டு நான் அவற்றிலிருந்து விடுபடுவேன்.

அர்ஜுனன் கண்ணனிடமிருந்து மாந்தருக்கெல்லாம் ஓர் அருமருந்தைத் தெரிந்து கொள்வதற்காக இவ்வாறு கேட்டான். கண்ணன் இதற்கு உடனே பதிலளித்தான்: ''வழிகளுக்குக் குறைவேயில்லை கேள்! குணங்கள் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூவகையாக இருக்கின்றன. அவை மூன்றும், உள் அறிவான அந்தக்கரணம் என்னும் மனத்தைச் சார்ந்திருக்கின்றன. இதுவும் நாம் உண்ணும் உணவைப் பொறுத்திருக்கிறது. நீங்கள் உண்ணும் உணவுதான் உங்களுடைய குணத்தை நிர்ணயிக்கிறது உங்களது செயல்களை உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன எனவே இந்தப் பிறவியிலாவது. உணவையும் செயலையும் கட்டுப்படுத்துவதன் மூலம், தன்னை மீற முனையும் அசுர குணங்களை மனிதன் புறங்காண முடியும் திட்டமிட்ட தன் முயற்சியினால். ஸாத்வீக குணங்களை மனிதன் வளர்த்துக் கொள்ள முடியும்.''

இந்த அறிவுரை, மிகவும் ஆர்வத்துடன் கேட்ட அர்ஜுனனுக்குக் கண்ணனால் மிகவும் அன்புடன் அளிக்கப் பட்டது மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வழிகள் இருக்கின்றன என்று கேட்டதும் அர்ஜுனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியினால் சிலிர்த்தான். இன்னும் நிறையத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வேட்கை கொண்டான். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் புன்னகையினால் அருளைச் சொரிந்த கண்ணன் மேலும் கூறுவதற்குத் தயவு கொண்டான்.

"அர்ஜுனா! உணவுதான் முக்கியமான ஆக்க சக்தி. களங்கமுள்ள மனம் நன்னெறியின் தூய ஒளியை மழுக்கச் செய்துவிடுகிறது. கலங்கிய தண்ணீர் எப்படித் தெளிவாகப் பிரதிபிம்பத்தைக் காட்ட முடியும்? சுயமை பொருந்திய தீய உள்ளத்தில் இறைவன் தெரியமாட்டான் உணவு உடலை வலுவுள்ளதாகச் செய்கிறது உடலும் உள்ளமும் நெருங்கிய தொடர்புடையன உள்ள உரம் உடலூரத்தைச் சார்ந்திருக்கிறது நன்னெறியும். நல்ல பழக்கங்களும் ஆன்மீக முயற்சியும் நாம் கொள்ளும் உணவின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. நோயும், நைந்த உள்ளமும் ஆன்மீகச் சோம்பலும் தவறான உணவினால் தோற்றுவிக்கப் படுகின்றன.

"கண்ணா! ஸாத்விக, ராஜஸ, தாமஸ உணவின் கூறுகளை எனக்குச் சொல்லுவாயாக!" என்று அர்ஜுனன் கேட்டுக் கொண்டான்.

அர்ஜுனா! உடலோடு உள்ளத்தையும் வலிமையுடையதாக்கக் கூடிய உணவு ஸாத்துவிக உணவாகும். மிக உப்புக்கரிக்காமலும், மிக உறைக்காமலும். மிகவும் கசக்காமலும், மிகவும் இனிக்காமலும், மிகவும் புளிக்காமலும் இருக்க வேண்டும மிகவும் சூடான நிலையிலும் உணவைச் சாப்பிடக் கூடாது. அதிகமாகத் தாகத்தைத் தீயாகக் கிளப்பிவிடும் உணவையும் சாப்பிடக் கூடாது ஓர் அளவு. ஒரு கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்பதுதான் பொது நியதி. நீரில் சமைத்த உணவை மறுநாள் வைத்திருந்து உண்ணக் கூடாது. அது தீங்கு பயக்கும். எண்ணெயில் பொறித்த உணவுப் பண்டங்களைக்கூட, அவை நாற்றமடிக்கத் தொடங்குமுன் உண்ணவேண்டும்.

"ராஜஸ உணவு ஸாத்விக உணவுக்கு நேர் எதிரானது உப்பு நிரப்பியதாய், மிகவும் தித்திப்பாய், மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைப்பாய், நெடி வீசுவதாய் அது இருக்கிறது. அத்தகைய உணவு நரம்புகளைச் சுண்டிவிட்டு மயக்கத்தை உண்டு பண்ணுகிறது. என்றான் கண்ணன்.

''இறைவா! நான் அதிகப் பிரசங்கித்தனமாக ஏதேனும் சொல்லியிருந்தால் என்னை மன்னித்துவிடு: ஏதோ தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையால் கேட்கிறேன், உணவுப் பழக்கங்களை மாற்றுவதால் மட்டுமே, ஒருவனது இயல்பையும் நடத்தையையும் மாற்றிவிட முடியுமா? அல்லது இந்தத் தூய்மைப் படுத்தும் முறையில் அதற்கு உதவியாக இன்னும் செய்ய வேண்டியது இருக்கிறதா? அப்படி ஏதாவது இருந்தால், தயை செய்து எனக்குச் சொல்ல வேண்டும்'' என்றான் அர்ஜுனன்.

''என் அருமை மைத்துனா! ஒருவனது குணத்தினை மாற்றுவது அவ்வளவு எளிதாக இருக்குமானால், அரக்கத் தன்மைக்கு அடையாளமான கயமையும் தீய ஒழுக்கமும் உலகத்திலிருந்து ஒரு கணத்தில் நீக்கப்பட்டு விடலாமே! ஆயினும், செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் சில இருக்கின்றன என்பது உண்மைதான். கேள்! மூன்று தூய்மைகள் இருக்கின்றனவா என்றுபார்க்க வேண்டும்'' சமையலுக்கு வேண்டிய பண்டங்கள் தூய்மையானவையாக இருக்க வேண்டும்; சமையலுக்கு உதவும் பாண்டங்கள் தூய்மையாக இருக்கவே வேண்டும்; சமைத்த உணவைப் பரிமாறுபவர்கள் தூயவர்களாக இருக்கவேண்டும்.

''பண்டங்கள் சுத்தமாகவும் உயர்ரகமாகவும் இருந்தால் மட்டும் போதாது; அவைகள் நேர்மையான வழியில் பெறப்பட்டிருக்க வேண்டும். நேர்மையில்லாத, நியாயமில்லாத, பொய்ச் சூதுகளால் சமபாதிக்கப்பட்டவைகளை வைத்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடாது. இவை கறையுடனேயே பிறந்தவை. சம்பாதித்தமுறை, சப்பாதித்தவையைப் பயனபடுத்தும்முறை. அதன் குறிக்கோள் எல்லாமே தூய்மை பொருந்தியிருக்க வேண்டும் பாண்டங்களும் அப்பழுக்கின்றிசுத்தமாக இருக்க வேண்டும். உணவைபப் பரிமாறுபவனுக்கு உடை சுத்தமாக இருந்தால் மட்டும் போதாது, அவனது பழக்கவழக்கங்களும், நடத்தையும், குணமும் கறைபடாமல் சுத்தமாக இருக்கவேண்டும். உணவைப்பரிமாறும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது கோபதாபம், கவலை, அசட்டை இவை இல்லாதவனாக இருக்க வேண்டும், உற்சாகமும் சுறுசுறுப்பும் உடையவனாக இருக்க வேண்டும். அடக்கமும் அன்பும் நிறைந்திருக்க வேண்டும். சாப்பிடுபவர்களுக்கும் பணி செய்யும் பொழுது. தீய, பாவ எண்ணங்களுக்கு மனதில் இடங் கொடுக்கக் கூடாது. கெட்ட எண்ணங்களையும் கெட்ட பழக்கங்களையும் உடற்றூய்மையினாலும் அழகினாலும் ஈடுசெய்துவிட முடியாது. இந்தக் கட்டுப்பாடுகளைக் குறித்து ஒரு சாதகன் மன ஒருமைபாட்டினைப் பெற வேண்டி வெகு கவனமாக இருக்கவேண்டும். இல்லாவிடில், சமையற்காரன், பரிமாறுவோர் இவர்களுடைய கெட்ட எண்ணங்களினுடைய நுட்பமான ஆதிக்கத்தினால் அவை சாதகனுடைய மனத்தை விடாமல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் சுற்றிலும் நன்னெறியில் வாழும் மனிதர்களையே வைத்திருப்பதில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். வெளிக் கவர்ச்சி, வேலைத் திறன், குறைந்த ஊதியம் இவையெல்லாம் அபாயகரமான சமையற்காரர்களையும் வேலைக்காரர்களையும் அமர்த்தும் எண்ணத்தை நமக்கு உண்டாக்கக் கூடாது. அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், குணத்தையும் கவனமாக ஆராய்ந்து பாருங்கள் உடல், மனது இவை இரண்டிலும் நீங்கள் உண்ணும் உணவு மிகவும் முக்கியமான பங்கு வகிக்கிறது. ஆன்மீக களத்தில் இவற்றை வைத்துக் கொண்டுதான் நீங்கள் போராட வேண்டும். உள்ளத் தூய்மையானது உடற்றூய்மையினாலும். அதன் முக்கியமான தொழிலான பேச்சுத் தூய்மையினாலும் உதவப்பட வேண்டும். இதுதான் உண்மையான தவம். மனத்தாலும் உடலாலும் வாக்கினாலும் செய்யப்படும் தவம்.

"கவலையும் துன்பமும், வெறுப்பும் பயமும், பேராசையும் செருக்கும் மனத்தை ஆட்கொள்ளாமலிருக்க வேண்டும். எல்லா உயிரினங்கள்பாலும் அன்பினால் மனம் நிறைய வேண்டும்; ஆண்டவனிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். வெறும் சிற்றின்பங்களைத் தொடர்ந்து ஓடாமல் அதைக் கட்டுப் படுத்த வேண்டும். கீழ்த்தரமான அவற்றுள் புகக் கூடாது மேலான நிலைகளுக்கு உயர்ந்தும்வகையில் எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களும் செலுத்தப்பட்ட வேண்டும். இதுதான் சரியான மனத்தவம் ஆகும்

''இனி உடல் தவத்தைப் பற்றிக் கூறுகிறேன் உடலையும் அதன் வலிமையும் ஆற்றலையும் பிறருக்குச் செய்யும் தொண்டிலும். இறைவனை தொழுவதிலும், அவனது பெருமையைப் பாடுவதிலும், அவனது பெயரால் புனிதமான இடங்களுக்குச் செல்லுவதிலும் மூச்சை அடக்குவதற்குரிய ஒழுங்கான பயிர்ச்சிகளிலும், தீய வழிகளிலிருந்து புலன்களை விலக்குவதிலும். இறைவனது பாதையிலும் செல்லுவதிலும் பயன்படுத்துங்கள்! நோயாளிகளுக்கும் இடர்ப்படுகின்றவர்களுக்கும் உதவி செய்தல், நன்னெறியில் ஒழுங்குதல், இவை போன்ற நல்ல செயல்கள் உடலைப் புனிதமாக்கும்.

''வாக்குத் தவமும் பழக்கப்படவேண்டும் அதிகமாகப் பேசாதீர்கள்; பொய் பேசுவதைத் தவிருங்கள்; புறம் பேசுவதிலும் அவதூறு பேசுவதிலும் இன்பங் கொள்ளாதீர்கள்; கடுமையாகப்பேசாதீர்கள்; இனிமையாகவும் மென்மையாகவும் பேசுங்கள் மனத்தின் பின்னணியாக மாதகனை நினைந்து எப்போதும் பேசுங்கள்.

''உடல்தவம், மனத்தவம், வாக்குத்தவம் இம்மூன்றனுள், ஏதாவது ஒன்று இல்லாவிட்டாலும், ஆன்மஒளி வெளிச்சத்தைப் பரப்பாது விளக்கும் திரியும். எண்ணெயும் ஒளிக்குத் தேவை. உடலே விளக்கு, மனமே எண்ணெய்; நாக்குத் தான் திரி. இவை மூன்றும் நல்ல நிலையில் இருக்கவேண்டும்

''தானதருமம் செய்வதும் கூட உடல் தவம்தான் என்று பக்தி மிகுந்த சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள் அப்படி நினைப்பது நல்லதுதான். ஆனால் தானம் செய்யும் போது இடம், நேரம், பாத்திரம் அறிந்து செய்ய வேண்டும். உதாரணமாக பள்ளிக்கு நன்கொடை அளிப்பதனுல், எங்கு அதுவரையில் பள்ளிகளோ இல்லையோ அந்த இடங்களில் நிறுவ அளிக்க வேண்டும. எங்கு நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்களோ அந்த இடங்களில் மருத்துவமனைகள் ஏற்படுத்த வேண்டும், வெள்ளத்தினுலும் வரட்சியினுலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இடங்களில் பசியால் வாடும் மக்களின் பசியைப் போக்க வேண்டும். அறத்தையும் பிரம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தையையும் அளிக்கும் போதும்இன்னும் இது போன்ற பல்வேறு வகைபணிகளைச் செய்யும் போதும். அப்பணியின் பயனைப் பெறுவோரது குணத்தையும் நிலைமையையும் பார்த்துச் செய்ய வேண்டும் ஒருவனது வளர்ச்சியைத் தடுக்கும் குறைபாடுகளை நீக்குவதற்காகச் செய்யப்படும் தான தருமம் ஸாத்விகம் என்று சொல்லப்படும்'' என்றான் கண்ணன்.

இப்பொழுது அர்ஜுனன் இடைமறித்தான். ''கண்ணா இங்கு நான் ஒன்று கேட்கலாமா? தான தருமம் எப்படிச் செய்தால்லேன்ன! அது தானதருமந்தானே! இல்லையா! ஸாத்விகம் ராஜஸிகம், தாமஸிகம் என்றெல்லாம் ஏன் பிரித்துப் பேசுகிறாய்? அப்படி உண்மையிலேயே இருக்கின்றனவா?

இதற்குக் கண்ணன் சொல்லுவான்:— ''சந்தேகமில்லாமல் இருக்கின்றன. தானதருமம் செய்கிறவர்கள் அதனால் பேரும் புகழும் வரவேண்டும் என்று மிகவும் எதிர்பாக்கிறார்கள். அது அவர்கள் நன்கொடையளிப்பதன் நோக்கம். அவர்கள் கொடுப்பதற்கெல்லாம் ஈடாக எதையோ எதிர்பாக்கிறார்கள். இறைவனது அருள் ஒன்றையே நாடி வேறொன்றிலும் கருத்தைச் செலுத்தாதவர்கள் மிகவும் குறைவு, இறைவனது அருளைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தானதருமம் செய்பவர்கள் ஸாத்விகர்கள். பேரையும் புகழையும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் எதிர்பார்த்தோ அல்லது அலட்சியப் புத்தியுடனோ, அல்லது கட்டாயத்துக்காகவோ செய்யப் படுகின்ற தானதருமங்களெல்லாம் ராஜஸிகம் என்பதில் சேர்க்கவேண்டும்.

''பணிவோடும் சிரத்தையோடும் தானம் கொடுக்க வேண்டும். இரப்பவன் முகத்தில் அடிப்பதுபோல் தூக்கி எறியக்கூடாது. தகாதவனுக்கோ. தவறான நேரத்திலோ தானம் செய்யக்கூடாது. ஒருவரும் போகமுடியாத இடங்களில் மருத்துவமனைகள் கட்டுகிறேன் என்றால் அது வீணான தானமாகும். இப்படி வீணான ஒரு பயனுமில்லாமல் செய்யப்படும் தானம் தாமஸிகம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தானம் செய்வதில் ஈடுபடும் பொழுது ஒருவன் வெகு எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கெஞ்சுகிறவனுக்கெல்லாம் வாரி இறைத்து விடக்கூடாது கண்ட கண்ட இடங்களிலும். தானம் செய்கிறேன் என்று ஆரம்பித்து விடக்கூடாது. நாம் சொன்ன மூவகைத் தானங்களை நன்றாக நினைவில் வைத்துக் கொண்டு. எது தகுந்தது என்று தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள். நீங்கள் செய்யும் தானம் பேருக்காகவோ புகழுக்காகவோ இருக்கக் கூடாது பகட்டு விளம்பரம் இவற்றைப் பெறும் நோக்கம் அதற்கு இருக்கக்கூடாது. பொது நன்மைக்காகவும் பயனுடையதாகவும் அது அமையவேண்டும். எல்லாச் செயல்களிலும் ஸாத்வீக நோக்கமே சிறந்தது இந்த ஒரு நோக்கே பார்ப்பது, கேட்பது, பேசுவது எல்லாவற்றிலும் ஊடுருவி இருக்கவேண்டும்.''

அர்ஜுனன் தலையைச் சிறித்து தாழ்த்தியவாறு ஆழ்ந்த கவனத்துடன் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். கண்ணனுடைய திருமுகத்தாமரையின் இனிமையை அள்ளி அள்ளிப் பருகிக்கொண்டிருந்தான், பின்னர்க் கேட்டான்: ''உண்மையாகக் கேட்பது, உண்மையாக பார்ப்பது என்பது என்ன? இதை எனக்குச் சிறிது விபரமாகச் சொல்ல வேணும், பின்னர் உன்னுடைய சொற்படி நான் நடப்பேன். கெஞ்சும் குரலில் அவன் கண்ணனை வேண்டினான். இதனால் மகிழ்ந்த கண்ணன் அவனைக் குறித்து அன்புடன் முறுவலித்தான்.

கண்ணன் அர்ஜுனனை முதுகில் தட்டிக் கொடுத்தான். பிறகு கூறுவான்; இறைவனைத் தேடிக் கண்டு கொண்ட முனிவர்கள். சாதுக்கள் இவர்களுடைய அருள் மொழிகளையும் அனுபவங்களையும் வரலாறுகளையும் கேட்பது ஸாத்விகமான கேள்வியாகும். இறைவனது அடியார்களைப் பார்ப்பதும், நல்ல பெரியோர்களுடைய படங்களைப் பார்ப்பதும், கோயில்களில் திருவிழாக்களைப் பார்ப்பதும், இதுபோன்றவை ஸாத்விகமான பார்வையாகும். பணத்தின் செருக்கினைக் காண்பதும், சிற்றின்பங்களைச் சித்திரிக்கும் படங்களைப் பார்ப்பதும், படாடோபமான காட்சிகளைப் பார்ப்பதும், பலத்தையும் பதவியையும் ஆணவ மிகுந்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தைப் பறை சாற்றும் காட்சிகளைப் பார்ப்பதும் ராஜஸிகப் பார்வையாகும். புலன்களைத் தூண்டிவிடும் காட்சிகளிலும் நிகழ்ச்சிகளிலும் இன்பம் பெறுவது பலத்தையும் அதிகாரத்தையும் காண்பிப்பதில் களி கொள்வது, வலிமையும்ஆற்றலையும் அழுத்தி நிலை நாட்டு வதில் மகிழ்ச்சி அடைவது இவையெல்லாம் ராஜஸிகமான கேள்வியாகும். கொடுமையான செயல்கள், தீய அரக்கக் களின் கதைகள், அவர்களின் தீய செயல்கள் இவற்றைக் கேட்பது தாமஸிகமான கேள்வியாகும். கொடுமையையும் பிறரை அச்சுறுத்தும் சாகஸங்களையும் மனதில் பாராட்டி, அத்தகைய படங்களை எப்போதும் தம்முன் வைத்திருப்பதை இவர்கள் விரும்புவார்கள். அரக்கத்தன்மை படைத்த ரத்தக் காட்டேரிகளை இவர்கள் தொழுகின்றார்கள். பேய் பிசாசுகளைப்பற்றிய கதைகளில் இவர்கள் மகிழ்ந்து போகிறார்கள்.

அன்புமிக்க நேயர்களே! இதுதான் பகவத் கீதை யினுடைய உபதேசத்தின் இதயமாகும். உடலும் அதனுள் உயிரும் உணவைச் சார்ந்து உணவினால் காப்பயற்றப்படு கின்றன எனவே, வெற்றியின் தரத்தை உணவுதான் நிர்ணயிக்கின்றது. இந்நாட்களில், நிஷ்டை அதிகம் வற்புறுத்தப்படுகிறதேயொழிய நாஷ்டாவில் வற்புறுத்தலைக் காணோமே!

எவ்வளவுதான் ஒருவன் பெரியமனிதனாக இருந்தாலும் அல்லது படித்த மேதாவியாக இருந்தாலும், எவ்வளவுதான் வேதாந்தத்தின் அருளுரைகளில் கவனம செலுத்துபவனாக இருந்தாலும் அவற்றைப் பலரும் அறியச் செய்வதில் அக்கறை கொண்டவனாக இருந்தாலும். உடலுக்கும் அதன் தொழிலுக்கும் அடிப்படையாக இருக்கின்ற உணவைக் குறித்து ஏற்படுத்தப்பட்டிருக்கிற கண்டிப்பான கோட்பாடு களை அசட்டை செய்தால், அவன் வெற்றியேதும் அடைய முடியாது. உணவுப் பண்டங்கள், சமையற்காரன், சமைத்த உணவைப் பரிமாறுவோர், இவற்றின் தூய்மை நன்கு கவனிக்கப்படுகிறதில்லை. வயிறுநிரம்பி பசி அடங்கினால் போதும் என்று இருந்து விடுகிறார்கள். காலை விடிந்தவுடன் அவர்கள் செல்லும் ஆலயம் உணவு விடுதிதான். அங்கு இட்லியும் சாம்பாரும் அந்தராத்மாவுக்கு நிவேதனமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன! இவர்களுக்கெல்லாம் எப்படி மனம் குவியும்? சமையலில் தூய்மை, கண்டங்களில் தூய்மை படைப்பதில் தூய்மை, இவை ஓட்டல்களில் எப்படி எதிர்பார்க்க முடியும்? இதையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்? இதைக் கவனியாமல், மனத்தை ஒருமுகப்படுத்த முடியவில்லை என்று சத்தம் போட்டு அங்கலாய்க்கிறார்கள்! இதனால் மேலும் மேலும் குழப்பத்தில் ஆழ்கிறார்கள்! காரணங்கள் நன்கு தொழிற்பட்டால்தான் பலன்களை அடைய முடியும். கசப்பான பொருள்களைக் கொண்டு சமைத்து வைத்தால் தயாராகும் உணவு எப்படி இனிப்பாக இருக்கும்?

உணவும் நுகர்வும் வெகு எச்சரிக்கையோடு பகவத் கீதையில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன ஆனால் ஒருவனும் இதைக் கவனிப்பதில்லை அது அவசியமென்று நினைப்பதுமில்லை. கீதையின் பேரில் சத்தியம் செய்பவர்கள் இருக்கிறார்கள். மணிக்கணக்கில் அதற்கு விளக்கம் சொல்லுபவர்கள் இருக்கிறார்கள்; உபதேசம் செய்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த உபதேசங்களின்படி நடந்து காட்டுகின்றவர்கள் வெகு குறைவு. அத்தனை சுலோகங்களையும் (Verses) மண்டையில் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் வரும் தோல்விகள் (reverses) முதிர்ந்த அறிவின் ஆழ்ந்த மகிழ்ச்சியோடு அவர்கள் ஏற்கச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் உணவும் நுகர்வும் தூய்மைப் படுத்தப்பட்டால்தான் மகிழ்ச்சியும் அமைதியும் பெறலாம்

ஒளியும் இருளும் ஒரே இடத்தில் இருக்க முடியாது காமமும் ராமனும் ஒரே இடத்தில் இருக்க முடியாது அவை நெருப்பும், நீரும் போன்றவை. பகவத் கீதையை ஒரு கையிலும், காப்பியோ டீயோ, பற்ற வைத்த சுருட்டோ பீடியோ, மூக்குப் பொடியோ மற்றொரு கையிலும் வைத்திருந்தால், அதனால் ஏற்படும் தீய விளைவுகளை எப்படித் தவிர்க்க முடியும்? இன்னும் சிலர் இருக்கிறார்கள். எதைச் சாப்பிட்டாலும், எப்படிச் சாப்பிட்டாலும், எந்த இடத்தில் சாப்பிட்டாலும், தங்களிடத்தில் இருக்கிற ஞானமென்னும் பெருந்தீயின் காரணமாக அந்த உணவு தூய்மையாகவும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் ஆகி விடுகிறது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லித் தங்களுடைய ஒழுக்கங் குலைந்த வாழ்க்கைக்குச் சப்பைக் கட்டு கட்டுவார்கள் இவர்கள்.

"வரிசையாக எல்லாப் புனித ஆறுகளிலும் முக்கி மூக்கி எடுத்தாலும் கசப்பான பழம் ஒன்று எப்படி இனிப்பாக மாறும்? கீதையைப் பற்றி வெறும் வாய்ச்சொல் அளக்கும் இவர்களை அதன் தீஞ்சுவை மொழிகள் எப்படிப் புனிதமாக்கும்? உண்மையில் நடப்பது என்னவென்றால், இது போன்ற போலித்தனங்களைக் கேட்கும் மக்கள் மெய்ந்நூல்களில் தங்களுக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் இழந்து தீர்ந்த நார்த்திகர்களாகி விடுகிறார்கள்.

உணவுப் பழக்க வழக்கங்களைக் கட்டுப்பாடு செய்து சீர்படுத்திக் கொள்ள முடியாமல் தவிக்கும் ஒருவன், தன்னுடைய புலன்களை மட்டும் கட்டிக் காத்து ஒழுங்காக இருப்பான் என்று எப்படி நம்பமுடியும்?

தன்னுடைய உணவை அளவோடு வரையறை செய்து கொள்ள முடியாத ஒருவன் தன்னுடைய புலன்களை எப்படி அளவோடு வரையறை செய்து கொள்வான்? இருமினாலே தெறித்து விழும் மூக்கு தும்மலை எப்படித் தாங்கும்? மாடிப் படியேறவே இணறும் ஒருவன் சுவர்க்கத்தின் உயரத்திற்கு எப்படி ஏறுவான்? காப்பி. சுருட்டு, மூக்குப்பொடி இவற்றிற்கு அடிமையாகி விழிக்கும் ஒருவன், இவற்றைவிட வலிமை வாய்ந்த கோபம், காமம், பேராசை இவற்றை வெல்வதற்கு வேண்டிய உரத்தையும் வீரத்தையும் எப்படிச் சம்பாதித்துக் கொள்ளப் போகிறான்? அழுக்கை உதறித் தள்ள முடியாதவன், ஆசையை எப்படி உதறித்தள்ளப் போகிறான்? நாவை அடக்கி வெற்றி கொள்ளுங்கள். பின்னர் காமத்தை வெற்றி கொண்டு விடுவீர்கள். இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று பிணைந்தவை, கண்ணையும் காலையும் போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 27

ஆரோக்கியமான உடலின் ஒளியை ஆடைகள் பிறர் பார்வையிலிருந்து மறைப்பதைப் போல, அகந்தையினால் மறைக்கப்பட்டிருக்கிற உயிர், அதன் விலைமதிப்பற்ற செல்வமான பரம்பொருளின் ஒளியை வெளியிட இயலாததாகிவிடுகிறது. இந்த அகந்தைதான் எல்லாத் தீமைகளுக்கும், எல்லாக் குற்றங்குறைகளுக்கும் வேராக இருக்கிறது. அது ஆசையிலிருந்து பிறக்கிறது. அகந்தையிலிருந்து விடுபட்டு நிற்பாயாக!

ஆசையில்லாத நிலை என்பது உண்மையில் அகந்தையில்லாத நிலையேயாகும். "தான்" என்னும் அகந்தையிலிருந்து விடுபடுவதைத் தவிர விடுதலை என்பது வேறு ஏதாக இருக்க முடியும்? ஆசை என்னும் கட்டிலிருந்து நீங்கள் தெறித்துக் கொள்ள முடியுமானால் விடுதலைக்கு நீங்கள் தகுதியுடையவர்களே.

தாங்கள் செய்யும் செயல்களிலிருந்து விளையும் பயன்களின் மீதுள்ள ஆசையினால் தூண்டப்படுகின்ற காரியங்களில்தான் பொதுவாக மக்கள் ஈடுபடுகிறார்கள். தங்களுக்கு லாபமில்லாத காரியங்களிலிருந்து விலகிக் கொள்கிறார்கள். பகவத்கீதை இரண்டு மனப்பாங்குகளையுமே கண்டிக்கிறது நமக்குப் பிடித்த பலன்கள் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும், வேலை செய்ய வேண்டிய கடமையிலிருந்து ஒருவன் தப்பமுடியாது. மனிதன், முழுவதும் வேலையின்றி இருக்க முடியாது அப்படியானால், பலன்கள் என்ற வலையில் விழாமல் எப்படித் தப்பிக்க முடியும்? இதற்காகச் செயல்களின் பலனைத் துறத்தல் என்பதை மிகச் சிறந்த மார்க்கமாகக் கீதை போதிக்கிறது.

வேண்டினாலும் வேண்டாவிட்டாலும், எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்கா விட்டாலும், ஒவ்வொரு செயலும் ஒரு பயனைத் தருவதில்தான் முடிகிறது. உடனே இல்லாவிட்டாலும், சிறிது காலத்திற்குப் பின்னாவது பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாகத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாது. விளையும் பயன் நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம். ஆனல் எந்தச் செயலையும் இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டால், நல்லதோ கெட்டதோ எதுவுமே செய்பவனைப் பாதிக்காது. இப்படி இறைவனுக்குக் காணிக்கையாக்கும் வேள்வியினல், எந்த ஒரு செயலும் உயர்ந்த தரத்திற்கு மாற்றப்பட்டு விடுகிறது. தெய்வீகமாக புனிதமாக, பாவனமாக ஆகிவிடுகிறது. இதற்கு மாருக, அகந்தையின் தூண்டுதலினல் செய்யப்பட்ட காரியங்கள் தளையில் சிக்க வைத்துவிடும்.

இறைவனை அடைவதற்காக அவனை உணரும் பொருட்டு உளமார அவனைத் தேடுபவர்கள் ஆசையின் கறைபடாமல் விடுபடவேண்டும் ''நான்'' ''எனது'' என்ற எண்ணத்தைத் துறந்து விடுவதால், இவர்கள் முக்தி அடைகிருர்கள் அதுதான் வாழ்க்கையின் பெருநோக்கத்தை அடைந்தநிலை. அந்தநிலையில் இன்பமும் துன்பமும் இல்லை. அது இரண்டுக்கும் அப்பாற்பட்டது. தன்னுடைய நண்பனும் அன்பனுமான அர்ஜுனன் அந்நிலையை அடைய வேண்டும் என்று கண்ணன் விரும்பினன். எனவே, அதற்குரிய வழிகளைப் பல்வேறு முறைகளால் எடுத்துச் சொல்லி அவனைக் காப்பாற்ற முயன்ருன். மேலும், மனித சமுதாயம் முழுவதுமே நலம் பெறவேண்டி இந்த அருமையான வரத்தைப் பெறுவதற்கு ஒரு கருவியாக அர்ஜுனனைப் பயன்படுத்திக் கொண்டான்.

இந்தப் புனிதமான அருளுரையை முடிப்பதற்கு முன் கண்ணன் அர்ஜுனனை அழைத்து 'எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு என்னையே சரணடைவாயாக! உன்னை எல்லாப் பாவங்களிலிருந்து நான் விடுவிக்கிறேன். அதாவது 'தான்' என்பதில் பெருமையடைவதை விட்டு, உடைமைகளில் பெருமையடைவதை விட்டு ''நான்'' ''எனது'' என்ற உணர்வுகளை நீக்கிவிடு! ஆன்மாவை உடலோடு ஒன்ருக்கி விடுவதை அடியோடு அழித்துவிடு! உடல் என்பது ஒரு சிறை, ஒருகூண்டு, அவ்வளவுதான். எல்லாம்பரமபொருளே, வேறொன்றும் இல்லை என்ற எண்ணத்தில் நன்ருக ஊன்றி நிற்பாயாக! எனவே, அவனது விருப்பத்திற்குத் தலை

பணிவதல்லாமல், அவனது திட்டத்திற்கு ஆட்படுவதல்லாமல், செய்வதற்கு வேறொன்றுமில்லை. மனிதன், செய்யக்கூடாதனதைச் செய்வது, செய்ய வேண்டியதைச் செய்யாமலிருப்பது, ஒன்றைச் செய்ய முனைவது, இன்னொன்றைச் செய்ய மறுப்பது என்ற இந்த இரட்டைச் செயல்களைவிட்டுவிடவேண்டும். இறைவனது ஆணைப்படி நடக்கவேண்டும். அவனது விருப்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவன் எந்த நிலையில் வைத்தாலும் அங்கு மகிழ்வோடு இருக்கவேண்டும்; எந்த முறையில் வளர்த்தாலும் மகிழ்வோடு இருக்கவேண்டும். அது சரியா முறையா என்று ஆராய்ச்சியையெல்லாம் தூரவைத்து விடவேண்டும். இறைவனுக்குரிய வழிபாடாக அவற்றைச் செய்யவேண்டும். அதனால் வரக்கூடிய ஆதாயங்களை எதிர்பார்க்கவும் கூடாது. இதெல்லாம் சேர்ந்ததுதான் அவனது கடமை.

ருத்திராட்ச மாலையைத் தரித்துக் கொண்டுள்ள சில வரட்டு வேதாந்திகள், எல்லாத் தர்மங்களையும் விட்டு விடுங்கள் என்று கண்ணன் சொன்னதையும், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் என்று அவன் தந்த உறுதி மொழியையும் தங்களுக்கு வசதியாக எடுத்துக் கொண்டு, சும்மா காலை மடக்கி உட்கார்ந்து கொண்டு கண்களை மூடி ஜபம் செய்கிறார்கள். தங்களுக்கேற்பட்ட பணிகளைச் செய்யாமல், தங்களிச்சைப்படி உண்டு உறங்கித் திரிகிறார்கள். நல்லது கெட்டது என்று அவர்கள் பிரித்தறிவதில்லை இறைவனே தருமங்களை விட்டுவிடுங்கள் என்று கூறிவிட்டான் என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள். வீட்டில் பெரியவர்களும் அநுபவம் முதிர்ந்த சாதகர்களும் அவர்களது நடத்தையைப் பற்றிக் கேட்டால் அவர்கள் ''அடடா! நீங்கள் கூடத் தவறு செய்கிறீர்களே! கீதையில் பகவான் என்ன சொல்லியிருக்கிறான் என்று தெரியாதா? ''எல்லாத் தருமங்களையும் விட்டுவிடு'' என்ற அவனுடைய கட்டளையைத்தான் ஏற்று நடத்தி வருகிறேன். மற்றவர்கள் பேச்சைக் கேட்க வேண்டிய தேவை எனக்கு இல்லை'' என்று பதில் சொல்லுகிறார்கள். தங்களுடைய பக்தியையும், நரபொழுக்கத்தையும் பற்றி அவர்களுக்கு மிதந்த பெருமிதம். தங்களுடைய உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



மூளைகளுக்கு உகந்தமாக இருக்கும் பகுதிகளை மட்டும் கண்ணனது பேச்சிலிருந்து பொறுக்கி எடுத்துக் கொள்கிறார்கள் முன்னும் பின்னும் இருக்கின்ற சொற்களை வெகு சௌக்கியமாக ஒதுக்கிவிடுகிறார்கள். ஏனெனில் அவை அவர்களுக்கு உகந்தனவாக இல்லை ஆனாலும், அவைகளும் இறைவனது கட்டளைகளில் பிரிக்க முடியாமல் சேர்ந்திருப் பவை தானே? கீதையினுடைய தீவிர பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டாலும், அதன் உயிர்நாடியான பகுதிகளை அலட்சியம் செய்கிறார்கள்.

''எல்லாத் தருமங்களையும் விட்டுவிடுங்கள். என்னையே சரணடையுங்கள்'' என்கிறான் கண்ணன். அவ்வாறு அவனை இவர்கள் சரணடைந்தார்களா? இல்லை. முக்தி பெற வேண்டுமென்ற தீவிரமான ஆசையாவது அவர்களுக்கு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அப்படி இருந்தால் தங்களுக்கென்று ஏற்பட்ட கடமைகளை மறந்திருக்க மாட்டார்கள். உணவிற்கும் உறக்கத்திற்கும் பலியாகி யிருக்க மாட்டார்கள் இந்த மனிதர்கள் வம்பளப்பதில் தான் சூரர்களாயிருக்கிறார்கள். வெறும் வாய்ச்சவடால் களில் மன்னர்கள். இறைவனது பணியைச் செய்து முடிப்ப தில்லை. சோம்பேறித்தனம் அவ்வளவு மிகுந்திருக்கிறது அவர்களிடம். ஆன்மீக முயற்சிகள் அணுவளவு கூட அவர்களிடத்தில் காணப்படவில்லை.

உண்மையாகவே முக்தியை விரும்புபவர்கள் இறைவன் சொன்ன தெய்வீகமான சொற்களில் எவ்வளவோ உயர்ந்த உண்மைகள் பொதிந்திருப்பதை உணர்வார்கள்.

''எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு, என்னையே சரணடைவாயாக! நான் உன்னை எல்லாப்பாவங்களிலிருந்தும் கரையேற்றுகின்றேன். கவலைப்படாதே!''

கவனியுங்கள். ''எல்லாத் தருமங்களையும் விட்டுவிட்டு, என்றுதான் இறைவன் இங்கு சொல்லியிருக்கிறான். ''எல்லாக் கருமங்களையும் விட்டுவிட்டு'' என்று சொல்ல வில்லை அப்படியானால் இந்த வாசகத்தின் பொருள்தான் என்ன? இறைவனால் பணிக்கப்பட்ட எல்லாச் செயல்களை யும், தருமம் அதருமம் என்ற சர்ச்சைகளில் சிக்கி வழிதப்பிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாமல், இறைவனது பெருமைக்காக, செய்து முடியுங்கள் என்பதுதான்.

இறைவனிடத்து முழு நம்பிக்கை வைத்து வாழ்க்கையையும் அவனுக்கு அர்ப்பித்து விட்டீர்கள். அதனால் உங்களுக்கென்று நீங்கள் பெறவேண்டியது ஒன்றுமில்லை என்று உங்களுக்குத் தெரிந்தாலும் ஜனகர் முதலியவர்களைப் போல உலகத்தின் நன்மைக்காகவே நீங்கள் காரியங்கள் செய்து கொண்டிருக்கத்தான் வேண்டும். உங்களிடத்து இருக்கும் ஆன்மா, உலகத்து உயிரினங்கள் எல்லாவற்றிலுமிருக்கும் ஆன்மாவினின்றும் வேறன்று எனவே எல்லா உயிர்களுக்கும் நன்மையைச் செய்வதில் இன்பமடையுங்கள். அதில் உங்களுக்கு ஆர்வமிருக்கட்டும். இதன் பொருட்டு, வேதங்களிலும் சாத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற பணிகள் எல்லாவற்றையும் இறைவனுக்கு ஆராதனையாக, அவற்றின் பலனைக் கருதாதது செய்து முடியுங்கள். இதுவே பற்றற்ற பணியாகும்; நிஷ்காம கருமமாகும்.

பகவத் கீதையை நன்கு புரிந்து கொள்ளுங்கள் அதன் கட்டளைகளைக் கடைப்பிடித்து, பற்றற்ற பணி செய்யும் மனப்பாங்கில் நிலைபெறுங்கள். எல்லாப் பணிகளையும் இறைவனுக்குரிய வழிபாடாக ஹரிப் பிரஸாதமாக எண்ணிச் செய்யுங்கள் இதுதான் உங்களுடைய வேலை பலன், விளைவு, லாபம் என்ற மற்றவையெல்லாம் அவனிடம் விட்டு விடுங்கள். அப்பொழுது ஹரியின் அருளைப் பெற்று, உங்களது இவ்வுலக வாழ்க்கை புனிதமாகி, பயனுமுள்ளதாகிறது

எத்தனை இடர்ப்பாடுகள் வந்து தடுத்தாலும் அறநெறியில் ஒழுகுகின்றவர்களுக்கு இறுதியில் வெற்றி உறுதி. அற நெறியினின்றும் நழுவியவர்கள் நிறைய செல்வம் படைத்து, நீண்ட நாட்கள் வாழ்வும் கூடும். ஆனால் இறுதியில் அவர்கள் அழிவு அவர்களைத் தழுவும். இந்த உண்மைக்குப் பாண்டவர்களும் கௌரவர்களும் நல்லதொரு சான்று

அதருமத்தில் அழுத்தி ஆணவத்தால் குருடாகி, கௌரவர்கள் பாண்டவர்களை எண்ணிலாக் கொடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஆளாக்கினார்கள். ஆனால் முடிவில் முழுமையாக அழிந்து போனார்கள் அவர்களுக்கு பலதரப் பட்டவர்களுடைய உதவி இருந்தது. ஆனால் ஆண்டவனுடைய அருளின் பலத்தை அவர்கள் சம்பாதிக்காததால், விதியினால் கைவிடப்பட்டு, மீளவகையில்லாமல் மாண்டார்கள். பாரத தேசத்து மக்களுக்கெல்லாம் மகாபாரதம் இந்த ஒரு பாடத்தைத்தான் கற்றுத் தருகிறது:- மிகவலிமை படைத்த எந்தப் படை பலமும், ஆண்டவனுடைய அருட்சக்திக்கு ஈடாகாது, இதுதான அதில் அடங்கியிருக்கும் மிகவும் மதிக்கத் தகுந்த செய்தியாகும்.

கீதாபவனம் என்பது, உலக நன்மைக்காக பாரதத்தின் மண்ணில் எழுப்பப்பட்ட சத்திய தர்ம மாளிகையாகும். கீதையைப் பக்தியுடனும் சிரத்தையுடனும் படியுங்கள். நோய் நீக்கிப் புத்துயிர் அளிக்கும் அதனுடைய போதனைகளை நடைமுறையில் பயின்று உணருங்கள். மெய்ப்பொருளிலேயே மகிழ்ந்திருப்போருக்கு சத்தியம் எப்பொழுதும் உடனிருக்கும். அவர்களுக்கு ஆண்டவன் தனது அருளை கணப்பொழுதில் பொழிவான் ஈரேழு பதினான்கு உலகங்களையும் தன்னுள் அடக்கியிருக்கும ஆண்டவனை வேண்டுங்கள். அதனால் உங்களுக்கு மகிழ்ச்சியைப் பெருக்கும் எட்டுப்பேறுகளையும் இவ்வுலக வாழ்க்கையிலேயே பெற்று வாழலாம். அதைவிட இன்னும் மிக உயர்ந்த முக்தியையும் பெறலாம்.

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவாருண்டா? வெண்ணெயைச் சம்பாதியுங்கள். இறைவனால் ஏற்படுத்தப்பட்ட வாழ்க்கை நெறிகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவனது அருள் என்ற வெண்ணெயை அடையுங்கள்.

அந்த அருளைப் பெற்றுவிட்டால், முக்திக்காக வேண்டித் தனியாக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை உங்களுக்கு எது எப்பொழுது கிடைக்க வேண்டும் என்பது அவனுக்குத்தான் நன்றாகத் தெரியும். உங்களுக்கு எது உரியதோ, நல்லதோ அதை அவன் அளிப்பான். அவனுக்காக ஏங்குங்கள்; அவனை அடைவதற்காக வேதனைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது முக்திக்கு தனியாகப் பாடுபடவேண்டாம். இதை மறுயோசனையில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்தால், அவன் உங்களது பாவங்களையெல்லாம் தொலைத்து விடுவான். அவனை சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள். அவன் உங்களை அர்ஜுனனைப் போல் இறவாதவர்களாகச் செய்வான். இந்தப்பிறப்பு இறப்பு என்ற சுழலிருந்து தப்ப நினைக்கும் யாவரும், கீதையில் இறைவன் இட்டிருக்கும் கட்டளைக்குப் பணிந்து அவனுக்கு ஆட்படவேண்டும். அப்பொழுது எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறுவார்கள். விரும்புவதை எய்தியவர்களா வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேன் துளிகள்"

கீதை ஒரு படகு. இருளின் அக்கரைக்கு நம்மை எடுத்துச் செல்கின்றது. அது வேதங்களின் ஸாரம். வேள்விகள் செய்தல் உபாஸனைகள் பயிலுதல் இவற்றால் தூய்மை அடைந்த உள்ளங்களுக்கு மெய்யறிவைப் புகட்டுகின்றது கீதை. கீதையில் இறைவனது குரல் ஒலிக்கிறது.

"தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே" என்று தொடங்குகிறது கீதை. கீதையின் கடைசி சுலோகம் "யத்ர யோகேசுவர கிருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர:" என்று தொடங்குகிறது. யோகேச்வரன் என்ற சொல் கீதை தரும் தருமத்தைக் குறிப்பிடுகிறது. அதனால் கீதையின் போதனை; "தருமத்தை நினை: தருமத்தைச் செய்" என்பதுதான்.

தருமம் இருக்குமிடத்தில் வெற்றி இருக்கும்; கண்ணன் இருப்பான். அவன் எங்குமிருந்தாலும், தருமம் இருக்கும் இடத்தில் அவனது அருள் மிகுந்து காணப்படும். பாலில் வெண்ணெய் இருந்தாலும் அதை தயிராக்கிக் கடைந்தெடுக்கும் பொழுதுதான் நன்றாக வெளிப்படுகிறது.

கீதை விஷாத யோகத்துடன் ஆரம்பித்து ஸன்யாஸ யோகத்தில் முடிகிறது. துயரமும் விரத்தியும்தான் ஸன்யாஸத்திற்கு வித்து.

கண்ணனிடம் சரணாகதி, பிறவித் தளைகளைத் தகர்த்தல், அறவழி நிற்றல் இம்மூன்றும் கீதை உபதேசிக்கும் உண்மைகள். கீதையைப் புரிந்து கொள்வது என்றால் அதன்படி நடத்தல் என்பது தான் பொருள்.

கீதை:

கீதாபவனம் ஸத்யம் தர்மம் என்ற இரண்டடுக்குகள் கொண்டது. உண்மையைப் பேசு! தருமத்தைச் செய்! என்பதுதான் கீதஸாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதை ஒரு வெறும் புத்தகமன்று. அதைப் பூசையில் வைத்துத் தூப தீப நைவேத்தியம் காட்டினால் போதாது. அதன் சொற்படி நடக்கவேண்டும்.

மிகவும் சுவையான உணவை உங்கள் தலைமேல் வைத்துக்கொண்டு கூத்தாடினால், கண்களில் ஒற்றிக் கொண்டால், விழுந்து விழுந்து அதன்முன் வணங்கினால், உங்கள் பசியாறுமா? கீதையும் இது போலத்தான், அது சுவையான உணவு. அதைச் சுவைத்துப் பார்க்கவேண்டும். பசித்தவனுக்கு வேண்டியது சோறு வயலில் விளையும் அத்தனை தானியமும் அவனுக்குத் தேவையில்லை. கையளவு போதும். தாகமெடுத்தவனுக்குக் கோதவரி நீர் அத்தனையும் வேண்டாம். கையளவு போதும். அதுபோல, கீதையில் ஒரு சுலோகம் போதும். நமது ஆன்மப் பசியைத் தீர்க்க

ஒரு தீப்பெட்டியில் நிறையத் தீக்குச்சிகள் உண்டு. அதில் ஏதேனும் ஒன்றை எடுத்து தீ மூட்டிக் கொள்ளலாம். கீதையில் மொத்தம் 700 தீக்குச்சிகள் இருக்கின்றன. இதில் ஏதேனும் ஒரு தீக்குச்சியை மட்டும் எடுத்து மெய்யறிவு என்னும் தீயை மூட்டிக் கொள்ளலாம். கீதையை நெட்டுருப் போட்டு மண்டையில் ஏற்றிக் கொள்வதால் ஒரு பயனுமில்லை மஸ்தகம் (மண்டை) புஸ்தகமானது தான் மிச்சம்.

இரண்டாவது அத்தியாயம் 11-வது சுலோகம் வரை அர்ஜுனனது துயரக் கதைதான் அப்புறம்தான் கீதையே தொடங்குகிறது. அர்ஜுனனது உள்ளம் பக்குவப்பட்டும் என்று கண்ணன் காத்திருந்தான் போலும்! வேறு கதிகாணாது அர்ஜுனன் தன்னைச் சரண் அடைய வேண்டும் என்று விரும்பினான் போலும்! அர்ஜுனனது அவல நிலைக்குக் காரணம் அவனது ஆணவம் அல்லவா? அது முதிர்ந்து பழுக்கும் வரை கண்ணன் காத்திருந்தான் வைத்தியனல்லவா? பழுக்கவைத்துத் தானே சிரங்கை அறுக்கிறார்கள் மருத்துவர்கள்?

கீதை யாருக்காகத் தரப்பட்டது? பசுவுக்காகவா பால் கறக்கிறோம்? கன்றுக்காக என்றால் அது அத்தனை பாலையும் குடிக்கிறதா என்ன? பால்கார இடையனுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாமோ என்றால் அவனுக்கு வேண்டியது பணமே தவிர பாலன்று பின் யாருக்குத்தான் இந்தப் பால்? நல்ல மனம் படைத்தவர்களுக்காக.

கீதை பொது மனிதனுக்காக. முற்றும் உணர்ந்தவர் களுக்கும் துயரமில்லை ஒன்றுமே தெரியாத ஜடங்களுக்கும் துயரமில்லை இந்த நடுத்தர வகுப்பினருக்குத்தான் எல்லாத் துன்பங்களும். ஆகையால் இந்தப் பொதுவான சராசரி மனிதனுக்குத்தான் கீதை மிகவும் பயனுள்ளது.

க்ஷேத்திரம்

உடல் என்பது க்ஷேத்ரம் க்ஷேத்ர என்றால் வயல் என் றும் பொருளுண்டு வயலில் நல்ல விதை விதைத்தால் பயிர் அறுவடை செய்யலாம் உடம்பில் நல்ல அறநெறி களை விதைத்ததால் ஞானத்தை அறுவடை செய்யலாம்.

மனிதன் சர்மக்ஷேத்திரத்தில் வந்து பிறந்திருக்கிறான்.

அர்ஜுனன் மனிதனின் பிரதிநிதியாக இருக்கிறான்.

உடல் ஒரு தேர் அதை ஓட்டுபவன் கண்ணன் என் னும் தெய்வம் அதில் இருப்பவன் அர்ஜுனன் என்னும் உயிர்.

அர்ஜுனனது சோர்வு சாதாரணமான கோழைத்தன மன்று. அவனது நேர்மையையும் உள்ளம் தோய்ந்த உண் மையையும் காட்டியது.

அர்ஜுனன் என்றாலே ''தூயவன்'' என்று பொருள்.

கீதையின் முதல் அத்தியாயம் கிருஷ்ண கீதை என்று அழைக்கப்படுவதை விட அர்ஜுன கீதை என்று அழைக்கப் படுவதே பொருத்தம்

அர்ஜுனனுக்கு பிறப்பால் ஏற்பட்ட கழிவிரக்கம் ஆணவத்தால் எழுந்த ஒன்று; உண்மையான அன்பினால் விளைந்ததன்று.

கண்ணன் மருத்துவனாயிற்றே!

வைத்யோ நாராயணோ ஹரி. அதனால் அர்ஜுனனுடைய இந்த நோயைத் தீர்க்க முற்பட்டான்.

அர்ஜுனன் குடாகேசன்: (புலன்களை வென்றவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன்: ஹ்ருஷீகேசன், புலன்களுக்குத் தலைவன் நல்ல பொருத்தம் சீடனுக்கும் ஆசிரியனுக்கும்!

அர்ஜுனன் இரண்டு வகையான பிரமைகளால் மாறிக்கொண்டிருந்தான்: (1) பொதுவானது, (2) சிறப்பானது உடம்பையே தானாக நினைத்து விடுவது முதல் வகை. தன்னுடைய கடமையை மறந்து விடுவது இரண்டாவது

யோக க்ஷேமம்

யோகம் என்றால் சம்பாதிப்பது. க்ஷேமம் என்றால் அதைக் காப்பது இவையிரண்டையும் இறைவன் பார்த்துக் கொள்வான் எப்பொழுது? அவன் மேல் பாரத்தைப் போட்டு அவனையே நினைத்திருந்தால், இந்த வேலையை அவன் ஏற்றுக் கொள்வான்.

ஒரு பண்டிதர் அரசனிடத்துப் போய்க் கீதையில் வரும் இந்தப் பொருள் கொண்ட சுலோகத்திற்கு விளக்கம் சொல்கிறேன் என்று தொடங்கினார். அரசன் "சொன்னது போதும்: நீர் நன்றாக முதலில் புரிந்து கொண்டு பிறகு வந்து எங்களுக்குச் சொல்லும்!" என்று கூறிவிட்டான். இதுமாதிரி இரண்டு மூன்று தடவை நடந்தது. பண்டிதர் அவமானம் தாங்காமல் வீட்டிற்குப் போய் வருந்தினார். அவரது மனைவி அறிவாளி செய்தி தெரிந்ததும் அவள் சொன்னாள்: அரசன் சொன்னது தவறில்லையே?" "யோக க்ஷேமத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கண்ணன் கீதையில் சொன்ன சுலோகத்தின் கருத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லைதான். கண்ணனே எல்லாம் பார்த்துக் கொள்வான் என்பதை மறந்து, அரசனிடம் பிச்சைக்குப் போய் நின்றீர்களே! அது தவறு தானே?" என்றாள் பண்டிதர் வெட்கித் தலைகுனிந்தார்.

"உங்களுடைய யோகக்ஷேமத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கண்ணனே சொல்லிவிட்டானே என்று சும்மா உட்கார்ந்து விடக்கூடாது அதற்குரிய நிபந்தனையையும் அவன் கூறியிருப்பதை மறக்கக் கூடாது. "என்னையே சிந்தித்திருந்தால்" என்பதுதான் அந்த நிபந்தனை. இதை வசதியாக மறந்து விடுகிறார்கள். நிபந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனையை முடிக்காமல் பலனை மட்டும் கேட்கலாமா? பெட்டியே திருட்டுப் போய் விட்டபின், சாவிமேல் நம்பிக்கை வைக்கலாமா?

இறைவன்

உடம்பின் எந்தப் பகுதியிலிருந்து எடுத்தாலும், ரத்தம் ஒன்றாக இருப்பது போல், இறைவன் எங்கும் ஒரே தன்மையனாக இருக்கிறான்.

இறைவன் நம்மிடமிருந்து யோகத்தையும் தவத்தையும் கேட்கவில்லை. நம் இதயத்தைக் கேட்கிறான் இது நம்மால் முடியாது என்று சொல்லக்கூடாது. எது எதற்கெல்லாமோ இதயத்தைப் பறி கொடுப்பதில்லையா நாம்? அதை இறைவனுக்குக் கொடுப்பதிலா சிரமம்?

இறைவனது எளிமை

இறைவன் எல்லோருக்கும் உரியவன். இதில் வேற்றுமைகள் கிடையாது. அவனது தர்பாருக்கு எல்லோரும் வரலாம். அதன் கதவுகள் எப்பொழுதும் திறந்தே இருக்கும். நாம் தான் போவதில்லை கதகதப்பு வேண்டுமென்றால் நெருப்பின் அருகில் சென்று அமர வேண்டும். எட்ட இருந்து கொண்டே, சூடே இல்லையே என்று குறை சொல்லக்கூடாது. குற்றம் நெருப்பினுடைய தன்று; நம்முடையது.

எல்லாம் இறைவனே

மின்விசிறி, மின்விளக்கு, மின்னடுப்பு முதலிய எல்லாவற்றிலும் இருக்கும் மின்சக்தி ஒன்றுதான். அதுபோல, எல்லாவற்றிலும் இருந்து ஆட்டுவிக்கும் ஆண்டவன் ஒருவன் தான்.

நம்முடைய உடம்பு உணவினால் உண்டாவது கண்கூடு. உணவு மண்ணிலிருந்து உண்டாகிறது. மண் நீரிலிருந்தும், நீர் நெருப்பிலிருந்தும், நெருப்பு காற்றிலிருந்தும், காற்று ஆகாயத்திலிருந்தும், மாயை இறைவனிடத்திலிருந்தும் உண்டாகின்றன. இப்பொழுது தெரிகிறதல்லவா, எல்லாம் இறைவனே என்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமும் இறைவனும்

உலகத்தின் படைப்பு இறைவனுடைய சங்கல்பத்தினுல் ஏற்படுகிறது. அதிலிருந்து ஒரு வினைத் தொடர் உண்டாகிறது எனவே, உலகம் உள்ளவரை இறைவனது சங்கல்பம் உள்ள வரை வினைகளும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும்.

உயிரும் இறைவனும்

ஸத் – சித் – ஆனந்தம் என்ற மூன்றும் இறைவனது வடிவங்கள். அவனே உயிராகத் தோன்றுகிருன்; நடிக்கிருன். எல்லா உயிர்களும் தன்மையில் பரம்பொருளையன்றி வேறில்லை இந்த அத்வைத உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆதார இறைவன்

வானத்தில் மேகங்கள் வந்து போகின்றன. அதனுல் வானத்துக்கு ஒன்றுமில்லை இது போல, உலகங்கள் தோன்றி மறைவதனுல் இறைவனுக்கு ஒன்றுமில்லை.

நூல்கள்தான் துணிக்கு ஆதாரம், துணி நூல்களுக்கு ஆதாரமன்று இதுபோல, இறைவனை நம்பித்தான் இயற்கை உலகம் உண்டாகியிருக்கின்றது

பரம்பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறது என்று சொல்லுவதைவிட, எல்லாம் பரம்பொருளே என்று சொல்லு வதுதான் முறையாகும்.

சூரியன் தண்ணீரில் பிரதிபலிப்பது போல, பிரகிருதி யில் இறைவன் பிரதிபலிக்கிருன். தண்ணீர் அசைவதால் சூரியன் அசைவதில்லை. அதுபோல, பிரகிருதியின் ஆட்டங் களால் இறைவனுக்கு ஓர் ஊறும் இல்லை.

கட்டடத்தின் அஸ்திவாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஆனுல் அஸ்திவாரம் இல்லையென்ருல் கட்டடமே இருக் காது, நார் இல்லாவிட்டால் பூமாலை இருக்காது ஆனுல் நார் கண்ணுக்குத் தெரிவதில்லை. இதுபோல கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் இறைவன்தான் உலகத் தோற்றத்துக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆதாரம். இந்த ஆதாரத்தைத் தெரிந்து கொண்டால் அதில் தங்கியிருக்கும் எல்லாமும் விளங்கிவிடும்.

இறைவன்:

பூக்கள் ஒரு நாரில் கோக்கப்பட்டு இருப்பதைப்போல யாவும் இறைவனிடத்தில் கோக்கப்பட்டிருக்கின்றது. உலகம் இரண்டு வகையாக ஏற்பட்டிருக்கிறது. (1) உயிரினங்கள் (2) ஜட உலகம், முதலாவது இறைவனுடைய பராபிரகிருதி இரண்டாவது அவனுடைய அபரா பிரகிருதி.

அபரா பிரகிருதி இறைவனின் ஸ்வபாவம்; பராபிரகிருதி அவனுடைய ஸ்வரூபம்.

இறைவனது சம அருள்

ஒரு தாய் தொட்டிலில் படுத்திருக்கும் சின்னஞ்சிறு பச்சைக் குழந்தையிடம் அதிகக் கவனம் செலுத்துகிறான். ஏனெனில், அக்குழந்தைக்குத்தான் பாதுகாப்பு அதிகம் தேவை. இதுபோல, இறைவனும் சில மக்களிடத்து அதிகம் கவனம் செலுத்துகிறான். இறைவன் கற்பகத் தருவைப் போன்றவன். வேண்டியவர் வேண்டுவதைத் தருபவன். சூரியன் எல்லாவற்றின் மேலும் ஒளி வீசுகிறான். அவனுக்கு ஓரவஞ்சனை ஏதும் இல்லை. ஆனால் குழிக்குள் ஒளிந்துகொண்டு ஒளி இல்லையே என்றால் அதற்குச் சூரியன் என்ன செய்வான்? நல்லதை வேண்டுங்கள். அதை இறைவனிடமிருந்து பெறுவீர்கள்.

இறைவனைக் காணலாம்

இறைவன் இல்லாத இடமில்லை. எல்லாம் அவனே. அதனாலேயே அவனைப் பார்க்க முடியவில்லை. இரணிய கசிபு எங்கும் தேடிக் கடவுளே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான். பிரஹலாதனோ, தொட்ட இடமெல்லாம் இறைவனைக் காணலாம் என்று கூறி அவன் தூணிலும் இருப்பதை நிரூபித்தான் பார்க்கின்ற முறைப்படி பார்த்தால் இறைவன் எளியன். முறை தெரியாமல் முயன்றால் அவன் அரியவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம்

பாவம் மலிந்து அறம் நலியும்பொழுது நிராகாரமான இறைவன் நராகாரமாக வருகிறான். மனித வடிவிலே தோன்றுகிறான். அவதாரத்திற்குச் சாதாரண மனிதரைப் போலப் பாவ புண்ணியங்கள் கிடையாது அவர்களது பிறப்பும் செயல்களும் விளையாட்டுக்கள். அவதாரம் சின்மய மானது; மண்மயமன்று. நல்லவைகளைக் காக்க வருவதே அவதாரம்.

இறைவனது அவதாரத்தை மெய்யுணர்ந்த பெரியோர் கள்தான் நன்கு புரிந்து கொள்ளமுடியும். மற்றவர்களும் வாய்ப்பை நழுவ விட்டுவிடாமல், அவதார புருஷர்களிடம் நெருங்கியிருந்து பயன்பெறவேண்டும்.

ஆன்மா

ஆறுகளெல்லாம் கடலைக் குறித்து ஓடுவது போல், உயிர்களெல்லாம் ஆன்ம மெய்ப் பொருளில் சென்று கலக் கின்றன.

களிமண்ணினால் செய்த எல்லாப் பாண்டங்களும் உண்மையில் களிமண்ணைத் தவிர வேறெல்ல. எல்லாப் பெயர்களிலும் உருவங்களிலும் ஆத்மா ஒன்றே மெய். அதைத் தவிர அவை வேறல்ல.

வானத்தில் பறவைகள் பறந்து செல்லும் பொழுது சுவடுகள் ஏற்படுவதில்லை. இதுபோல எத்தனையோ புலனுணர்வுகள் வந்துபோனாலும் ஆத்மாவில் ஒரு கீறலும் விழுவதில்லை.

சூரியன் உதிக்கும்பொழுது உலகம் இயங்கத் தொடங்கு கிறது ஆனால் சூரியனுக்கு இந்த இயக்கத்தில் நேரடியான பங்கேதும் இல்லை. அவன் ஒரு தூண்டுகோலாக மட்டுமே இருக்கிறான். இது போல ஆன்ம மெய்ப்பொருள் வெறும் சாக்ஷியாக மட்டும் நிற்கிறது.

நெருப்புடன் சேர்ந்த இரும்பு சுடுகிறது. சூடு என்னவோ நெருப்புக்குத்தான் உண்டு. இது போல பிரகிருதியோடு, உலகத்தோடு உடம்போடு சேர்ந்த ஆன்மா இன்ப துன்பங்களை அடைவது போல் காண்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா என்றும் ஒன்றுதான். ஆனால் உடல்களின் வேறுபாட்டிற்கேற்ப அது பலதரப்பட்டதாகக் காண்கிறது. விளக்கு ஒன்றாக இருக்கலாம். ஆனால் கண்ணாடி ஜாடிக்குள் வைத்தால் அது பிரகாசமாகத் தெரிகிறது. மண்பானைக்குள் வைத்தால் தெரிவதேயில்லை. இதுபோலத் தான் ஆன்மாவும்.

அறியாமை

அறியாமையை அறிவினால் மட்டுமே அகற்ற முடியும். துன்பத்திற்குக் காரணம் அறியாமைதான். எனவே, துன்பத்தை மெய் அறிவைக் கொண்டுதான் அகற்ற வேண்டும். வேறு வழியில்லை.

மாயை

ஓர் அறையில் இருக்கும் இருட்டு அந்த அறையையே மறைப்பது போல, தண்ணீரில் உண்டாகும் பாசி தண்ணீரையே மறைப்பதுபோல, கண்ணில் உண்டாகும் சதை கண்ணையே மறைப்பதுபோல, நம்மிடத்திலே மாயை தோற்றம் கொண்டு, நம்மையே நம்மிடத்திலிருந்து மறைக்கிறது. ஆனால் இம்மாயையும் இறைவனின் லீலையே. அது அவனது கைக்கருவி. இறைவனைச் சரணடைந்தவர்களை மாயை ஒன்றும் செய்வதில்லை. இறைவனும் நானும் வேறல்ல என்ற மெய்யறிவினாலும் மாயையை வெல்லலாம். அல்லது, இறைவனைச் சரணடைவது மூலமும் வெல்லலாம். முதலாவது ஞானயோகம். இரண்டாவது பக்தியோகம்.

மாயை என்பது எங்கிருந்தோ வந்து நம்மிடம் ஒட்டிக் கொண்ட அழுக்கன்று. நம்மிடத்திலேயே நம்முடைய மனத்தைப் பற்றி நிற்கும் ஓர் இயல்பு அது. மாயை என்பது முன்பு இல்லாமலிருந்து ஒரு காலத்தில் வந்ததுமல்ல; ஒரு காலத்தில் இருந்து பின்பு இல்லாமல் போவதுமல்ல. அது இருந்ததுமில்லை; இருக்கவுமில்லை; இருக்கப்போவதுமில்லை. அது இல்பொருள். என்றுமே இல்லாததற்கு மாயை என்று பெயர். இருப்பது போல அது தோற்றமளிக்கிறது. பாலைவனத்தில் கானல் நீரைப்போல!

ஒன்றிருக்குமிடத்தில் இரண்டைப் பார்ப்பதுதான் மாயையின் காரியம். ஒன்றே உண்மை என்று உணராதது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அறியாமை, அல்லது அவித்யை. அவித்யையும் மாயையும் ஒன்றுதான். மாயை இறைவனின் கைப்பாவை. அது நம்மை ஏமாற்றும்பொழுது அவித்யை எனப்படுகிறது.

அந்தி மயங்கும் நேரத்தில் வழியில் கிடக்கும் கயிற்றைப் பாம்பென்று எண்ணி மருண்டுவிடுகிறோம். இதுபோல் ஒன்றான பரம்பொருளை அறியாமையினால் பல தோற்றங்களாகக் கண்டு மருண்டு மிரள்கிறோம்.

நாமரூபம்

உலகம் இரண்டு வகையாகக் காணப்படுகிறது. (1) நாமம் (பெயர்), (2) ரூபம் (வடிவம்), இவற்றில் வடிவத்தைவிடப் பெயர் அதிகம் நிலைத்திருக்கக் கூடியது. மனிதர்கள் மறைந்துவிட்டாலும் அவர்களது புகழ் தொடர்ந்து இருப்பதைப் பார்க்கிறோமல்லவா? ஆனாலும் உருவம் பெயர் இரண்டுமே மாயா தோற்றங்கள்தான். உலகம் என்பதும் அதுதான்.

ஸத்வம், ரஜஸ், தமஸ்

ஸத்வ குணம் தங்கத்தினலான கயிறு; ரஜோ குணம் செம்பாலான கயிறு; தாமோ குணம் இரும்பினலான கயிறு. ஆனல் எல்லாமே கயிறுகள்தாம். நம்மை இறுகக் கட்டிவிடும் இம்மூன்றும் மாயையின் பிரிவுகள்.

ஸம்ஸார விருக்ஷம்

இந்த உலகம் ஸம்ஸாரமரம் எனப்படுகிறது. இது விநோதமான மரம். இதன் வேர்கள் மேலேயும், கிளைகள் கீழ்நோக்கியும் வளர்ந்திருக்கின்றன தலைகீழான மரம். இதற்கு அச்வத்தம் என்று பெயர். இதன் பழங்கள் பிறவிச் சுழலுக்குக் காரணமாவதால் இது கொடியது இது அழியும் தன்மையுடையதால் மெய்யன்று. இது எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கும் அதனல் இதில் பற்று வைக்கக்கூடாது (அச்வத்த மரம் என்பது ஆங்கிலத்தில் பியர் மரம் எனப் படுகிறது. போதி விருக்ஷம் அத்திமரம் பிப்பல மரம், எனவும் சொல்வதுண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவன் முக்தி

எல்லாவற்றையும் கடந்த குணம் குறிகளில்லாத நிர்க் குணப் பரம்பொருளை இவ்வுடலில் வாழும்போழுதே உணர்வதுதான் ஜீவன் முக்தி. செத்த பிறகு சிவலோகம் என்பதன்று இங்கேயே இப்பொழுதே, முக்திபெறலாம். மெய்யறிவினால் பொய்யறிவு விலகும் பொழுது இந்த முக்தி இவ்வுலகத்திலேயே பெறப்படும்.

ஜீவன் முக்தர்

வினைகளையும் வினைகளின் பயன்களையும் தாண்டி அப்பால் நிற்பவர் ஜீவன் முக்தர்கள். அவர்களுக்குச் சட்ட திட்ட வரை முறைகள் கிடையாது. அவர்கள் நினைப்பது, செய்வது எல்லாம் தருமமாகும். பேசுவது சத்திய மாகும். சத்தியமும் தருமமும் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. இவர்களுக்குப் போக்கும் வரவுமில்லை. மரணம் என்பது என்பது உடல் விழுவதுதான். அதன்பின் இவர்கள் பரம்பொருளாக எங்கும் நிறைந்து இருக்கிறார்கள்.

மெய்யுணர்ந்தவன் வாழ்வு:

தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்பவன் மெய் யுணர்ந்தவன். மற்றவர்களெல்லாம், ஒற்றுக் காகிதம் போல் பார்த்ததையெல்லாம் பற்றிக்கொண்டு வாழ்பவர்கள்.

எல்லோரும் தூங்கும் பொழுது, மெய்யறிவாளன்தான் விழித்திருக்கிறான். இதனைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். திருடன்கூடத்தான் எல்லோரும் தூங்கும் பொழுது விழித்திருக்கிறான். புலன்கள் அழைக்கும் பொழுது தூங்கியவன் போலிருந்து உண்மைப் பொருளில் எப்பொழு தும் கவனமாக விழித்திருப்பான் என்பதுதான் இங்கு கருத்து.

மெய்யறிவு பெற்றவனின் சிறப்பியல்புகள்

மெய்யறிவு பெற்றவனின் சிறப்பியல்புகள் மொத்தம் இருபது சொல்லப்படுகின்றன. (1) அமானித்வம் (அடக்கம்) (2) அதம்பித்வம் (பகட்டில்லாமை) (3) அஹிம்ஸா (உயிர்

களுக்குத் தீங்கு செய்யாமை) (4) க்ஷாந்தி (பொறுமை) (5) ஆர்ஜவம் (நேர்மை) (6) ஆசார்யோபாஸனம் (ஆசாரியனை வணங்குதல்) (7) சௌசம் (தூய்மை) (8) ஸ்தைர்யம் (உறுதி) (9) ஆத்மவிநிக்ரஹம் (தன்னடக்கம்) (10) இந்திரிய — அர்த்தேஷு வைராக்யம் (புலனுக்குரிய இச்சைகளில் பற்றின்மை) (11) அனஹம்காரம் (அகந்தை யின்மை) (12) ஜன்ம – மருத்யு–ஜரா – வ்யாதிதுக்க–தோஷானுதர்சனம் (பிறப்பு, மரணம், மூப்பு, பிணி இவற்றிலுள்ள குற்றங்களை உணர்தல்) (13) அஸக்தி (ஒன்றிலும் பற்றுக் கொள்ளாமலிருத்தல்) (14) அஸபிஷ்வங்கம் (மனைவி மக்களிடத்தில், அவர்களுக்கு வந்ததெல்லாம் தனக்கு வந்ததாக நினைக்குமளவிற்கு ஒருமை எண்ணமின்மை) (15) ஸமசித்தத்வம் (வேண்டியது வேண்டாததில் என்றும் சமநிலை) (16) பக்தி அவ்யபிசாரிணீ (இறைவனிடத்தில் மாறாத பக்தி) (17) விவிக்ததேச-ஸேவித்வம் (தனியிடத்தே இருத்தல் (18) அரதிர்-ஜனஸம்ஸதி (ஜனக்கூட்டத்தில் பற்றின்மை) (19) அத்யாத்ம-ஞான-நித்யத்வம் (மெய்யுணர்வில் நிலை பெற்றிருத்தல் (20) தத்வ-ஞானார்த்த-தர்சனம் (மெய்யுணர்வினால் வரும் பெரும் பயனான மோக்ஷத்தை நினைத்து அதற்குரியதைச் செய்தல் )

மெய்யுணர்ந்த ஞானிக்கு மற்ற வினைப்பயன்கள் அழிந்து விட்டாலும் பிராப்தம் என்ற வினைப்பயன் மட்டும் தொடர்கிறது என்று சொல்லுவதுண்டு. ஆனால், இது கூட நாம் நினைப்பதுதான். ஞானியைப் பொறுத்த வரை பிராப்த கர்மமும் அவனுக்கு இல்லை.

மனம்

மனம் எவ்வளவு முன்னேறுகிறதோ அவ்வளவு மனிதன் வளருகிறான். மனமே மனிதன். மனமே விடுதலைக்கும் காரணம்; பிறவித் தளைக்கும் காரணம். மனத்தை வென்றவனே ஜீவன் முக்தன்.

நூல்களால் ஆனது துணி. நூல்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் பிரிந்து எடுத்து விட்டால் துணியே இருக்காது. இதுபோலத்தான், ஆசைகளால் ஆனது மனம். ஆசைகளைப் பிரித்து எடுத்து விட்டால் மனம் அழிந்து விடும். ஸ்திதப்ரக்ஞனாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளை வெல்லுவதற்குப் பெரும் போர் நடத்த வேண்டியதில்லை.

அதற்காக அவற்றினிடத்தில் இச்சகம் பேச வேண்டியதுமில்லை. "அறிவுமயமான எனக்கும் அறியப்படும் ஜடமான ஆசைகளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை" என்று உணர்ந்து கொள்ளும் போது ஆசைகள் தாமாகவே அற்று விழும்.

மனத்துக்கு வெளியே நின்று கொண்டு அதன் வேலைகளைக் கண்காணியுங்கள்; அதோடு கலந்து விடாதீர்கள்.

மனம் மின்சாரம் போன்றது. அதைத் தொடாமல், அதோடு சேராமல் வேலை வாங்க வேண்டும். எத்தனைக் கெத்தனை மனத்தைவிட்டு விலகியிருக்கிறீர்களோ அத்தனைக் கத்தனை நல்லது

புலன்களையும் மனத்தையும் சேர்த்தே வெல்லவேண்டும் இவ்விரண்டனுள், மனத்தை வெற்றி கொண்டால், புலன்கள் தாமே வழிக்கு வந்து விடும்.

பலவீனமானவர்கள் மயிலின் தோகைபோல சிலிர்த்துக் கொண்டே இருப்பார்கள். உறுதியாய் நிற்கமாட்டார்கள். கடியாரத்தின் உள்நாக்கைப் போல் ஊசலாடிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் என்ன முயற்சியில் ஈடுபட முடியும்? முக்திக்கு முயற்சியும் உறுதியும் ஊக்கமும் தேவை.

மோக்ஷம்

மோக்ஷம் என்பது மோஹக்ஷயம். மருளின் அழிவு.

முக்திக்குப் பயிற்சி வேண்டும்

கடையில் கறிகாய் வாங்குவது போல் முக்தியை கணப்பொழுதில் பேரம் பேசி பணம் கொடுத்து வாங்க முடியாது. கொஞ்சம் இறைவன்பால் மனத்தைச் செலுத்தி வேண்டினல் அது கிடைக்கும்.

இருளும் ஒளியும்

"கண்ணை மூடிக்கொண்டால் இருட்டாகத் தெரிகிறது என்று சொல்கிறோம். இருட்டை எப்படிப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமா? இருட்டைப் பார்க்கும் ஒளி ஒன்று நம் பார்வையிலே இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. "நான் ஒரு முட்டாள், எனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்லிக் கொள்கின்றவர்களைப் பார்க்கிறோம். தெரியாது என்பதையும் தெரிந்து கொள்ளும் அறிவொளியே ஆன்மாவாகிய நாம், அது நின்று சுடர்விடும் பெரும் அறிவொளிப் பிழம்பு.

ஞானம்

ஞானமில்லாத மனிதன் விளக்கில்லாத வீடு. ஞானத்திற்கு ஈடான தூய பொருள் இல்லை. பரம்பொருளும் நானும் வேறல்ல என்னும் உணர்வு ஞானம் எனப்படும். இதைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதுதான் எல்லாத் துன்பத்திற்கும் காரணம்.

ஞானம் என்பது எங்கும் மாறவேண்டிய தேவையில்லாமல் இடத்துக்குக் கொண்டு சேர்க்கும் ஒரே ரயில் வண்டி. இதில் ஏறிக்கொண்டவன் ஞானி.

இதன்றி ஏறி இறங்கவேண்டிய அவசியமில்லா விட்டாலும். சில பெட்டிகளை மட்டும் வேறு வேறு ரயில்களில் ஆங்காங்கு இணைந்து விடுவார்கள். இங்குரயில்கள் மாறும்; பெட்டி மாறாது இதில் ஏறிக்கொண்டவன் ஜிக்ஞாஸு இவனும் போகவேண்டிய இடத்தை அடைந்து விடுகிறான் என்றாலும், ஞானியை விட ஒரு மாற்றுக் குறைவுதான் ஆத்மா பக்தன் பல வண்டிகளில் மாறி மாறிப் பிரயாணம் செய்து தன் இடத்திற்குப் போய்ச் சேருகிறான். அர்த்தார்த்தி மாறி மாறிப் போவது மட்டும் மல்லாமல், பல இடங்களில் தங்கித் தங்கி கிடைத்த வாகனங்களில் ஏறிப்போகிறான் என்று சொல்லலாம்.

திருஷ்டி தோஷம் (பார்வையிலுள்ள கோளாறு) நீங்கினால் சிருஷ்டி கர்த்தாவைப் பார்க்கலாம்.

இன்பம் புறத்தே இல்லை, நம்முள்ளே இருக்கிறது இன்னும் சொல்லப்போனால், இன்பவடிவமே நாம். இதை மறந்து இன்பத்தை நாடிப் பறப்பது அறியாமை. அதனால் தான் துன்பம் உண்டாகிறது. நமக்குச் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. நாம் பரிபூரண உண்மைப் பொருளல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பூரணத்துவத்தை உணராமல் அலைந்து திரிந்து வாடுவது வீண் வேலை.

ஞானம் என்னும் பெரு நெருப்பு எல்லாப் பாவங்களையும் புண்ணியங்களையும் எரித்து விடும். காட்டுத் தீ எதிர்ப்பட்டதை யெல்லாம் பொசுக்கி விடுவதைப் போலே

நீங்கள் எத்தனை குருமார்களைத் தேடிப் பெற்றாலும் சரி, இந்த ''உடலோ, உள்ளமோ உயிரோ நான் இல்லை; நான் தூய பேரறிவான மெய்ப்பொருள்''என்று உணராத வரையில் ஒரு பயனும்மில்லை. ஓட்டையான பாத்திரத்தை வைத்துக்கொண்டு தண்ணீரை இறைக்க முயலுகிற கதையாகி விடும்.

கண்ணன் என்ற மருத்துவன் அர்ஜுனனுக்குக் கொடுத்த ஒரே ஒரு மருந்து ஞானம். அர்ஜுனனுக்கு மட்டுமன்று; நமக்கும் சேர்த்துத்தான்.

உயிரும் பரம்பொருளும் ஒன்றே. தங்கச் சங்கிலி வேறு தங்கம் வேறு என்ன? அது எப்பொழுதும் எந்தப் பகுதியிலும் தங்கமேதான். உருவமும் பெயரும் பொய்கள. இதுபோல, எல்லா பரம்பொருளே. நீ, நான் என்று பேசுவதெல்லாம் பொய்மாய மயக்கங்கள்.

மெய்யறிவு பெற்றவன் நீந்தத் தெரிந்தவனைப் போன்றவன். நீந்தத் தெரியாமல் கடலில் இறங்கினால் அலை அடித்துக் கொண்டு போய் விடும்.

உண்மையுணர்தல் என்ற சூரியன் தோன்றும் பொழுது, பொய் மாய இருட்கணங்கள் மாயும்.

ஞான யோகம்

பகவத்கீதையில் மதிப்பில்லா மாணிக்கமாகத் திகழ்கிறது ஞானயோகம்'நான் யார்?'' என்ற விசாரமே ஞானயோகம் எல்லாச் சாதனங்களையும் விட ஞானயோகமே சிறந்தது அதுவே முக்திக்கு ராஜபாட்டையாகும். தன்னையறிந்தலே எல்லா அறிவிலும் உயர்ந்தது.

மெய்யறிவு பெற்று உண்மையை உணர்ந்து, நம்கடமைகளைப் பலனில் கருத்தின்றி தன்னலமில்லாமல் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதே புத்தியோகம். ஒவ்வொரு செய்கைக்கும் தொடக்கமும் முடிவும் உண்டு; ஆனால் நிஷ்காம கர்மத்திற்கு இந்த இரண்டும் கிடையாது.

நோக்கம் காரியம்; நமக்கு அதனால் உண்டாகக் கூடிய லாபம் அல்லது நஷ்டம் அன்று. மனிதன் ஒருவன் தான் பலன் கருதி அந்த உணர்வோடு வருங்காலத்தைக் கணக்கிட்டுக் காரியம் செய்கிறான். பறவைகள், விலங்குகள் இவைகூட மனிதனைப் போல அவ்வளவு சுயநலம் படைத்திருக்கவில்லை.

தியான யோகமும் ஞான யோகமும்

தியானத்தையும் ஞானத்தையும் ஒருங்கே சேர்ந்து பழக வேண்டும். இல்லாது போனால், சாதகன் குறிப்பிட்ட நோக்கமில்லாத மரப்பொம்மைக்குச் சமமாகி விடுவான்.

ஞானி

ஞானிக்கு ஓர் ஆசையும் கிடையாது என்றாலும், பிறருக்காகச் சற்று இறங்கி வந்து பணி செய்கிறான். விமானம் மேலே ஆகாயத்தில் பறந்தாலும், தரையில் வந்து இறங்கித் தானே பயணிகளை ஏற்றிச் செல்லுகிறது;

ஞானி

ஞானி இறைவனைத் தவிர வேறொன்றையும் மனத்தினாலும் கருதமாட்டான். பார்க்குமிடந்தோறும் இறைவனே அவனுக்குக் காட்சி தருகிறான். இதனால் தான் ''ஞானி தனக்கு மிகவும் பிரியமானவன்'' என்று கண்ணன் கூறுகிறான் ஞானியினது பக்தி ஸஹஜபக்தி எனப்படும். மற்றவர்களது பக்தி வேறு ஏதாவது ஒரு நோக்கத்துக்காக ஏற்பட்டது அத்தகைய பக்தி கௌணபக்தி எனப்படும்.

வெகு நாள் பயிற்சியின் முடிவில்தான் ஒருவன் தேர்ந்த மருத்துவனாக முடியும் பல நாள் பயிற்சியின் பின்னர்தான் ஒருவன் ஞானியாக முடியும்.

எதைத் தெரிந்து கொண்டதால் எல்லாம் தெரிந்து கொண்டதாகுமோ அதைத் தெரிந்து கொள்வதே ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலி ஞானிகள்

போலி ஞானிகள் பலர் இருக்கிறார்கள். இவர்களது உடை கஷாயம். உள்ளமும் கஷாயம். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? புறத்தோற்றம் ஸந்நியாசம்; மனத்திலிருப்பதோ அதி ஆசை. பார்வைக்கு யோகம்; உண்மையில் ரோகம். இவர்களைவிட சாதாரண இல்லறத்தார் எவ்வளவோ மேல்.

தனிமை

ஆன்ம வித்தையைப் பழக வேண்டுமானால், தனிமையில் இருங்கள். புலனடக்கம் பெற அதுவே சிறந்த வழி. புலனடக்கம் இல்லாத மனிதன் நீர் வறண்ட ஆற்றைப் போன்றவன். சாதகனுடைய மனம் காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கைப் போல அசையாமலிருக்க வேண்டும்.

பக்தி

பக்தி கங்கையைப் போன்றது. கருமம் யமுனையைப் போன்றது, ஞானம் ஸரஸ்வதி நதியைப் போன்றது. இம்மூன்றின் கலப்புத்தான் த்ரிவேணி. உள்ளமும் செயலும் அறிவும் கலந்து இருக்க வேண்டும்.

சாதாரணமாக மக்களால் பக்தி என்று குறிப்பிடப்படுவது இறைவன் பால் அன்பு என்பதைக் குறிக்கும். ஆனால் உண்மையில் பக்தி என்பது இறைவன் உங்கள் பால் செலுத்தும் அன்பின் அளவைத்தான் குறிக்கும். அவனுக்கு எது பிடிக்கிறது என்று உணர்வதே பக்தி.

நாம் உள்ளத்தால் நினைக்கும் ஒன்றும் முழுதும் ஒன்றி விடுவதே பக்தியாகும்.

பக்தி என்பது வெளித்தோற்றத்தினால் அமைவதில்லை. அது உள்ளத்தில் இருக்க வேண்டும். ஸகுணபக்தி நிர்க்குண பக்திக்குச் சாதனம். உலகத்தையும் நம்மையும் இறைவனையும் பிரித்துக் காண்கிற பக்தி ஸகுண பக்தி. எல்லாமே இறைவனாகக் காண்கின்ற பக்தி நிர்க்குணபக்தி. பக்தி என்பது அன்பின் ஓட்டம். இது இறைவனைக் குறித்து ஏற்படும் பொழுதுதான் அது பக்தி ஆகிறது. அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்களிடத்தும் இயற்கையிலேயே பொருந்தியிருக்கிறது. அன்பும் உயிரும் ஒன்று.

கோபிகள் எப்பொழுதும் கண்ணனையே நினைந்திருந்தார்கள். அதனால்தான் கண்ணன் அவர்களை யோகிகள் என்று தனது திருவாயால் அழைத்தான். இது எவ்வளவு பெரிய பாக்கியம்!

நிர்க்குணபக்தி செய்பவர்கள் மிகுந்த புலனடக்கமுடையவர்களாகவும், சூழ்நிலையின் மாற்றங்களால் சற்றும் பாதிக்கப்படாதவர்களாகவும், உலகின் துன்பந்துடைக்கின்றவர்களாகவும் இருப்பர். இந்த விஷயத்தில் ஸகுண பக்தர்களுக்கும் இவர்களுக்கும் ரொம்ப வேற்றுமையில்லை எல்லாம் பரம்பொருளே என்று உணர்ந்து வேற்றுமைகளை அறவே களைந்து நிற்கின்றவர்கள் நிர்க்குணபக்தர்கள் என்பதுதான் வித்தியாசம் நடைமுறையில் இரண்டும் ஒன்று தான்.

ஒரு பக்தன் தன்னுடைய உள்ளத்திலிருந்து வெறுப்பு கோபம் முதலியனவற்றைக் களைந்தால் மட்டும் போதாது மலையும் மரமும் கூட வெறுப்பு, கோபம் முதலியவை இல்லாமலிருக்கின்றன. அதனால் அவை பக்தனாகி விட மாட்டா மனதில் அன்பையும் வளர்க்க வேண்டும். வயலில் பயிர் செய்ய வேண்டுமானால் களைபிடுங்கிநிலை மட்டும் போதாது உரம் போடவேண்டும்; உழ வேண்டும்; விதைக்கவேண்டும்; தண்ணீர் பாய்ச்ச வேண்டும்;

அன்பும் சேவையாக மலர வேண்டும். அப்பொழுது தான் ''நான்'' ''எனது'' என்ற மயக்கங்கள் மாயும். அறியாமையும் அகலும். உண்மை ஒளி பிறக்கும்.

பக்தன்:

பக்தன் நால்வகைபடுவன. (1) ஆர்த்தன்: துன்பம் வந்துற்ற காலத்து இறைவனை வேண்டுகின்றவன். (2) அர்த்தார்த்தி: செல்வமும் செல்வாக்கும் வேண்டித் தொழுபவன் (3) ஜிக்ஞாஸு: உண்மை தெரிய வேண்டுமென்று விரும்புகின்றவன், (4) ஞானி. இறைவனை தன்னிடத்திலே உணர்ந்து, இறைவனிடத்திலே தன்னைக் கரைத்துக் கொண்டவன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனடக்கம்

புலன்களை அடக்கி வயப்படுத்துவது என்பது நீண்ட பயிர்ச்சியினுல்தான் முடியும். போர்க்குதிரைகள் நன்ருகப் பழக்கப்பட்டாத்தான் போர்க்களத்தில் பயன்படும். இது ஒரு நாளில் வரக்கூடியதன்று. பல நாள் பயிர்ச்சியினுலேயே சாதிக்கக்கூடியது மனத்தையும் இது போல் பழக்கினுல்! பெரிய சாதனைகளைச் செய்யலாம்.

புலன்களை அழிக்க வேண்டாம்; அடக்கிவைத்தால் போதும். நம் வீட்டினுள் யார் யார் வருகிருர்கள், போகிருர்கள் என்று கட்டுப்பாடு வைத்திருப்பதைபோல, நம்முடைய கண் காது இவற்றின் வழியாக என்னென்ன வருகிறது போகிறது என்பதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

நல்லதும் கெட்டதும்

நல்லது கெட்டதற்குப் பொதுவாக அவற்றைச் செய்யும் மனிதர்கள் பொறுப்பேற்க வேண்டும். "எல்லாம் இறைவன் செயல்" என்று அவன் பேரில் பழியைப் போட்டு தப்ப முயலக்கூடாது. அல்லது, இறைவனே எல்லாம் என்ற எண்ணம் உறுதியாக இருக்க வேண்டும் வசதிக்கேற்ப பொறுப்பைத் தட்டிக் கழிப்பது தவறு.

அறம்

எல்லாவற்றையும் இறைவனுக்குக் காணிக்கையாக்குவதே அறம். அதுவே செய்யத்தக்கது அறம் என்பது ஏதோ சில அசாதாரணமான ஆற்றல் படைத்தவர்களுக்கு மட்டுமன்று. எல்லோருக்கும் பொது. எல்லோரும் அதை நடத்திக் காட்டலாம்.

தரிக்கப்படுவது தருமம் (அறம்). தரிப்பதும் தருமமே. உலகில் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கென்று ஒரு தருமம் உண்டு. நெருப்பு நெருப்பாக இருப்பதும், தண்ணீர் தண்ணீராக இருப்பது அதனதன் தருமம். மனிதனுக்கும் ஒரு தருமமுண்டு. அதில் இருந்து அவன் விலகுவானுனுல் அழிவை அடைவான் உண்மையைப் பேச வேண்டும்; தருமத்தை நடத்த வேண்டும். இப்பொழுது உலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகீழாக நடக்கிறது. தருமத்தைப் பேசுகிறார்கள். ஓயாமல் பேசுகிறார்கள். தருமத்தை நடத்துவதால்தான் அதற்கு வலிமை உண்டாகும். முதலை தண்ணீரிலிருந்தால்தான் அதற்குப் பலம்.

அதருமத்துக்கு முயற்சி தேவையில்லை. தருமத்துக்குத் தான் முயற்சி தேவை. காட்டுச் செடி வளர வேளாண்மை வேண்டுமா? மெய்ந்நூல்களில் சொல்லியிருக்கிறபடி செய்வது தான் தருமம்.

நிஷ்காம கர்மம்

பலனை விட்டு விடுவதே நிஷ்காம கர்மம் என்று சிலர் சொல்லுகிறார்கள் இது தவறு. பலனுக்கு ஆசைப்படாதே. பலனுக்கு உரிமை கொண்டாடதே, என்றுதான் கண்ணன் சொல்லுகிறான். நாம் செய்யும் செயல்களுக்காக நமக்குப் பலனே வராது என்றும் கண்ணன் கூறவில்லை. காரியம் செய்யாதே என்றும் கூறவில்லை. காரியம் செய்ய ஒருவனுக்கு உரிமை இருந்தால் அதனுடைய பலனிலும் அவனுக்குக் கட்டாயம் உரிமை உண்டு. ஆனால் அறிவுடையவன் இந்த உரிமையை விட்டுவிடுகிறான். அதில் பற்றுவைப்பதில்லை.

மனத்திலிருந்து ஆசைகளை அகற்றுவது இரண்டு நிலைகள் கொண்டது. (1) ஆசைகளை விட்டு விடுகிற எதிர்மறை நிலை. (2) அன்பை வளர்த்து' மிகுந்த இன்பத்தைப் பெறுதல் உடன்பாட்டு நிலை முதலாவது போக்கு; இரண்டாவது வரவு. பயிர்கள் வளர்வதற்காக களை பிடுங்குவது முதலாவது; பயிரை வளர்ப்பது இரண்டாவது.

ஒவ்வொரு மனிதனும் தனக்கேற்பட்ட பணியைச் செய்ய வேண்டும்; தவறக்கூடாது இந்த உலகமே ஒரு பெரிய தொழிற்சாலை போன்றது அதில் நாம் எல்லோரும் தொழிலாளிகள் அவரவருக்கு இங்கு பணிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. தொழில் செய்யாமல் சோம்பி இருக்க யாருக்கும் உரிமை கிடையாது. சூரியன் தன்னுடைய தொழிலைச் செய்யாமற் போனால் என்ன ஆகும்? இறைவனே தொழில் செய்கிறான். அவனுக்கு அதனால் சொந்தத்தில் ஆவது ஒன்றுமில்லை. என்றாலும் அவ்வாறு செய்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகளும் பிறரது நன்மைக்காகத் தொழில் செய்கிறார்கள். பிறருக்கு வழிகாட்டுவதற்காக அவர்கள் பணிபுரிகிறார்கள்.

நமக்கு இயல்பாக வருகிற தொழில்தான் மிகுந்த பலன் தரக்கூடியது. நமக்கு ஒத்துவராத வேலைகளை மேற்கொண்டால் துன்பங்கள்தான் மிகும். அது அஸஹஜ கர்மமாகும்; இயற்கைக்கு முரண்பட்ட தொழிலாகும். அவனவன் இயற்கையை ஒட்டி வாழவேண்டும். சூரியனைப் பாருங்கள், அவன்தான் கருமயோகி! ஆரவாரமில்லாமல் தன் கடமையை இசைவாகச் செய்து கொண்டிருக்கிறான். இதன் காரணம் அவனது இயற்கையை ஒட்டிய பணியை அவன் செய்வது தான்.

சமுதாய ஊழியம்

உடல் உயிருக்குச் சொந்தம். உலகம் இறைவனுக்குச் சொந்தம் உயிர் உடலுறுப்புக்களில் இது உயர்ந்தது தாழ்ந்தது என்று உயிர் பராபட்சம் காட்டுவதில்லை. இது போல, உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் இறைவனது குடியரசில் சம அந்தஸ்து உடையவர்கள்.

உடலெங்கும் ஒரே இரத்தம்தான் ஓடுகிறது; அது எல்லா உறுப்புக்களுக்கும் வேற்றுமையின்றிப் பாய்ந்து உயிரூட்டுகின்றது. சமுதாய ஊழியரும் இப்படித்தான் சமுதாயம் என்ற உடலுக்கு உயிர் ஊட்டுகிறார்கள். இதில் எந்த உயர்வு தாழ்வும் கற்பிக்க முடியாது; கூடாது.

சர்க்கரைப் பொம்மையின் எந்த இடத்தைப் பிட்டுச் சுவைத்தாலும் அது இனிமையாக இருக்கும். அது போலச் சமுதாயத்தில் பல தொழில் செய்பவரும் சமமான தகுதியுடையவர்கள்தான். தொழில்களில் ஏற்றத் தாழ்வு பேசுவது தவறு. உடலில் இருக்கக்கூடிய எல்லா உறுப்புக்களும் உடலுக்குத் தேவையே. வயிற்றின் மேல் கோபித்துக் கொண்டு மூளை வேலை நிறுத்தம் செய்தால்என்ன ஆகும்? சமுதாயத்தில் பல தொழில் செய்பவரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

சரணாகதி

எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்பது முக்கியமன்று. எப்படிக் கொடுக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசேலரும் திரௌபதியும் விதுரமும் கொடுத்தது கொஞ்சம் அவல், அல்லது கீரை, அல்லது எளிய பத்திய உணவு. ஆனால் அவர்கள் பெற்றது மலையத்தனை அருள்!

டாக்டர் பொய் சொன்னாலும் தர்மா மீட்டர் சரியான காய்ச்சல் அளவைக் காட்டி விடும். இதுபோல, இறைவன் உங்கள் இதய ஆளத்தை அழக்கிறான். வெளிப் பூச்சை மதிப்பதில்லை. கோபிகளும், ஜனகனும், நந்தனாரும்' சபரியும் பிரஹலாதனும், விபீஷணனும். அனுமானும், வால்மீகியும் இதற்கு உதாரணங்கள்.

நீங்கள் யாரிடமும் அன்பு வைக்கிறீர்களோ அவர் களுக்குச் செவை செய்யுங்கள்; யாருக்குச் சேவை செய் கிறீர்களோ, அவர்களிடத்து அன்பு செய்யுங்கள். இது தான் சரணாகதி தத்துவம்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு ''நான்'' ''எனது'' என்ற எண்ணத்தை யெலலாம் கழற்றி எறிந்துவிட்டு இறைவனைச் சரணடையுங்கள்!

சரணாகதி மூன்று வகைப்படும்.

1. தவைவாஹம் (நான் உன்னுடையவன்)

2. மமைவத்வம்( நீ என்னுடையவன்)

3. த்வமேவாஹம் (நான் நீயே). இதில் மூன்றாவது அவிபக்த பக்தி அதாவது அத்வைத சரணாகதி.

துன்பம்

இன்பமாக இருப்போம் என்று ஆசைப்படாதீர்கள் இன்பமே துன்பத்தின் வித்து. அது போய் விடுமோ என்ற துன்பமே போதுமே.

துன்பம் வரும் போதுதான் மனிதன் சிந்திக்கிறான்; தன்னைப்பற்றி நினைக்கிறான இன்பத்தால் தன்னிலை மறந்து விடுகிறான்.

துன்பத்தால் நம் நிலை உணர்கிறோம் விழிப்புடனிருக் கிறோம். துன்பமே துணைவன். இன்பத்தால் புண்ணியம் தேய்கிறது. ஆகவே இன்பம் நமது எதிரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் நம் கண்ணைத்திறக்கிறது. புதுப்புது பாடங்களைக் கற்பிக்கிறது.

துன்பத்தை விட்டு இன்பத்தை மட்டும் தனித்துப் பெற முடியாது; இவை இரட்டைகள். ஒன்றையொன்று சார்ந்தவை. இவற்றை ஒன்றாகக் கருதும் மனப்பக்குவம் வேண்டும்.

ஆண்மகன்

ஆடையாலோ, அடர்த்தியான மீசையாலோ ஒருவன் ஆண்மகன் ஆகமாட்டன்' இன்ப துன்பங்களை சமமாகப் பார்த்துத் தாங்கிக் கொள்பவனே உண்மையான ஆண் மகன்.

துயரமும் புலன்களும்

நம்முடைய காதில் விழும்படி நம்மீது யாராவது அவதூறு சொன்னால். நமக்குக் கோபம் வருகிறது. காதில் விழாவிட்டால் வருவதில்லை எனவே, நமது கண், காது முதலியவைதான் நமது துன்பங்களுக்கு மூலகாரணம்

குளிராக இருந்தால் சூடு வேண்டும் என்று ஓடுகிறோம்; சூடாக இருந்தால் குளிர்ச்சி வேண்டும் என்று ஓடுகிறோம். எல்லாம் புலன்கள் செய்யும்வேலைதான். அலை ஓய்ந்து குளிக்க முடியுமா? புலன்கள் ஓயும் வரை காத்திராமல் அவற்றை இப்போதே வெற்றி கொள்வதுதான் நல்லது

இன்பமும் துன்பமும் இரவு பகலும் போல: மாறி மாறி வந்தே தீரும்; அவற்றைப் பெறுவதே அறிவுடைமை யாகும்

இன்பம்

நாமெல்லாரும் இன்ப வடிவங்கள். அதனால்தான் நாம் மகிழ்ச்சியாக இருந்தால் ஒருவரும் வியப்படைவதில்லை துன்பப்படும் போது வந்து விசாரிக்கிறார்கள்.

வினைப்பயன்கள்

நாக்கில் தடவப்பட்ட எண்ணெய் போல, கண்ணில் இடப்பட்டமைபோல. தாமரை இலைமேல் நீர்த்துளிபோல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் செயல்களெல்லாம் உன்னிடத்து இருந்தாலும் உன்னைப் பற்றுமல் பார்த்துக்கொள்.

ஞானி ஏதாவது செய்து கொண்டிருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் உள்ளார்ந்த அமைதியோடு இருக்கிருன். செயலில் செயலின்மையையும் செயலின்மையில் செயலையும் உணர்ந்தவன் ஞானி.

வினைசெய்வது என்பது என்ன? ஒன்றும் செய்யாமலிருப்பது என்பது என்ன? ஒன்றும் செய்யாமலிருந்து கொண்டே எல்லாம் செய்வதும், எல்லாம் செய்துகொண்டே ஒன்றும் செய்யாமலிருப்பதும்தான் இங்கு ரகசியம். தேரில் செல்பவனுக்கு சாலையின் இரு மருங்கிலும் இருக்கும் மரங்களும் மலைகளும் எதிர்த்திக்கில் ஓடுவதுபோல் தெரியும். அதுபோல செயலின்மை செயல் போலவும் செயல் செயலின்மை போலவும் தோன்றும். ஆத்மாவில் செயல் ஒன்றுமே கிடையாது இருப்பினும் அது செயல் செய்வதாக எண்ணுவது இத்தகையதொரு பிரமைதான்.

வினைகளைக் காட்டிலும் ''நான் செய்கிறேன்'' என்ற எண்ணம்தான் நம்மைக் கட்டிப்போடுகிறது. சுன்னத்திற்குத் தனியாக எந்த மதிப்பும் கிடையாது ஆனால் ஏதேனும் ஓர் எண்ணுடன் சேரும்பொழுது அது மதிப்புப் பெற்று விடுகிறது. ''நான்'' என்னும் எண்ணத்துடன் சேரும் பொழுது, வினைகள், நம்மைப் பிணித்து விடுகின்றன. இதனால் பிறவி ஏற்படுகிறது

அவநம்பிக்கை

அவநம்பிக்கையும் ஐயப்பாடும் காச நோய்க்கிருமிகள் போன்றவை.

கண்ணில் பூப்போலவும், செருப்பில் கல்போலவும், காலில் முள்போலவும், வீட்டில் கலகம் போலவும் இருப்பது மனத்தில் சந்தேகம்.

புத்தக அறிவு

எத்தனைதான் கடல் நீரை அள்ளி அள்ளிக் குடித்தாலும், நூலறிவு உண்மையின் வடிவத்தை நேருக்குநேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிக்காது. தானே உண்மையை உணர்ந்த பெரியோர்கள் மூலம் அந்த உணர்வை நாமும் பெறமுடியும்.

குருவின் தகுதிகள்

குருவாக இருப்பவனுக்கு வெறும் புத்தக அறிவுமட்டும் போதாது. சொந்த அநுபவத்தில் அவன் உண்மையை உணர்ந்திருக்கவேண்டும். வெறும் கவர்ச்சியான பேச்சுத் திறன் மட்டும் ஒருவனைக் குருவாக்கி விடாது. பிரசாரம் செய்தால் போதாது; ஆசாரம் வேண்டும் அரைகுறை அறிவு படைத்தவர்கள் இங்குமில்லாமல் அங்குமில்லாமல் திரிசங்குவைப்போல அந்தரத்தில் தொங்குவார்கள். அறியாமை என்னும் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சீடர்களைத் தட்டி உலுக்கி எழுப்பும் அலாரச் சங்காக குரு இருக்கவேண்டும். முன்னெல்லாம், குரு கிடைப்பது கடினம். சீடர்கள் கிடைப்பது சுலபம். இப்பொழுது சீடர்கள் கிடைப்பது அரிது. குருமார்களோ ஒட்டு மொத்தமாகக் கிடைக்கிறார்கள்.

கன்று தாய்ப் பசுவை யொட்டி நிற்பதுபோல, சீடனை ஒரு குரு தன்னிடம் இருத்திக் கொள்கிறான். சுத்தமான இரும்புத் துண்டு காந்தத்தினால் கவரப்படுவது போல, சீடன் குருவின் தூய்மையால் ஈர்க்கப்படுகிறான்.

பிரணவம்

பெயர்களும் முடிவில்லாதவை; வடிவங்களும் முடிவில்லாதவை. பெயர்கள் என்பன ஒலிகள். எல்லா ஒலிகளும் பிரணவம் என்ற ஓம்காரத்திலிருந்து பிறந்தவை. "நான் வேதங்களில் பிரணவமாக இருக்கிறேன்" என்று கண்ணன் சொல்லுவதன் கருத்து இதுதான். மனிதமனம் ஒலியால் ஈர்க்கப்படுகின்றது என்பது கண்கூடு. அதனால் தான் அது பாம்பிற்கு ஒப்பிடபபடுகிறது பாம்பு வளைந்து வளைந்து போகும்; எதிர்ப்பட்டவரைக் கடிக்கும். மனித மனமும் வளைந்து நெளிந்து குறும்பு செய்யும்; பார்த்ததையெல்லாம் பற்ற நினைக்கும். ஆனால் பாம்பு கூட மகுடியின் இனிமையான ஒலியில் மயங்கும். இதே போல, மனித மனத்தையும பிரணவ நாதத்தில் ஒடுங்க வைக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உத்தராயணம்

உத்தராயணம் என்பது ஒரு காலத்தின் பெயர் என்பதை விட, மனத்தின் நிலை என்று சொல்லுவது தான் பொருத்தம், உண்மையை உணர்வதுதான் உத்த ராயணம். மறுபடி வந்து பிறவா வழியில் செல்வது வடக்கு நோக்கியசூரிய கதி.

### சுக்லபஷம்

வளர்பிறை நாட்கள் சுக்லபஷம் எனப்படுகின்றன, சந்திரன் மனதிற்கு அடையாளம், சந்திரனிடமிருந்து தான் மனம் படைக்கப்பட்டது. ஆகவே வளர்பிறை என்பது மனதின் வளர்ச்சியைக் குறிக்கும், இறைவனைப் பார்ப்பதே சந்திரோதயம்.

### மனிதனும் குரங்கும்

குரங்காவது கிளைக்குக் கிளை தாவும் பொழுது ஒரு கிளையை விட்டு விட்டு அடுத்த கிளைக்குத் தாவுவதைப் பார்கிறோம். ஆனால் மனிதன் புழுவைபோன்றவன், ஒரு புது இலையை பிடித்துக் கொண்டுதான் பழைய இலையைப் புழு விடும், மனிதனும் அடுத்த பிறவிக்கு இப் பிறவியிலேயே வழி செய்து கொண்டு தான் இந்த உடலை விடுகிறன்.

### பிறவியும் மரணமும்

நாம் பிறந்திருப்பது மறுபடி பிறக்காமல்லிருக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து முடித்து கொள்வதற் காகத்தான். இறப்பது மறுபடி ஒருமுறை பிறந்து இறக் காமலிருக்கத்தான். நல்ல பிறவியை விட நல்ல மரணத் தைதான் நாம் விருப்பவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குரு க்ஷேத்ர யுத்தம் முடிவடையவில்லை

காமம், குரோதம், லோபம் ஆகிய குணங்களினுல் பீடிக்கப்பட்டு வாழ்க்கையின் இலட்சியம் தெரியாது கலக்கம் அடைந்துள்ள உலகமக்களுக்கு அதே கிருஷ்ண அவதார புருஷர் மீண்டும் கீதையை உபதேசிக்கிருர்.

- பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் -

- தாவடி, இலங்கை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org